# பிரிட்டன் வரலாறு

## (1485—1688)

ராபர்ட் எம். ரேனர்

தமிழில் மொழிபெயர்த்தவர்
சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தலைமையாசிரியர்
ம. சண்முகசுந்தரம், எம். ஏ., எல். டி.

லாங்மன்ஸ் க்ரீன் அண்ட் கம்பனி லிமிடெட்
36 A, மௌண்ட் ரோட், மதராஸ்
1941

*All Rights Reserved*

*Printed in India at the Jupiter Press, Madras,*
*on paper made by the Titaghur Mills, Bengal.*

## EXTRACT FROM THE PREFACE TO THE ENGLISH EDITION

*    *    *

The most distinctive feature of the book is the Notes which have been appended to each "Period." They are based on those used by the author in his own classes for many years, with pupils of varying attainments. Every practical teacher knows that some topics are best dealt with by reading matter, others by oral teaching based on such notes. They are not for the most part mere summaries of the narrative, but are complementary to it.

No history text-book can cover all the ground that a teacher would like to cover; but a boy or girl who has mastered the facts and ideas which are here presented in a comparatively small compass should be able to tackle any History paper with confidence. The mechanical part of the task having been thus focused, the teacher will have the more time to develop his own views and methods.

Typical questions have been added to each "Period."

*    *    *

## மொழிபெயர்ப்புக் குறிப்பு

முதனூலாசிரியரது நடையின் திட்ப நுட்பங்களும் தனியழகுகளுங் கூடியவரையில் மொழிபெயர்ப்பிலும் துலங்கும் வண்ணம் முயன்றுள்ளேன். அம்முயற்சி எவ்வளவில் நல்ல பலனை யளித்துள்ளதென்பதை இதைப் படிப்பவர்களே தீர்மானித்துக்கொள்ளவேண்டும். எனினும், முதனூலின் சிறப்பியல்புகளாகிய பிரிவுகளும் அவற்றின் பாகுபாடுகளும் குறிப்புக்களும்மட்டும் இம்மொழிபெயர்ப்பில் எவ்வகையிலுஞ் சிதைவுறுமல் அமைந்திருக்கின்றன.

இதில் வழங்கப்பெற்றுள்ள சரித்திர பரிபாஷை, பெரும்பான்மையும் தம்மைத்தாமே விளக்கிநிற்குந் தன்மையவாய எளிய தொடர்மொழிகளில் அமைந்திருப்பதால், சரித்திர பாடங்களைத் தமிழில் கற்பிக்கும் பொறுப்பினை ஏற்றுள்ள சரித்திராசிரியர்களின் அங்கீகாரத்தையும் ஆசியையும் பெறுமென்று நம்புகிறேன்.

பச்சையப்பன் கலாசாலை,
சென்னை.

ம. சண்முகசுந்தரம்

# பொருளடக்கம்

## மூன்றும் பகுதி : 1485 - 1558

### நாட்டரசு

அத்தியாயம் பக்கம்


19. புதுயுகம் (1485 - 1509) ... 3

§ 83. நீர் பிரிமேடு. § 84. உள்ளூர்ப் போர்களின் கடைசி சுவாலைகள். § 85. ஏழாம் ஹென்றியின் நோக்கங்களும் முறைகளும். § 86. புது நாடுகளையும் புது வழிகளையும் கண்டுபிடிக்கக் கடற் பயணங்கள்.

20. உல்ஸியும் வெளிநாட்டு விவகாரங்களும் (1509 - 1525) ... ... 14

§ 87. எட்டாம் ஹென்றி. § 88. ப்ரான்ஸோடு எட்டாம் ஹென்றி தொடுத்த முதற் போர். § 89. உல்ஸியின் ஏற்றம். § 90. லூதரும் ஜெர்மானியரது எதிர்ப்புக் கொள்கையும்.

21. ரோமுடன் பிளவு (1525-1535) ... 27

§ 91. அரசரது விவாக ரத்து. § 92. போப் பிரதிநிதிகள் நீதிமன்றம். § 93. 'என் பெருமையெல்லாம் போயிற்றே!' § 94. 'எவரும் அவ்வளவு தூரம் போகமாட்டார்கள்.' § 95. காதொலிக் மதத் தியாகிகள்.

22. மடங்களைக் கலைத்தல் (1535-1547) 38

§ 96. டாமஸ் க்ராம்வெல். § 97. கலைத்தலும் பறிமுதலும். § 98. அரச குடும்பத்தில் கலியாணங்களும் பிறப்புகளும் இறப்புகளும். § 99. 'அருள் யாத்திரை'. § 100. க்ராம்வெல்லின் முடிவு. § 101. அந்திய தசை.

அத்தியாயம் பக்கம்

23. எதிர்ப்புக் கொள்கையினர் ஆட்சி (1547-1553) ... ... 49

§ 102. காப்பாளர் பிர்பு சாமர்செட். § 103. ஸ்காட்லண்டில் மற்றொரு தோல்வி. § 104. கெட் கலகம். § 105. நார்தம்பர்லண்டின் ஆட்சி. § 106. நார்தம்பர்லண்டின் சதி.

24. காதொலிக் கொள்கையினர் ஆட்சி (1553-1558) ... ... 60

§ 107. வெற்றிகரமான ஆரம்பம். § 108. வையட் கலகம். § 109. இவ்வாட்சியின் முக்கிய நிகழ்ச்சி. § 110. மேரியின் மதப் பித்து: எதிர்ப்புக் கொள்கையினரை ஒறுத்தல். § 111. மகிழ்ச்சியற்ற முடிவு.

July

குறிப்புக்கள் :—கு. 51. அரச பட்டங் கட்டிக் கொள்ள ஏழாம் ஹென்றியின் உரிமைகள், ப.70. கு.52. ட்யூடர் மன்னர்களின் கட்டற்ற வல்லரசு, ப. 71. கு. 53. ஏழாம் ஹென்றி பிரபுக்களை அடக்கிவைத்திருந்த விதம், ப.72: கு. 54. கலைகளின் மறுபிறப்பும் அது இடலியில் முதலில் தோன்றியதன் காரணமும், ப.73. கு. 55. 'புதுப் படிப்பு', ப. 74. கு. 56. டாமஸ் உல்ஸியின் வாழ்க்கை (1471-1530), ப. 75. கு. 57. எட்டாம் ஹென்றி காலத்தில் ரோம் மதஸ்தாபனத்துடன் ஏற்பட்ட பிளவின் ஆறு நிலைகள், ப. 77. கு. 58. தனித் தலைமைச் சட்டம் (1534), ப. 78. கு. 59. சர் டாமஸ் மூரின் வாழ்க்கை(1478-1535),ப.78. கு. 60. மடங்களைக் கலைத்ததன் காரணங்கள், ப. 79. கு. 61. மடங்களைக் கலைத்ததன் விளைவுகள், ப.80. கு.62. டாமஸ் க்ராம்வெல்லின் வாழ்க்கை (1485-1540), ப. 81. கு. 63. உல்ஸியும் க்ராம்வெல்லும்: ஒப்புமை, ப.82. கு. 64. எதிர்ப்புமத வாதத்தின் வளர்ச்சி, ப. 83. கு. 65. எட்டாம் ஹென்றி காலத்து

August

அத்தியாயம் பக்கம்

மதச்சீர்திருத்தம் மக்கள் ஆதரவைப் பெற்றிருந்தது, ப. 84. கு. 66. எட்டாம் ஹென்றியின் கலியாணங்களும் அவற்றின் இராஜீய விளைவுகளும், ப.85. கு. 67. முதல் இரண்டு ட்யூடர் மன்னர்கள் காலத்தில் ஸ்காட்லண்டோடு தொடர்பு, ப.86. கு.68 முதல் இரண்டு ட்யூடர் மன்னர்கள் காலத்தில் அயர்லண்டோடு தொடர்பு, ப. 87. கு.69. முதல் இரண்டு ட்யூடர் மன்னர்கள் காலத்துக் கப்பற்படை, ப. 87. கு. 70. ஆறும் எட்வர்டின் குணமும் அவர் ஆட்சியின் தன்மையும், ப. 88. கு. 71. ட்யூடர் மன்னர்கள் காலத்தில் பொருளாதார சம்பந்தமான தொந்தரவுகள், ப. 89. கு. 72. நார்தம்பர்லண்டின் குணமும் வாழ்க்கையும், ப. 90. கு. 73. மேரி அரசியின் குணமும் அவள் ஆட்சியின் தன்மையும், ப. 91. கு. 74. ட்யூடர் குலத்து மேரியும் ஸ்டுவர்ட் குலத்து மேரியும்: ஒப்புமை, ப. 92. கு. 75. மேரி எதிர்ப்பு வாதத்தினரை ஒறுத்ததற்குச் சமாதானம், ப. 93. கு. 76. டாமஸ் க்ரான்மரின் வாழ்க்கை(1489-1556), ப. 93.

August

பரிக்ஷை வினக்கள் ... ... 95

## நான்காம் பகுதி : 1558 - 1603

### எலிசபெத் காலம்

25. சம்மாளிக்கப்பட்ட ஆபத்துக்கள் (1558-1563) ... ... 99

§ 112. முதல் ஆபத்து: மேரி ஸ்டுவர்ட்டுக்கிருந்த உரிமை. § 113. இரண்டாவது ஆபத்து: மதச்சச்சரவு. § 114. மூன்றும் ஆபத்து: ஸ்பெயின் நாட்டு பிலிப். § 115. நான்காம் ஆபத்து: பொருளாதாரக் கோளாறுகள்.

அத்தியாயம் பக்கம்

26. எலிசபெத் அரசியும் காதொலிக்கரது எதிர்ப்பியக்கமும் (1560-1580) ... 107
§ 116. மதச் சீர்திருத்த எதிர்ப்பு இயக்கம். § 117. வெளிநாட்டுக் கலகங்களை எலிசபெத் ஆதரித்தல். § 118. காதொலிக்கரது முதல் சதி. § 119. காதொலிக்கரது இரண்டாம் சதி. § 120. காதொலிக்கர்களை ஒறுத்தல்.

27. பிரிட்டிஷ் கடல்வன்மையின் ஆரம்பம் (1550-1580) ... ... 117
§ 121. பிரிட்டன் 'அலைகளை யாள'த் தலைப்பட்டதன் முன். § 122. ஹாகின்ஸும் ட்ரேக்கும். § 123. துரைத்தனத்தார் சம்பந்தப்படாத போர். § 124. கடற்படையின் பழக்க வழக்கங்களின் ஆரம்பம்.

28. ஆட்சியின் பெருஞ் சம்பவம் (1580-1588) 127
§ 125. ப்ரான்ஸுடன் கூட்டுறவு. § 126. போருக்கு அடிப்படைகள். § 127. மாஜி அரசி மேரியின் சிரச்சேதம். § 128. மதப் போருக்கு எத்தனங்கள். § 129. 'கடவுள் ஊதினர்; அவர்கள் சிதறியோடினர்!'

29. 'பரந்த நாட்கள்' (1588-1603)
§ 130. வெற்றியின் பலன்கள். § 131. எதிர்ப்புமதவாதிகளுள் தூய்மைக்கொள்கையினரை ஒறுத்தல். § 132. இறங்குபடி. § 133. அயர்லண்டில் எசெக்ஸ்.

குறிப்புக்கள் :— கு. 77. மதச் சீர்திருத்த எதிர்ப்பியக்கம், ப. 148. கு. 78. எலிசபெத் பட்டத்துக்கு வந்தபோது அவளுக்கு இருந்த ஆபத்துக்களும் அவற்றை அவள் சம்மாளித்த விதமும், ப. 149. கு. 79. எலிசபெத்தின் மத ஏற்பாடு திருப்தியளித்த வகை, ப. 150. கு. 80. பர்லி பிரபு வில்லியம் ஸெஸிலின்

அத்தியாயம் பக்கம்

வாழ்க்கை (1520-1598), ப. 151. கு. 81. ஸ்காட் மக்கள் அரசி மேரியின் வாழ்க்கை (1542-1587), ப. 152. கு. 82. எலிசபெத்தும் நெதெர்லண்ட்ஸும், ப. 154. கு. 83. 'கடல் நாய்கள்', ப. 155. கு. 84. ப்ரான்ஸிஸ் ட்ரேக்கின் வாழ்க்கை (1540-1596), ப. 156. கு. 85. 1588-ல் ஆர்மடா வந்தது ஏன்? ப. 158. கு. 86. எலிசபெத் காலத்தில் இங்லண்டில் கலைகளின் மறுபிறப்பு, ப. 159. கு. 87. எலிசபெத்தின் 'செயலற்ற சாமர்த்தியம்', ப. 160. கு. 88. எலிசபெத் காலத்தில் பார்லமென்ட், ப. 161. கு. 89. ட்யூடர் காலத்தில் ப்ரிவி கௌன்சில், ப. 163. கு. 90. எலிசபெத் காலத்தில் அமைதிக்கான நீதிபதிகள், ப. 163. கு. 91. எலிசபெத் காலத்தில் வியாபார விருத்தி, ப. 164. கு. 92. எலிசபெத் காலத்தில் அயர்லண்ட், ப. 165.

பரிக்ஷை வினாக்கள் ... ... 167 September

## ஐந்தாம் பகுதி: 1603 - 1688

### அரசர்க்கும் பார்லமென்டுக்கும் பகை

30. பின் விளைவுகளின் சாயைகள் (1603-1625) 171

§ 134. 'ஆட்சித் தொழி'லில் நிபுணர். § 135. தூய்மைக் கொள்கையினரைப் புறக்கணித்தல். § 136. நவம்பர் 5௳. § 137. விவாக சம்பந்தங்களால் சமாதானஞ் செய்துகொள்ளுதல். § 138. பார்லமென்டோடு சச்சரவு.

31. ஆதிக்கத்துக்காகப் போராட்டம் (1625-1639) ... ... 182

§ 139. ஒரு பெரிய விவாதத்தின் ஆரம்பம். § 140. சச்சரவு மேலும் மும்முரமாக வளர்தல். § 141. உரிமை விண்ணப்பம். § 142. அரசரது தனியாட்சி. § 143. ஹாம்டெனுடைய மறுப்பு. § 144. லாடும் தூய்மைக் கொள்கையினரும்.

(P. T. O)

அத்தியாயம் பக்கம்

32. அரசரின் தனியாட்சி குலைதல் (1639-1642) 195
§ 145. பிஷப்புகள் போர். § 146. ஸ்ட்ராபர்ட் துணைக்கு வருதல். § 147. "தீர்மை" முறையின் முடிவு. § 148. மதஸ்தாபனத்தைப்பற்றிப் பிளவு. § 149. போர் முழக்கம்.

33. உள்நாட்டுப் போர் (1642-1646) ... 206
§ 150. எட்ஜ்ஹில் நியுபெரி சண்டைகள். § 151. பார்லமெண்டார் இரண்டு புதிய சாதனங்களைப் பெறுதல். § 152. புதுமுறைப் படை. § 153. நேஸ்பி.

34. பார்லமெண்டும் படையும் (1646-1649) ... 217
§ 154. ஸ்காட் மக்கள்வசம் அரசர். § 155. பார்லமெண்டார்வசம் அரசர். § 156. படையினர்வசம் அரசர். § 157. காரிஸ்ப்ரூக் கல்லரணில் அரசர். § 158. மரண தண்டனைத் தீர்ப்பு.

35. பொதுநலத் துரைத்தனம் (1649-1653) ... 228
§ 159. தூய்மைக் கொள்கையினர் குடியரசு. § 160. அயர்லண்டில் க்ராம்வெல். § 161. க்ராம்வெல்லும் ஸ்காட் மக்களும். § 162. முதல் டச்சுப்போர். § 163. 'அந்த உபயோகமற்ற பொருளை எடுத்தெறியுங்கள்!'

36. காப்பாளராட்சி (1653-1659) ... 239
§ 164. சார்ல்ஸ் ஆட்சியைவிடக் கட்டற்றது. § 165. க்ராம்வெல்லின் ஆட்சித்திறன்: மத விஷயங்களில் பொறையும் சாம்ராஜ்ய மனப்பான்மையும். § 166. காப்பாளராட்சி திருந்திய அமைப்பைப் பெற்றது. § 167. ப்யூரிட்டன் ஆட்சியின் முடிவு.

37. முன்னிலை மீட்சி (1660-1667) ... 249
§ 168. பார்லமெண்டின் முன்னிலை மீட்சி. § 169. மதஸ்தாபனத்தின் முன்னிலை மீட்சி.

october

November

அத்தியாயம் பக்கம்

§ 170. கடலிலும் நிலத்திலும் கேடுகள். § 171. முக்கூட்டுறவு.

38. 'விக்', 'டோரி' கட்சிகள் (1669-1685) ... 258
§ 172. டோவர் இரகசிய உடன்படிக்கை. § 173. டோவர் திட்டம் முறிந்தது. § 174. போப்மதத்தினர் சதி. § 175. விலக்கு மசோதாக்கள்.

39. எதிரிகளைச் சம்பாதித்துக் கொள்ளும் நாசூக்கான வித்தை (1685-1688) ... 270
§ 176. இரண்டாம் ஜேம்ஸ் பட்டத்துக்கு வருதல். § 177. மான்மத் கலகம். § 178. ஜேம்ஸ் மன்னர் தமது சொரூபத்தைக் காட்டுகிறார். § 179. கடைசி முறிவு.

குறிப்புக்கள் :—கு. 93. முதலாம் ஜேம்ஸினுடைய ஆட்சியின் முக்கியம், ப. 281. கு. 94. முதலாம் ஜேம்ஸின் அயல்நாட்டு விவகாரங்கள், ப. 282. கு. 95. முப்பதாண்டுப் போர் (1618-1648), ப. 283. கு. 96. முதலாம் ஜேம்ஸ் ஏன் "கிறிஸ்தவ உலகத்தின் அறிவு மிக்க முட்டாள்" என்று அழைக்கப்பட்டார்? ப. 284. கு. 97. சால்ஸ்பெரி பிரபு ராபர்ட் ஸெஸில்(1563-1612), ப. 285. கு. 98. சர் வால்டர் ராலெ(1552-1618), ப. 285. கு. 99. செண்ட் ஆல்பன்ஸ் வைகௌண்ட் ப்ரான்ஸிஸ் பேகன் (1561-1626), ப. 287. கு. 100. முதலாம் சார்ல்ஸுக்கும் அவரது முதல் மூன்று பார்லமெண்டுகளுக்கும் ஏற்பட்ட விவாதத்தின் முக்கிய பிரச்னைகள், ப. 288. கு. 101. ப்யூரிட்டன் கொள்கை, ப. 289. கு. 102. சார்ல்ஸ் அரசரின் நேராட்சி முறைகள். ப. 290. கு 103. ஸ்ட்ராபர்ட் ஏர்ல் டாமஸ் வென்ட்வொர்த், (1593-1641), ப. 292. கு. 104. அரசருடைய நேராட்சி வீழ்ந்தது ஏன்? ப. 293. கு. 105. முதல் இரண்டு ஸ்டுவர்ட் அரசர்கள் காலத்தில் குடியேற்றம், ப. 293. கு. 106.

அத்தியாயம் பக்கம்

போர் ஆரம்பத்தில் அபிப்பிராய பேதங்கள் (1642), ப. 295. கு. 107. யுத்தத்தின் தன்மை, ப.296. கு. 108. யுத்த ஆரம்பத்தில் இருதரத்தாருக்கும் சேர்ந்த பலம், ப. 298. கு. 109. புதுமுறைப்படை, ப. 299. கு. 110. படையினர் அரசரைச் சிரச்சேதஞ் செய்தது நியாயமா? ப. 301. கு. 111. லீல்பர்னும் சமநிலைக்காரர்களும், ப. 302. கு. 112. ப்யூரிட்டன் குடியரசின்கிழ்க் கப்பற்படை, ப. 303. கு. 113. மூவகைக் குடியரசுத்துரைத்தனங்கள் (1649-1660), ப. 305. கு. 114. க்ராம்வெல்லின் அயல்நாட்டு விவகாரங்கள், ப. 307. கு. 115. க்ராம்வெல்லின் குணமேம்பாடுகள், ப. 308. கு. 116. ப்ரெடா அறிவிப்பு (ஏப்ரில், 1660), ப. 309. கு. 117. முன்னிலை மீட்சியின்போது எவை மீட்சி பெற்றன? ப. 310. கு. 118. க்ளாரெண்டன் சட்டத் தொகுப்பு, ப. 311. கு. 119. மூன்று டச்சுப்போர்கள், ப. 313. கு. 120. அக்காலத்தில் பதினான்காம் லூயியினுடைய செயல்கள். ப. 315. கு. 121. இரண்டாம் சார்ல்ஸ் காலத்திலும் இரண்டாம் ஜேம்ஸ் காலத்திலும் அமெரிகக் குடியேற்றங்களின் பெருக்கம், ப. 316. கு. 122. ஸ்டுவர்ட் காலத்தில் வியாபாரமும் ஆக்கத் தொழிலும், ப. 317. கு. 123. மூன்று விலக்கு மசோதாக்கள் (1679-1681), ப. 319. கு. 124. ஆன்தொனி ஆஷ்லி கூப்பர், ஷாப்ட்ஸ்பெரி ஏர்ல் (1621-83), ப. 320. கு. 125. ஹேபெயஸ் கார்ப்பஸ் சட்டம் (1679), ப. 321. கு. 126. ரை மாளிகைச்சதி (1683), ப. 322. கு. 127. மூன்று சகிப்பு அறிவிப்புக்கள், ப. 322. கு. 128. 1688-ல் ஏற்பட்ட புரட்சியின் காரணங்கள், ப. 323.

பரிக்ஷை வினாக்கள் ... ... 324

# மூன்றும் பகுதி

## நாட்டரசு

(1485—1547)

# மூன்றும் பகுதி

## நாட்டரசு[1]

(1485—1547)

ஏழாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தினை இடைக் காலத்தையும் தற்காலத்தையும் பிரித்துக் காட்டும் எல்லைக் கோடாகக் கருதலாம். ட்யூடர் மன்னர்கள் காலத்துத் துரைத்தனம் நாட்டு மக்கள் ஆதரவைப் பெற்ற அதிகாரமிக்க மன்னரசா[2] யிருந்தது. நாட்டு மக்கள் அரசரைத் தேசீய உணர்ச்சியே உருவெடுத்து வந்தவர் எனவும், தேச நலனைப் பாதுகாக்க வந்தவரெனவும் கருதினர். ஒன்றுபட்ட இந்த நடுநாயகத்தின் முக்கிய பயனாக இங்லிஷ் மதஸ்தாபனம்[3] போப் ஆண்டவரின் அதிகாரத்தினின்றும் துண்டிக்கப்பட்டு நின்றது.

1. The National Monarchy. 2. Monarchy. 3. The English Church.

பத்தொன்பதாம் அத்தியாயம்

# புது யுகம்

(1485—1509)

§ 83. நீர்பிரிமேடு[1] :—இங்லண்ட் சரித்திரத்தில் ஏழாம் ஹென்றி மன்னரது ஆட்சியின் தொடக்கம் பலவகையில் தனிப்பட்ட சிறப்பியல்புகளைக் கொண்டதாகின்றது. அவர் ஒரு புது அரச வமிசத்துக்கு முதல்வர் என்பது மட்டுமல்ல; 1485ஆம் தற்காலத்தின் துவக்கத்தைக் குறிக்கும் ஒரு சௌகரியமான எல்லைக்கோடாகின்றது. எல்லாம் வல்ல அகில யூரோப்பிய கிறிஸ்து மத ஸ்தாபனத்தையும், பண்ணையிலும் பட்டணத்திலும் நிலைபெற்றிருந்த கூட்ட வாழ்க்கையினையும், பண்ணை மானியத்தையும் போர்ச் சேவையினையும் அடிப்படைகளாகக் கொண்டிருந்த படை மானிய ஏற்பாட்டினையும் சிறப்பியல்புகளாகப் பெற்ற இடைக்காலத்து நாகரிகம் நெடுங்காலமாகவே சிதைந்துகொண்டு வந்திருந்தது. ட்யூடர் மன்னர்கள் காலத்திலும் அதற்குப் பிறகுங்கூட அதன் அமிசங்கள் சில காணப்பட்டன என்பது உண்மையே. ஆயினும், மொத்தத்தில் நாட்டு மக்களது வாழ்க்கையினை அவை எப்போதிருந்து பாதிக்கவில்லை என்பதைக் குறிக்க ஒரு கால வரையறையை நிர்ணயிக்கவேண்டுமென்றால், 1485ஆம்த்தினையே தீர்மானிக்கலாம். தற்காலத்தினை இடைக்காலத்தினின்றும் பிரித்துக் காட்டும் சிறப்பியல்புகள் எவை ?

முதன்மையாக, தற்காலத்தினை நாட்டுணர்ச்சி[2] அல்லது 'தேசியவுணர்ச்சி' மிக்க காலமெனலாம். மக்கள் இப்போது ஒன்றுபட்டிருப்பது ஒரு பொதுத் தலைவனுக்கு

1. The Watershed. 2. Nationalism.

இயற்றும் போர்ச் சேவையாலல்ல; தங்கள் நாட்டைப்பற்றி அவர்கள் மனத்தில் தோன்றியுள்ள ஒரு பெருமை யுணர்ச்சி யாலேயேயாம். வன்மை மிக்க மன்னரசுகள் காலத்தில் இவ் வுணர்ச்சி உரம்பெற்று வளர்ந்தது. ஏழாம் ஹென்றியும் அவருக்குப்பின் ஆண்டவர்களும் நிருமாணித்த துரைத்தனம் பெரிதும் வன்மை மிக்கதா யிருந்தது. அது ட்யூடர் மன்னர்களது கட்டற்ற வல்லரசு[1] எனப்படுகின்றது (கு. 52).

இரண்டாவதாக, இக் காலத்தில், தனி நபர்கள், கூட்ட வாழ்க்கை நடத்தும் பண்ணை அல்லது தொழிற் சங்கங் களின் அங்கத்தினர்களாக இருந்து அக் கூட்டத்தின் திட் டங்களுக்கு ஏற்பச் சிந்தித்து உழைக்காமல், தாங்களே சிந்தித்துச் செயல்புரியலானார்கள். பண்ணைகளிலும் தொழிற் சங்கங்களிலும் நெடுங்காலத்துக்கு முன்னிருந்தே கூட்ட வாழ்க்கையின் கட்டுப்பாடுகள் தளர்ந்துவந்தன. 1485ஆ வரையில் அவற்றுள் நடைமுறையில் நின்றவை மிகச் சிலவே.

மூன்றாவதாக, தனி நபர்கள் சுயேச்சை பெற்றது முக்கியமாக மதக் கோட்பாடுகளில். காதொலிக் மதஸ்தாப னம் மக்கள் மனத்தை இடைக்காலத்தில் கவர்ந்ததுபோல் இப்போது கவர முடியவில்லை. 1485ஆ தொடங்கி ஐம்பது ஆண்டுகள் ஆவதற்குள் இங்லண்ட் போப்பின் அதிகாரத்தை உதறித் தள்ளிவிட்டது. ஏழாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்திலுங்கூட, சீர்திருத்தக்காரர்கள் மதஸ்தாபனத்தில் நுழைந்திருந்த பல ஊழல்களைக் குறிப்பிட்டு எதிர்க்க லாயினர்.

நான்காவதாக, தற்காலத்தின் அறிகுறிகளுள் ஒன்று அப்போது இங்லண்டில் முதல்முதலாகத் தோன்றலாயது. அது உலகத்தினையும் மக்கள் இயல்பினையும் ஆராய்வதில் தோன்றிய ஒரு புது ஊக்கமாகும். அதை ரினேசன்ஸ்[2] அல்லது கல்வியின் மறுபிறப்பு என்கிறோம் (கு. 54).

1. The Tudor Despotism. 2. Renaissance.

இது காரணமாகவே, அச்சடிக்கும் வித்தை முன்னரே தோன்றி வளரலாயது (§ 81); இப்போது கிரேக்க மொழியிலும் லாடின் மொழியிலுமுள்ள பழைய நூல்களைப் படிப்பதில் மீண்டும் ஊக்கம் பிறந்தது; எதையும் தெளிவாக உணரவேண்டுமென்னும் ஆராயும் மனநிலை தோன்றியது. உலகத்தைப்பற்றி மேலும் மேலும் அதிகமாக உணர வேண்டுமென்னும் ஆர்வம் வலுத்துவந்ததால், லாபத்தையும் தீரச் செயல்களையும் விரும்பி மக்கள் உலகத்தின் பல பாகங்களுக்கும் பயணப்பட்டுப் போய்வர லாயினர்.

இக் காரணங்களால் ஏழாம் ஹென்றி அரசரான 1485ஆண்டினை இடைக்காலத்துக்கும் தற்காலத்துக்கும் இடையில் நின்று அவற்றைப் பிரித்துக் காட்டும் நீர்பிரிமேட்டுக்குச் சமானமாகச் சொல்லலாம்.

§ 84. உள்ளூர்ப் போர்களின் கடைசி சுவாலைகள்:— ஏழாம் ஹென்றி பார்வைக்குக் கம்பீரமானவராகவோ விரும்பத்தக்கவராகவோ காணப்படாவிட்டாலும் அக் காலத்துக்கு மிகவும் பொருத்தமானவராகவே இருந்தார். புத்தி கூர்மையும் தெளிவும் நிதானமும் நீண்ட நோக்கும் அவருக்கு உண்டு. பாஸ்வொர்த் போர்க்களத்தில் தாம் கைப்பற்றிய சிம்மாசனத்தை இழக்க அவர் விரும்பவில்லை. தம் நோக்கம் நிறைவேறுதற்கான முறைகளைக் கையாளுவதற்குப் போதிய அரசியல் அறிவு அவருக்கிருந்தது. அவரை ஒரு சிறந்த அரசரெனச் சொல்லுவதற்கில்லை. அவருக்குச் சீரிய நோக்கங்களில்லை. தம் நிலையைப் பாதுகாத்துக்கொள்வதும் பலப்படுத்திக்கொள்வதுமே அவர் நோக்கம். ஆயினும், அந் நோக்கம் நிறைவேறுதற்கான வழிகளை அவர் தந்திரமாகவும் விடாமுயற்சியோடும் தேடி உழைத்ததால், அவர் காலத்தில் நாட்டுக்கு மிகவும் அவசியமாக வேண்டியிருந்த வன்மையான துரைத்தனமும், மக்களிடை ஒற்றுமையுணர்ச்சியும் வளமும் சித்திக்கலாயின.

## ஹென்றியின் கலியாணத்தினுல் யார்க் லான்காஸ்டர் குலங்களின் உரிமைகள் எவ்விதம் ஐக்கியப்பட்டன என்பதைக் காட்டும் வமிசாவளிக் குறிப்பு



ஹென்றியின் முதல் வேலை இங்லண்ட் சிம்மாசனத்துக்குத் தம் உரிமையை நிலைப்படுத்திக் கொள்வதேயாம். முன் பக்கத்தில் காணப்படும் வமிசாவளிக் குறிப்பில் இங்லண்ட் அரச முடிக்கு அவர் உரிமை பாராட்ட முடியாதபடி பார்லிமெண்டில் ஒரு சட்டமேற்பட்டிருப்பது காட்டப்பட்டிருக்கிறது. ஆயினும், அவர்தாம் அரசர் ஆக உரிமையுள்ளவர் என்று மற்றொரு சட்டத்தினை இயற்றுவித்து அவர் அந்த ஊனத்தினைச் சரிப்படுத்திக்கொண்டார். எவ்வகையில்? ஏன்? என்னுந் தொந்தரவான கேள்விகளை யெல்லாம் கிளப்பாமலேயே அச் சட்டம் நிறைவேறியது (கு. 51). யார்க் குலத்தவருள் அவருக்குப் போட்டியாக வரக்கூடியவர்கள் நான்காம் எட்வர்டின் தம்பி மகனாகிய வாரிக் ஏர்லும் சொந்தப் பெண்ணாகிய லேடி எலிசபெத்துமே யாவர். ஹென்றி வாரிக்கை லண்டன் கல்லரணில்[1] சிறைவைத்துவிட்டு லேடி எலிசபெத்தைக் கலியாணஞ் செய்துகொண்டார். அக் கலியாணத்தால் லேடி எலிசபெத்தின் உரிமையும் அவருடைய தோடு ஒன்றுபட்டது. அவர்களது பிள்ளை சிவப்பு ரோஜாக் குலத்தினரின் உரிமைகளுக்கும் வெள்ளை ரோஜாக் குலத்தினரின் உரிமைகளுக்கும் வாரிசாவான் என்பது நிச்சயம். யார்க் கட்சியினருள் அமிதவாதிகளைத் தவிர மற்றவர்களனைவரும் அந் நீண்ட குடும்பச் சண்டை இவ் வகையாக முடிவடைந்ததைப் பற்றித் திருப்தியடைந்தார்கள். லான்காஸ்டர் குலத்தைச் சேர்ந்த எவரும் (யார்க் குலப் பெண்ணை மனைவியாகக் கொண்டிருந்தபோதிலும்) சிம்மாசனத்தில் அமரக் கூடாது என்னும் வைராக்கியக் கோட்பாட்டினைக் கொண்டிருந்த சிலர் மட்டும் ரோஜாப்பூச் சண்டைகளைத் தொடர்ந்து நடத்த இருதரம் முயன்றார்கள். ஆயினும், அவர்களுக்குத் தகுந்த வாரிசு கிடைக்கவில்லை; ஆகவே, அவர்கள் போலிகளை[2] முன்நிறுத்திப் போர் துவக்க முயன்றனர்.

1. Tower of London. 2. Impostors.

ந. ஹென்றி சிவப்பு வெள்ளை ரோஜாக்களை அணிந்தான்.

லாம்பேர்ட் சிம்னேல்[1] என்பவனை முன்நிறுத்தி முதலில் சூழ்ச்சி செய்தார்கள். அவனை வாரிக் ஏர்லைப்போல் நடிக்கப் பழக்கப்படுத்தினார்கள். ஆயினும், ஹென்றி, உண்மையான வாரிக்கைச் சிறையினின்றும் அனுப்பித் தக்க காவலுடன் லண்டன் தெருக்களில் எவருங் காண அழைத்துச் செல்லும்படி செய்து, புதிதாகக் கிளம்பியவன் போலி என்பதைச் சுலபமாக நிரூபித்துவிட்டார். போக்கு வரவுக்குச் சாதனங்கள் அதிகமாக விருத்தியடையாத அக் காலத்தில், லண்டனில் நிகழ்ந்த இச் சம்பவத்தை நாட்டின் மற்ற பாகத்திலுள்ளவர்கள் அறிவது அசாத்தியமா யிருந்ததால், கலகம் சீக்கிரம் தணியவில்லை. ஆகவே, லாம்பெர்ட்டை யார்க் குலத்துக்கு ஆதரவு நிறைந்திருந்த அயர்லண்டுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்குச் சேகரிக்கப்பட்ட படையொன்று லான்கஷைரில் வந்திறங்கியது. ஆயினும், அரசரின் சேனைகள் அதை நீவார்க்குக்கு[2] அருகிலுள்ள ஸ்டோக்[3] என்னுமிடத்தில் அழித்துவிட்டன (1487). சிம்னெலின் அந்தஸ்துக்கேற்ப அரசர் அவனைத் தம் அரண்மனை மடப்பள்ளியில் ஒரு ஆளாக வைத்துக்கொண்டார்.

இரண்டாவது சூழ்ச்சியைப்பற்றி அரசர் அவ்வளவு அசட்டையாக இருப்பதற்கில்லை. இப்போது அரச பட்டத்துக்கு உரிமை கொண்டாடிக்கொண்டு வந்தவன் பேர்க்கின் வார்பெக்[4] எனப்பட்ட ப்ளாண்டெர்ஸ்[5] நாட்டான். லண்டன் கல்லரணில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் இளவரசர்களுள் இளையவனான யார்க் ட்யூக் தானே என்று அவன் சொல்லிக்கொண்டான். ஏழாம் ஹென்றிமீது குரோதம் பாராட்டிய பர்கண்டி டச்சசும்[6] (இவள் கொலையுண்ட குழந்தை யார்க் ட்யூக்கின் அத்தை), ப்ரான்ஸ் ஸ்காட்லண்ட் நாடுகளின் மன்னர்களும் அவன் சொன்ன

1. Lambert Simnel. 2. Newark. 3. Stoke. 4. Perkin Warbeck.
5. Flanders. 6. The Duchess of Burgundy.

நான்காவது ஜேம்ஸ் தம் உறவினர்களில் ஒருத்தியை (லேடி காத்தரின் கோர்டன்) பெர்கின் வார்பெக்குக்கு கலியாணம் செய்து கொடுத்தான்

கதையை நம்புவதாகப் பாசாங்கு செய்தார்கள். அவனைத் தத்தம் அரண்மனைகளுக்கு அழைத்து விருந்தளித்து இங்லண்ட் மன்னர்க்குரிய மரியாதைகளுடன் உபசரித்தார்கள். ஆயினும், ஹென்றி ப்ரான்ஸ் மன்னரோடும் ஸ்காட்லண்ட் மன்னரோடும் உடன்படிக்கைகள் செய்துகொண்டு அவனை அவர்கள் நாடுகளினின்றும் ஓட்டிவிட்டார். ஆகவே, அவன் அயர்லண்டுக்குப் போகவேண்டியதாயிற்று. முடிவில் வார்பெக் கார்ன்வாலில் வந்திறங்கிக் கலகம் விளைக்கப் பார்த்தான். ஆயினும், இங்லிஷ் மக்கள் மீண்டும் ஒரு உள்நாட்டுப் போரில் அகப்பட்டுக்கொண்டு அல்லற்பட விரும்பாததால், அவனுக்கு அதிக ஆதரவு கிடைக்கவில்லை. அரசரது படைகள் நெருங்கியதும் வார்பெக்கைச் சூழ்ந்திருந்தவர்கள் கலைந்து ஓடிவிட்டதால் அவன் எளிதில் பிடிபட்டான். ஹென்றி அவனை லண்டன் கல்லரணில் சிறை வைத்தார். மூன்றாண்டுகளுக்கு அப்பால், அவனும் வாரிக்கும் சேர்ந்து தப்பியோட ஒரு சதி செய்ததால், இருவரையும் சிரச்சேதம் செய்துவிடும்படி அவர் கட்டளையிட்டார்.

§ 85. **ஏழாம் ஹென்றியின் நோக்கங்களும் முறைகளும் :**—தம்மைப் **பலப்படுத்திக்கொண்டு** சிம்மாசனத்தில் தம் நிலைமையை ஸ்திரமாக்கிக்கொள்வதே ஹென்றியின் முக்கிய நோக்கமாம்.

செல்வமே வன்மைக்குச் சிறந்த ஆதாரம். பணமில்லா அரசன் பலமில்லா அரசனே. ஆகவே, ஹென்றி பணஞ் சேர்க்கப் பல வழிகளைத் தேடினர். பணக்காரர்கள்மீது பெருந்தொகையான அபராதங்களை விதித்து வசூலித்தார். அவர்கள் அரசாங்கத்துக்குக் 'கட்டாய கடன்கள்' கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினர்; 'நன்கொடை'களும்[1] வழங்கவேண்டுமென்றூர். இவ்விதமான முறைகளில் அரசருக்குப் பணஞ் சேர்த்துத் தருவதில் முனைந்து நின்றவர்கள்

1. Benevolences.

எம்ப்சன், டட்லி[1] என்ற இரு மந்திரிகள். அவர்களை நாட்டிலுள்ள பிரபுக்களும் பணக்காரர்களும் வெறுத்தார்கள். ஹென்றி தாம் சேர்த்துவந்த பணத்தைப் போராடித் தொலைத்துவிடக் கூடாது என்று எவ்வளவோ ஜாக்கிரதையாக இருந்தார். ஒரு சமயம் ப்ரான்ஸின்மீது போர் தொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்போது ப்ரான்ஸுக்கு ஒரு சேனையை அனுப்பப் பார்லமெண்ட் ஒரு பெருந் தொகையை அனுமதித்தது. அச் சேனை போரைத் தொடங்குவதன்முன், ப்ரான்ஸ் மன்னர் ஈடாப்[2] என்னுமிடத்தில் சமாதானம் செய்துகொண்டு (1492), சேனையை மீண்டும் இங்லண்டுக்குக் கொண்டுபோய்விட ஹென்றிக்குப் பெருந்தொகை யளித்தார்.

பிரபுக்களை அடக்கிவைக்க வேண்டுமென்பதும் ஹென்றியின் நோக்கம் (கு. 53). நூறாண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது இது சுலபமாக முடியலாம். சென்ற உள்நாட்டுப் போர்களின் (ரோஜாப்பூச் சண்டைகள்)போது நிகழ்ந்த சிரச்சேதங்களாலும் சொத்துப் பறிமுதல்களா[3]லும் பெரிய பிரபுக்களின் குடும்பங்கள் பலங்குன்றிக் கிடந்தன. இதற்கு அரசரின் பெருஞ் செல்வமும் மிக்க அனுகூலமாக இருந்தது. அதைக் கொண்டு அவர் வேண்டும்போது ஒரு வன்மை மிக்க சேனையைத் திரட்டிக்கொள்ளலாமாதலால், அவரைப் பகைத்துக்கொள்ள எவரும் துணியவில்லை. மேலும், அவர் நக்ஷத்திர அறை நீதி மன்றம்[4] என்பதைப் புதுப்பித்தார். தத்தம் அக்கம்பக்கங்களில் அடங்காத் தலைவர்களாயிருந்த பெரிய மானிபதார்கள்மீது தொடுக்கப்படும் வழக்குகளை விசாரிப்பதே அதன் பொறுப்பு. அது வெஸ்ட்மின்ஸ்டரில்[5] கூடியது.

1. Empson, Dudley. 2. Etaples. 3. Confiscations. 4. Court of Star Chamber. 5. Westminster.

2. லாம்பர்ட் ஸிம்னல் பிரான்ஸில் ஆதரவு இல்லை

வெளிநாட்டு விவகாரங்களில் ஹென்றி வெளிநாட்டு அரசகுடும்பங்களோடு விவாக சம்பந்தங்கள் செய்துகொண்டு தம் நிலையைப் பலப்படுத்திக்கொள்ள முயன்றார். ஸ்பெயின் மன்னரோடு செய்துகொண்ட ஒரு உடன்படிக்கையின் மூலம் அவர் யூரோப்பில் அக்காலத்திலாண்ட வன்மை மிக்க அரச குடும்பங்களுள் முதன்மை பெற்றிருந்த ஸ்பெயின் நாட்டு மன்னர் குடும்பத்தின் ஆதரவைப் பெற்றார். இந்த உடன்படிக்கையாலேற்பட்ட உறவை ஊர்ச்சிதப்படுத்த ஸ்பெயின் இளவரசியான ஆரகன் நாட்டுக் காதரீனைத்[1] தம் மூத்த மகனான ஆர்தர் இளவரசனுக்குக்[2] கட்டிவைத்தார்.*

பிரான்ஸுக்கும் ஸ்காட்லண்டுக்கும் நெடு நாளாக இருந்த கூட்டுறவின் பயனாக ஸ்காட்லண்ட் மன்னர்கள் இங்லண்ட் எல்லைப்புறத்தில் அடிக்கடி படையெடுத்து வந்து பெருஞ்சேதம் விளைவித்துக்கொண்டிருந்தார்கள். இதை நிறுத்த ஹென்றி தம் மகள் மார்கரெட்டை ஸ்காட்லண்ட் மன்னர் நான்காம் ஜேம்ஸுக்குக் கலியாணஞ் செய்து வைத்தார். முடிவில், அவர் பர்கண்டியுடன் 1496-ல் 'பெருங் கூட்டுறவு' (இன்டர்கர்சஸ் மாக்னஸ்[3]) என்ற முக்கியமான உடன்படிக்கையொன்று செய்துகொண்டார். அதன்படி நெதர்லண்ட்ஸில்[4] கென்ட், ப்ரூஜ், ஈப்ர்[5] என்னும் பட்டணங்களில் நடைபெற்ற கம்பள நெசவுத் தொழிலுக்கு வேண்டிய ஆட்டுமயிர் அனைத்தையும் இங்லண்டிலிருந்து நல்ல விலைக்கு

---

*இந்தக் கலியாணம் நடந்தேறிய சில மாதங்களுள் ஆர்தர் இளவரசர் இறந்தார். ஆயினும், ஹென்றி காதரீனைத் தமது இரண்டாவது பிள்ளையாகிய ஹென்றி என்பவருக்கு மறுமணம் செய்துவைத்துக்கொள்ள நிச்சயதார்த்தம் செய்துகொண்டார். ஹென்றி இளவரசர் தமது அண்ணன் விதவையைக் கலியாணஞ் செய்துகொள்வதற்குப் போப்பின் தனி ஆணை[6]யொன்று வேண்டியிருந்தது. இது காரணமாகப் பின்னர் சில முக்கியமான விளைவுகள் தோன்றின.

1. Infanta Catherine of Aragon. 2. Prince Arthur. 3. Intercursus Magnus. 4. The Netherlands. 5. Ghent, Bruges, Ypres. 6. Special Dispensation.

விற்பனை செய்ய ஏற்பாடாயிற்று. இதனால், ஹென்றி ஒரே கல்லால் மூன்று பறவைகளை அடித்தவன்போலானார்: ஆட்டு மயிர் வியாபாரிகள் அவரை வாழ்த்தினர்; வன்மைமிக்க பர்கண்டி சிற்றரசின் நட்பு அவருக்குக் கிடைத்தது; ஆட்டு மயிர் ஏற்றுமதி வியாபாரம் பலத்ததால் அவருக்குச் சுங்க வருமானம்[1] அதிகரித்தது.

§ 86. **புது நாடுகளையும் புது வழிகளையும் கண்டுபிடிக்கக் கடற் பயணங்கள்:**—ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் உலக சம்பவங்களுள் மிக முக்கியமானது பல புதிய நாடுகளையும் புதிய கடல் வழிகளையும் கண்டுபிடித்ததேயாம். அப்போது பத்து வருஷங்களுள் உலகத்தைப்பற்றிய மக்கள் அறிவு இரண்டத்தனை அதிகமாகப் பெருகியது. இப் புது அறிவினால் இங்லிஷ் மக்களின் வாழ்க்கைப் போக்குப் பெரிதும் மாறியபோதிலும், அதைப் பெருக்கிய கடற்பயணங்களில் அவர்கள் அதிகமாக ஈடுபடவில்லை. இடைக்காலத்தில் ஆசியாவுக்கும் இடலியின் துறைமுகப் பட்டினங்களுக்கும் இடையில் நடந்த பெருத்த வியாபாரத்தில் இங்லண்ட் பங்கு கொள்ளவில்லை. இங்லிஷ் வியாபாரிகள் வட கடலைத் தாண்டியும் பால்டிக் கடலுக்குள் புகுந்துமே சிறிது வியாபாரஞ் செய்துகொண்டிருந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டின் முடிவில் இந் நிலை முற்றிலும் மாறியது.

மத்தியதரைக் கடலின் கிழக்குக் கரையோரமுள்ள நாடுகளைத் துருக்கர்கள்[2] கைப்பற்றியதும் செங்கடல் மூலமாகவும் பெர்சியன்குடா மூலமாகவும் சென்றிருந்த வியாபார வழிகள் மூடப்பட்டுவிட்டன. ஆகவே, ஒரு புதிய வழியைக் காணவேண்டியதாயிற்று. ஆபிரிக்காவின் தென் கோடியைச் சுற்றிக்கொண்டு போகலாமென்பது எல்லோர் புத்திக்கும் பட்டாலும், அக் கண்டத்தின் பரப்பினை அக் காலத்தில் எவரும் உணர்ந்திலர். வழியில் பயங்கரமான காட்

1. Revenue from the customs duties. 2. The Turks.

டாள் கூட்டங்களும் பொங்கும் கடல்களும் தீய்க்கும் அனற் காற்றுக்களும் இருப்பதாக நம்பினர். ஆயினும், தீரமிக்க போர்ட்யுகல் கப்பலோட்டிகள் ஆபிரிக்காவின் மேற்குக் கடற் கரை யோரமாகத் தெற்கு நோக்கிச் சிறிது சிறிதாகப் பயணப்பட்டுச் சென்றுகொண் டிருந்தனர். முடிவில் 1498ஆ வாஸ்கோடகாமா[1] நன்னம்பிக்கை முனையைச்[2] சுற்றிக் கொண்டுபோய் இந்தியாவை அடைந்தார். முற்றிலும் கடல் வழியாகச் சென்று இந்தியாவை அடைந்த முதல் யூரோப்பியர் அவரே. கப்பல் வியாபாரிகளுக்கு 'ஆபிரிக்கா பயணம்'[3] ஏராளமான லாபத்தை அளித்தது. பழைய வியாபார வழிகளின் முக்கிய ஸ்தலங்களாயிருந்த வெனிஸ், ஜினோவா போன்ற இடலி நாட்டு நகரங்களைவிட, போர்ட்யுகல் ஸ்பெயின் நாடுகளின் நகரங்கள் இப் புதிய வழிக்கு அருகில் இருந்தமையால், அவை விருத்தியடையலாயின..

அதற்குச் சிறிது காலத்துக்கு முன் ஸ்பெயின் மன்னரது சேவையிலிருந்த கிறிஸ்டோபர் கோலம்பஸ்[4] என்ற இடலி நாட்டார் ஆசியாவுக்கு மேற்கு நோக்கிச் செல்லும் வழியொன்றைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டு மேற்கிந்தியத் தீவுகளை அடைந்தார். அவர் ஒரு புதிய கண்டத்தினையே கண்டுபிடித்தார் என்பதை உணராமலேயே அங்கு மூன்று பயணஞ் சென்று வந்தார். அவர் தொடங்கிய வேலையில் முனைந்து நின்ற மற்றவர்கள் முயற்சியால் விரைவில் உண்மை விளங்கலாயது.

புது நாடுகளையும் வழிகளையும் ஆராயும் நோக்கத்தோடு மேற்கொண்ட இத்தகைய துணிச்சலான பயணங்களுள், காபட்[5] என்னும் பெயர்கொண்ட ஒரு இடாலியரும் அவர் மகனும் வட அமெரிக்காவுக்குச் சென்று முதல் முதல் நியுபவுண்ட்லண்டையும் லாப்ரடாரையும்[6] கண்டுபிடிக்க மேற்

1. Vasco da Gama. 2. Cape of Good Hope. 3. 'The African Voyage'. 4. Christopher Columbus. 5. Cabot. 6. Newfoundland; Labrador.

கொண்ட பயணத்துக்கு ஹென்றி பணவுதவி செய்தார் இப் பயணம் புதிய வியாபார வழிகளைக் கண்டு வைக்கும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்ட போதிலும், அப் பாகங்களில் மக்கள் கூட்டம் நெருக்கமாக இராமையால் அதற்கு யாதொரு அனுகூலமும் இல்லாமற் போய்விட்டது. இப் பயணத்தைத் தொடர்ந்து மற்றவர்களும் செல்லவில்லை. ஆயினும், பதினாறும் நூற்றாண்டு முடிவதற்குள் இங்கே குறிப்பிடப்பட்ட பத்து வருஷங்களில் கண்டுபிடிக்கப்பட்டவைகளால் இங்லண்டின் நிலை முற்றிலும் மாறியது. இனி இங்லண்ட் உலகத்தின் ஒரு மூலையில் ஒதுங்கியிருக்க வேண்டியதில்லை. பெருங்கடல்களைக் கடந்து சென்று பெருகிய வியாபாரத்துக்கு அது மிக அனுகூலமான நடுநாயக நிலையைக் கொண்டதாயிற்று. நாளடைவில் கடல்களின்மீது வன்மை மிக்க நாயக நாடாக[1] அது ஓங்கலாயிற்று.

---

### இருபதாம் அத்தியாயம்

## உல்ஸியும் வெளிநாட்டு விவகாரங்களும்

### (1509—1525)

§ 87. எட்டாம் ஹென்றி:—ஏழாம் ஹென்றியின் அரசியல் திறத்தை, அவர் சிம்மாசனம் ஏறியபோது இருந்த நிலையை, அதை அவர் மகனுக்குக் கொடுத்தபோது இருந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்து அனுமானிக்கலாம். 1485இல் நாட்டு மக்கள் எதிலும் ஊக்கமும் உற்சாகமுமில்லாதிருந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் 'நாட்டை யாராண்டாலென்ன ?' என்று உற்சாகமற்றிருந்தனர். அதனால் அரசபட்டத்துக்காக நடந்த பாஸ்வொர்த்[2] போரில் இரு கட்சியிலும் சில்லாயிரம் படைஞர்களே கலந்துகொண்டனர். சென்ற முப்பது ஆண்டுகளுள் ஐந்து தரம் அரசர்கள்

1. The leading sea-power of the world. 2. Bosworth.

மாறினர். ஒவ்வொரு மாறுதலின் போதும் 'போருங் கொலையும் கொடுஞ்சாவும்' மக்கள் மனத்தில் திகிலை யுண்டாக்கின. எவருக்கும் அரசாங்கத்தின் வன்மையில் நம்பிக்கையில்லை; ரோஜாப்பூச் சண்டைகள் உண்மையில் முடிவடைந்தன வென்றும் தோன்றவில்லை. அரச பொக்கிஷத்தில் பணமில்லை. பெரிய மானியதார்களாகிய பிரபுக்கள் தாம் எந்தச் சட்டத்துக்கும் கட்டுப்பட்டவர்களில்லை என நினைத்துக் கொண்டிருந்தார்கள். 1503௵த்துக்குள் இந்நிலை முற்றிலும் மாறிவிட்டது. சிம்மாசனத்தில் அமரப் புது அரசர்க்கிருந்த உரிமைகளைச் சந்தேகித்தவர்கள் எவருமிலர். யார்க் குலத்துக்கும் லான்காஸ்டர் குலத்துக்கும் அவர் பொது வாரிசானார். நாட்டு மக்களுக்குப் புது ஊக்கம் உண்டாயிற்று. ப்ரான்ஸோடு போர் தொடுக்க அவர்கள் ஆவல் கொண்டனர். மேலும், எட்டாம் ஹென்றி தமது தகப்பனார் சேர்த்து வைத்த செல்வ மனைத்தையும், அவர் உருவாக்கிவைத்த வன்மைமிக்க அரசாங்கத்தையும் தமதாகப் பெற்றார்.

இளவரசர் தமது வன்மைமிக்க நிலையினைப் பெரிதும் பயன்படுத்திக்கொள்ளவல்ல தகுதி வாய்ந்தவரே. ஏழாம் ஹென்றிக்கு அரசாங்கத்தைச் சீர்படுத்தும் ஆற்றல்கள் இருந்தபோதிலும், மக்கள் ஆர்வத்தோடு விரும்பவல்ல குணங்களில்லை. எட்டாம் ஹென்றியோ வாலிபராக இருந்தபோது எல்லோராலும் விரும்பப்பட்டார். நல்ல உயரமும் தேகக்கட்டும் சுறுசுறுப்பும் அழகும் பொருந்திய அவர் வேட்டையாடுவதிலும் வில் வாள் வித்தைகளிலும் குதிரையேற்றம் மற்போர் ஈட்டிப்போர் முதலியவைகளிலும் இணையற்றவராக விளங்கினார். கல்விகலைகளிலும் அவருக்கு அதிக பயிற்சியுண்டு. சமய ஆராய்ச்சி, சங்கீதம், செய்யுளியற்றல் முதலியவைகளிலும் அவருக்கு ஊக்கமதிகம். அவர் தெம்பாக இருக்கக் கூடியவர். நகைச்சுவை மிக்கவர்; வீரஞ் செறிந்தவர். மனிதர்களைப் பற்றி அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளும் சக்தி யில்லாது.

சிம்மாசன மேறியதும் அவர் செய்த சில செயல்களால் மக்கள் அவரை முன்னிலும் அதிகமாக விரும்பலாயினர். தமது தகப்பனரின் பணம்பிடுங்கி மந்திரிகளாயிருந்த எம்ப்சனையும் டட்லியையும் அவர் இராஜத்துரோகிகளெனக் குற்றஞ்சாட்டிச் சிரச்சேதம் செய்வித்தார்; மக்கள் பெரிதும் விரும்பிய ஆரகன் நாட்டுக் காதரீனை அவர் கலியாணஞ் செய்துகொண்டார்; தம் தகப்பனர் சேமித்துவைத்த பெருஞ் செல்வத்தைக்கொண்டு அவர் தம் சமஸ்தானத்தை மிக ஆடம்பரமாக வைத்திருந்தார்; பழமைதொட்டு இங்கிலிஷ் மன்னர்கள் ப்ரான்ஸ் சிம்மாசனத்துக்குப் பாராட்டிக் கொண்டிருந்த உரிமையை ஹென்றியும் பாராட்டலானர்.

§ 88. ப்ரான்ஸோடு எட்டாம் ஹென்றி தொடுத்த முதற் போர் :—எட்டாம் ஹென்றி டம்பமும் பேராவலும் மிக்கவர். யூரோப் மன்னர்களுக் கிடையே பகட்டாக வாழ வேண்டுமென்பது அவர் எண்ணம். அதற்கு அக் காலத்திய நிலையில் அவருக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. யூரோப் மன்னர்களுள் வன்மைமிக்கவர்களாயிருந்த ஸ்பெயின், ப்ரான்ஸ் நாடுகளின் மன்னர்கள் ஒருவரை விட மற்றொருவர் உயர்ந்த நிலையில் இருக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் பொருமைகொண்டு போட்டியிடலாயினர். அவர்களிடையே அப்போது தொடங்கிய போராட்டம் இரண்டு நூற்றுண்டுகளாக விட்டு விட்டு நிகழ்ந்துகொண்டிருந்தது. அவ்விரு மன்னர்களும் இடலி தேசத்தில் தங்களுக்கு உரிமைகள் இருப்பதாகச் சொல்லிக்கொண்டார்கள். சில ஆண்டுகளுக்குமுன் ப்ரான்ஸ் மன்னர் இடலிமீது படையெடுத்துச் சென்றுர். படையெடுத்து வந்தவரை இடலியினின்றும் துரத்திவிடப் போப் ஆண்டவர் ஸ்பெயின் மன்னரோடும் 'பேரரசர்'[1] என்னும் பட்டம் பெற்றிருந்த ஆஸ்ட்ரியா மன்னரோடும் 'தெய்விகக் கூட்டுறவு'[2] என்னும் ஒரு

1. The Emperor. 2. The Holy League.

ஏமிக்கபிள்லோன் அரசருக்கு தொகையை தொடுப்பதற் காக வேண்டி பணம் சேர்ப்பதற்கான உல்லி செய்த தந்திரம். (friendly loan)

ஒப்பந்தம் செய்துகொண்டார். பல காரணங்களை முன்னிட்டு அதில் எட்டாம் ஹென்றியும் கலந்துகொண்டார். கிறிஸ்து மதஸ்தாபனத்தை[1] ஆதரிப்பதில் ஹென்றிக்கு எப்போதும் ஒரு பெருமையுணர்ச்சி யுண்டு; அவர் ஸ்பெயின் இள வரசியைக் கலியாணஞ் செய்துகொண்டதால் ஸ்பெயினுடன் கூட்டுறவை அவள் கோரினள்; நாட்டு மக்களும் க்ரெஸி, ஆழங்கூர் வெற்றிகளைப்போல் இங்லண்டுக்கு வெற்றிகள் கிடைக்கவேண்டு மென்று ஆவல் கொண்டிருந்தனர்.

ஆகவே, ஹென்றி பழைய இங்லிஷ் மன்னர்கள் ப்ரான்ஸ் அரச பட்டத்துக்குப் பாராட்டிய அசட்டு உரிமை யைத் தாமும் பாராட்டிக்கொண்டு (§ 72) கியென்[2] நாட்டைக் கைப்பற்ற ஒரு சேனையை அனுப்பி வைத்தார். ப்ளான் டாஜெனெட் மன்னர்கள் காலத்தில் இருநூறுண்டுகளாக இந் நாடு இங்லிஷார் வசமிருந்தது. ஆயினும், இப் போரில், இங்லிஷ் படைகளுக்கு க்ரெஸி, ஆழங்கூர் வெற்றிகளைப் போன்ற யாதொரு வெற்றியும் கிடைக்கப்போவதில்லை என் பது விரைவிலேயே வெளிப்படையாகிவிட்டது. இப் போர் மிகவும் முட்டாள்தனமாக நடத்தப்பட்டதால் முற்றிலும் அபஜெயமாகவே முடிந்தது. அடுத்த ஆண்டில் ஹென்றி மற்றுமொருதரம் முயன்று பார்த்தார். இம் முறை ப்ரான் ஸின் தென்மேற்கை விட்டு வடகிழக்கில் போர் தொடங்கப் பெற்றது. இம் முயற்சி ஒருவாறு வெற்றிகரமாகவே முடிந்தது. கியென்கேட்[3] என்னு மிடத்தில் இங்லிஷ் படை கள் வெற்றி பெற்றன (1513). அங்குத் தோற்ற ப்ரெஞ்சு குதிரை வீரர்கள் தங்கள் குதிரைகளுக்குச் சிமிட்டா கொடுத் துக்கொண்டு மிக வேகமாக ஓடிவிட்டபடியால் அப் போர் சிமிட்டாப் போர்[4] என்னும் பெயர் பெற்றது.

ஹென்றி ப்ரான்ஸில் போர்மேல் சென்றிருந்த சமயத் தில், ஸ்காட்லண்ட் மக்கள், தங்கள் மன்னரின் இராணி ஒரு

1. The Church. 2. Guienne. 3. Guinegate. 4. The Battle of the Spurs.

இங்லிஷ் இளவரசியா யிருந்ததையும் பொருட்படுத்தாது, இங்லண்ட்மீது மற்றொருதரம் படையெடுத்து வந்தார்கள். ஆயினும், அவர்கள் நெடுந்தூரம் உட்புகுவதற்குள், அரசர் நாட்டிலில்லாதபோது அவருக்குப் பதிலாக இராச்சியக் காவல் பொறுப்பைத் தாங்கியிருந்த காதரீன் இராணி ஒரு படையைத் திரட்டி சர்ரே ஏர்ல்[1] தலைமையில் எதிரிகளைத் தாக்க அனுப்பி வைத்தாள். அது ப்ளாடென்[2] போரில்(1513) ஸ்காட்லண்ட் படையைத் தோற்கடித்துத் துடைத்தது.

அடுத்த ஆண்டில் ஹென்றி சமாதானத்தை நாடினார். வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர்களான ஸ்பெயின் மன்னர் பார்டினண்டும்[3] பேரரசர் மாக்சிமிலியனும்[4] போப் ஆண்டவர் இரண்டாம் ஜூலியஸும்[5] அவரவர்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்ளத் தம்மை ஒரு கருவியாகப் பயன் படுத்திக் கொண்டனர் என்பதை அவர் உணர்ந்தார். ஆகவே, அவர் 'தெய்விகக் கூட்டுற'வினின்றும் விலகி ப்ரான்ஸோடு சமாதானம் செய்துகொண்டார். அதன் சின்னமாகத் தமது தங்கை மேரி இளவரசியைக் கிழவரான ப்ரெஞ்சு அரசர் பன்னிரண்டாம் லூயிக்குக் கலியாணஞ் செய்துவைத்தார்.

§ 89. உல்ஸியின் ஏற்றம் :—ஹென்றியின் இரண்டாவது போர் முயற்சி வெற்றிகாமாக முடிந்ததன் காரணம் படைகளுக்குத் தேவையான ஆகார முஸ்தீப்புக்களை[6] டாமஸ் உல்ஸி[7] (1471—1530) என்ற திறமைமிக்க இளம் மந்திரி மிகச் சாமர்த்தியமாகச் செய்துவைத்ததேயாம். உல்ஸி ஈப்ஸ்விச்[8] என்ற இடத்தில் வசித்த ஒரு வியாபாரியின் மகன். ஆக்ஸ்பர்டில்[9] எவரும் மெச்சும் வண்ணம் கல்வி பயின்று அவர் மகஸ்தாபனத்தில் ஒரு வேலையி லமர்ந்தார். அக் காலம் கீழ்க் குடிகளில் பிறந்து தத்தம் சாமர்த்தியத்தினால்

1. Earl of Surrey. 2. Flodden. 3. Ferdinand. 4. Emperor Maximilian. 5. Pope Julius II. 6. Commissariat. 7. Thomas Wolsey. 8. Ipswich. 9. Oxford.

# பதினாறும் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்



முன்னுக்கு வரவேண்டியவர்களுக்குச் சந்தர்ப்ப மளித்தது மதஸ்தாபனமே. ஏழாம் ஹென்றியின் முக்கிய மந்திரியா யிருந்த பிஷப் பாக்ஸ்[1] என்பவர் அவரைத் தம் காரியதரிசிக ளுள் ஒருவராக வேலைபார்க்கச் சொன்னார். எட்டாம் ஹென்றி பட்டத்துக்கு வந்ததும் உல்ஸி மந்திரிகள் சபை யில் ஒரு சிறிய பதவி பெற்றார். ப்ளாண்டர்ஸில்[2] நடந்த சண்டையின்போது தமது சாமர்த்தியத்தைக் காட்ட அவ ருக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. ஹென்றி தமது இன்ப வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கையில் அரசாங்க வேலைகளைக் கவனித்துக்கொள்ளத் திறமை மிக்க ஒருவர் அவருக்கு அப்போது தேவை. உல்ஸி பலவகையில் அவ் வேலைகளைக் கவனித்துக்கொள்ளத் தகுந்த வாய்ப்புள்ளவ ராக இருந்தார். மூன்று நான்கு ஆண்டுகளுள் உல்ஸி இங் லண்டில் செல்வமும் செல்வாக்கும் மிக்க பிரமுகர்களுள் ஒருவராக விளங்கலானார். செண்ட் ஆல்பன்ஸ் மடத்தின் அதிபதி (ஆபட்)[3], வின்செஸ்டர் பிஷப், யார்க் ஆர்ச் பிஷப் ஆகிய பதவிகளை வகித்திருந்ததோடு, உல்ஸி லார்ட் சான்ஸெலர்[4] ஆகவும், மதஸ்தாபனத்தின் கார்டினல் களுள்[5] ஒருவராகவும், போப்பின் பிரதிநிதி[6]யாகவும் உயர்ந் தார்.

உல்ஸி வெளிநாட்டு விவகாரங்களில் அதிக ஊக்கங் காட்டினார். ப்ரான்ஸில் ஆண்டுகொண்டிருந்த வேலாய்[7] அரச குலத்துக்கும் ஸ்பெயினில் ஆண்டுகொண்டிருந்த ஹாப்ஸ்பர்க்[8] அரச குலத்துக்கும் இடையே நெடுங்காலமாக இருந்துவந்த போட்டி அப்போது அந் நாடுகளை ஆள நேர்ந்த இளமன்னர்களான முதலாம் ப்ரான்ஸிஸ், ஐந்தாம் சார்ல்ஸ் என்பவர்களின் பொறாமையால் பகைமையாக முற்றியது. ஸ்பெயின் மன்னராகமட்டு மிருந்த சார்ல்ஸ்

1. Bishop Fox. 2. Flanders. 3. Abbot of St. Albans. 4. Lord Chancellor. 5. Cardinal. 6. Papal Legate. 7. Valois. 8. Habsburg.

1519ல் 'தெய்விகமிக்க ரோமன் பேரரசர்'[1]* என்னும் பதவியையும் பெற்றார். உல்ஸி தன்னாலியன்றவரையில் அவர்களுக்கிடையே அமைதியை நிலைக்கச் செய்ய முயன்றார். அவர்களுள் எவரும் மற்றொருவரை அடக்கிவிடக் கூடிய அவ்வளவு மிகுந்த வன்மையை யூரோப்பில் அடையக் கூடாதென்பது அவர் பேரவா. ஏனென்றால், அவ்வளவு பெரிய அரசாங்கங்கள் சண்டை யிட்டுக்கொண்டால் அதில் கலந்துகொண்டு வெற்றிகரமாக வர அக் காலம் இங்லண்டுக்கு வன்மை போதாது. ஆயினும், அமைதி காலத்தில், இங்லண்டின் நட்பைப் பெறுதல் நலமே என்று அவற்றுள் ஒவ்வொன்றும் நினைக்கும் வண்ணம் செய்துவைக்க அவரால் முடியும்.

எப்படியும் அவர்கள் விரைவிலேயே பூசலிட்டுக்கொள்வார்கள் என்று அக்காலத்தில் எவராலும் எதிர்பார்க்கப்பட்டது. அதனால் இருவரும் இங்லண்டின் துணையைப் பெற ஆவல் கொண்டிருந்தனர். உல்ஸி 1520ல் காலிக்கு[2] அருகிலுள்ள மைதானத்தில் தம்மரசர் ஹென்றியும் முதல் ப்ரான்ஸிஸும் சந்திக்குமாறு ஏற்பாடு செய்தார். இந்தச் சந்திப்பு மிக டாம்பீகமான முறையில் நடைபெற்றது. அவ்விடம் 'பொன் துகில் களம்'[3] என்னும் பெயர் பெற்றது.

---

* 'தெய்விக மிக்க ரோமன் பேரரசு' என்பதில் மத்திய யூரோப்பில் இருந்த பல நாடுகள் சேர்ந்திருந்தன. அவற்றின் சிற்றரசர்கள் தம்முள் 'தெய்விக மிக்க ரோமன் பேரரசர்' என்னும் பட்டங் கொண்ட ஒருவரைத் தம் பேரரசராக ஏற்றுக்கொண்டனர். அதன் பெயரால் பழைய ரோமன் பேரரசுக்குப் புத்துயர் ஏற்பட்டதென்று அக் காலத்தில் பலர் நினைத்தனர். ஆயினும், அது ஒரு ஜெர்மன் பேரரசே. அதை 'ரோமன்' என்று சொல்வதற்கோ 'தெய்விக மிக்க' தென்று சொல்வதற்கோ நியாயமில்லை. ஒரு பேரரசர் இறந்தால் அவருக்குப் பின் பேரரசராக ஏற்றுக் கொள்ளப்பெறவேண்டியவர் யார் என்பதைச் சிற்றரசர்களுள் முக்கியமானவர்கள் ஒன்றுசேர்ந்து தேர்ந்தெடுத்தனர். அவர்கள் 'தேர்ந்தெடுப்போர்'[4] எனப்பட்டனர். ஒரு நூற்றாண்டாக ஆஸ்ட்ரியாவை யாண்ட ஹாப்ஸ்பர்க் அரச குலத்து 'ஆர்ச்ட்யூக்' என்னும் பட்டம் பெற்ற இளவரசர்களையே பேரரசராகத் தேர்ந்தெடுத்துக்கொண்டு வந்தனர்.

1. The Holy Roman Emperor. 2. Calais. 3. The Field of the Cloth of Gold. 4. Electors.

இது ஒரு பாசாங்கே. ஹென்றி யார் பக்கமாவது சேருவதாயிருந்தால் ஐந்தாம் சார்ல்ஸ் பக்கமே சேருவார் என்பது வெளிப்படை. முதலாவதாக, ஹென்றி சார்ல்ஸ் குடும்பத்தோடு விவாக சம்பந்த முடையவர்; இரண்டாவதாக, சார்ல்ஸ் இங்லண்டின் ஆட்டுமயிர் வியாபாரத்துக்கு முக்கியமாயிருந்த நெதர்லண்ட்ஸ்[1] நாட்டின் மன்னர்; மூன்ருவதாக, சார்ல்ஸ் தமக்கு ரோமிலுள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி அடுத்த முறை போப் ஆண்டவர் பதவி காலியாகும்போது அதற்கு உல்ஸியைத் தேர்ந்தெடுக்கச் செய்வார் என்று உல்ஸி எதிர் பார்த்தார்.*

ஆகவே, இரண்டாம் முறை ப்ரான்ஸுடன் போர் தொடங்கியது (1522—1523). இங்லிஷ் சேனைகள் பலமாகச் சண்டையிடவில்லை. இந்த இரண்டு மூன்று ஆண்டுகளுள் இங்லண்டுக்கும் பேரரசுக்கும் ஏற்பட்ட உறவு மெதுவாகத் தளரலாயிற்று. போப் பதவி இரு முறை காலியானபோதிலும், அதற்கு உல்ஸியைத் தேர்ந்தெடுக்கச் சார்ல்ஸ் ஊக்கமுள்ளவராகத் தோன்றவில்லை. மேலும், பேரரசரின் சேனைகள் ப்ரெஞ்சு படைகளைப் பாவீயா[2]வில் தோற்கடித்து (1525) ப்ரான்ஸிஸ் மன்னரைச் சிறைபிடித்தன. அப்போது யூரோப் முழுமையும் பேரரசர் அதிகாரமே இனிச் செல்லும் போலிருந்தது. உல்ஸிக்கேனும் அவர் அரசர்க்கேனும் இது விருப்பமில்லை. இந்த உறவைத் தளர்த்தி உடைக்க மற்ெருரு அதிமுக்கியமான காரணமும் அப்போது தோன்றியது. ஐந்தாம் சார்ல்ஸுக்கு உறவான ஆரகன் காதரீனுக்கும் தமக்கும் நடைபெற்ற விவாகத்தை ரத்து செய்துவிட ஹென்றி சில காலமாக யோசித்துக்கொண்டிருந்தார்.

*மதஸ்தாபனத்தில் கார்டினல்[3] பதவிபெற்ற குருமார்களே போப் ஆண்டவரைத் தேர்ந்தெடுப்பவர்கள்.

1. The Netherlands. 2. Pavia. 3. Cardinal.

இது சம்பந்தமாக ஹென்றி செய்த தீர்மானம் இங்லண்டின் சரித்திரத்தில் மிக முக்கியமான பல விளைவுகளை உண்டாக்கியதால் அதைத் தனியாக அடுத்த அத்தியாயத்தில் விவரிப்போம். இங்கு நெருக்கத்தில் ஜெர்மனியில் நிகழ்ந்த சில முக்கியமான சம்பவங்களைக் கவனிப்போம்.

§ 90. **லூதரும்[1] ஜெர்மானியரது எதிர்ப்புக் கொள்கையும்[2]** :—ஜெர்மனியிலும் ப்ரான்ஸிலும் நெடுங்காலமாகவே மதஸ்தாபனத்தில் சில முக்கியமான சீர்திருத்தங்களை விரைவிலேயே செய்து முடிக்கவேண்டுமென்னும் எண்ணம் வேரூன்றிக்கொண்டு வந்திருந்தது (§ 63). மதச் சடங்குகளைச்[3] செய்யவும் மதஸ்தாபனத்து நீதி மன்றங்களில்[4] வழக்குகளைத் தீர்க்கவும் குருமார்கள் அதிகமாகப் பணம் பறித்துக்கொண்டு வந்தார்கள். அவர்களுள் சிலர் அதிக வருமானத்துக்கு ஆசை வைத்துத் தங்களால் சாதாரணமாகச் செய்ய இயலாத கணக்கற்ற வேலைகளை ஏற்றுக்கொண்டார்கள்.* மேலும், எங்கும் நாட்டுணர்ச்சி முதிர்ந்துகொண்டு வந்ததால், நாட்டைவிட்டு வெளியே போப்புக்குக் காணிக்கையாக அதிக பணமனுப்புவதை மக்கள் வெறுக்கலாயினர். இதுவுமன்றி, பெரிய பதவிகளிலிருந்த குருமார்களுள் பலர் மத சம்பந்தமான விஷயங்களில்விட இராஜீய சம்பந்தமான விஷயங்களில் அதிகமாக ஈடுபடலானார்கள்†. மொத்தத்தில், மதஸ்தாபனத்தின் வைதீக அடிப்படைகளும் நோக்கங்களும்[5] பின்னடைந்து, லௌகிக நோக்கங்களும் விவகாரங்களும்[6] அவர்கள் மனத்தைக் கவரலாயின. பதினான்காம்

---

* ஒருவரே பல பதவிகளை ஏற்றுக்கொள்ளும் தீய பழக்கத்துக்குப் 'பதவிப்பன்மை'[7] என்னும் பெயர் வழங்கலாயது. உல்ஸி இதற்கொரு உதாரணமானார்.

† உல்ஸி இதற்குமொரு உதாரணமானர்.

1. Luther. 2. Protestantism. 3. Sacraments. 4. Church Courts. 5. The sacred origin and purpose of the Church. 6. Worldly aims and interests. 7. Pluralism.

நூற்றாண்டிலேயே விக்லிப்[1] இதையெல்லாம் கண்டிக்கலானார்; ஆயினும், 'லாலர்ட்' இயக்கத்தால்[2] நிலையான பலனொன்றும் ஏற்படவில்லை. ஏழாம் ஹென்றி காலத்தில் 'ஆக்ஸ்பார்ட் சீர்திருத்தக்காரர்கள்'[3] (கு. 55) எனப்பட்ட கோலெட், எராஸ்மஸ், மூர்[4] என்பவர்கள் தங்கள் எழுத்தாலும் பேச்சாலும் மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களின் போக்கைப் பலவகையிலும் சீர்படுத்தப் பார்த்தார்கள். ஆயினும், அவர்கள் வெற்றி பெறவில்லை. மிகத் தீவிரமான முயற்சி யில்லாவிட்டால் ஒரு பயனும் பெற முடியாதென்பது வெளிப்படையாயிற்று. அம்முயற்சி முதலில் ஜெர்மனியில் தோன்றியது.

மதஸ்தாபனத்தின் மிகக் கேவலமான பழக்கங்களுள் ஒன்று 'மன்னிப்புச் சீட்டு'[5]களை விற்றல். பாபஞ் செய்தவர்கள் தாங்கள் இயற்றிய பாபங்களுக்காக மனம் வருந்தினால் அவர்களுக்குப் பாபக் கழுவாய்களான தண்டனைகளை விதித்தல் மதஸ்தாபனத்தின் பழைய பழக்கமாக இருந்தது; ஆனால், சில காலமாக அவற்றிற்குப் பதிலாகப் பணம் பெற்றுக்கொள்ளுதலை ஒரு வழக்கமாகக் கையாளலாயினர். போப்புகளுக்கு ஏராளமான பணம் வேண்டியிருந்தபோதெல்லாம் பாபக் கழுவாய்களாக மன்னிப்புச் சீட்டுகளை விற்கலாயினர். 1517-ல் போப் பத்தாம் லீயோ[6] என்பவர் ரோமில் செண்ட் பீடர்[7] ஆலயத்தைக் கட்டுவதற்கு வேண்டிய பெருந் தொகையைத் திரட்ட மன்னிப்புச் சீட்டுகள் விற்பனை வியாபாரமொன்று தொடங்கினார். டெட்செல்[8] என்ற டாமினிகன் திரியுந்துறவி[9] யொருவர் அவைகளை விற்றுப் பணமாக்குவதில் பேரூக்கங் காட்டலானார். ஜெர்மனியில் தாம் செய்த ஒரு வியாபாரப் பயணத்தின்போது அவர் பல்கலைக் கழகமொன்று நிலைத்திருந்த விட்டென்பர்க்[10]

1. Wyclif. 2. The Lollard movement. 3. Oxford Reformers. 4. Colet, Erasmus, More. 5. Indulgences. 6. Leo X. 7. St. Peter. 8. Tetzel. 9. Dominican Friar. 10. Wittenberg.

1515 மூர் உடோபியா என்னும் புத்தகம் எழுதினார் (அக்காலத்தைப் பற்றி எழுதினார்)

பட்டணத்துக்கு வந்தார். அங்கு அப்போது சமயக் கோட்பாடுகளைக் கற்பிக்கும் ஆசிரியராக இருந்தவர் மார்ட்டின் லூதர்[1] என்ற மதஸ்தாபனத் துறவி (மான்க்)[2]. இத் தீய பழக்கங்களால் கிறிஸ்து மதத்துக்கே எவ்வளவு தீமையும் அவமதிப்பும் நேர்ந்து வந்தன என்பதை அவர் நெடுநாட்களாகவே உன்னியுன்னி மனம் நொந்திருந்தார். ஆகவே, அவர் மன்னிப்புச் சீட்டுகளை விற்றல் படுமோசம் என்பதைத் தெளிவாக்கத் தொண்ணூற்று ஐந்து நியாயங்களை[3] ஒரு தாளில் எழுதி, அவ்வூர்க் கோவிலின் வாயிற்கதவில் எவரும் படித்துணருமாறு ஆணி அடித்து வைத்தார். உடனே இவ் விஷயத்தை யொட்டி ஜெர்மனி யெங்கும் பரபரப்புத் தோன்றி மும்முரமான விவாதங்கள் நிகழ்ந்தன. அவ்விவாதங்களில் லூதர் கலந்துகொண்டு, பொருள் மாற்றத்தில்[4] நம்பிக்கை, குருமார்கள் மணவாழ்க்கையை நாடாதிருத்தல்*[5] முதலிய பல முக்கியமான காதொலிக்[6] மதக் கோட்பாடுகளைக் கண்டித்து மறுக்கலானார். போப் லூதரை மதஸ்தாபனத்தினின்றும் கிறிஸ்துவர் கூட்டத்தினின்றும் தள்ளிவைத்துத் தண்டிக்கப் பார்த்தார். ஆயினும், லூதர் போப்பின் அதிகாரத்தைப் புறக்கணித்து அவர் அனுப்பிவைத்த கட்டளைச் சீட்டை விட்டென்பர்க் நகரவாயிலுக்கு அப்பாலிருந்த வெளியிடத்தில் எவருங் காண எரித்துப் போட்டார்.

போப்பின் விருப்பத்துக்கிணங்க, பேரரசர் ஐந்தாம் சார்ல்ஸ் வோர்ம்ஸ்[7] நகரத்தில் கூடிய ஜெர்மன் சிற்றரசர்கள் மகாசபையின்[8] முன்னிலையில் ஆஜராகும்படி லூதருக்குக்

---

* இந்தக் கோட்பாட்டினைப்பற்றித் தமக்கிருந்த அசட்டையைக் காட்ட லூதர் கன்னியர் மடத்தில் மதக் கன்னியாயிருந்த பெண் ஒருத்தியைக் கலியாணஞ் செய்துகொண்டார்.

1. Martin Luther. 2. Monk. 3. Theses. 4. Transubstantiation. 5. The Celibacy of the Clergy. 6. Catholic. 7. Worms. 8. Diet.

கட்டளையிட்டார். தைரிய மிக்க லூதர் அங்கும் வந்து, காதொலிக் மதக் கொள்கைகளை எதிர்த்துத் தாம் வெளியிட்டிருந்த கண்டனங்களை வாபஸ் வாங்கிக்கொள்ள மறுத்து விட்டார். சிற்றரசர்களுள் சிலர் லூதரை மத விரோதி[1] எனக் கண்டித்து உயிருடன் எரித்துவிடவேண்டு மென்றனர்; வேறு சிலர் அவரை ஆதரிக்கலாயினர். ஜெர்மனி மக்களுள் பலர் அவரைத் தம் நாட்டு வீரர்களுள்[2] ஒருவராக மதிக்கத் தலைப்பட்டதால், பேரரசர் அவருக்கு விரோதமாக யாதொரு தீவிர முயற்சியும் எடுத்துக்கொள்ள முடியவில்லை.

இங்லிஷ் மக்கள் இவ் விவாதங்களில் அதிக ஊக்கமெடுத்துக்கொள்ளவில்லை. மதஸ்தாபனத் துறவிகளும் குருமார்களும்[3] கையாண்டுவந்த சில பழக்க வழக்கங்களை அவர்கள் வெறுத்தாலும், காதொலிக் மத ஸ்தாபனத்தினின்றும் வேரோடு துண்டித்துக்கொண்டு வந்துவிட அவர்கள் விரும்பவில்லை. எட்டாம் ஹென்றி காதொலிக் கொள்கைகளில் தமக்கிருந்த நம்பிக்கையைக் காட்ட லூதரது எதிர்ப்பினின்றும் போப்பை ஆதரித்து ஒரு மத நூலை எழுதினர். இதற்கு நன்றியறிதலாகப் போப் அவருக்கு 'மதக் காவலர்'[4] என்னும் பட்ட மளித்தார். இப் பட்டத்தை இன்றைக்கும் இங்லிஷ் மன்னர்கள் புனைந்துகொண் டிருக்கிறார்கள்.

---

1. Heretic. 2. National heroes. 3. Monks and Priests. 4. 'Fidei Defensor' (Defender of the Faith).

## இருபத்தோராம் அத்தியாயம்

# ரோமுடன் பிளவு

(1525—1535)

§ 91. **அரசரது விவாக ரத்து:**—நாளாக ஆகத் தனக்குப் பின் அரச பட்டம் வகிக்கத் தனக்கு ஆண் மகவு இல்லையே என்ற கவலை எட்டாம் ஹென்றிக்கு அதிகமாகிக் கொண்டே வந்தது. அவருக்குப் பிறந்த ஆண் மக்கள் பால்யத்திலேயே இறந்துவிட்டனர். 1516-ல் அவருக்கு மேரி என்னும் பெண் பிறந்தாள். ஆயினும், அதுவரையில் இங்லண்டை எந்த அரசியும் ஆளவில்லை. தனக்குப் பின் யார் பட்டம் வகிப்பது என்ற விஷயத்தைத் தீர்மானிக்காமல் தாம் இறந்துவிடுவாரானால், தாமும் தம் தகப்பனும் கஷ்டப்பட்டு நிறுவிய துரைத்தனம் தளர்வுற்றுத் தட்டுக்கெட்டு நாட்டில் குழப்பங்களும் சச்சரவுகளும் மல்கி அமைதியற்றுப்போய்விடுமே என்று அவர் அஞ்சலானார். காதரீன் அரசிக்கு வயதாகிவிட்டதால் அவளுக்கு இனிப் பிள்ளைகள் பிறக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆகவே, அரசர் மற்றொரு கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று நினைக்கலானார். இந்த எண்ணத்துக்கு மற்றொரு காரணமுமுண்டு. அரசியின் தோழியருள் ஒருத்தியாயிருந்த ஆன் பொலீன் என்னுஞ் சீமாட்டியின்மீது அவர் அளவுகடந்த காதல் கொள்ளலானார்.

இந் நிலையில் காதரீனை என்ன செய்வது என்னும் கேள்வி எழுந்தது. மதஸ்தாபனம் விவாக ரத்தினை அனுமதிக்காது. பல்லாண்டுகள் மன்னருக்கு உண்மையாக ஒழுகி வந்த அரசியைத் தள்ளிவைக்க என்ன காரணம் கூற முடியும்? ஆயினும், ஹென்றிக்குத் தம் கலியாணமே சட்டப்படி ஒப்புக்கொள்ளக் கூடியதா என்னும் சந்தேகம் தோன்றியது. ஒரு

வன் தன் சகோதரனின் விதவையைக் கலியாணஞ் செய்து கொள்ளக்கூடாது என்று பழைய ஏற்பாட்டில்[1] லெவிடிகஸ்[2] என்னும் பகுதியில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இக் கலியாணத்தைப் போப் இரண்டாம் ஜூலியஸிடமிருந்து[3] ஒரு தனிப்பட்ட விலக்காணை[4] பெற்று நடத்தவேண்டியிருந்தது (§ 85 கு). கடவுளின் சட்டங்களை விலக்கிவைக்கப் போப்புக்கு அதிகார முண்டோ என்று ஹென்றி இப்போது விவாதிக்கலானார். காதரீனைத் தள்ளிவிட்டு உடனே ஆன்பொலீனைக் கலியாணஞ் செய்துகொண்டால்தான் தாம் கடவுளுக்கும் குடிகளுக்கும் செய்யவேண்டிய கடமையைச் செய்தவராவார் என்று உறுதிகொண்டார். 1525-ல் ஹென்றி காதரீனைப் பட்டத்து இராணியாக மதிக்காமல் ஒதுக்கி வைத்துப் போப் ஏழாம் க்ளெமென்டுக்கு ஒரு அவசர மனு அனுப்பினார். அதில் இரண்டாம் ஜூலியஸ் தம் அதிகார வரம்பைக் கடந்து காதரீன் கலியாண விஷயமாக விலக்காணை அளித்துள்ளார் என்றும், ஹென்றிக்குச் சட்டப்படி கலியாணமே ஆகவில்லையென்றும் கூறும்படி வேண்டிக்கொண்டார்.

§ 92. போப் பிரதிநிதிகள் நீதி மன்றம்[5] :—உல்ஸிக்குத் தம் மந்திரி பதவியில் நிம்மதி குறையலாயிற்று. ஹென்றி துரைத்தன விவகாரங்களில் தலையிடாது கேளிக்கைகளிலும் விளையாட்டுக்களிலும் பொழுது போக்கிக்கொண்டிருந்த போது உல்ஸி தம் விருப்பப்படி காரியங்களை நடத்திக் கொண்டு போனார். அரசரே இராச்சிய காரியங்களைப் பொறுப்பேற்றுக் கவனிக்கலானபோது அரசரது மனப் போக்குக்கு ஏற்றவாறு மந்திரி தம் நோக்கங்களையும் விவகாரங்களையும் மாற்றிக்கொள்ள வேண்டிய அவசிய மேற்பட்டது. இராணியுடன் தமது விவாகத்தை ரத்து செய்து

1. Old Testament. 2. Leviticus. 3. Pope Julius II. 4. Dispensation.
5. The Legatine Court.

கொள்ள ஹென்றி தொடங்கிய முயற்சிகளால் உல்ஸியின் நிலை பெரிதும் கவலைக் கிடமானது. போப்பாண்டவர் அதற்குமுன் இத்தகைய விவாகங்களை ரத்து செய்திருந்த போதிலும் இப்போது செய்யத் தயங்கினர். பாவீயாவில் பெற்ற வெற்றிக்குப் பிறகு ஐந்தாம் சார்ல்ஸின் சேனைகள் ரோம் நகரத்தில் புகுந்து கொள்ளையிட்டன. போப் அண்மையில் தமக்குச் சொந்தமாயிருந்த சென்ட் ஆஞ்செலோ[1] கல்லரணின் பாதுகாப்பை நாடவேண்டியதாயிற்று. அந் நிலையில் அவர் ஐந்தாம் சார்ல்ஸின் காருண்யத்தால்தான் உயிர்வாழ்ந்திருந்தார் என்று சொல்லவேண்டும். பேரரசரது அத்தைக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய ஒரு தீர்ப்பினை அப்போது அவர் செய்ய முடியுமா? எட்டாம் ஹென்றியைப் பகைத்துக்கொள்ள அவருக்கு விருப்பமில்லைதான்; ஆயினும், ஐந்தாம் சார்ல்ஸைப் பகைத்துக்கொண்டு அவர் தம் பதவியி லிருக்க முடியாதே. ஆகவே, அவர் இவ்விஷயத்தில் தீர்ப்புச் சொல்லாமலேயே காலந் தள்ளிக்கொண்டு போக முயன்றார். ஏதாவது எதிர்பாராத ஒரு நிகழ்ச்சியால் நிலை முற்றிலும் மாறிவிடக்கூடாதா என்பது அவர் எண்ணம்: காதரீன் இறந்துவிடலாம்; ஹென்றியின் மனமே மாறலாம்; ஐந்தாம் சார்ல்ஸுக்கு ரோம் நகரத்தின்மீதிருந்த பிடி தளரலாம்.

ஹென்றி பொறுமை இழந்தார்; சீக்கிரமாகக் காரியங்களை முடித்துக் கொடுக்கவில்லை யென்று உல்ஸியின்மீது சீறி விழலானார். க்ளெமென்ட் இவ் விஷயத்தில் விசாரணை செய்து தீர்ப்பளிக்க லண்டனில் ஒரு தனி நீதி மன்றத்தை நியமித்தார். லண்டனில் தம் பிரதிநிதியாயிருந்த உல்ஸியையும் காம்பெஜ்ஜியோ[2] வென்னும் ஒரு இடாலிய கார்டினலையும் அதற்கு நீதிபதிகளாக நியமித்தார். காம்பெஜ்ஜியோவுக்கு இரகசியமாக இவ் விசாரணையை எவ்வளவு காலம்

1. St. Angelo. 2. Campeggio.

1529ல் கேம்ப்ரே உடன்படிக்கை :- இட்டாலியில் சார்ல்ஸ் V அதிகாரம் I ப்ரான்ஸிஸால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீட்டிவைக்க முடியுமோ அவ்வளவு காலம் நீட்டும்படி கட்டளையிட்டார். ஆகவே, காம்பெஜ்ஜியோ இங்லண்டுக்கு வரும் பயணத்திலேயே மூன்று நான்கு மாதங்கள் கழித்தார். இங்லண்டுக்கு வந்த பிறகும் முதலில் காதரீனையும் பிறகு ஹென்றியையும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கும்படி வேண்டிக்கொள்வதில் மற்றொரு மூன்று நான்கு மாதங்களைக் கழித்தார். முடிவில் பிளாக் ப்ரையர்ஸ்[1] மண்டபத்தில் விசாரணை நடைபெற ஏற்பாடாயிற்று. இராணி அதன் முன் தம் வழக்கை மன்றாட மறுத்துவிட்டுப் போப்பாண்டவருக்கு நேரில் முறையிட்டாள். இதனால் மேலும் காலங் கடத்துவதற்கு வழியேற்பட்டது. கடைசியாகக் காம்பெஜ்ஜியோ போப்பின் தீர்ப்பினைக் கூறுவதற்கென்று நீதி மன்றத்தைக் கூட்டி, போப் அவ் வழக்கின் விசாரணையை ரோமுக்கு மாற்றி இருக்கிறார் என்றும், அங்குப் போய் அரசர் தம் வழக்கைக் கூறி மன்றாடவேண்டு மென்றும் சொன்னார்.

§ 93. 'என் பெருமையெல்லாம் போயிற்றே!'—இத் தீர்ப்பு உல்ஸியை வீழ்த்தியழித்தது. ஹென்றியின் குணத்தில் மிகக் கேவலமான அமிசமாயிருந்த கல்நெஞ்சமிக்க சுயநலம் இப்போது தாண்டவ மாடலாயிற்று. தம் விருப்பத்தை நிறைவேற்றித் தராமையால், உல்ஸியின் உண்மைச் சேவகத்தை யெல்லாம் மறந்தவராய், அரசர், தம் மந்திரி போப்பின் பிரதிநிதியாக இருந்ததால் ப்ரிமியுனைர்[2] சட்டத்துக்கு விரோதமாக (§ 62) நடந்துகொண்டார் என்று அவர் மீது குற்றஞ் சாட்டினர். அச் சட்டத்தின்படி எவரும் இங்லண்டில் போப்பிடம் பெற்ற அதிகாரத்தைச் செலுத்தக் கூடாது. உண்மையில் அரசரது அனுமதியின்றி உல்ஸி அப் பதவியை ஏற்றுக்கொள்ள விரும்பியிருக்கமாட்டார்; ஏற்றுக்கொள்ளவும் முடிந்திராது. ஆயினும், இது ஒரு

1. Blackfriars. 2. Praemunire.

குற்றப் பரிகாரமாக ஒப்புக்கொள்ளப்பெறும் என்று அவர் நம்பவில்லை. ஆகவே, இதை அவர் கூறவுமில்லை. மேலும், அவர் பல விரோதிகளிடையே அகப்பட்டுக்கொண் டிருந்தார். அவர் செலுத்திய அவ்வளவு அதிகாரத்தைச் செலுத்தியவர்கள் பல விரோதிகளைத் தேடிக்கொள்வது இயற்கையே. சான்ஸெலராக அவர் நீதிபதிகளுள் தலைசிறந்தவராக இருந்தார்; போப்பின் பிரதிநிதியாக அவர் மதஸ்தாபனத்தில் தலைமை பூண்டிருந்தார். மேலும், அவர் மமதையும் டாம்பீகமும் ராஜபோகமான வாழ்க்கையும் எல்லா வகுப்பினரது பொருமையையும் தூண்டின. (அவருக்கு மூன்று கம்பீர மிக்க அரண்மனைகள் இருந்தன; எழுநூறு ஏவலாட்கள் இருந்தனர்). அரசரது ஆதரவு அவருக்கு இருந்தவரைக்கும் எல்லோரும் அவருக்கு அஞ்சியிருந்தனர். அரசரது அன்பை அவர் எந்த நிமிஷம் இழந்தாரோ அந்த நிமிஷம் முதல் அவர் விரோதிகள் அவருக்குக் கேடுசூழலானார்கள். யார்க் ஆர்ச்பிஷப் என்னும் பதவியைத் தவிர அவர் தமது மற்ற பதவிகளை யெல்லாம் இழந்தார். யார்க்குக்குச் சென்று அங்கு மத குருவாகத் தம் கடமைகளைச் செலுத்தலானார். அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டிருந்தபோது அவரால் இக் கடமைகளைச் செலுத்த முடிந்ததில்லை. அங்கும் அவர் விரோதிகள் அவருக்கு அமைதி தர விரும்பவில்லை. அவர் மீது இராஜத்துரோகக் குற்றம் சாட்டி லண்டனில் அவரை விசாரித்துத் தண்டிக்கச் சூழ்ச்சி செய்தனர். லண்டனுக்கு அவரை அழைத்து வரும் வழியில் அவர் லெஸ்டர்[1] மடாலயத்தில் உயிர் துறந்தார். இவ் வுலகப் பெருமைகளுள் எது தான் நிலையானது?

உல்ஸியை ஒரு பெரிய அரசியல் வல்லார்[2] என்று கூறுதல் பொருந்துமா? பொருந்தாது. அரசியல் வல்லுநரெனப் பெருமையுறுவோர்க்குச் சிறந்த இலக்ஷியங்கள் இருக்க

1. Leicester. 2. Statesman.

வேண்டும்; சீரிய ஆட்சி முறைகளிலும் அறிவு மல்கும் சீர் திருத்தங்களிலும் ஆர்வம் மிகுந்திருக்கவேண்டும். துரைத் தனத்தை நடத்திக்கொண்டு போவதில் சுறுசுறுப்பும் சாமர்த் தியமும் காட்டியதே அவர் சிறப்பியல்பு. வெளிநாட்டு விஷயங்களில் அவர் சாமர்த்தியமாக நடந்துகொண்டதன் பயனாக இங்லண்டுக்குச் சிறிது காலம் யூரோப்பிய இராச்சி யங்களுள் ஒரு முக்கியமான அந்தஸ்து கிடைத்தது. ஆயி னும், அது விரைவில் அழிந்தது. மேலும், உல்ஸி ஒரு சிறந்த சந்தர்ப்பத்தைக் கைநெகிழவிட்டவராவார். போப் பின் பிரதிநிதியாக இருந்த நிலையில் அவர் இங்லிஷ் மத ஸ்தாபனத்தை நன்றாகச் சீர்திருத்தி அதற்கு மக்களின் மதிப்பைத் தேடித் தந்திருக்கலாம். அவ்விதம் அவர் தம் வரம்பற்ற அதிகாரத்தை நல்வழியில் செலுத்தி உழைத் திருப்பாரானால் மதஸ்தாபனம் அதற்கு விரைவிலேயே நேர விருந்த கேடுகளினின்றும் பாதுகாக்கப்பட் டிருக்கும்.

§ 94. 'எவரும் அவ்வளவு தூரம் போகமாட்டார்கள்':— ஆன் பொலீனை யாதொரு தடையுமின்றித் தாம் கலியாணஞ் செய்துகொள்ளலாம் எனப் போப்பைக் கூறிவிட வைக்க வேண்டுமென்று ஹென்றி தீர்மானங் கொண்டுவிட்டார். பணிவுடன் கேட்ட வேண்டுகோள்கள் பயனற்றுப் போகவே அவர் வேறு வழிகளை நாடலானார். கேம்பிரிட்ஜில் ஆசிரிய ராக இருந்த டாமஸ் க்ரான்மர்[1] என்ற இளைஞர் ஒருவர்; இத்தகைய விஷயங்களில் போப்பின் அனுமதி அவசிய மில்லை என்றும், கான்டெர்பெரி ஆர்ச்பிஷப்பே வேண்டிய தீர்ப்பைத் தரலாம் என்றும் கூறினார். எதற்கும் இவ் விஷயத்தைப்பற்றி யூரோப்பிலுள்ள பல்கலைக் கழகங்களின்[2] நீதிநூலாசிரியர்களது அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள் வது நல்லது என்றும் அவர் வாதிக்கலானார். ஹென்றி, க்ரான்மர் காட்டிய வழியை உடனே பின்பற்றினார். தமக்கு

1. Thomas Cranmer. 2. Universities.

அனுகூலமான அபிப்பிராயஞ் சொன்னதற்கு வெகுமானமாக அவருக்கு ஆர்ச்டீக்ன்[1] பதவியைக் கொடுத்தார்.

இதற்கிடையே ஹென்றி பார்லமென்டைக் கூட்டினர். மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களின் உரிமைகளையும் போப்பின் அதிகாரத்தையும் தாக்குவதில் பார்லமென்ட் சபைகள் ஆவல்கொண்டவை என்பது அவருக்குத் தெரியும். பார்லமென்ட், குருமார்கள் பணஞ் சம்பாதிப்பதற்குக் கையாண்ட 'பதவிப் பன்மை'[2] (§ 90 கு.), கலியாணம் அடக்கம் முதலிய சடங்குகளுக்கு அதிக காணிக்கை வாங்குதல், மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களது உரிமைகள்[3] (§ 30) போன்ற தீய பழக்கங்களை விட்டுவிடவேண்டு மென்று ஒரு சட்ட மியற்றியது. குருமார்கள் இந்தச் சட்டத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால், உல்ஸியைப் போப்பின் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டதற்காக அவர்களை ப்ரிமியுநைர்[4] சட்டத்தின் தண்டனைகளுக்கு உட்படுத்தப் போவதாக அரசர் பயமுறுத்தினர். ஆயுள் முடியும்வரைச் சிறைவாசம், சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் முதலிய தண்டனைகளை அச் சட்டத்தின்கீழ் விதிக்கலாம் என்பதை உணர்ந்த குருமார்கள், பார்லமென்ட் இயற்றிய சட்டத்தை ஒப்புக்கொண்டு, அரசர் கோபத்தைத் தணிக்க அவருக்குப் பெரும் பணமும் கொடுத்தார்கள்.

பல்கலைக் கழகங்களின் அபிப்பிராயங்களுள் போதுமானவை க்ரான்மரின் கருத்தை ஆதரிப்பவையா யிருந்தபடியால் அரசர் அதன்படி நடக்கத் துணிந்தார். அப்போது, கிழவராயிருந்த கான்டெர்பெரி ஆர்ச்பிஷப் இறந்தார். அவர் பதவியில் க்ரான்மரை அமர்த்தினல் அரசருக்கு அனுகூலமாக அவர் கூறிய கருத்தை நிறைவேற்றித் தரலாம். ஆயினும், அவ் வெண்ணங் கை கூடி வர க்ரான்மரின் நியமனத்துக்கு யாதொரு ஆக்ஷேபனையு மிருக்கக்கூடாது. அப்படி

1. Archdeacon. 2. Pluralities. 3. Benefit of Clergy. 4. Præmunire.

யிருக்குமானால் ஹென்றி ஆன்பொலீனைக் கலியாணஞ் செய்து கொள்ள முடியுமா வென்பதைப்பற்றிய சந்தேகம் கட்டறுது. ஆகவே, க்ரான்மரின் நியமனத்துக்குப் போப்பின் அங்கீகாரத்தைப் பெற ஹென்றி ஒரு சூழ்ச்சி செய்தார். போப்புக்குச் சேரவேண்டிய 'முதலாண்டுப் பணங்க'[1]ளை (புதிதாக நியமனமான பிஷப்புகளுக்கும் ஆபட்[2] எனப்படும் மடாதிபதிகளுக்கும் வரும் முதல் வருஷ வருமானத்தை,ச் செலுத்துவதை நிறுத்திவைக்கவேண்டு மென்று பார்லமென்ட் ஒரு சட்டம் இயற்றியது. போப்பின் வருமானங்களுள் இது ஒரு முக்கிய கூறு. இந்தச் சட்டத்தை ஹென்றி அமுலுக்குக் கொண்டு வராது நிறுத்திவைத்தார்; போப் க்ரான்மரின் நியமனத்தை விரைவில் அங்கீகரித்துவிடுவாரானால் அச்சட்டத்தை எப்போதும் நிறுத்திவைப்பதாகவும் போப்புக்குச் சொல்லி யனுப்பினர். ஹென்றியின் சூழ்ச்சி பலித்தது; போப்பின் அங்கீகாரப் பத்திரங்கள் உடனே வந்தன. க்ரான்மர் ஆர்ச்பிஷப்பாகப் பதவிப்பட்டங் கட்டிக்கொண்டார். ஆயினும், ஹென்றி முதலாண்டுப் பணங்களைப் பற்றிய சட்டத்தை[3] உடனே அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டார்.

க்ரான்மர் உடனே டன்ஸ்டபில்[4] என்னு மிடத்தில் மதஸ்தாபன நீதிமன்ற மொன்று கூட்டினர். அவ்விடத்துக் கருகில்தான் பழைய இராணியான காதரீன் வசித்து வந்தாள். அம் மன்றத்தின்முன் தனது வழக்கைக் கூற அவளுக்கு அழைப்பு வந்தபோது, அவள் தன் வழக்குப் போப்பின் நீதிமன்றத்தின்முன் இருப்பதாகக் கூறி, வர மறுத்துவிட்டாள். ஆர்ச்பிஷப் க்ரான்மர் காதரீன் ஹென்றியோடு சட்டப்படி கலியாணம் செய்துகொண்டு வாழ்ந்தவளல்லள் என்று தீர்ப்புக் கூறினர். அத் தீர்ப்பு வெளியாவதன் முன்னரே ஹென்றி தாம் ஆன்பொலீனை அந்தரங்கமாகக் கலியாணஞ் செய்துகொண்டுவிட்டதாக விளம்பரப்

1. Annates. 2. Abbot. 3. Annates Act. 4. Dunstable.

படுத்திவிட்டார். இதைக் குடிகளுள் பலர் விரும்பவில்லை. அவர்களுக்குக் குருமார்களின் அதிகாரங்களும் உரிமைகளும் ஒடுங்குவதிலும், போப்புக்கு இங்லண்டிலிருந்து செல்லும் காணிக்கைப் பணம் நிறுத்தப்படுவதிலும் திருப்தியே; ஆயினும், காதரீன் இராணிக்கு அரசனிழைத்த தீங்கு மிக மிக அநியாயமானதென்று அவர்கள் கருதினர்கள். இராச்சியத்தில் திடுமெனச் செல்வாக்குப் பெற்ற பொலீன் குடும்பத்தினரை அவர்கள் தான்தோன்றிகளென[1] வெறுக்கலாயினர். (அரண்மனையிலும் இராஜ சபையிலும் அக் குடும்பத்தினர் திமிரோடு நடந்துகொண்டனர்.) புதிய இராணிக்கு ஆடம்பரமாக முடிசூட்டு விழா நடந்தபோது அவளை அலங்காரத்துடன் லண்டன் தெருக்களில் அழைத்துச் சென்ற ஊர்கோலத்தை மக்கள் யாதொரு மகிழ்ச்சிக் குறியும் காட்டாது வாளா பார்த்து நின்றனர்.

இதற்கிடையே போப்புடன் பகைமை வளர்ந்தது. பார்லமென்ட் ஒன்றன்பின் ஒன்ருகப் போப்பின் உரிமைகளைக் குறைத்தும் அவரது அதிகாரத்தைத் தாக்கியும் சட்டங்கள் இயற்றியது (கு. 57). 1533-ல் இங்லண்டின் மதஸ்தாபன நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு எதிராக மேல் தீர்ப்பை நாடி, ரோமுக்கு எத்தகைய முறையீடும் செய்து கொள்ளக்கூடாதென்று ஒரு சட்டம் பிறந்தது. போப் காதரீன்தான் ஹென்றியின் நியாயமான மனைவி என்று கூறினர். பார்லமென்ட் ஆன்பொலீனுக்குப் பிறக்கும் பிள்ளைகள்தாம் சிம்மாசனத்துக்கு உரிமை பெற்றவர்களாவார்கள் என்று 1534-ல் ஒரு வாரிசு உரிமைச் சட்டத்தினை[2] இயற்றியது. இந்த வல்லடி வாதத்தில் போப் தமக்குச் சாதகமாக இணங்கி வருவார் என்று ஹென்றி பல முறை எதிர்பார்த்ததுண்டு. ஆயினும், போப்புக்கு வன்மை மிக்க பேரரசரைப் பகைத்துக்கொள்ளத் தைரியமில்லை. முடிவில்,

1. Upstarts. 2. Act of Succession.

1534-ல் பார்லமென்ட் 'தலைமைச் சட்டம்'[1] என்ற ஒரு சட்டத்தை இயற்றியது. அது இங்லண்டின் மதஸ்தாபனத்துக்குத் தனித் தலைவர்[2] அரசரே, போப்பல்ல, என்று தெளிவாகக் கூறியது (கு. 58).

'எங்குப் போகிறோம் என்பதை அறியாமலேயே போகிறவர்களைப்போல் நெடுந்தூரம் எவரும் போகார்' என்பது ஒரு அறிவு மொழி. போப் தம் கலியாணத்தை ரத்துசெய்து தீர்ப்பளிக்கவேண்டுமென்று ஹென்றி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் முடிவில் ஆயிரமாண்டுகளாகத் தொடர்புகொண்டிருந்த காதொலிக் மதஸ்தாபனத்[3]தினின்றும் இங்லிஷ் மக்களை நிலையாகப் பிரித்து வைத்துவிட்டன.

§ 95. **காதோலிக் மதத் தியாகிகள்[4]:**—மேலே குறிப்பிட்ட சட்டப்படி ஹென்றிக்குக் கிடைத்த மதஸ்தாபனத்துத் தனித்தலைமையினை நாட்டு மக்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்பது அவரது தீர்மானம். அவர் எத்தகைய எதிர்ப்பினையும் மறுப்பினையும் பொறுப்பவரல்லர். ஆன்பொலீனைக் கலியாணம் செய்துகொள்வதற்கு ஹென்றிக்கு உரிமையில்லை என்று போப் கூறியதால், மத விஷயங்களில் போப்பின் தலைமையை மறுக்கத் துணியாதவர்கள் இந்தக் கலியாணம் மதச்சட்டப்படி செல்லாதென்று நினைக்கலாம். அத்தகையோர் அக் கலியாணத்தின் பலனாகப் பிறக்கும் பிள்ளைகளுக்கு வாரிசு உரிமையையும் மறுக்கலாம். ஆகவே, ஹென்றி உடனே பார்லமென்டை மற்றொரு சட்டமியற்றும்படி தூண்டினார். அதன்படி மக்கள் மதஸ்தாபனத்தின்மீது அரசரது தனித்தலைமையினையும் அவரது இரண்டாவது கலியாணத்தையும் ஒப்புக்கொண்டதாக ஆணையிட்டுக் கூறவேண்டும்.

---

1. Act of Supremacy. 2. Supreme Head. 3. The Catholic Church. 4. Martyrs.

மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கத் துணியர்த காதொலிக் கிறிஸ்தவர் எவரும், குருவல்லாத ஒருவர்[1] மதஸ்தாபனத்தின் தலைவராக இருக்க முடியு மென்று நம்பமுடியாது. ஆதி குருக்களின் வரன்முறையைப்[2] போதிக்கும் கொள்கைப்படி[3] மதஸ்தாபனத்துக் குருமார்களுக்குச் சில சிறப்பான தெய்விக சக்திகள் உண்டு; அவை ஆதி குருக்களின் காலந்தொட்டுத் தலைமுறை தலைமுறையாகப் பின்வந்த குருக்களுக்கு அளிக்கப்பட்டு வரப்படுவன. முதலில் கார்த்தூசியன் மடத்துறவிகள்[4] பலர் சட்டம் விதித்தபடி ஆணையிட்டுக்கூற மறுத்து உயிர் துறந்தனர். பிறகு பெருமை மிக்க ரோச்செஸ்டர் பிஷப் ஜான் பிஷர்[5] என்பவரும், உல்ஸிக்குப் பிறகு லார்ட் சான்ஸெலர் பதவியிலிருந்த சர் டாமஸ் மூர்[6] (கு. 59) என்பவரும் அரசர் ஆஞ்ஞைப்படி செய்ய இணங்கவில்லை. அவர்கள் தாங்கள் அரசரின் உண்மையான குடிகள் என்றும், ஆன்பொலீனது பிள்ளைகளை அரச பட்டத்துக்கு உரியவர்களென்று அங்கீகரிப்பதாகவும் ஆணையிட்டுக் கூறத் தயாராயிருந்தனர். அதன்மேல் ஒரு சிறிதும் செல்ல மறுத்து விட்டனர். மூர் சான்ஸெலர் பதவியை விட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்; பிஷரோ கிழவர், உடல் மெலிந்தவர். ஆயினும், அவர்கள் அரசரது விருப்பத்துக்கு இணங்க மறுத்ததனால் அவரது கல்மனம் கரையாமலேயே இருந்தது. அவ்வளவு பெரிய அறிவாளிகள் அரசரை மதஸ்தாபனத்தின் தனித் தலைவராக ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்னுஞ் செய்தி பரவுமானால் சாதாரண ஜனங்கள் அவர்களைப் பின்பற்றத் துணிவார்கள். நாட்டில் அரசரையும் ஆன்பொலீனையும் ஆதரிப்பவர்கள் கட்சி யொன்றும், போப்பையும் காதரீனையும் ஆதரிப்பவர்கள் கட்சி மற்றொன்றுமாக, இரண்டு

1. Layman. 2. Apostolical Succession. 3. Doctrine. 4. Carthusian monks. 5. John Fisher, Bishop of Rochester. 6. Sir Thomas More, Lord Chancellor.

கட்சிகள் தோன்றிச் சச்சரவுகள் பெருகும். இதை யெல்லாம் நினைக்க நினைக்க ஹென்றிக்குக் கோபம் பொங்கியது. மூரும் பிஷரும் அரசரின் தனித்தலைமையினை அங்கீகரிக்க வேண்டும்; இல்லையேல், உயிர் துறக்க வேண்டும் என்று ஹென்றி தீர்மானித்தார். அவர்கள் இணங்காததனால் உடனே சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

---

## இருபத்திரண்டாம் அத்தியாயம்

## மடங்களைக்[1] கலைத்தல்

### (1535—1547)

§96. டாமஸ் க்ராம்வேல்[2]:—இந்தப் பெரும் புரட்சியைப் பின்னின்று சூத்திரதாரைப்போல் இயக்கி வைத்தவர் டாமஸ் க்ராம்வெல் என்ற ஒரு நியாயவாதி (1485-1540). அவர் மிகவும் கெட்டிக்காரர். அவர் ஒரு சாதாரண வியாபாரி குடும்பத்தில் பிறந்தவர். தாமும் ரொக்க லேவாதேவி வியாபாரம் செய்து வந்தார். உல்ஸிக்கு அவர் பல சில்லரை வேலைகளில் ஒத்தாசையாக இருந்தார். உல்ஸியின் வீழ்ச்சியின்போது, அரசர் இனித் தாமே தமது போப்பாக நடந்துகொள்ளவேண்டு மென்று க்ராம்வெல் குறிப்பாகக் கூறினர்.

இவ்வளவு தைரியமான ஒரு எண்ணத்தை அரசரும் படிப்படியாகத்தான் நிறைவேற்றிக்கொள்ளத் துணிந்தார் என்பதை நாம் கண்டோம்(§ 93). ஆயினும், இவ் வெண்ணம் அரசர் மனத்தில் வேரூன்ற வேரூன்ற அதைப் படிப்படியாக நிறைவேற்றிக்கொள்வதற்கான வழிகளைத் தேட அவர் க்ராம்வெல்லையே நியமித்தார். இது சம்பந்தப்பட்ட முக்கியமான சட்டங்களைத் தயாரித்துப் பார்லமென்

1. Monasteries. 2. Thomas Cromwell.

டில் இயற்றி வைத்தவர் க்ராம்வெல்லே; இயற்றப்பட்ட சட்டங்களை 'விகார் ஜெனெரல்'[1] என்னும் உத்தியோகத்தை வகித்து நடைமுறையில் கொண்டுவந்தவரும் க்ராம்வெல்லே. உல்ஸி நடந்துகொண்டபடி க்ராம்வெல் அவ்வளவு சுயேச்சையாக இருப்பதற்கில்லை. ஏனென்றால், ஹென்றி இப்போது எல்லா விஷயங்களிலும் தாமே நேரதிகாரம் செலுத்தலானர். ஆயினும், க்ராம்வெல் தம் நிலையில் பல விவரங்களையும் கவனிக்கவேண்டி யிருந்ததால் அவருக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. அரசரது அதிகாரத்தையும் செல்வத்தையும் பெருக்கி அவரை உச்ச நிலையில் வைக்கவேண்டுமென்பது அவரது பெருநோக்கம். இந் நோக்கம் நிறைவேறுதற் கிடைஞ்சலாக எது குறுக்கிட்டாலும் அதைச் சிறிதும் தாக்ஷண்யமின்றி அப்புறப்படுத்த அவர் தயங்கவில்லை.

§ 97. கலைத்தலும்[2] பறிமுதலும்[3]:—அரசர் தமது புதிய அதிகாரங்களைச் செலுத்தி மதஸ்தாபனத்தைச் சீர்திருத்தவேண்டுமென்பதும், அதன் சொத்துக்களுள் பெரும்பாலானவற்றைப் பறிமுதல் செய்யவேண்டுமென்பதும் க்ராம்வெல்லின் எண்ணங்களுள் முக்கியமானவை. சிறப்பாகத் துறவிகள் மடங்களிலும்[4] கன்னிகள் மடங்களிலும்[5] சீர்திருத்தம் அவசியம் (கு. 60) என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டனர். இடைக்காலத்தில் அம் மடங்கள் நாட்டு மக்களின் வாழ்க்கையை மத சமூக அறிவியல் துறைகளில்[6] பெரிதும் உருவாக்கி வைத்தன. அவை வழிப்போக்கர்களுக்கு உண்டியும் உறைவிடமும் அளித்தன; இளைஞர்களுக்குக் கல்வி புகட்டின; ஏழைகளுக்கு ஐயமிட்டன; பக்தி நெறியையும் அமைதியையும் கோரிய ஆண்களுக்கும்

1. Vicar-General. 2. Dissolution. 3. Confiscation. 4. Monasteries. 5. Nunneries. 6. The religious, social, and intellectual life of the nation.

ஹென்றி II ல் போப்புகளுக்கு விரோதமிருந்து வந்திருந்தது. அது எட்டாம் ஹென்றி காலத்தில் தான் ஒன்று சேர்ந்தது.

பெண்களுக்கும் அவை தக்க புகலிடங்க ளாயின ; நாட்டில் அந்தமும் அமைதியும் ஒழுங்கு மற்றுக் கலவர மிகுந்திருந்த காலங்களில் அவை கலைகளையும் கைத்திறன்களையும் போற்றி வந்தன](§ 45). ஆயினும், இப்போது நிலை மாறியது: உண்டிச்சாலைகள்[1] பெருகின ; அமைதியும் பாதுகாப்பும் நிலைக்கலாயின ; படிப்பிலும் கலைகளிலும் குருமார்க ளல்லாதவர்களும்[2] ஈடுபடலாயினர். ஆகவே, துறவிகள் மடங்களும் கன்னிகள் மடங்களும் முன்போல் அவ்வளவு இன்றியமையாதவைகளாகத் தோன்றவில்லை. அவற்றுள் பெரும்பான்மையன—சிறப்பாகச் சிறியவை—ஒழுங்கற்றுக் கிடந்தன ; அவற்றில் இருந்தவர்கள் தங்களுக்கு ஏற்பட்டிருந்த தனி உரிமைகளை அனுபவித்துக்கொண்டு சோம்பேறிகளாகவும் தூர்த்தர்களாகவும் வாழ்ந்தனர். இதை யெல்லாம் சீர்திருத்த வேண்டு மென்ற உணர்ச்சி அடிக்கடி பலர் மனத்தில் தோன்றியதுண்டு. ஆயினும், அவற்றில் வாழ்ந்த துறவிக் கூட்டங்கள்[3] பலவற்றின்மீது நாட்டுப் பிஷப்புகள் யாதொரு அதிகாரமும் செலுத்துவதற்கில்லை ; அவர்கள் போப்புக்குத் தான் கட்டுப்பட்டவர்கள். பத்தாம் லீயோ[4] இவ் விஷயத்தில் சில நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள உல்ஸிக்கு அதிகார மளித்திருந்தார். உல்ஸியோ சிறிய மடங்கள் சிலவற்றின் தட்டுமுட்டுச் சாமான்களைமட்டும் பறிமுதல் செய்து ஆக்ஸ்பர்டில் தாம் கட்டிக்கொண்டிருந்த 'கிறைஸ்ட் சர்ச்'[5] என்னும் கலாசாலைக்கு உபயோகப்படுத்தினர் ; லஞ்சம் வாங்கிக்கொண்டு மற்ற மடங்களைச் சும்மா விட்டுவிட்டார்.

இங்லிஷ் மதஸ்தாபனத்தின் தனித் தலைவராகத் தாம் பெற்ற புதிய அதிகாரங்களைச் செலுத்தி அரசர் இவ்வூழல்களை வேரோடு களையவேண்டு மென்பது க்ராம்வெல்லின் எண்ணம். முதலில் அவர் சிறிய மடங்களைப் போய்ப்பார்த்து அவற்றின் நிலையைக் கண்டுகொண்டுவரச் சில அதிகாரிகளை

1. Inns. 2. Laymen. 3. Orders. 4. Leo X. 5. Christchurch.

அனுப்பினர். அவ் வதிகாரிகள் விகார் ஜெனெரலின்[1] நோக்க மெது வென்பதை உணர்ந்தவர்களாதலால், தாம் போய்ப் பார்த்த மடங்களி லெல்லாம் சோம்பலும் அஞ்ஞானமும் அயோக்கியதையும் தாண்டவமாடிக்கொண்டிருந்தன வென்று கூறினர்கள். உண்மை நிலையை அவர்கள் வேண்டுமென்றே அதிகப்படுத்திக் கூறினர்கள். உண்மையில் அத் துறவிகளும் கன்னிகளும் மற்ற மக்களைவிட அதிகம் கெட்டவர்க ளென்றோ மிக நல்லவர்க ளென்றோ சொல்லுவதற்கில்லை. ஆயினும், அரசரும் க்ராம்வெல்லும் அம்மடங்களின் செல்வங் களையும் சொத்துக்களையும் கைப்பற்ற எண்ணியதால் அவற் றைக் கலைத்துவிடத் தீர்மானித்தனர். பார்லமென்ட் சபை யின் அங்கத்தினர்களும் அவற்றின் சொத்துக்களைப் பறி முதல் செய்வதற்கு அரசர்க்கு அதிகாரமளிக்கத் தயாரா யிருந்தனர்; மடங்களது நிலங்களில் சிலவற்றைத் தமக்குள் பங்கிட்டுக்கொள்ளலாம் என்பது அவர்கள் எண்ணம். இந் நிலையில் மடங்களில் வாழ்ந்த துறவிகளுக்கும் கன்னிகளுக் கும் பரிந்து பேசுவோர் அதிகாரவர்க்கத்தினருள் எவரு மிலர். சில மடங்களின் துறவிகளையும் கன்னிகளையும் தட் டிக் கொடுத்து அவற்றின் சொத்துக்களை எடுத்துக்கொண்ட னர்; சிலரை மிரட்டி எடுத்துக்கொண்டனர்; இந்தச் சொத் துப் பறிமுதலை எதிர்த்த பலர் தூக்கிலிடப்பட்டனர். முடிவில், 1539ஆ அதுவரை இம் முறைகளால் அரசர் பெற்ற சொத்துக்களும் இனி பெறப்போகும் சொத்துக் களும் நியாய வழியில் பெறப்பட்டவை யென்று கூற ஒரு சட்ட மியற்றப்பட்டது.

மடங்களைக் கலைத்ததால் நாட்டில் ஏற்பட்ட விளைவுகள் பல (கு. 61). அவற்றுள் முக்கியமாக மூன்றினை இங்குக் கூறுவோம்: (1) ஆயிரக் கணக்கான துறவிகளும், மடங் களில் பல வேலைகளில் அமர்ந்திருந்த பல்லாயிரக் கணக்கான

1. Vicar-General.

பணியாளர்களும் பிழைப்புக்குத் தடமாடவேண்டியவர்களானார்கள். (2) ஏராளமான நிலங்கள் விற்பனைக்கு வந்தமையால் அவற்றை மிக மலிவாக வாங்க முடிந்தது. ஆகவே, அதிக பணம் சேர்த்துவைத்திருந்த பல வியாபாரிகளும் நீதிவாதிகளும் பெரிய பூசொத்துக்களை வாங்கிக்கொண்டு 'நாட்டுக்கனவான்க'ளாக[1] மாறினர். இதனால் நாட்டில் 'கனவான்கள்'[2] கூட்டம் எண்ணிக்கையிலும் செல்வத்திலும் பெருகி நாட்டு நன்மைக்கான பல விஷயங்களில் செல்வாக்குடன் தலையிட லாயிற்று. (3) மடங்களைக் கலைத்ததால் லாபமடைந்த நூற்றுக் கணக்கான செல்வாக்கு மிகுந்தவர்கள், தங்கள் சுயநலத்தைக் கோரி, இனி இங்லண்டில் போப்பின் அதிகாரம் மீண்டும் தலைகாட்டாத வழியைத் தேடுவதில் கண்ணும் கருத்துமாய் இருக்கலாயினர். ஏனென்றால், அவர்கள் புதிதாகப் பெற்ற மடங்களின் சொத்துக்களைப் போப் கட்டாயம் அம் மடங்களுக்கே திருப்பிக் கொடுத்துவிடும்படி வற்புறுத்துவார் என்பது நிச்சயம்.

§ 98. அரச குடும்பத்தில் கலியாணங்களும் பிறப்புகளும் இறப்புகளும் :—இதற்குள் ஹென்றியின் குடும்பத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அக்கிரமமாகத் தள்ளிவைக்கப்பட்ட இராணி காதரீன் 1536-ல் மனமுடைந்து இறந்தாள். ஆன்பொலீன் இதைக் கேட்டு மகிழ்ச்சியுற்றாளேனும், இந் நிகழ்ச்சியே ஒரு வருஷத்திற்குள் அவள் முடிவுக்கும் ஒரு வகையில் காரணமாயிற்று. 1533ஆ செப்டெம்பர்மீ ஆன் ஒரு பெண்ணைப் பெற்றாள். (இப் பெண்ணே பிறகு நாட்டையாண்ட எலிசபெத் இராணி). ஆனுக்கு ஆண் குழந்தை பிறக்கவில்லை ; போப்பைப் பகைத்துக்கொண்டு ஹென்றி அவளைக் கலியாணஞ்செய்துகொண்டதற்குப் பலனொன்றுஞ் சித்தித்ததாகத் தோன்றவில்லை. ஆனை முன்னைவிட அதிகமாக மக்கள் வெறுக்கலாயினர். ஹென்றிக்கும்

1. Country Gentlemen. 2. Gentry.

அவள்மீது சலிப்புத் தோன்றியது. தமது குடிகள் 'அவளை எப்போதும் முழுமனத்துடன் இராணியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை அவர் உணர்ந்தார். அவளுக்கு ஆண் குழந்தை பிறந்தாலும் அவர் கலியாணம் சட்டப்படி நடந்தது என்று பலராலும் ஏற்றுக்கொள்ளப் பெறும் என்று நம்புவதற்கில்லை. மேலும், காதரீன் இறந்தது அவருக்கு ஒரு புது வழியைக் காட்டியது. அவர் மூன்றாவதாக ஒரு கலியாணஞ் செய்துகொள்வாரானால் அதை எவரும் சட்ட விரோதமானதென்று சொல்வதற்கில்லை; ஆயினும், அதற்கு ஆன் பொலீனும் இறந்தாகவேண்டும். இதையும் இலேசில் நடக்கும்படி செய்துவிடலாம். ஆன்பொலீன்மீது பல கொடிய குற்றங்கள் சாட்டப்பட்டன. அவற்றுள் ஒன்று அவள் அரசரைக் கொல்ல முயன்றாள் என்பது. இவை காரணமாக அவளும் அவள் சகோதரனும் அவர்களது பந்து மித்திரர்கள் பலரும் சிரச்சேதஞ் செய்யப்பட்டனர். ஆர்ச் பிஷப் க்ரான்மர் அவள் கலியாணம் சட்டப்படி செல்லாதது என்று கூறினார். இது எந்த நியாயத்துக்குப் பொருந்து மென்று அவர் விவரிக்கவில்லை. சில நாட்களுக்குள் ஹென்றி மூன்றாங் கலியாணஞ் செய்துகொண்டார். ஏனென்றால், அவரது அபிப்பிராயத்தில் அவர் இன்னும் ஒரு 'கிறிஸ்துவ பிரமசாரி'யே[1]. ஹென்றியின் மூன்றாம் மனைவியாகிய ஜேன் சேய்மூருக்கு[2] 1537-ல் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. (இப் பிள்ளையே ஹென்றிக்குப் பிறகு ஆறாம் எட்வர்ட் என்ற பட்டத்துடன் இங்லண்டின் அரசரானான்). ஆயினும், குழந்தை பிறந்ததும் ஜேன் இறந்துவிட்டாள். இனி, நான்காவதாக யாரைக் கலியாணஞ் செய்துகொள்ளலாம் என்று ஹென்றி ஆராயலானார்.

§ 99. 'அருள் யாத்திரை'[3]:—மடங்களைக் கலைத்ததன் விளைவாக லின்கன் ஷைரிலும் யார்க்ஷைரிலும் ஒரு பெருத்த

1. 'Christian bachelor'. 2. Jane Seymour. 3. The Pilgrimage of Grace.

கலகந் தோன்றியது. நாட்டின் தென் பிரிவுகளில்விட வட பிரிவுகளில் மக்கள் கூட்டம் குறைவு. நாடும் மக்களும் அங்கு அதிக வளம் பெற வில்லை. அக்கம்பக்கத்துப் பெரிய மான்யதார்களாகிய பிரபுக்களையும் கனவான்களையுமே அவர்கள் தங்கள் தலைவர்களாகக் கருதினார்கள். அவர்களும் பழைய பழக்க வழக்கங்களில் ஈடுபட்டவர்களாய் ட்யூடர் மன்னர்கள் நிலைநாட்டிய வன்மை மிக்க துரைத்தனத்தை வெறுத்தனர். தாழ்குடியில் பிறந்த க்ராம்வெல் தங்கள் மீது அதிகாரஞ் செலுத்துவ தென்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. மடங்கள் கலைக்கப்பட்டமையாலும் அவர்களுக் குப் பெருங் கோப முண்டாயிற்று. வளங்குறைந்திருந்த பாகங்களில் மடங்களால் பல நன்மைகள் ஏற்பட்டிருந்தன. 1536 ஆம் லின்கன்ஷைரில் மட்டும் ஐம்பது மடங்கள் கலைக் கப்பட்டன. மேலும், க்ராம்வெல்லின் உத்தியோகஸ்தர்கள் அதிக திமிருடன் நடந்துகொண்டதால் அப் பாகத்தில் ஒரு கலகம் மூண்டது. அதை அடக்கியதும் யார்க்ஷைரில் அதனினும் பெரிய கிளர்ச்சி யொன்று கிளம்பியது. லண்டனில் நியாயவாதியாக இருந்த ராபர்ட் ஆஸ்க்[1] என்பவர் யார்க்ஷைரில் ஒரு பெரிய சொத்துக்குச் சொந்தக்காரர். அவர் இந்தக் கிளர்ச்சிக்குத் தலைமை பூண்டார். கலகக்காரர்கள் தங்கள் கிளர்ச்சியை 'அருள் யாத்திரை' என்றனர். கிறிஸ்துவின் ஐந்து காயங்களைப்[2] பொறித்த ஒரு கொடியை அவர்கள் பிடித்துச் சென்றனர். அவர்கள் தங்களுக்கு நிறைந்த இராஜ பக்தி உண்டென்றனர். க்ராம்வெல்லை அரச சேவையினின்றும் நீக்கவேண்டு மென்பதும், மடங்களை மீண்டும் நிலைக்கவைக்க வேண்டு மென்பதுமே அவர்கள் நோக்கம். இந்தக் கிளர்ச்சியை அடக்க ஹென்றியிடம் பழக்கப்பட்ட சேனை யொன்று மில்லை. ஆகவே, சேனையைத் திரட்டும் ஏற்பாடுகள் நடந்துகொண் டிருக்கும்போது, அரசர் அக்கிளர்ச்சி சம்பந்த

1. Robert Aske. 2. The Five Wounds of Christ.

மான விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு ஆஸ்கை லண்டனுக்கு அழைத்தார். ஆஸ்க் அரசரிடம் நம்பிக்கை வைத்துத் தம் கூட்டத்தாரை அமைதியாக இருக்கச் சொன்னார். வேண்டிய படைகளைத் திரட்டியதும் அரசர் அவற்றைக் கிளர்ச்சி செய்தவர்கள்மீது ஏவினார். பட்டணங்களிலும் கிராமங்களிலும் சிற்றூர்களிலும் வாழ்ந்த மக்களுள் பலர் கருணையின்றிக் கொலைசெய்யப்பட்டனர். அவர்களோடு ஆஸ்கும் கொல்லப்பட்டார். அவரது அரச பக்தியாலும் பொறுமையாலும் நிதான புத்தியாலுமே அக் கிளர்ச்சி கட்டுக்குள் அடங்கியிருந்தது என்பதை ஹென்றி உணர்ந்தும் அதற்கு நன்றியறிதலுள்ளவராக இல்லை.

இந்த 'யாத்திரை' யின் விளைவாக யார்க்கில் 'வடக்குச் சபை'[1] என்ற பெயருடன் ஒரு அதிகாரிகள் சபை ஏற்பட்டது. வடக்குப் பிரிவுகளிலுள்ள மக்களிடையே அரசரது அதிகாரத்தைப் பரப்பி நிலைக்கவைப்பதே அதன் பொறுப்பு.

§ 100. **க்ராம்வெல்லின் முடிவு**:—எட்டாம் ஹென்றிக்கு உழைத்தவர்களுக்குத் திடுமென அதிர்ஷ்டம் மாறுவதுண்டு. 1540ஆம் ஏப்ரல்மீ க்ராம்வெல் லார்ட் சேம்பர்லின்[2] பதவி பெற்று எசெக்ஸ் ஏர்ல்[3] ஆனார்; மூன்று மாதங்களுக்குப் பிறகு இராஜத்துரோகி என அவர் சிரச்சேதஞ் செய்யப்பட்டார்! வெளிநாட்டு விவகாரங்கள்[4] சம்பந்தமாக ஏற்பட்ட ஒரு நிலையே அவர் வீழ்ச்சிக்குக் காரணம். போப்புக்குப் பரிந்து ப்ரான்ஸ் மன்னரோ ஸ்பெயின் மன்னரோ, இருவருமாகச் சேர்ந்தோ, இங்லண்ட்மீது படையெடுத்து வரலாமென்ற பயம் எட்டு வருஷ காலமாக இருந்து வந்தது. இதற்குத் தடையாக நின்றது அம் மன்னர்களுக் கிடையே (முதலாம் ப்ரான்ஸிஸ், ஐந்தாம் சார்ல்ஸ்,

1. 'Council of the North'. 2. Lord Chamberlain. 3. Earl of Essex.
4. Foreign policy.

§89) கிளைத்த பொறாமையும் பகைமையுமே. அவர்களிடையே கிளைத்திருந்த பகைமையைப் பெரிதாக்கி வைப்பதே ஹென்றியின் நோக்கம். அப்போதுதான் அவர்கள் இங்லண்ட் மீது மதப்போர்கள் தொடுக்க ஓய்வில்லா திருப்பார்கள். ஆயினும், 1539-ல், அவர்கள் ஒன்று சேர்ந்து போப்பின் விரோதியாகிய ஹென்றியின்மீது போர்தொடுப்பார்கள்போ லிருந்தது. க்ராம்வெல் ஹென்றியைச் சந்தேகமற்ற எதிர்ப்புக் கொள்கையினராக[1] மாற்ற நெடுநாட்களாக முயன்று வந்தார். இராஜ சபையிலும் பிஷப்புக ளிடையிலும் இவ் விஷயமாக இரண்டு கட்சிகள் தோன்றின. ஹென்றிக்கு லூதரின் கொள்கைகள் பிடிக்காமையால், அவற்றைத் தழுவிய ஜெர்மன் சிற்றரசர்களோடு யாதொரு சம்பந்தமும் வைத்துக்கொள்ள அவர் விரும்பவில்லை. ஆயினும், இங்லண்டுக்கு நேரவிருந்த மேற்சொன்ன ஆபத்தை முன்னிட்டு அவர், க்ராம்வெல்லின் ஆலோசனைப்படி, லூதர் கொள்கைகளைத் தழுவிய ஜெர்மன் சிற்றரசர்களோடு நட்புடன்படிக்கை செய்துகொண்டார்; அந் நட்பினை நிலைக்க வைக்கும் நோக்கத்துடன் அவர்களுள் முக்கியமானவரது மகளாகிய க்ளீவ்ஸ் நாட்டு ஆன்[2] என்பவளைக் கலியாணஞ் செய்துகொண்டார். உடனே நிலை மாறியது. ப்ரான்ஸிஸும் சார்ல்ஸும் பழையபடி ஒருவரையொருவர் பகைத்து நின்றார்கள். இங்லண்டின்மீது அந்நியர் படையெடுத்து வரலாம் என்ற பயம் தெளிந்தது. க்ளீவ்ஸ் நாட்டு ஆன் யௌவனமும் அழகும் அற்றவள்; ஆகவே, ஹென்றி அவளை வெறுக்கலானார். இதற்குள் அவர் லூதர் கொள்கைகளை எவ்வகையிலும் ஆதரிப்பதில்லை என்று முடிவாகத் தீர்மானித்துக்கொண்டார். ஹென்றிக்கு ஏதாவது ஒரு விஷயத்தில் மனக்கசப்பு ஏற்பட்டால் அது கொடுஞ் சீற்றமாகத் திரும்பி யாரையாவது தாக்கிப் பலி வாங்குவது வழக்கம். இப்போது அவர் சீற்றத்துக்குப்

1. Definitely Protestant. 2. Anne of Cleves.

பலியானவர் க்ராம்வெல்லே. க்ராம்வெல் ஹென்றிக்குச் செய்யக் கூடியவைகளை யெல்லாம் செய்துவிட்டார். அவரது முயற்சிகளின் பலனாக அரசரது செல்வமும் அதிகாரமும் ஏராளமாகப் பெருகிவிட்டன. இதற்காக க்ராம்வெல் நாட்டில் எல்லோராலும் வெறுக்கப்பட்டார். ஆயினும், ஹென்றியின் மனம் நன்றி யென்பதை உணராதது. குடிகளின் வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்ட மந்திரியைத் தள்ளிவிட்டால் தாம் குடிகளுக்கு ஆனவராய்விடலா மென்பது அவர் கொள்கை. க்ராம்வெல் விஷயத்தில் அரசர் மனம் கசந்திருந்தது என்பதை உணர்ந்ததும், அவரை இராஜ சபையில் எப்போதும் எதிர்த்து நின்ற நார்பக் ட்யூக்[1] இராஜ காரியங்களை மந்திரி ஒழுங்காகச் செய்யவில்லை என்று அவர் மீது குற்றஞ் சாட்டினர். அரசர்க்கு விரோதமாக க்ராம்வெல் நடந்துகொண்டார் என்று சொல்லுவது உண்மைக்கு மாறான கூற்றே; அவரைவிட அரசர்க்கு அனுகூலமாக வேறு எவரும் நடந்துகொண்டிருக்க முடியாது. ஆயினும், மூரும் பிஷரும் இராஜத்துரோகிகள் என்று குற்றஞ் சாட்டப்பட்ட அரசில் க்ராம்வெல்லும் இராஜத்துரோகியே என்பார்களானல் அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. பார்லமென்ட் அவர்மீது ஒரு குற்றச்சாட்டுக் தீர்மானம்[2] இயற்றியது (§ 79 கு). அதன்படி அவர் சிரச்சேதம் செய்யப்பட்டார் (கு. 62, 63). இது அவர் சாதாரணமாக மற்றவர்களை யொழிக்கக் கையாண்ட முறையே யாகும்.

§ 101. அந்திய தசை:—ஹென்றியின் ஆட்சியில் கடைசி ஏழு வருஷங்களின் கதையைச் சுருக்கமாகச் சொல்லிவிடலாம். க்ராம்வெல்லுக்குப் பிறகு முக்கிய மந்திரியாக இருந்தவர் எவருமிலர்; புது நோக்கங்களோடு யாதொன்றும் நடைபெறவுமில்லை. ப்ரான்ஸ் மன்னர்க்கும் பேரரசர்க்கும் இடையே நிகழ்ந்த ஹாப்ஸ்பர்க்-வேலாய்[3]

1. Duke of Norfolk. 2. Bill of Attainder. 3. Habsburg-Valois.

குடும்பச் சண்டைகள் நீடித்து வந்தமையால் இங்லண்ட் அந்நியர் படையெடுப்புப் பயமின்றி இருந்தது. 1539-ல் இயற்றப்பட்ட ஆறு மதக்கோட்பாடுகள் சட்ட[1]த்தால், போப்பின் தலைமையை விலக்கிப் பழைய காதொலிக் கொள்கைகளைத் தாம் கடைப்பிடிக்கத் தீர்மானித்திருப்பதை, ஹென்றி அறிவித்தார். வைராக்கியமிக்க காதொலிக்கர்களைத் தூக்கிவிடவோ சிரச்சேதஞ் செய்யவோ தாம் துணிந்ததைப்போல், வைராக்கியமிக்க எதிர்ப்புக்கொள்கையினரையும் அவர் தீக்கிரையாக்கத் துணிந்தார்.

தம் மகனது கலியாண விஷயமாக ஹென்றி செய்த ஒரு முயற்சி சித்திபெறவில்லை. நெடுங்காலமாக இங்லண்டுக்கும் ஸ்காட்லண்டுக்குமிடையே நிலைத்திருந்த பகையை (§ 50) ஸ்காட்லண்ட் இளவரசியான மேரியை எட்வர்ட் இளவரசருக்குக் கலியாணஞ் செய்துவைத்து நீக்கலாமென்று ஹென்றி கோரினர். ஆனல், அந் நாட்டு மக்கள் இதனல் ஸ்காட்லண்டுக்குச் சுயேச்சை போய்விடுமென்று நினைத்தனர். அவர்களைப் பயப்படுத்தினல் இணங்குவார்களென்று கருதி ஹென்றி தம் மைத்துனர் எட்வர்ட் சேய்மூரை (லார்ட் ஹெர்ட்பர்ட்)[2] ஸ்காட்லண்ட் மீது படையெடுத்துச் சென்று நாட்டை யழிக்கச் செய்தார். இதனல் அந் நாட்டு மக்களின் எதிர்ப்பு மும்முரமாகிவிட்டது. முடிவில் ஹென்றி தமது எண்ணத்தை நிறைவேற்ற முடியாமல் விட்டுவிட வேண்டியவரானர் (கு. 67).

1540-ல் ஹென்றி காதரீன் ஹவர்ட்[3] என்ற ஒரு இளம் பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டார். அவள் மற்றொருவர்மீது காதல் கொண்டிருந்ததால் உடனே சிரச்சேதஞ் செய்யப்பட்டாள். பிறகு இரு முறை விதவையான காதரீன் பார்[4] என்ற நடு வயதுள்ள ஒரு மாதை அவர்

1. Six Articles of Religion. 2, Edward Seymour, Lord Hertford. 3. Catherine Howard. 4. Catherine Parr.

தமது ஆறுவது மனைவியாகக் கொண்டார். ஹென்றிக்கு இப்போது உடல் நலம் குன்றலாயிற்று. காதரீன் பார் அவரைக் கனிவுடன் கவனித்துக்கொண்டாள்; அவரது மூன்று குழந்தைகளையும் நன்றாகப் பாதுகாத்தாள். ஹென்றி அவளுக்கு முன்னதாக இறந்துவிட்டதால் அவள் நான்காம் கலியாண மொன்றும் செய்துகொண்டாள்.

நாளாக ஆக ஹென்றியின் குணம் கெட்டு வந்தது. வாலிபராக இருந்தபோது அவர் தாராள மனதுள்ளவரைப் போல் தோன்றினர். உண்மையில் அவர் தாம் என்ற இறுமாப்புக் கொண்ட சுயநலமியே. இந்தக் குணம் அவருக்கு வயது ஏற ஏற முற்றிக்கொண்டு வந்தது. சுய நலத்தைக் கோரி எப்போதும் தம் வழியே போகவேண்டு மென்று இருப்பவர்களுக்கு முடிவில் நன்மை யொன்றும் நேருவதில்லை. ஹென்றி தமது வாழ்நாளின் அந்திய காலத்தில் உடல் பெருத்து நோய் மல்கி நாகரிகமற்ற ஒரு ராக்ஷஸ அரசனைப்போ லாய்விட்டார். அப்போது அவர் விருப்பத்துக்குக் குறுக்கில் வரத் துணிந்தவர்களை ஈவு இரக்க மின்றி வெட்டி வீழ்த்துவதே அவர் செயலாக விருந்தது.

---

## இருபத்துமூன்றும் அத்தியாயம்

# எதிர்ப்புக் கொள்கையினர் ஆட்சி

(1547—1553)

§ 102. காப்பாளர் பிரபு சாமர்செட்[1]:—1537ஆ ஜேன் சேய்மூருக்குப் பிறந்த தமது ஒரே மகனை எட்வர்ட் தமக்குப் பின் பட்டத்துக்கு வரவேண்டுமென்று ஹென்றி ஒரு உயில்[2] எழுதிவைத்தார். எட்வர்ட் குழந்தைகளின்றி இறந்தால் 1516ஆ ஆரகன் நாட்டுக் காதரீனுக்குப் பிறந்த பெண்

1. Lord Protector Somerset. 2. Will.

மேரி பட்டம் பெறவேண்டும்; அவளுக்கும் குழந்தையில்லையென்றால் 1533இல் ஆன்பொலீனுக்குப் பிறந்த பெண் எலிசபெத்[1] பட்டம் பெறவேண்டும். ஹென்றி இறந்தபோது எட்வர்டுக்கு வயது பத்தே யாதலால், அவருக்குத் தக்க வயது வரும்வரையில் இராச்சியாதிகாரங்களைச் செலுத்த ஒரு சபையை அமைத்து வைத்தார். அதில் பிரபுக்களுள் பல கட்சியினரும் இடம் பெற்றிருந்தனர். ஆயினும், ஒரு வாரத்துக்குள் இந்த ஏற்பாடு கலைந்துவிட்டது. அச் சபையின் அங்கத்தினருள் ஒருவர் இளவரசரின் அம்மானான எட்வர்ட் சேய்மூர் (ஹெர்ட்பர்ட் பிரபு[2]). அவர் சர்வ அதிகாரங்களையும் கைப்பற்றிக்கொண்டு சாமர்செட் ட்யூக்[3] என்னும் பட்டத்துடன் தாமே 'காப்பாளர் பிரபு'[4] என்றார்.

அவர் நல்ல எண்ணமுடையவரேனும் இராச்சியத்தையாளும் திறனற்றவர்; பல பிழைகளைச் செய்து மூன்று ஆண்டுகளுள் தமது வீழ்ச்சியைத் தேடிக்கொண்டார். அவரது குணக்கேடுகளுள் முக்கியமானவை பொன்னாசையும் மண்ணாசையுமே. மதஸ்தாபனத்தைக் கொள்ளையடிப்பதில் அவர் சலிக்கவில்லை. சேய்மூர் குடும்பத்தினர் எப்போதும் எதிர்ப்புக்கொள்கையில்[5] நம்பிக்கை வைத்திருந்தவர்கள். எட்டாம் ஹென்றி உயிரோடிருந்தவரையில் இதை அவர்கள் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ள அஞ்சினர். போப்பின் அதிகாரம் நீங்கலாகக் காதொலிக் கொள்கைகளுள் எதை எதிர்த்தாலும் ஹென்றி சிறிதும் பொறுக்கமாட்டார் என்பதை நாம் முன்னரே கூறியுள்ளோம் (§ 10.). இப்போது சாமர்செட்டுக்குச் சர்வாதிகாரமும் இருந்ததால் அவர் எதிர்ப்புக் கொள்கையை வெளிப்படையாக ஆதரிக்கலானார். அவர் கான்டெர்பெரி ஆர்ச்பிஷப்பான க்ரான்மரை ஒரு பொதுத் தியான புத்தகத்தை[6] இங்லிஷ் மொழியில் தயாரிக்கச் செய்

1. Elizabeth. 2. Lord Hertford. 3. Duke of Somerset. 4. Lord Protector. 5. Protestantism. 6. Book of Common Prayer.

T. 6250

தார்; மதக் கொள்கைகளைக் கண்டிப்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் சட்டங்களைப் பார்லிமென்டில் ரத்து செய்து வைத்தார். மேலும், அவர் லண்டனிலிருந்த பல கோவில்களிலிருந்து லட்கேட்டுக்கு வெளியே ஆற்றங் கரையில் தாம் சொந்தத்துக்குக் கட்டிக்கொண்டிருந்த மாளிகைக்கு வேண்டிய கட்டட சாமான்களை எடுத்துக்கொண்டார்.

இம் மூன்று செயல்களுள் முதலாவது நன்மையே பயன்றது. லாடின் மொழியிலிருக்கும் காதொலிக் மத ஸ்தாபனத்தின் நித்திய தியானங்களை க்ரான்மர் மிக அழகான இங்லிஷ் உரைநடையில் மொழிபெயர்த்தார். இரண்டாவது நல்ல நோக்கத்தோடு இயற்றப்பெற்றாலும், அதனால் நன்மையைவிடத் தீமையே அதிகமாக விளைந்தது. ஏனென்றால், ஹென்றியின் கொடிய தண்டனைகளுக்குப் பயந்து வெளிநாடுகளுக்கு ஓடி மறைந்திருந்த தீவிர எதிர்ப்புக்கொள்கையினர்[1] பலர், ஜெர்மனியிலும் ஸ்விட்சர்லண்டிலும் (கு. 64) தாங்கள் கற்ற சீர்திருத்தக் கொள்கைகளுடன், இப்போது தாய்நாடு திரும்பினர். கோவில் தியானங்களும் ஐதிகங்களும் நடைபெற்றபோது அவர்களால் குழப்பங்களும் கலவரங்களும் ஏற்பட்டன; சிலவிடங்களில் சண்டைகளும் சச்சரவுகளும் உயிர்ச்சேதமும் உண்டாயின. சாமர்செட்டின் மூன்றாஞ் செயல் வெளிப்படையான கொள்ளையே. இத்தகைய செயல்கள் எதிர்ப்புக் கொள்கைக்கே[2] ஒரு கெட்ட பெயரைத் தேடி வைத்தன. பழைய மதஸ்தாபனத்தைக் கொள்ளையடிப்பதற்காகவே பலர் 'சீர்திருத்த மத'[3]மெனப் பட்ட எதிர்ப்புக் கொள்கையைத் தழுவலாயினர்.

§ 103. ஸ்காட்லண்டில் மற்றொரு தோல்வி:—சரியான விஷயங்களைத் தப்பான வழிகளில் செய்ய முயல்வது சாமர்செட்டுக்கு வழக்கமாய்விட்டது. அவர் ஹென்றி கோரிய

1. Extreme Protestants. 2. Protestantism. 3. 'Reformed Religion'.

படி இங்லண்டையும் ஸ்காட்லண்டையும் ஒன்றுபடுத்த இங்லண்ட் இளவரசர்க்கும் ஸ்காட்லண்ட் இளவரசிக்கும் கலியாணம் முடித்துவைக்க மற்றொரு முறை முயன்றார் (§ 101). ஹென்றி காலத்தில் இம்முயற்சியில் ஈடுபட்டவர் அப்போது

## ட்யூடர் காலத்தில் எல்லை நாடு




ஹெர்ட்பர்ட் பிரபுவாக இருந்த சாமர்செட்டே. ஸ்காட்லண்ட் மக்கள் இந்த எண்ணத்துக்கு ஆதரவு காட்டவில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார். எனினும், அவர் 1547-ல் ஸ்காட்லண்ட்மீது படையெடுத்துச் சென்று, சில ஊர்களைப் பாழாக்கி, ஹோலிரூட் அரண்மனையைக்[1] கொள்ளையிட்டு, ஸ்காட்லண்ட் படையொன்றை எடின்பரோவுக்கு அருகி

1. Holyrood Palace.

லொந்து உதவிக்காகமறு செய்து கொண்டார்.

ளுள்ள பின்கி[1] என்னு மிடத்தில் தோற்கடித்தார். அப்போதும் ஸ்காட்லண்ட் துரைத்தனத்தார் அவர் கூறிய ஏற்பாட்டுக்கு இணங்க மறுத்தனர். தங்கள் இளம் இராணி இங்லிஷார் கையில் சிக்காதிருக்க அவளை ப்ரான்ஸுக்கு அனுப்பி விட்டனர். பன்னிரண்டு வருஷங்கள் அவள் ப்ரான்ஸ் மன்னர் அரண்மனையிலேயே காலங்கழித்தாள். அவரது மூத்த மகனைக் கலியாணஞ் செய்துகொண்டு ப்ரான்ஸுக்கும் இராணியானாள்.

ஸ்காட்லண்டை அடக்கி வைத்திருக்க அங்கு நிலையாக இங்லிஷ் படைகளை வைத்திருப்பது முடியாத காரியம். அப்படைகளுக்காகும் செலவுகளை இங்லிஷ் துரைத்தனத்தின் வருமானத்திலிருந்து எத்தனை நாள் கொடுத்துவர முடியும்? ஆகவே, சாமர்செட் தோற்றவரைப் போலத் திரும்பவேண்டியவரானார். அவர் செயலால் அவர் கோரியதற்கு நேர் எதிரான விளைவுதான் ஏற்பட்டது; இங்லண்டுக்கு விரோதமாக ஸ்காட்லண்டுக்கும் ப்ரான்ஸுக்கும் பண்டுதொட்டிருந்த உறவு அதனால் இன்னும் நெருங்கியதானது.

§ 104. **கெட்[2] கலகம்:**—நாட்டில் பொருளாதார சம்பந்தமாக அப்போது ஏற்பட்டிருந்த கஷ்டநிலை[3] காரணமாகத் தோன்றிய கிளர்ச்சியை (கு. 71) சாமர்செட் தணிக்க முயன்றது, நன்னோக்கத்துடன் அவர் இழைத்த தப்பிதங்களுக்கு ஒரு சிறப்பான உதாரணமாகும். இந்தக் கஷ்டநிலை நாளுக்கு நாள் கடுமையாகிக்கொண்டிருந்தது. ஆட்டு மயிருக்கு நல்ல விலை கிடைத்ததால் நிலம் படைத்தவர்கள் பலர் பயிர் நிலங்களை ஆட்டு மந்தைகளை வளர்க்கும் மேய்ச்சல் நிலங்களாக மாற்றிக்கொண்டு வந்தனர். பயிரிடுவதற்கு வேண்டிய ஆட்களைவிட ஆட்டு மந்தைகளை வளர்ப்பதற்குக் குறைந்த ஆட்கள் தேவை; லாபமும் அதிகம். மேலும் அவர்கள் சில்லரைக் குடியானவர்களை ஏமாற்றி ஊர்ப் பொதுநிலங்களைத் தம்

1. Pinkie. 2. Ket. 3. Economic discontent.

நிலங்களோடு சேர்த்துக்கொள்ளலாயினர். கரம்பாகவும் மைதானங்களாகவும் இருந்த பொதுநிலங்கள் பல பயிரிடுவதற்குத் தகுதியற்றவைகளாக இருந்த போதிலும், நல்ல மேய்ச்சல் நிலங்களாக உபயோகப்பட்டமையால், செல்வமும் செல்வாக்கும் மிக்கவர்கள் அவற்றிற்கு வேலியிட்டுத் தங்கள் சொத்துக்களோடு சேர்த்துக்கொண்டனர். இதனால் கஷ்டப்பட்டவர்கள் ஊரிலுள்ள ஏழைக் குடியானவர்கள்; அவர்கள் தங்கள் ஆடுமாடுகளை மேய்க்கவும் அடுப்புக்கு வேண்டிய விறகுகளை வெட்டிக்கொள்ளவும் போதிய இடமின்றித் தவித்தனர். மடங்களைக் கலைத்துவிட்ட பிறகு நிலை முன்னிலும் கஷ்டமாய்விட்டது. மடத் துறவிகள் மடத்து நிலங்களில் வாழ்ந்த குடியானவர்களிடம் சில சமயங்களில் கண்டிதமாயிருந்தபோதிலும் பழைய பழக்க வழக்கங்களுக்கு மாறாக அவர்கள் ஒன்றுஞ் செய்ததில்லை. மடங்களின் நிலங்களை விலைக்கு வாங்கிய புதிய மிராசுதார்கள் இந்தப் பழக்க வழக்கங்களைப்பற்றி ஒன்றுந் தெரியாதவர்கள்; தெரிந்திருந்தாலும் அவைகளை அவர்கள் கவனிப்பவர்களாயில்லை; தாங்கள் புதிதாக வாங்கிய சொத்துக்களிலிருந்து எவ்வளவு அதிக லாபமடைய முடியுமென்பதிலேயே ஊக்கமாயிருந்தார்கள். 'வேலியிடுதலை'[1] சர் டாமஸ் மூர் யுடோப்பியா[2] (கு. 59) என்னும் தமது புத்தகத்தில் கண்டித்து எழுதியிருந்தார்; துரைத்தனத்தாரும் இந்தத் தீமையைத் தடுக்கப் பல முறை முயன்றார்கள்.

கிராமக் குடிகளின் குறைகளை விசாரித்து அவர்களுக்குப் பரிகாரந் தேடித்தர சாமர்செட் லண்டனில் தமது மாளிகையில் 'வேண்டுகோள் நீதிமன்றம்'[3] என்னும் பெயருடன் ஒரு தனி நியாய சபையை ஏற்படுத்தினார். ஆயினும், இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை நிறைவேற்ற முடியவில்லை. அக் காலத்தில் போலீஸ் போன்ற ஊர்க்காவல் ஏற்

1. Enclosures. 2. 'Utopia'. 3. Court of Requests.

பாடில்லை; துரைத்தன அதிகாரிகளை ஆங்காங்கே அனுப்பி அவற்றை நிறைவேற்றி வைப்பதும் முடியாத காரியம். இந்த நீதிமன்றத்தை ஏற்படுத்தியதற்காக இராஜ சபையின் அங்கத்தினர்கள் சாமர்செட்டை வெறுக்கலாயினர். ஏழைகளை ஏமாற்றிச் சுயநலத்தைத் தேடிக்கொண்டவர்கள் பெரும்பான்மையும் அவர்களே. முடிவில் ஈஸ்ட் ஆங்லியா[1]வில் வேலியிடுதலைக் கண்டிக்கத் தோன்றிய கிளர்ச்சி ஒரு பெரிய கலகத்தைத் தூண்டியது. கலகக்காரர்கள் ராபர்ட் கெட்[2] என்பவரைத் தலைவராகக் கொண்டார்கள். அவரும் நிலம் படைத்தவரே; ஆயினும், அவருக்கு ஏழைக் குடியானவர்களிடத்தில் மிகுந்த கனிவு உண்டு. அவர்கள் நாரிச்[3] பட்டணத்துக்கு அருகிலுள்ள மௌஸ்ஹோல்ட் ஹீத்[4] என்னும் மைதானத்தில் கூடித் துரைத்தனத்தாருக்குக் கண்டிப்பான மொழிகளில் ஒரு மனு தயாரித்து அனுப்பினார்கள். முதலிலிருந்தே அவர்கள் முரட்டுத்தனமும் காலித்தனமுமின்றி ஒழுங்காக நடந்துகொண்டார்கள். ஒவ்வொரு நாளும் அவர்கள் மைதானத்தில் கூடி ஒரு பாதிரியின் தலைமையில் தியானஞ் செய்துவிட்டுக் கலைந்தார்கள். சாமர்செட் அவர்கள் குறைகள் உண்மையானவை என்பதை உணர்ந்தார். நாரிச் பட்டணம் அவர்கள் வசமானபோது கூட அவர்கள்மீது கண்டிதமான நடவடிக்கை யொன்றும் எடுத்துக்கொள்ள அவர் விரும்பவில்லை. ஆயினும், இராஜ சபையின் மற்ற அங்கத்தினர்களுக்குக் கிளர்ச்சி செய்தவர்கள் மீது சிறிதும் பரிவு தோன்றவில்லை. அக் கிளர்ச்சி வலிவு பெற்றால் தாங்கள் அநியாயமாகப் பெறும் லாபங்கள் குறைந்துவிடு மென்று அஞ்சினார்கள். ஆகவே, அவர்களுள் ஒருவரான ஜான் டட்லி என்ற வாரிக் ஏர்ல்[5] கூலிக்குப் போராடத் தயாராயிருந்த சில அந்நிய நாட்டினரை ஒரு

1. East Anglia. 2. Robert Ket. 3. Norwich. 4. Mousehold Heath.
5. John Dudley, Earl of Warwick.

படையாகத் திரட்டிக்கொண்டுபோய்க் கலகக்காரர்களைச் சிதறவடித்தார். கெட்டைப் போன்ற தலைவர்கள் தூக்கி லிடப் பட்டனர்.

இராஜ சபையில் தமக்குத் தாழ்ந்த அந்தஸ்திலிருக்கும் அங்கத்தினர்கள் இவ்விதம் தாமே காரியங்களைச் செய்யத் துணிந்தபோது 'காப்பாளர் பிரபு'வின் பதவியில் சாமர் செட்டின் நிலை ஆட்டம் பெற்றுவிட்ட தென்பது வெளிப் படையாகிறது. சில வாரங்களுக்கு அப்பால் வாரிக்கும் அவரை ஆதரித்தவர்களும் திடுமென சாமர்செட்டைக் கைதியாக்கிச் சிறையிலடைத்தார்கள். சில மாதங்களுள் அவரை விடுதலைசெய்து இராஜசபையின் கூட்டங்களுக்கு வரவிட்டனர். சிறிது காலத்தில் அவரை மீண்டும் கைதி யாக்கிப் புதிய ஆட்சிக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்தா ரென்று குற்றஞ் சாட்டிச் சிரச்சேதஞ் செய்துவிட்டனர்.

§ 105. நார்தம்பர்லண்டின் ஆட்சி :—வாரிக் நார்தம் பர்லண்ட் ட்யூக்[1] என்ற பட்டத்துடன் சாமர்செட் பதவி யில் அமர்ந்தார். அவர் ஆட்சிக் காலத்தில் நாடு மேலும் சீர்கேடுற்றது. சாமர்செட் தப்பிதங்கள் இழைத்தாலும் அரசி யல் அறிவு பெற்றவர்; நார்தம்பர்லண்டுக்கு அரசியல் அறிவே இல்லை. அவருக்குத் தைரிய மிருந்தது; ஆயினும், அவர் மனச்சாட்சியில்லாதவர்; பேராசைக்காரர். சாமர்செட்டி னும் தீவிரமிக்க எதிர்ப்புக் கொள்கையினரைப் போல் அவர் வேஷம் போட்டார். தியான புத்தகத்தில்[2] சுத்த காதொலிக் கொள்கைகளை நிலைநாட்டும் இடங்களைத் திருத்தி எழுதும் படி அவர் க்ரான்மரை ஏவினர். இதெல்லாம் சுயநலத்தை யொட்டியேயாம். விரைவில் விலைப்படுத்திப் பணமாக்கக் கூடிய மதஸ்தாபன சொத்துக்களுள் பெரும்பாலன முன் னரே பறிமுதல் செய்யப்பட்டன. தொழிற்சங்கங்கள் வியா பாரச் சங்கங்கள் முதலிய கூட்டங்களின் ஆதரவில்

1. Duke of Northumberland. 2. Prayer Book.

'சான்ட்ரி'[1] (§ 44) என்னும் பெயர்கொண்ட சிறு கோவில்கள் பல இன்னும் இருந்தன. அவற்றின் சொத்துக்களிலிருந்து சில குருமார்கள் சம்பளம் பெற்று வந்தனர். நார்தம்பர்லண்ட் இந்தக் கோவில்களைக் கலைத்து அவற்றின் பொருள்களைக் கைப்பற்றித் தம் நண்பர்களுடன் பங்கிட்டுக்கொண்டார். சான்ட்ரி குருமார்களுள் பலர் அக்கம்பக்கத்துச் சிறுவர்களுக்குக் கல்வி புகட்டிக்கொண்டு வந்தார்கள். ஆகவே, பறிமுதல் செய்யப்பட்ட பொருளின் ஒரு பாகத்தைக் கொண்டு நார்தம்பர்லண்ட் ஆறும் எட்வர்ட் மன்னர் இலக்கண பள்ளிக்கூடம்[2] என்ற பெயருடன் சில பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினர். ஆயினும், அவைகளுக்காக அவர் செலவிட்ட பணம் மிகவும் சொற்பமே; அவை ஒழுங்கான முறையிலும் நடைபெறவில்லை.

நார்தம்பர்லண்ட் காதொலிக் பிஷப்புகளை நீக்கி எதிர்ப்புக் கொள்கையில் நம்பிக்கையுள்ள குருமார்களை அவர்கள் பதவிகளில் நியமித்தார். புதிய குருமார்கள் குறைந்த வருவாய்க்கு உழைப்பதாக ஒப்புக்கொண்டமையால் மீதியான பணம் நார்தம்பர்லண்டுக்குக் கிடைத்தது.

§ 106. **நார்தம்பர்லண்டின் சதி**[3] :—ஆறும் எட்வர்ட் ஒரு அசாதாரணமான இளைஞர். பதின்மூன்றுவது வயதிலேயே அவர் மதக்கோட்பாடுகளைக் கற்றுணர்வதில் ஊக்கங் காட்டினர். எதிர்ப்புக் கொள்கையில் அவருக்குப் பற்றுதல் மிகுதியாகத் தோன்றியது. நார்தம்பர்லண்டை அவர் 'கடவுள் மொழியின் புனிதக் கருவி'[4] யாகக் கருதினர்; நாட்டில் அவர் 'தூய மதத்'தைப்[5] பரப்பிக்கொண்டிருப்பதாக நினைத்தார். இந் நிலையில் எட்வர்ட் உயிரோடிருக்கும் வரையில் நார்தம்பர்லண்டின் செல்வாக்குக் குறைவதற்கில்லை. ஆயினும், 1553-ம் வருஷம் முதலில், இளமன்னர்க்கு உடல்

1. Chantry. 2. King Edward VI Grammar School. 3. Conspiracy. 4. 'The most holy instrument of the Word of God.' 5. 'Pure Religion.'

நலம் குன்றலாயிற்று. எதிர்காலத்தில் தமக்கு ஆபத்துள்ளது என்பதை நார்தம்பர்லண்ட் உடனே உணர்ந்தார். எட்வர்ட் இறப்பாரானுல் அவருக்குப் பின் பட்டத்துக்கு வரவேண்டியவள் மேரி இளவரசி. அவள் வயது முதிர்ந்தவள்; சுயேச்சையாக எதையும் தீர்மானித்துக்கொள்ளக் கூடியவள். பற்றுதல் மிக்க காதொலிக் ஆனதால், அவள் நார்தம்பர்லண்டின் செயல்களேயும் போக்குகளேயும் வெறுத்தாள். அவள் அரசியானுல் அவரது உயிருக்கே உலேவைக்கலாம். ஆகவே, எட்வர்ட் க்ஷயம்முற்றிச் சாகுந் தருவாயிலிருக்கும்போது, நார்தம்பர்லண்ட் தம் அதிகாரத்தை நிலேப்படுத்த ஒரு சூழ்ச்சி செய்தார். ஏழாம் ஹென்றியின் வழிவந்த ஜேன் கிரே[1] என்ற ஒரு சீமாட்டியைத் தம் மகன் கில்ட்பர்ட் டட்லிக்குக்[2] கலியாணஞ் செய்து வைத்தார். ஜேன் கிரேக்கு அப்போது பதினறு வயதே. மேலும், அவள் தீவிரமான எதிர்ப்புக் கொள்கையினள். எதிர்ப்புக் கொள்கைக்கு நீடித்த ஆதரவிருக்க வேண்டுமென்று மனதாரக் கோரிய எட்வர்ட் இளமன்னர் அவளே தமக்குப் பின் இங்லண்ட் அரசியாக வேண்டுமென்று விரும்பினர். ஆயினும், இந்த ஏற்பாட்டை நார்தம்பர்லண்டின் நெருங்கிய நண்பர்களேத் தவிர வேறு எவரும் ஆதரிக்கவில்லே. நாட்டு மக்கள் நார்தம்பர்லண்டின் போலி எதிர்ப்பு மதத்தில்[3] சலிப்புற்றிருந்தார்கள்; அவர் ஆட்சிக் காலம் வரம்பின்றி நீடிக்குமோவென்று அஞ்சினர்கள். அவர்களுள் பெரும்பான்மையோர் போப்பின் தலேமை நிராகரிக்கப்பட்டதை ஒப்புக்கொண்டாலும், பலர் காதொலிக் மதக் கொள்கைகளேயே நம்பினர்கள். மேலும், மேரி இளவரசி விஷயத்தில் அவர்களுக்குப் பரிவு அதிகம். எட்டாம் ஹென்றி அவள் தாயை அவமதித்துத் தள்ளியது அக்கிரமம் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். பிறப்பாலும் அவள் தகப்பனது உயிலி

1. Lady Jane Grey. 2. Guildford Dudley. 3. So-called Protestantism.

## ட்யூடர் வமிசாவளி

ஏழாம் ஹென்றி

- ஆர்தர்
- எட்டாம் ஹென்றி
  - மேரி
  - எலிசபெத்
  - ஆறாம் எட்வர்ட்
- மார்கரெட் நான்காம் ஜேம்ஸை மணந்தார்
  - ஐந்தாம் ஜேம்ஸ் கைஸ் நாட்டு மேரி[2]யை மணந்தார்
    - ஸ்காட்லண்ட் ராணி மேரி மணந்தவர் (1) இரண்டாம் ப்ரான்ஸிஸ்[4] (2) டார்ன்லி பிரபு
      - ஆறாம், முதலாம் ஜேம்ஸ்
- மேரி மணந்தவர் (1) பன்னிரண்டாம் லூயி (2) சப்பக்[1] ட்யூக்
  - ப்ரான்ஸீஸ்[3] மணந்தவர் சப்பக் ட்யூக் ஹென்றி க்ரே
    - ஜேன் மணந்தவர் லார்ட் டட்லி

1. Suffolk. 2. Mary of Guise. 3. Frances. 4. Francis II.

ணும் அவளுக்கு அரசியாவதற்கு முழு உரிமை யுண்டென்றும் அவர்கள் நம்பினார்கள்.

1553ஜூ ஜூலை மாதம் எட்வர்ட் இறந்ததும் நார்தம்பர்லண்ட் ஜேனை அரசியாக்கினார். மேரி கிழக்குப் பிரிவுகளுக்கு ஓடினாள். அங்கிருந்த பிரபுக்களும் கனவான்களும் தங்கள் குடித்தனக்காரர்களுடன் அவளுக்கு முழு ஆதரவளித்தார்கள். நார்தம்பர்லண்ட் ஒரு சேனையுடன் லண்டனை விட்டுப் புறப்பட்டு மேரியை ஆதரிக்கக் குழுமியவர்களைத் தாக்க முயன்றார். ஆயினும், அவரது ஆட்களுக்கு இதில் ஊக்கமில்லை; அவர்கள் நூற்றுக்கணக்காக அவர் படையைவிட்டு ஓடிவிட்டார்கள். லண்டனிலும் அவர் கட்சிக்கு ஆதரவில்லை; அவர் நகரத்தை விட்டுப் போனதும் நகரமக்கள் மேரியையே தங்கள் நியாயமான அரசி என்று அங்கீகரித்தார்கள். ஜேன் 'இராணி'யின் தகப்பனாரே அவர்களோடு கலந்துகொண்டார். கேம்பிரிட்ஜை அடைவதற்குள் நார்தம்பர்லண்டுக்குத் தமது உண்மைநிலை இன்னதென்பது தெளிவாகிவிட்டது. அவர் கைதியாக்கப்பட்டார். சில நாட்களுள் மேரி வெற்றி முழக்கத்துடன் லண்டன் நகரவாயிலுக்குள் நுழைந்தாள்.

---

## இருபத்துநான்காம் அத்தியாயம்

# காதொலிக் கொள்கையினர் ஆட்சி

(1553—1558)

§ 107. வெற்றிகரமான ஆரம்பம் :—மக்கள் மிக்க ஆர்வத்துடன் மேரியை அரசியாக்கினர். நார்தம்பர்லண்டின் சதியில் கலந்தவர்களை அவள் இலேசாக விட்டுவிட்டாள். நார்தம்பர்லண்ட் மட்டும் காதொலிக் கிறிஸ்தவராக மாறிப் புது அரசியின் தயவைப் பெற முயன்றாரேனும் சிரச்சேதஞ்

செய்யப்பட்டார். அவரை ஆதரித்தவர்களில் பெரும்பாலோரை அரசி மன்னித்துவிட்டாள். ஜேனும் அவள் கணவனும் மற்றுஞ் சிலரோடு லண்டன் கல்லரணில்[1] சிறை வைக்கப்பட்டனர்.

இந் நிலையில் அரசியான மேரி ஐந்தரை ஆண்டுகளுள் குடிகளின் அன்பை இழந்து மனமுடைந்து இறந்தாள். இங்லண்டில் மீண்டும் காதொலிக் மதஸ்தாபனத்தை நிலை நாட்டவேண்டுமென்பது அவள் பேரவா. ஆயினும், அவள் முதலில் வெகு நிதானமாகவே தன் எண்ணம் நிறைவேறுதற்கான காரியங்களைச் செய்யலானாள். தம் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட காதொலிக் பிஷப்புகள் பலரை அவள் மீண்டும் அப் பதவிகளில் அமர வைத்தாள்; அவர்களை ஓட்டிய எதிர்ப்புக் கொள்கையினரான க்ரான்மர், லாடிமர், ரிட்லி[2] போன்ற குருமார்களைச் சிறையில் வைத்தாள். இங்லிஷ் மதஸ்தாபனம் காதொலிக் மதக்கோட்பாடுகளை[3] ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவள் முதலில் வற்புறுத்தவில்லை. அதற்குச் சட்டங்களை மாற்றியாகவேண்டும். சட்டங்களை மாற்றக்கூடியவர்கள் பார்லமென்ட் சபையினரே. அவர்கள் புதிய இங்லிஷ் தியானங்களுக்குப் பதிலாகப் பழைய லாடின் தியானங்களையே வைத்துக்கொள்ள அனுமதிக்கத் தயாரா யிருந்தார்களேனும், பழைய காதொலிக் மதஸ்தாபனத்தை இங்லண்டில் திரும்பவும் நிலைக்கச் செய்தால் தாங்கள் நயமாக வாங்கிய மடங்களின் சொத்துக்களைத் திருப்பிக் கொடுத்துவிட நேருமோவென அஞ்சினார்கள்.

நாட்டில் முதலில் அதிருப்தியை உண்டாக்கியது அரசியின் கலியாண விஷயமே. அவளுக்கு வயது நாற்பதாகியும் கலியாணஞ் செய்துகொள்ளாதிருந்ததால் அவளுக்குப் பின் நாட்டை யார் ஆளுவது என்னும் கேள்வி உதித்தது. பார்ல

1. Tower of London. 2. Cranmer, Latimer, Ridley. 3. Doctrines.

மென்ட் சபையினர் அவள் ஒரு இங்லிஷ் சீமானைக் கலியாணஞ் செய்துகொள்ளவேண்டு மென்றனர். அவளோ தன் உறவினராகிய பேரரசர் ஐந்தாம் சார்ல்ஸின் மூத்த மகன் ஸ்பெயின் நாட்டு டான் பிலிப்பை[1] மணக்கப்போவதாக அறிவித்தாள். இது பலருக்கும் அதிருப்தியை உண்டாக்கியது. இந்த விவாகத்தின் பயனாகப் பிறக்கக்கூடிய பிள்ளை ஸ்பெயின் பேரரசின் பரந்த நாடுகளுக்கும் அரசராகப் போவதால், அவற்றிடையே இங்லண்ட் ஒரு சிறு பிரிவாகச் சிறப்பற்றுக் கிடக்க நேரிடும்.

§ 108. வையட் கலகம்:—இந்தக் கலியாணப் பேச்சால் ஏற்பட்ட உணர்ச்சி காரணமாக நாட்டின் பல பாகங்களில் பல கலகங்கள் தோன்றின. அவற்றுள் முக்கியமானது கென்டில்[2] சர் டாமஸ் வையட்[3] தலைமையில் கிளம்பியது. அது ட்யூடர் ஆட்சிக் காலத்தில் கிளம்பிய கலகங்களுள் மிகவும் பலமானது. அக்காலத்தில் அரசர்கள் நிலையான படைகளைத் திரட்டி வைத்துக்கொண் டிருப்பதில்லை. கலகங்கள் தோன்றியதும் அவசரம் அவசரமாகத் திரட்டப்பட்ட சேனை யொன்று கலகக்காரர் பக்கம் போய்ச் சேர்ந்து கொண்டது. அந் நிலையில் மேரி தைரியந் தளராமல் லண்டனுக்குச் சென்று நகரவாசிகளின் துணையை நாடினாள். லண்டன் நகரவாசிகள் உடனே அவள் பக்கம் திரண்டு நின்றார்கள். பட்டணத்துள் கலகக்காரர்களை நுழையவிட்டால் தங்கள் சொத்துக்கள் கொள்ளைபோய்விடும் என்பதை அவர்கள் நன்குணர்ந்தார்கள். கலகக்காரர்கள் லண்டனுக்குள் தென் பக்கமாக நுழைய வந்தபோது நகரவாசிகள் லண்டன் பாலத்தை வன்மையுடன் காத்து நின்றதைக் கண்டு அதைரியமுற்றார்கள். மேற்காகச் சுற்றிக்கொண்டு வந்து மீண்டும் ஆற்றைக் கடந்து அப் பட்டணத்தைத் தாக்குவதற்குள் அவர்களுள் பலர் கலைந்து ஓடிவிட்டார்கள்.

1. Don Philip. 2. Kent. 3. Sir Thomas Wyatt.

பட்டணத்துள் ஸ்ட்ராண்ட்[1] எனப்படும் ஆற்றங்கரையில் நிகழ்ந்த ஒரு சில்லரைப் போரில் வையட் கைதியானர். இந்தக் கலகத்தில் இளவரசி எலிசபெத் சம்பந்தப்பட்டிருப்பாள் என்ற சந்தேகத்தின்மேல் மேரி அவளைச் சிறை வைத்தாள். எலிசபெத் மிகவும் கெட்டிக்காரியானதால் அச் சந்தேகத்தை ரூபிக்கக்கூடிய சான்று ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகவே, அவளை மேரி விடுதலைசெய்யவேண்டியதாயிற்று. வையட்டும் அவரோடு கலகம் விளைத்த பன்னிரண்டு முக்கியஸ்தர்களும் சிரச்சேதஞ் செய்யப்பட்டனர். நார்தம்பர்லண்ட் சதியில் சம்பந்தப்பட்டுச் சிறையிலிருந்தவர்களும் இப்போது கொலையுண்டனர். அவர்களுள் முக்கியமானவர்கள் ஜேன் கிரே சீமாட்டியும் அவள் கணவனும். வையட் கலகத்துக்கும் அவர்களுக்கும் யாதொரு தொடர்புமில்லை; வையட் வெற்றி பெற்றிருந்தாலும் அவர்களுக்கு நேரக்கூடிய நன்மை யொன்றுமில்லை. எனினும், மேரியின் மனத்தில் திகில் புகுந்துவிட்டது. அரச பட்டத்துக்கு உரியவர்களான எதிர்ப்புக் கொள்கையினர் எவரேனும் உயிரோடிருக்கும் வரையில் தனக்கு ஆபத்தே என்று அவள் நினைத்தாள். பக்தி அடக்கம் தைரியம் உண்மை முதலிய சீரிய குணங்கள் ஜேன் கிரேயிடம் மிளிர்ந்தமையால் அந்தச் சீமாட்டியையே மாதர்க்கணிகலமாக எல்லோரும் மெச்சினர்கள். இராணியாகத் தனக்குப் பட்டங் கட்டி வைத்ததை அனுமதித்தது தவறென்று அவள் ஒப்புக்கொண்டாள்; ஆயினும், அவள் ஒருபோதும் இராணியாகக் கோரியதில்லை. அவளைச் சிரச்சேதம் செய்தபோது அவள் காட்டிய பொறுமையும் உறுதியும் கண்டவர் மனங்களைக் கலக்கின.

§ 109. இவ் வாட்சியின் முக்கிய நிகழ்ச்சி:—இக் கலகத்தை அடக்கியதில் தான் பெற்ற வெற்றியால் தனக்குக் கடவுள் அருள் இருப்பதாக நம்பி மேரி தன் மனதுக்கு

1. The Strand.

உகந்த இரு நோக்கங்களையும் (ஸ்பெயின் நாட்டோடு விவாக சம்பந்தமும் ரோமுடன் மீண்டும் கூட்டுறவும்) நிறைவேற்றத் துணிந்தாள். 1554ஆ ஜூலையீ பிலிப் இளவரசர்[1] செளதாம்டனில்[2] வந்து இறங்கினர். சில நாட்களுள் வின்செஸ்டர் பெரிய கோவிலில்[3] கலியாணம் நடந்தது. மேரியைவிடப் பிலிப் பதினேரு வயது சிறியவர். இந்தக் கலியாணத்துக்கு அவர் இணங்கியதன் காரணங்கள் முக்கியமாகக் காதொலிக் மதத்துக்கு வலிவு தேடவேண்டுமென்பதும், இங்லண்டை ஸ்பெயின் பேரரசில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுமேயாம். இங்லிஷ் மக்கள் தம்மை விரும்புவார்களென்று அவர் எதிர்பார்த்தார். ஆயினும், அவர் இயற்கையில் ஆர்வமற்றவர்; கடின சித்தமும் கடுகடுப்பான பேச்சு முள்ளவர். அவருடன் வந்த கருந்தாடிக் குதிரை வீரர்களையும்[4] கரிய முக்காடிட்ட துறவிக் கூட்டங்களையும்[5] இங்லிஷ் மக்கள் வெறுத்தனர். அவர்களை லண்டன் தெருக்களில் காணும்போதெல்லாம் தங்கள் அருவருப்பைக் காட்டினார்கள். இங்லண்டின் துரைத்தனத்தில் பிலிப்பைத் தலையிட விடுவதில்லை யென்று பார்லமென்டுக்கு மேரி உறுதி கூறி யிருந்தாள். ஆயினும், அவள் தன் கணவனுக்கு இராஜ சபையின் நடவடிக்கைகளை யெல்லாம் ஸ்பானிஷ் மொழியில் மொழிபெயர்க்கவைத்துக் காட்டி அவர் ஆலோசனையை எல்லா விஷயங்களிலும் கேட்டுவந்தாள்.

அதே வருஷ முடிவில் ஒயிட்ஹால் அரண்மனையில்[6] ரோமுடன் ஒரு சமாதானச் சடங்கு[7] நடைபெற்றது. பிலிப்பும் மேரியும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுடனும் பார்லமென்ட் சபையினருடனும் போப்பின் பிரதிநிதியாக வந்த கார்டினல் போல்[8] என்பவரை மிக மரியாதையாக வரவேற்று

1. Prince Philip. 2. Southampton. 3. Winchester Cathedral. 4. Black-bearded cavaliers. 5. Black-cowled monks. 6. Whitehall Palace. 7. A ceremony of reconciliation. 8. Cardinal Pole.

இங்லண்டைத் தாய் மதஸ்தாபனத்தின் ஆதரவில் ஏற்றுக் கொள்ளும்படி அவரை வேண்டிக்கொண்டனர். கார்டினல் கம்பீரமான குரலில் ஒரு உபந்நியாசம் செய்து, நாடு தாய் மதஸ்தாபனத்தினின்றும் பிரிந்திருந்த பாபம் கழிந்து விட்டதாகச் சொல்லி, அதை மீண்டும் காதொலிக் மதஸ்தாபனத்தின் ஆதரவில் ஏற்றுக்கொண்டதாகக் கூறினர். யூரோப்பிலுள்ள பெரிய கோவில்களி லெல்லாம் இதற்காகக் கடவுளின் புகழ் பாடித் தியானஞ் செய்தனர்; ரோமில் இந்தச் செய்தி எட்டியதும் குதூகலத்தால் பீரங்கிகள் முழங்கின.

§ 110. மேரியின் மதப்பித்து[1]: எதிர்ப்புக் கொள்கையினரை ஒறுத்தல்[2]:—இதுவரை அரசியின் விருப்பப்படியே எல்லாம் நடந்தது; குடிகள் அவளை இரு முறை கலகக்காரர் சூழ்ச்சிகளினின்றுங் காத்தார்கள்; அவள் தான் கோரிய கணவனைப் பெற்றுள்; நாடும் மதவிரோதப் பாபத்தினின்றும் கழுவாய் பெற்றது. ஆயினும், 1554ஸ் முடிவதற்குள் அவள் தன் இன்பத்துக்கும் வெற்றிக்கும் முடிவைத் தேடிக் கொண்டாள். அவள் கட்டளையின்மேல் பார்லிமெண்ட், காதொலிக் மதஸ்தாபனம் பரப்பிய கோட்பாடுகளைத் தவிர வேறு கோட்பாடுகளை ஆதரிப்பவர்களைக் கொளுத்திவிடலாமென்று துரைத்தனத்துக்கு அதிகார மளித்த பழைய சட்டங்களை மீண்டும் இயற்றி வைத்தது.

எதிர்ப்பு மதத்தைத்[3] தொலைத்துவிடவேண்டு மென்று மேரி தீர்மானித்தாள். அவ்விதம் செய்வதால், கடவுளுக்குத் தான் நன்றி செலுத்தியதாகு மென்றும், தன் குடிகளைப் பாபத்தினின்றும் காப்பாற்றியதாகு மென்றும் அவள் நம்பினுள். பிஷப்புகள் தங்கள் பார்வையிலுள்ள வட்டங்களில்[4] வேலை பார்க்கும் குருமார்களின் கோட்பாடுகளைப் பற்றி விசாரணை செய்யவேண்டு மென்று கட்டளை பெற்றனர். இதற்குள் மத விரோதிகளென முன்னமே தீர்மானிக்கப்பட்டுச்

1. Fanaticism. 2. Persecution. 3. Protestantism. 4. Dioceses.

சிறையிலுள்ளவர்களை மேரி கொளுத்திவிடத் துணிந்தாள். கானன் ரோஜர்ஸ்[1] லண்டனிலும், பிஷப் ஹூப்பர்[2] க்ளாஸ்டரிலும்[3] தீக்கிரையாயினர். இதைப் பார்த்த மற்ற எதிர்ப்புக் கொள்கையினர் தங்கள் எதிர்ப்பு வாதத்தை விட்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்வார்களென்று அவள் எதிர்பார்த்தாள். ஆயினும், அவள் எதிர்பார்த்ததற்கு நேர் விரோதமாகச் சீர்திருத்தக் கொள்கைகள் நாட்டில், சிறப்பாகத் தென்கிழக்குப் பாகங்களில், முன்னினும் பலமாக வேரூன்றலாயின: சில மாதங்களுள் பன்னிரண்டு மதத்தியாகிகள்[4] மூட்டிய தீக்கிடையே தெளிந்த உறுதியுடன் நின்று உயிர்விட்டனர். அவர்களது மனவுறுதியையும் தியாகத்தையும் கண்ட மக்கள் எதிர்ப்புக் கொள்கையில் முன்னைவிட மேலான மதிப்பும் பற்றும் வைக்கலாயினர்.

அதே சமயத்தில் பிலிப் இங்லண்டைவிட்டுப் போக வேண்டியவரானார். அவர் தகப்பனார் தமது பல அரச பதவிகளையும் விட்டுவிடத் தீர்மானித்தார். அதனால் பிலிப் ஸ்பெயின் நாட்டை ஆளவேண்டும். மேலும், இங்லண்டில் இருக்க அவருக்குப் பிடிக்கவில்லை. மேரிக்கு அழகுமில்லை, யௌவனமுமில்லை. மக்களின் நாகரிகமும் நாட்டின் பூதநிலையும்[5] அவருக்குப் பிடிக்கவில்லை. மேரி எவ்வளவோ வேண்டிக்கொண்ட போதிலும் அவர் போய்விட்டார். போனவர் மீண்டும் இங்லண்ட் திரும்பவில்லை.

மேரி துக்கத்தில் ஆழ்ந்தாள். தான் மதவிரோதிகளைப் போதிய மும்முரத்துடன் கண்டிக்காததால் கடவுள் ஒருவேளை தனக்கு இந்த அவமானத்தை உண்டாக்கினாரோ வென நினைத்தாள். இனி இவ் விஷயமாகத் தன் கடமையில் தளரக்கூடாது என்று தீர்மானித்தாள். லாடிமரும் ரிட்லியும் க்ரான்மரும் ஆக்ஸ்பர்டில் கூட்டப்பட்ட ஒரு மதநீதிமன்

1. Canon Rogers. 2. Bishop Hooper. 3. Gloucester. 4. Martyrs. 5. Climate.

றத்தின்[1]முன் விசாரணைக்குக் கொண்டுவந்து நிறுத்தப் பட்டனர். அவர்கள் தங்கள் எதிர்ப்பு வாதத்தை மறுக்க முயலவில்லை. லாடிமரும் ரிட்லியும் உடனே எரிக்கப்பட்டார் கள்; ஆயினும், க்ரான்மரை எரிப்பதைத் தள்ளிவைத்தார் கள். இவ்வளவு பெரிய எதிர்ப்புவாதி—விவாகரத்துத் தீர்ப் பளித்துத் தியான புத்தகத்தை நாட்டுமொழியில் எழுதிய ஆர்ச்பிஷப்—தமது வாதம் தப்பானதென்று பகிரங்கமாகக் கூறி மன்னிப்புக் கேட்டுக்கொள்வாரானல், அது காதொலிக் கட்சிக்கு அதிக பலமளிப்பதாகும். பலவகையில் அவர் மனவுறுதியை மாற்ற முயன்றனர். தமது இரு நண்பர்களை எரிக்கும் காட்சியைக் காண அவரை அழைத்துச் சென்றனர். காதொலிக் சமய வாதிகள் பலர் அவருக்கு எத்தனையோ நியாயங்களை எடுத்துக்கூறித் துளைத்தனர். அவர் காதொலிக் மதஸ்தாபனத்தின் ஆர்ச்பிஷப்பும் ஆகலாம் என்று ஆசை காட்டினர். முடிவில், அவர் உறுதி தளர்ந்து, தமது வாதம் தப்பானதென்றும், அதற்காகத் தாம் மன்னிப்பை நாடுவ தாகவும் எழுதப்பட்ட ஒரு தாளில் கையொப்பமிட்டார்.

இராணிக்கோ தன் தாயைத் தள்ளிவைத்து அவமதிப் புக்கு ஆளாக்கிய மனிதனை மன்னிக்க மனம் வரவில்லை. அவர் இறக்கத்தான் வேண்டுமென்றாள். உடனே க்ரான்மருக் குப் போன தைரியம் திரும்பி வந்தது. அவரைக் கொல்ல வேண்டிய தினத்தன்று, சீர்திருத்தக் கொள்கைகளில் தாம் நம்பிக்கை யிழந்துவிட்டதாகப் பலர் முன்னிலையிலும் வெளிப்படையாகக் கூறும்படி வற்புறுத்தினர்கள். ஆனல், அவர் எதிர்ப்புக் கொள்கையை மனமார ஆதரித்துப் பேசினர். உடனே அவரைக் கட்டைகளிடையே வைத்துக் கொளுத்தினர்கள். அப்போதும் அவர் சிறிதும் உறுதி தளராமல், மன்னிப்பு நாடி எழுதிய கையை முதலில் எரிக்க வேண்டுமென்று கையைத் தீச்சுவாலைகளிடையே நீட்டினர்.

1. Ecclesiastical court.

கல்மனத்துடன் தன் நோக்கத்தை நிறைவேற்றத் துணிந்த மேரி தோல்வியே பெற்றாள். இந் நிகழ்ச்சி எதிர்ப்புவாதத்துக்கு மிகுந்த ஊக்கத்தையும் மதிப்பையும் தந்தது.

அடுத்த மூன்று வருஷங்களுள், முதியவர்களும் இளையவர்களும், ஆண்களும் பெண்களும், பிஷப்புகளும் தொழிலாளர்களுமாகச் சுமார் முந்நூறு பேர் வரையில் தங்கள் மதக் கோட்பாடுகளுக்காகத் தீக்கிரையானார்கள். அரசாங்கத்தார் குடிகளை இவ்வாறு ஒறுத்தல்[1] யூரோப்பில் வழக்கமாக இருந்தபோதிலும், இங்லிஷ் மக்களுக்கு இது ஒரு புதிய கொடுமையாகவே இருந்தது. போப்பின் மதத்துக்கும்[2] ஸ்பெயினின் உறவுக்கும் இந்தக் கொடிய ஸ்மித்பீல்ட்*[3] கொலைகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டென்று பல நூற்றாண்டுகள் வரையில் மக்கள் நம்பினர்.

§ 111. **மகிழ்ச்சியற்ற முடிவு**:—மேரியின் ஆட்சியில் கடைசி இரண்டொரு ஆண்டுகளில் அவளுக்குப் பல ஏமாற்றங்களும் மனக்கலக்கங்களும் உண்டாயின. அவள் கணவன் அவளைப் புறக்கணித்துவிட்டுப் போய்விட்டான். போனவன் பார்லமெண்ட் தன்னை இங்லண்ட் மன்னன் ஆக்காததற்கு அவளைப் பழித்துப் பழித்து எழுதிக்கொண் டிருந்தான். இங்லண்ட் காதொலிக் மதத்தைத் திரும்பவும் தழுவும் என்ற நம்பிக்கை மேரி மனத்தை விட்டகன்றது. தனக்குப் பிள்ளை பிறப்பதற்கு வழியில்லை யாதலால், தனக்குப் பின் அரசையாளவேண்டியவள் தன் மாற்றாந்தங்கை[4] எலிசபெத்தே. அவள் அந்தரங்கமாகக் காதொலிக் மத விரோதியே. மேரியைப் போப்பும் பழிக்கலானார். மதஸ்தாபனத்தின் நிலங்களை வாங்கித் தரவில்லை என்பது அவர் குறை. மேரி எவ்வளவு வேண்டிக்கொண்ட போதிலும் பார்லமெண்ட் அதற்கு

*ஸ்மித்பீல்ட் என்பது லண்டனுக்கு வெளிப்புறமுள்ளது. அங்கு மத விரோதிகள் எரிக்கப்பட்டார்கள்.

1. Persecution. 2. Papalism. 3. Smithfield. 4. Half-sister.

இணங்கவில்லை. மேரி காதொலிக் மதவிரோதிகளை ஒறுக்க ஒறுக்க எதிர்ப்புக் கொள்கை வலிவொடுங்காது புத்துயிர் பெறலாயிற்று. இதையும் அவள் உணர்ந்திருக்கவேண்டும்.

1558ஆம் வெளிநாட்டு விவகாரங்களாலும் அவளுக்கு மனவமைதி குலைந்தது. போப் நான்காவது பயஸ்[1] நாட்டுப் பற்று நிறைந்த ஒரு இடாலியர். அவர் ப்ரான்ஸின் உதவியைக் கொண்டு இடலியில் ஸ்பெயின் மன்னரது அதிகாரத்தை வேரறுக்க முயன்றார். அதனால் ஹாப்ஸ்பர்க் அரச குலத்துக்கும் வேலாய் அரச குலத்துக்கும் இருந்த பழைய பகைமை போராக மூண்டது. இதில் மேரி தன் பக்கம் சேர வேண்டுமென்றார் பிலிப். அவ்விதம் நடந்தால் மேரி போப்புடன் போரிட நேரும். இக் காரியத்தை அவள் தகப்பன் எட்டாம் ஹென்றியே செய்யத் துணியவில்லை. சிறிது காலம் இன்னது செய்வது என்று தெரியாது தவித்துக்கொண்டிருந்து, மேரி முடிவில் ஸ்பெயினுக்குச் சொந்தமான நெதெர்லண்ட்ஸ்[2] நாட்டை ப்ரான்ஸின் எதிர்ப்பினின்றுங் காக்க ஒரு சேனையை அனுப்பினாள். இதன் விளைவாக ப்ரான்ஸ் காலி[3] பட்டினத்தைப் பிடித்துக்கொண்டது. இதுவே ப்ரான்ஸில் இங்லண்டுக்குச் சொந்தமாயிருந்த கடைசி இடம்.

இதை ஒரு வகையில் நஷ்டமென்று மதிக்காது நன்மையென்றே மதிக்கவேண்டும். காலியால் இங்லண்டுக்கு லாபமொன்றுமில்லை; அதைப் பாதுகாக்கப் பெரும் பணம் செலவாகிக்கொண் டிருந்தது. ஆயினும், அது போனது நாட்டின் பெருமைக்குப் பேரிழுக்கே. இந்தப் பெருமைக் குறைவெல்லாம் ஸ்பெயின் நாட்டோடு ஏற்பட்ட தொடர்பு காரணமாக உண்டானதால் மக்கள் ஸ்பெயினை முன்னிலும் அதிகமாக வெறுக்கலாயினர்.

இவ்வளவு மனக் கவலைகளுக்கும் ஆளாகி மேரி மகிழ்ச்சியற்று மனமுடைந்து 1558 ஆம் நவம்பர்மீ மாண்டாள்.

1. Pope Pius IV. 2. The Netherlands. 3. Calais.

# மூன்றும் பகுதிக்கான சில குறிப்புக்கள்

(1485—1558)

## இங்லண்ட் மன்னர்கள்

ஏழாம் ஹென்றி (1485-1509)
எட்டாம் ஹென்றி (1509-1547)
ஆறம் எட்வர்ட் (1547-1553)
மேரி (1553-1558)

## யூரோப்பிய அதிபதிகளுள் முக்கியமானவர்கள்

### பேரரசர்

ஐந்தாம் சார்ல்ஸ் (1519-1553): ஸ்பெயினுக்கும் அரசர் (கீழே பார்க்க). ஆரகன் காதரீன் அவர் அத்தை.

### போப்

இரண்டாம் ஜூலியஸ் (1503-1513) : எட்டாம் ஹென்றி காதரீனே மணக்கத் 'தனி ஆணை'[1] கொடுத்தவர்.

ஏழாம் க்ளேமேன்ட் (1523-1534): காதரீனுக்கும் எட்டாம் ஹென்றிக்கும் நடந்த விவாகத்தை ரத்து செய்ய மறுத்தவர்.

### ப்ரான்ஸ்

முதல் ப்ரான்ஸிஸ் (1515-1547) : ஐந்தாம் சார்ல்ஸுக்கு எதிரி.

### ஸ்பெயின்

பர்டினண்டும்[2] இசபெல்லாவும் (1479-1516) : அவர்கள் கலியாணத்தால் ஸ்பெயின் இராச்சியம் உண்டாயிற்று.

முதல் சார்ல்ஸ் (1516-1556): 'பேரரசர் ஐந்தாம் சார்ல்ஸ்' ஆனர் (மேலே பார்க்க).

### கு. 51. அரச பட்டங் கட்டிக்கொள்ள ஏழாம் ஹென்றியின் உரிமைகள்

(1) பிறப்பு : இந்த உரிமை அதிக பலமில்லாததே.

1. Dispensation. 2. Ferdinand.

அவர் தாய் மூன்றாம் எட்வர்ட் வழி வந்தவள ; ஆயினும், அவள் குடும்பத்தினர் (போபர்ட் குலம்[1]) சிம்மாசனத்தில் அமர உரிமை யற்றவர் எனப் பார்லமென்ட் ஒரு சட்ட மியற்றி யிருந்தது.

(2) போரில் வெற்றி : அவர் தமக்கு முன் ஆண்ட அரசரை பாஸ்வொர்த்[2] போர்க்களத்தில் தோற்கடித்துக் கொன்றார்.

போர்ச் சோதனையில்[3] மக்களுக்கு இன்னும் நம்பிக்கை சிறிது இருந்தது. நியாயமுள்ள பக்கத்துக்குக் கடவுள் வெற்றி யளிப்பார் என்னும் நம்பிக்கையே இதற்கு அடிப்படை.

(3) பார்லமென்ட் இயற்றிய சட்டம் : இந்தச் சட்டம் அவரே நியாயமான அரசர் என்று மட்டும் கூறியது.

எப்படி ? ஏன் ? என்றெல்லாம் காரணங் கூறா திருப்பதே மேல்.

(4) யார்க் குலத்து எலிசபெத்துடன் கலியாணம்: நான்காம் எட்வர்டின் மக்களுள் இவளே உயிருட னிருந்தவள்.

அக் காலங்களில் மனைவியின் சொத்துக்களும் பட்டங்களும் கணவனுக்கு உரிமையாக வந்தன.

## கு. 52. ட்யூடர் மன்னர்களின் கட்டற்ற வல்லரசு[4]

மூன்று ட்யூடர் அதிபதிகள் (ஏழாம் ஹென்றி, எட்டாம் ஹென்றி, எலிசபெத் இராணி) வன்மைமிக்க நடுநாயக ஆட்சி[5]யைப் பலப்படுத்தினார்கள். அதில் எல்லா அதிகாரங்களையும் தங்கள் கையிலேயே வைத்திருந்தார்கள். அவர்கள் ஆட்சியில் அரசரது ஆணை i. முழுவன்மையுடன் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் சென்றது; ii. பெரிய பிரபுக்களை அடக்கி வைத்து மற்றவர்களைப் போல் அவர்களையும் சட்டத்துக்கு அடங்கி நடக்கச் செய்தது ; iii. நாட்டு மக்களிடையே ஒற்றுமையுணர்ச்சியைப் பலப்படுத்தி அரசரை நாட்டின் பிரதிநிதியாக அவர்கள் மதிக்கும்படி செய்தது ; iv. வாணிப வளம் முதலிய நாட்டின் நன்மைக்கான விஷயங்களுக்குத் தக்க பாதுகாப்புக்களை அளித்தது.

அக் காலத்தில் அரசர்கள் தத்தம் நாடுகளில் வன்மைமிக்க தங்கள் நடுநாயக ஆட்சியைப் பலப்படுத்திக்கொண்டது இங்லண்டில் மட்டுமல்ல ; ப்ரான்ஸிலும் ஸ்பெயினிலும் கூட இவ்விதமே நடந்தது.

ஏழாம் ஹென்றிக்கு இத்தகைய ஆட்சியை நிலைநாட்ட முடிந்தது கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால் : i. சென்ற நூற்

1. The Beauforts. 2. Bosworth. 3. 'Trial by combat'. 4. The Tudor Despotism. 5. Strong central government.

றூண்டின் குழப்பங்களாலும் அமைதியின்மையாலும் அவதிப்பட்டு அபிவிருத்தி குன்றிய நாட்டு மக்கள் இதைக் கோரினார்கள்; ii. கட்டுக்கடங்காத பிரபுக்களை அடக்கிவைக்க அவருக்கு வழிகள் ஏற்பட்டன (கு. 53); iii. செல்வவந்தர்களிடமிருந்து அவர் வாங்கிய அபராதங்களும் கட்டாயக் கடன்களும் அவரைப் பெரிய பணக்காரர் ஆக்கியதால், இராச்சிய காரியங்களுக்கு வேண்டிய பணத்துக்காக அவர் பார்லமென்ட் உதவியை எதிர்பார்க்க வேண்டியிருந்த தில்லை.

நான்காம் எட்வர்ட் (1461-1483) இந்த ஆட்சி முறையைத் தொடங்கினார்; ஆயினும், சோம்பலால் அவர் ஏழாம் ஹென்றியைப் போல் சிரமப்பட்டு அதை உருவாக்கவில்லை.

## கு. 53. ஏழாம் ஹென்றி பிரபுக்களை அடக்கி வைத்திருந்த விதம்

(1) செட்டான வாழ்க்கைக்கான சட்டங்களால்.[1] இவை 'தனியுடையும் பக்க ஆதரவும்'[2] என்ற வழக்கத்தை நிறுத்தின.

'தனியுடையும் பக்க ஆதரவும்' என்ற வழக்கம் ரோஜாக் கட்சியினர் சண்டைகள்[3] காலத்தில் ஏற்பட்டு வளர்ந்ததாகும். அதன்படித் தங்கள் அடையாளக் குறிகளையும் உடைகளையும் அணிந்துகொண்டு ஆயுதபாணிகளாய்த் தங்களை ஆதரிக்கச் சித்தமாயிருந்த பல கூட்டங்களைப் பிரபுக்கள் சேர்த்து வைத்துக்கொண்டிருந்தனர் (§ 76). 'செட்டான வாழ்க்கைக்கான சட்டங்கள்' டாம்பீகத்தையும் ஊதாரித்தனத்தையும் குறைக்க முயன்றன. ஏழாம் ஹென்றி இயற்றியவை ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேற்பட்ட ஆட்களை யாரும் வைத்திருக்கக்கூடாது என்று கட்டுப்படுத்தின.

(2) நக்ஷத்திர அறை நீதிமன்றத்தால்.[4]

சுற்றிவரும் நீதிபதிகள் பெரிய பிரபுக்களின் செல்வாக்கு மிகுந்திருந்த பிரிவுகளில் அடிக்கடி தங்கள் கடமையைச் செலுத்த முடியாது இடர்ப்பட்டனர். இத்தகைய செல்வாக்கு மிகுந்த பிரபுக்களை விசாரிக்க வெஸ்ட்மின்ஸ்டரிலுள்ள நக்ஷத்திர அறையில் ஒரு நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது. அதில் நீதிபதிகளாக உட்கார்ந்தவர்கள் இராஜசபையின்[5] அங்கத்தினர்கள். அவர்களை எவரும் மிரட்டவோ லஞ்சங் கொடுத்து மாற்றவோ முடியாது.

(3) பிரபுக்களை அபராதங்களும் நன்கொடைகளும் கட்டாயக் கடன்களும்[6] கொடுக்கும்படி செய்ததால்.

1. Sumptuary Laws. 2. Livery and Maintenance. 3. The Wars of the Roses. 4. The Court of Star Chamber. 5. The King's Council. 6. Fines, benevolences, forced loans.

'நன்கொடைகள்' உண்மையில் கட்டாயப்படுத்தி வாங்கப்பட்ட கொடைகளே. 'கட்டாயக் கடன்கள்' திருப்பிக் கொடுப்பதற்காக வாங்கப்பட்டனவல்ல. இவற்றைப் பிரபுக்களிடமிருந்து கட்டாயப் படுத்தித் தண்டியதால் அவர்கள் பலங் குறைந்தது; அரசர் பலம் மிகுந்தது. இந்தத் தண்டல் தொழிலில் ஈடுபட்ட எம்ப்சன், டட்லி[1], என்ற மந்திரிகள் எல்லோராலும் வெறுக்கப்பட்டார்கள்.

(4) தாழ்ந்த அந்தஸ்திலிருந்தவர்களை மந்திரிகளாக நியமித்ததால்.

மந்திரி பதவியில் ஒரு பிரபு அமர்ந்திருப்பாரானால், அவர் செல்வாக்கும் பலமும் அதிகரிக்கும். தாழ்ந்த அந்தஸ்திலுள்ளவர்கள் இப் பதவிகளில் இருப்பார்களானால், அவர்கள் அரசரது தயவை இழக்க நேரிடுமோ வென்று அஞ்சி, அவர் விருப்பத்துக்கு விரோதமாக நடந்து கொள்ளத் துணியார்கள். எம்ப்சனும் டட்லியும் இதற்கு உதாரணம்.

## கு. 54. கலைகளின் மறுபிறப்பும்[2] அது இடலியில் முதலில் தோன்றியதன் காரணமும்

இவ் வுலகத்திலும் உலகத்து மக்கள் தன்மையிலும் தோன்றிய புது ஊக்கம். இடைக்காலத்தில்[3], மதஸ்தாபனத்தினர், மக்கள் இவ் விஷயங்களில் ஊக்கங்கொண்டால், அடுத்த உலகத்துக்குத் தயாராவதற்குத் தக்க கடமைகளில் ஊக்கந் தளர்வார்களென்று நினைத்து, அவற்றில் மனஞ் செல்லுவதைத் தடுத்து வந்தார்கள். ஆனால், இப்போது மதஸ்தாபனத்தினர்க்குச் செல்வாக்கு குறைந்துவிட்டதால், மக்களை அவர்கள் கட்டுப்படுத்த முடியவில்லை: அவர்கள் தடையின்றி உலக விஷயங்களில் ஊக்கங் கொள்ளலாயினர்.

படிப்பாளிகள்[4] உலக விவகாரங்களைப் பற்றி எழுதிய பழைய க்ரீக், லாடின் அறிவாளிகளின் நூல்களை இப்போது ஊக்கமாகப் படிக்க ஆரம்பித்தனர்; ஓவியக்காரர்கள்[5] மக்களையும் உலகத்தில் காணப்படும் காட்சிகளையும் அப்படியே படங்களில் எழுத ஆரம்பித்தனர்; உலக ஆராய்ச்சிக்காரர்கள்[6] உலகத்தின் பல பாகங்களையும் பற்றித் தெரிந்துகொள்ள ஆவல் கொண்டனர்; விஞ்ஞானிகள்[7] இயற்கையை ஆராய்ந்து உணர்ந்த உண்மைகளையொட்டிச் சில கொள்கைகளைப் பரப்பலாயினர்: சாதாரண மக்களும், மதஸ்தாபனத்தினர் கொள்கைகளைக் குருட்டுத்தனமாக ஏற்றுக்கொள்ளாமல், மத விஷயங்களைப்பற்றித் தாங்களே சிந்தித்துத் தெளிவடையலாயினர்.

---

1. Empson, Dudley. 2. The Renaissance. 3. The Middle Ages.
4. Scholars. 5. Painters. 6. Explorers. 7. Scientists.

இதெல்லாம் இடலியில் ஆரம்பித்தது. இதற்குக் காரணம் இடலியில் மற்ற நாடுகளில்விட நகரங்கள் அதிகமாக இருந்தமையேயாம். நாட்டு வாழ்க்கையைவிட நகர வாழ்க்கை எங்கும் நாகரிக மிகுந்திருப்பது இயற்கையன்றோ?

இடலியைப்போல் இங்லண்ட் அக் காலத்தில் அவ்வளவு செல்வமும் கலையும் நிறைந்த நாடாயில்லை. பிற்காலத்தில் வியாபாரத்திலும் ஆக்கத்தொழில்களிலும் தோன்றிய வளத்தால் இங்லண்ட் மேன்மையுற்றது.

"ரினேசன்ஸ் போப்புகள்": அக் காலத்துப் போப்புகளில் பலர் வைதிக[1] விஷயங்களில்விட லௌகிக[2] விஷயங்களில் அதிக ஊக்கங் காட்டியதால் இந்தப் புது ஆர்வங்களுக்கு அதிக ஆதரவேற்பட்டது. ஆறும் அலெக்சாண்டர் (1492-1503) தம் குடும்பத்தின் வளத்தையே முக்கியமாகக் கவனித்தார்: இரண்டாம் ஜூலியஸ் (1503-1513) ரோம் நகரத்தை அழகுபடுத்தி, செனட் பீடர் கோவிலைக் கட்ட ஆரம்பித்தார்; பத்தாம் லீயோ (1513-1522) கலைகளையும் கல்வியையும் ஆதரித்த கலாரசிகர்.

## கு. 55. 'புதுப் படிப்பு'[3]

இடைக்காலத்தினர் முக்கியமாகப் படித்த நூல்கள் பைபிலும் அரிஸ்டாடிலின் தத்துவங்களுமேயாம்[4]. அவற்றின் லாடின் மொழிபெயர்ப்புக்களையே அவர்கள் படித்தார்கள். தருக்க விதிகளின்படி அவற்றின் வாக்கியங்களுக்குப் பொருள் காண்பதே அக் காலத்துப் படிப்பாளிகளின் பொறுப்பா யிருந்தது. கலைகளின் மறுபிறப்பால் (கு. 54) அவர்கள், அரிஸ்டாடிலின் நூல்களோடு, பண்டைய க்ரீஸ்,ரோம் புலவர்களும் சரித்திராசிரியர்களும் எழுதி வைத்த பாக்களையும் சரித்திரங்களையும் அவைகளை முதலில் எழுதப்பட்ட மொழிகளிலேயே படித்து இன்புறலாயினர். தருக்க,இலக்கணப் பயிற்சிகளுக்காகமட்டுமன்றி, அவை படிப்பவர் மனத்தை மகிழ்விக்கவும் விசாலப்படுத்தவும் பயன்படலாயின.

ஆக்ஸ்பர்ட் சீர்திருத்தக்காரர்கள்: இங்லண்டில் இப்புதிய படிப்பு முதலில் மத விஷயங்களைச் சீர்படுத்துவதில் திரும்பியது. ஆக்ஸ்பர்ட் ஆசிரியர்களாக இருந்த மூவர்—ஜான் கோலெட்[5], எராஸ்மஸ்[6] (இவர் ஒரு டச்சுக்காரர்), சர் டாமஸ் மூர்—மதஸ்தாபனத்தில் காணப்பட்ட சீர்கேடுகளை (§ 63), முக்கியமாக மடத்துறவிகளின் மட்டித்தன்மான பழைய படிப்பு முறைகளை, பரிகசித்துக்

1. Spiritual. 2. Worldly. 3. 'The New Learning'. 4. The Bible and the philosophy of Aristotle. 5. John Colet. 6. Erasmus.

கண்டித்து வந்தனர்.* க்ரீக் மொழியில் முதன்முதல் எழுதப்பட்ட வேத நூலைப் படித்துக் கிறிஸ்துமத விஷயங்களைப்பற்றிய ஆதார மற்ற மூடக் கொள்கைகளை மாற்றிக்கொள்வதற்கு அவர்கள் வழி காட்டினார்கள்.† அம் மொழியிலும் லாடின் மொழியிலுமுள்ள பண்டைய இலக்கியங்களைப் படிப்பதில் அவர்களுக்கு ஆர்வ மதிகம்.‡

## கு. 56. டாமஸ் உல்ஸியின் வாழ்க்கை (1471—1530) NB

வளமிக்க நடுத்தரமான குலம்[1] (மற்ற ட்யூடர் மந்திரிகளைப் போல்.)

ஆக்ஸ்பர்டில் படித்தவர். பெரிய படிப்பாளி யென்று பெய ரெடுத்தவர். மதஸ்தாபனத்தைச் சேர்ந்தார். (கெட்டிக்காரர்கள் மேல் பதவிகளுக்கு வர இன்னும் இதுவே ராயபாட்டை. ஆயினும், காலம் மாறிக்கொண்டு வந்தது. உல்ஸியே மத குருவாகவும் அரசியல் நிபுணராகவும் சேர்ந்திருந்தவர்களுள் கடைசியானவர்). ஏழாம் ஹென்றி காலத்தில் இராஜ சேவையை மேற்கொண்டார். ப்ரான்ஸுடன் நடந்த இரண்டாம் போரின்போது (1513) சகல விவரங்களையும் தீர்மையாகக் கவனித்த திறமையால் எட்டாம் ஹென்றியின் மெச்சுதலைப் பெற்றார். தலைமை மந்திரியானார். ப்ரான்ஸுடன் லாபகரமான உடன்படிக்கை செய்து வைத்தார். விரைவில் செல்வத்திலும் செல்வாக்கிலும் மேம்பட்டார்.

1520-க்குள் அவர் சான்ஸெலர், கார்டினல், போப்பின் பிரதிநிதி, யார்க் ஆர்ச்பிஷப், வின்செஸ்டர் டூர்னே[2] பிஷப், செண்ட் ஆல்பன்ஸ் மடாதிபதி, லின்கன் டீன்[3] முதலிய பதவிகளை வகிக்கலானார்.

மந்திரியாக இருந்தபோது போது நோக்கம்: அரசரின் அதிகாரத்தைப் பெருக்கல்; தமது அதிகாரமும் இதைப்பொறுத்தே இருந்தது. சிறப்பான ஊக்கம் வெளிநாட்டு விவகாரங்களில்.

---

* ஆயினும், அவர்கள் காதொலிக் மதஸ்தாபனத்தின் அடிப்படையான கொள்கைகளைக் கண்டிக்கவில்லை; மூர் அவற்றிற்காகத் தம் உயிரையும் இழக்கத் துணிந்தார்.

† இவ் விஷயத்தைப் பற்றிக் கோலெட்டும் எராஸ்மஸும் ஆக்ஸ்பர்டில் பேருரைகள் நிகழ்த்தினார்கள்.

‡ இப் புதுப் படிப்பைப் பரப்பக் கோலெட் 'செண்ட் பால்ஸ் பள்ளிக்கூடம்'[4] என்னும் பெயர்கொண்ட ஒரு கலாசாலையை ஆரம்பித்தார்.

1. Prosperous middle-class. 2. Tournay. 3. Dean. 4. St. Paul's School.

வெளிநாட்டு விவகாரங்களில் போது நோக்கம் : ஒருவர்மீ தொருவர் பொருமை கொண்டிருந்த பேரரசரும் ஸ்பெயின் மன்னரும் ஆன ஹாப்ஸ்பர்க் குலத்து ஐந்தாம் சார்ல்ஸ‍ும் ப்ரான்ஸ் மன்னரான வேலாய் குலத்து முதல் ப்ரான்ஸிஸ‍ும் ஒருவரை விட மற்ருெருவர் பலமிக்கவராகாதபடி, அதாவது, அவர்களிடையே 'வல்லமைச் சமநிலை'[1] கெடாதபடி, பார்த்துக் கொள்வது ; அதனால் அவர்களுள் ஒவ்வொருவரும் இங்லண்டின் ஆதரவைப்பெற ஆவல்கொள்ள வைப்பது. யூரோப்பிய விஷயங்களில் இங்லண்டும் ஒரு முக்கிய இடத்தைப் பெறும் வழி அவ்விரு பெரும் வைரிகளிடையே அது ஒரு 'எடை நிரப்பி'[2]யாக இருக்க முயலுதலேயாம்.

ஆகவே, அவ்விருவரையும் சண்டையிடாமல் வைத்திருக்க வேண்டும். சண்டை யாரம்பித்துவிட்டால், இருநாட்டினர்க்கும் இங்லண்டின் ஊனம் (ஏழ்மையும் வன்மைகுறைவும்) வெளியாகிவிடும். வெளியாகிவிட்டால், அவர்களுள் எவரும் இங்லண்டின் கூட்டுறவு தமக்கு இன்றியமையாதது என்று நினைக்கமாட்டார்கள்.

பேரரசரோடு கூட்டுறவு (1522—1525). அவர்கள் போரிட வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது உல்ஸி ஐந்தாம் சார்ல்ஸோடு கூட்டுறவு ஒப்பந்தம் செய்து வைத்தார். (அவர் ஹென்றியின் சம்பந்தியாக இருந்ததோடு தம்மைப் போப் ஆக்கக்கூடிய வன்மையும் பெற்றவர்.) ஆயினும், இந்தப் போரில் இங்லண்ட் கலந்து கொண்டது ஏதோ ஒரு சிறு வகையில்தான்.

பேரரசர் கூட்டுறவு முறிதல் (1525—1526). (1) உல்ஸி போப் பதவி பெருது ஏமாந்தார். (2) பாவீயாவில்[3] (1525) ப்ரான்ஸிஸைத் தோற்கடித்து அவரைச் சிறை பிடித்ததால் பேரரசர் ஐந்தாம் சார்ல்ஸ் 'வல்லமைச் சமநிலை'யைப் புரட்டிவிட்டார். (3) சார்ல்ஸின் அத்தையான காதரீன் இராணியின் விவாகத்தை ரத்து செய்து அவளைத் தள்ளிவைக்க ஹென்றி நினைத்துக்கொண்டிருந்தார் (§ 91)

விவாக ரத்து விவகாரத்தால் உல்ஸியின் வீழ்ச்சி: ஹென்றி இனி 'விளையாட்டுப் பிள்ளை'யாக இராமல் துரைத்தன விவகாரங்களை நேரில் கவனித்து நடத்த முற்பட்டதால் உல்ஸியின் நிலை கஷ்டநிலை யாயிற்று. ஹென்றி மற்ருெரு கலியாணஞ்செய்து கொள்வதற்குப் போப்பின் தனி உத்தரவைக் கார்டினல் உல்ஸி வாங்கித்தர வேண்டுமென்று ஆணை பிறந்தது. சந்தர்ப்பங்கள் கூடி

1. 'The Balance of Power'. 2. 'Make-weight'. 3. Pavia.

வராமையால் உல்ஸிக்கு இது முடியாத காரியமாயிற்று (§ 92). ஹென்றிக்கு இனி உல்ஸியால் ஆகக்கூடிய தொன்றுமில்லை. எல்லா வகுப்பினரும் உல்ஸியை அவரது அதிகாரம் செல்வம் கர்வம் முதலியவைகளுக்காக வெறுத்தனர். ஹென்றி போப்பைப் பயமுறுத்தி வலிக்கட்டாயப்படுத்தும் புதுநோக்கத்துடன் வேலை செய்யலானார். இதற்கு அவருக்குக் குடிகளின் ஆதரவும் அவசியம். உல்ஸியைப் பலிகொடுத்தால் அவ்வாதரவு எளிதில் அரசருக்குக் கிடைக்கலாம். 'ப்ரிமியுனைர்'[1] சட்டத்தை மீறிநடந்தார் என்று அநியாயமாக அவர் குற்றஞ் சாட்டப்பட்டார் (§ 93). ஆர்ச் பிஷப்பதவி தவிர மற்றப் பதவிகளை அவர் இழந்தார். பிறகு இராஜத்துரோகக் குற்றஞ்[2] சாட்டப்பட்டார். குற்ற விசாரணைக்காக அவர் யார்க்கிலிருந்து லண்டனுக்கு வரும் வழியில் லெஸ்டரில்[3] இறந்தார்.

உல்ஸி ட்யூடர் மன்னர்களின் 'கட்டற்ற வல்லர'சினை[4] ஆக்கியவரும்[5] அதனால் அழிந்தவரும்[6] ஆன முக்கியஸ்தருள் ஒருவர்.

## கு. 57. எட்டாம் ஹென்றி காலத்தில் ரோம் மதஸ்தாபனத்துடன் ஏற்பட்ட பிளவின் ஆறு நிலைகள்

1529. அதிக கட்டணங்கள், பன்மைப் பதவிகள்,[7] மதஸ்தாபனத்தின் உரிமைகள் முதலிய அக்கிரமங்களைத் தடுக்குஞ் சட்டங்கள்.

1532. முதலாண்டுப் பணங்களைப் பற்றிய சட்டம். இது புதிதாக நியமனமான பிஷப் முதலியவர்கள் போப்புக்கு அளிக்கும் முதலாண்டு வருமானத்தைக் கொடுக்கக்கூடாதென்று தடுத்து நிறுத்த அரசருக்கு அதிகார மளித்தது.

1533. இங்லிஷ் மதஸ்தாபனத்து நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிராகப் போப்புக்கு முறையிடுவதைத் தடுக்கும் சட்டம்.

1534. 'போப்பின் தீர்ப்புக்கு எதிராக, ஆன்பொலீனுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு அரசபட்டம் வழங்க வேண்டுமென்று கூறிய வாரிசு உரிமைச் சட்டம்.

1535. அரசரே இங்லண்ட் மதஸ்தாபனத்தின் தனித்தலைவர் என்று கூறிய தலைமைச் சட்டம்.

1. Præmunire. 2. High treason. 3. Leicester. 4. Tudor Despotism 5. Architect. 6. Victim.. 7. Pluralities.

1536. சிறிய மடங்களைக் கலைத்த சட்டம். இதனால் இந்தப் பிளவு மீண்டும் கூடுவதற்கு வகையில்லாமல் போய்விட்டது. நிலங்களை வாங்கிக்கொண்டவர்கள் அவற்றைத் திருப்பிக்கொடுத்து விட எப்போதும் இணங்கமாட்டார்கள்.

டாமஸ் க்ராம்வெல்லின் தூண்டுதலால் இந்தச் சட்டங்களை இயற்றிய பார்லமென்ட் 'சீர்திருத்த இயக்கத்தின் நீண்ட பார்லமென்ட்'[1] (1529-1536) எனப்பட்டது.

## கு. 58. தனித் தலைமைச் சட்டம்[2] (1534)

இது அரசரே நாட்டின் மதஸ்தாபனத்துக்கும் தனித்தலைவராய் இருக்க உரிமை பூண்டவர் என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. இதனால் அவருக்கு மதஸ்தாபனத்தின் சகல உரிமைகளையும் வருமானங்களையும் கௌரவங்களையும் ஏற்று அனுபவிக்க அதிகாரம் ஏற்பட்டதோடு, அதைச் சீர்திருத்தியமைக்கும் உரிமையும், அதில் தோன்றும் சீர்கேடுகளையும் அக்கிரமங்களையும் துடைத்து அதைத் தக்க வழியில் பாதுகாக்கும் பொறுப்பும் ஏற்பட்டன.

மடங்களைக் கலைத்தற்கு வேண்டிய அதிகாரமும் இதில் அடங்கியிருப்பது கவனிக்கத்தக்கது. இந்தச் சட்டத்தைத் தயாரித்த க்ராம்வெல் மனத்தில் அப்பொழுதே அவ்வெண்ணம் ஊன்றியிருந்தது என்பது இதனால் விளங்குகிறது.

## கு. 59. சர் டாமஸ் மூரின் வாழ்க்கை (1478-1535)

'ஆக்ஸ்பர்ட் சீர்திருத்தக்காரர்'களுள் ஒருவர் (கு. 55). மதஸ்தாபனத்தை ஊனமடையச் செய்த தீமைகளைக் களையவேண்டுமென்றவர். ஆயினும், அவர் அதன் கோட்பாடுகளை உறுதியாக ஆதரித்தார்; போப்பின் தலைமையையும் ஆதரித்தார்.

'புதுப் படிப்'பில் ஆர்வ மிக்கவர் (கு. 55); வாழ்க்கை நலங்களைத் துய்த்து மகிழ்ந்தவர்.

நல்ல நியாயவாதி. அரசாங்க சேவையில் அமர்ந்தார். எட்டாம் ஹென்றியின் அரிய நண்பரானார். பரந்த அறிவும் நகைச்சுவையும் செறிந்த அவர் பேச்சைக் கேட்டு அரசர் மகிழ்வார்.

யுடோப்பியா[3] என்னும் நூலை எழுதினார் (1516).

சமூகத்தில் அப்போதிருந்த சீர் கேடுகளை வெளிப்படையாக்குவதே அந் நூலின் நோக்கம். முக்கியமாக, அது வேலிகளை அமைத்ததால்[4]

1. 'The Long Parliament of the Reformation'. 2. Act of Supremacy.
3. 'Utopia'. 4. Enclosures.

இங்லண்டில் ஏழைகளுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை விவரிக்கிறது, 'புது உலகம்'[1] எனப்பட்ட அமெரிகாவுக்குச் சென்று திரும்பிய ஒருவர் அங்கு ஒரு தீவில் தாம் கண்டவற்றை விவரிக்கும் பாவனையாக மூர் இங்லண்டில் தோன்றியுள்ள நிலைமைகளுக்கு நேர் எதிரான நிலைமைகளை வருணிக்கிறார். அங்கு வகுப்பு வேறுபாடுகளில்லை ; எல்லோரும் அதிக உழைப்பின்றியே வாழ்க்கைக்கு வேண்டுவனவற்றைத் தேடிக் கொள்ளுகிறார்கள் ; டாம்பிக வாழ்க்கையின் வேண்டாத செல்வங்கள் அங்கில்லை ; ஏழ்மையில்லை ; கட்டுப்பாடான மதஸ்தாபன மில்லை ; சண்டையில்லை ; வரியில்லை ; அதிகாரஆட்சி யில்லை. (முடியரசரின் அதிகாரத்தை நிலைநாட்டுவதிலும் காதொலிக் மதஸ்தாபனத்தின் அதிகாரத்தை நிலைநாட்டுவதிலும் தம் வாழ்க்கையைக் கழித்தவர் இத்தகைய இலக்ஷியத்தைப் போதித்தது வியக்கத்தக்கதே.)

நைட்[2] ஆனார்(1521). காமன்ஸ் சபையின் தலைவராக[3] இருந்தார். அப்போது உல்ஸி ப்ரான்ஸுடன் இரண்டா முறை போர் தொடுப்பதற்காகப் பணம் வேண்டுமென்று மிரட்ட முயன்றதற்கு மூர் தலைமையின்கீழிருந்த காமன்ஸ் சபை இணங்க மறுத்தது (1523).

உல்ஸியின் வீழ்ச்சிக்குப் பிறகு லார்ட் சான்ஸெலர் ஆனார் (1529). போப்பின் அதிகாரத்தைக் குலைப்பதற்காக இயற்றப்பட்ட சட்டங்களை ஏற்றுக்கொள்ள மறுத்து (கு. 67) அவ் வுத்தியோகத்தினின்றும் விலக்கிக்கொண்டார்.

இங்லிஷ் மதஸ்தாபனத்தின் தனித்தலைவர் அரசரே என்று ஆணையிட்டுக் கூற மூர் மறுத்தார். போப்பே அதன் தலைவரென்பது அவர் அபிப்பிராயம்.(ஆயினும்,இராஜபக்தி தமக்குண்டென்று கூறவும், ஆன்பொலீன் பிள்ளைகளை அரச பட்டத்துக்கு வாரிசுகளாக ஏற்றுக்கொள்ளவும் அவர் எப்போதும் தயாராயிருந்தார்).

சிரச்சேதம் செய்யப்பட்டார்(1535). கடைசிவரைத் தெளிவாகவும் தெம்பாகவும் இருந்தார்.

அவரை அறிந்தவர்கள் அனைவரும் அவரை விரும்பி மெச்சினர். போப்பின் மதத்தலைமையை ஆதரிப்பதற்காக உயிரைக் கொடுத்தவர்களுள் மூர் மிகவும் பிரபலமானவர்.

## கு. 60. மடங்களைக் கலைத்ததன் காரணங்கள் :

சாக்குகள்[4] : (1) மடங்கள் உபயோகமாயிருந்த காலம் மாறி விட்டது (§ 97). (2) அவற்றுள் பல (முக்கியமாகச் சிறுமடங்கள்)

1. The New World. 2. Knight. 3. Speaker of the House of Commons. 4. Excuses.

சீர்கெட்டுக் கிடந்தன ; அவற்றின் துறவிகள் சோம்பேறிகளாக வும் அயோக்கியர்களாகவும் வாழ்ந்தனர். (3) அரசரின் தனித் தலைமைக்கு எதிராக அவர்கள் போப்புக்குப் பக்கபலமாகச் சதி செய்துகொண் டிருந்தனர்.

மடங்கள் சாதாரணமாகப் பிஷப்புகளின் அதிகாரத்துக்கு அடங் காமல் போப்பின் நேரதிகாரத்தின் கீழிருந்தன.

உண்மையான காரணங்கள்[1] : (1) அரசர் அவற்றின் ஏராள மான செல்வங்களைப் பெற நினைத்தார். (2) பிரபுக்களும் வர்த்த கர்களும் பெருஞ் சொத்துக்களை மலிவாக வாங்கிக்கொள்ளக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தினைக் கோரினுர்கள். (பார்லமெண்டின் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் இவ் விரு வகுப்பாரைச் சேர்ந்தவர்களே).

## கு. 61. மடங்களைக் கலைத்ததன் விளைவுகள்[2]

உடன் நிகழ்ந்த முன்விளைவுகள் : (1) பெரும் பரப்பான நிலங்கள் விலைக்கு வந்ததால் அவை மிக மலிவாகப் போயின. நடுத்தர வகுப்பினர் பலர் பெரிய பூசொத்துக்களை வாங்கிக் கொண்டு 'நிலம் படைத்த கனவான்க'ளாக[3] மாறினர். (2) அருள் யாத்திரை[4] (§ 99).

மடங்களைக் கலைக்க அதிகாரங் கொடுத்த சட்டத்தின்படி, அவற் றின் செல்வங்கள் மத விஷயங்களுக்காகவும் கல்வி விஷயங்களுக் காகவும் தரும விஷயங்களுக்காகவும் செலவிடப்பட வேண்டும். ஆயி னும், இவ் விஷயங்களுக்குச் செலவான தொகை மிகவும் சொற்பமே : சில புதிய பிஷப் வட்டங்களும்[5] பள்ளிக்கூடங்களும் அறச்சாலை களும்[6] ஏற்படுத்தப்பட்டன.

மறைமுகமாக நிகழ்ந்த பின்விளைவுகள் : (1) பழைய மடத் துறவிகளைவிட, புதிய பண்ணையாண்டைகள் புதிய முறைகளில் பயிரிடத் தொடங்கினுர்கள். ஆட்டு மந்தைகளை மேய்க்க முன் னிலும் அதிகமான நிலப்பரப்புகளுக்கு வேலியிட்டார்கள் (கு. 71); இதனுல் கிராமாந்தரங்களில் வாழ்ந்தவர்களில் பலருக்குப் பிழைப் பில்லாமல் போய்விட்டது. (2) ஏழைகளுக்கு ஐயமிட்டு ஆதரித்த மடங்கள் போன பிறகு, அவற்றின் தொண்டை எலிசபெத் காலத் தில் 'ஏழைகள் சட்டம்' (§ 115) ஏற்பட்டவரையில் எவரும் ஏற் றுச் செய்யவில்லை. (3) பிரபுக்கள் சபையிலிருந்த மடாதிபதிகள் போன பிறகு பார்லமெண்டில் மதஸ்தாபனத்துக்குச் செல்வாக்

1. Real reasons. 2. Results. 3. Landed Gentry. 4. 'The Pilgrimage of Grace'. 5. Bishoprics. 6. Almshouses.

இல்லாமல் போய்விட்டது. (4) 'நிலம் படைத்த கனவான்கள்' வகுப்பு பலப்பட்டது இதன் மிக முக்கியமான விளைவு.

வருமான மிக்க வர்த்தகர்களும் நியாயவாதிகளும் பெரிய பூசொத்துக்களை வாங்கிக்கொண்டு சமூகத்தில் மதிப்பும் பெருமையும் இராஜாங்கத்தில் முக்கியமும் பெறலாயினர். இவை நிலம் படைத்தவர்களைச் சாருதல் இயல்பே. இவ் வகுப்பினர் முன்னரே நாட்டில் மிக முக்கிய வகுப்பினராகிக்கொண்டுவந்தனர். மடங்கள் கலைந்ததால் அவர்கள் மேலும் பலப்பட்டனர். (இவ் வகுப்பினரே அடுத்த நூற்றூண்டில் மன்னரது அதிகாரத்தை அடக்கியவர்கள் என்பதை இங்குக் குறிப்பிடலாம்.)

## கு. 62. டாமஸ் க்ராம்வெல்லின் வாழ்க்கை (1485-1540)

லண்டனில் வியாபாரியாகவும் நியாயவாதியாகவும் இருந்தவர். உல்ஸியின்கீழ் அரசாங்கத்துக்காகப் பலவகைப்பட்ட கௌரவமற்ற தொழில்களைச் செய்துகொண் டிருந்தவர். நுண்ணறிவும் வாக்குச் சாதுர்யமும் படைத்தவர்; ஆயினும், ஈவு இரக்கமற்றவர்.

நியாயவாதியாகவும் ரொக்க லேவாதேவி வியாபாரம் செய்தவராகவும் இருந்ததால் வாழ்க்கையின் கோணல்களெல்லாம் அவருக்குத் தெரியும். சாமான்களுக்கு ஜாபிதா[1] தயாரித்து அவைகளை மதிப்பிடுவதில் சமர்த்தர்.

உல்ஸியின் வீழ்ச்சிக்குப் பிறகு அரசரது அபிமானத்தைத் தேடிக்கொண்டார். ஹென்றிக்குப் பல பெரிய திட்டங்களைக் கூறி அவற்றை நடை முறையில் கொண்டுவருவதற்கான அமைப்புக்களையும் தயாரித்துக் கொடுத்தார்.

போப்பின் அதிகாரத்தை நீக்கி மதஸ்தாபனத்தைத் தம் அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்று ஹென்றிக்குக் கூறியவர் அவரே; இந்தப் புரட்சியை நிறைவேற்றிய சட்டங்களைப் பார்லமெண்டில் இயற்றி வைத்தவரும் அவரே.

மதஸ்தாபனத்தின் தலைவ ரென்ற முறையில் ஹென்றி மடங்களைக் கலைத்து அவற்றின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து தம் சொந்த உபயோகத்துக்கு எடுத்துக்கொள்ளலா மென்று கூறியவர் அவரே. இது சம்பந்தமான வேலைகளை யெல்லாம் விகார்-ஜெனெரலாக[2] இருந்து கவனித்துக்கொண்டவரும் அவரே. ஹென்றி எதிர்ப்புமதக் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக் கடைப்பிடிப்பதற்கான வழிகளை க்ராம்வெல் மெதுவாகத் தேடிக் கொண்டு வந்தார். ஜெர்மனியில் லூதர்[3] கொள்கைகளைப்

1. Inventories. 2. Vicar-General. 3. Luther.

பின்பற்றிய சிற்றரசர்களுக்கும் ஹென்றிக்கும் ஒப்பந்தம் செய்து வைத்ததும், க்ளீவ்ஸ் நாட்டு ஆனுடன் கலியாணம் முடித்து வைத்ததும் இந் நோக்கங் கொண்டே யாம். ஆயினும், ஹென்றி திடுமென மனம் மாறி இந்த ஒப்பந்தத்தையும் கலியாணத்தையும் நிராகரித்து க்ராம்வெல்லைச் சிரச்சேதம் செய்துவிட்டார்(§ 100).

நாடகத்தில் நடப்பதுபோல் இதெல்லாம் திடுமென நடந்தது. இரண்டொரு மாதங்களுக்கு முன்தான் க்ராம்வெல், எசெக்ஸ் ஏர்லாகவும் லார்ட் சேம்பர்லின் ஆகவும் உயர்த்தப்பட்டார். அவர் மீது இராஜத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டது வியப்பானதே. அவர் குற்றமெல்லாம் அரசருக்கு மிகமிக உண்மையாக இருந்து அவருக்கு எவ்வகையிலும் அனுகூலமான காரியங்களைச் செய்தார் என்பதுதான். ஆயினும், ஹென்றி, உல்ஸி விஷயத்தில் நடந்ததுபோல், காரியம் முடிந்ததும், மக்கள் வெறுப்பைத் தேடிக் கொண்ட மந்திரியைப் பலியிட்டுத் தாம் நல்லவரென்று பெயரெடுத்துக் கொண்டார்.

## கு. 63. உல்ஸியும் க்ராம்வெல்லும் : ஒப்புமை

இருவரும் நடுத்தர வகுப்பினைச் சேர்ந்தவர்கள் ; 'ட்யூடர் மன்னர்களின் கட்டற்ற வல்லாட்சி'[1]யினை ஆதரித்து உருவாக்கியவர்கள். ஆயினும்,

| உல்ஸி | க்ராம்வெல் |
|---|---|
| குருமார்களுள் அரசியல் வல்லாராக இருந்தவருள் கடைசியானவர். | குருமாரல்லாதாருள் அரசியல் வல்லாராக இருந்தவருள் முதல்வர். |
| நல்ல படிப்பாளி. படிப்பினை ஊக்கியவர் (ஈப்ஸ்விச்[2] பள்ளிக்கூடமும் ஆக்ஸ்பர்டில் க்ரைஸ்ட் சர்ச் கல்லூரியும்). | (நியாயவாதியாக இருந்தாலும்) நல்ல படிப்பாளியல்லர். மடங்களைக் கலைத்ததால் படிப்பினைப் பரப்பிய இடங்களைக் கொள்ளையிட்டார். |
| வெளிநாட்டு விவகாரங்களை அந்தப்படுத்துவதில் நிபுணர். | வெளிநாட்டு விவகாரங்களைக் குழப்பிவைத்தார். இதனால் அவர் தலையே போயிற்று. |
| இங்லண்டில் போப்பின் அதிகாரத்தை அவர் பிரதிநிதியாக இருந்து செலுத்தியவர். | இங்லண்டில் போப்பின் அதிகாரத்தைக் குலைத்தவர். |
| பார்லமென்டைப் பகைத்துக் கொண்டார். கூட்டியதும் ஒன்றே. | பார்லமென்டைத் தம் விருப்பப்படி நடக்கச் செய்வதில் சமர்த்தர். பார்லமென்ட் மூலமாகத்தான் இங்லண்டை ரோம் அதிகாரத்தினின்றும் விடுவித்தார். |

1, The Tudor Despotism'. 2. Epswich.

இருவரும் அரசருக்கு (நேர்மையான வழியில் இல்லாவிட்டாலும்) மிகமிக உண்மையாக உழைத்ததால் குடிமக்களின் அளவுகடந்த வெறுப்புக்கு ஆளானார்கள்.

இருவரும் அரசருக்கு லாபமான விஷயங்களைச் செய்து அதனால் வந்த பழியைத் தாங்கிக்கொண்டார்கள்.

அவர்களால் இனி அரசருக்குப் பலனில்லை என்ற நிலை ஏற்பட்டதும், அரசர் இருவரையும் அவர்களது விரோதிகளின் ஆத்திரத்துக்குப் பலியாக்கிவிட்டார்.

## கு. 64. எதிர்ப்புமதவாதத்தின் வளர்ச்சி

எதிர்ப்புமதவாதம்[1] லூதர் முதலில் நினைத்ததற்கு(§ 90) மேலே வெகுதூரம் போய்விட்டது. பல ஜெர்மன் சிற்றரசர்கள் அதை ஆதரித்தார்கள். பழைய மதஸ்தாபனத்தின் பொருள்களைக் கொள்ளையிட அது சிலருக்கு நல்ல சாக்காயிற்று. லூதர் தன் செயல் நியாயமானதென்று வாதிக்க நேர்ந்தபோது காதொலிக் மதக்கோட்பாடுகளுள் முக்கியமான சிலவற்றை மறுக்கலானார்.

பேரரசர் ஐந்தாம் சார்ல்ஸ் (உறுதியான காதொலிக் மனப்பான்மையுள்ளவர்), காலதாமதம் செய்யாது கண்டிப்பான நடவடிக்கைகள் எடுத்திருப்பாரானால், எதிர்ப்புக் கிளர்ச்சி ஓங்கியிருக்க முடியாது. அப்போது அவர் போப்புடன் பிணக்குகொண்டிருந்தார்; அதோடு, துருக்கர் படையெடுப்பினின்றும் அவர் தம் பேரரசைக் காக்கவேண்டியிருந்தது. கடைசியில் நடவடிக்கை எடுக்க அவர் முயன்றபோது காரியம் மிஞ்சிவிட்டது. ஸ்பையர்ஸில் கூடிய மகாசபை[2]யில் (1529) அவர் தீர்மானத்தைப் பல சிற்றரசர்கள் எதிர்த்து வாதித்தனர் ('எதிர்ப்பு வாதம்' என்னும் பெயர் இவ்வாறு உண்டானதே). அவர்கள் எதிர்ப்பை அவரால் அடக்க முடியவில்லை.

சிறிது காலத்துக்குப் பிறகு ஜான் கால்வின்[3] என்ற ப்ரெஞ்சுக்காரர் காதொலிக் மதத்தை எதிர்ப்பதில் லூதரைவிடப் பல படிகள் மேலே போனார். குருமார்களிடையே பிஷப் முதலிய பதவி ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பட்டுத் தொழுவோர் கூட்டத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுக் குருமார்அல்லாதாரால் துணைசெய்யப்படும் 'மினிஸ்டர்கள்'[4] மட்டும் இருந்தால் போதும் என்பது அவர் கருத்து. இந்த விதமாக அமைந்தது 'ப்ரெஸ்பிடீரியன்' மதஸ்தாபனம் எனப்படும். 1541-ல் கால்வின் ஜெனிவாயில் இத்தகைய மதஸ்தாபனத்தை முதலில் அமைத்தார்.

1. Protestantism. 2. The Diet of Spires. 3. John Calvin. 4. Ministers.

ட்யூடர் மன்னர்கள் காலத்துச் சரித்திரத்தைத் தெளிவுடன் அறிய வேண்டுமானுல், காதொலிக் கோட்பாடுகளுக்கும் எதிர்ப்பு மதத்தினர் கோட்பாடுகளுக்குமுள்ள முக்கியமான வேற்றுமைகளை உணர வேண்டும். பொருள்மாற்றம்[1] (§ 63 கு.), ஆதிகுருக்களின் வரன்முறை[2] (§ 95) ஆகிய காதொலிக் கோட்பாடுகள் குருமார்களுக்கும்[3] குருமார் அல்லாதாருக்குமுள்ள[4] வேற்றுமையை வற்புறுத்துகின்றன. பொதுவில், காதொலிக்கர்கள் மக்கள் ஆன்மாக்கள் கடைத்தேற, மதஸ்தாபன ஏற்பாடும் அதன் ஐதிகச்சடங்குகளும்[5] இன்றியமையாதன என்று நம்புகின்றனர்; எதிர்ப்பு மதத்தினரோ மக்களுக்கும் கடவுளுக்குமிடையே இவை போன்ற எவையும் வேண்டியதில்லை என்கின்றனர். ஆகவே, காதொலிக்கர்கள் தங்கள் மத நூலையும் தியானங்களையும் லாடின் மொழியிலே வைத்திருக்க விரும்புகின்றனர்; எதிர்ப்பு மதத்தினரோ எவரும் பைபிலைத் தாமே படித்துத் தியானங்களில் கலந்துகொள்ளவேண்டுமென்னும் நோக்கத்துடன் பைபிலையும் பொதுத் தியான புத்தகத்தையும்[6] தாய்மொழியில் மொழிபெயர்த்து வைத்துக்கொண்டு உபயோகிக்கின்றனர். மற்றும், இது காரணமாகவே, காதொலிக்கர்கள் சடங்குகள் உடைகள் அணிகள் படங்கள் இன்னிசை முதலியவற்றை அதிகமாகப் பாராட்டிப் போற்றுகிருர்கள்; எதிர்ப்பு மதத்தினரோ தொழுகை[7] வேறென்றும் கலவாமல் தூயதாக இருக்கவேண்டும் என்று கருதுகின்றனர்.

## கு. 65. எட்டாம் ஹென்றி காலத்து மதச் சீர்திருத்தம்[8] மக்கள் ஆதரவைப் பெற்றிருந்தது

(1) போப்புக்கு முதற்பண மனுப்ப மறுத்துவிட்டதையும், (2) குருமார்களின் உரிமைகள் பலவற்றைப் பிடுங்கிக்கொண்டு அவர்கள் அதிகாரங்களையும் கட்டணங்களையும் குறைத்துவிட்டதையும் மக்கள் பொதுவில் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டனர்.

அரசரது தனித் தலைமையைப்பற்றி அபிப்பிராய வேற்றுமையிருந்தது; ஆயினும், அதையும் அதிக எதிர்ப்பின்றி ஒப்புக்கொண்டனர்.

எனினும், இங்லண்டில் அப்போது தீவிர எதிர்ப்புவாதிகளாக இருந்தவர்கள் மிகச் சிலரே. போப்பின் தலைமையைத் தவிர்த்து, பழைய மதக்கோட்பாடுகளையும் பழக்கங்களையும் கலையவிடக்கூடாது என்று அரசர் சொன்னதைப் பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக்கொண்டனர்.

---

1. Transubstantiation. 2. The Apostolical Succession. 3. Priests. 4. Laymen. 5. The organisation of the Church and its sacraments. 6. The Book of Common Prayer. 7. Worship. 8. Reformation.

1536-38 ஆண்டுகளில் ஹென்றி இவ்விஷயத்தைக் குறித்து உறுதி தளர்ந்திருந்தார்; ஆயினும், 1539ஓ காதொலிக் மதத்தையே அடிப்படையாகக்கொண்டு அவர் 'ஆறு மதக்கோட்பாடுகள்'[1] சட்டத்தை இயற்றி முக்கியமான காதொலிக் மதக்கோட்பாடுகளைத் தம் குடிமக்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கட்டளையிட்டார். (அதன் கண்டிதத்தை முன்னிட்டு அதற்கு 'ஆறு கயிறுகள் கொண்ட சாட்டை' என்ற பெயரும் வழங்கலாயிற்று). 'அருள் யாத்திரை'[2] இதன் விளைவு (§ 99).

ஆயினும், பலர் மடங்கள் போனதைக் குறித்து வருந்தினர்கள். க்ராம்வெல்லின் ஆணையின்மேல் மடத்துறவிகள் ஈவு இரக்கமின்றிக் கொள்ளையிடப்பட்டுத் தங்க இடமின்றித் தவிக்க நேர்ந்தது பலருக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது.

## கு. 66. எட்டாம் ஹென்றியின் கலியாணங்களும் அவற்றின் இராஜீய விளைவுகளும்

(1) ஆரகன் நாட்டுக் காதரீன் (1509-'33). கலியாணம் ரத்து செய்யப்பட்டது. 1516-ல் மேரி என்ற ஒரு பெண் பிறந்தாள்.

இக்கலியாணத்தால் ப்ரான்ஸுக்கு விரோதமாக ஸ்பெயினுடன் உறவு ஏற்பட்டது. 1525 வரை இவ்வுறவு கலையாதிருந்தது.

(2) ஆன் போலீன் (1533-'35). இராஜத் துரோகத்துக்காகச் சிரச்சேதம் செய்யப்பட்டாள். 1535-ல் எலிசபெத் என்ற ஒரு பெண் பிறந்தாள்.

இக் கலியாணத்தால் போப்புடன் பிளவு ஏற்பட்டது.

(3) ஜேன் சேய்மூர் (1535-'36). இறந்தாள். 1536-ல் ஆறும் எட்வர்ட் பிறந்தார்.

போப்புடன் நெருக்கத்தில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து ஹென்றி எதிர்ப்பு வாதத்தில் எவ்வளவு தூரம் போவாரோ என்ற சந்தேகம். சேய்மூர் குலத்தினர் தீவிர எதிர்ப்பு மதத்தினர்.

(4) க்ளீவ்ஸ் நாட்டு ஆன் (1540). கலியாணம் ரத்து செய்யப்பட்டது. குழந்தைகளில்லை.

போப்பை ஆதரிக்க பிரான்ஸும் ஸ்பெயினும் ஒன்று சேர்ந்து இங்லண்ட்மீது மதப்போர் தொடுக்கலாம் என்று ஹென்றிக்கு க்ராம்வெல் எச்சரித்து, அவர்களுக்கு எதிராக ஜெர்மனியில் லூதர் கொள்கைகளை ஆதரிப்பவர்களான சிற்றரசர்களோடு உறவுகொள்ள வேண்டுமென்றதற்கு, ஹென்றி அரை மனதுடன் ஒப்புக்கொண்டார்.

1. The Six Articles of Religion. 2. The Pilgrimage of Grace.

ஆயினும், (1) ப்ரான்ஸூம் ஸ்பெயினும் மறுபடியும் ஒன்றை யொன்று பகைத்துக்கொண்டதனால் இவ்வுறவு அவசியமாகத் தோன்றவில்லை; (2) ஹென்றிக்கு ஆன் பிடிக்கவில்லை. ஆகவே, அவர் எல்லாவற்றையும் நிராகரித்துவிட்டு க்ராம்வெல்லைத் தலைவாங்கி விட்டார்.

(5) காதரீன் ஹவர்ட் (1540-1542). இராஜத் துரோகத் துக்காகத் தலைவாங்கப்பட்டாள். பிள்ளைகளில்லை.

எதிர்ப்பு வாதத்துக்கு விரோதமாக ஹென்றி பிற்பாடு நடந்து கொண்டது இந்தக் கலியாணத்தின் விளைவே எனலாம். ஹவர்ட் குலத்தினர் உறுதியான காதொலிக் கொள்கையினர்: சேய்மூர் குலத் தினரின் விரோதிகள்.

(6) காதரீன் பார் (1543). ஹென்றி இம்மனைவிக்கு முன் இறந்துவிட்டார். பிள்ளைகளில்லை.

இக்கலியாணத்தின் இராஜீய விளைவு ஒன்றுமில்லை. இவள் முன்பே விதவை; இவள் அரசரின் அந்திய காலத்தில் அவரைப் பராமரிக்கலானாள்.

## கு. 67. முதல் இரண்டு ட்யூடர் மன்னர்கள் காலத்தில் ஸ்காட் லண்டுடன் தொடர்பு

முதல் எட்வர்ட் காலத்திலிருந்து இங்லண்டுக்கு விரோதமாக ஸ்காட்லண்ட் அடிக்கடி ப்ரான்ஸுடன் உறவு கொண்டது(§ 50). இதனால் எல்லைப்புற நாடுகளில் அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன.

இந்தப் பகை பதினாறும் நூற்றாண்டின் முன்பாதியிலும் தொடர்ந்துவந்தது. இதை நிறுத்தும் எண்ணத்துடன் ஏழாம் ஹென்றி தம் மகள் மார்கரெட்டை நான்காம் ஜேம்ஸுக்குக் கலியாணஞ் செய்துகொடுத்தார் (§ 85); ஆயினும், எட்டாம் ஹென்றி தம் ஆட்சிக்காலத்தின் தொடக்கத்தில் ப்ரான்ஸின்மேல் போர் தொடுத்தபோது (§ 88) ஸ்காட்லண்டார் இங்லண்ட்மீது படையெடுத்து வந்து ப்ளாடேன்[1] களத்தில் தோற்றனர் (1513). மீண்டும் அவர் ப்ரான்ஸுடன் பகைமை பாராட்டியபோது ஸ்காட்லண்டார் மற்றொரு முறை இங்லண்ட்மீது படையெடுத்து வந்து சால்வே மாஸ்[2] களத்தில் தோற்றனர் (1542). இதற்கப்பால் ஐந்தாம் ஜேம்ஸ் இறக்க, அவர் பெண் குழந்தை மேரி 'ஸ்காட் மக்கள் அரசி' ஆனாள்.

சால்வே மாஸில் கைதியான ஸ்காட் பிரபுக்களை ஹென்றி க்ரீனிச் உடன்படிக்கை[3] (1543) என்ற ஒரு ஏற்பாட்டுக்கு

1. Flodden. 2. Solway Moss. 3. Treaty of Greenwich.

இணங்கும்படி செய்தார். அதாவது, எட்வர்ட் இளவரசருக்கு மேரி இராணியைக் கலியாணம் செய்து வைத்து இரு நாடுகளையும் ஒன்றாக்குதலே. ஆயினும், இவ்விதம் நடந்தால் இங்லண்டுக்கு ஸ்காட்லண்ட் அடங்கிப்போகவேண்டுமே என்று பயந்த ஸ்காட் மக்கள் அவ் வுடன்படிக்கைப்படி நடக்க மறுத்தனர்.

## கு. 68. முதல் இரண்டு ட்யூடர் மன்னர்கள் காலத்தில் அயர்லண்டோடு தொடர்பு

இங்லிஷ் மன்னர்கள் நெடுங்காலமாக அயர்லண்டும் தம் ஆதிபத்தியத்தின்கீழ் அடங்கியதே என்று கூறியபோதிலும், அவர்கள் அதிகாரம் அங்கு மிகக் குறைந்த அளவில்தான் சென்றது (§§ 32, 68).

ஏழாம் ஹென்றி சர் எட்வர்ட் பாய்னிங்ஸ்[1] என்பவரை 'லார்ட் டெபுடி'[2] என்னும் பட்டத்துடன் தம் பிரதிநிதியாக அனுப்பினார். அவர் தூண்டுதலால் அயர்லண்ட் பார்லமென்ட் பாய்னிங்ஸ் சட்டங்களை[3] இயற்றியது (1494). அவற்றின்படி, (1) இங்லிஷ் மன்னர் கட்டளையின்றி அயர்லண்ட் பார்லமென்ட் கூடக்கூடாது; (2) இங்லிஷ் மன்னர் அனுமதியின்றி அதில் எந்தச் சட்டமும் விவாதிக்கலாகாது.*

கில்டேர் ஏர்ல்கள்[4] நாட்டின் பெரும்பாகத்தில் அநேகமாகத் தம்மிச்சையாக ஆள ஆரம்பித்தார்கள். எட்டாம் ஹென்றி அவர்கள் அதிகாரத்தைக் குலைத்தார். இராஜத்துரோகத்துக்காக அக் குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் சிரச்சேதம் செய்யப்பட்டனர். அயர்லண்ட் பார்லமென்ட் அவருக்கு 'அயர்லண்ட் பிரபு' என்னும் பட்டத்துக்குப் பதில் 'அயர்லண்ட் மன்னர்' என்னும் பட்டத்தை அளித்து அவர் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டது. அவர் இங்லண்டில்போல் அயர்லண்டிலும் மடங்களைக் கலைத்து அயர்லண்ட் மதஸ்தாபனத்தின் தலைவரானார்†.

## கு. 69. முதல் இரண்டு ட்யூடர் மன்னர்கள் காலத்துக் கப்பற் படை.

'ராயல் நேவி'[5] எனப்படும் தற்போதைய கப்பற்படை ஏழாம் ஹென்றி காலத்தில்தான் ஆரம்பித்தது. அவர் (1) ஆறு

*இந்தச் சட்டங்கள் மூன்று நூற்றாண்டுகள் நடைமுறையி லிருந்தன.

†மடங்களின் நிலங்களை விநியோகஞ்செய்து, அவர் இதற்கு அயர்லண்ட் பிரபுக்களின் ஆதரவைப் பெற்றார்.

1. Sir Edward Poynings. 2. Lord Deputy. 3. Pcynings' Laws.
4. The Earls of Kildare. 5. The Royal Navy.

சண்டைக் கப்பல்கள் கட்டினர்; (2) போர்ட்ஸ்மத்தில்[1] அரசரது கப்பல்களைக் கட்டுவதற்கென்று ஒரு கப்பல்கட்டுந்துறையை[2] அமைத்தார்; (3) கப்பல் கட்டுவதற்கு நீரில்லாது உலர்ந்துள்ள ஒரு துறையையும் அமைத்தார்; (4) வியாபாரக் கப்பல்களின் தொகை பெருகவேண்டுமென்னும் நோக்கத்துடன், புதுக் கப்பல்கள் முதல் முதல் நெடுந்தூரம் 'ஏற்றிக்கொண்டுபோகும் சரக்குகளுக்கு வரிவாங்கக்கூடாது என்று திட்டஞ் செய்தார்.

எட்டாம் ஹென்றிக்குப் கப்பற்படையில் ஊக்க மதிகம். அவர் (1) புது மாதிரிக் கப்பல்களைக் கட்டி அவற்றைத் தாமே ஓட்டுவதில் பெருமை கொண்டார்; (2) 'கிரேட் ஹாரி'[3] என்னும் பெயர் கொண்ட மிக அழகிய கப்பலொன்றைக் கட்டினர்; (3) மேல் தட்டுகளில் சார மேடைகளின்மீது வைத்துச் சுட்ட பழைய இலேசான பீரங்கிகளுக்குப் பதிலாகப் பக்கத் துளைகளின் மூலம் சுடும் கனமான பீரங்கிகளைக் கப்பல்களில் அமைக்க ஏற்பாடு செய்தார்;*(4) கப்பல்படைத் தலைவர் சபையையும்[4] ஊலிச் போர்த் தளவாடச் சாலையையும்[5] நிறுவினர்; (5) இராச்சியத்துக்கு எண்பத் தைந்து கப்பல்கள் கொண்ட ஒரு பெரிய கப்பற்படையைச் சேர்த்து வைத்தார்.

## கு. 70. ஆரும் எட்வர்டின் குணமும் அவர் ஆட்சியின் தன்மையும்

பட்டஞ் சூடியபோது அவருக்கு ஒன்பது வயதே; இறந்த போது பதினைந்து. நலிமிகுந்த உடலும் பிஞ்சில் பழுத்த மூளையும். மத விசாரணையில் அதிக ஊக்கம். எதிர்ப்புமதவாதத்தில் முழு நம்பிக்கை: இது அவர் தாய்வழியினரின் (சேய்மூர் குலம்) சேர்க்கை வாசனையாலும் நார்தம்பர்லண்டின் செல்வாக்காலும் இருக்கலாம் (§ 105).

முதல் இரண்டரை வருஷங்களில் (1547-1549) துரைத்தனம் எட்வர்டின் அம்மான் சாமர்செட் ட்யூக்கின் பார்வையிலிருந்தது. அவர் 'காப்பாளர் பிரபு'[6] என்னும் பட்டம் வைத்துக்கொண்டார்.

*இதனால் சண்டைக்கப்பல்கள் தூரத்திலிருந்தே ஒன்றையொன்று சுடும் போர்முறை தொடங்கியது. இதற்கு முன் அவை ஒன்றையொன்று மோதி நிற்க, ஒன்றின் வீரர்கள் மற்றொன்றின் தட்டின்மீது குதித்துப் போரிட்டனர்.

1. Portsmouth. 2. Dockyard. 3. 'Great Harry'. 4. Board of Admiralty. 5. Woolwich Arsenal. 6. Lord Protector.

கடைசி மூன்றரை வருஷங்களில் துரைத்தனம் நார்தம்பர்லண்ட் ட்யூக்காகிய ஜான் டட்லியின் பார்வையிலிருந்தது. இருவரும் எதிர்ப்புமதவாதிகள் என்று சொல்லிக்கொண்டு மதஸ்தாபனத்தைக் கொள்ளையிட்டுப் பணக்காரராயினர்.

இவ்வாட்சியின் முக்கிய நிகழ்ச்சி இங்லிஷ் மதஸ்தாபனம் வெளிப்படையாக எதிர்ப்புக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டதே யாம். (எட்டாம் ஹென்றி போப்பின் ஆதிக்கத்தை நீக்கிவிட்ட போதிலும், நம்பிக்கையளவில் காதொலிக்மதக் கொள்கைகளையே ஆதரித்தார்).

## கு. 71. ட்யூடர் மன்னர்கள் காலத்தில் பொருளாதார சம்பந்தமான தொந்தரவுகள்

(1) பயிர் நிலங்களை மேய்ச்சல் நிலங்களாக மாற்றியது. இடைக்காலத்துப் பயிர்த்தொழில் முறை 'கருஞ்சாவு'க்குப்[1] (1349) பிறகு சீர்குலைந்தது. கம்பள ஆடைகள் இப்போது இங்லண்டிலும் நெய்யப்பட்டன. ஆகவே, ஆட்டுமயிருக்கு இங்லண்டிலும் நெதர்லண்ட்ஸிலும் நல்ல விலை கிடைத்ததால், பயிர்த்தொழில் ஆட்டு மந்தைகளை வளர்த்தல் போல் அவ்வளவு லாபங் கொடுக்கவில்லை. இதைக் கருதி நிலம் படைத்தவர்களுள் பலர் தங்கள் பயிர் நிலங்களில் புல் வளரவிட்டு ஆட்டு மந்தைகளை விருத்தி செய்ய லாயினர். ஆடுகளை மேய்த்தலுக்கு அதிக ஆட்கள் தேவையில்லை யாதலால், அநேக ஆட்களுக்கு வேலையில்லாமல் போய் விட்டது.

சர் டாமஸ் மூர் தமது யுடோப்பியாவில்[2] (கு. 59) இத்தீமையைக் குறித்து வருந்தியுள்ளார். எட்டாம் ஹென்றி இத்தீமையை நிறுத்தச் சட்டமியற்றினரேனும், அதை நடைமுறையில் கொண்டுவர உத்தியோகஸ்தர்களை நியமிக்கவில்லை.

(2) ஏழைகள் தத்தம் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு வந்த கிராமச் சமுதாயங்களையும் (பொது நிலங்களையும்) புறம் போக்குகளையும் நிலம் படைத்தவர்களுள் வன்மை மிக்கவர்கள் பலர் தங்கள் சொந்த நிலங்களோடு வேலியிட்டு வளைத்துக் கொண்டு ஆட்டு மந்தைகள் வளர்க்கலாயினர்.

ஆடுகள் ஓடிவிடாதபடி நிலங்களுக்கு வேலியிட வேண்டியது அவசியமாயிற்று. எட்டாம் ஹென்றியும் சாமர்செட்டும் இதை நிறுத்த வீணில் முயன்றூர்கள். செல்வாக்கு நிறைந்த மக்களுள் பலர் இதனுல் அதிக லாபமடைந்தனர். இந் நிலைக்குக் கண்டனமாகத்தான் கெட்[3] கலகம் தோன்றியது (§ 104).

1. The Black Death. 2. Utopia. 3. Ket.

(3) மேற்கூறிய இரு காரணங்களால் நாட்டுப் புறங்களில் வேலையற்றுக் கிடந்த மக்கள் பட்டணங்களை நாடி வந்து பல தொழில்களைச் செய்து பிழைக்கலாயினர். இடைக்காலத்துத் திட்டப்படித் தொழில்மாணவர்களாக[1] இருந்து பயிலாமலேயே இவர்கள் பல தொழில்களைச் செய்ய முயன்றதால், இவர்களால் பட்டணங்களில் முறைப்படித் தொழில் பயின்றவர்களிடையில் வேலையில்லாத் திண்டாட்டமும் பலவித குழப்பங்களும் தோன்றலாயின.

(4) மடங்கள் கலைந்ததால் அவற்றின் நிலங்கள் வியாபாரத்தில் பணஞ் சம்பாதித்த நடுத்தர வகுப்பினர் வசமாயின ; அவர்கள் புது முறையில் பண்ணைத் தொழில்[2] நடத்தலாயினர். மடத்துறவிகள் ஏழைகளுக்குக் கொடுத்துக்கொண் டிருந்த ஐயம் முதலிய உதவிகள் நின்றுவிட்டன. மடத்துறவிகளே ஆயிரக்கணக்கில் வேலையற்றோர் கூட்டத்தைப் பெருக்கினர்.

(5) பெருவிலும் மெக்ஸிகோவிலும் பொன் வெள்ளிச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால், யூரோப்பிய நாடுகளில் பொன் வெள்ளி நாணயங்கள் அதிகமாகச் செலாவணியில்[3] இருந்தன. இதனால் பண்டங்களின் விலைகள் ஏறிக் கூலிப்பணத்தின் மதிப்பைக்[4] குறைத்தன.

கூலிகளும் ஏறியபோதிலும் விலைகளைப்போல் அவ்வளவு அதிகமாக ஏறவில்லை. 1500-ல் ஒரு குவார்டர்[5] அளவு கோதுமை 4 ஷில்லிங்குக்குக் கிடைத்தது ; 1550-ல் அதே அளவு கோதுமையின் விலை 8 ஷில்லிங்; 1600-ல் 20 ஷில்லிங். அவ் வருஷங்களில் ஒரு கூலியாளின் சராசரி வாரக் கூலி முறையே 3, 4, 5 ஷில்லிங்குகளே.

(6) நாணயங்களின் மதிப்பைக் குறைத்தல்[6]. துரைத்தனத்தார் தங்கள் கடன்களை மதிப்பு குறைந்த நாணயங்களைக் கொண்டு கொடுக்கலாயினர். அதனால் வியாபாரம் முட்டுப்பட்டது. எந்த நாணயத்துக்கும் சரியான மதிப்பு எதுவென்று தெரியாமலிருந்தது. வெளிநாட்டு வியாபாரிகள் மதிப்பு குறைந்த நாணயங்களை வாங்க மறுத்தனர்.

## கு. 72. நார்தம்பர்லண்டின் குணமும் வாழ்க்கையும்

முதலில் வாரிக் ஏர்லாகவிருந்த ஜான் டட்லி பிறகு நார்தம்பர்லண்ட் ட்யூக் ஆனார். இவர் ஏழாம் ஹென்றியின் பணம் பிடுங்கி மந்திரியாக இருந்தவரின் மகன்(§ 85). பாதுகாப்புச் சபையில்[7]

1. Apprentices. 2. Farming. 3. Circulating. 4. The value of wages. 5. Quarter. 6. Debasement of coinage. 7. Regency Council.

சாமர்செட்டின் விவசாய சீர்திருத்தங்களை(§ 104) எதிர்த்து நின்ற கட்சியினரின் தலைவர். (இவர்களே அக்கிரமமாக நிலங்களுக்கு வேலியிட்டார்கள்). கெட் கலகத்தைத் தாமே அடக்கிக் காவலர் பிரபுவை அப் பதவியினின்றும் இறக்கித் தாமே அதில் அமர்ந்து பிறகு அவரைச் சிரச்சேதஞ் செய்வித்தார்.

சாமர்செட்டுக்கு நேர் எதிர்.—தைரியமாகக் காரியங்களைச் செய்யக் கூடியவர்; ஆனால், மனச்சாட்சியற்றவர். தீவிரமான எதிர்ப்புமதவாதியென்று பாசாங்கு பண்ணி இளமன்னரது நம்பிக்கையைப் பெற்றார். அவரது உண்மை நோக்கம் மதஸ்தாபனத்தைக் கொள்ளையிடலே.

அவரது திராணியற்ற செயல்களாலும் அயோக்கியத் தனத்தாலும் துரைத்தனம் சீர்கேடுற்றது. (1) நிலங்களுக்கு வேலியிடுதலை ஆதரித்ததாலும், (2) 'சான்ட்ரீஸ்'[1] என்னும் சிறு கோவில்களைக் கலைத்ததாலும், (3) முன்னிலும் கேவலமாக மதிப்புகுறைந்த நாணயங்களை உபயோகப்படுத்தியதாலும், ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் வாழ்வுகுலைந்து கெட்டனர்.

'சான்ட்ரீஸ்' என்னும் சிறு கோயில்களைக் கலைத்ததால், மடங்கள் கலைந்ததால் ஏற்பட்ட கஷ்டங்களைவிட அதிக கஷ்டங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்; மிகமிக ஏழை மக்கள் பலர் இதனால் துன்புற்றனர்.

ஆரும் எட்வர்ட் இறந்ததும் நார்தம்பர்லண்ட் தம் மருமகளான ஜேன் கிரே சீமாட்டியைச் சிம்மாசனத்தில் அமரவைக்க முயன்றார். ஆயினும், நாட்டினர் நியாயமான வாரிசான மேரி இளவரசியை ஆதரித்தனர்(§ 106). நார்தம்பர்லண்ட் சூழ்ச்சி பலிக்கவில்லை. அவர் தோல்வியுற்றுக் கைதியாகிச் சிரச்சேதமுண்டார்.

## ரு. 73. மேரி அரசியின் குணமும் அவள் ஆட்சியின் தன்மையும்

அவள் வாழ்க்கை முழுமையும் காதொலிக் மதத்தில் ஆழ்ந்திருந்தது: தன் தாய் அதற்காகத் தியாகஞ் செய்தவள்[2] என்பது அவள் நம்பிக்கை. போப்பின் ஆணையின்கீழ் மீண்டும் இங்லண்டைக் கொண்டுவரவேண்டுமென்பது அவள் பேரவா. தாய் வழியில் ஸ்பானிஷ் ரத்தம் பெற்றவள். தன் உறவினனான, இரண்டாம் பிலிப்பைக் கலியாணம் செய்துகொண்டாள்.

அவள் பட்டத்துக்கு வந்தபோது குடிமக்கள் அவளை மிக்க ஆர்வத்துடன் ஆதரித்தனர் (§ 106); ஆயினும், விரைவில் அவள்

1. Chantries. 2. Martyr.

அவர்களது அன்பான ஆதரவை இழந்தாள். இதன் காரணங்களாவன: (1) (முக்கியமாக) அவள் கலியாணம். இதனுல் நாட்டின் சுதந்தரமே போய்விடும்போ லிருந்தது. (2) (குறைந்த அளவில்) எதிர்ப்பு வாதிகளை அவள் ஒறுத்தது.[1] (3) (அவள் ஆட்சியின் கடைசி ஆண்டில்) காலியை[2] இழந்தது.

## கு. 74. ட்யூடர் குலத்து மேரியும் ஸ்டூவர்ட் குலத்து மேரியும்: ஒப்புமை

| ட்யூடர் குலத்து மேரி | ஸ்டூவர்ட் குலத்து மேரி |
| --- | --- |
| தாய் வழியில் ஸ்பானிஷ் ரத்தம் கொண்டவள். (தாய், ஆரகன் நாட்டுக் காதரீன்). | தாய் வழியில் ப்ரெஞ்சு ரத்தம் கொண்டவள். (தாய், கைஸ் நாட்டு மேரி[3].) |
| இங்லண்டின் அரசி. | ஸ்காட்லண்டின் அரசி. |
| தாயின் குலத்தில் கலியாணம் செய்துகொண்டாள் (ஸ்பெயின் இளவரசரை). | தாயின் குலத்தில் கலியாணம் செய்துகொண்டாள் (ப்ரான்ஸ் இளவரசரை). |
| இங்லண்ட் துரைத்தனத்தில் ஸ்பானிஷ் காதொலிக்கர் செல்வாக்கு வலுத்தது. | ஸ்காட்லண்ட் துரைத்தனத்தில் ப்ரெஞ்சு காதொலிக்கர் செல்வாக்கு வலுத்தது. |
| கணவர் இரண்டாம் பிலிப் என்னும் பட்டத்துடன் ஸ்பெயின் மன்னரானுர். | கணவர் இரண்டாம் ப்ரான்ஸிஸ் என்னும் பட்டத்துடன் ப்ரான்ஸ் மன்னரானுர். |
| பிள்ளை பிறந்திருந்தால், இங்லண்ட் ஸ்பெயின் இராச்சியத்தில் அடங்கிவிட்டிருக்கும். | பிள்ளை பிறந்திருந்தால், ஸ்காட்லண்ட் ப்ரான்ஸ் இராச்சியத்தில் அடங்கிவிட்டிருக்கும். |
| பிள்ளையில்லை. மேரி இறந்து விட்டாள். | பிள்ளையில்லை. ப்ரான்ஸிஸ் இறந்து விட்டார். |
| ஸ்பெயினுக்குக் கீழ்ப்படியாமல் இங்லிஷ் மக்கள் தீவிரமாக எதிர்ப்புமத வாதத்தை ஆதரித்தார்கள் (§ 114). | ப்ரான்ஸுக்குக் கீழ்ப்படியாமல் ஸ்காட்லண்ட் மக்கள் தீவிரமாக எதிர்ப்புமத வாதத்தை ஆதரித்தார்கள் (§ 112). |

1. Persecution. 2. Calais. 3. Mary of Guise.

குறிப்பு

இங்லண்டும் ஸ்காட்லண்டும் வெளிநாட்டுக் காதொலிக் மன்னரொருவரால் தாக்கப்படலாம் என்னும் உண்மை இரு நாடுகளையும் பல நூற்றுண்டுகளின் பகைமைக்குப் பிறகு ஒன்றுசேர வைத்தது; மேரி ஸ்டுவர்ட்டின் மகன் ஜேம்ஸ் மன்னர் இருநாட்டின் முடிகளையும் ஒருங்கே சூடிக்கொண்டார் (1603).

## கு. 75. மேரி எதிர்ப்புவாதத்தினரை ஒறுத்ததற்குச்[1] சமாதானம்

(1) 'மத விஷயங்களில் பொறை'[2] என்பதை அக்காலத்தவர் அறியார்; நாட்டினருள் ஒற்றுமையை (மதநம்பிக்கைகளிலும்) உண்டாக்க வேண்டியது துரைத்தனத்தார் கடமை என்று அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

'சுவர்க்கத்துக்குப் பல வழிகளுண்டு' என்பதை மக்கள் அப்போது உணர்ந்திருந்தால் 'ஒரே வழியில்'[3] நம்பிக்கை வைத்துத் தங்கள் மதத்துக்காக உயிரையும் துறக்கத் துணிந்த மதத்தியாகிகள் தோன்றியிரார்.

(2) மேரியாகட்டும் பானர்[4] போன்ற காதொலிக் பிஷப்புகளாகட்டும் இயற்கையில் கொடூர குணம் படைத்தவர்களல்லர். நரகத்து நிரந்தர அவஸ்தையினின்றும் தம் குடிகளைக் காக்க வேண்டியது தன் கடமையென்று அரசி நம்பினுள்.

விசாரணைகளை நடத்திய பிஷப்புகள் குற்றவாளிகளைத் தம் தப்பு நம்பிக்கைகளை விட்டுவிட்டுப் பழைய நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறு செய்ய எவ்வளவோ முயன்று பார்த்தார்கள்.

(3) மூன்று வருஷங்களுள் (1555-58) முந்நூறு பேர் தீக்கிரையானது நமக்குக் கொடூரமாகத் தோன்றலாம்; அக்காலம் மற்ற நாடுகளில் காணப்பட்ட மத ஒறுத்தலோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது எவ்வளவோ கொஞ்சமென்பது புலப்படும்.

மேரியின் வாழ்க்கையைக் கருதியும் இதற்குச் சமாதானம் கூறலாம். தன் தாயை நடத்திய விதத்திஞல் அவளது இளமையிலேயே அவள் துன்பமனுபவித்தாள். இப்போது உடல்நலங் குறைந்ததாலும் கணவனது அசட்டையாலும் அவள் வாழ்க்கை இன்பமற்றுக் கிடந்தது.

## கு. 76. டாமஸ் க்ரான்மரின் வாழ்க்கை (1489-1556)

கேம்பிரிட்ஜ் படிப்பாளி—மதவாதத்தில் தேர்ந்தவர். எட்டாம் ஹென்றியின் மறு கலியாணத்துக்குப் போப்பின் அனுமதி வேண்

1. Persecution. 2. Toleration. 3. 'The only way'. 4. Bonner.

டியதில்லை என்றவர் (§ 93). இதை இவரே நிறைவேற்றித் தரட்டுமென்று எட்டாம் ஹென்றி இவரைக் கான்டெர்பெரி ஆர்ச் பிஷப் ஆக்கினர். டன்ஸ்டபிலில்[1] மதஸ்தாபனத்து நீதிமன்றம் ஒன்றைக் கூட்டி ஹென்றிக்கும் காதரீனுக்கும் எப்போதும் சட்டப் படி கலியாணம் நடந்ததில்லை என்று தீர்ப்புக் கூறினர் (1533).

எப்போதும் தாம் நினைப்பது சரியா வென்னும் சந்தேகங் கொள்பவர். நாளோட ஓட இவர் மனம் எதிர்ப்பு வாதத்தில் ஊன்ற லாயது. இவர் சீர்திருத்த நெறியில் நெடுந்தூரம் போகாததால் எட்டாம் ஹென்றியின் கோபத்துக்கு ஆளாகவில்லை. அவ்வரச ருக்கு இவரிடம் நல்ல மதிப்புண்டு.

ஆறும் எட்வர்ட் காலத்தில் இவர் சந்தேகமற்ற எதிர்ப்புமத வாதியானர். இரண்டு தியான புத்தகங்களைத்[2] திரட்டி மிக அழ கான இங்லிஷ் உரைநடையில் மொழிபெயர்த்தார் (§ 101).

மேரி காலத்தில் ஆக்ஸ்பர்டில் லாடிமர், ரிட்லி என்பவர்க ளோடு இவரையும் மதவிரோதியெனத் தீர்மானித்தார்களேனும், இவரை உடனே கொளுத்திவிடாது தமது தப்பை ஒப்புக்கொண்டு[3] பழைய மதத்தைத் தழுவிக்கொள்ள அவகாசம் கொடுத்தனர் காதொலிக் மதத்துக்கு இது ஒரு பெரிய வெற்றியாகும். அவரைக் கொளுத்த ஏற்பாடாயிருந்த தினம் அவர் வெளிப்படையாக எல் லோர் முன்னிலையிலும் தம் தப்பை ஒப்புக்கொள்ளப் போவதாகக் கூறினர்கள். ஆயினும், எல்லோரும் வியக்க அவர் தம் எதிர்ப்பு வாதத்தையே ஆணித்தரமாகக் கூறினர். எதிர்ப்பு வாதத்துக்கு அவர் வாழ்க்கையைவிட அவர் இறப்பே மிக்க உர மூட்டியது (§ 110).

டன்ஸ்டபில் தீர்ப்பு—இங்லிஷ் தியான புத்தகம்—எதிர்ப்பு வாதத் தியாகி[4].

---

1. Dunstable. 2. Prayer Books. 3. Recant. 4. Protestant martyr.

## மூன்ரும் பகுதியில் பரிசைஷ வினுக்கள்

1. ஏழாம் ஹென்றியின் ஆட்சிக்காலம் இங்லண்ட் சரித்திரத்தில் ஒரு புது யுகத்தின் தொடக்கமாகின்றது என்பது எக்காரணங்களால் ?

2. ஏழாம் ஹென்றி சிம்மாசன மேறியபோது அவர் முன் நின்ற கஷ்டங்கள் எவை ? அவற்றை எவ்வகையில் முன்காலத்துச் சேஷங்கள் எனலாம் ?

3. ஏழாம் ஹென்றியின்கீழ் மன்னரதிகாரத்தின் தன்மை எவ்விதங்களில் மாறியது ?

4. பதினைந்தாம் நூற்ருண்டின் முடிவில் 'தற்காலத்துச் சரித்திரம்'[1] தொடங்குகிறது என்று பொதுப்படக் கூறுகிருேம். ஏழாம் ஹென்றி அப்போது நடந்துகொண் டிருந்த மாறுதல்களின் முக்கியத்தை எவ்வகையில் உணர்ந்தார் ? எவ்வகையில் அவர் 'தற்காலத்து இங்லிஷ் அரசியல் நிபுணர்களுள் முதல்வர்'[2] என்னும் பட்டத்துக்கு உரியவராவார் ?

5. (a) அச்சடித்தல் முறையாலும், (b) ஆக்ஸ்பர்ட் சீர்திருத்தக்காரர் வேலையாலும் இங்லிஷ் மக்களின் அறிவியல் வாழ்க்கையில்[3] என்ன விளைவுகள்[4] நேர்ந்தன ?

6. 'ரினேசன்ஸ்'[5] இயக்கத்தால் இங்லண்டில் நேர்ந்த முக்கிய விளைவுகள் எவை ? அது எவ்வகையில் மதச் சீர்திருத்தத்துக்கு[6] வழி உண்டாக்கியது ?

7. 'புதுப்படிப்பு'[7] என்பதென்ன ?

8. 'ஏழாம் ஹென்றியின் வெளிநாட்டு விவகாரத் திட்டத்தையே உல்ஸி அநேகமாகப் பின்பற்றினர்' என்பது உண்மையா ? காரணத்துடன் பதிலுரைக்க.

9. (a) சர் டாமஸ் மூர், (b) எராஸ்மஸ், (c) மார்ட்டின் லூதர், (d) எட்டாம் ஹென்றி—இவர்கள் ஒவ்வொருவரும் எதிர்ப்புவாதச் சீர்திருத்தத்தில் என்ன அபிப்பிராயங் கொண்டிருந்தார்கள் ?

10. 'ட்யூடர் மன்னர்களது கட்டற்ற வல்லரசு'[8] என்பதென்ன ? எட்டாம் ஹென்றியின் ஆட்சியிலிருந்து இதற்கு உதாரணங் கூறுக.

11. ஏழாம் ஹென்றியால் இங்லண்டுக்கு ஏற்பட்ட நன்மைகளை எட்டாம் ஹென்றியால் ஏற்பட்டவைகளோடு ஒப்பிடுங்கள்.

---

1. Modern History. 2. 'First of Modern English Statesmen'. 3. Intellectual life. 4. Effects. 5. The Renaissance. 6. The Reformation. 7. 'The New Learning'. 8. The Tudor Despotism.

12. 'பெருந்தன்மையும் விசாலஅறிவும் தாராளமனதும் கொண்ட அரசர்'; 'தன் வன்மையை அறியாதிருக்க வேண்டிய சிங்கம்' என்று சர் டாமஸ் மூர் எட்டாம் ஹென்றியைப் பற்றிக் கூறியதன் உண்மை யென்ன?

13. 'மதச் சீர்திருத்தம்'[1] என்னும் தொடர்மொழி மதஸ்தாபனத்தில் எட்டாம் ஹென்றி செய்த மாறுதல்களுக்குப் பொருந்துமா?

14. நாட்டுக் கனவான்களின்[2] ஆதரவை முதல் இரண்டு ட்யூடர் மன்னர்கள் எம் முறைகளால் தேடிக்கொண்டார்கள்?

15. எட்டாம் ஹென்றி காலத்தில் இங்லண்டில் நிகழ்ந்த 'மதச்சீர்திருத்தம்' எவ்வகையில் மதத்தைப் பொறுத்தது? எவ்வகையில் அரசியலைப் பொறுத்தது?

16. முதல் இரண்டு ட்யூடர் மன்னர்கள் ஒரு கட்டற்ற வல்லரசினை[3] நிறுவிய தற்கு அனுகூலமாயிருந்தவை யாவை?

17. எட்டாம் ஹென்றியின் வெளிநாட்டு விவகாரங்களின் நன்மை தீமை களை விளக்குங்கள்.

18. 'எட்டாம் ஹென்றியைப்போல் நாட்டு விவகாரங்களைத் தம் வழியே உருவாக்கிய இங்லிஷ் அரசர் வேறு எவருமிலர்' என்பதன் உண்மை யென்ன?

19. எட்டாம் ஹென்றி காலத்தில் எதிர்ப்பு வாதம் மெதுவாக வளர்ச்சி அடைந்ததற்கும், ஆறாம் எட்வர்ட் காலத்தில் விரைவாக வளர்ச்சி அடைந்ததற்கும் விவரஞ் சொல்லிக் காரணங் கூறுங்கள்.

20. ஆர்ச்பிஷப் க்ரான்மரும் காப்பாளர் பிரபு சாமர்செட்டும் இங்லண்டில் மதச் சீர்திருத்த இயக்கத்துக்கு[4] எவ்விதம் துணைநின்றார்கள்?

21. மேரி காலத்திலும் ஆறாம் எட்வர்ட் காலத்திலும் மக்களிடையே அதிருப்தி தோன்றியதன் காரணங்கள் எவை? அதனால் ஒவ்வொருவர் ஆட்சிக்காலத்திலும் தோன்றிய ஒரு கலகத்தின் விவரங்களைக் கூறுங்கள்.

22. அந்தக் காலத்தில் பயிர் நிலங்களை மேய்ச்சல் நிலங்களாக மாற்றியதால் இங்லிஷ் மக்களின் சமூக வாழ்க்கையிலும் பொருளாதார நிலையிலும் என்ன மாறுதலேற்பட்டது?

---

1. 'The Reformation'. 2. The country gentry. 3. An absolute monarchy. 4. The Reformation movement.

# நான்காம் பகுதி

## எலிசபெத் காலம்

(1558—1603)

# நான்காம் பகுதி

## எலிசபெத் காலம்

## (1558—1603)

மேரி ராணி பிள்ளையில்லாது இறந்ததால் அவள் மாற்றாந்தாய் ஆன்பொலீனின் மகள் எலிசபெத்[1] பட்டத்துக் குரியவளானாள். ட்யூடர் மன்னர்களுள் கடைசியாக ஆண்டவளாயினும் அவளே பெருமை மிக்கவள். 'ட்யூடர் மன்னர்களின் கட்டற்ற வல்லரசுக்கு'[2] அவள் ஆட்சியே சிறந்த உதாரணமாகிறது. அது நாட்டு மக்களின் முழு ஆதரவு பெற்ற வன்மைமிக்க ஆட்சியா யிருந்தது.

அவளுக்குப் பல பெரிய கஷ்டங்கள் நேர்ந்தன. அவள் தன் ஆட்சியின் முதல் முப்பதாண்டுகளில் அக்கஷ்டங்களைத் தைரியத்தோடு சம்மாளித்து வெற்றிகொண்டாள். அவ்வெற்றிக்கு அவளது நல்ல காலம் ஒருவாறு துணை நின்றாலும், அவளது அரசியல் திறமையே முக்கிய காரணமாயிருந்தது. அப்போது இங்லிஷ் மக்கள் எதிர்ப்பு மதத்தை[3] முழுமனதுடன் மேற்கொண்டனர்; கடல் கடந்து வெளிநாடுகளோடு வியாபாரம் தொடங்குவதிலும் கடற்போர் புரிவதிலும் இங்லண்ட் திறமை காட்ட முற்பட்டது. இந்தக் காலப்பிரிவின் இறுதியில் 'ஸ்பானிஷ் ஆர்மடா'[4] எனப்பட்ட ஸ்பெயின் நாட்டுக் கப்பற்படை தோற்கடிக்கப்பட்டது. இவ்வாட்சியின் கடைசி பதினைந்து ஆண்டுகள் (1588—1603) 'பரந்த நாட்கள்'[5] என்ற பெயருடன் விளங்கின. அப்போது நாட்டில் எப்போதுமில்லாத பெருமையுணர்ச்சியும் பாதுகாப்பும் தைரியமும் துணிச்சலும் மிகுந்திருந்தன.

---

1. Elizabeth. 2. 'The Tudor Despotism'. 3. Protestantism. 4. The Spanish Armada. 5. 'The Spacious Days.'

## இருபத்தைந்தாம் அத்தியாயம்

# சம்மாளிக்கப்பட்ட ஆபத்துக்கள்

(1558—1563)

§ 112. முதல் ஆபத்து: **மேரி ஸ்டுவேர்ட்டுக் கிருந்த உரிமை:**—*தன் தாயின் இன்பற்ற முடிவால் எலிசபெத்துக்கு அவளது இளமை இன்பற்றிருந்தது (§ 98); அவள் அக்காள் ஆண்டபோது எலிசபெத்துக்கு எப்போது தலைபோய் விடுமோ என்ற பயம் அடிக்கடி இருந்துவந்தது (§ 108). ஆயினும், அந்த ஆபத்துக்களும் கவலைகளும் அவள் தைரி யத்தைக் குலைக்காது அதற்கு வைரமூட்டின. பட்டத்துக்கு வந்தபோது அவளுக்கு வயது இருபத்து ஐந்தே. ஆயினும், அப்போதே அவளுக்குப் பொறுமை, நிதானபுத்தி, சாமர்த் தியம் முதலிய அரிய குணங்கள் அமைந்திருந்தன; இரா ஜீய விஷயங்களில் வெகு தந்திரமாகவும் கடின சிந்தை யோடும் நடந்துகொள்ளப் பழகியிருந்தாள். குடிமக்களின் நன்மையைத் தேடுவதில் அவள் கண்ணுங் கருத்துமாயிருந் தாள். அவள், தன் ஆட்சியின் தொடக்கத்தில் கூடிய முதல் இராஜசபையின் முன்னிலையில், தான் முற்றிலும் ஒரு இங் லிஷ்காரியே என்று பெருமைபடுத்திக்கொண்டாள். அவள் நாட்டுப் பற்றுடன்[1] எக்காரியத்தையும் செய்தவள். தன் தகப்பனைப் போலவே அவள் நாட்டு மக்களின் ஆர்வங்களை யும் விருப்பங்களையும் உணர்ந்து அவற்றிற்கேற்ப நடந்து கொள்ளும் ஆற்றலை இயற்கையாகவே பெற்றிருந்தாள். முக்கியமாக, நாட்டுமக்களின் விருப்பம் இங்லண்டில் அந்நிய அதிகாரிகளின் செல்வாக்கை நீக்கவேண்டுமென்பதேயாம்.*

1. Patriotism.

தன் தமக்கைக்கு ஜேன் கிரே போட்டியாக இருந்தது போல், எலிசபெத்துக்குப் போட்டியாக மேரி ஸ்டூவர்ட் கிளம்பினாள். ஆயினும், ஜேன் கிரேயின் போட்டியைவிட மேரி ஸ்டூவர்ட்டின் போட்டி மிகமிகப் பலமாக இருந்தது. காதொலிக் கூட்டத்தினர் காதரீன் விவாகத்தை ரத்து செய்ய க்ரான்மருக்கு அதிகாரமில்லை யென்று சாதித்தனர். இந்த அதிகாரம் அவருக்கில்லை என்றால், ஆன்பொலீனை ஹென்றி மணந்துகொண்டபோது அவரது நியாயமான மனைவி காதரீனே. ஆகவே, ஆன்பொலீனின் கலியாணம் மதச் சட்டப்படி ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. எலிசபெத் ஆன்பொலீனுக்குப் பிறந்தவளாதலால் அவள் பட்டத்துக்கு நியாயப்படி உரியவளல்லள். இந் நிலையில் அடுத்த வாரிசு மேரி ஸ்டூவர்ட்டே யாவள். (ட்யூடர் வமிசாவளி, பக்கம் 59).

இதோடு, மேரி செல்வாக்கு நிறைந்தவள். முதலாவதாக, பிறப்புரிமைப்படி அவள் ஸ்காட்லண்ட் அரசியா யிருந்தாள். இரண்டாவதாக, 1559-ல் அவள் கணவன் ப்ரான்ஸ் மன்னரானார். ஆகவே, ப்ரான்ஸ் இராச்சியத்தின் வன்மைமிக்க ஆதரவு அவளுக்குக் கிடைப்பது நிச்சயம். மூன்றாவதாக, காதொலிக் கூட்டத்தினர் அனைவரும் — இங்லண்டி லிருந்தவர்கள்கூட — அவளே இங்லண்டின் அரச பட்டத்துக்குச் சட்டப்படி உரிமை பெற்றவள் என்று நம்பினர் (கு.74).

ஆயினும், அவளுக்கிருந்த இந்த அனுகூலங்களை யெல்லாம் குறைக்கப் பல நிகழ்ச்சிகள் நேர்ந்தன. முதலில், 1559-ல் ஸ்காட்லண்ட் முழுமையும் ஒரு பெரிய மதச் சீர்திருத்தப் புரட்சி[1] ஏற்பட்டது. மேரிக்கு அங்கிருந்த செல்வாக்கெல்லாம் போய்விட்டது. ஜான் நாக்ஸ்[2] (இவர் கால்வின்[3] சீடர், கு. 64) என்பவரது பிரசாரத்தால் ஸ்காட்லண்ட் மக்கள் ஆர்வமிக்க எதிர்ப்பு மதவாதிகளாகக்[4] கிளம்பி, அரசி

1. A great religious revolution. 2. John Knox. 3. Calvin. 4. Ardent Protestants.

ப்ரான்ஸிலிருந்தபோது அவள் பேரால் அப்போது ஸ்காட்லண்ட் இராச்சியத்தை ஆண்டுவந்த காதொலிக் ப்ரெஞ்சு அதிகாரிகளைத் தாக்கினார்கள். எலிசபெத் அவர்களுக்குத் துணையாக அவர்கள் வேண்டுகோளின்மேல் நிலப்படைகளும் கப்பற்படைகளும் அனுப்பிவைத்தாள். அவற்றின் உதவியால் அவர்கள் ஸ்காட்லண்டிலிருந்து ப்ரெஞ்சுக்காரர்களை முடிவாக ஒட்டிவிட்டனர் (எடின்பரோ உடன்படிக்கை, 1560). இவ்வகையில் எட்டாம் ஹென்றியும் காப்பாளர் பிரபு சாமர்செட்டும்[1] சாதிக்காததை எலிசபெத் சாதித்தாள். பல நூற்றாண்டுகளாக இங்லண்டுக்கு இடர் விளைத்துக்கொண்டிருந்த பழைய ப்ரான்ஸ்-ஸ்காட்லண்ட் உறவு இதோடு கலைந்தது (கு. 67). இனி ஸ்காட் மக்கள் தங்களுக்கு வேண்டிய ஒத்தாசைக்கு ப்ரான்ஸை விட்டு இங்லண்டையே எதிர்பார்த்திருந்தனர்.

இரண்டாவது, தன் கணவன் சிறிது காலம் ஆண்டதும் இறந்துவிட்டதால், மேரிக்குக் கிடைக்கவிருந்த ப்ரெஞ்சு ஆதரவும் போய்விட்டது. அவள் மைத்துனன் ஒன்பதாம் சார்ல்ஸ் அரசனானபோது மிக இளையவனாக இருந்ததால் அதிகார மெல்லாம் அவனது தாயிடமே சென்றது. மாமியார் மருமகளை ஆதரிப்பாள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

மூன்றாவது, இங்லிஷ் காதொலிக் கூட்டத்தினர் மேரி தான் சட்டப்படி அரசியாக வேண்டியவள் என்று சொன்னாலும், இங்லண்டில் மத உணர்ச்சியைவிட நாட்டுப்பற்று அதிகமாக வளர்ந்திருந்தது. எப்படி யிருந்தாலும், எலிசபெத் இங்லிஷ்காரி—எல்லோரும் விரும்பிய ஹென்றி மன்னரின் பெண்; மேரியோ அந்நிய நாட்டாள்—இங்லண்டில் எப்போதும் காலெடுத்து வைக்காதவள்.

§ 113. இரண்டாவது ஆபத்து: மதச் சச்சரவு:—நாட்டு மக்களின் மத சம்பந்தமான விஷயங்களைத் தீர்மானிக்க

1. Protector Somerset.

வேண்டியது நாட்டுத் துரைத்தனத்தின் கடமையே என்று அக்காலத்தில் பெரும்பான்மையோர் கருதினர். இது காரணமாகவே, எட்டாம் ஹென்றி இங்லண்டில் போப்பின் மதத் தலைமையைக் குலைத்தபோது நாட்டு மக்கள் அதற்கு இணங்கினர்; ஆரும் எட்வர்ட் காலத்தில் (மதஸ்தாபனத்தைக் கொள்ளை யடித்ததை மக்கள் விரும்பாத போதிலும்) இங்லிஷ் தியான புத்தகத்தையும்[1] எதிர்ப்புமதக் கொள்கைகளையும்[2] பெரும்பான்மையோர் ஏற்றுக்கொண்டனர்; மேரி கையாண்ட ஒறுத்தல் முறையை[3] மக்கள் வெறுத்தபோதிலும், பழைய காதொலிக் வழிபாட்டு முறையை[4] அவள் மீண்டும் நிலைநாட்ட முயன்றபோது அதைக் கண்டித்தவர்கள் மிகச் சிலரே. ஆயினும், எலிசபெத் ஆளத் தொடங்கியபோது மக்கள் மனம் தெளிவற்றுக் கலக்கமுற்றுக் கிடந்தது. அடிக்கடி ஏற்பட்ட மாறுதல்களால் மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சி தளர்வுற்றது. எலிசபெத் இங்நிலையை மாற்றி நாட்டில் ஒற்றுமையைப் பலப்படுத்த விரும்பினாள். ஆகவே, தன் நாட்டுக்கென ஒரு தனி மதஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டியது அவளது முதல் வேலையாயிற்று. அவளது குடிமக்களுள் சிலர் வைராக்கிய மிக்க காதொலிக்கர்; சிலர் வைராக்கிய மிக்க எதிர்ப்புமதவாதிகள்; இவர்களுக்கு இடைப்பட்ட கொள்கைவேறுபாடுகளைக் கொண்டவர்களும் இருந்தனர். எலிசபெத் தன் தமக்கையையும் தம்பியையும்போல் மத விஷயங்களில் ஆழ்ந்த வைராக்கியங் கொண்டவளல்லள். அவளது முக்கிய நோக்கம் தன் குடிகளின் ஆன்மாக்களை நன்னெறியில் செலுத்த முயல்வதல்ல; தன் அரசாங்கத்தைச் சூழ்ந்திருந்த ஆபத்துக்களினின்றும் அதைக் காத்து நடத்துவதேயாம். அரசாங்க விஷயங்களிலிருப்பது போலவே மத விஷயங்களிலும் அரசருக்கு முழு அதிகாரம் இருக்க

1. The English Prayer Book. 2. Protestant doctrines. 3. Persecution. 4. Worship.

வேண்டுமென்று அவள் தந்தை ஹென்றி நினைத்தவண்ணமே எலிசபெத்தும் நினைத்தாள். ஆகவே, தன் குடி மக்களுள் காதொலிக்கரும் எதிர்ப்பு மதத்தினரும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு தேசீய மதஸ்தாபனத்தை[1] ஏற்படுத்த அவள் தீர்மானித்தாள். இந்நோக்கத்தோடுதான், இரு வகுப்பினர்க்கும் திருப்தி யளிக்கக்கூடிய வகையில் மதஸ்தாபனத்தின் கொள்கைகளும் சடங்குகளும் மாற்றி யமைக்கப்பட்டன.

எலிசபெத் தன் தகப்பன் வகித்த 'மதஸ்தாபனத்தின் தனித் தலைவர்'[2] என்னும் பட்டத்தை விட்டுவிட்டு (கு. 58), 1559-ல் இயற்றப்பட்ட **தலைமைச் சட்டத்**[3]தின்படி தன்னை 'லௌகிக விஷயங்களையும் வைதிக விஷயங்களையும் பராமரிக்கும் தலைமை அதிகாரி'[4] என்று கூறிக்கொண்டாள். இரண்டும் உண்மையில் ஒன்றுயிருந்தாலும், காதொலிக்கர்களுக்கு இம் மாறுதல் ஒரு ஆறுதலை யளித்தது; போப்பை ஆண்டவராக மனத்தில் மதித்துக்கொண்டிருந்த அவர்கள் தேசீய மதஸ்தாபனத்தைச் சேர்ந்த கோவில்களுக்கும் போகலாம்.

1559-ல் இயற்றப்பட்ட **வழிபாட்டோருமைச் சட்டம்**[5] க்ரான்மர் (§ 102) தயாரித்த இங்லிஷ் தியான புத்தகத்தை, சில திருத்தங்களுடன், குருமார்கள் கையாளவேண்டுமென்று வற்புறுத்தியது. அத்திருத்தங்கள் எல்லாக் கொள்கையினர்க்கும் திருப்தியுண்டாக்குமென எதிர்பார்க்கப்பட்டது.*

---

* இங்லிஷ் மதஸ்தாபனத்தின் கொள்கைகளை வரையறுத்துக் கூறும் முப்பத்தொன்பது கொள்கைகள்[6] 1571-ல் தான் வெளிவந்தன. அப்போது போப்பை வெளிப்படையாக எதிர்த்துநிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆயினும், அக்கொள்கைகளுள் பெரும்பான்மையன காதொலிக் மதஸ்தாபனத்தின் கொள்கைகளே. அவற்றை முதலில் தயாரித்தபோது காதொலிக் கொள்கைகளுள் மிகமுக்கியமான பொருள்மாற்றக்[7] கொள்கையும் (§ 90 கு.) மறுக்கப்பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

1. A national Church. 2. 'Supreme Head' of the Church. 3. Act of Supremacy. 4. "Supreme Governor as well of things spiritual as of things temporal." 5. Act of Uniformity. 6. The Thirty-nine Articles. 7. Transubstantiation.

§ 114. மூன்றும் ஆபத்து: ஸ்பெயின்நாட்டு பிலிப்:—இரண்டாம் பிலிப் விஷயத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பது முதலில் எலிசபெத்துக்குத் தெளிவாக வில்லை. பிலிப் ஆர்வமிக்க காதொலிக். மேரியின் கணவராக இருந்தபோது அவர் போப்பின் மதத் தலைமையை இங்லண்ட் மீண்டும் ஒப்புக்கொள்ளுமாறு செய்துவைத்தார். அந்நிலை மாறக்கூடாதென்பதும், இங்லண்ட் தனது பரந்த இராச்சியத்தின் மாகாணங்களுள் ஒன்றுக வேண்டுமென்பதும் அவர் விருப்பம். ஆகவே, அவர் எலிசபெத்தைக் கலியாணம் செய்துகொள்ள விரும்புவதாகக் கூறினர்.

இவ் வேற்பாடு எலிசபெத்துக்கு ஒரு வகையில் அனுகூலமானதென்று தோன்றியது. ஸ்பெயினேடு நெருங்கிய உறவிருந்தால் இங்லண்ட் ப்ரான்ஸின் பகைக்கு அஞ்ச வேண்டியதில்லை. ஆயினும், தன் தமக்கை மேரி பிலிப்பைக் கலியாணஞ் செய்துகொண்டதால்தான் அவளைக் குடிமக்கள் வெறுக்கலாயினர் என்பதையும் அவள் மறப்பதற்கில்லை (§ 107). குடிமக்களின் ஆதரவே தனக்கு எல்லாம். மேலும், எந் நிலையிலும் பிலிப் ப்ரான்ஸுக்கு விரோதமாக இங்லண்டை ஆதரிக்க வேண்டியவரே; ஏனென்றால், ப்ரான்ஸுக்கும் ஸ்பெயினுக்கு மிருந்த பகை இன்னும் தீர்ந்தபாடில்லை.

ஆகவே, எலிசபெத் பிலிப்பைக் கலியாணஞ் செய்துகொள்ள மறுத்தாள். இது அவருக்கே ஆச்சரியத்தை யுண்டாக்கியது. இவ்விதம் இந்த ஆபத்தும் தீர்ந்தது.

§ 115. நான்காம் ஆபத்து: பொருளாதாரக் கோளாறுகள்[1]:—நெடுங்காலமாக நாட்டுமக்களுக்கும் துரைத்தனத்துக்கும் கலவரமூட்டிய பொருளாதாரக் கோளாறுகள் எலிசபெத்துக்கும் தொல்லை யளித்தன (கு. 71). அவள் ஆட்சிக்கு முன் ஆட்சியில் அவற்றின் காரணங்கள் முன்னினும் உரம்

1. The economic dislocation.

[illegible]

பெற்றன. ஆகவே, இங்கிலேக்கு விரைவில் பரிகாரம் தேடுவது மிகவும் அவசியமாயிற்று.

வேலியிடுதலின்[1] தீமைகளைக் குறைக்க அவளுக்கு முன் ஆண்டவர்கள் வேலியிடுதல் கூடாது என்று சட்டம் மட்டும் இயற்றிவைத்தனர். இது பல் நோயைப் போக்க முக வீக்கத்தை அமுக்கித் தெரியாமல் வைத்தல்போன்றிருந்தது. எலிசபெத்தின் சிகிச்சை வேறு வகையானது. அது நிதானமாகப் பலனளித்தாலும், நிச்சயமாக அளிக்குமென்பதில் ஐயமில்லை. அவள் ஆக்கத்தொழில்களையும்[2] வியாபாரத்தையும் ஊக்கினாள். அதனால் பட்டணங்களில் மக்கள்கூட்டம் ஒரே நிதானமாக அதிகரித்துக்கொண்டு வந்தது. அக்கூட்டங்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்களைப் பண்ணைகளில் பயிரிடவேண்டியதாயிற்று. தானியங்களின் விலை ஏறியது. இது கண்டு நிலம்படைத்தவர்கள் பழையபடி பயிரிட முற்பட்டார்கள்.

பட்டணங்களில் தோன்றிய கோளாறுகளை விலக்கப் பார்லமென்ட் தொழில் மாணவர்கள் சட்டம்[3] (1563) என்பதை இயற்றியது. அச் சட்டம் குறைந்தது ஏழு வருஷ காலமேனும் தொழில் மாணவராகப் பயிற்சி பெறாத எவரும் எத்தொழிலையும் நடத்தக்கூடாதென்றும், தொழில் மாணவர்களைப் பயிற்றுவிப்போர் அவர்களது நலனுக்குப் பொறுப்பாளிகளாக இருக்கவேண்டுமென்றும் விதித்தது.*

ஏழைகளுக்கு மடங்கள் இட்டிருந்த ஐயத்துக்குப்[4] பதிலாகப் பார்லமென்ட் பல ஏழைகள் சட்டங்களை[5] இயற்றி

* இது காலப் போக்குக்கு ஏற்ப அமைந்த சட்டம். இடைக்காலத்தில்[6] தொழிற்சங்கங்கள்[7] வியாபாரத்தையும், தொழில் சம்பந்தமான விஷயங்களையும் திட்டப்படுத்தின (§ 44). இச் சங்கங்கள் இப்போது கலைந்து கட்டுப்பாடற்றுக் கிடந்தமையால், இவ்விஷயங்களை நாட்டுத் துரைத்தனம்[8] ஒழுங்குபடுத்தலானது.

1. 'Enclosures.' 2. Manufactures. 3. The Statute of Apprentices.
4. The alms. 5. Poor Laws. 6. The Middle Ages. 7. Gilds.
8. The national government.

டுக்கு தலைவர்.

யது. 1601-ல் இயற்றப்பட்ட கடைசி ஏழைகள் சட்டம் மிகவும் முக்கியமானது. இச் சட்டங்கள் ஒவ்வொரு பிரிவிலுமுள்ள நிலம்படைத்தவர்களிடமிருந்து 'ஏழைகள் வரி'[1] வாங்கவேண்டுமென்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட 'பார்வையாளர்'[2] அதைக்கொண்டு ஏழைகளுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்றும் விதித்தன.

நாணயங்களின் மதிப்புக் குறைந்துகொண்டு வந்ததற்குத்[3] தக்க பரிகாரம் தேடப்பட்டது. ஒரு குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு குறைந்த மதிப்புள்ள நாணயங்களை[4] வைத்திருப்பது ஒரு குற்றமென்று துரைத்தனம் விளம்பரப்படுத்தியது. அதற்குள் அவைகளை அவற்றின் உண்மையான மதிப்புக்குச் சிறிது அதிகமாகவே மதித்துக் கஜானாவில்[5] வாங்கிக்கொண்டு நல்ல நாணயங்களைக் கொடுக்கவேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று. குறைந்த மதிப்புள்ள நாணயங்களை அதிகமாக வைத்துக்கொண்டிருந்தவர்களுக்கு இதனால் ஒருவகையில் நஷ்டமேற்பட்டபோதிலும், நாட்டின் பொது நலனைக் கவனிக்கையில் இதைவிட வேறு பரிகாரம் தேடுவதற்கில்லை. இதனால் நாடு முழுமையிலும் வெகு விரைவில் நன்மை தோன்றியது.*

---

* இப் பரிகாரத்தினை எலிசபெத் சர் டாமஸ் க்ரெஷாம்[6] என்பவர் ஆலோசனையின்மேல் செய்தாள். அவர் ஒரு திறமைமிக்க வியாபாரி; இத்தகைய முக்கியமான விஷயங்களை முதல் முதல் கூர்ந்து ஆராயத் தலைப்பட்டவர்களுள் ஒருவர்.

1. Poor-rate. 2. 'Overseers.' 3. The debasement of the coinage. 4. Base coins. 5. The Treasury. 6. Sir Thomas Gresham.

இருபத்தாறும் அத்தியாயம்

# எலிசபெத் அரசியும் காதொலிக்கரது எதிர்ப்பியக்கமும்[1]

## (1560—1580)

§ 116. மதச் சீர்திருத்த எதிர்ப்பு இயக்கம்[2]:-எலிசபெத் அரசியானபோது ப்ரான்ஸாலும் ஸ்பெயினாலும் இங்லண்டுக்கு நேரவிருந்த ஆபத்து, அவ்விருநாடுகளும் ஒன்றோடொன்று பகைமை பாராட்டியதால், குறைந்துவிட்ட தென்பதை நாம் கண்டோம் (§ 89). எனினும், அங்நிலை மாறி அவற்றுள் எங்நாடேனும் சமயம் பார்த்துப் போப்பின் சார்பாக இங்லண்ட்மீது படையெடுத்து வரக்கூடும் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர்; ஏனென்றால், காதொலிக் மதஸ்தாபனம் மீண்டும் உரம் பெற்றுக்கொண்டு வந்ததாக எல்லோரும் நினைத்தனர். அந்நூற்றாண்டில் 1520 முதல் 1540-க்குள் யூரோப்பின் பெரும் பாகத்தைக் காதொலிக் மதஸ்தாபனம் இழந்தது; 1560 முதல் 1580-க்குள் நிகழ்ந்த 'மதச் சீர்திருத்த எதிர்ப்பு இயக்க'த்தின் பயனாக இழந்ததில் பெரும்பாகத்தை மீண்டும் பெற்றது. இதற்கு முக்கிய காரணம் அச்சமயத்தில் போப் பதவியில் அமர்ந்திருந்தவர்களுள் காணப்பட்ட ஒரு மாறுதலேயாம். 1559-க்கு பின்வந்த போப்புகள், 'ரினேசன்ஸ் போப்புக'[3]ளைப் போல் (கு. 54) உலக விவகாரங்களில் ஈடுபட்டு வைதிக விஷயங்களைப் புறக்கணிக்காமல், மதஸ்தாபனத்துக்கு ஏற்பட்ட நஷ்டங்களைச் சரிக்கட்ட முழு மனதுடன் உழைக்கலாயினர். அவர்களது தீவிர முயற்சியின் பலனாக ப்ரான்ஸிலும் போலண்டிலும் அயர்லண்டிலும்

1. The Catholic Reaction. 2. The Counter-Reformation. 3. The Renaissance Popes.

பெல்ஜத்திலும்[1] தென் ஜெர்மனியிலும் எதிர்ப்புமதத்துக்கு[2] ஆதரவு குன்றியது. இந்நாடுகள் அதுமுதல் நிலையாகக் காதொலிக் கொள்கைகளையே தழுவிக்கொண்டு வந்திருக்கின்றன. இந்த மதச் சீர்திருத்த எதிர்ப்பு இயக்கத்தின் முக்கிய புருஷர் ஸ்பெயின் அரசரான பிலிப். அட்லான்டிக் பெருங்கடலின்[3] இருகரைகளிலும் பெரும் பரப்பான நிலப்பாகங்களுக்கு அவர் அதிபதியாக இருந்ததால், அக்காலம் அவரைவிட வன்மைமிக்க பேரரசர் உலகத்தில் வேறெவருமிலர். அவரது ஒரே நோக்கம் எதிர்ப்புமதவாதத்தைக் குலைத்துக் கிறிஸ்துவ உலகத்தைக் 'கிழித்தலில்லாத ஒரு ஆடை'[4] யாக்கவேண்டுமென்பதே. வாழ்நாள் முழுமையும் அவர் இந்நோக்கத்தை மேற்கொண்டே ஓய்வுசாய்வின்றி உழைத்தார். இங்லண்ட் காதொலிக் மதஸ்தாபனத்துக்குப் புறம்பாக இருக்கும் வரையில் அவருக்கு மனஅமைதி யிராதென்பது எவரும் உணர்ந்ததே. எப்போது, எவ்விதம் அவர் இங்லண்டைத் தாக்குவார் என்பதுதான் தெளிவாகவில்லை.

ப்ரான்ஸை ஆண்ட வேலாய்[5] குலத்து அரசர்கள் இதுவரையில் மதவிஷயங்களில் அதிக ஊக்கங் காட்டாதிருந்தனர். ஆயினும், மேலே குறிப்பிட்ட வருஷங்களில் அவர்கள் தங்கள் குடிகளிடையே எதிர்ப்புமதம் பரவக்கூடாதென்று தீர்மானித்தார்கள். 1572-ல் ஒரு குறிப்பிட்ட மணி நேரத்தில் ப்ரான்ஸ் நாடு முழுமையிலும் எதிர்ப்புமத வாதிகளுள் முக்கியமானவர்கள் கொல்லப்பட்டார்கள். இது, சேன்ட் பார்த்தோலோமியு படுகொலை[6] எனப்படும்.

§117. வெளிநாட்டுக் கலகங்களை எலிசபெத் ஆதரித்தல்:—எப்போதாவது இங்லண்ட்மீது கட்டாயம் ஒரு மதப் போர் தொடங்குமென்று எதிர்பார்த்ததால், எலிசபெத் அதைக் கூடுமான வரையில் நிறுத்திவைக்க முயன்றாள்.

1. Belgium. 2. Protestantism. 3. The Atlantic. 4. A 'seamless garment'. 5. Valois. 6. Massacre of St. Bartholomew.

நாளாக ஆக, இங்லண்ட் உரம்பெற்றுத் தைரியம் முற்றி, எத்தகைய ஆபத்தையுந் தாங்கி நிற்கத் தயாராகி வந்தது.

ப்ரான்ஸிலும் ஸ்பெயினிலும் குடிகளிடையே கலகங்கள் தோன்றிக்கொண்டிருந்தமை எலிசபெத்துக்கு அனுகூலமாயிருந்தது. ப்ரான்ஸ் நாட்டு எதிர்ப்பு மதவாதிகளான ஹ்யுகினாட்ஸ்[1] என்பவர்கள் தங்களிஷ்டப்படித் தொழுகையை நடத்தலாமென்று துரைத்தனத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்தனர்; ஆயினும், இராஜ சமஸ்தானத்திலிருந்த வைராக்கிய மிக்க காதொலிக் கூட்டத்தினர் அவர்களை ஒறுக்கவேண்டுமென்று அரசரைத் தூண்டிக்கொண்டிருந்தனர். அதன் விளைவாக நாட்டில் பயங்கரமான மதப் போர்கள்[2] பல நேர்ந்தன. அவை விட்டுவிட்டு முப்பதாண்டுகள் வரையில் நீடித்ததால் துரைத்தனம் சீர்குலைந்ததோடு நாடும் வளங்குறைந்தது.

நெதேர்லண்ட்ஸின்[3] நிலை இதைவிடக் கேவலமாயிருந்தது. அது ஸ்பெயின் மன்னரது பரந்த இராச்சியத்தின் மிக வளமான பாகம். அதன் செழுமையான நகரங்களில் கம்பளநெசவிலும் அதுசம்பந்தமான வியாபாரத்திலும் ஈடுபட்டிருந்த மக்கள் சுறுசுறுப்பும் புத்திசாலித்தனமும் மிக்கவர்கள். அவர்கள் நெடுங்காலந்தொட்டே நகர பரிபாலனத்தில் சுயேச்சையைக் கோரினார்களேனும், பிலிப் மன்னர் அவர்கள் விருப்பத்தைப் புறக்கணித்துக்கொண்டு வந்தார். அதனால் அவர்கள் அதிருப்திகொண்டிருந்தார்கள். பிலிப் எதிர்ப்பு மதவாதத்தை வேரோடு களைந்து ஒழிக்க முயன்றபோது, அந்த அதிருப்தி கலகத்தில் முடிந்தது. மத விரோதிகளான குடிகளைத் தாம் உயிர்வாழ விடப்போவதில்லையென்று பிலிப் போப்புக்கு உறுதி கூறினார். 1567-ல் அவர் ஆல்வா ட்யூக்[4] என்பவரைப் பன்னீராயிரம் தேர்ந்த

1. The Huguenots. 2. Wars of Religion. 3. The Netherlands. 4. The Duke of Alva.

ஸ்பானிஷ் படைவீரர்கள் தலைமையில் நெதெர்லண்ட்ஸுக்கு அனுப்பி, அங்கு மதவிஷயங்களிலும் இராஜீய விஷயங்களிலும் சிறிதும் சுயேச்சை இல்லாதபடி பார்த்துக்கொள்ளக் கட்டளையிட்டார். ஆல்வா ட்யூக் நடத்திய பயங்கரமான கொடுங்கோன்மையைப் பொறுக்காது, அந்நாட்டு மக்கள், 'பேசாமல் காரியத்தை நடத்தும் வில்லியம்'[1] என்ற பேர் பெற்ற ஆரஞ்சு சிற்றரசரைத்[2] தலைவராகக் கொண்டு, வெளிப்படையாகக் கிளம்பிப் போரிடலாயினர். ஆரஞ்சு சிற்றரசர் ஸ்பெயின் ஆட்சியை ஆதரித்த காதொலிக்கராக இருந்தவரே. ஆயினும், ஆல்வாவின் கொடுமைகளினால் அவர் எதிர்ப்பு மதவாதியாக மாறினார். இனித் தம் வாழ்நாளைப் பிலிப் அரசருக்கு எதிராகக் கிளர்ச்சிசெய்வதில் கழிக்கவேண்டுமென்று அவர் தீர்மானித்தார்.

இந்தக் கலகங்களையும் கிளர்ச்சிகளையும் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தால், இங்லண்டின் பகைவர்களுக்கு அவரவர் நாடுகளிலேயே போதிய வேலையிருக்குமாதலால், அவர்கள் இங்லண்டின்மீது படையெடுத்துவரத் துணியார்கள் என்று எலிசபெத் நினைத்தாள். இக்கலகங்களும் கிளர்ச்சிகளும் அடக்கப்பட்டுவிட்டாலோ அவளுக்கு ஆபத்து நேரம் நெருங்கிவிடும்.

இதிலும் அவள் பக்குவமாகவும் நிதானமாகவும் வேலை செய்யவேண்டியிருந்தது. வெளிநாட்டில் கிளர்ச்சிகளையும் கலகங்களையும் தூண்டிவிட அவளிடம் அதிக பணமில்லை. மேலும், அவள் பரபரப்பாகவும் வெளிப்படையாகவும் இவ் வேலையில் இறங்குவாளானால், அந்நாட்டு மன்னர்கள் ஆத்திரங்கொண்டு, தங்கள் நாட்டுக் குழப்பங்களை அடக்க முயல்வதற்கு முன்னமே, இங்லண்ட்மீது படையெடுத்து வரத் தீர்மானித்துவிடலாம். ஆகவே, அவள் மிகத் தந்திரமாக நடந்துகொண்டாள். நெதெர்லண்ட்ஸ் மக்களுக்கும்

1. William the Silent. 2. Prince of Orange.

ஹ்யுகினுட்ஸ்[1] கூட்டத்தினர்க்கும் தத்தம் கிளர்ச்சிகளை அப்போது நடத்துவதற்கு வேண்டிய பொருளுதவியை மட்டும் அந்தரங்கமாகக் கொடுத்துத் தூண்டிவிட்டு, விரைவில் மேலும் உதவுவதாகக்கூறி அவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தாள். மேலுக்குமட்டும் அந்நாட்டு அரசர்களுக்குத் தான் ஒன்றுஞ் செய்யவில்லையென்று அடிக்கடி கூறிக் கொண்டிருந்தாள். இவ்விதம் மற்றவர்களைத் தந்திரமாக ஏமாற்றுவதில் எலிசபெத் மிக்க வல்லவள். அதில் அவளுக்கு ஒரு மகிழ்ச்சி.

§ 118. காதோலிக்கரது முதல் சதி[2]:—காதொலிக்கரது எதிர்ப்பியக்கத்தினல் எலிசபெத்துக்கு நேர்ந்த ஆபத்து வெளிநாடுகளிலிருந்துமட்டும் தோன்றவில்லை; தன் நாட்டிலேயே தனது காதொலிக் குடிகளுள் சிலர் அவளுக்கு விரோதமாகச் சதிசெய்யத் தயாராயிருந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் வடக்குப் பிரிவுகளில் வாழ்ந்தவர்கள். அப் பிரிவுகளில் வாழ்ந்த மக்கள் தெற்கில் வாழ்ந்தவர்களைவிடப் பிற்போக்கானவர்கள் என்பதையும், பழைய பழக்க வழக்கங் களைக் கைவிடத் துணியாதவர்கள் என்பதையும் நாம் முன்னமே கண்டுள்ளோம் (§ 99); மேலும், அவர்கள் நாட்டுத் துரைத்தனத்தின் அதிகாரத்துக்கு அவ்வளவு அதிகமாகக் கட்டுப்பட்டவர்களு மல்லர். எட்டாம் ஹென்றி 'வடக்குச் சபை'[3]யை ஏற்படுத்தினரேனும், அப் பாகத்துப் பெரிய பிரபுக்களெல்லாம் அதன் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டுவிட்டபடியால், அச் சபையால் துரைத்தனத்துக்கு யாதொரு லாபமுமில்லை. அந்தப் பிரபுக்கள் தங்கள் குடித்தனக்காரர்மீது பழைய படை மானிய திட்டக் காலத்தி[4]லிருந்தபடியே இன்னும் அதிகாரம் செலுத்திக்கொண்டிருந்தனர். ட்யூடர் மன்னர்கள் நிலைக்கச்செய்த வல்லமை

1. The Huguenots. 2. Plot. 3. The Council of the North.
4. Feudal Times.

மிக்க நடுநாயக ஆட்சியை[1] அவர்கள் விரும்பவில்லை; கூடுமான வரையில் அதை எதிர்க்கப் பார்த்தார்கள். எட்டாம் ஹென்றி காலத்தில் அவர்கள் டாமஸ் க்ராம்வெல்லை எவ்விதம் வெறுத்தார்களோ (§ 99) அவ்விதமே எலிசபெத்தின் பெருமைமிக்க மந்திரியாகிய சர் வில்லியம் ஸேஸில்[2] என்பவரையும் அவர்கள் வெறுக்கலாயினர். க்ராம்வெல்லைப் போலவே ஸெஸிலும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்; கலைந்த மடங்களின் பூ சொத்துக்களை வாங்கி நாட்டில் நல்ல அந்தஸ்தைச் சம்பாதித்துக்கொண்ட புதிய பணக்காரர்களின்[3] துணைகொண்டு அரசியின் அதிகாரத்தைப் பெருக்கியவர்; மேலும், க்ராம் வெல்லைப் போலவே இவரும் காதொலிக் மத விரோதி.

எலிசபெத் ஆட்சியின் முதல் பத்து வருஷங்களில் இந்த வடக்குப் பிரிவுகளில் அதிருப்தி உள்ளுக்குள்ளே புகைந்துகொண்டிருந்தது; 1568-ல் ஸ்காட் மக்களின் அரசி மேரி[4] அங்கு வந்ததும் அது சுவாலைவிட்டு எரியலாயது. மேரி 1561-லேயே தன் இராச்சியமாகிய ஸ்காட்லண்டுக்குத் திரும்பி வந்துவிட்டாள். ஆயினும், அவளை ப்ரெஞ்சுக்காரி என்றும், காதொலிக் என்றும் குடிகள் வெறுத்ததால், அவள் நிலை ஆபத்துள்ளதாக விருந்தது (§ 112). அடுத்த சில வருஷங்களில் அவள் வாழ்க்கையில் பல மாறுதல்கள் தோன்றின. தன் உறவினராகிய டார்ன்லி[5] பிரபுவை அவள் கலியாணஞ் செய்துகொண்டு ஒரு மகனைப் பெற்றாள். மேரியின் அந்தரங்க காரியதரிசியாகவிருந்த ரிச்சியோ[6] என்பவன் மீது டார்ன்லி சந்தேகங்கொண்டு அவனைக் கொன்றுவிட்டார். மேரி பாத்வெல்[7] என்பவன் மீது மோகங்கொண்டாள். அவன் டார்ன்லியைக் கொன்றுவிட்டு மேரியைக் கலியாணஞ் செய்துகொண்டான். உடனே நாட்டில் குழப்பந் தோன்

1. Strong central government. 2. Sir William Cecil. 3. The 'new rich.' 4. Mary Queen of Scots. 5. Darnley. 6. Rizzio. 7. Bothwell.

றியதால், மேரி அரச பட்டத்தைத் தன் குழந்தை ஜேம்ஸுக்கு[1] அளித்துவிட வேண்டியதாயிற்று. ஜேம்ஸை எதிர்ப்பு மதத்தினராகப்[2] பழக்கினர்கள். இந் நிலையில் மேரி தன் நாட்டில் இருக்க வகையில்லாது எல்லையைக் கடந்து இங்லண்டின் வடக்குப் பிரிவுகளை யடைந்தாள். அவள் இங்லண்டில் அடி வைத்ததும் எலிசபெத்துக்கு ஆபத்து மேலிட்டது. மேரியைச் சிறையில் வைப்பதா? கௌரவ மிக்க விருந்தாளியாக நடத்துவதா? எலிசபெத் இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு வகையில் மேரியை நடத்தினுள். ஆயினும், முன்னரே அதிருப்தி கொண்டிருந்த வடக்குப் பிரிவுகளின் பிரபுக்கள், இங்லண்டின் அரச முடியை அணிவதற்கு மேரிக்கு உரிமையுண்டென்று கூறி, அவளை ஆதரிக்கச் சதி சூழ்ந்தனர். நார்பக் ட்யூக்கும்[3] வெஸ்ட்மூர்லண்ட், நார்தம்பர்லண்ட் ஏர்ல்களும் சதிகாரர்களுள் முக்கியஸ்தர்கள். ஸெஸிலை மந்திரி பதவியிலிருந்து நீக்கிவிடும்படி எலிசபெத்தைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்பது அவர்கள் நோக்கம். ஸெஸிலுக்கு இது தெரிந்துவிட்டது. அரசி நார்பக்கை மிரட்டிச் சதிகாரர்கள் கூட்டுறவினின்றும் விலகிவிடும்படி செய்தாள். மற்றவர்கள் ஆட்களைத் திரட்டி மேரியைத் தங்கள் வசத்தில் வைத்துக்கொள்ள முயன்றனர். ஆயினும், துரைத்தனத்தார் மேரியை நடு நாட்டிலுள்ள ஒரு கல்லரணுக்குக்[4] கொண்டுபோய் அங்கு அவளைக் கௌரவமான காவலில் வைத்திருந்தனர். சதிகாரர்கள் இன்னது செய்வதென்று தெரியாமல் தயங்கிச் சிறிது காலத்துள் கலைந்துவிட்டனர். அவர்கள் தலைவர்களான ஏர்ல்கள் இருவரும் நாட்டை விட்டு ஓடிவிட்டார்கள்.

§119. காதோலிக்கரது இரண்டாம் சதி:—அடுத்த வருஷம் (1570) போப் எலிசபெத்தைக் கிறிஸ்தவர் கூட்டத்தினின்றும் தள்ளிவைத்துவிட்டதாகத் தள்ளிவைப்புக்

1. James. 2. Protestant. 3. The Duke of Norfolk. 4. A castle.

கட்டளை[1] யொன்றை விளம்பரப்படுத்தி, அவள் அரச முடியை அபகரித்தவளெனக் கருதி இங்லிஷ் காதொலிக்கர்கள் அவளைச் சிம்மாசனத்திலிருந்து ஓட்டிவிட வேண்டுமென்று தூண்டினார். இந்த விளம்பரம் ஒரு வருஷத்துக்கு முன் தோன்றியிருந்தால், வடக்குப் பிரிவுகளின் ஏர்ல்களது சதிக்கு மதப்பற்று நிறைந்த இங்லிஷ் காதொலிக்கர்கள் அனைவரது ஆதரவும் கிடைத்திருக்கும். ஆனால், அது வெளியாவதன் முன்னமே வடக்கத்தியார் தோற்றுத் தெம்பிழந்திருந்தனர். ஆகவே, அரை மனதுடன் மற்றொரு சதி கிளம்பியது. துரைத்தனத்தார் அதையும் இலேசில் அடக்கி விட்டனர்.

இச்சமயம் நார்பக்குக்குப் பக்கபலமாக இருந்தவர் லண்டனில் வாழ்ந்திருந்த ரிடோல்பி[2] என்னும் பெயர் கொண்ட இடலி நாட்டுப் பணக்காரரொருவர். எலிசபெத்தை எவ்விதமேனும் ஒழித்துவிடவேண்டுமென்பதும், மேரியை நார்பக்குக்குக் கலியாணம் செய்துவைத்து அவளை ஐக்கியப்பட்ட காதொலிக் பெரும் பிரிட்டன் நாட்டுக்கு[3] அரசியாக்கவேண்டுமென்பதும் சதிகாரர்களின் நோக்கம். ஸெஸில் இதையும் கண்டுபிடித்துத் தக்க பாதுகாப்புக்களைத் தேடி வைத்தார். ரிடோல்பி வேற்றரசர்கள் துணைநாட வெளி நாடுகளுக்குப் போயிருந்ததால் பிடிபடவில்லை. நார்பக் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

அரசியும் மந்திரியும் பேராபத்தினின்றும் தப்பினர். மந்திரியின் உண்மைச் சேவகத்தினை மெச்சி அரசி அவருக்கு 'பர்லி பிரபு'[4] என்னும் பட்ட மளித்தாள்.

§120. **காதோலிக்கர்களை ஒறுத்தல்[5]** :—இந் நிகழ்ச்சிகளால் இங்லிஷ் காதொலிக்கர்களின் நிலை மாறியது. அதுவரை எலிசபெத் அவர்களுக்கு இடைஞ்சலான நடவடிக்கை

1. Bull of Excommunication. 2. Ridolfi. 3. A united Catholic Great Britain. 4. Lord Burghley. 5. Persecution of Catholics.

எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை. மதக்கோட்பாடுகளி லுள்ள வேறுபாடுகளைப் பற்றி அவள் சிறிதும் கவலை கொள்ளாதிருந்தாள். நாட்டினரை ஒற்றுமைப்படுத்தி ஆள வேண்டுமென்பதே அவள் பெருநோக்கமாயிருந்தது. தனக்கு விரோதமாகக் காதொலிக்கர்கள் எக்காரியத்தையும் செய்யா திருந்தவரையில் அவள் அவர்களை எவ்வகையிலும் தொந்தரவு செய்யவில்லை. நாளாக ஆக அவர்களும் நாட்டின் மதஸ்தாப னத்தை ஆதரிக்க முற்படுவார்கள் என்பது அவள் நம்பிக்கை. வழிபாட்டு ஒருமைச் சட்டத்தின்படி[1] (§113) எல்லோரும் அவரவர் ஊர்களிலுள்ள கோவில்களுக்குத் தொழுகை வழி பாடுகளுக்குச் செல்லவேண்டும், செல்லாதவர்கள் அபராதங் கொடுக்கவேண்டு மென்று சட்டமிருந்தபோதிலும், அது வரை அபராதம் வசூலித்ததில்லை. போப்பின் தள்ளிவைப் புக் கட்டளை[2] இந்நிலையை முற்றிலும் மாற்றிவிட்டது. அதன்படி எலிசபெத்தை அரசியாக ஏற்றுக் கௌரவித்து அவள் கட்டளைகளை நிறைவேற்றிய இங்லிஷ் மக்கள் அனை வரும் போப்பின் சாபத்துக்கு ஆளானார்கள். இனி ஆர்வ மிக்க காதொலிக்கர்கள் எல்லோரும் தங்களது அந்தரங்க எண்ணங்களில் இராஜத் துரோகிகளாக இருப்பார்களோ என்று ஐயப்படவேண்டி யிருந்தது. ஆகவே, கோவிலுக்குப் போய் அங்கு நடைபெறும் தொழுகை வழிபாடுகளில் கலந்து கொள்ளாதவர்களுக்குத் தண்டனை விதிக்கவேண்டிய அவசிய மேற்பட்டதோடு, அதைக் கடினமாக்கவும் வேண்டிய தாயிற்று. காதொலிக்கர்கள் போப்பின் அதிகாரத்தை ஏற் பதா, இராணியின் அதிகாரத்தை ஏற்பதா என்று இரண்டில் ஒரு வகையில் தீர்மானிக்க வேண்டியதாயிற்று; அவர்க ளுள் பெரும்பாலோர் நாட்டுப்பற்று மிகுந்தவர்களா யிருந்த தால், தத்தம் ஊர்க் கோவில்களுக்குச் சென்று அங்கு நடந்த தொழுகை வழிபாடுகளில் கலந்துகொள்ள லாயினர்.

1. Act of Uniformity. 2 Bull of Excommunication.

அடுத்தபடி போப்பாக வந்த பதின்மூன்றும் க்ரிகொரி[1] (1572-1585) இதை நிறுத்த முயன்றார். ரோமில் அவர் ஜெஸூட் காலேஜ்[2] ஒன்று ஏற்படுத்தி அதில் தங்கள் சொந்த நாட்டில் காதொலிக் மதப்பிரசாரம் செய்வதற்கென்று சில இளம் இங்லிஷ் குருமார்களைப் பயிற்றுவிக்கலானார். தங்கள் நாட்டினரைக் காதொலிக் மதஸ்தாபனத்தில் மீண்டும் சேரும்படி தூண்டுவதற்கு ஏற்ற வழி, அதற்காகத் தங்கள் உயிரைத் தியாகஞ்செய்தலேயாம் என்று அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது. இத்தகைய ஜெஸூட் பிரசாரகருள்[3] பெயர்பெற்றவர் **டாமஸ் காம்பியன்**[4] என்பவர். அவர் 1580-ல் இங்லண்டுக்கு வந்து, நாடு முழுமையும் ஒரு வருஷ காலம் சுற்றித் திரிந்து, சில சமயங்களில் சந்தைக் கூட்டங்களில் வெளிப்படையாக உபந்நியாசம் செய்தும், சில சமயங்களில் காதொலிக்கர் வீடுகளில் ஒளிந்துகொண்டும், பிரசாரம் செய்யலானார். முடிவில் அவரைச் சிறைப்படுத்திச் சித்திரவதை பண்ணிச் சிரச்சேதம் செய்தனர். அவரது விசாரணையின்போது அரசியைத் தூஷித்து ஒரு அவமரியாதையான சொல்கூட அவர் எப்போதேனும் பேசியதாக ரூபகமாகவில்லை.

எலிசபெத் ஆட்சியின் கடைசி இருபது வருஷங்களில் மதக்கோட்பாடுகளுக்காக உயிர் துறந்த இருநூறு இங்லிஷ் காதொலிக்கருள் காம்பியன் முதல்வர். அரசியும் அவளது சபையினரும்மட்டும் அவர்கள் தண்டிக்கப்பட்டது காதொலிக்கர்களாக இருந்ததற்கு அல்லவென்றும், இராஜத் துரோகிகளாக இருந்ததற்குமட்டுமே என்றும் கூறிக்கொண்டிருந்தனர். உண்மையில் அவர்கள் அரசிக்கு விரோதமாகச் சதி சூழ்ந்தவர்க ளல்லர்.

1. Gregory XIII 2. A Jesuit College. 3. Jesuit Missionaries.
4. Thomas Campion.

எனினும், காதொலிக்கர் மதஸ்தாபனம்[1] தனக்குத் தீங்கிழைக்க முற்பட்டதற்குமுன் தான் காதொலிக்கர்களை ஒறுக்கவில்லை என்று அரசி கூறியது உண்மையே. தன் குடிகள் தன் ஆட்சிக்கு ஆதரவு காட்டியவரைக்கும் அவர்களது மதக்கோட்பாடுகளையும் ஆன்ம எண்ணங்களையும்பற்றித் தான் தெரிந்துகொள்ள விரும்பவில்லை என்று அவள் பெருமைபடுத்திக்கொண்டாள். நாட்டில் ஒற்றுமை பெருகவேண்டு மென்பதுதான் அவளது முக்கியமான கோரிக்கை. காதொலிக்கர்கள் அவள் ஆட்சியை அங்கீகரிக்கக் கூடாதென்று போப் கட்டளையிட்டபோது, அந்த ஒற்றுமைக்குப் பங்கமேற்படும்போ லிருந்தது. காம்பியன் மக்களைக் கலகஞ்செய்யத் தூண்டாவிட்டாலும், அவரது பிரசாரத்தின் பயனாக இங்லிஷ் மக்களுள் பலர் போப்பின் அதிகாரத்தை மீண்டும் ஏற்றுக்கொள்வார்களானால், அரசியின் நோக்கமெல்லாம் பாழாய்விடும்.

## இருபத்தேழாம் அத்தியாயம்

# பிரிட்டிஷ் கடல்வன்மையின்[2] ஆரம்பம்

## (1550—1580)

§ 121. பிரிட்டன் 'அலைகளை யாளத்' தலைப்பட்டதன் முன்[3]:—இங்லண்ட் கடலில் வன்மைபெற்றது ட்யூடர்களின் ஆட்சிக்காலத்தில்தான். இடைக்காலத்தில் யூரோப்பிய வியாபாரத்தின் பெரும்பாகம் மத்தியதரைக்கடலிலேயே[4] குவிந்திருந்தது; இங்லிஷ் வியாபாரிகள் அநேகமாக இங்லிஷ் சானெலிலும்[5] வடகடலிலுமே[6] தங்கள் கப்பல்களை ஓட்டிக்கொண்டிருந்தனர் (§ 86). ஏழாம் ஹென்றியின் ஆட்சிக்

1. The Catholic Church. 2. Sea-power. 3. Before Britannia ruled the waves'. 4. The Mediterranean Sea. 5. The English Channel. 6. The North Sea.

காலத்தில் பல பெரிய கடற்பயணங்களின் பலனுக, ஆசியா வுக்குப் புதிய கடல்வழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற் ருல் கடல்வழியாகச் செல்லும் வெளிநாட்டு வியாபாரத்துக் குப் பெருத்த அனுகூலங்கள் ஏற்பட்டன. மத்தியதரைக் கடலின் மதிப்பு குறைய, ப்ரான்ஸ், ஸ்பெயின், போர்ட்யுகல் நாடுகளைப்போல், இங்லண்டும் நெடுந்தூரத்துக் கடல் வியா பாரத்தில் தலையிட்டு விருத்தியடைய லாயிற்று. பழைய வைக்கிங் மூதாதையர்[1] காலத்திலிருந்து இங்லிஷ் மக்கள் இரத்தத்தில் ஊறிவந்துள்ள கடற்பயணத் துணிச்சலும் ஆர்வமும் இப்போது தாராளமாக வெளிப்படலாயின.

எனினும், எலிசபெத் ஆட்சிக்காலம் வரையில் இவற் றின் பலன் அவ்வளவு அதிகமாகத் தோன்றவில்லை. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட வழிகளை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலும் ஸ்பெயினும் போர்ட்யுகல்லுமே உபயோகப்படுத் திக்கொண்டிருந்தன. போப் ஆறும் அலெக்சாண்டர் உலகப் படத்தில் ஒரு கோட்டை வரைந்து, அதற்கு மேற்குப் பாகத் தில் கண்டுபிடிக்கப்படும் நாடுகள் ஸ்பெயினுக்குச் சொந்த மென்றும், கிழக்குப்பாகத்தில் கண்டுபிடிக்கப்படுபவை போர்ட்யுகல்லுக்குச் சொந்தமென்றும் தீர்மானித்தார் (1492). ஸ்பெயின் அரசர் சேவகத்திலிருந்த மகெல்லன்[2] என்பவர், அவர் பெயர் கொண்ட ஜலசந்தி வழியாகக் கப்ப லோட்டிச் சென்று, பசிபிக் பெருங் கடலைக்[3] கடந்து (1519-21) மீண்டும் ஸ்பெயின் நாடு திரும்பிவந்து, உலகம் உருண் டையாகத்தான் இருக்கிறதென்பதைச் சந்தேகமற ரூபித்து விட்டார். இரண்டு ஸ்பெயின் நாட்டினர் மெக்ஸிகோவிலும் (கார்ட்டெஸ்[4], 1519) பெருவிலும் (பிசாரோ[5], 1532) நாகரிக மிக்க மக்களைக் கண்டுபிடித்தனர். அவர்களிடம் ஏராளமான பொன்னும் வெள்ளியும் நவமணிகளும் இருந்தன. அவர்கள்

1. Their Viking ancestors. 2. Magellan. 3. The Pacific. 4. Cortez. 5. Pizarro.

## கடற் பயணங்கள்


பிரிட்டிஷ் தீவுகள்
1497
நியுபௌண்ட்லண்ட்
1498-9
அசோர்ஸ்
போர்ட்யுகல்
ஃப்ளோரிடா
கானரி தீவுகள்
க்யுபா
ஹிஸ்பானியோலா
தாம்பர் டி டீயோயல்
வெர்டி முனைத் தீவுகள்
அட்லான்டிக்
பெருங்
கடல்
பசிபிக்
பெருங்கடல்
ஹார்ன் முனை
நன்னம்பிக்கை முனை
கோவா
பிலிப்பைன் தீவுகள்
இந்தியப் பெருங்கடல்
ஜாவா
கொலம்பஸ் (1492)
காபட் (1497-லும் 1498-9-லும்)
மகெல்லன் (1519-22)
சான்செலர் (1533)
ட்ரேக் (1577-80)
ப்ராபிஷரும் (1576) டேவிஸும் (1585)

கையாண்ட சாதாரண பாத்திரங்களும் அவற்றால் ஆனவையே. அவ் விடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட அளவற்ற விலையுயர்ந்த செல்வங்கள் ஸ்பெயின் மன்னரது பொக்கிஷத்தை நிரப்பின.

ஸ்பெயினின் வன்மையை எதிர்த்து அவ்விடங்களுக்குச் செல்ல இங்லிஷ் கப்பலோட்டிகள் நெடுங்காலமாகத் துணியவில்லை. எட்டாம் ஹென்றி, யூரோப்பிய விவகாரங்களிலும் போப்புடன் நடத்திய போராட்டத்திலும் மூழ்கியிருந்ததால், பெருங் கடல்களைக் கடக்கும் பயணங்களில் அதிக ஊக்கங் கொள்ளவில்லை. கடைசியாகச் சில இங்லிஷ் வியாபாரிகள் ஆசியாவுடன் வியாபாரஞ் செய்ய ஒரு வழி காண முயன்றபோது, தங்கள் வன்மைமிக்க எதிரிகளோடு சச்சரவு வைத்துக்கொள்ளாமல் புது வழிகளைக் கண்டு பிடித்துக்கொண்டு போகவே தீர்மானித்தார்கள். வில்லௌபி, சான்செலர்[1] என்பவர்கள் யூரோப்பின் வடக்கில் தங்கள் கப்பல்களை ஓட்டிச் சென்று லொபோடென்[2] தீவுகளி லிருந்து வெவ்வேறு திக்குகளில் பிரிந்து சென்றார்கள் (1533). சான்செலர் வெண் கடலுக்குச்[3] சென்று ஆர்க்கேஞ்சலில்[4] இறங்கி நில வழியாக மாஸ்கோவுக்குப்[5] போய் ருஷ்யாவுடன்[6] ஒரு நல்ல வியாபாரத் தொடர்பினை உண்டாக்கி வைத்தார். வில்லௌபி பனிக்கட்டிகளிடையே சிக்கிக்கொண்டு தம் ஆட்களுடன் மாண்டார். இந்த வட கிழக்கு வழியாக[7] வேறு சிலரும் பயணப்பட்டுப்போய்ச் சொல்லமுடியாத கஷ்டங்களை மிக்க தைரியத்துடன் தாங்கினார்கள். ஆயினும், அவர்களுள் எவரும் அவ் வழியாகத் தொடர்ந்து செல்ல முடியவில்லையாதலால், அம் முயற்சி கடைசியில் கைவிடப்பட்டது. எலிசபெத் ஆட்சியின் ஆரம்பத்தில், இதேவிதமாக அமெரிக்

1. Willoughby and Chancellor. 2. Lofoden Islands. 3. The White Sea. 4. Archangel. 5. Moscow. 6. Russia. 7. A North-east Passage.

காவுக்கு வடக்காகச் சென்று ஒரு வடமேற்கு வழியைக்[1] காண, ப்ராபிஷர், ஜில்பெர்ட், டேவிஸ்[2] முதலியோர் முயன்று பயனடையாமல் திரும்பினர். மேலும், அப் பாகங்களில் மக்கள்கூட்ட மதிகமிராததால், அங்கு லாபகரமான வியாபாரத்துக்கு வசதியில்லை என்பது தெளிவாயிற்று.

§ 122. ஹாகின்ஸூம் ட்ரேக்கும்[3]:—நடு அமெரிக்காவில் ஸ்பெயின் நாட்டார் தங்கியிருந்த இடங்களுக்கு இங்லிஷ்காரர்கள் போய் வியாபாரஞ் செய்வதை ஸ்பெயின் மன்னர் தடுக்க முடியாதென்பதை சர் ஜான் ஹாகின்ஸைப்[4] போன்ற இங்லிஷ் வியாபாரிகள் நாளடைவில் கண்டு கொண்டார்கள். ஹாகின்ஸ் ப்ளிமத்தைச்[5] சேர்ந்தவர். அவர் ஸ்பானிஷ் குடியேற்றங்களி[6] லுள்ளவர்கள் தங்கள் வெள்ளிச் சுரங்கங்களிலும் கரும்புத் தோட்டங்களிலும் வேலை செய்வதற்கு ஆட்களின்றித் தவித்துக்கொண்டிருந்தார்கள் என்பதை உணர்ந்தார். அப்பாகங்களிலுள்ளவர்கள் அத்தகைய வேலைகளைச் செய்வதற்கு வேண்டிய உடலுரமில்லாதவர்கள். ஹாகின்ஸ், ஒரு கப்பலில் இரும்புச் சாமான்களை ஏற்றிக்கொண்டு ஆப்ரிகாவின் மேற்குக்கரைப் பாகங்களுக்குப் போய், அங்கு அவற்றை அரபி வியாபாரிகளிடம் நீக்ரோ அடிமைகளுக்குப் பதிலாக மாற்றி, அவ்வடிமைகளை அட்லான்டிக் பெருங்கடலின் அக் கரையில் குடியேறியிருந்த ஸ்பெயின் மக்களுக்கு ஏராளமான லாபம் வைத்து விற்றார். இம் முதல் பயணத்தால் ஹாகின்ஸ் ப்ளிமத்தின் முதல் பணக்காரராய்விட்டார்; அடுத்த பயணத்தால் இங்லண்ட் முழுமையிலும் அவருக்கு மிஞ்சிய பணக்காரர் இல்லையென்னும் நிலையை அடைந்துவிட்டார். இந்தத் துணிச்சலான பயணங்களைப்பற்றிக் கேள்விப்பட்டதும் பிலிப் மன்னர் கலவரமுற்றார். தமது அமெரிக்க நாடுகளி

1. A North-west Passage. 2. Frobisher, Gilbert, Davis. 3. Hawkins and Drake. 4. Sir John Hawkins. 5. Plymouth. 6. Colonies.

லிருந்து இங்லண்டுக்கு அவ்வளவு செல்வம் போவதும், தமது குடிகள் தங்கள் மத விரோதிகளிடம் எவ்வகையான தொடர்பு வைத்துக்கொள்வதும் அவருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, மூன்றும் பயணத்தின்போது, ஹாகின்ஸ் தாம் ஏற்றிக்கொண்டுபோன அடிமைகளை விற்றுவிட்டுத் திரும்பு வதற்கு முன் தமது நான்கு கப்பல்களையும் சான் ஜுவான் டியுஹூவா[1] பட்டணத்தின் துறைமுகத்தில் நிறுத்திப் பழுது பார்த்துக்கொண்டிருக்கையில், ஸ்பானிஷ் மக்கள் திடுமெனக் கிளம்பி அவரைத் தாக்கினர். ஹாகின்ஸ் ஒரு கப்பலுடன் திரும்புவதே பெருங் கஷ்டமாய்விட்டது (1567). திரும்பியவர் தமக்கேற்பட்ட நஷ்டத்துக்கு இங்லிஷ் துரைத்தனத்தார் ஸ்பெயினிடமிருந்து ஈடு வாங்கவேண்டு மென்று வேண்டிக்கொண்டார். ஆயினும், பிலிப்பைப் பகைத்துக் கொள்ள எலிசபெத் விரும்பாததால், அவள் இவ்விஷயத்தில் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை.

ஹாகின்ஸுடனிருந்து ஸ்பானிஷ் மக்களின் எதிர்ப்பைத் தாங்கிய ட்ரேக்[2] என்ற டெவன்ஷைர்[3] இளைஞரொருவர் எவ்விதமாவது அதற்குப் பழிவாங்கவேண்டுமென்று தம்மளவில் தீர்மானித்துக்கொண்டார். அவர் அளவு கடந்த துணிச்சலும் சுறுசுறுப்பும் சாமர்த்தியமும் மனவுறுதியும் பெற்றவர் (கு. 84). அதுமுதல் இறக்குமளவும் அவர் ஸ்பெயின் மன்னரின் நாடுகளையும் குடிகளையும் தாக்கிக் கொள்ளையிடுவதில் காலங் கழிக்கத் துணிந்தார். அவர் பெயரைக் கேட்டால் ஸ்பானிஷ் மக்கள் நடுநடுங்கலாயினர். அவரது முதல் துணிச்சலான செயல், பனமா பூசந்தியில் இறங்கி, பெரு[4] சுரங்கங்களின் செல்வங்களை ஸ்பெயினுக்குக் கப்பலேற்றி அனுப்புவதற்காகக் கோவேறு கழுதைகளின் மீது ஏற்றிவந்த ஒரு கூட்டத்தாரைத் தாக்கிக் கொள்ளையிட்டதேயாம். அவரது மிகப் புகழ்பெற்ற செயல், மகெல்லன்

1. San Juan de Ulua. 2. Drake. 3. Devonshire. 4. Peru.

ஜலசந்திவழியாகக் கப்பலோட்டிச் சென்று, பெருவில் காவலற்றிருந்த துறைமுகப் பட்டினங்களைக் கொள்ளையிட்டு, அங்கு ஏற்றுமதிக்குத் தயாராயிருந்த செல்வங்களைக் கைப்பற்றிக்கொண்டு, நன்னம்பிக்கை முனை[1] வழியாக வீடு திரும்பியதேயாம். உலகத்தைச் சுற்றிவந்த கடற் பயணங்களுள்[2] இது இரண்டாவது (1578—80). ட்ரேக்கின் கொள்ளைகளைக் கேள்விப்பட்ட பிலிப் மிகுந்த ஆத்திரங்கொண்டார். வீடுதிரும்பியதும் எலிசபெத் அவரை எவ்விதம் நடத்துவாளோ என்ற சந்தேகம் எல்லோருக்கும் தோன்றியது. பிலிப் ட்ரேக்கை ஒரு கடற்கொள்ளைக்காரனாகக் கருதி அவர் வீடு திரும்பியதும் தூக்கிலிடவேண்டுமென்றார். பிலிப்புடன் போர் தொடுக்க மனமில்லாத எலிசபெத் என்ன செய்வாள் என்று சொல்வதற்கில்லை. ஆயினும், நாளாகஆக ஸ்பெயினுடன் போர் நிகழ்ந்தாகுமென்பதை அவள் உணரலானாள். அவ்விதம் போர் நிகழும்போது அவளுக்கு ட்ரேக்கைப்போன்ற துணிச்சல் நிறைந்த அனுபவமிக்க கடல் வீரர்களின் துணை வேண்டியிருக்கும். ஆகவே, அரசி டெப்ட்பர்டுக்[3]குச் சென்று, கோல்டேன் ஹைண்ட்[4] என்ற அவரது கப்பலை அடைந்து, ட்ரேக்கை மெச்சி அக்கப்பலின் தட்டின் மீதே அவருக்கு 'சர்' என்ற வீரப்பட்டம் அளித்தாள். அதற்கப்பால் அவர் சென்ற கடற்பயணங்கள் தம்மிச்சையர்கச் செய்யப்பட்டவைகளாகக் கருதப்படுவதற்கில்லை; துரைத்தன அங்கீகாரம் பெற்றவைகளாயின.

§ 123. துரைத்தனத்தார் சம்பந்தப்படாத போர்[5]:— ஹாகின்ஸின் செயல்களையும் ட்ரேக்கின் செயல்களையும் மற்ற துணிச்சல் மிக்க கப்பலோட்டிகள் பலர் பின்பற்றலாயினர். பல ஆபத்துக்களையும் தாங்கிச் சமாளிக்கத்தக்க தைரியமும் துணிச்சலும் சாமர்த்தியமும் நிறைந்தவர்கள் அவர்களைப்

1. The Cape of Good Hope. 2. Voyages of Circumnavigation. 3. Deptford. 4. The 'Golden Hind'. 5. 'Unofficial War'.

போலவே அதிக லாபம் சம்பாதிக்கலாம். நேர்வழியில் செய்யும் வியாபாரம், அயோக்கிய வழியில் செய்யும் வியாபாரம், புது நாடுகளை ஆராய்தல், கடற்கொள்ளை, கடற்போர் முதலியவை கடற்பழக்கமுள்ள பல வாலிபர்களின் மனதைக் கவர்ந்தன. விரைவிலேயே, மதப்புற்றால் தோன்றிய வெறுப்பு, பழிவாங்கும் ஆத்திரம் முதலியவையும் பலரைத் தூண்டலாயின. இந்தக் கடற்பயணங்களை நிறுத்த எலிசபெத் எவ்வகையிலும் முயற்சிக்கவில்லை என்பதை உணர்ந்த பிலிப் தாமே அவற்றைத் தடுக்க முற்பட்டார். காதொலிக் மத விரோதிகளைத் தண்டிக்கும் 'இன்க்விசிஷன்'[1] எனப்பட்ட மதநீதிமன்றத்தைப் பிலிப் அட்லான்டிக்பெருங்கடலின் இருகரைகளிலும் ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தமான துறைமுகப்பட்டினங்களில் நிறுவினர். அதனிடம் சிக்கிய இங்லிஷ் கப்பலோட்டிகள் படாதபாடு பட்டனர். அதனால், இங்லிஷ் கப்பலோட்டிகள் முன்னினும் வைராக்கியமிக்க எதிர்ப்புமதவாதிகளாயினர்; பிலிப்பின் காதொலிக் மதப்பற்றுக்குப் பலியான தங்கள் தோழர்களுக்காகப் பழிவாங்கச் சந்தர்ப்பம் எப்போது வாய்க்குமென்று அடிக்கடி ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருந்தனர்.

ஸ்பெயின் நாட்டினரை மற்றொரு வகையிலும் தாக்கி லாபஞ் சம்பாதிக்க இங்லிஷ் கப்பலோட்டிகள் வழி கண்டுபிடித்தனர். இங்லிஷ் சானெல்[2] வழியாகத்தான் ஸ்பெயினுக்கும் அதன் வளமிக்க வெளிமாகாணமாகிய[3] நெதர்லண்ட்ஸுக்கும்[4] வியாபாரப் போக்குவரவு முதலியவை நடைபெற்றுக்கொண் டிருந்தன. சரக்குகளையும் பொன்னையும் வெள்ளியையும் ஏற்றிச்சென்ற கப்பல்கள் அவ்வழியாகத்தான் சென்றன. அக்கப்பல்கள் வேகமாகச் செல்லுவதற்கோ போரிடுவதற்கோ ஏற்றபடி கட்டப்பட்டவை

1. The Inquisition. 2. The English Channel. 3. Outlying province. 4. The Netherlands.

யல்ல. இதை யுணர்ந்து, இங்லண்டின் தென் துறைமுகப்பட்டினங்களைச் சேர்ந்த சில வாலிபக் கப்பலோட்டிகள், அடிக்கடி ஒன்றுகச் சேர்ந்து ஒரு கப்பலை விலைக்கு வாங்கி, அதை இங்லிஷ் சானெலில் செலுத்திக்கொண்டுபோய், அகப்பட்ட ஸ்பானிஷ் கப்பல்களைப் பிடித்து, நடமாட்டமற்ற ஒரு கடற்கிளைக்குக்[1] கொண்டுவந்து கொள்ளையைப் பங்கிட்டுக்கொள்ள முனைந்தனர்.*

இது கடற்கொள்ளையே.[2] ஏனெனில், இரு நாடுகளும் போர் தொடங்கவில்லை. இங்லிஷ் துரைத்தனத்தாரும் ஸ்பெயின் கப்பல்களைத் தாக்க எவருக்கும் அதிகாரமளிக்கவில்லை. எனினும், அந்தக் கப்பலோட்டிகளின் துணிச்சலையும் தைரியத்தையும் மெச்சாமலிருப்பதற்கில்லை. அவர்களின் செயல்களால் பிலிப் நெதெர்லண்ட்ஸில் கிளம்பிய கிளர்ச்சியை அடக்கமுடியாது தவித்தார். அவர் இங்லண்ட்மீது படையெடுத்து வருவதும் வருஷக்கணக்கில் தடைப்பட்டது.

§ 124. கடற்படையின் பழக்க வழக்கங்களின்[3] ஆரம்பம் :—இங்லிஷ் மக்கள் ஸ்பெயின் மன்னர் பிலிப்பை வெறுத்ததாலும், அவரது கப்பல்களையும் வெளி மாகாணங்களையும் இலேசாகக் கொள்ளையிட்டுக்கொண்டு வந்ததாலும் இங்லண்ட் கடல்வன்மை பெற்ற ஒரு நாடாயிற்று.[4] துரைத்தனத்தார் சம்பந்தப்படாத இந்தப் போரின் தனித்தன்மையால்[5] இங்லிஷ்காரரது கப்பலோட்டும் முறைகளும் கடற்போர் முறைகளுங்கூடப்[6] பெரிதும் உருவாயின.

ஸ்பெயின் நாட்டுக் கப்பற்படை[7] மத்தியதரைக்கடலில்[8] பழகி உருவானது. அது துடுப்புக்களால் செலுத்தப்பட்ட

* அரசியே இந்தக் கடற்கொள்ளைகளில் பங்குவைத்துக்கொண்டிருந்தாள் என்று சிலர் கூறினர். அவளது பிரபுக்களும் பிரதானிகளும் அவற்றில் பங்குவைத்துக்கொண்டிருந்தது உண்மையே.

1. Inlet. 2. Piracy. 3. Naval Traditions. 4. A sea-power. 5. Peculiar circumstances. 6. Seamanship and naval tactics. 7. The Spanish navy. 8. The Mediterranean.

பெரிய தோணிகளைக்[1] கொண்டிருந்தது. தோணிகள் ஒன்றையொன்று நெருங்கி முட்டி, ஒன்றிலிருக்கும் வீரர்கள் மற்றொன்றில் குதித்துச் சண்டையிடுதலே[2] அவர்களது கடற்போர் முறை.[3] பெருங்கடற் பிரயாணங்களுக்கு[4] ஸ்பெயின் நாட்டார் பாய்மரக் கப்பல்களையே உபயோகப் படுத்தினரேனும், அவற்றிலும் குதித்துச் சண்டையிடுதலுக்கு உதவக்கூடிய உயரமிக்க தட்டுக்கள்[5] இருந்ததால், காற்றில் அவை கவிழ்ந்துவிடாதபடி பார்த்துக்கொள்ளுவது பெருங்கஷ்ட மாயிற்று. உயரமிக்க அத் தட்டுக்களின்மீது இலேசான பீரங்கிகளையே வைக்கவேண்டியிருந்தது; கனம் மிகுந்த பீரங்கிகள் வெடித்தால் அவை நொறுங்கிப் பொடியாய்விடும். ஸ்பெயின் நாட்டுக் கப்பலோட்டிகள் மிகச் சாதாரணமான சதுரப்பாய்களைத்தான்[6] உபயோகிக்கக் கற்றுக்கொண்டிருந்தார்கள். காற்று நேர் முகமாக வந்து தாக்கி அடிக்கும்போது[7] அப்பாய்களை அடிக்கடி மாற்றிக் கட்டிக்கொண்டே யிருக்கவேண்டும். மேலும், ஸ்பெயின் நாட்டுப் போர்வீரர்கள் தங்களுக்கே போர்ப் பெருமை யெல்லாம் உண்டென்றும், கப்பலோட்டிகளும் அவர்களின் தலைவனும் தங்களுக்குக் கீழான அந்தஸ்து படைத்தவர்களே என்றும், குறிப்பிட்ட இடத்துக்குக் கப்பலைச் செலுத்திச் செல்வதுதான் அவர்களது வேலை என்றும் திமிருடன் கூறிக்கொண்டார்கள்.

இங்லிஷ் கப்பல்களிலோ நெருங்கிச் சண்டையிடுவதற்குப் போதிய ஆட்கள் இருப்பதில்லை. ஆயினும், கப்பல்களின் இருபக்கங்களிலும் துளைகள்செய்துவைத்துக்கொண்டு அவற்றின் வழியாக நெடுந்தூரம் குண்டுகளைப் பாய்ச்சக்கூடிய பீரங்கிகளைச் சுடுவதன் அனுகூலங்களை இங்லிஷ்காரர் அறிந்திருந்தார்கள் (கு. 69). மிகுந்த கடற்பழக்கத்தின் காரண

1. Oared galleys. 2. Ramming and boarding. 3. Sea-fighting. 4. Ocean voyages. 5. High 'Castles'. 6. The simplest sort of square sails. 7. In head-winds.

மாக, இங்லிஷ் கப்பலோட்டிகள், சதுரப் பாய்களுடன் முன் பாய்களையும் பின்பாய்களையும்[1] முக்கியமாகக் கலந்து கட்டியோட்டினுல், கடுங்காற்று வீசும் சமயங்களில் கப்பல்களை இலேசாகச் சம்மாளிக்க முடியுமென்பதையும் கண்டறிந்திருந்தார்கள். மேலும், கப்பலோட்டும் ஆட்களுக்கும் ஒரு பயணத்தில் கிடைக்கும் லாபத்தில் பங்குண்டு என்னும் திட்டத்தினுல், ஒவ்வொரு கப்பலிலும் ஆட்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையினராகவே இருந்தனர். அதனுல், எல்லோரும் கப்பலோட்டுவதிலும் பீரங்கிகளைச் சுடுவதிலும் கலந்து உழைத்தனர். இந்தப் பழக்கம்[2] எதிரிகளுக்கில்லாத ஒரு பெரிய அனுகூலத்தை இங்லிஷ் கப்பற்படைக்கு அளித்தது.

இந்தப் பழக்கங்களின் மேன்மையைப் பரிசோதிக்க ஒரு சிறந்த சந்தர்ப்பம் நெருக்கத்திலேயே நேரலாயிற்று. அதனுல், இங்லண்டுக்கு ஒரு பெரிய கடல்வெற்றி கிடைத்து, அதன் மக்களின் வாழ்க்கைப் போக்கிலேயே ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது.

## இருபத்தெட்டாம் அத்தியாயம்

# ஆட்சியின் பெருஞ் சம்பவம்

(1580—1588)

§ 125. ப்ரான்ஸுடன் கூட்டுறவு[3] :—இரண்டாம் பிலிப்பின் தாக்குதலை எலிசபெத்தால் தடுக்க முடியாதென்பது 1580-க்குள் தெளிவாய்விட்டது. அவள் ஆட்சியின் தொடக்கத்தில் ப்ரான்ஸின் பகைமைக்கு அதிகமாக அஞ்சுவதா, ஸ்பெயினின் பகைமைக்கு அதிகமாக அஞ்சுவதா என்னும் சந்தேக மிருந்தது. இப்போது அந்தச் சந்தேக நிலை மாறிவிட்டது. மேரி ஸ்டுவர்ட்[4] ப்ரெஞ்சு ஆதரவை எதிர்பார்ப்

1. Fore-and-aft sails. 2. Tradition. 3. Alliance with France.
4. Mary Stuart.

பதை விட்டாள். பிலிப்புக்கு வயது ஏற ஏற அவர் உலகத்தி னின்றும் எதிர்ப்பு மதத்தை வேரோடு களைந்தெறிவதி லேயே தமது முழு கவனத்தையுஞ் செலுத்தலானார். போர்ட்யுகல்லும் அவர் பேரரசில் சேர்ந்துவிட்டது. அத னால், அவரது இராச்சியம் முன்னைவிட ஏறக்குறைய இரண் டத்தனைப் பெரிதானதுடன், அட்லான்டிக் கடற்கரையோரம் இன்னும் பல நல்ல துறைமுகப் பட்டினங்கள் அவர் வச மாயின. உலகமுழுமையும் ஸ்பெயின் மன்னர் வசமாகி விடுமோ என்ற அச்சம் இங்லண்டின் துணையை நாடும்படி ப்ரான்ஸ் மன்னரைத் தூண்டியது.

இந்த மாதிரி சந்தர்ப்பங்களிலெல்லாம் இருநாடுகளின் அரசகுடும்பங்களையும் ஒற்றுமைப்படுத்திவைக்க ஒரு ராஜ கலியாணம்[1] நடப்பது வழக்கம். அரசியின் கலியாண விஷய மாக இங்லண்டிலும் வெளிநாடுகளிலும் நெடுங்காலமாகப் பலர் கவலையுடன் பேசிக்கொண்டிருந்தனர். எலிசபெத் குழந்தையில்லாது இறப்பாளானால், அரசமுடி, பரம்பரைப் பாத்தியதைப்படி,[2] காதொலிக் கொள்கையினளாகிய மேரி ஸ்டுவர்ட்டுக்கே[3] உரியதாகும். இந்நிலை, உறுதியான எதிர்ப்பு மதவாதிகளான[4] அரச சபையினர்க்கும் பார்லமென்ட் சபையி னர்க்கும் திகிலை உண்டாக்கியது. எதிர்ப்புக் கொள்கை யினரான இங்லிஷ் சீமான் எவரையேனும் கலியாணம் செய்துகொள்ளும்படி அவர்கள் அவளை அடிக்கடி வேண்டிக் கொண்டனர். ஆயினும், அவள் தான் கலியாணஞ்செய்து கொள்ளாமலிருந்ததே வெளிநாட்டு விவகாரங்களைச் சமா ளிக்கத் தனக்கு அனுகூலமாயிருந்ததென்பதை உணர்ந் தாள். வெளிநாட்டு மன்னர்களும் தம்முள் எவரையேனும் அவள் கலியாணம் செய்துகொள்ளுவாளென்று நம்பியிருந் தனர். மேலும், ஏதாவதொரு விஷயத்தைப்பற்றி விரைவில்

1. A royal marriage. 2. Hereditary right. 3. The Catholic Mary Stuart. 4. Firm Protestants.

முடிவுக்கு வருவது அவளுக்குப் பிடிக்காது. ஆகவே, தன் கலியாண விஷயத்தைப்பற்றி யாதொரு முடிவுக்கும் வராமலேயே அவள் பல வருஷங்களைச் செல்லவிட்டாள். தனக்கு ஐம்பது வயதானபோதுகூட இந்தத் தந்திரத்தைக் கையாள அவள் தயங்கவில்லை. ப்ரான்ஸ் மன்னரின் தம்பியான ஆஞ்சூ கௌன்ட்[1] அவள் மனதைத் திருப்ப முயல்வதற்காக இங்லண்டுக்கு வந்தார். வயதளவில் அவர் எலிசபெத்துக்குப் பிள்ளையாகவும் இருக்கலாம். அவர் மாப்பிள்ளைக்கு உரிய மரியாதைகளுடன் நடத்தப்பட்டாரேனும், இங்லண்டை விட்டுப் போகும்போது அவர் கலியாணஞ் செய்துகொள்ளாமலேயே போனார். அடுத்த வருஷம் அவர் இறந்துவிட்ட செய்தி எட்டியபோது எலிசபெத் சிறிதும் வருத்தப்பட்டதாகக் காட்டிக்கொள்ளவில்லை.

§126. **போருக்கு அடிப்படைகள்:**—1583-ல் அரசியின் உயிரை மாய்க்கச் சூழ்ந்த மற்றொரு சதியைப் பர்லி[2] பிரபு கண்டுபிடித்தார். த்ராக்மார்ட்டன்[3] என்ற ஒரு காதோலிக் கனவான் வீட்டில் கைப்பற்றப்பட்ட சில கடிதங்களின் மூலம் அந்தச் சதியில் போப்பும் மேரி ஸ்டூவர்ட்டும் ஸ்பெயின் நாட்டு இராயபாரியும்[4] சம்பந்தப்பட்டிருந்ததாகத் தெரியவந்தது. மேரியை விசாரணைக்குக் கொண்டுவர வேண்டுமென்று பலர் கூறியதற்கு எலிசபெத் ஒப்புக்கொள்ளவில்லை. அரசியாக இருந்தவளை நியாயவாதிகள் கூடிய ஒரு நீதிமன்றத்தின் முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்துவது அரசபதவிக்கே அவமதிப்பைத் தேடி வைப்பதாகுமென்று அவள் கருதினாள். ஆயினும், மேரிக்கு முன்னிலும் பலத்த காவல் போட்டுவைத்தாள். பிலிப் மன்னர் தம் இராயபாரியின் செயல்களைப்பற்றித் தமக்கொன்றும் தெரியாதென்று கூறிவிட்டார். எலிசபெத் அதை நம்ப

1. The Count of Anjou. 2. Burghley. 3. Throgmorton.
4. Ambassador.

வில்லையாயினும், அவரோடு போர் தொடுக்க அஞ்சி அப்படியே விட்டுவிட்டாள்.

1584-ல் ஸ்பெயின் மன்னர் பணங்கொடுத்து ஏவிய ஒரு கொலையாளி ஆரஞ்சு சிற்றரசரான வில்லியத்தைக் கொன்றுவிட்டான். தங்கள் சாமர்த்திய மிக்க தலைவர் போனது நெதர்லண்ட்ஸ் மக்களுக்கு ஒரு பெரிய நஷ்டமே. பிலிப் அவர்களை எளிதில் அடக்கிவிடுவார்போல் தோன்றியது. அவர்களை அடக்கிவிட்டால், நெடுங்காலமாகத் தள்ளிவைக்கப்பட்டிருந்த இங்லண்ட் படையெடுப்பை அவர் தாமதமின்றித் தொடங்கலாம். அந்தப் பேராபத்தினை இன்னும் சில ஆண்டுகள் தடுத்துவைக்கும் நோக்கத்துடன் எலிசபெத் இரண்டு காரியங்களைச் செய்தாள். ஆயினும், அவற்றின் பயனாக அப் படையெடுப்பு முன்னினும் அவசியமாய்விட்டது.

முதலில், அவள் பிலிப்பின் பெருஞ் செல்வத்தின் மூலாதாரத்தைத் தாக்க ட்ரேக்கை அனுப்பினாள். இச்சமயம் ட்ரேக்கைக் கடற்கொள்ளைக்காரன் என்று சொல்வதற்கில்லை. ட்ரேக், அரசியின் ஆஞ்ஞையைப் பெற்று, அவளது கப்பற் படையைச் சேர்ந்த முப்பது போர்க் கப்பல்களைத் திரட்டிக்கொண்டு, வீகோ, வெர்டிமுனைத் தீவுகள், சாங் டொமிங்கோ, கார்ட்டஹேனா[1] முதலிய இடங்களுக்குச் சென்று, சரக்குகளைக் கொள்ளையடித்தும் கப்பல்களை அழித்தும் கலவரத்தையும் பீதியையும் உண்டாக்கினார்.

இரண்டாவது, நெதர்லண்ட்ஸ் நாட்டினரை ஆதரிக்க எலிசபெத் ஒரு சேனையை அனுப்பினாள். அத்தகைய சேனையொன்றை அனுப்பிவைக்கும்படி அவர்கள் அடிக்கடி கேட்டிருந்தனர்; தங்களை அவளது குடிகளாக ஏற்றுக் கொள்ளும்படியும் வேண்டினர். இதுவரை அவர்களது

1. Vigo, Cape Verde Islands, San Domingo, Cartagena.

மார்கரெட் டின்மகேல் எலிஸ்பெத் பேரான்

வேண்டுகோளுக்கு இணங்காதிருந்த எலிசபெத், இனி அவர்களது எதிர்ப்பு உதவியின்றி நீடித்து நிலைக்காதென்பதை உணர்ந்து, ‘நெதர்லண்ட்ஸ் காவலர்’[1] என்னும் பட்டத்தை ஏற்றுக்கொண்டு லெஸ்டர் ஏர்லின்[2] தலைமையில் ஆறாயிரம் போர்வீரர்களை அனுப்பினாள்.* எலிசபெத் கையாண்ட சிக்கனம் இந்தப் படை வெற்றிபெறுவதற் கியலாதவாறு செய்துவிட்டது. அதன் முஸ்தீப்புக்களுக்கும் உணவுக்கும் போதிய பணம் அளிக்கப்பெறவில்லை. மேலும், லெஸ்டர் ஏர்லுக்கு ஒரு படையை வெற்றிக்கு நடத்திச் செல்லும் திறமையுமில்லை. அம்முயற்சி அவமானத்தோடும் தோல்வியோடும் முடிந்தபோதிலும், அது வெளிப்படையாக ஸ்பெயினுக்கு விரோதமாகச் செய்யப்பட்ட போர் முயற்சி என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இனி எவ்வளவு காலந்தான் பிலிப் பொறுமையோடு இருக்க முடியும்?

§ 127. மாஜி அரசி மேரியின் சிரச்சேதம்:—முடிவில் நிகழ்ந்த மற்றொரு நிகழ்ச்சியால் பிலிப்பின் தீர்மானம் உறுதி பெற்றது.

மேரி ஸ்டுவர்ட் உயிரோடிருக்கும் வரையில் அரசிக்கும் அரச சபை அங்கத்தினர்க்கும் ஆபத்தே என்று அவர்கள் நெடுங்காலமாக அபிப்பிராயங்கொண்டிருந்தனர். நாட்டு மக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் அநேகமாக இன்னும் அந்தரங்கத்தில் காதொலிக்கரே. அவர்களுள் சிறுபான்மையோரே நாட்டு ஒற்றுமையின்[3] உயிர்நிலையாகிய தம் அரசியை வெளிப்படையாக எதிர்க்கத் துணியலாமெனினும்,

* அப்படை ஜட்பென்[4] என்னுமிடத்தை முற்றுகையிட்டது. அவ்விடத்தில்தான், இறக்குந்தருவாயிலிருந்த சர் பிலிப் சிட்னி[5], தம் தாகத்தைத் தணித்துக்கொள்ளாமல், சுயநலமற்ற பெருமனதுடன், தமக்குக் கொண்டுவந்த தண்ணீரை அருகில் படுகாயமுற்றுக் கிடந்த மற்றொரு ஏழைப் படைவீரனுக்குக் கொடுக்கும்படி செய்தார்.

1. “Protector of the Netherlands” 2. Earl of Leicester. 3. The national unity. 4. Zutphen. 5. Sir Philip Sidney.

எலிசபெத் இறப்பாளானல் (இயற்கையாகவேனும் கொலையாலேனும்) அடுத்த வாரிசான காதொலிக் அரசி மேரியை ஆதரிக்க அவர்களனைவரும் முனைந்து நிற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அப்போது எலிசபெத்தின் மந்திரிமார்களது கதியென்ன? த்ராக்மார்ட்டன் சதியும் ஆரஞ்சு சிற்றரசரின் கொலையும் எலிசபெத்தினது உயிரைப் பத்திரமாகப் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தைத் தெளிவாக்கின. ஆகவே, அவளது மந்திரிகள் ஒரு பாதுகாவற் சங்கத்தை[1] ஏற்படுத்தினர்கள். அதன் அங்கத்தினர்கள், எலிசபெத் கொலையுண்டால், தாங்களெல்லோருஞ் சேர்ந்து கொலைகாரர்கள்மீது பழிவாங்குவதோடு, அவர்கள் யாருக்காகக் கொலை செய்தார்களோ அவள்மீதும் பழிதீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் வாக்குறுதி செய்துகொண்டார்கள்.

இதற்கெல்லாம் முன்னின்று வேலை செய்தவர் எலிசபெத்தின் மந்திரிகளுள் ஒருவரான சர் ப்ரான்ஸிஸ் வால்சிங்காம்[2] என்பவர். நெடுநாள் பழக்கத்தால் சதிகளைக் கண்டுபிடிப்பதில் அவர் நிபுணராயிருந்தார். பிறர்க்கு எழுதப்பட்ட கடிதங்களைப் பிரித்துப் பார்த்து மீண்டும் ஒட்டி முத்திரையிட்டு அனுப்புவதிலும், சித்திரவதை செய்து ஆட்களிடமிருந்து இரகசியமான தகவல்களைத் தெரிந்துகொள்வதிலும் அவர் சமர்த்தர். மேரியை ஒரு வலையில் சிக்கவைக்க மிகத் தந்திரமாக அவர் ஒரு சூழ்ச்சி செய்தார். அவருடைய வேவுகாரர்களுள் ஒருவன், பாபிங்டன்[3] என்ற ஒரு காதொலிக்கனை, ஸ்பெயின் உதவியுடன், எலிசபெத்தை சிம்மாசனத்தினின்றும் இறக்க ஒரு சதி சூழும்படி தூண்டினன். அது சம்பந்தமாக எழுதப்பட்ட இரகசிய கடிதங்களின் பிரதிகளை எடுத்து வால்சிங்காம் எலிசபெத்துக்குக் காட்டினர். முடிவில் மேரியைக் காவல் வைத்திருந்த பாதெரிங்கே

1. "Bond of Association." 2. Sir Francis Walsingham. 3. Babington.

கல்லரணி[1]லேயே ஒரு விசாரணை மன்றத்தை அமைக்க எலிசபெத் ஒப்புக்கொண்டாள். மாஜி அரசி மேரி இந்தச் சதியைப்பற்றித் தனக்குத் தெரியாதென்று சொல்லவில்லை; எலிசபெத்தைக் கொல்லுவதற்குத் தான் எப்போதும் ஒப்புக்கொண்டதில்லை என்று மட்டும் சாதித்தாள்.

விசாரணை மன்றத்தினர் மேரிக்குச் சிரச்சேத தண்டனை விதித்தனர். சிரச்சேத உத்தரவில்[2] கையொப்பமிட எலிசபெத் பெரிதும் தயங்கினாள்; ஆயினும், அவளது சபையினர் அவளைத் தீவிரமாக வற்புறுத்தியதன்மேல் ஒப்புக்கொண்டாள். பாதெரிங்கே கல்லரணின் நடுக்கூடத்தில் மேரி சிரச்சேதஞ் செய்யப்பட்டாள். அவள் அப்போது ஒரு உண்மையான இராணியைப்போல் மிகவும் கண்ணியமாக நடந்துகொண்டாள். லண்டன் மக்கள் இச் செய்தியைக் கேட்டுத் தெருக்களில் சொக்கப்பானைகள்[3] மூட்டிக் களியாட்டங் கொண்டாடினர். ஆயினும், எலிசபெத் மட்டும், தன் உத்தரவை நிறைவேற்றுவதில் தனக்கு விருப்பமில்லை என்று பாசாங்கு பண்ணி, அதை நிறைவேற்றிய தன் மந்திரியைச் சிறையில் வைத்தாள். அவர் அவளது ஆட்சிக் காலம் முடியும் வரையில் சிறையிலேயே காலங் கழித்தார்.

§ 128. **மதப்போருக்கு எத்தனங்கள்:**—இங்லண்டைக் கைப்பற்ற முன்னிருந்தே பிலிப் ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார். தமக்கு அடங்காத குடிகளுக்கு எலிசபெத் உதவி புரிந்ததும், ட்ரேக் அமெரிக்காவில் சேதம் விளைத்ததும், பிலிப்பை, அவரது பழைய திட்டத்தை மாற்றி, நெதர்லண்ட்ஸை அடக்குவதற்கு முன்னமே இங்லண்டைக் கைப்பற்றவேண்டுமென்று தீர்மானிக்கச் செய்தன. இங்லண்ட் அரச முடிக்குக் காதொலிக் வாரிசான மேரி ஸ்டூவர்ட் உயிருடன் இருந்தவரைக்கும் பிலிப் தயங்கினார். அவள் பிறப்பிலும் வளர்ப்பிலும் உண்மையில் ஒரு பிரெஞ்சுக்காரியே என்

1. Fotheringay Castle. 2. Death warrant. 3. Bonfires.

பதை அவர் மறந்துவிடவில்லை. எதிர்ப்பு மதத்துக்கு அடுத்தபடியாக அவர் ப்ரான்ஸை வெறுத்தார். அவள் இறந்ததும் இங்லண்ட் அரச முடிக்குத் தாமும் ஒரு வாரிசு என்று பிலிப் சொல்லிக்கொண்டார்.* மேலும், மேரி தன் உயிலில்[1] தனது உரிமைகளை பிலிப்புக்கு அளித்துவிட்டுப் போய்விட்டாள்.

ஆகவே, பிலிப் இங்லண்ட்மீது படையெடுத்தற்கான முஸ்தீப்புக்களைப் பெருவாரியாகவும் அதிக மும்முரமாகவும் செய்யலானர். இருபதினாயிரம் போர்வீரர்கள் ஸ்பெயினில் இப்படையெடுப்புக்குப் பழக்கிவைக்கப்பட்டனர். அவர்களை ஏற்றிக்கொண்டுபோக பிலிப்பின் பெரிய கப்பற்படை முழுமையும் கேடிஸ்[2] துறைமுகத்தில் திரண்டுகொண் டிருந்தது. இதற்கென்றே அழகு மிக்க பல பெரிய கப்பல்கள் புதிதாகக் கட்டப்பட்டன. அது 'தோல்வியுறமுடியாத கப்பற்படை'[3] என்று கூறப்பட்டது. அக்கப்பற்படை, ஸ்பெயினில் பழக்கிவைக்கப்பட்டிருந்த இருபதினாயிரம் போர்வீரர்களை ஏற்றிக்கொண்டு நெதர்லண்ட்ஸுக்குப் போய், அங்கிருந்த முப்பதினாயிரம் பண்பட்ட போர்வீரர்களையும் அழைத்துக் கொண்டு இங்லண்டை அடையவேண்டுமென்பது ஏற்பாடு. அச்சிறிய தீவிலிருந்த பண்ணுருத குடியானவர்கள்படை[4] ஸ்பெயின் நாட்டுப் பெருமைமிக்க வீரர்கள் கையில் சிக்கிச் சின்னபின்ன முறவேண்டியதுதான்.

ஸ்பெயின் படையை இங்லண்ட் கடற்கரையில் இறங்க விடாதபடி செய்துவிட்டால்தான் இங்லண்ட் தப்பலாம். எலிசபெத்தோ மிக்க சிக்கனக்காரி. தன் கப்பற்படையைப் பெருக்கவோ, அதற்குத் தேவையான முஸ்தீப்புக்களைச் சேகரிக்கவோ அதிக பணம் செலவிட அவளுக்கு மனமில்லை.

* அவர் மூன்றும் எட்வர்டின் பெண் வழி வந்தவர்.

1. Will. 2. Cadiz. 3. "The Invincible Armada." 4. Yeomen of the Guard.

தன் தகப்பன் காலத்துக் கப்பல் படையை அவள் அதிகமாக விருத்தி செய்யவில்லை. அதிர்ஷ்ட வசமாக அப்போது அவளது கப்பற்படைப் பொக்கிஷதாரராயிருந்த[1] சர் ஜான் ஹாகின்ஸ்[2] மிக்க சுறுசுறுப்பும் சாமர்த்தியமுமுள்ளவர். அவர் கிடைத்த கப்பல்களையும் பணத்தையும் கொண்டு மிகத் திறமையாக நாட்டைக் காக்க ஏற்பாடுகள் செய்தார். மேலும், அக் காலம், வெளிநாட்டுக் கடல் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த கப்பல்களெல்லாம், கடற்கொள்ளைக்காரர்கள், வியாபாரத்தில் போட்டியிடும் அந்நியர்கள் முதலியவர்களின் எதிர்ப்பைத் தாங்கவல்லவைகளாக இருக்கவேண்டியிருந்ததால், வியாபாரக் கப்பல்களுக்கும் சண்டைக் கப்பல்களுக்கும் அதிக வேற்றுமை இல்லை. ஆகவே, லண்டன், பிரிஸ்டல், ப்ளிமத், செளதாம்டன் முதலிய பட்டினங்களின் வியாபாரிகள், ஸ்பெயின் கப்பற்படை புறப்படப்போகிறதென்ற செய்தி தெரிந்ததும், தத்தம் கப்பல்களைச் சொந்த செலவில் போர்க்கு ஆயத்தமாக்கினார்கள். இராணி அவ்விதம் நடக்குமென்று எதிர்பார்த்துத்தான் சிக்கனமாயிருந்தாள்.

அந்த ஆபத்தான நிலையில் இங்லிஷ் மக்கள் அதற்கு முன் தோன்றாத ஒரு உற்சாகமிக்க ஒற்றுமையுணர்ச்சியோடு இருந்ததே நாட்டுக்கு ஒரு பெரிய பாதுகாப்பாயிற்று. பிலிப் இங்லிஷ் காதொலிக்கர்கள் தமக்குத் துணை செய்வார்களென்று எதிர்பார்த்தார். ஆயினும், அவர் அரசமுடிக்கு உரிமை பாராட்டியது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இங்லிஷ் மக்களுள் (அவர்கள் மதக்கோட்பாடுகள் எவ்வாறிருந்தபோதிலும்) இரண்டாம் பிலிப்பின் குடிகளாக இருக்க விரும்பியவர்கள் எவருமிலர் என்றே சொல்லலாம். எல்லா வகுப்புக்களையும் சார்ந்த காதொலிக்கர்கள் அரசியின் கப்பல்களிலேனும் சேனைகளிலேனும் சேர்ந்து ஸ்பெயின்நாட்டுப் புகழ்

1. Treasurer of the Navy. 2. Sir John Hawkins.

பெற்ற காலாட்படைகளைத் தாக்குதற்குத் தேவையான பயிற்சிகளைப் பெறத் திரண்டு வந்தனர்.

எப்பிங்காம் பிரபு ஹவர்ட்[1] இங்லண்ட் கப்பற்படையின் தலைவராக நியமிக்கப்பட்டார். இத்தகைய பெரிய பதவிகளைப் பெருங்குடியிற் பிறந்தவர்களுக்கே கொடுப்பதென்பது அக் காலத்திய வழக்கம். அவருக்குக் கடற்போர்களைப் பற்றிய அனுபவம் அதிகமில்லையாயினும், அவர் ட்ரேக், ஹாகின்ஸ், ப்ராபிஷர் முதலியவர்களடங்கிய ஒரு போராலோசனைச் சபையின்[2] யோசனைப்படி எதையுஞ் செய்யத் தீர்மானித்தார்.

§ 129. "கடவுள் ஊதினர்; அவர்கள் சிதறியோடினர்"*[3]:—ஸ்பெயின் கப்பற்படை (ஆர்மடா)[4] புறப்படுவதற்கு ஒன்றன்பின் ஒன்றாகப் பல தடைகள் ஏற்பட்டன. முதலில், ட்ரேக் கேடிஸ்[5] துறைமுகத்துக்குச் சென்று அங்கிருந்த கப்பல்களையும் சாமான்களையும் அழித்தார். அதனால் அவர் "ஸ்பெயின் மன்னரின் தாடியைக் கரித்துவிட்ட"தாகப்[6] பெருமை பாராட்டினர். அதற்கப்பால், பிலிப் நியமித்த அனுபவமிக்க கப்பற்படைத் தலைவர் இறந்துவிட்டார். அடுத்தபடி அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட பிரபு அதற்குமுன் கடற்பிரயாணமே செய்யாதவர். கடைசியாக, எல்லா முஸ்தீப்புக்களுடனும் அக் கப்பற்படை புறப்பட்டபோது, வழியில் அது ஒரு பெரும் புசலில் சிக்கிப் பழுதுபட்டுத்

---

* இம்மொழிகள் இவ்வெற்றியின் ஞாபகச்சின்னமாக அளிக்கப்பட்ட பதக்கங்களில் அச்சடிக்கப்பட்டிருந்தன. ஆயினும், இங்லிஷ் கப்பற்படையானது ஸ்பெயின்நாட்டுக் கப்பற்படையைத் தோற்கடித்த பின்னர்தான் புசலடித்து அத்தோல்வியைப் படுதோல்வியாக்கியது. எலிசபெத்தும் அவள் மந்திரிகளும் கடவுள் தங்கள் பக்கம் இருந்தார் என்பதைச் சொல்லி பிலிப்பை அவமானப்படுத்த விரும்பினர்கள்.

1. Lord Howard of Effingham. 2. Council of war. 3. 'God blew, and they were scattered.' 4. The Armada. 5. Cadiz. 6. 'Singed the King of Spain's beard.'

இந்நூல் அலோசனைக்கு ஆற்காடு ராமசுவாமி ... விடைந்.

துறைமுகத்துக்குத் திரும்பிப் பழுதுபார்த்துக் கொள்ள அங்கே சில காலம் தங்கவேண்டியதாயிற்று.

இந்தத் தடைகள் இங்லண்டுக்கு அனுகூலமாயிராமல் பிரதிகூலமாக முடியுமோவென்று அஞ்சவேண்டியதாயிருந்தது. முடிவில், ஸ்பெயின் நாட்டுக் கப்பற்படை (ஆர்மடா) இங்லிஷ் சானலை அடைந்தபோது இங்லிஷ் கப்பற்படை ப்ளிமத் கடல்வாயி[1]லிருந்தது. ஒருவருஷ காலமாகப் படையெடுப்பை எதிர்பார்த்து எதிர்பார்த்துச் சலித்த எலிசபெத், சிக்கனத்தை முன்னிட்டு, தன் கப்பல்களை யெல்லாம் துறைமுகத்துக்குக் கொண்டுவந்து சேர்த்துவிடும்படி கட்டளையிட்டிருந்தாள். ஸ்பெயின் கப்பற்படை இங்லண்டை நெருங்கி உடனே போர்தொடுத்திருக்குமானால், இங்லிஷ் மக்கள் அநேகமாகத் தோற்றுவிட்டிருப்பார்கள். ஆயினும், பிலிப் தம் கப்பல்கள் நேராக நெதர்லண்ட்ஸுக்குப் போகவேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார். அக்கட்டளைப்படியே அவை இங்லண்ட் பக்கம் திரும்பாது சென்றன. அதனால், இங்லிஷ் கப்பற்றலைவர்களுக்குத் தத்தம் கப்பல்களைக் கடற்பயணத்துக்கு ஆயத்தமாக்கிக் கொண்டுவரப் போதிய அவகாசம் கிடைத்தது. ஆயத்தப்படுத்திக்கொண்டு வந்தவர்கள், ஸ்பெயின் கப்பல்களைப் பின்னிருந்து துரத்திக் கொண்டுபோய், சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் அவைகளோடு போரிட்டுக்கொண்டே சென்றார்கள். அதற்குக் காற்றும் அவர்களுக்குச் சௌகரியமாக இருந்தது.

எண்ணிக்கையளவில் இரு கப்பற்படைகளும் ஒத்தபலம் கொண்டவையே. ஸ்பெயின் கப்பல்களுள் பல மிகப் பெரியவைகளா யிருந்தபோதிலும், அவற்றால் தீமையேயொழிய நன்மை யேற்படவில்லை. பெருத்திருந்தபடியால் அவைகளைக் குறிவைத்துச் சுடுதல் எளிதாயிற்று. கடுங்காற்று வீசிய தருணங்களில் அவைகளுக்கு ஆபத்து நேராதபடி

1. Plymouth Sound.

காத்தலும் கஷ்டமே. மேலும், அவற்றின் தட்டுக்களில் குவிந்திருந்த போர்வீரர் கூட்டங்கள், எதற்கும் உபயோகப் படாமல், போரிடாமலேயே எளிதில் பீரங்கிக் குண்டுகளுக் குப் பலியானார்கள். இங்லிஷ் கப்பலோட்டிகளோ, ஸ்பானிஷ் குண்டுகளுக்கு இலக்காகாமல், தூரத்திலிருந்து கொண்டே தங்கள் பக்க பீரங்கிகளைச் சுட்டுக்கொண்டே இருந்தார்கள்.

இரவு வந்ததும் காலி[1] துறைமுகத்துக்கு வெளியே ஆர்மடா நங்கூரம் பாய்ச்சித் தங்கியது[2]. அப்போது, இங்லிஷ் மாலுமிகள் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்த கப்பல்களைக் காற்றின் போக்கிலும் அலையேற்றத்தின்[3] போக்கிலும் எதிரிகளின் கப்பல்களினிடையே செலுத்திப் பெரும் பீதி விளைவித்தார்கள். திகில்கொண்ட ஸ்பானிஷ் கப்பல் தலைவர்கள் விரைவாக நங்கூர வடங்களைத் துண்டித்துக்கொண்டு[4] தங்கள் கப்பல்களை க்ரேவ்லீன்[5] என்னுமிடத்தை நோக்கி மிதக்கவிட்டார்கள். அங்கும், அடுத்த நாள், இங்லிஷ் கப்பல்கள் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று கருணையின்றித் தாக்கின. அப்போது பலமாக அடித்துக்கொண்டிருந்த காற்று விரைவிலேயே கடும்புசலாக மாறி அடிக்கலானது. அதை எதிர்த்து நிற்க முடியாமல் ஸ்பெய்ளின் கப்பற்படை வடகடலுள்[6] ஓடியது. ட்ரேக் அதைத் துரத்திச் சண்டையிட்டுக்கொண்டே நெடுந்தூரம் சென்றார். அவர்களால் நெதெர்லண்ட்ஸ் பக்கம் திரும்பவும் முடியவில்லை. பிறகு வெடிமருந்து இல்லாமையால் ட்ரேக் அவர்களைச் சும்மா ஓடவிட்டுவிட்டார். ட்ரேக்கின் வேலையைப் புயற்காற்று முடித்து விட்டது. அப் புசலில் சிக்கிய அழகான கப்பல்கள் ஸ்காட்லண்ட் அயர்லண்ட் நாடுகளின் மேற்குக் கடற்கரைப்பக்கமுள்ள பாறைகளில் மோதுண்டு சுக்கல் சுக்கல்களாக

1. Calais. 2. Anchored. 3. The tide. 4. Cut their cables.
5. Gravelines. 6. The North Sea.

உடைந்துபோயின. சில வாரங்களுக்கு முன்னர் ஒவ்வொரு ஸ்பெயின் நாட்டானது மனதையும் பெருமையுடன் விம்மச் செய்து உலகத்தின் ஆச்சர்யங்களுள் ஒன்ருக மதிக்கப்பட்ட கம்பீரமிக்க அக்கப்பல்களின் கதி இவ்வாருகுமென்று யார் தான் எதிர்பார்த்திருக்க முடியும்! இலையுதிர் காலம் வந்ததும், மோதுண்டு முறிந்த சில கப்பல்களின் அடிப்பாகங்கள்[1] மட்டும், உயிருள்ள எலும்புக் கூடுகளைப் போல் காணப்பட்ட சில கப்பலோட்டிகளின் முயற்சியால், ஒவ்வொன்ருகப் புறப்பட்டவிடம் திரும்பிவரலாயின.

## இருபத்தொன்பதாம் அத்தியாயம்

## பரந்த நாட்கள்[2]

(1588—1603)

§ 130. வெற்றியின் பலன்கள்:—யூரோப் சரித்திரத்திலும் இங்லண்ட் சரித்திரத்திலும் ஆர்மடாவின் தோல்வி ஒரு முக்கிய சம்பவம். காதொலிக்காது எதிர் இயக்கம்[3] பிலிப்பின் பெருமைமிக்க கப்பற்படை புறப்பட்டபோது உச்ச நிலையை அடைந்தது. அது வெற்றிபெற்று, அதன் பயனுக இங்லண்ட் மீண்டும் காதொலிக் மதஸ்தாபனத்தின் அதிகாரத்துக்குள் அடங்கியிருக்க இணங்கியிருக்குமானல், எதிர்ப்புமதம்[4] ஜெர்மனியிலிருந்தும் நெதெர்லண்ட்ஸிலிருந்துங்கூட வேரோடு களையப்பட்டிருக்கும். இரண்டு வாரத்துச் சம்பவங்களால் இதெல்லாம் நடப்பதற்கில்லை என்பதும், இனி எதிர்ப்புமதமே நிலைத்துப் புது நாகரிகத்தை உருவாக்கப்போகிறதென்பதும் நிச்சயமாகிவிட்டன. இவ் வெற்றியால், இங்லண்ட் மக்களுக்கு ஒரு புது தைரியமும் பெருமையுணர்ச்சியும் தங்கள் ஆற்றலில் நம்பிக்கையும் தோன்றின.

1. Battered hulks. 2. 'The Spacious Days'. 3. The Catholic reaction. 4. Protestantism.

முப்பது ஆண்டுகளாக, உலகத்தில் வன்மைமிக்க அரசாங்கங்களுள் ஒப்புயர்வற்றதாகக் கருதப்பட்ட ஒன்றின் படையெடுப்பை எதிர்பார்த்து எதிர்பார்த்து நாடு அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தது. முடிவில் படையெடுப்பும் நிகழ்ந்தது; நாடு வெற்றிகரமாக ஆபத்தைச் சம்மாளித்து நின்றது. இனி இங்லிஷ் மக்கள் உலகத்தில் எவர்க்கும் அஞ்சவேண்டியதில்லை.

இந்தப் பெருமை யுணர்ச்சி அரசிபால் ஆர்வமிக்க பக்தியாகத் தோன்றியது. புலவர்கள் தங்கள் அரசியைக் 'கன்னி அரசி'[1] என்றும் 'க்ளோரியானு'[2] என்றும் புகழ்ந்து பாடினர்.

மக்களின் உற்சாகம் பாக்களிலும் நாடகங்களிலும் மலர்ந்தது. சென்ற நூற்றைம்பது வருஷங்களாக ஒரு சிறந்த செய்யுள் நூலேனும் இங்லண்டில் வெளிவரவில்லை. 1580முதல் எலிசபெத் அரசியின் ஆட்சி முடிவதற்குள் நூற்றுக்கு மேற்பட்ட செய்யுள் நூல்கள் வெளிவந்தன. பாக்களை யெழுதுவது கனவான்களுக்கு நாகரிகமான ஒரு பொழுதுபோக் காயிற்று; போர்வீரர்களாகவும் அரசியல் நிபுணர்களாகவும் அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவும் காலங் கழித்துவந்த சர் பிலிப் சிட்னி,[3] சர் வால்டர் ராலே[4] முதலியவர்களைப் போன்றவர்கள் ஒழிந்த நேரங்களில் பாக்களும் எழுதினர்கள். பாமர மக்கள் நாடகங்கள் நடிக்கப் பார்த்து இலக்கியத்தின் சுவையை உணரலாயினர். நடிகர் கூட்டங்கள் நாடுமுழுமையும் பிரயாணஞ்செய்து ஊர்ச் சத்திரங்களின் வாசல்களில்[5] நாடக அரங்கங்களை[6] அமைத்தும், லண்டன் மதிற்சுவர்களுக்கு வெளியே கட்டப்பட்ட கொட்டகைகளிலும்[7] நாடகங்கள் நடித்துக் காட்டினர். நல்ல நாடகங்களைக் காண மக்கள் அவாவியதால் ஏராளமான

1. The 'Virgin Queen'. 2. Gloriana. 3, Sir Philip Sidney. 4. Sir Walter Raleigh. 5. The courtyards of inns. 6. Stages. 7. Theatres.

நாடகங்கள் இயற்றப்பட்டன. அப்போது தோன்றியவரே இங்லிஷ் நாடகப் புலவர்களுள் ஒப்பற்றவராய் விளங்கும் ஷேக்ஸ்பியர்[1]. இசையிலும் அக் காலத்து இங்லிஷ் மக்கள் பெரிதும் விருத்தி யடைந்திருந்தனர் (கு. 86).

§ 131. எதிர்ப்பு மதவாதிகளுள் தூய்மைக் கொள்கையினரை[2] ஒறுத்தல்[3]:—இங்லிஷ் மதஸ்தாபனம் தேசிய மதஸ்தாபனமாக[4] இருந்ததே இங்லிஷ் மக்கள் அதை ஆர்வத்துடன் ஆதரித்ததற்கு ஒரு முக்கிய காரணம். இந்த ஆர்வம் நாட்டுப்பற்று பொங்கி வழிந்த அக் காலத்தில் மேலும் தழைத்தெழுந்தது. நாட்டில் மதஸ்தாபனம் எல்லோரது மதக் கொள்கைகளுக்கும் ஏற்ப அமைந்தில்லை என்பது உண்மையே. நாட்டின் வடக்கிலும் நடுப்பாகத்திலும் காதொலிக் கொள்கைகளில் பற்றுள்ளவர்கள் பலர் இன்னும் இருந்துவந்தனர். தெற்கிலும் கிழக்கிலும் இருந்த சிலர் இங்லிஷ் மதஸ்தாபனம் எதிர்ப்பு மதத்தை முற்றிலும் பின்பற்றவில்லை யென்று குறை கூறினர். அவர்கள் பிஷப்புகளும், குருமார்களின் தனியுடைகளும், கோவில்களில் பன்னிறக் கண்ணுடிச் சன்னல்களும்[5] எடுபட வேண்டுமென்றனர். கால்வின்[6] ஜெனிவாவில்[7] ஏற்படுத்திய ப்ரெஸ்பிட்டீரியன்[8] மதஸ்தாபனத்தைப்போல் இங்லிஷ் மதஸ்தாபனமும் அமையவேண்டுமென்பது அவர்கள் விருப்பம் (கு. 64). தூய்மைக் கொள்கையினர் காதொலிக்கர்கள் சதிகளுக்கு விரோதமாகத் துரைத்தனத்தை ஆதரித்து வந்ததனல், எலிசபெத் நெடுங் காலமாக அவர்கள் விஷயத்தில் அதிகமாகத் தலையிடவில்லை. ஆயினும், தான் நியமித்து வைத்திருந்த பிஷப்புகளை அவர்கள் வேண்டாமென்று சொன்னது அவளுக்குப் பிடிக்கவில்லை. பிஷப்புகளைத் தானே நியமித்தால்தான் அவளுக்கு

1. Shakespeare. 2. Puritans. 3. Persecution. 4. A National Church. 5. Stained-glass windows. 6. Calvin. 7. Geneva. 8. Presbyterian.

மதஸ்தாபனத்தின்மீது அதிகாரஞ் செலுத்திக்கொண்டிருக்க முடியும். மதவிஷயத்தைப்பற்றி அவள் கொண்டிருந்த முக்கியமான அபிப்பிராயம் தான் மதஸ்தாபனத்தின் தலைவியாக இருக்கவேண்டுமென்பதே. அந்நிலையை அவளுக்குக் காதோலிக்கர்கள் மறுத்ததால், அவர்களை அவள் வெறுத்தாள். தூய்மைக் கொள்கையினரையும் அவள் அக் காரணத்தினாலேயே வெறுக்கலானாள்.

'ஆர்மடா' கப்பற்படை தோல்வியுற்ற பிறகு எதிர்ப்பு மதத்தில் அமிதவாதிகளான தூய்மைக்கொள்கையினரின் உதவி அவளுக்கு அவ்வளவு இன்றியமையாததென்று சொல்வதற்கில்லை. ஆகவே, எலிசபெத் அவர்களை ஒறுக்கத் தொடங்கினாள். கான்டெர்பெரி ஆர்ச்பிஷப் தலைமையில் ஹை கமிஷன் கோர்ட்[1] என்னும் பெயர்கொண்ட மதஸ்தாபன நீதிமன்றமொன்று[2] ஏற்பட்டு, தியான புத்தகத்தை[3] உபயோகிக்காமலும் பிஷப்புகளின் உத்தரவுகளைக் கவனிக்காமலும் இருக்கும் குருமார்களைத் தண்டிக்கத் தொடங்கியது. மதவிஷயங்களில் அரசிக்கு அதிகாரமில்லை என்று அவர்களுள் எவரேனும் துணிந்து சாதிப்பார்களானால், அவர்கள் இராஜத்துரோகத்துக்காகத்[4] தூக்கிலிடப்பட்டனர்.

§ 132. இறங்குபடி:—இந்தப் பதினைந்து ஆண்டுகளில் இங்லண்டுக்குப் போர்முனையில் யாதொரு சிறந்த வெற்றியும் நேரவில்லை. ஸ்பெயின் மன்னர் மற்றொரு 'ஆர்மடா' தயாரித்து இங்லண்டுக்கு அனுப்ப முயன்றார். கப்பற்படைகளை அனுப்பி அவர் முயற்சிகளைத் தடுக்க எலிசபெத் அதிக ஊக்கங்காட்டவில்லை. 1589-ல் ஸ்பெயின் கடற்கரைப் பாகங்களைத் தாக்க ஒரு இங்லிஷ் 'எதிர் ஆர்மடா'[5] திரண்டு சென்றது. அது, ஸ்பெயின் ஆர்மடாவைப்போலவே, ஒன்றுஞ் சாதிக்கமுடியாமல் கலைந்தது. 1596-ல் மேற்கிந்தியத் தீவு

1. Court of High Commission. 2. A Church Court. 3. The Prayer Book. 4. High treason. 5. Counter-Armada.

களுக்குச்[1] சென்ற ஹாகின்ஸும் ட்ரேக்கும் யாதொரு வெற்றியும் பெறாமல் வழியில் சுரங்கண்டு மாண்டனர். 'பிரிட்டனின் கடலரசர்கள்'[2] கூட்டம் அவர்களோடு பூண்டற்றுப் போயிற்றே என்று அப்போது சிலர் அஞ்சினர். அடுத்த வருஷம் கேடிஸ் துறைமுகத்திலிருந்த ஸ்பெயின் கப்பல்களைத் தாக்க லார்ட் ஹவர்ட், லார்ட் எசெக்ஸ்[3] என்பவர்கள் தலைமையில் ஒரு கப்பற்படை புறப்பட்டுச் சென்றது. தலைவர்களிடையே கிளைத்த ஒரு கருத்து வேற்றுமையின் விளைவாக அப்படையால் ஒன்றுஞ் சாதிக்க முடியவில்லை. ஸ்பெயினுக்குப் பொன் வெள்ளி முதலிய செல்வங்களை ஏற்றிக்கொண்டுவந்த கப்பல்களை[4] மடக்கிக் கொள்ளையிட எசெக்ஸ் 1597-ல் அசோர்ஸ்[5] தீவுகளுக்குச் சென்றார். அவை அவர் கையில் சிக்காமல் தப்பிப் போய்விட்டதால் அவர் வெறுங்கையராகத் திரும்பவேண்டியதாயிற்று. அரசி ஏமாற்றமடைந்தாள்.

'எலிசபெத் காலம்'[6] என்பது உண்மையில் 1598-ல் முடிவடைந்துவிட்டதாகக் கூறலாம். நாற்பது ஆண்டுகளாக அரசாங்க விஷயங்களை உண்மையாகக் கவனித்துக் கொண்டு அரசிக்கு உகந்த மந்திரியாகவிருந்த பர்லி பிரபு அவ்வாண்டு இறந்தார். ப்ரான்ஸில் காதொலிக்கர்களுக்கும் ஹ்யுகினொட்டுகளுக்கு[7]மிடையே நடந்த போராட்டம் நான்காம் ஹென்றி அரசரின் நாங்ட் ஆணை[8]யால் முடிவுபெற்றது. அதன் பயனாக, இரு கொள்கையினரும் சுமார் ஒரு நூற்றாண்டு வரையில் தத்தம் வழிபாட்டு முறைகளை யாதொரு தொந்தரவுமின்றிப் பின்பற்றி அமைதியோடு வாழ்ந்து வந்தனர். இரண்டாம் பிலிப்புக்கு மூப்பு மேலிட்டு நலியும் பிடித்துக்கொண்டது. நெதெர்லண்ட்ஸ் ஆஸ்ட்ரியா இளவரசரின்[9]

1. The West Indies. 2. The 'Sea Kings of Britain'. 3. Lord Howard, Lord Essex. 4. Spanish treasure ships, 5. The Azores. 6. 'The Age of Elizabeth.' 7. The Huguenots. 8. The Edict of Nantes. 9. Austrian Archduke.

கீழ் ஒரு தனி இராச்சியமாக அமைய அவர் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அவ்வாண்டு முடிவதற்குள் அவர் தமது எண்ணங்கள் நிறைவேருமல் ஏமாற்றமடைந்து இறந்தார். பின்னர் ஆருண்டுகள் வரை இங்லண்ட் ஸ்பெயினேடு போரிட்டுக்கொண்டிருந்ததாகக் கருதப்பட்டாலும், பெரு நிகழ்ச்சி யாதொன்றும் நிகழவில்லே.

§ 133. **அயர்லண்டில் எசேக்ஸ்:**—எலிசபெத் ஆட்சியின் கடைசி ஆண்டுகளில் இராஜசபையின் முக்கிய அங்கத்தினர்களாக இருந்தவர்கள் பர்லி பிரபுவின்[1] மகன் ராபர்ட் ஸேஸிலும்[2] எசேக்ஸ் ஏர்ல் 'ராபர்ட் டெவெருக்ஸு'[3] மாவர். கிழஅரசி எசெக்ஸின் வாலிப அட்டகாசங்களில் மயங்கியிருந்தாள். ஜம்பத்தையும் பகட்டையும் விரும்பிய எசெக்ஸுக்கும் நேர்மையும் பொறுமையுமிக்க கூனராகிய ஸெஸிலுக்கும் எவ்வகையிலும் பொருத்தமில்லே. 1598-ல் அயர்லண்டில் ஒரு கலகந் தோன்றியது(கு. 92). அதை அடக்கிப் புகழ் பெறவும், அதுகாரணமாக அரசியிடத்திலும் துரைத்தனத்திலும் தம் செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ளவும் எசெக்ஸ் விருப்பங்கொண்டார். அயர்லண்டுக்கு ஒரு பெருஞ் சேனையை அழைத்துச் செல்ல அவர் அரசியின் அனுமதி பெற்ருர். ஆயினும், அவருக்கு இவ் விஷயங்களில் அனுபவம் மிகவும் குறைவானதால், அயர்லண்ட் மக்களின் தலேவராகிய டைரோன் ஏர்ல் ஹ்யூக் ஓநீல்[4] என்பார் அவரை எளிதில் அலுப்படைய வைத்து, கடைசியில் ஆறு மாதத்துக்கு இருதரத்தாரும் ஒருவரையொருவர் தாக்கக்கூடாதென்ற ஒரு சமாதான ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொள்ளும்படி செய்துவிட்டார். சில நாட்களுள், அரசி சமாதானஞ் செய்துகொள்ளக் கூடாதென்றும், அப் போரில் அனுவசியமாகக் காலத்தையும் பணத்தையும் விரயஞ்

1. Lord Burghley. 2. Robert Cecil. 3. Robert Devereux. 4. Hugh O'Neill, Earl of Tyrone.

செய்ததைக் கண்டித்தும் எசெக்ஸுக்கு ஒரு கடிதம் எழுதினுள். ஸெஸில் தமக்கு விரோதமாக அரசியிடம் கலகஞ் செய்துகொண்டிருப்பதாக நினைத்து, எசெக்ஸ், சிறிதும் முன் யோசனையின்றியும் அரசியின் அனுமதியின்றியும், உடனே அயர்லண்டை விட்டுக் கப்பலேறி லண்டனுக்குத் தாண்டு கால் பாய்ச்சலாகச் சென்று அரசி முன்னிலையில் திடுமெனப் போய் நின்று, தாம் செய்தது நியாயமென்று அதிக ஆத்திரத்துடன் வாதிக்கலானுர். அரசிக்கு இது பிடிக்கவில்லை; அவள் எசெக்ஸை அவமானப்படுத்தி அரண்மனைக்கு வெளியே அனுப்பிவிட்டாள்.

அவமானப்பட்ட எசெக்ஸ் கடுங்கோபங் கொண்டு, தமக்கு விரோதிகள் என்று தாம் நினைத்துக்கொண் டிருந்தவர்களை இராஜ சபையிலிருந்து ஓட்டிவிடும்படி அரசியைக் கட்டாயப்படுத்த ஒரு சதி சூழ்ந்தார். சதிகாரர்கள் போர் தொடுக்க ஏற்பாடுகள் செய்துகொண் டிருந்தபோது பிடிபட்டார்கள். எசெக்ஸ் இராஜத்துரோகத்துக்காகச் சிரச்சேதஞ் செய்யப்பட்டார்.

இச்சம்பவம் கிழ அரசியின் மனதில் இருளைப் புகுத்தியது. அவள் நெடுங்காலம் அரசியா யிருந்தபோதிலும் இறப்பதற்குத் துணியவில்லை. அவள் காலத்துப் பெருமக்கள் அவளுக்கு முன்னரே போய்விட்டனர். அவளது ஜன்ம விரோதியும் இறந்துவிட்டார். அவளுக்கு உடல் நலம் குன்றியது; பலம் ஒடுங்கியது. 1603ஆ மார்ச்சுமீ அவள் உயிர் துறந்தாள். இறப்பதற்குமுன் ஸ்காட்லண்ட் மன்னர் ஜேம்ஸ் தனக்குப்பின் அரசராக வேண்டுமென்று தான் விரும்புவதாகக் கூறினுள்.

எலிசபெத் மிக்க தைரியசாலி. சாதாரண மக்களை அஞ்சவைக்கக்கூடிய ஆபத்துக்களுக்கும் கஷ்டங்களுக்கும் அவள் தளர்ந்ததில்லை. சில சமயங்களில் அவள் அற்பத்தனமாகவும் தாராளமற்ற குறுகலான மனப்பான்மையோடும்

நடந்துகொண்டாளேனும், குடிகளின் நன்மையைப் பெருக்கு வதில் அவள் எப்போதும் கண்ணுங்கருத்துமா யிருந்தாள். 1558-ல் அவள் பட்டத்துக்கு வந்தபோது, போரில் இழந்த காலி[1] பட்டினத்தை மீட்க ஒரு ஆயிரம் போர்வீரர்களைத் திரட்டக்கூட இங்லண்டால் முடியவில்லை; 1603-ல் அவள் இறந்தபோது, உலகத்தில் மிக்க வீரவுணர்ச்சியும் தன்னம் பிக்கையும் கொண்ட நாடுகளுள் ஒன்றுக இங்லண்ட் துலங்க லாயது. இதுவே அவள் பெருமைக்குச் சான்று.

தகப்பனிடமிருந்து அதிகாரத்தின்மேல் விருப்பம், மற்றவர்களை நடத்தவேண்டுமென்ற ஆசாபாவம், தன்னயம், தன்னுடைய [illegible] களை தன்னைப்போல் எண்ணுதல், தெளிந்த புத்தி முன்னோக்குதல், சாமர்த்தியம், தைரியம் மனஒடுக்கம், விடாமுயற்சி,
தாயிடமிருந்து ஆடம்பரம், கெஞ்சுதி உறுதி,

Kenelworth.

---

வில்லியம் ஸெஸில், ராபர்ட் ஸெஸில், சர் பிரான்ஸிஸ் வால்ஸிங்ஹாம்.
வாலிபபிரபுக்கள்:- சர் ராபர்ட் டட்லி லார்ட் லெஸ்டர் பிரபு.

1. Calais.

# நான்காம் பகுதிக்கான சில குறிப்புக்கள்

(1558—1603)

## யூரோப்பிய அதிபதிகளுள் முக்கியமானவர்கள்

**போப்புகள்:**

நான்காம் பயஸ்[1](1559—1566). *ட்ரென்ட் கௌன்சிலைக்*[2] *கடைசி முறையாகவும் அதிமுக்கியமான விஷயத்துக்காகவும் கூட்டியவர்.*

ஐந்தாம் பயஸ் (1566—1572). *எலிசபெத்தைக் கிறிஸ்தவர் கூட்டத்தினின்றும் தள்ளிவைத்தவர்.*

பதின்மூன்றாம் க்ரிகோரி[3](1572—1585). *இங்லண்டில் ஜெஸூட் பிரசாரத்தைத் திட்டம் பண்ணினவர்.*

ஐந்தாம் சிக்ஸ்டஸ்[4](1585—1590). *ஆர்மடாவை*[5] *ஆதரித்தவர்.*

**ப்ரான்ஸ்:**

இரண்டாம் ப்ரான்ஸிஸ் (1559—1560).
ஒன்பதாம் சார்ல்ஸ் (1560—1574).
மூன்றாம் ஹென்றி (1574—1589).

*இவர்கள் மூவரும் குழந்தைகளின்றி இறந்துவிட்ட சகோதரர்கள். வேலாய் குலத்துக்*[6] *கடைசி மன்னர்கள்.*

நான்காம் ஹென்றி (1589—1610). *'நவார் ஹென்றி'*[7] *என்று கூறப்படுபவர். போர்போன் குலத்து*[8] *முதல் மன்னர்.*

**ஸ்பெயின்:**

இரண்டாம் பிலிப் (1556—1598). *மதச்சீர்திருத்த எதிர்ப்பியக்கத்தின்*[9] *மூலபலம்.*

---

1. Pius IV. 2. Council of Trent. 3. Gregory XIII. 4. Sixtus V. 5. The Armada. 6. The Valois dynasty. 7. Henry of Navarre. 8. The Bourbon dynasty. 9. The Counter-Reformation.

## கு. 77. மதச்சீர்திருத்த எதிர்ப்பியக்கம்

காதொலிக் மதஸ்தாபனத்தில் ஒரு புத்துணர்ச்சி. மதச் சீர் திருத்த இயக்கத்தைத்[1] தூண்டிய தீமைகளை யொழித்துப் பழைய செல்வாக்கை மீண்டும் பெற முயன்றது. இதன் முக்கிய அமி சங்கள் :—

(1) ட்ரேன்ட் கௌன்சில் (1545—1563) : லூதர் கண்டித்த தீமைகளுள் பலவற்றை யொழித்தது. பொருள் மாற்றம்,[2] போப்பின் தனித்தலைமை[3] முதலிய முக்கிய கொள்கைகளை வரையறுத்துக் கூறியது.

மதஸ்தாபன கௌன்சில்[4] என்பது உலகத்தின் பல பாகங்களிலு முள்ள பெரிய குருமார்களின் கூட்டம். ட்ரென்டில் கூடிய கூட்டம் பதினெட்டுவருஷமும் இடைவிடாது கூடியில்லை ; கலைந்து கலைந்து பல ஆண்டுகள் கூடாமலிருந்து கூடியது.

(2) புதுமாதிரியான போப்புகள் : தூய வாழ்க்கையுடன் தெய்வ பக்தியில் ஆழ்ந்திருந்தவர்கள்; எதிர்ப்புமதத்தை[5] அழிக்கவேண்டு மென்று தீர்மானம் கொண்டவர்கள்.

யூரோப்பிய அதிபதிகளுள் மேலே குறிப்பிடப்பட்டவர்கள் 'மதச்சீர்திருத்த எதிர்ப்பியக்கப் போப்புக'ளுள்[6] முக்கியமானவர்கள்.

(3) ஜீஸஸ் சங்கம்[7] : 1540-ல் இக்னேஷியஸ் லயோலா[8] என்னும் ஸ்பெயின் வீரர் ஒருவரால் மத விரோதப் பிரசாரத்தை[9] எதிர்க்க ஏற்படுத்தப்பட்டது.

ஜெஸூட் பாதிரிகள்[10] பந்து மித்திரர்களைத் துறந்து தங்கள் 'சேனைத் தலைவர்'க்கு[11] அடங்கி நடக்கச் சத்தியஞ் செய்தார்கள். அவர்கள் அநேகமாக ஊர்க் கோவில்களில்[12] குருமார்களாக இருந்த தில்லை ; பிஷப் முதலிய பெரிய பதவிகளையும் வகித்ததில்லை ; பிரசாரகர்கள்[13], உபாத்தியாயர்கள், அந்தரங்க ஆன்ம குருக்கள்[14] முதலியவர்களாக இருந்து தங்களுக்கு இட்ட பணிகளைச் செய்தனர்.

(4) 'தேய்விகமிக்க இன்க்விசிஷன்'[15] எனப்பட்ட மத நீதி மன்றம். பழமையாக மத விரோதப் பிரசாரத்தைக் களைந் தெறிய ஏற்பட்டிருந்தது. போப்புகள் இப்போது அதற்குப் புத் துயிர் கொடுத்தார்கள்.

---

1. The Reformation. 2. Transubstantiation. 3. Supremacy of the Pope. 4. A Church Council. 5. Protestantism. 6. Counter-Reformation Popes. 7. The Society of Jesus. 8. Ignatius Loyola. 9. Heresy. 10. The Jesuits. 11. 'General.' 12. Parish Churches. 13. Missionaries. 14. Confessors. 15. The Holy Inquisition.

(5) இரண்டாம் பிலிப்: உலக முழுமையிலும் வன்மை மிக்க மன்னர். எதிர்ப்பு மதத்தைத் தொலைக்கவேண்டுமென்பது அவரது வாழ்க்கையின் தனி நோக்கம்.

*தாமே மேற்கொண்ட அந்நோக்கத்தை நிறைவேற்ற இடைவிடாது ஓய்வு சாய்வின்றி உழைத்தார்; அதற்கு எதையும் தியாகஞ் செய்யவும் எவரையும் பலியிடவும் தயாராயிருந்தார்.*

## கு. 78. எலிசபெத் பட்டத்துக்கு வந்தபோது அவளுக்கு இருந்த ஆபத்துக்களும் அவற்றை அவள் சமாளித்த விதமும்.

| ஆபத்துக்கள் | சமாளித்த விதம் |
|---|---|
| *ஸ்காட் மக்களின் அரசி மேரி[1]யால் ஏற்பட்ட ஆபத்து. இவள் இங்லண்ட் அரச பட்டத்துக்கு உரிமைகொண்டாடினள். 1559-ல் இவள் கணவன் இரண்டாம் ப்ரான்ஸிஸ் என்னும் பட்டத்துடன் ப்ரான்ஸ் மன்னரான போது ப்ரான்ஸ் நாட்டின் ஆதரவும் இவளுக்கு இருந்தது (§ 112).* | *இரண்டாம் ப்ரான்ஸிஸ் 1560-ல் இறந்துவிட்டதால், மேரி ஸ்காட்லண்ட் திரும்ப வேண்டியதாயிற்று (§ 118). இதற்கிடையே ஸ்காட்லண்டில் தோன்றிய மதச்சீர்திருத்த இயக்கம்[2] (§ 112) ஸ்காட்லண்டில் காதொலிக் மதத்துக்குப் பலத்த எதிர்ப்பினைக் கிளப்பிவிட்டது. எலிசபெத் இந்த மதச் சீர்திருத்த இயக்கத்தினை ஆதரித்தாள்.* |
| *ஸ்பெயினல் ஏற்பட்ட ஆபத்து. இரண்டாம் பிலிப் இங்லண்டைக் காதொலிக் மதஸ்தாபனத்துக்கு மீட்டுக்கொடுக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருந்தார். எலிசபெத்தைக் கலியாணஞ் செய்துகொள்வதாகக் கூறினர். அவள் ஒப்புக்கொண்டால் இங்லண்ட் ஸ்பெயின் பேரரசில் அடங்கி விடும்: ஒப்புக் கொள்ளாவிட்டால் அதன்மீது படையெடுத்துச் செல்லலாம்.* | *எலிசபெத் பிலிப்பைக் கலியாணஞ்செய்துகொள்ள மறுத்துவிட்டாள். பிலிப் இங்லண்டை உடனே எதிர்க்கமுடியாதென்பது அவளுக்குத் தெரியும். இங்லண்ட் அரச முடிக்குக் காதொலிக் வாரிசாக இருந்தவள் ஸ்காட் மக்கள் அரசி மேரி. அவள் வளர்ப்பாலும் கலியாணத்தாலும் ப்ரெஞ்சுக்காரி. (ஹாப்ஸ்பர்க்-வேலாய் குலங்களுக்கிடையே தோன்றியிருந்த பகைமை[3] (§ 89) அப்போது மிக மும்முரமாக இருந்தது.* |

1. Mary Queen of Scots. 2. The Scottish Reformation. 3. The Habsburg-Valois feud.

இங்லிஷ் காதொலிக்கர்களால் ஏற்பட்ட ஆபத்து. நாட்டு மக்களுள் மூன்றிலிருவர் காதொலிக்கர்கள். அவர்கள் ஸ்காட் மக்கள் அரசி மேரியே இங்லண்டின் நியாயமான அரசி என்று நம்பினர்கள்.

பொருளாதாரக் கோளாறுகளால்[1] ஆபத்து. கஜானுவில்[2] பணமில்லை. மதிப்பு குறைந்த நாணயங்கள்[3] வழங்கிவந்தன. வேலியிட்டதாலும் மடங்களைக் கலைத்ததாலும் ஏற்பட்ட தீமைகளால் நாடு இன்னும் துன்புற்றிருந்தது.

எலிசபெத்தின் மதஸ்தாபன ஏற்பாடு (§ 113) அவர்களுள் பெரும்பான்மை யோருக்குத் திருப்தியளித்தது. மேரி ஸ்காட்லண்டில் செல்வாக்கு இழந்துவிட்டதால் அவர்கள் உதவியை அதிகமாகப் பெறுவதற்கில்லை.

மிகுந்த சிக்கனம். மதிப்பு குறைந்த நாணயங்களுக்குப் பதிலாக நல்ல நாணயங்களைச் செலாவணிக்குக் கொண்டுவந்தார்கள். நகரங்களில் ஆக்கத் தொழில்களுக்கு ஆதரவு. தொழில் மாணுக்கர்கள் சட்டம்[4], ஏழைகள் சட்டங்கள்[5] (§ 115).

## கு. 79. எலிசபெத்தின் மத ஏற்பாடு திருப்தியளித்த வகை

நாட்டு மக்களில் பெரும்பாகத்தினர் (குருமார்கள் உட்பட) காதொலிக்கர்கள்; சிறு பாகத்தினர் கால்வின்[6] (§64) வகுத்த திட்டப்படி மதஸ்தாபனத்தைச் சீர்திருத்தி அமைக்கவேண்டு மென்று கூறிய எதிர்ப்புக் கூட்டத்தின் அமிதவாதிகள்[7]. ஆயினும், துரைத்தன ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் மக்களுக்கு வழக்கமாகிவிட்டது; மேலும், மற்றொரு மாறுதலும் உண்டாகலாம் என்ற ஐயமும் இருந்தது. சென்ற முப்பது ஆண்டுகளுள் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. எலிசபெத் ஏற்படுத்திய மதஸ்தாபனம் காதொலிக்கர்கள் நோக்கங்களுக்கும் எதிர்ப்புமத வாதிகள் நோக்கங்களுக்கும் இடைப்பட்ட ஒரு சமரச ஏற்பாடு[8]. குடி மக்களுள் பெருங் கூட்டத்தினர் அதை ஒப்புக்கொள்ளலாம்.

அரசியல் நோக்கங்களோடு அமைக்கப்பட்ட மதஸ்தாபனத்துக்கு மக்கள் முதலில் மதிப்பு தரவில்லை. ஸ்பெயினுடன் ஏற்பட்ட போரால் நாட்டு மக்களுக்குத் தங்கள் நாட்டைப் பற்றி ஒரு பெருமை யுணர்ச்சி தோன்றியது. அப்போதுதான் இங்லிஷ்மக்கள் தங்கள் நாட்டு மதஸ்தாபனத்தில்[9] பெருமை கொள்ளலாயினர்.

எனினும், இந்தச் சமரசமான ஏற்பாடு அரசியின் முக்கியமான நோக்கத்தை நிறைவேற்றியது; நாட்டு மக்களுள் பெரும்

---

1. Economic troubles. 2. The Treasury. 3. Debased coinage. 4. Act of Apprentices. 5. Poor Laws. 6. Calvin. 7. Extreme Protestants. 8. Compromise. 9. The National Church.

பாலோர் அதை ஏற்றுக்கொண்டனர் (முதலில், அரைமனதோடு). இங்லண்டில் 'மதப்போர்கள்'[1] நிகழவில்லை.

### கு. 80. பர்லி பிரபு வில்லியம் ஸெஸிலின்[2] வாழ்க்கை (1520—1598)

நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்.[3] சாமர்செட்டின்கீழும் நார்தம்பர்லண்டின்கீழும் மந்திரியாக விருந்து அரசாங்க விவகாரங்களில் பழக்கப்பட்டவர். எதிர்ப்புமதவாதத்தினரோடு அதிகமாகக் கலந்திருந்ததால், மேரி அரசியானதும் அரசாங்க அலுவல்களை விட்டு விலகவேண்டியதாயிற்று; தொழுகையிலும்[4]காதொலிக் முறையைப் பின்பற்ற வேண்டியதாயிற்று. எலிசபெத் இளவரசிக்கு ஆதரவு காட்டுவோருடன் சேர்ந்தார். அவள் அரசியானவுடன் அவளது பிரதம மந்திரியாகித் தாம் இறக்கும் வரையில் அந்நிலையில் அவளது நம்பிக்கையைப் பெற்றிருந்தார்.

> அரசிக்கு ஆன பிரதானியருள்[5] லெஸ்டர் பிரபுவைப்[6] போன்றவர்கள் அவரது விரோதிகள். அரசி அவர்கள் சூழ்ச்சிகளில் சிக்கி பர்லிக்குத் தொந்தரவு கொடுத்துவந்தபோதிலும், அநேகமாக முடிவில் அவள் அவரது ஆலோசனையையே ஏற்றுக்கொண்டு வந்தாள்.

எதிர்ப்பு மதத்தில் அரசிக்கு இருந்ததைவிட அவருக்குப் பற்று அதிகம். எலிசபெத் எதிர்ப்புமதவாதி யொருவரைக் கலியாணஞ் செய்துகொண்டு யூரோப்பிலுள்ள எதிர்ப்புமதவாதிகளான மக்களுக்கு (முக்கியமாக, ப்ரான்ஸிலும் நெதெர்லண்ட்ஸிலும் உள்ளவர்களுக்கு) வெளிப்படையாகத் தலைமைபூணவேண்டு மென்று வற்புறுத்தியவர். எலிசபெத் மிகவும் நிதானபுத்தி யுடையவளாதலால் இதற்கு இணங்கவில்லை.

பர்லியும் வால்சிங்காமும்[7] வேவுகாரர்களை[8] வைத்து அரசியின் விரோதிகள் சூழ்ந்த சதிகளை யெல்லாம் கண்டுபிடித்து அவளது உயிரைப் பலமுறை காப்பாற்றினார்கள்.

ஸ்காட்லண்ட் எதிர்ப்புமதவாதிகளுக்கு எலிசபெத்தை உதவி செய்ய வைத்தவர் (§ 112). பொருளாதார விஷயங்களைச் சீர்ப்படுத்த எலிசபெத் காலத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகள் அவருடையனவே (§ 115).

---

1. Wars of Religion. 2. William Cecil. 3. Middle-class man. 4. Worship. 5. The Queen's favoured courtiers. 6. Lord Leicester. 7. Walsingham. 8. Spies.

காதொலிக்கர்களை ஒறுக்கவும்[1] ஸ்காட் மக்கள் அரசி மேரியைச் சிரச்சேதஞ் செய்யவும் வற்புறுத்தியவர் (§ 127). மேரி உயிருடன் இருந்தவரையில் பர்லி உயிருக்கு எப்போதும் ஆபத்தாகவே இருந்தது.

பொதுப் பணத்தைத் தாராளமாகச் செலவிடக்கூடாதென்று எலிசபெத் கூறியதை ஒப்புக்கொண்டு அதன்படி ஒழுகியவர். ஆர்மடாவை[2] எதிர்க்கப் போதிய முஸ்தீப்பு செய்யாததற்கு இவ்வபிப்பிராயம் காரணம்.

பர்லி, மேதை மிக்க அரசியல் ஞானி அல்லராயினும், தந்திரம், சுறுசுறுப்பு, நிதானபுத்தி, புத்திகூர்மை முதலிய குணங்களைப் பெற்றவர்.

## கு. 81. ஸ்காட் மக்கள் அரசி மேரியின் வாழ்க்கை (1542-1587)

தகப்பன்: ஸ்காட்லண்ட் மன்னர் ஐந்தாம் ஜேம்ஸ் ஸ்டுவர்ட். அவர் சால்வே மாஸ்[3] தோல்விக்குப் பிறகு இறந்தபோது (§ 67) மேரி ஒரு வாரத்துக் குழந்தை. தாய்: கைஸ் குலத்து மேரி[4]. அவள் கலியாணம் இங்லண்டுக்கு விரோதமாக ஏற்பட்டிருந்த பழைய ப்ரான்ஸ்-ஸ்காட்லண்ட் உறவின்[5] சின்னம் (§ 85).

எட்டாம் ஹென்றியும் சாமர்செட்டும் மேரியை ஆரும் எட்வர்டுக்குக் கலியாணம் செய்துவைத்து ஸ்காட்லண்டை இங்லண்டுடன் இணைக்க முயன்றார்கள். இதைப் பலாத்காரத்தால் அவர்கள் நிறைவேற்ற முயன்றதால், அவளை ப்ரான்ஸுக்கு அனுப்பி விட்டார்கள். அங்கே அவள் வளர்ந்து ப்ரான்ஸ் மன்னரது மூத்த மகனைக்* கலியாணஞ் செய்துகொண்டாள் (§ 103).

ட்யூடர் குலத்து மேரி இறந்ததும் (1558) ஸ்காட்லண்ட் மேரி இங்லண்ட் சிம்மாசனத்தில் அமரத் தனக்குத்தான் உரிமையுண்டு என்றாள் (§ 112). 1559-ல் அவள் கணவன் 'இரண்டாம் ப்ரான்ஸிஸ்' என்னும் பட்டத்துடன் ப்ரான்ஸ் மன்னரானார்; 1560-ல் அவர் இறந்தார்; 1561-ல் மேரி ஸ்காட்லண்டுக்குத் திரும்பி வந்தாள்.

கஷ்டமான நிலை—1559-ல் தோன்றிய மதப் புரட்சி[6] (§112) ஸ்காட் மக்களை எதிர்ப்புமதவாதிகளாகவும் ப்ரெஞ்சு விரோதிக

---

* ப்ரான்ஸ் மன்னர்களது மூத்த பிள்ளைகள் 'டாபின்'[7] எனப்பட்டனர்.

1. Persecute. 2. The Armada. 3. Solway Moss. 4. Mary of Guise. 5. The old Franco-Scottish alliance. 6. Revolution. 7. Dauphin.

ளாகவும் மாற்றியது. எலிசபெத்தின் வாரிசாகத் தான் அங்கீ கரிக்கப்பட வேண்டுமென்று மேரி கோரினாள். எலிசபெத் இதற்கு இணங்கவில்லை.

> இங்லிஷ் மக்களுக்கு அடுத்த அரசி காதொலிக் கொள்கையினளா யிருப்பாள் என்பது தெரிந்தால், அவர்கள் புதிய மதஸ்தாபன அமைப்பை ஒப்புக்கொண்டு அமைதியாக இருக்கமாட்டார்கள்.

1565-ல் டார்ன்லியைக்[1] கலியாணஞ் செய்துகொண்டாள். அவன் கண்ணியமற்றவனாக இருந்ததால் அவனோடு அவளுக்கு வாழப் பிடிக்கவில்லை. அவன் அவளது காரியதரிசி ரிச்சியோ வைச்[2] சந்தேகத்தின்மேல் கொன்றுவிட்டான் (1566). மேரி போத்வெல்[3] என்பவன்மீது காதல் கொண்டாள். போத்வெல் டார்ன்லியைக் கொன்றுவிட்டு மேரியைக் கலியாணஞ் செய்து கொண்டான்.

எதிர்ப்புமதப் பிரபுக்களில் முக்கியமானவர்கள், அவளுக் கடங்கியிருக்க விரும்பாமல், படை திரட்டிக்கொண்டு வந்து அவளைக் கார்பெர்ரி குன்று[4] என்னுமிடத்தில் தோற்கடித்து (1567), லாக் லெவென் கல்லரணில்[5] சிறை வைத்து, அரசி பட்டத்தைத் துறந்து தன் கைக்குழந்தை ஆறும் ஜேம்ஸை ஸ்காட்லண்ட் அரசனாக ஒப் புக்கொள்ள வைத்தனர். அவரே பிறகு 'முதல் ஜேம்ஸ்' என்னும் பட்டத்துடன் இங்லண்டுக்கும் அரசரானவர். மேரி ஸ்காட்லண்ட் எல்லையைக் கடந்து இங்லண்டுக்கு ஓடிவந்துவிட்டாள்.

மேரி இங்லண்டின் வடக்கிலிருந்த பல கல்லரண்களில், ஒரு வகையில் எலிசபெத்தின் கைதியாகவும், ஒரு வகையில் அவளது விருந்தாளியாகவும் இருந்தாள். அவள் அங்கு வந்திருந்தது அப் பாகங்களின் காதொலிக் பிரபுக்களுக்கு உற்சாக மளித்தது. பல சதிகள் சூழப்பட்டன. முதலில், அவள் அரச பட்டத்துக்கு உரிய வாரிசு என்று அங்கீகாரமானால்மட்டும் போதுமென்பது அச்சதிகளின் நோக்கமாக இருந்தது; பிறகு அவளை உடனே சிம்மாசனத்தில் அமரவைக்கவேண்டுமென அவைகளின் நோக்கம் மாறியது (§§ 118, 119). எலிசபெத், மேரிக்குக் கண்டிதமான காவல் வைத்தாளேனும், தன்னைப்போன்ற ஒரு இராணிக்குக் கொலை தண்டனை விதிக்கத் துணியவில்லை.

இராஜ சபையினர் எதிர்ப்புமதவாதிகளா யிருந்தபடியால், மேரி அரசியாக வந்தால் ஆபத்து நேருமென் றுணர்ந்து, அதைத்

1. Darnley. 2. Rizzio. 3. Bothwell. 4. Carberry Hill. 5. Loch Leven Castle.

தடுக்கத் தீர்மானங்கொண் டிருந்தனர். வால்சிங்காம் பாபிங்டன் சதியில் அவளைச் சிக்கவைத்தார் (1586). முத்திரையை எடுத்துக் கடிதங்களைத் திறந்து பார்த்துவிட்டு மீண்டும் ஒட்டிப் பழைய படி முத்திரை வைத்து அனுப்பிவிட்டார். எலிசபெத் கடைசியில் ஆபத்தை உணர்ந்து மேரியை விசாரித்துத் தண்டிக்க நீதிபதிகளை நியமித்தாள். பாதரிங்கே கல்லரணில்[1] 1587-ல் மேரி விசாரணைக்கு ஆளாகிச் சிரச்சேதஞ் செய்யப்பட்டாள். லண்டனில் பெரு மகிழ்ச்சி. எலிசபெத், தான் மேரியைக் கொல்ல அனுமதிக்கவில்லை யென்று பாசாங்கு பண்ணி, அதை நிறைவேற்றி வைத்த உத்தியோகஸ்தர்களைச் சிறையிலிட்டுத் தண்டித்தாள்.

இச் சிரச்சேதத்தின் உடன்விளைவாக[2] ஆர்மடா கப்பற்படை[3] அனுப்பப்பட்டது (§ 128).

## கு. 82. எலிசபெத்தும் நெதர்லண்ட்ஸும்[4]

இரண்டாம் பிலிப் பட்டத்துக்கு வந்த நாள் முதல் நெதர்லண்ட்ஸில் சச்சரவே (1555).

அவர் அவர்களது பழைய அரசியல் உரிமைகளை மறுத்து எதிர்ப்பு மதத்தை ஒடுக்க முயன்றார்.

1568-ல் வெளிப்படையான கலகம்.

நெதர்லண்ட்ஸ் மக்களின் பெருமைமிக்க தலைவர் 'பேசாமல் காரியத்தை நடத்தும் வில்லியம்'[5] என்னும் புகழ்பெற்ற ஆரஞ்சு இளவரசர்.[6] கலகத்தை அடக்க ஒரு ஸ்பானிஷ் படையுடன் ஆல்வா ட்யூக்[7] அனுப்பப்பட்டார். கொடுமைமிக்க ஒறுத்தல் செயல்களும்[8] வியாபாரத்துக்கு அதிக நஷ்டமும். இதனால் இங்லண்டுக்கு நன்மை யேற்பட்டது: (1) ப்ளெமிஷ்[9] நெசவுக்காரர்கள் இங்லண்டில் குடியேறித் தங்கள் தொழிலின் நுட்பங்களை இங்லிஷ் மக்களுக்குக் கற்றுக்கொடுத்தார்கள்; (2) வடக்கு யூரோப்பில் முக்கிய வியாபார ஸ்தலமாகிய ஆன்ட்வெர்ப்[10] பட்டினம் வளங்குறைந்து ஒடுங்க லண்டன் பெருமையுற்று ஓங்கலாயிற்று.

எலிசபெத் இரகசியமாகக் கலகக்காரர்களுக்கு உதவிபுரிந்த போதிலும், அவ்வுதவி மிகத் தாராளமாயில்லை. ஆயினும், அவ்வுதவி கலகத்தை ஒடுங்காமல் நீடித்து வைத்திருக்கவும், பிலிப்பை இங்லண்ட்மீது படையெடுக்கத் துணியவிடாமல் வைத்திருக்கவும் போதியதாக இருந்தது.

---

1. Fotheringay Castle. 2. Immediate result. 3. The Armada. 4. The Netherlands. 5. William the Silent. 6. Prince of Orange 7. Duke of Alva. 8. Terrible persecution. 9. Flemish. 10. Antwerp.

*அவள் கலகக்காரர்களுக்கு அதிக உதவி புரிந்திருந்தால், பிலிப் உடனே இங்லண்ட்மீது போர்தொடுக்கத் தீர்மானித்திருக்கலாம்.*

ஸ்பெயின் நாட்டுக் கப்பல்களைத் தாக்கிக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த டச்சுக் கப்பலோட்டிகள் ‘கடற் பிச்சைக்காரர்’[1] எனப்பட்டனர். அவர்கள் இங்லண்ட் துறைமுகங்களில் அடிக்கடி பதுங்கிச் சென்றதாக பிலிப் குறைகூறிக் கொண்டிருந்தார். இதற்கு எலிசபெத் உடந்தை. ‘கடல் நாய்கள்’[2] எனப்பட்ட இங்லிஷ் கப்பலோட்டிகள் (§ 123) துரைத்தனத்தார் சம்பந்தமின்றி ஸ்பெயின் கப்பல்கள்மீது நடத்திவந்த போருக்கும் அவள் இரகசியமாக ஊக்கமளித்து வந்தாள்.

ஆயினும், 1585-க்குப் பிறகு நெதெர்லண்ட்ஸ் கலகம் தணிந்துவிடும்போ லிருந்தது. பிலிப்பின் தூண்டுதலின்மேல் ஆரஞ்சு இளவரசர் வில்லியம் கொல்லப்பட்டார். அப்போது எலிசபெத் வெளிப்படையாகத் தலையிடவேண்டியதாயிற்று. லெஸ்டர் ஏர்ல்[3] தலைமையில் அவள் அனுப்பிய இங்லிஷ் சேனை ஒன்றுஞ் சாதித்துவிடவில்லை. உணவு, ஆயுதம் முதலிய போர் முஸ்தீப்புக்களுக்கு அவள் தாராளமாகப் பணங் கொடுக்கவில்லை. அப்படை ஜட்பென்னில்[4] தோல்வியுற்றது. அங்குதான் சர் பிலிப் சிட்னி[5] இறந்தார். ஆயினும், வெளிப்படையான இப்போர்ச் செயல்[6] இங்லண்டைக் கைப்பற்ற ஆர்மடா கப்பற்படையை அனுப்ப பிலிப்பைத் தூண்டியது.

முடிவில், நெதெர்லண்ட்ஸின் தென்பாகம் ஸ்பெயினுக்குக் கீழ்ப்படிந்திருக்க ஒப்புக்கொண்டது. பிறகு அது பெல்ஜம்[7] எனப்படும் காதொலிக் நாடாயிற்று. வடபாகம் சுயேச்சையுடன் இருந்து தற்காலத்து ஹாலண்டாக மாறியது. ஹாலண்ட் எதிர்ப்புமதக் கொள்கையை மேற்கொண்ட நாடு.

## கு. 83. ‘கடல் நாய்கள்’

இரு நாடுகளின் துரைத்தனங்களும் வெளிப்படையாகப் போரிடத் துணியாதிருந்த சமயம், சில இங்லிஷ் கப்பலோட்டிகள், தங்கள் சொந்த செலவிலும் பொறுப்பிலும் கப்பல்களை ஓட்டிக் கொண்டு சென்று, இங்லிஷ் சானெலிலும் பெருங்கடற் பரப்புகளிலும்[8] மேற்கிந்தியத் தீவுகளிலும் ஸ்பெயின் நாட்டுக் கப்பல்களை

---

1. Sea-beggars. 2. The ‘Sea-dogs’. 3. Earl of Leicester. 4. Zutphen.
5. Sir Philip Sidney. 6. Open act of war. 7. Belgium.
8. The high seas.

எதிர்த்தும், ஸ்பானிஷ் துறைமுகங்களையும் அமெரிகாவில் ஸ்பானிஷ் குடியேற்றங்களையும்[1] தாக்கியும் கொள்ளையடித்தார்கள். அவர்கள் ' கடல் நாய்கள் ' எனப்பட்டனர்.

அவர்கள் கடற்கொள்ளைக்காரர்களா[2]? துரைத்தனத்தார் சம்பந்தப்படாது நடந்துவந்த இந்த யுத்தத்தால் பலர் பிழைத்தார்கள். ட்ரேக் கப்பல்களின் மாலுமிகள்[3] பெருஞ் செல்வங்களைத் திரட்டினுர்கள். துணிச்சல் மிக்க கனவான்களும், வீட்டிலேயே இருந்துகொண்டு லாபத்தை எதிர்பார்த்துக் கப்பல்களை வாங்குவதற்கும், அவற்றிற்கு வேண்டிய முஸ்தீப்புக்களுக்குத் தேவையானவற்றைத் தயாரிப்பதற்கும் ஆன பணத்தை முதலாக அளித்தவர்களும் கிடைத்த கொள்ளையில் பங்கு பெற்றுர்கள். (இதில் அரசிக்கும் அந்தரங்கமாகப் பங்குண்டு).

அவர்களின் நோக்கங்கள் : (1) வியாபாரம்—ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தமான இடங்களுடன். அவற்றுடன் தம் குடிகளைத் தவிர மற்றவர்கள் வியாபாரஞ் செய்யக்கூடாதென பிலிப் கட்டுப்பாடு செய்திருந்தார். (2) கொள்ளை—ஸ்பானிஷ் கப்பல்களையும் பட்டினங்களையும். (3) நாட்டுப் பற்று—இங்லண்டின் பகைவரது பலத்தை ஒடுக்கவேண்டுமென்னும் விருப்பம். (4) பழிவாங்கல்—ஸ்பானிஷ் மக்கள் கையில் சிக்கிய இங்லிஷ் கப்பலோட்டிகள் அனுபவித்த கொடுமைகளுக்காக. (அவர்கள் இன்க்விசிஷன்[4] மத நீதிமன்றத்தாரால் சித்திரவதைக்கும்[5] சாட்டையடிக்கும்[6] உட்படுத்தப்பட்டு முடிவில் தீக்கிரையாக்கப்பட்டனர்). (5) துணிச்சலான மனப்பான்மை யுள்ளவர்களுக்கு ஒரு போக்கு — இம் மனப்பான்மை ரினேஸன்ஸின்[7] விளைவாகும். (6) மதப்பற்று—'போப் மத'த்தில்[8] வெறுப்பு. இது ஸ்பானிஷ்காரர்களது கொடுமையின் விளைவு. (7) கர்வம்—அந்நியர்களை அவமதித்தல்.

## கு. 84. ப்ரான்ஸிஸ் ட்ரேக்கின்[9] வாழ்க்கை (1540—1596)

' இன்க்விசிஷன் நாய்களுக்கும் ஸ்பெயின் சைதான்களுக்கும்'[10] விரோதமாகக் கிளம்பிய இங்லிஷ் கடல் வன்மையின் மனித வுருவம்[11]; இங்லண்டின் கடல்வன்மையின் பெருமைகளைத்[12] தொடங்கிய வீரபுருஷர்.

---

1. Settlements. 2. Pirates. 3. Drake's crews. 4. The Inquisition. 5. Torture. 6. Flogging. 7. Renaissance. 8. Popery. 9. Francis Drake. 10. The Inquisition dogs and the devildoms of Spain. 11. The embodiment of English sea-power. 12. The tradition of England's prowess at sea.

செம்பட்டை மயிரும் கட்டுமஸ்தான கட்டையுருவமுங் கொண்டவர். பெருமைமிக்க கப்பலோட்டி; பெருவீரர்; மக்கள் கூட்டங்களைச் சாமர்த்தியமாக நடத்திச்செல்லும் ஆற்றல் மிக்கவர்; தயாள சிந்தையர் (அந்தக் காலத்துக்கு). நம்பமுடியாத துணிச்சலும் தைரியமும். அவர் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ஸ்பெயின் மக்கள் நடுநடுங்கினர்.

புகழ்மிக்க எட்டு கடற்பிரயாணங்கள்:—

(1) 1567. அடிமைகள் வியாபாரத்தைத்[1] தொடங்கிய அவர் உறவினர் சர் ஜான் ஹாகின்ஸிடம்[2] முதலில் பயிற்சி பெற்றார்.

சான் ஜுவானில்[3] ஸ்பானிஷ்காரர் எதிர்ப்பால் பெரு நஷ்ட மடைந்தார். அதுமுதல் அவர்கள்மீது பகைமை பாராட்டிப் பழிவாங்கக் கங்கணங் கட்டிக்கொண்டு அவ்வகையிலேயே தம் வாழ்நாள் முழுமையும் கழித்தார்.

(2) 1572. பனமா பூசந்தி[4] வழியாகப் பெரு[5]விலிருந்து செல்வங்களை ஏற்றிவந்த கோவேறுகழுதைக் கூட்டத்தை எதிர்த்துப் பிடித்தார்.

(3) 1578-1580. உலக முழுமையுஞ் சுற்றி வந்த ஒரு கடற் பிரயாணத்தில் பெரு துறைமுகங்களைக் கொள்ளையிட்டுப் பெருஞ் செல்வத்துடன் நாடு திரும்பினார்.

நாடு திரும்பியதும் கோல்டன் ஹைண்ட்[6] என்னும் அவரது கப்பலின் மேல்தட்டில் அரசியே அவரைக் காணவந்து அவருக்கு 'சர்' பட்டம் வழங்கினாள். அவர் செயல்களை அரசி ஒப்புக்கொண்டு ஆதரித்ததற்கு இது முதல் அறிகுறி.

(4) 1585. அட்லான்டிக் பெருங் கடலின்[7] இரு கரைகளிலுமுள்ள ஸ்பானிஷ் துறைமுகப்பட்டினங்களைத் தாக்க அரசி முப்பது கப்பல்களுக்குத் தலைவராக ட்ரேக்கை நியமித்து அனுப்பினாள்.

இரண்டாம் பிலிப்பின் படையெடுப்பு முயற்சிகளுக்குத் தடையுண்டாக்குதலே இதன் முக்கிய நோக்கம். ஆயினும், ட்ரேக்கின் செயல்களால் ஏற்பட்ட பெரு நஷ்டம் இங்லண்டை உடனே எதிர்த்துக் கைப்பற்ற வேண்டுமென்று பிலிப்பைத் தூண்டியது.

---

1. The slave trade. 2. Sir John Hawkins. 3. San Juan. 4. The Isthumus of Panama. 5. Peru. 6. The 'Golden Hind.' 7. The Atlantic.

(5) 1587. கேடிஸ்[1] துறைமுகத்தைத் துணிச்சலாக அடைந்து அங்கிருந்த ஸ்பெயின் நாட்டுக் கப்பல்களையும் சரக்கு களையும் அழித்தார்.

இதனால் 'ஆர்மடா'[2] புறப்பட ஒரு வருஷம் தடையேற்பட்டது. இதை ட்ரேக் "ஸ்பெயின் மன்னரின் தாடியைக் கரித்தது"[3] என்றார்.

(6) 1588. ஆர்மடா.

கப்பற் படைத்தலைவர் ஹவர்ட் பிரபுவின் யுத்த ஆலோசனைச் சபையில்[4] ட்ரேக் ஒரு அங்கத்தினராக இருந்தார். க்ரெவ்லீன்[5] கடற் போரில் பெருங் காரியங்களைச் செய்து ட்ரேக் ஸ்பெயின் கப்பற் படையை வடகடலுக்குள் துரத்திச் சென்றார்.

(7) 1589. ஸ்பெயின் கடற்கரையைத் தாக்க ட்ரேக் ஒரு "எதிர் ஆர்மடா"[6]வைத் திரட்டிச் சென்றார்.

பயன்பெறவில்லை.

(8) 1596. மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கடைசி பயணம். ஹாகின்ஸோடு கப்பற்படைத் தலைமை பூண்டார்.

பழைய பயணங்களைப்போல் அவ்வளவு லாபகரமாயில்லை; ஸ்பானிஷ் மக்கள் முன்னைவிட அதிக உஷாராக இருந்தனர். வழியில் ட்ரேக்கும் ஹாகின்ஸும் காய்ச்சல் கண்டு இறந்தனர்.

## கு. 85. 1588-ல் ஆர்மடா வந்தது ஏன்?

மதச் சீர்திருத்த எதிர்ப்பியக்கத்தை[7] மும்முரமாக ஆதரித்த தொடர்பில் பிலிப் எப்போதாவது எலிசபெத்தைத் தாக்கியாக வேண்டும். கீழ்க்குறிப்பிட்டுள்ள காரணங்களால் அது நெடுங் காலம் தடைபட்டது :—1. எந்தக் காரியத்தையும் தாமதமாகச் செய்தல் பிலிப்புக்குச் சுபாவம் (இது எலிசபெத்துக்கும்சுபாவம்); 2. நெதெர்லண்ட்ஸில் தோன்றிய கலகத்தால் பிலிப்புக்குத் தடங்க லேற்பட்டது; 3. பிலிப்புக்கு அடிக்கடி பணமுட்டு ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

ஸ்பெயின் துரைத்தனத்தார் ஊதாரிகள், சாமர்த்தியமற்றவர்கள், லஞ்சம் வாங்குவோர். 'கடல் நாய்க'ளின் செயல்களால் அமெரிகாவி

---

1. Cadiz. 2. The Armada. 3. 'Singeing the King of Spain's beard'. 4. Lord Admiral Howard's Council of War. 5. Gravelines. 6. A counter Armada. 7. The counter-Reformation.

விருந்து வரக்கூடிய வருமானம் கொள்ளை போயிற்று. நெதெர் லண்ட்ஸ் மக்களின் கிளர்ச்சியால் அந்நாட்டு வருமானமும் போயிற்று.

1587-ல் ஆபத்து தலைக்கே வந்துவிட்டது. 1. எலிசபெத் நெதெர்லண்ட்ஸ் மக்களுக்கு வெளிப்படையாக உதவிபுரியலா னாள். இங்லண்டைக் கைப்பற்றுவிட்டால் பிலிப்புக்கு அவர்களை அடக்கவே முடியாது. 2. 1585-ல் ட்ரேக் மேற்கிந்தியத் தீவு களில் எதிர்பாராத நஷ்டத்தை விளைவித்தார். ஸ்காட் மக்கள் அரசி மேரி இறந்துவிட்டாளாதலால், இங்லிஷ் சிம்மாசனத்துக் குத் தாமே வாரிசு என்று பிலிப் இனி சொல்லிக் கொள்ளலாம். அவள் சிரச்சேதஞ் செய்யப்பட்டதற்குப் பழிவாங்க வேண்டு மென்று யூரோப்பிய காதொலிக்கர் அனைவரும் கூக்குரலிட்டனர். 3. ஐந்தாம் சிக்ஸ்டஸ்[1] என்னும் போப்பு (1585-90) இம்முயற்சிக் குப் பொருளுதவி தர முன்வந்தார்.

## கு. 86. எலிசபெத் காலத்தில் இங்லண்டில் கலைகளின் மறு பிறப்பு[2]

ஆர்மடாவின் தோல்விக்குப் பிறகு, நாடு அமைதியோடும் பாதுகாப்போடும் தன்னம்பிக்கையோடும் இருந்த சமயத்தில், இங்லண்டில் கலைகள் வளரலாயின.

அரசியே புதுக்கலைகளில் ஊக்கங்கொண்டவள். லாடினி லாகட்டும் இடாலியனிலாகட்டும் அவள் பிரயாசையின்றிப் பேசக் கூடியவள். அவள் கொண்டிருந்த 'நாட்டுக்கொரு அரசு'[3] என் னும் கொள்கை புதுக்கலைகளின் விளைவாக வந்ததே.

ஸ்பென்செர், ராலெ[4] முதலியோர் பல கலைகளிலும் வல்ல வர்களாயிருந்தனர்.

ஸ்பென்செர் அயர்லண்டில் ஒரு துரைத்தன உத்தியோகத்தை வகித்திருந்தபோது போதுபோக்குக்காக 'பேரி க்வீன்'[5] என்னும் செய்யுள் நூலை இயற்றினார். இங்லிஷ் மொழியில் அதிமுக்கியமான நூல்களுள் அது ஒன்று. ராலெ போர்வீரர், கப்பலோட்டி, அணுக் கர்[6], கவி, சரித்திராசிரியர், குடியேற்றி வைத்தவர்[7].

கல்வி விஷயத்தில் மக்கள் அதிக ஊக்கங் காட்டினர். பல புகழ்பெற்ற கலாசாலைகளும் கல்லூரிகளும் அக்காலத்தில் தோன் றின—கலைந்த மடங்களின் செல்வங்கள் அவற்றிற்கு மூலதன மாயின.

---

1. Sixtus V. 2. The Renaissance. 3. National Monarchy. 4. Spenser, Raleigh. 5. 'The Faerie Queene'. 6. Courtier. 7. Coloniser.

இலக்கியமும் இன்னிசையும்[1] இங்லண்டில் கீழ்வருவனவற்ருல் ஊக்கங்கொண்டன : பழைய க்ரீஸ் ரோம் இலக்கியங்களின் புதுப் பயிற்சி, புது உலகத்தின்[2] ஆச்சரியங்களைக் கண்டுபிடித்தல், நாட்டினர் சாதித்தவற்றில் பெருமை யுணர்ச்சி[3]. ஷேக்ஸ்பியர்[4] தோன்ருதிருந்தபோதிலும், ஸ்பென்செர், மார்லோ, சாப்மன், சிட்னி, ஜான்சன்[5] முதலியவர்களின் நூல்களே அக்காலத்துக்குப் பெருமையளிக்க வல்லன. இன்னிசையிலும், ஆர்லாண்டோ கிப்பன்ஸ், டாலிஸ், பிர்ட், வில்பி, மார்லி[6] முதலியோர் இங்லண்டை யூரோப்பின் முன்னணியில் அமர வைத்தனர்.

நாட்டில் செல்வர்கள் வீடுகளிலும் கலைவல்லோர் வீடுகளிலும் இசைப்பயிற்சிக்கு அதிக ஆதரவிருந்தது.

யூரோப் முழுமையிலும் தோன்றிய கலைகளின் மறுபிறப்பில் ஷேக்ஸ்பியர் (1564-1616) கடைசியில் தோன்றி நடுநாயக நிலையை அடைந்தார். இயற்கையின் அழகில் காட்டிய ஆர்வத்திலும், மக்கள் இயற்கையில் காட்டிய ஊக்கத்திலும் அவரிடம் அக்காலத்தின் சாயையைக் காண்கிருேம்.

## கு. 87. எலிசபெத்தின் ‘செயலற்ற சாமர்த்தியம்’[7]

(1) கலியாணம்: ஒன்றுஞ் செய்யவேண்டாம். (கலியாணஞ் செய்துகொள்ள விரும்பியவர்கள்: இரண்டாம் பிலிப், ஆர்ச்ட்யூக் சார்ல்ஸ், ஆரன் ஏர்ல், ஆஞ்சூ ட்யூக், ஆலெங்சோங் ட்யூக், லெஸ்டர் ஏர்ல், ஸ்வீடென் இளவரசர்[8].)

அரச சபையினர் எலிசபெத் எதிர்ப்புமதவாதியொருவரைக் கலியாணஞ் செய்துகொண்டு தனக்குப் பின் எதிர்ப்பு மதத்தை ஆதரிப்பவரே சிம்மாசனத்தில் அமரும்படி நிச்சயப்படுத்த வேண்டிக்கொண்டனர். அரசியோ தன் குடிகளுள் இருதரத்தாருக்கும் தன்மீது சலிப் புண்டாகாதபடிக்கும், வெளிநாட்டினர் சடுதியில் தன்னைப்பகைத்துக் கொள்ளாமற்படிக்கும் நடந்துகொண்டாள். (தனக்கு ஐம்பது வயதானபோதுகூட (1580), ஆலெங்சோங் ட்யூக் தன்னைக் கலியாணஞ் செய்துகொள்ள நினைக்கும்படி நடந்துகொண்டாள்,)

(2) வெளிநாட்டு விவகாரங்கள்[9]: ஒன்றுஞ் செய்யவேண்டாம். (டச்சுக்காரர்களுக்கும், ஹ்யுகினேட்டுகளுக்கும்[10], கடல் நாய்

1. Literature and music. 2. The New World. 3. Pride in national achievements. 4. Shakespeare. 5. Spenser, Marlowe, Chapman, Sidney, Jonson. 6. Orlando Gibbons, Tallis, Byrd, Willbye, Morley. 7. ‘Masterly Inactivity’. 8. Philip II, Archduke Charles, Earl of Arran, Duke of Anjou, Duke of Alen Con, Earl of Leicester, Prince of Sweden. 9. Foreign policy. 10. Huguenots.

களுக்கும் அந்தரங்கமாக உதவி புரிந்தாளேனும், கூடுமான வரையில் தன் நோக்கத்தை வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ளாமலேயே நெடுங்காலங் கழித்துவிட்டாள்.)

அவளது மந்திரிமார் அவள் யூரோப்பில் எதிர்ப்புமதநாடுகளின் கூட்டுறவுச் சங்கமொன்றின் தலைவியாக[1] இருக்க ஒப்புக்கொள்ள வேண்டுமென்றனர். அப்படிச் செய்திருந்தால், இங்லண்ட் போருக்குத் தயாராவதன்முன் ப்ரான்ஸோடும் ஸ்பெயினேடும் சண்டையிட வேண்டி வந்திருக்கும்.

(3) மதம்: ஒன்றுஞ் செய்யவேண்டாம். "எவர் ஆன்மாவுக்குள்ளும் புகுந்து பார்க்கவேண்டாம்"; அரசாங்கத்துக்கு உண்மையாக இருக்கும் வரையில் எந்தக் கட்சியையும் ஒறுத்து வெறுப்படையச் செய்யவேண்டாம்.

மந்திரிமார் எதிர்ப்புமதத்துக்கு மிக்க ஆதரவு காட்டவேண்டுமென்றனர்: காதொலிக்கரை ஒறுக்கவேண்டுமென்றனர். இதற்கெல்லாம் அரசி தன் ஆட்சியின் முதற் பாதியில் இடந்தரவில்லை. பிறகு அரசாங்கத்தின் பாதுகாவலேயே தன் முக்கிய நோக்கமாகக் கொண்டாள்.

(4) மேரி ஸ்டுவர்ட்: ஒன்றுஞ் செய்யவேண்டாம். காதொலிக்கர் மேரியே அரச பட்டத்துக்கு வாரிசு என்று நினைத்துக் கொண்டிருக்கட்டும்; அதனுல் அவர்கள் அமைதியாக இருப்பார்கள். (பத்துப் பன்னிரண்டு வருஷங்கள் அவ்விதமாகத்தான் அவர்கள் இருந்தார்கள்). ஆயினும், மேரியை எலிசபெத் தன் வாரிசாக வாய்விட்டுச் சொல்லி ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படிச் செய்திருந்தால், எதிர்ப்புமதக் கொள்கையினர்க்குக் கலவரமுண்டாயிருக்கும்.

மந்திரிமார் மேரியைச் சிரச்சேதம் செய்துவிடவேண்டுமென்றனர். அவ்விதம் செய்தால் காதொலிக்கர்கள் அவளை மதத்தியாகி[2] என மதிப்பார்கள்; ஸ்பெயின் உடனே போர் தொடுத்துவிடும்.

## ரு. 88. எலிசபெத் காலத்தில் பார்லமென்ட்

இக்காலம் துரைத்தனத்தைக் கட்டுப்படுத்தி ஆள்வதுபோல் பார்லமென்ட் அக்காலம் செய்யுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அதன் வேலைகள்: (1) புதிய வரிகளை அனுமதித்தல்; (2) சட்டங்களை இயற்றிவைத்தல். ஆயினும், ட்யூடர் அரசர்கள்,

1. Head of a Protestant League in Europe. 2. Martyr.

போர்க்காலங்களில் தவிர, மற்ற காலங்களில், தங்களுக்குச் சொந்தமான அரச மானியங்களி[1]லிருந்துவரும் வருமானத்தையும், அரச பட்டம் வகிக்கும்போது அவர்களுக்குப் பார்லமெண்ட் அனுமதிக்கும் சில சுங்கவரிகளையுங்[2] கொண்டே துரைத்தனத்தின் சாதாரணமான செலவுகளைச் சம்மாளித்து வந்தனர். மேலும், இக்காலத்தில்போல் அக்காலத்தில் அடிக்கடி புதிய சட்டங்கள் இயற்றப்படவேண்டிய அவசியம் தோன்றவில்லை.

'ட்யூடர் மன்னர்களின் கட்டற்ற வல்லரசு'[3] (கு. 52) மக்களுக்காக ஏற்பட்ட மக்களின் ஆட்சியே; ஆயினும், மக்களாலேயே நடைபெற்ற ஆட்சியன்று. அரசரும் அவரது ஆலோசனைச் சபையினரும் துரைத்தனத்தை நடத்தவேண்டிய பொறுப்பைப் பெற்றவர்கள் என்று எல்லோரும் ஒப்புக்கொண்டனர். அதி முக்கியமான சந்தர்ப்பங்களில்தான் பார்லமெண்ட் கூடியது. மேலும், அநேகமாகப் புதுவரி விதிக்கவேண்டு மென்றால்தான் அரசர் பார்லமெண்டைக் கூட்டுவாராதலால், அதை அடிக்கடி கூட்டவில்லையே என்று எவரும் விசாரப்பட மாட்டார்கள்.

பார்லமெண்ட் அவளது அரசியல் கொள்கைகளின் குற்றங் குறைகளை எடுத்துக் கூறிக்கொண்டோ, ஒரு எதிர்ப்புமத வாதியைத் தான் அவள் கலியாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று மனு செய்துகொண்டோ இருப்பதை எலிசபெத் விரும்பவில்லை. (பார்லமெண்டை அடிக்கடி கூட்டத் தான் விரும்பாததாலேயே அவள் சிக்கனமாயிருக்கத் தீர்மானித்தாள்.) அவள் காலத்தில் பார்லமெண்ட் கூடியது பதினன்கு தரம்; அவை பெரும்பாலும் அவளது ஆட்சியின் பிற்பகுதியிலேயேயாம். அப்போதுதான் ஸ்பெயினுடன் போரிடவும் அயர்லண்ட் கலகத்தை அடக்கவும் அவளுக்குப் பணம் வேண்டியிருந்தது. அச்சந்தர்ப்பத்தில் பார்லமெண்ட் அவள் சிலருக்கு அளித்துவந்த தனி உரிமைகளைப்[4] பற்றி ஆக்ஷேபித்து முறையிடலாயிற்று. அம்முறையீட்டுக்கு அரசி பெருந்தன்மையாக இணங்கினாள்.

'தனி யுரிமை' ஏதாவது ஒரு பொருளைச் செய்யவோ, வேற்றார்களிலிருந்து தருவிக்கவோ இருக்கலாம். சில சமயம் அரசிக்கு ஆன ஒரு பிரதானிக்கு அது இனாமாக அளிக்கப்படும்; சில சமயம் அது ஒரு வியாபாரிக்கு ஒரு பெருந் தொகைக்கு விற்கப்படும். தனியுரிமை பெற்றவர்கள் சரக்கின் ரகத்தை மாற்றியோ, விலையை ஏற்றியோ

1. Crown lands. 2. Customs duties. 3. 'The Tudor Despotism.' 4. Monopolies.

லாபஞ் சம்பாதிக்கலாம். சரக்கை வாங்கி உபயோகிப்பவர்கள்தான் அதை முடிவில் கைவிட்டுக் கொடுக்கவேண்டிவரும். இது ஒரு மறைமுகமான[1] வரி.

## கு. 89. ட்யூடர் காலத்தில் ப்ரிவி கௌன்சில்[2]

அரசரது ப்ரிவி கௌன்சில் இடைக்காலத்தில்[3] போல் இப்போது அநேகமாகப் பெரிய பிரபுக்களையும் பிஷப்புகளையும்மட்டும் கொண்டதாயில்லை; துரைத்தன அலுவல்கள் பலவற்றில் நிபுணர்களான நடுத்தர வகுப்பைச் சேர்ந்தோர்[4]பலரை அங்கத்தினராகக் கொண்டிருந்தது. அதன் கூட்டங்களில் அரசர் தலைமை வகித்தார். அதன் அங்கத்தினர்கள் உண்மையில் "ஏவலாளர்களே[5]": அவர்கள் ஆலோசனை கூறினர்களாயினும், நாளடைவில் அவர்கள் அரசரின் விருப்பத்தை நிறைவேற்றினர்கள்.

லார்ட் சான்செலரும்[6] (சட்ட சம்பந்தமான விஷயங்களைக் கவனிப்பவர்) அரசாங்கக் காரியதரிசியும்[7] (வெளிநாட்டு விவகாரங்களைக் கவனிப்பவர்) லார்ட் ட்ரெஷரரும்[8] (பண விஷயங்களைக் கவனிப்பவர்) அதன் முக்கிய அங்கத்தினர்கள். கான்டெர்பெரி ஆர்ச்பிஷப்பைப் போன்றவர்கள் அவர்களுக்குச் சிறப்பாகத் தெரிந்த விஷயங்களைப்பற்றிய (மதஸ்தாபன கட்டுப்பாடு[9], மத சம்பந்தமான விஷயங்கள்) ஆலோசனைவரும்போது கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர்.

நக்ஷத்திர அறை நீதிமன்றமும்[10] (கு. 53) ஹைகமிஷன் நீதிமன்றமும்[11] (§ 131) ப்ரிவி கௌன்சிலின் உட்சபைகளே.[12] அவற்றில் வெளியார் சிலரும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

## கு. 90. எலிசபெத் காலத்தில் அமைதிக்கான நீதிபதிகள்[13]

மற்ற நாடுகளில் துரைத்தனத்தாரின் தீர்மானங்களை நிறைவேற்றி வைக்க ஒவ்வொரு ஜில்லாவிலும் சம்பளத்துக்கு அமர்த்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் இருந்தனர்; இங்கிலண்டிலோ அவ்வவ்விடத்துப் பெரிய மனிதர்களே[14] சம்பளம் வாங்காத நீதிபதிகளாக இருந்து காரியங்களை நடத்தித் தந்தார்கள். அவர்கள் நாளடைவில் நாட்டில் அதி முக்கியமான வகுப்பினராயினர். பாட்டை

1. Indirect. 2. Privy Council. 3. The Middle Ages. 4. Men of middle class. 5. 'Ministers.' 6. Lord Chancellor. 7. The Secretary of State. 8. Lord Treasurer. 9. Church discipline. 10. The Star Chamber. 11. The Court of High Commission. 12. Committees. 13. Justices of the Peace. 14. The local 'gentry.'

களையும் பாலங்களையும் பராமரித்தல், ஏழைகளுக்கு உதவி புரிதல் முதலிய வேலைகளை அவர்களே கவனித்துக்கொண்டார்கள். மதக் கட்டுப்பாட்டுக்கு அடங்காதவர்களையும்[1] (§ 119) சில்லரைக் குற்ற வாளிகளையும்[2] கண்டுபிடித்து அபராதம் விதித்தோ, தொழுவத்தி[3] லிட்டோ தண்டிப்பதும் அவர்கள் கடமையே. பெரிய குற்றங் கள்[4] செய்தவர்களைச் சுற்றுப்பிரயாணஞ் செய்துவரும் அரசரது நீதிபதிகள் ஆங்காங்குக் கூட்டும் அசைஸ் நீதிமன்றங்களின்[5] முன்னிலையில் விசாரணைக்குக் கொண்டுவந்து நிறுத்துவதும் அவர் கள் பொறுப்பே.

## கு. 91. எலிசபெத் காலத்தில் வியாபார விருத்தி

**கடல்தாண்டி நடைபெற்ற வியாபாரம்:** இதில் முதல்முதல் ஈடுபட்டவர்கள்,[6] செலவுகளையும் கஷ்டங்களையும் பங்கிட்டுக் கொண்டு, நடுவில் வந்து போட்டியிடுபவர்களை[7] அடக்கி, ஒருமித்து வியாபாரஞ் செய்ய வியாபாரிகள் சங்கங்களாகிய கம்பெனிகளை[8] ஏற்படுத்தினர்.

1553-ல் ரஷ்யாவோடு வியாபாரஞ் செய்ய மஸ்கோவி கம் பெனி[9] தோன்றியது.

1579-ல் பால்டிக் நாடுகளோடு வியாபாரஞ் செய்ய ஈஸ்ட் லண்ட் கம்பெனி[10] தோன்றியது.

1581-ல் டர்க்கி, சிரியா நாடுகளோடு வியாபாரஞ் செய்ய லெவான்ட் கம்பெனி[11] தோன்றியது.

1600-ல் இந்தியாவோடும் கிழக்கிந்தியத் தீவுகளோடும் வியா பாரஞ் செய்யக் கிழக்கிந்தியா கம்பெனி[12] தோன்றியது.

**உள்நாட்டு வியாபார விருத்தி:** எலிசபெத்தும் பர்லியும் ஆக் கத் தொழில்களை[13] ஊக்கினார்கள். பட்டணங்கள் விரைவில் வளர்ந் தன (§ 114). பிலிப்பின் ஒறுத்தலால்[14] வெளியேறிய நெதர் லண்ட்ஸ் மக்கள் கிழக்கு ஆங்லியாவில்[15] குடியேறி அங்கு நேர்த்தி யான வேலைப்பாடுகளுடன் கூடிய நெசவுத் தொழிலை நிலைக்கச் செய்தார்கள்.

1. 'Recusants.' 2. Petty offenders. 3. The 'stocks'. 4. Serious crimes. 5. The Assizes. 6. Pioneers. 7. 'Interlopers'. 8. Companies. 9. Muscovy Company. 10. Eastland Company. 11. Levant Company. 12. East India Company. 13. Manufactures. 14. Persecution. 15. East Anglia.

லண்டன் வட யூரோப்பின் முக்கிய வியாபார ஸ்தலமா யிற்று. அங்கிலேயிலிருந்த ஆன்ட்வெர்ப் நகரம் நெதெர்லண்ட்ஸ் மக்களின் கலகத்தால் அழிவுற்றது (§ 117).

பெரு முதல் வைத்துச் செய்யும் ஆக்கத்தொழில்கள் விருத்தியடைந்தன. இடைக்காலத்துத் தொழிற் சங்கங்களின் ஏற்பாட்டின்படி[1] சில நாட்கூலிக்காரர்களையும்[2] தொழில் மாணுக்கர்களையும்[3] வைத்துக்கொண்டு தனிப்பட்ட தொழிற்றலைவர்கள் (மேஸ்திரிகள்[4]) ஆக்கத்தொழில் செய்தார்கள் (§ 44). இப்போது, சில முதலாளிகள்[5], தொழிலாளர்கள் தத்தம் வீடுகளில் செய்து கொடுப்பதற்கு வேண்டிய மூலப் பொருள்களைக்[6] கொடுத்து, அவ் விதம் ஆக்கப்பட்ட பொருள்களைச் சேகரித்து விலையாக்கும் முறை ஏற்பட்டது. அதனுல், ஆக்கப்பட்ட பொருள்களின் அளவு பெருகியது.

## கு. 92. எலிசபெத் காலத்தில் அயர்லண்ட்

ட்யூடர் மன்னர்கள் அயர்லண்டை ஆள இரு முறைகளையே கையாண்டார்கள்: 1. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மூலம்; 2. ஐரிஷ் மக்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களில் இங்லிஷ் கனவான்களைக் குடியேற்றிவைத்தல் மூலம். முதல் வழியால் அதிக பணச்செல வேற்பட்டதால், இரண்டாவது வழியே மேரி, எலிசபெத் அரசிகளின் காலங்களில் கையாளப்பட்டு வந்தது. (இதுவே முதல் ஜேம்ஸ், க்ராம்வெல் காலங்களிலும் கையாளப்பட்டதாகும்).

இதனுல் ஐரிஷ் மக்கள் இங்லிஷ் மக்களை வெறுக்கலாயினர். எதிர்ப்புமத ஸ்தாபனம் அயர்லண்டில் புகுத்தப்பட்டதால், தங்கள் நாட்டை ஆக்கிரமித்தவர்கள் மொழியில் தொழுகை நடத்துவதை வெறுத்த ஐரிஷ் மக்கள் பற்றுதல்மிக்க காதொலிக்கர்களாயினர். இரு நாட்டினர்க்குள்ளும் மதம் ஒரு பிளவினை உண்டாக்கியது.

குறிப்பு: அயர்லண்ட் மக்களுக்கு நாட்டுப்பற்றும் காதொலிக் மதப்பற்றும் ஒன்றே. ஸ்காட்லண்ட் மக்களிடையே இதற்கு நேரெதிரான நிலை காணப்பட்டது (§ 112).

இரண்டாம் பிலிப்பும் போப்பும் எலிசபெத்துக்கு விரோதமான கிளர்ச்சிகளை அயர்லண்டில் அடிக்கடி தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார்கள். (இவ்விதம் எலிசபெத் நெதெர்லண்ட்ஸில்

---

1. Medieval gild system. 2. Journeymen. 3. Apprentices.
4. 'Masters'. 5. Employers. 6. Raw materials.

கிளப்பிய கிளர்ச்சிக்காக பிலிப் பழிவாங்கினுர் (§ 117). அடிக்கடி கலகங்கள், படுகொலைகள், சொத்துப் பறிமுதல்கள். ஆயினும், அயர்லண்ட் மக்கள் தங்களிடையே இருந்த பல குலப் பிரிவுகளால் 1598வரை பொருமையால் பிளவுபட்டுக் கிடந்து ஒத்துழைக்கச் சக்தியற்றிருந்தனர். அவ்வருஷம் டைரோன் ஏர்லாகிய ஹ்யு ஓநீல்[1] ஒரு தேசீய கிளர்ச்சியைத் தூண்டினுர். அவர் எலிசபெத் சமஸ்தானத்தில்[2] சில ஆண்டுகள் பழகிய மிக்க சமர்த்தர். ப்ளாக் வாடர் ஆற்றங்கரையில் எல்லோ போர்ட்[3] என்னு மிடத்தில் அவர் ஒரு இங்லிஷ் படையை முறியடித்தார் (§ 133).

எசேக்ஸ் ஏர்ல்[4] (கிழ அரசிக்கு மிகுதியும் ஆன[5] ஒரு வாலிபப் பிரபு) பெருஞ் சேனையுடன் அக்கிளர்ச்சியை அடக்க அனுப்பப்பட்டார். காலந் தாழ்த்தாமல் டைரோனைத் தாக்காததால், எசெக்ஸ் படைகுன்றி ஆறுமாதத்துக்குச் சண்டையிடுவதில்லை என்று ஒரு சமாதான ஏற்பாடு செய்துகொள்ள வேண்டியவரானுர் (§ 133).

எசெக்ஸ் இங்லண்டுக்குத் திரும்பினுர். விரைவில் இராஜத் துரோகத்துக்காகச் சிரச்சேதஞ் செய்யப்பட்டார்.

மௌன்ட்ஜாய்[6] ஐரிஷ் கலகத்தை அடக்கினுர். அதுவும் எலிசபெத் இறந்த நாளன்று முடிவடைந்தது (1603).

அயர்லண்டில் ட்யூடர் ஆட்சியின் பலன்: அயர்லண்ட் ஒடுக்கப்பட்டதேனும், ஐரிஷ் மக்கள், காதோலிக் மதத்தில் வைராக்கியமான பற்று மேலிட்டவர்களாகி, இங்லிஷ் ஆட்சியில் ஆழ்ந்த வெறுப்புக் கொண்டனர்.

---

1. Hugh O'Neill, the Earl of Tyrone. 2. Elizabeth's Court. 3. Yellow Ford on the Blackwater. 4. The Earl of Essex. 5. Favourite. 6. Mountjoy.

## நான்காம் பகுதியில் பரிக்ஷை வினுக்கள்

1. "ஸ்காட்லண்ட், ப்ரான்ஸ், நெதெர்லண்ட்ஸ், ஸ்பெயின் நாடுகளால் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்த்தால்தான் இங்லண்ட் பாதுகாப்படையும்"—எலிசபெத் இந்தச் சிக்கல்களை எவ்விதம் தீர்த்தாள் ?

2. பதினாரும் நூற்றாண்டில் எச்சமயங்களில் யூரோப்பிய மதச்சீர்திருத்த இயக்கத்தின்[1] விளைவுகள் இங்லண்டில் தோன்றலாயின ?

3. பதினாரும் நூற்றாண்டில் ஸ்பெயின் வன்மையுற்றிருந்ததன் காரணமென்ன ?

4. "எலிசபெத் எதையும் தீர்மானித்ததில்லை ; எதுவும் அப்படியே சரிப்பட்டுப் போகும்படி விட்டுவிட்டாள்."—இதன் உண்மை என்ன?

5. (1) அரசர்-காதரீனுடைய விவாகரத்திலிருந்து, (2) ஆரும் எட்வர்ட் சிம்மாசன மேறியதிலிருந்து, (3) எலிசபெத் சிம்மாசனமேறியதிலிருந்து—இங்லிஷ் மதச்சீர்திருத்த இயக்கம்[2] தொடங்கியதாகக் கூறுகிருர்கள். ஒவ்வொன்றும் எதையொட்டிக் கூறப்படுகிறது ?

6. எலிசபெத் வெளிநாட்டு விவகாரங்களை நடத்திய விதத்துக்கும்[3] அவள் தகப்பனும் பாட்டனும் நடத்திய விதங்களுக்கும் வேறுபாடு என்ன ?

7. எலிசபெத்தை அக்காலத்துக்குச் சரியான அரசி என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும் ? அவள் காலத்தில் இங்லண்டுக்கு நேர்ந்த அனுகூலங்களுக்கு அவள் நேரில் எவ்வகையில் காரணமாயிருந்தாள் ?

8. எலிசபெத் அரசபட்டம் வகித்ததிலிருந்து இங்லண்டுக்கும் ஸ்பெயினுக்கும் பகைமை எவ்வாறு படிப்படியாக மூண்டது ? சுமார் முப்பது ஆண்டுகளாக எலிசபெத்தும் பிலிப்பும் போர் தொடுக்காதிருந்ததன் நோக்கமென்ன ?

9. 'தூய்மைக் கொள்கை'[4] என்பதென்ன ?

10. 'பெருமை மிக்க எலிசபெத் அரசியின் பரந்த நாட்கள்'[5] என்னும் வருணனை அவள் காலத்து இங்லண்டுக்கு எவ்வகையில் பொருந்தும் ?

11. எலிசபெத் பட்டத்துக்கு வந்தபோதும் முதல் ஜேம்ஸ் பட்டத்துக்கு வந்தபோதும் இருந்த மதசம்பந்தமான நிலைகளை[6] ஒத்திட்டுக் கூறுங்கள். அவற்றில் காணப்படும் வேறுபாடுகள் எவ்விதம் தோன்றலாயின ?

---

1. The Continental Reformation. 2. The English Reformation. 3. The foreign policy of Elizabeth. 4. Puritanism. 5. 'The spacious times of great Elizabeth.' 6. The religious situation.

12. 1559-முதல் 1568-வரை எலிசபெத்துக்கும் ஸ்காட்லண்டுக்கும் இருந்த தொடர்பினை[1] விவரித்துக் கூறுங்கள். அவ்வாண்டுகளில் ஸ்காட்லண்ட் விஷயம் ஏன் முக்கியமானதெனக் கருதப்பட்டது ?

13. (1) பத்தொன்பது வருஷ காலமாக ஸ்காட் மக்கள் அரசியான மேரியைக் காவலில் வைத்திருந்ததற்கும், (2) முடிவில் அவளைச் சிரச்சேதஞ் செய்ததற்கும், எலிசபெத் என்ன காரணங்களைக் கூறியிருப்பாள் ?

14. மேரி ஸ்டுவர்ட்டை எலிசபெத் நடத்திய விதம் நியாயமானதென்று நீங்கள் கூறுவீர்களா ?

15. டட்லி குலத்தவருள்[2] எவர்கள் ட்யூடர் மன்னர்கள் காலத்தில் பிரசித்தி பெற்றிருந்தார்கள் ? அவர்கள் செய்ததென்ன ?

16. எலிசபெத் காலத்தில் இங்லண்டுக்கும் ப்ரான்ஸுக்கும் இருந்த தொடர்பினைச் சுருக்கமாகக் கூறுங்கள்.

17. 'மதச் சீர்திருத்த எதிர்ப்பு இயக்கம்'[3] என்பதென்ன ? எலிசபெத் காலத்தில் இங்லண்ட் அதனால் என்ன விளைவுகளைக் கண்டது ?

---

1. Relations. 2. The Dudley family. 3. 'Counter-Reformation'.

# ஐந்தாம் பகுதி

## அரசர்க்கும் பார்லமென்டுக்கும் பகை

(1603—1688)

# ஐந்தாம் பகுதி

## அரசர்க்கும் பார்லமெண்டுக்கும் பகை

(1603—1688)

முதல் ட்யூடர் மன்னர் பட்டம்பெற்ற காலத்தைப்போலவே 1603-ம் வருடத்தில் முதல் ஸ்டுவர்ட் மன்னர் பட்டம் பெற்ற காலமும் இங்லண்ட் சரித்திரத்தில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒரு பிரிவுக் கோடாகும். 1485 முதல் இங்லிஷ் மக்கள் நாட்டில் நீதியும் அமைதியும் நிலவியிருக்க அரசரிடமே அரசாங்க அதிகாரங்களை விட்டுவைக்க மனம் ஒப்பி இருந்தார்கள். இந்த "ட்யூடர் மன்னர்களின் கட்டற்ற வல்லரசு"[1] நாட்டு மக்கள் செழிப்படையவும், தன்னம்பிக்கை பெறவும், சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நாட்டுப்பற்று கொள்ளவும் துணை நின்றது.

ஆனால், எலிசபெத் இராணியின் பிற்காலத்தில் ஒரு புதிய உணர்ச்சி வளர்வதற்கான அறிகுறிகள் தோன்றின. அவ்வுணர்ச்சி பெரும்பாலும் வியாபாரத்தால் செல்வச் செழிப்படைந்த நகர மாந்தரிடையும், எட்டாம் ஹென்றியின் ஆட்சியில் மடக்கலைப்பு[2] ஏற்பட்ட காலத்தில் நிலம் வாங்கியவர்களுடைய சந்ததியாரான நிலம் படைத்த "கனவான்க"[3]ளிடையுமே காணப்பட்டது. இவ்விருவகை மக்களும் பெரும்பாலும் தூய்மைக் கொள்கையினராக[4] இருந்தனர். தவிரவும், அவர்கள் தங்கள் அறிவு வளம் காரணமாக அரசியல் விவகாரங்களில் மிகுந்த ஊக்கங்காட்டலாயினர். எலிசபெத் அரசாங்க விஷயங்களில் பிறர் தலையிடுதலைச் சிறிதும் சகிக்கவே இல்லை; மத விஷயமாக 'மேல் மதஸ்தாபனம்' (ஹைசர்ச்[5]) எனப்பட்ட ஏற்பாட்டை ஆதரித்தாள். ஆனால், ஆள்வோருக்கு வேண்டிய பிறவிச் சிறப்பாகிய வெளிப்பட்ட எதிர்ப்புக்கு இடங் கொடாதிருக்கும் பக்குவம் அவளிடம் நிறைந்திருந்தது. ஆனால், ஸ்டுவர்ட் மன்னர் பட்டம் பெற்றதுமுதல் நிலைமை மாறியது. இப் புதிய பரம்பரையினர், பார்லமெண்டை ஆலோசிக்காமல் நாட்டை ஆளவும், குடி ஜனங்களுடைய மத உணர்ச்சிகளைப் புறக்கணித்து நடக்கவும் "மன்னர்களின் தெய்விக உரிமை"[6]யால் தங்களுக்கு அதிகாரம் உண்டென நினைத்தார்கள். அதனால் அவர்கள் ஒரு பெரிய போராட்டத்தைக் கிளப்பிவிட்டார்கள். அதன் பலனைப் பற்பல அதிர்ஷ்ட மாறுதல்களுக்குப்பின் அவர்கள் தோல்வியுற்றார்கள்.

இந்தப் போராட்டத்தின் வரலாறுதான் இந்த ஐந்தாம் பகுதியின் முக்கிய அமிசமாகும்.

---

1. The Tudor Despotism. 2. The Dissolution of the Monasteries. 3. The landed 'gentry'. 4. Puritans. 5. 'The High Church'. 6. 'The Divine Right of Kings.'

முப்பதாம் அத்தியாயம்

# பின் விளைவுகளின் சாயைகள்

(1603—1625)

§ 134. 'ஆட்சித் தொழி'லில்[1] நிபுணர் :—ஸ்காட்லண்ட் தேசத்து ஆறும் ஜேம்ஸ் 'முதல் ஜேம்ஸ்' என்னும் பட்டத்துடன் இங்லண்ட் மன்னரானார். அப்போது அவருக்கு முப்பத்தாறு வயது. அவர் நற்குணமுள்ளவரேனும் ஆடம்பரமான வீண் பேச்சு பேசுபவர்; நிதானபுத்தி யற்றவர். அரசராயிருப்பதைவிட அவர் ஒரு ஆசிரியராக இருக்கத் தகுந்தவர். அவர் சமய சாஸ்திரங்களையும் ஆட்சி நூல்களையும் மிக நன்றாகப் படித்தவர். இருந்தாலும், வெற்றி வேந்தர்க்கு இன்றியமையாத மனோவலிமை, கண்ணியம், மானிட இயற்கையறிவு முதலிய சிறந்த குணங்கள் அற்றவராயிருந்தார். அவர் மிகவும் தற்பெருமை பாராட்டினாரேனும் அரசருக்கேற்ற கம்பீரமான தோற்ற மற்றிருந்தது பரிதபிக்கத்தக்கதே. மன்னர்கள் எல்லோரும் தங்கள் அதிகாரத்தை நேராகக் கடவுளிடமிருந்து பெற்றவர்களாதலால், அவர்கள் எல்லாக் குற்றங்குறைகட்கும் புறம்பானவர்கள் (கு. 96) என்னும் மன்னர்களின் தேய்விக உரிமைக்[2] கொள்கையை ஜேம்ஸ் பெரிதும் ஆதரித்தார். 'ஆட்சித் தொழி'லில் தம்மை ஒரு நிபுணர் என மதித்துக்கொண்டார். அவர் பதினேழுரை வயதுமுதல் ஸ்காட்லண்ட் தேசத்தை ஆண்டு வந்தமையால், இங்லண்ட் அரசரான பொழுது அவருக்கு 'ஆட்சித் தொழி'லில் சுமார் இருபது வருஷகால அனுபவமும் பழக்கமும் இருந்தன.

1. 'Kingcraft'. 2. 'The Divine Right of Kings'.

அவருடைய பிரஜைகளுள் பெரும்பான்மையினரான இருவகையினர் அவர் பட்டம் பெற்றதனால் தங்கள் நிலைமை நலமடையும் என்று நம்பினார்கள் : (1) எலிசபெத் காலத்தில் துன்பமடைந்த காதொலிக்கர்கள், தங்கள் மதத்தைச் சார்ந்தவள் என்று சொல்லப்பட்ட இராணியுடன் வந்த தாராள மனமுடைய அரசரை ஆவலுடன் வரவேற்றார்கள். பட்டத்துக்கு வந்ததும் அவர் செய்த முதற்காரியங்களுள் ஒன்று காதொலிக்கர்கள் அரசர்க் கடங்கும் குடிகளாயிருக்கும்வரையில் துன்புறமாட்டார்களென்று உறுதி கூறியதாம். (2) காதொலிக்கர்களைப் போலவே சென்ற இருபது வருஷங்களாகத் துன்பப்பட்டுக்கொண்டிருந்த தூய்மைக் கொள்கையினர்[1] (§ 131), ப்ரெஸ்பிட்டீரியன் பழக்கத்தில் வளர்ந்த ஜேம்ஸ் தங்கள் அரசராவதை மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்திருந்தார்கள். 1603-ம் வருஷத்து வசந்த காலத்தில் ஜேம்ஸ் எடின்பரோவிலிருந்து லண்டனுக்குப் பயணப்பட்டுச் சாவகாசமாக வந்துகொண்டிருந்தபொழுது, வழிபாட்டுமுறையில் சுயேச்சையைப் பெருக்கவேண்டுமென்று கோரி அவர்கள் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்தார்கள். ஆயிரம் குருமார் கையெழுத்துக்கள் கொண்டதாகக் கருதப்பட்டதால், அது 'மில்லினேரி பெட்டிஷன்'[2] ('ஆயிரம்பேர் மனு') என்னும் பெயர் கொண்டது. இவ்விஷயத்தையும் தாம் கருணையுடன் கவனிப்பதாக ஜேம்ஸ் வாக்களித்தார்.

ஆனால், ஆர்மடா[3] காலம் தொடங்கி ஸ்பெயினுடன் நடந்து வந்த யுத்தத்தில் பேராசைபற்றியோ தேசப்பற்று காரணமாகவோ ஊக்கங்காட்டியவர்கள் எல்லோரும், யுத்தஞ் செய்பவரையும் யுத்தத்தையும் வெறுத்தவரொருவர் பட்டம் பெறுவது பற்றிப் பெருங்கவலை கொண்டார்கள். ஜேம்ஸ் தாம் உடனே ஸ்பெயினுடன் சமாதானம் செய்துகொள்ளப்போவதாகச் சொன்னவுடன் அவர்கள் பெரிதும்

1. The Puritans. 2. 'The Millenary Petition'. 3. The Armada.

பீதியடைந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஜேம்ஸ் பட்டத்துக்கு வருவதைத் தடுத்து அவரது உறவினளாகிய அரபெல்லா ஸ்டுவர்ட்[1] என்பவளை அரசியாக்கச் சூழ்ச்சி செய்தார்கள். அவர்களுள் பலர் விசாரணை செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப் பெற்றார்கள். அவ்வாறு தண்டனை பெற்றவர்களுள் எலிசபெத் காலத்து வீரராகிய சர் வால்டர் ராலே[2] என்பவர் ஒருவர். அவர் அசாக்கிரதையாகச் சில பேச்சுக்களைப் பேசினார் என்பதைத் தவிர வேறு குற்றஞ் செய்ததாக ருசுப்படுத்தப்படவில்லை யாகையால், கொலையை விரும்பாத ஜேம்ஸ், அவரைக் கொல்வதைத் தள்ளிவைத்துக்கொண்டே வந்தார். அதனால், ராலே அடுத்த பதினைந்து வருஷ காலம் சிறையிலேயே இருந்தார். அப்போதுதான் அவர் தமது பிரசித்தி பெற்ற உலக சரித்திரம்[3] என்ற பெரும் புத்தகத்தை எழுதி முடித்தார்.

§ 135. தூய்மைக் கோள்கையினரைப் புறக்கணித்தல்:—தம்மை எல்லோரும் "பிரிட்டிஷ் சாலமன்"[4] என அழைக்க வேண்டுமென்று ஜேம்ஸ் விரும்பினார். தம் அபிப்பிராயங்களை ஏற்காத எல்லோரும், மடையர்களாகவேனும், துஷ்டர்களாகவேனும், அல்லது இரு தன்மையுமுடையவர்களாக வேனும் இருக்கவேண்டுமென அவர் நினைத்தார். இவ்விதம் மற்றவர்களுடைய அபிப்பிராயத்தைப்பற்றி அவர் கொண்டிருந்த அவமதிப்பு, ஸ்டுவர்ட் பரம்பரை அழிவதற்குக் காரணமான சில செயல்களை அவரைச் செய்யத் தூண்டியது.

அவருடைய முதல் பெரிய குற்றம் அவர் தூய்மைக் கொள்கையினரை அவமதித்ததாம். "மில்லினெரி பெட்டிஷ"[5]னைக் கொடுத்த குருமார்கள் தங்களுக்கெனவே தனிப்பட்ட வழிபாட்டிடங்களைக் கேட்கவில்லை. அவர்கள் இங்லண்ட் மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள். அதைச் சேர்ந்திருக்

1. Arabella Stuart. 2. Sir Walter Raleigh. 3. "History of the World." 4. "The British Solomon." 5. The "Millenary Petition."

கவே அவர்கள் விரும்பினார்கள். ஆனால், தியான புத்தகத்தில்[1] வகுக்கப் பெற்றிருந்த வழிபாட்டு முறைகள் ரோம் மதஸ்தாபனத்தின் முறைகளைப் பெரும்பாலும் பின்பற்றியிருந்தனவென்று அவர்கள் நினைத்தார்கள். 'பொருள் மாற்றம்'[2]* என்னும் ஐதிகத்தில் சிறிதளவு நம்பிக்கையைக் கூடத் துவனிக்கும் எதையும் அவர்கள் வெறுத்தார்கள். ஆதலால், புனிதக் கூட்டுறவுச் சடங்கின்[3]போது ஜனங்கள் முழந்தாள் இடுவதையும், குருமார் ஆடம்பரமான உடுப்புக்களை அணிந்துகொள்ளுவதையும் அவர்கள் எதிர்த்தார்கள். பிஷப்புகள்[4], ஆர்ச்டீக்கன்கள்,[5] டீன்கள்[6] ஆகியோரின் கைவசமில்லாமல், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பெரியோர்களின்[7]† உதவிபெற்ற சாதாரணமான பாரிஷ் மினிஸ்டர்களுடைய[8] பரிபாலனத்திலிருந்த ஸ்காட்லண்ட் மதஸ்தாபனத்தின் அமைப்பைப்போலவே இங்லண்ட் மதஸ்தாபனத்தின் அமைப்பும் இருக்கவேண்டுமென அவர்கள் விரும்பினார்கள். ஆயினும், அப்போது இங்லண்ட் மதஸ்தாபனம் அமைந்திருந்த விதத்தை நோக்கி, அவர்கள் விரும்பிய பெரும் மாறுதலை அதில் திடீரென்று எதிர்பார்க்க முடியாதென்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். ஆகவே, தியான புத்தகத்தில் விதிக்கப்பட்ட சில கட்டுப்பாடான முறைகளையும் சடங்குகளையும் விட்டுவிடும் உரிமையையேனும் பெற அவர்கள் விரும்பினார்கள்.

---

* இது காதொலிக் மத ஸ்தாபனத்தின் முக்கிய கோட்பாடு: அதாவது, "மாஸ்"[9] வழிபாட்டில் ரொட்டியையும் திராக்ஷை ரசத்தையும் கிறிஸ்துவினுடைய சதையாகவும் இரத்தமாகவும் குரு மாற்றுகிறார் என்பதாம்.

† க்ரீக் மொழியில் 'presbuteros' என்னும் சொல்லுக்குப் 'பெரியோர்' என்பது பொருள். ஆகவே, இந்த மதஸ்தாபன அமைப்புக்கு அப்பெயர் வழங்கலாயிற்று.

1. The Prayer Book. 2. Transubstantiation. 3. Communion. 4. Bishops. 5. Archdeacons. 6. Deans. 7. Elders. 8. Parish ministers. 9. Mass.

1604-ஆம் ஜேம்ஸ் புனிதக்கொள்கையைத் தழுவிய குருமார்களுள்[1] அதிக முக்கியமானவர்கள்* சிலரைப் பிஷப்புகளுடன் கலந்து மதஆலோசனை செய்ய அழைத்தார். அவ்வாறு கூடிய கூட்டம் ஹாம்ப்டன் கோர்ட் மகாநாடு[2] எனப்பட்டது. ஜேம்ஸ் தம்முடைய சமயசாஸ்திர அறிவையும் தர்க்க வன்மையையும் புலப்படுத்த அத்தருணம் அருமையாகக் கிடைத்ததென்று மிக மகிழ்ந்து தாமே அம் மகாநாட்டிற்குத் தலைமை பூண்டார். ஆனால், அவர் புனிதக் கொள்கையினரின்[3] எண்ணங்களுக்குச் சிறிதும் அனுதாபங் காட்டாத பாரபக்ஷமுள்ள தலைவராயிருந்தார். ஸ்காட்லண்டில் தம் அதிகாரத்தைக் குறைத்து வைத்திருந்த ப்ரெஸ்பிட்டீரியன் மதஆட்சி முறையை[4] ஜேம்ஸ் பெரிதும் வெறுத்தார். இங்லண்ட் அரசர் என்ற முறையில் பிஷப்புகள் டீன்கள் முதலானவர்களை நியமனஞ் செய்யும் உரிமை ஜேம்ஸுக்கு இருந்தது. அரசர் அதிகாரத்தைப் பெரிதும் பாராட்டி ஆதரித்தவராதலால், ஜேம்ஸ் மதஸ்தாபனத்தில் தமக்கிருந்த அதிகாரத்தை விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. ப்ரெஸ்பிட்டீரியன் பிரதிநிதிகளுள் ஒருவர் 'ப்ரெஸ்பிட்டெரி'[5] என்ற சொல்லைச் சொன்னவுடன் ஜேம்ஸ் தம் பொறுமையையிழந்து, "ஸ்காட்லண்ட் ப்ரெஸ்பிட்டீரியன் முறையை நீங்கள் விரும்பினால், கடவுளுக்கும் சைதானுக்கும் எவ்வளவு பொருத்தமுண்டோ அவ்வளவு பொருத்தமுண்டு மன்னரசுக்கும் அதற்கும். டாம், ஜாக், வில், டிக் முதலியவர்கள் தங்கள் மனம்போலக் கூடி என்னையும் என் ஆலோசனை சபையையும் நிந்திப்பார்கள். நான் அதை இவ்வாறு

---

* புனிதக் கொள்கையினரின் தலைவர் லின்கன் டீன். அவர் மிகுந்த நிதானமான போக்குடையவரானதால் புனிதக்கொள்கையின் மிகவும் முற்போக்கான ப்ரெஸ்பிட்டீரியன் முறையை வற்புறுத்தியிருக்கமாட்டார்.

1. Puritan clergymen. 2. Hampton Court Conference. 3. The Puritans. 4. The Presbyterian system of Church Government. 5. Presbytery.

கொள்ளுகிறேன்: பிஷப்புகள் இல்லையென்றால் அரசருமில்லை.......நல்லது, டாக்டரே, தாங்கள் இன்னும் ஏதாவது சொல்லவேண்டுமோ?" என்றார். "வேறொன்றுமில்லை, அரசே." "உங்கள் கட்சியார் சொல்ல வேண்டியதெல்லாம் அவ்வளவேயானால், அவர்கள் எல்லோரையும் இங்லண்ட் மதஸ்தாபன ஏற்பாட்டிற்கு இணங்கச் செய்வேன்; அல்லது, அவர்களை எல்லாம் நாட்டைவிட்டு விரட்டுவேன்" என்று சொல்லி அறையை விட்டு வெளியே போனார் ஜேம்ஸ். மகாநாடு முறிந்தது.

ஜேம்ஸ் இந்தச் சந்தர்ப்பத்தில் சமயோசிதமான இராஜதந்திரத்துடன் நடந்துகொண் டிருந்தால் புனிதக்கொள்கையினர் இங்லண்ட் மதஸ்தாபனத்தைச் சார்ந்தே இருந்திருப்பார்கள். ஆனால், அவர் அவர்களை அடியோடு பகைத்துத் துரத்தியதால், அவர்கள் எப்பொழுதும் சாசுவதமான ஒரு எதிர்க்கட்சியரானார்கள். சுமார் ஆறுமாத காலத்துக்குப்பின், ஏறக்குறைய முந்நூறு குருமார்கள் தியான புத்தகத்தை ஏற்காத குற்றத்துக்காக அவர்களுடைய பதவிகளிலிருந்து நீக்கப்பட்டார்கள். அவர்களில் பலர் தங்கள் தங்கள் கோவில்களில் கூடியவர்களைக்கொண்டு தனித்தனி வழிப்பாட்டிடங்கள் ஏற்படுத்திக்கொண்டார்கள். நாட்டினருள் சிறந்த அறிவுவளமும் நன்மதிப்பும் பெற்ற பலர் இங்லண்ட் மதஸ்தாபனத்தைத் தழுவாத[1] அக்கூட்டங்களில் இருந்தார்கள்.

§ 136. **நவம்பர் மாதம் ஐந்தாம் தேதி:**—அடுத்த ஆண்டில் ஜேம்ஸ் தம்முடைய காதொலிக் குடிமக்களையும் பகைத்துக்கொண்டார். இது முற்றிலும் அவருடைய குற்றமன்று. அக்குற்றம் பெரும்பாலும் ஜேம்ஸினுடைய மந்திராலோசனை சபையின் முக்கிய அங்கத்தினரான ராபர்ட் ஸெஸில்[2] என்பவரைச் சார்ந்ததாகும். அவருடைய பேருதவியால்தான் ஜேம்ஸ் அமைதியுடன் இங்லண்ட் அரசபட்டம் பெற முடிந்

1. Nonconformists. 2. Robert Cecil.

தது. பட்டம் பெற்றதும் அவரை சால்ஸ்பெரி ஏர்ல்[1] ஆக்கினர். சால்ஸ்பெரி ஏர்ல், எலிசபெத் காலத்திலிருந்த தம் தந்தையான பர்லி பிரபுவைப்போலவே, ஒரு தீவிரமான எதிர்ப்புமதக் கொள்கையினர்.[2] அவர் காதொலிக்கர்கள் நாட்டிலும் அரசியலிலும் தாங்கள் இழந்த ஆதிக்கத்தை மறுபடியும் பெற்றுவிடுவார்களோ வென்று பயந்தார். ஜேம்ஸ் தாம் முன்பு காதொலிக்கர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை (§ 134) நிறைவேற்ற முயன்றார். ஆனல், சால்ஸ்பெரி பிரபு அம் முயற்சியை மாற்றத் தக்க தருணம் பார்த்திருந்தார்.

அத்தருணம் விரைவில் வாய்த்தது. 1605ஆம் காதொலிக்கர்களிற் சிலர், இங்லண்ட் மதஸ்தாபனத்தின் சடங்குகளுக்கும் வழிபாடுகளுக்கும் வராமல் இருந்ததற்காக விதிக்கப்பட்ட அபராதத்தை[3] முன்னிட்டு அரசாங்கத்தினிடம் வெறுப்படைந்து, இங்லண்ட் வரலாற்றிலேயே மிகப் பிரசித்தி பெற்ற சதி யொன்றில் ஈடுபட்டார்கள். அவர்கள், அரசரும் பிரபுக்களும் காமன்ஸ் சபையினரும் பார்லமென்ட் திறப்புவிழாவுக்காகக் கூடியிருக்குங் காலத்தில், கட்டடத்தின்கீழ் ஒரு சுரங்கத்தில் வெடிமருந்து வைத்து எல்லோரையும் ஒரேயடியாக ஒழித்துவிட முடிவுசெய்தார்கள். அச் சதியின் செயல்முறை ஏற்பாடுகள் யாவும், ஸ்பெயின் தேசத்து அரச சேவையில் இராணுவ மராமத்து அலுவல்களில் அனுபவம் பெற்றவனும், வெடிமருந்து வேலைகளில் நிபுணனுமான கை பாக்ஸ்[4] என்ற ஒருவனிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனல், சதிகாரர்களில் ஒருவன் சதிநாள் நெருங்க நெருங்கத் தைரியத்தை இழக்கலானன். அவன் தன் கூட்டாளிகளைக் காட்டிக் கொடுக்காமல் சதியைத் தடுப்பதற்காக, கையெழுத்தில்லாத கடிதம் ஒன்றைப் பார்ல

1. Earl of Salisbury. 2. Protestant. 3. 'Recusancy' fine. 4. Guy Fawkes.

மென்ட் அங்கத்தினர் ஒருவருக்கு எழுதி, அதில் பார்ல மென்ட் திறப்புவிழாவுக்குப் போவது ஆபத்தாகும் என்று குறிப்பிட்டிருந்தான். துரைத்தனத்தார் எச்சரிக்கப்பட்டதைச் சதிகாரர்கள் அறிந்தார்கள். ஆயினும், கை பாக்ஸ் உறுதியை விடாமல் தான் எடுத்துக்கொண்ட காரியத்தை இறுதிவரைச் செய்துமுடிக்க முயன்றான். பார்லமென்ட் திறப்புக்கு முன்னிரவு அவன் தன்னுடைய கடைசி ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கும்பொழுது பிடிக்கப்பட்டான்.

அம் முயற்சி இங்லிஷ் காதொலிக்கர்களை மிகவும் குழப்பிவிட்டது. சால்ஸ்பெரி பிரபுவுக்கு முன்னிலும் அதிகமாக அவர்களை ஒறுக்கக் காரணம் ஏற்பட்டது. அடுத்த மூன்று நூற்றாண்டுகள் அளவும் காதொலிக்கர்கள் அரசருக்கும் துரைத்தனத்துக்கும் எதிராகக் கெட்ட எண்ணங்களை வைத்துக்கொண் டிருந்ததாகச் சந்தேகிக்கப்பட்டனர். நாட்டில் ஒவ்வொரு நகரமும் கிராமமும், ஆண்டுதோறும் பாக்ஸினுடைய உருவப்பதுமையைக்[1] கொளுத்துவதன்மூலம், போப்பிடம் மக்கள் கொண்ட பகை உணர்ச்சியை இற்றை நாளளவும் அழியாமல் பாதுகாத்து வந்திருக்கின்றன. இந்தப் பகை உணர்ச்சியே ஸ்டூவர்ட் பரம்பரை நசித்தழியக் காரணமானது என்பதை நாம் படித்தறியப் போகிறோம்.

§ 137. **விவாக சம்பந்தங்களால் சமாதானம் செய்துகொள்ளுதல்**[2]:—ஆட்சித் தொழில் துறைகள் எல்லாவற்றுள்ளும் சிறப்பாக யூரோப்பிய விவகாரச் சிக்கல்களைத் தாம் ஒருவரே மிகவும் தெளிந்த முறையில் உணர்ந்துகொண்டதாக ஜேம்ஸ் பெருமை பாராட்டிக்கொண்டார். சென்ற ஐம்பது ஆண்டுகளாக யூரோப் கண்டமானது மத சம்பந்தமான போர்களில் மூழ்கிக் கலவரமுற்றிருந்தது. ஜேம்ஸ் தாம் எத்தகைய மூட மதவைராக்கியத்துக்கும் புறம்பானவர் என்று நினைத்து, அம் மதச் சண்டைகளை ஒழிக்க ஒரு வழி

1. Effigy. 2. Peace-making by matc.h-making.

தேடினார். தம் மூத்த மகளை ஜெர்மனியில் எதிர்ப்புமதத் தலைவர்களுள் முக்கியமானவரான சிற்றரசர் ஒருவருக்கு மணஞ்செய்து கொடுக்கவும், தம் மூத்த மகனுக்குக் காதொலிக் மதத்தைத் தழுவிய அரசர்களும் தலைமை பெற்றிருந்த ஸ்பெயின் நாட்டு மன்னரின் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளவும் ஜேம்ஸ் விரும்பினார். இவ்விதமாக மத எதிரிகள் எல்லோரும் குடும்ப சம்பந்தத்தால் ஒன்றுபட்டால், சிங்கமும் ஆட்டுக்குட்டியும் அமைதியாக வாழ்தலை ஒப்ப மக்களெல்லாரும் தம் சொற்படி வாழ இசைவார்கள் என அவர் நம்பினார்.

இந்தத் திட்டத்தின் முதற் பகுதி நிறைவேறியது. 1613-ம் ஆண்டில் எலிசபெத் இளவரசி 'பாலடைன் எலெக்டர்[1]' என்பவரை மணந்துகொண்டாள். ஆனால், மற்றொரு பகுதியை நிறைவேற்றுவதில் நீக்க முடியாத தடைகள் ஏற்பட்டன. சால்ஸ்பெரி பிரபுமுதல் இங்லிஷ் மக்கள் அனைவரும் தங்களுக்கு ஒரு ஸ்பெயின் தேசத்துக் காதொலிக் அரசி வரப்போவதுபற்றிக் கலக்கமடைந்தார்கள். அதையும் தவிர, ஸ்பெயின் அரசர், அக்கலியாணத்துக்குச் சம்மதிப்பதற்கு, தர இயலாத சில உரிமைகளைக் கேட்டார்.

ஆகவே, ஜேம்ஸ் இந்தக் கலியாண ஏற்பாட்டை ஒத்திவைக்கவேண்டியதாயிற்று; ஆனால், அதை நிறைவேற்றுவதில் நம்பிக்கையையோ, அதற்காக முயல்வதையோ அவர் விடவில்லை. ஸ்பெயின் மன்னரது ஆதரவை ஜேம்ஸ் மிகுந்த ஆவலுடன் கோரினார். அதனால், இங்லண்டில் ஸ்பெயின் நாட்டு இராயபாரி[2]யாகவிருந்த காண்டோமர் கவுன்ட்[3] என்பவருக்கு இங்லண்ட் அரசாங்கத்தில் அளவற்ற செல்வாக்கு ஏற்பட்டது. இந்நிலைமை ஜேம்ஸைக் கண்ணியமற்ற பல இழிவான செயல்களைச் செய்யவைத்தது. ஜேம்ஸ், ஸ்பெ

1. Elector Palatine. 2. The Spanish Ambassador. 3. Count Gondomar.

யின் மன்னருக்குத் திருப்தியளிப்பதற்காக, சிறையிலிருந்த ராலெவைப் பழைய இராஜத் துரோகக் குற்றத்துக்காகச் சிரச்சேதஞ் செய்வித்தார் (கு. 98).

§ 138. **பார்லமேன்டோடு சச்சரவு:**—எலிசபெத் காலத்தில் இங்லிஷ் மக்கள் அவளை மிகவும் பாராட்டியதனுல் அவளுடைய விருப்பத்துக்குக் குறுக்கே எவரும் வர விரும்பவில்லை. ஆதலால், அரசாங்க விவகாரங்களில் பார்லமென்ட் தலையிடும் உரிமை அக்காலத்தில் கையாளப்படவில்லை. ஆனுல், இங்லிஷ் மக்கள் ஜேம்ஸ் விஷயத்தில் அவ்வாறு நினைக்கவில்லை. காமன்ஸ் சபையில்[1] பெரும்பான்மையினரான நாட்டுக் கனவான்களும்[2] வளமிக்க வணிகர்களும் தன்னம்பிக்கை மிகுந்து முன்னணிக்கு வரலாயினர். ஆகவே, பார்லமென்டின் அதிகாரம் தம் தயவைப் பொறுத்ததென்று ஜேம்ஸ் சொல்லியபொழுது, அவர்கள் மிகவும் ஆத்திரமடைந்தார்கள். அவர்கள், "நாட்டு மக்களின் பொது நன்மையை முன்னிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களையும் பற்றித் தாராளமாக விவாதிக்கவேண்டுவது பார்லமென்டின் சந்தேகமற்ற புராதன உரிமை" என்று பதில் சொன்னுர்கள். பார்லமென்டின் 'புராதன உரிமை'களைப்பற்றி ஜேம்ஸ் கவலை கொள்ளவில்லை. அவருக்குத் தெரிந்ததெல்லாம் "மன்னர்களின் தெய்விக உரிமை[3]" ஒன்றே. பார்லமென்டார் சம்மதம் பெறுமல் ஜேம்ஸ் சுங்க வரிகளை[4] உயர்த்தியதைப் பற்றி அவர்கள் கேட்டபொழுது அவர் மிகவும் மனக்கசப்படைந்தார். பல தடவைகளில் அவர் ஆத்திரத்துடன் பார்லமென்ட் கூட்டங்களைக் கலைத்ததுண்டு. ஆனுல், அரசியல் விவகாரங்களுக்காக ஜேம்ஸுக்குப் பொருள்வேண்டியிருந்தபடியால், பார்லமென்டை அறவே நீக்கி அரசாங்கத்தை நடத்தவும் அவரால் முடியவில்லை. அவருக்குப்

1. The House of Commons. 2. Country gentlemen. 3. The Divine Right of Kings. 4. Customs Duties.

பணத்தின் மதிப்பே தெரியாது. நாட்டில் அமைதி நிறைந்திருந்த காலத்திலும் அவர் ஏராளமாகச் செலவு செய்தார். ஜெர்மனியில் முப்பதாண்டுப் போரின்[1] தொடக்கத்தில் அவர் மகள் அவளது நாட்டிலிருந்து துரத்தப்பட்டபோது, அவளை ஆதரிக்க 1620-ம் ஆண்டில் அவர் சண்டைக்குப் போக வேண்டியிருந்தது. அப்போது பார்லமெண்டார், அயல்நாடுகளுடன் உறவு செய்தல் சம்பந்தமாக அவர் கொண்டிருந்த கொள்கைகளைக் கண்டிக்கத் தொடங்கியதும், ஜேம்ஸ் மிகவும் ஆத்திரமடைந்தார். நாட்டுக் கனவான்களும் வியாபாரிகளும் அடங்கிய சபையாருக்கு இவ்விஷயங்களைப்பற்றி என்ன தெரியுமென்று அவர் நினைத்தார்.

அரசருடைய கோட்பாடுகளில் எவருக்கும் விளங்காத சிக்க லொன்றுமில்லை. ஆனால், அவருடைய 'ஆட்சித் தொழில்' சித்தாந்தம்[2], செயல் முறையில் தோன்றிய அதன் பலன்களைக்கொண்டு பார்க்குமிடத்து, ஒரு பெருந் தவறாகவே கருதப்பட்டது. 1612-ல் சால்ஸ்பெரி[3] பிரபு இறந்தவுடன் ஜேம்ஸ் தாமே தம் தலைமை மந்திரியாக இருக்க முயன்றார். அதன் பயன் அக்காலத்தில் ஜேம்ஸுக்குப் பிடித்த ஒரு பிரபுவின் கையில் நாட்டின் துரைத்தனம் முழுதும் அகப்பட்டதேயாம். அவருடைய மனதுக்குப் பிடித்தவர்களுள் முக்கியமானவர் பக்கிங்காம் ட்யூக் ஆன ஜ்யார்ஜ் வில்லியர்ஸ்[4] என்பவர். பக்கிங்காம் பிரபு அழகும் தைரியமும் மிகுந்தவரேனும், பேராசையும் திமிருங் கொண்டவர். அவர் அரசரிடம் வந்தவர்களை யெல்லாம் மிகவும் அவமரியாதையாகவும் கேவலமாகவும் நடத்தித் தமக்குப் பெரும் பகையைத் தேடிக் கொண்டார். ஜேம்ஸ் ஆட்சியில் மிகவும் மதியற்ற செயல் யாதெனில், அவர் தம் மகனை சார்லஸைப் பக்கிங்காம் பிரபுவுடன் ஸ்பெயினுக்குப் போய் ஸ்பெயின் அரச

---

1. The Thirty Years' War. 2. Kingcraft. 3. Salisbury. 4. George Villiers, Duke of Buckingham.

குமாரியை நேரில் காதலித்துக் கலியாணம் செய்துகொள்ளு மாறு அனுப்பியதுதான். பக்கிங்காமின் செருக்கு நிறைந்த நடத்தையைக் கண்டு ஸ்பெயின் மக்கள் வெறுப்படைந்தார் கள். இறுதியில் அவ்விரு இளைஞர்களும் இன்பான்டா[1] (ஸ்பெயின் அரசகுமாரி) இன்றி வெறுங்கையராகத் திரும்பி வந்ததால், இரு நாடுகளிடையிலும் மிகவும் விரோதமான உணர்ச்சிகள் கிளம்பிப் போர் மூண்டது. ஜேம்ஸ் அரசர் தம் எண்ணமும் திட்டமும் நிறைவேறாததைக் கண்டு மிகுந்த ஏமாற்ற மடைந்தார். அகாலமூப்பு பெருகியதால் 1625ஆம் மார்ச் மாதம் அவர் இறந்தார்.

## முப்பத்தோராம் அத்தியாயம்

# ஆதிக்கத்துக்காகப் போராட்டம்

(1625—1639)

§ 139. **ஒரு பெரிய விவாதத்தின் ஆரம்பம்:**—முதலாம் சார்ல்ஸ் தம் தந்தைக்கு முற்றிலும் மாறான தன்மைகளைப் பெற்றிருந்தார். அவர் வீரமும் தைரியமும் நிறைந்த வர்; கண்ணியமும் பெருந்தன்மையும் பொருந்தி யவர்; வீணைப் பேசும் வழக்க மற்றவர். குடும்ப வாழ்க்கையில் அவர் எவரும் மெச்சும் வண்ணம் நடந்து கொண்டாரேனும், அரசர் என்ற முறையில் பெருங்குறை களையும் குற்றங்களையு முடையவரா யிருந்தார். அவர் சிறு பிராயத்திலிருந்தே தம் தந்தையின் மன்னர்களது தெய் விக உரிமைக் கொள்கையில்[2] தோய்ந்து வளர்ந்தவராதலால், தம் வாழ்நாள் முழுதும் அக் கொள்கையினையே ஒரு முரட் டுப் பிடிவாதத்துடன் கைப்பற்றி ஒழுகினர். அதுவுமன்றி, அவர் தம் தந்தையைப் போலவே, நம்பிக்கை வைத்தற் குரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் சக்தியற்றவராக இருந்தார்.

1. The Infanta. 2. The Divine Right Theory.

இக் குணங்கள் அவருடைய ஆட்சியின் தொடக்கத்திலேயே அவருக்கும் பார்லமெண்டுக்கும் சண்டையை மூட்டி விட்டன.

பார்லமெண்டார் இரண்டு விஷயங்களைப்பற்றிப் பெருங் கவலை கொண்டிருந்தனர். முதலாவதாக, சார்ல்ஸ் 'மேல் மத ஸ்தாபன'(ஹைசர்ச்)[1] கொள்கைகளை வைராக்கியத்துடன்பின் பற்றியவர். சமய சாஸ்திர ஆராய்ச்சியில்வல்ல அர்மீனியஸ்[2] என்ற டச்சுக்காரர் ஒருவர் காதொலிக் மதஸ்தாபனத்தி னுடைய பல சம்பிரதாயங்களையும் திருவிழாக்களையும் சடங்குகளையும் எதிர்ப்புமத வாதிகள் கைவிடாது பழக்கத் தில் வைத்திருக்க வேண்டுமென்று கூறினர். இதைச் சார்ல்ஸ் ஏற்றுக்கொண்டார். பார்லமெண்ட் அங்கத்தினருள் பெரும் பாலோர் தூய்மைக்கொள்கையில் ஆழ்ந்திருந்த எதிர்ப்புமத வாதிகள். ப்ரான்ஸ் நாட்டு மன்னரின் தங்கையான ஹென்றி யெட்டா மரியா[3] என்ற காதொலிக்க அரச குமாரியைச் சார்ல்ஸ் அப்போதுதான் மணந்துகொண்டார். அதனல் அவர் காதொலிக் மதஸ்தாபனத்தைப் பின்பற்றுவாரோ வென்று அவர்கள் அஞ்சினர்கள்.

இரண்டாவதாக, சார்ல்ஸ் பக்கிங்காம் பிரபுவிடம் தம் தந்தையைவிட அதிக பற்றுதலுடையவராக இருந்தார். ஆனல், பார்லமெண்டார் அவ்விளைஞரை அவநம்பிக்கை யுடன் முற்றிலும் வெறுத்தார்கள். பார்லமெண்ட் கூடிய வுடன் அங்கத்தினர்கள் இவ் விஷயங்களை ஆராயத் தொடங்கி அரசருக்கு வெறுப்பான வகைகளில் தங்கள் மன வெழுச்சிகளைக் காட்டலானர்கள். அரசாங்கச் செலவுக்கு வேண்டிய வரிப்பணத்தைப் பார்லமெண்ட் சம்மதம் இன்றி அரசர் வசூலிக்க முடியாது என்ற ஒரு பிடிதான் தங்களுக்கு அரசர்மேல் இருந்ததென்பதைப் பார்லமெண்ட் அங்கத்தினர் கள் உணர்ந்தார்கள். அநேக நூற்றுண்டுகளாக டன்னேஜ்,

1. The High Church. 2. Arminius. 3. Henrietta Maria.

பவுண்டேஜ்*[1] என்னும் வரிகளைத் தண்டிக்கொள்ளும் உரிமையை அரசர்களுக்கு அவர்களுடைய ஆட்சிக்காலம் முழுவதுக்கும் பார்லமென்டார் கொடுத்துவந்தார்கள். ஆனால், அப்போதைய நிலையில் அவர்கள் அவ்வுரிமையை அரசருக்கு ஒரு வருஷத்துக்குத்தான் கொடுக்கத் தீர்மானித்தார்கள்.

துரைத்தனத்தையும் மதஸ்தாபனத்தையும் தாம் ஆளும் முறையைப்பற்றி விவாதிக்கவும் அவர்களுக்கு உரிமை உண்டென்று பார்லமென்டார் நினைத்ததுபற்றிச் சார்ல்ஸ் மிகவும் ஆத்திரமடைந்தார். தாம் ஒரு உண்மையான எதிர்ப்புமதவாதி என அவர் பூரணமாக நம்பியிருந்தார். ஆயினும், பார்லமென்டையோ வேறு யாரையோ திருப்தி செய்வதற்காகப் பக்கிங்காமைக் கைவிட அவர் ஒப்பவில்லை. மேலும், சுங்கவரி வாங்கத் தமக்கிருந்த உரிமையைக் குறைப்பது அதிகப் பிரசங்கித்தனமான அடாத செயலென அவர் கருதினர். அவருடைய முதல் பார்லமென்ட் அவருக்கு டன்னேஜும் பவுண்டேஜும் ஒரு வருஷ மானியமேனும் விடுமுன்னேயே சார்ல்ஸ் அதைக் கலைத்துவிட்டார்.

**§ 140. சச்சரவு மேலும் மும்முரமாக வளர்தல் :—** போதிய பொருளில்லாமல் அரசர் ஸ்பெயினுடன் (§ 138) போர் புரிவதற்குப் படைதிரட்டவேண்டிய கட்டாய மேற்பட்டது. அவர் கேடிஸ்[2]மீது படையெடுக்க நினைத்தார். ஆயினும், இங்லண்ட் கடற்படையானது கடந்த ஆட்சிக் காலத்தில் கவனிப்பாற்றுச் சீரழிந்திருந்தமையால், அம் முயற்சி குலைந்தது. போரைத் தொடர்ந்து நடத்துவ

---

*சுங்கவரிகள்: ஒரு டன்[3] சாராயத்துக்கு இவ்வளவு என்ற விகிதமும், நாட்டுக்குள் வந்திறங்கும் இதர வியாபாரப் பொருள்கள்மேல் ஒரு பவுண்டுக்கு இவ்வளவு என்ற விகிதமுமாம். இதுவே திட்டமான துரைத்தன வருமானத்தின் அடிப்படை[4].

1. Tunnage and Poundage. 2. Cadiz. 3. Tun. 4. The foundation of the regular revenue.

தாக விருந்தால் பணம் வேண்டியிருந்தது. முன் பார்ல மென்டைவிடத் தமக்கு அடங்கியிருப்பார்கள் என நினைத்துச் சார்ல்ஸ் ஒரு புதிய பார்லமென்டைக் கூட்டினார். ஆயினும், அவர் ஏமாற்றமடைந்தார். சர் ஜான் இலியட்[1] என்ற ஒரு கார்ன்வால் தனவந்தருடைய தலைமையில், பார்லமென்டார் தோல்விப் பழியை யெல்லாம் பக்கிங்காம் பிரபுவின்மேல் சுமத்திக் குற்றஞ் சாட்டி, அவரைப் பார்லமென்டில் விசாரணை செய்வதற்கு*[2] வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். அதுவுமன்றி, அரசர் தங்கள் சம்மதமின்றி டன்னேஜ் பவுண்டேஜ் வரிகளைத் தொடர்ந்து வாங்கி வருவதையும்† அவர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள். தம் நண்பனைக் காப்பாற்றும் நோக்கத்துடன், தமக்குப் பார்லமென்டார் வரிமானியம் கொடுக்கு முன்பே சார்ல்ஸ் அதைக் கலைத்துவிட்டார்.

ஒரு போர் போதாதுபோல் அரசரும் பக்கிங்காம் பிரபுவும் இன்னொரு போரில் சிக்கிக்கொண்டனர்: அதாவது, ப்ரான்ஸ் தேசத்துடன் தம் கலியாண காலத்தில், சார்ல்ஸ், இங்லிஷ் காதொலிக்கருக்குச் சில உரிமைகளை வழங்குவதாகவும், ப்ரெஞ்சு எதிர்ப்புமதக் கலகக்காரர்களை ஒடுக்க ஒரு இங்லிஷ் கடற்படையை உதவுவதாகவும் உறுதிகூறியிருந்தார். ஆனால், அவர் அவ்வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இதனால் ப்ரான்ஸுடன் போர் மூண்டது. பணத்துக்காகத் தாம் தத்தளித்த நிலையில் கட்டாயக் கடன்கள்[3] மூலம் பொருள் பெறச் சார்ல்ஸ் நினைத்தார். அவ்வாறு

*இதன் மூலம் பார்லமென்ட் தன்னை அவமதித்த ஒரு மந்திரியையோ அதிகாரியையோ விசாரணைக்குக் கொண்டுவரலாம். காமன்ஸ் சபையார் வழக்கை நடத்தச் சிலரைக் குறிப்பிடுவார்கள்; பிரபுக்கள் சபையார் நீதிபதிகளாக இருப்பர்.

† உண்மையில், இந்த வரிகளை அவ்வப்போது வாங்காமல் விட்டு வந்தால் நாட்டின் வியாபார நிலை சீர்குலையும்.

1. Sir John Eliot. 2. Impeachment. 3. Forced loans.

"கடன் கொடுக்க" மறுத்தவர்கள் விசாரணையின்றிச் சிறையி லடைக்கப்பட்டோ, அல்லது தங்கள் வீடுகளில் சிப்பாய் களை வைத்துப் பராமரிக்க வேண்டுமென்றே தண்டிக்கப் பெற்றனர். நாட்டின் பல பிரிவுகள் முழுமையிலும் இரா ணுவச் சட்டம்*[1] அமுலுக்கு வந்தது.

சார்ல்ஸ் கிடைத்த பொருளைக் கொண்டு ஒரு படை திரட்டி, பக்கிங்காம் தலைமையிலேயே அதை ரொஷேல்[2] என்னுமிடத்துக்கு அனுப்பினார். தாங்கள் சண்டையில் வெற்றிபெற்றுவிட்டால் பார்லமெண்ட் தங்களை மெச்சிப் போரை ஆதரிக்குமெனப் பக்கிங்காமும் சார்ல்ஸும் நம்பினர் கள். பக்கிங்காம் மிகுந்த தீவிரத்துடனும் ஆற்றலுடனும் தம் படையை ரொஷேலுக்கு எதிரேயுள்ள ரே தீவில்[3] கொண்டுபோய்ச் சேர்த்தார். ஆனால், உணவுப் பொருள்கள் யுத்த தளவாடங்கள் முதலியவைகளைப் பெற அவருக்கு வசதிகள் சரியாக இல்லாமல் இப்போர் முயற்சி சீர்குலைந்தது. பசிக்கும் நோய்க்கும் பாதி படைஞர்களைப் பறிகொடுத்து விட்டு, மிகுந்தவர்களுடன் பக்கிங்காம் ஊர் திரும்ப வேண் டியதாயிற்று.

'கட்டாயக் கடன்' சூழ்ச்சியை மறுபடியும் கையாள்வதற் கில்லை. பார்லமெண்டின் ஆதரவு இன்றிப் போரை நடத்த முடியாதெனச் சார்ல்ஸும் உணரும்படி அவ்வளவு குறைந்த தொகையே அதன் மூலம் வந்தது. பதின்மூன்றாம் லூயியின்[4] பேரமைச்சரான ரிஷெல்யு[5] என்பாருக்கு அரசாங்க அதிகாரிகள் மூலமாகவே வரிவாங்கவும் ப்ரான்ஸ் நாட்டை ஆளவும் முடிந்தது. ஆனால், அமைதியான காலத்தில்கூட அவ்வித ஆட்சி முறையைக் கையாள இங்லண்ட் அரசருக்கு

* இராணுவச்சட்டம் அமுலில் உள்ள இடங்களில் நாட்டின் சாதா ரணச் சட்டம் அமுலில் இருக்காது. ஜனங்கள் இராணுவ அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு அரசர் உத்தரவின்படி தண்டிக்கப்படுவார்கள்.

1. Martial law. 2. Rochelle. 3. Isle of Rhe. 4. Louis XIII.
5. Richelieu.

வரி வருமானம் போதுமானதாக வில்லை. ஆங்காங்குள்ள மாஜிஸ்ட்ரேட்டுகளின் உதவியால்தான் அரசர் தம் கட்டளை களை நிறைவேற்றிக்கொள்ளவேண்டி யிருந்தது. இந்த மாஜிஸ்ட்ரேட்டுகள் எல்லோரும் சொந்த வருமானமுள்ள நாட்டுக் கனவான்கள். அவர்களுள் பலர் தங்கள் அக்கம் பக்கத்தாரிடமிருந்து கட்டாயக் கடன் வாங்க மறுத்தனர்; சிலர் தாமே கொடுக்கவும் மறுத்தனர். ஆதலால், பணத் திற்காக மூன்றுவதாக ஒரு பார்லமென்டைக் கூட்டுவதைத் தவிரச் சார்ல்ஸுக்கு வேறு வழி யில்லை.

§ 141. உரிமை விண்ணப்பம்[1]:—அரசருடைய அச்சங் கள் மெய்யாயின. பார்லமென்டினுடைய சம்மதமின்றி வரி தண்ட அவர் செய்த முயற்சிகள் பார்லமென்ட் பல நூற் றாண்டுகளாகப் பெற்றிருந்த உரிமைகளை உடைப்பவை போன்றிருந்தன. பணப்பை அதிகாரத்தின்[2] வாயிலாகத்தான் அரசருடைய செயல்களை நாட்டு மக்கள் கட்டுப்படுத்த முடிந் தது. அந்த உரிமையையும் பார்லமென்ட் இழக்க நேர்ந் தால், இங்லண்ட் துரைத்தனமும், ப்ரான்ஸ் ஸ்பெயின் நாடு களின் துரைத்தனத்தைப் போன்று, வல்லாட்சி[3] யாகிவிடும். மிக்க வல்லமையுடன் ஆண்ட ட்யூடர் மன்னர்களுங் கூடக் காமன்ஸ் சபையாருடைய[4] சம்மதமின்றி வரி தண்ட முற் பட்டதில்லை.

ஆதலால், மூன்றும் பார்லமென்ட் கூடியபொழுது (1628) அது அரசருக்கு ஒரு "உரிமை விண்ணப்பம்" சமர்ப் பிக்கத் தீர்மானித்தது. அது ஒரு புதிய சட்டமன்று. பழைய சட்ட திட்டங்களெல்லாம் புறக்கணிக்கப்பட்டன வென் றும், அவ்வாறு அரசர் செய்தல் கூடாதென்றும் அரசருக்கு ஞாபக மூட்டி எச்சரிக்கை செய்யும் விண்ணப்பமா யிருந் தது அது. முக்கியமாக, இராணுவச் சட்டம் கூடாதென்

1. The Petition of Right. 2. The Power of the Purse. 3. Despotism.
4. The House of Commons.

றும், துருப்புக்களை வீடுகளில் தங்க வைக்கலாகா தென்றும், பார்லமென்டின் ஆதரவு இல்லாத வரி வசூலிப்புக் கூடாதென்றும், விசாரணையின்றி எவரையும் சிறையிலடைத்தல் கூடாதென்றும் அம் மனு கோரியது.

தமக்குப் பிடித்தமில்லாத அந்தக் கண்டனப் பத்திரத்துக்கு என்ன பதில் சொல்லுவதென்று துணியாது சார்ல்ஸ் சில வாரங்கள் வரையில் தயங்கினர். கடைசியில் அவருடைய பண முட்டு அவரை இணங்கச் செய்தது. ஆதலால், அவர் அவ்விஷயங்களில் பார்லமென்டாருடைய விருப்பங்களைப் பூர்த்திசெய்வதாக அறிவித்தார். அதன் பிறகு பார்லமென்ட் ஒரு பெருந்தொகையை அரசருக்கு மானியம் கொடுத்தது.

அந்தப் பணமெல்லாம் ரொஷேலுக்கு[1] அனுப்ப மற்றொரு படை தயாரிப்பதில் செலவாயிற்று; ஆயினும், பக்கிங்காம் பிரபு அப் படைக்குத் தலைமைவகித்துப் போர்ட்ஸ்மத்[2] துறைமுகத்தில் புறப்படவிருந்த காலத்தில், பெல்டன்[3] என்ற தம் பகையாளி ஒருவனல் திடுமெனக் கொலை செய்யப்பட்டார். பக்கிங்காமை நாட்டு மக்கள் மிகுதியும் வெறுத்தபடியால், அவர் கொலையுண்ட செய்தியை அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். கோவில் மணிகள் ஒலித்தன; தெருக்கள்தோறும் சொக்கப்பானை மூட்டித் திருவிழாக் கொண்டாடினர்கள்; அவருடைய பிரேதம் வெஸ்ட்மின்ஸ்டருக்கு[4] ஊர்வலமாகப் போனபொழுது ஜனங்கள் சந்தோஷ ஆரவாரஞ் செய்தார்கள். தமது ஆப்த நண்பனது மரணத்தைக் குறித்து அவ்வாறு சந்தோஷங் கொண்டாடிய லண்டன் ஜனங்களை அரசர் மன்னிக்கவேயில்லை.

ரொஷேலுக்குச் சென்ற இரண்டாம் படை, முதற் படையைவிட ஒன்றும் அதிகமாகச் சாதித்துவிடவில்லை. அதனல் அரசருக்கும் பார்லமென்டுக்கும் இருந்த பகை

1. Rochelle. 2. Portsmouth. 3. Felton. 4. Westminster.

மேலும் அதிகமாயிற்று. முடிவில் அப்பகையை ஒருவாறு ஒழிக்கப் பார்லமென்டைக் கலைத்துவிடுவதென்று சார்ல்ஸ் தீர்மானித்தார். அவருடைய எண்ணத்தை அறிந்த அங்கத்தினர்கள், தாங்கள் கலையுமுன், தாங்கள் எந்தக் கொள்கைகளுக்காகப் போராடிக்கொண் டிருந்தார்களோ அக் கோட்பாடுகளைப் பதிவுசெய்துவைக்கத் தீர்மானங் கொண்டார்கள். அரசருக்கு வருத்தம் விளைவிக்கக்கூடிய எதையும் அவர்கள் செய்யுமுன் பார்லமென்டின் தலைவர்[1] தம் இருக்கையை விட்டெழுந்து வெளியேறிவிட முயன்றார். அதைத் தடுத்து இரு அங்கத்தினர்கள் அவரை நாற்காலியி லேயே இருத்திப் பிடித்துக்கொண்டார்கள். இலியட்[2] மூன்று பிரசித்திபெற்ற தீர்மானங்களைப் படித்தார். இங்லண்ட் மதஸ்தாபனத்தின் எதிர்ப்புமத அமைப்புக்களை[3] மாற்ற முயல்பவர்களும், பார்லமென்டின் சம்மதமின்றி டன்னேஜ் பவுண்டேஜ் வரிகளைத் தண்டுபவர்களும் அவைகளைக் கொடுப்பவர்களும் தேசத் துரோகிகளாக மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பது அவற்றின் கருத்து. பார்லமென்ட் கலைப்பை அரசதூதன் அறிவிக்கவந்த தருணத்தில், அத் தீர்மானங்கள் பலத்த ஆரவாரத்துக் கிடையில் எல்லோ ராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அப்போது ஆத்திரத்துடன் வெளிவந்த அங்கத்தினர்களின்பின் மூடப் பட்ட பார்லமென்ட் கதவுகள் பதினொரு வருஷங்கள் வரை யில் திறக்கப்படவே யில்லை.*

§ 142. அரசரது தனியாட்சி[4]:—சார்ல்ஸ் துணிகரமான செயலொன்றைச் செய்யத் துணிந்தார். தம்மால் எவ்வளவு காலம் பார்லமென்டைக் கூட்டாமலேயே சமாளிக்க

*உரிமை விண்ணப்பத்தை அரசர் ஏற்றுக்கொண்டபோதிலும், இலியட் சிறைசெய்யப்பட்டார். மூன்று வருஷங்கள் கழித்து அவர் லண்டன் கல்லரணில் உயிர்துறந்தார்.

1. The Speaker. 2. Eliot. 3. The Protestant forms of the Church of England. 4. Personal rule of the king.

இயலுமோ, அவ்வளவு காலம் அதைக் கூட்டாமலிருக்க விரும்பினார். அவ்வாறு செய்தால் பார்லமென்டாருக்கு ஒரு புத்தி கற்பித்தமாதிரி யாகும். பார்லமென்ட் இன்றியமையாததொன்று அல்ல வென்பதை அவர்கள் உணர்ந்து, அதைத் திரும்பக் கூட்டவேண்டிய காலம் வந்தபொழுது, தமக்கு அடக்கமாக இருப்பார்களென அரசர் நினைத்தார்.

ஆனால், அவருடைய பெருங் கஷ்டம் பணத்தைப் பற்றியதாக இருந்தது. தம் செலவை மிகுதியாகக் குறைத்துக்கொண்டு, ஸ்பெயினுடனும் ப்ரான்ஸுடனும் உடனே சமாதானஞ் செய்துகொண்டார். பணம் வசூலிக்கப் பற்பல விசித்திரமான புதிய வழிகளைக் கண்டுபிடிக்கலானார். அவருடைய பொக்கிஷதாரரான வெஸ்டன்[1] என்பவர், பழைய அரசாங்க தஸ்தாவேஜுகளை எல்லாம் ஆராய்ந்து, முதல் ப்ளான்டாஜெனெட்[2] அரசர்கள் காலத்தில் வருஷத்தில் 40 பவுன் வருமானத்தைக்* கொடுக்கக்கூடிய நிலம் வைத்திருந்த எல்லோரும் படைமானிய திட்டப்படி[3] அரசருடைய படையில் நைட் வீரர்களாகச்[4] சேரக் கட்டாயப் படுத்தப்பட் டிருந்தார்கள் என்பதைக் கண்டுபிடித்தார். தங்களையு மறியாது அக் கடமையைச் செலுத்தத் தவறியவர்கட் கெல்லாம் கடுமையான அபராதங்களை விதித்து வெஸ்டன் ஒரு பெருநிதி திரட்டினார். படைமானிய திட்டக் காலத்தில் நாட்டிலிருந்த கரம்பு நிலங்கள் எல்லாம் அரசருக்குச் சொந்தமாயிருந்தன. இவை "காடுகள்"[5] எனப்பட்டன. ஆனால், அந்நிலங்களிற் பெரும்பகுதி ஊக்கமுள்ள குடியானவர்களால் உழவின்கீழ்க் கொண்டு வரப்பட்டிருந்தன. சார்லஸ் அரசரது நிலங்களை அவ்வாறு ஆக்கிரமித்தவர்கள்[6]மீதெல்லாம் தண்டனையாகப் பெரும்

* 40 பவுன் வருமான மென்பது சார்லஸ் காலத்தில் விட இடைக்காலத்தில் ஒரு பெரிய வருமானமாக இருந்தது. அது தற்காலம் ஒரு ஆயிரம் பவுன் மதிப்பு கொள்ளும்.

1. Weston. 2. The early Plantagenets. 3. The feudal system. 4. Knights. 5. Forests. 6. Encroachment.

அபராதங்கள் விதித்தார். மேலும், சோப், மெழுகுவர்த்தி முதலிய பொருள்களைச் செய்து விற்கும் தனி உரிமைகளைச்[1] சில கம்பெனிகளுக்கு விற்றும் சார்ல்ஸ் பணந் திரட்டினார்.

சார்ல்ஸ் பணம் திரட்டத் தேடிய வழிகளுள் மிகவும் பிரசித்தமானது கப்பற்பணம்[2] தண்டியதே யாம். முற்காலத்தில், ஆபத்துக் காலங்களில், அரசர்கள் கடற்கரையின் பாதுகாவலுக்காகக் கப்பல்கள் கொடுக்குமாறு துறைமுகப் பட்டினங்களைக் கேட்பது வழக்கம். எலிசபெத் இறந்த காலம் முதல் கப்பற்படை கவனிக்கப்படாமல் சீரழிந்திருந்தபடியால், டோவர் குன்று[3]களிலிருந்து தெரியக் கூடிய எல்லா வியாபாரக் கப்பல்களையுங்கூடக் கடற்கொள்ளைக்காரர்கள் தாக்கியடிக்க ஆரம்பித்தார்கள். சார்ல்ஸ் இதை நிறுத்த விரும்பினார். ஆனால், அவருடைய சாதாரண வருமானத்திலிருந்து ஒரு கடற்படை தயாரிப்பதென்பது முடியாத காரியம். ஆதலால், கடற்கரைப் பிரிவுகள்[4] எல்லாவற்றையும் கப்பல்களேனும் அவற்றைக் கட்டப் பணமேனும் கொடுக்கும்படி கேட்டார். அடுத்த வருஷம், நாட்டின் பாதுகாப்பானது எல்லோரும் ஊக்கமெடுத்துக்கொள்ளவேண்டிய ஒரு பொதுக்காரியம் ஆதலால், அதற்காக உள்நாட்டுப் பிரிவுகளும் கப்பற் பணம் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்.

இந்த நூதனமான வரிகள் எல்லாம் இராஜசபை அங்கத்தினரைக் கொண்ட நக்ஷத்திர நீதிமன்றம்[5] போன்ற நீதி மன்றங்களின் துணைகொண்டு அரசரது நேர்பார்வையில் வற்புறுத்தி வசூலிக்கப்பட்டன.

§ 143. ஹாம்டேனுடைய[6] மறுப்பு:—இவ்வாறு சார்ல்ஸ் தாமே ஆண்ட காலத்தில், அரசருடைய கொடுங்கோன்மையால் நாடு நலமிழந்து வருந்தியது என நாம் நினைப்பது தவ

1. Monopolies. 2. Ship Money. 3. The cliffs of Dover. 4. Maritime counties. 5. The Court of Star Chamber. 6. Hampden.

ருகும். நாம் முன்பு குறிப்பிட்ட முறைதவறிய வரிகள் எல்லாம் கொழுத்த பணக்காரர்களைத்தவிர வேறு எவரையும் பாதிக்கவில்லை*. இங்லிஷ் சானெலி[1]லிருந்து கடற்கொள்ளைக் கூட்டத்தினர் துரத்தப்பட்டதனால், எல்லோரும் நன்மையடைந்தார்கள். அதுவுந் தவிர, யூரோப்பிய நாடுகள் எல்லாம் மதப்போர்களினால் சீர்குலைந்திருந்த சமயத்தில் (கு. 95), இங்லண்ட் அமைதியின் பலன்களை நன்கு அனுபவித்திருந்தது; முன்பு எக்காலத்திலும் இல்லாதபடி வியாபாரம் செழித்தோங்கியது.

பல நூற்றாண்டுகளாக இங்லிஷ் மக்கள் பெருமையாகப் பாராட்டிவந்த பார்லமென்டின் உரிமைகளுக்குச் சார்ல்ஸின் ஆட்சிமுறை பாதகம் விளைவிக்கக்கூடுமென்பதை அந்நாளில் இங்லிஷ் மக்களுள் மிகச் சிறுபான்மையினரான கல்வியறிவு பெற்றவர்கள் மாத்திரமே உணர்ந்தார்கள். இந்த உணர்ச்சியே ஜான் ஹாம்டென் என்ற பக்கிங்காம்ஷைர் கனவான் ஒருவரைக் கப்பற்பணம் கொடுக்க மறுக்கத் தூண்டியது. அப்பணமானது தவறாகச் செலவிடப்பட்டதென்று அவரால் குறைகூற முடியவில்லை; அல்லது, வரிசெலுத்துவோருக்குச் சுமையாக விருந்ததென்றும் கூற முடியவில்லை. ஏனெனில், பணக்காரராகிய அவரே அதற்காக ஒரு பவுன்தான் கொடுக்கவேண்டி வந்தது. அவர் போராடியதெல்லாம் ஒரு **கோட்பாட்டுக்காகத்**[2] தான்: பார்லமென்டின் சம்மதமின்றி எவ்வித வரியும் வாங்க அரசருக்கு உரிமை இல்லை என்றார் அவர். அவரை நீதிபதிகள்முன் கொண்டுவந்தார்கள்; நீதிபதிகள் அவ்வரியானது சட்ட சம்மதமானதென்றும், அவர் அதைக் கொடுத்துத்தான் தீரவேண்டுமென்றும் தீர்ப்புச்செய்தார்கள்.

---

*ஏழைகளுக்குத் துன்பம் விளைவிக்கக்கூடியது வியாபாரத் தனி உரிமைகளை விற்றதுதான்.[3]

1. The English Channel. 2. For a principle. 3. Sale of monopolies.

ஆயினும், ஹாம்டெனின் செயல் மக்கள் கவனத்தைப் பிணித்தது. அவ் வழக்கானது நிலம்படைத்தவர்களாலும் வியாபாரிகளாலும் சட்ட நிபுணர்களாலும் எங்கும் விவாதிக்கப்பட்டது. நாட்டில் மக்கள், 'அரசர் தம்மிஷ்டம்போல் வரி விதிக்கக்கூடுமானால், பேருரிமைப் பத்திரம்,[1] உரிமை விண்ணப்பம்[2] ஆகியவை இருந்தென்ன லாபம்? நம் சுய ஆட்சி உரிமைகள் யாவும் அடியோடே மறைந்து போயினவா?' என்று கவலைகொள்ளலாயினர்.

§ 144. **லாடும்[3] தூய்மைக்கோள்கையினரும்[4] :**—வரி விதிப்பைவிடச் சாதாரண மக்கள் மனதைப் பெரிதும் சஞ்சலப்படுத்திய விஷயம் நாட்டு மதஸ்தாபனத்தில் புகுந்து கொண்டிருந்த மாறுதல்களேயாம். நாட்டு மக்களிற் பெரும்பான்மையினர் தீவிரமான எதிர்ப்புமதக் கொள்கையினர்[5] என்பதை முன்பே குறிப்பிட்டிருக்கிறோம்; அவர்கள் போப்பாண்டவர்[6] மதத்தை வெறுத்துச் சாதாரண பைபில் வழிபாட்டை[7] விரும்பினார்கள். ஆனால், அரசருடைய 'அர்மீனியன்'[8] கருத்துக்கள் தீவிரமான ஹைசர்ச்[9] (மேல் மதஸ்தாபனக்) கோட்பாடுகளைக் கொண்ட ஒரு மதத்தலைவரைக் கான்டெர்பெரி ஆர்ச்பிஷப்பாக[10] நியமிக்கத் தூண்டின. **வில்லியம் லாட்**[11] (1573-1645) மத குருக்கள் அனைவரும் தியான புத்தகத்தில்[12] விதிக்கப்பட்ட வழிபாட்டு முறைகளின் எல்லா அமிசங்களையும் நிறைவேற்றவேண்டுமெனக் கட்டாயப்படுத்தினர். குருமார்களுக்கு விதிக்கப்பட்ட 'ஸர்ப்ளிஸ்'[13] உடையை அணியவும், கோவிலில் ஆராதனை மேடையைச்[14] சுற்றிலும் சட்டம் அடித்து வைக்கவும் தவறிய குருமார்களுக்கு லாட் தலைமையில் கூடிய ஹை கமிஷன் நீதி

1. Magna Carta. 2. The Petition of Right. 3. Laud. 4. Puritans. 5. Protestants. 6. Pope. 7. Simple Bible worship. 8. Arminian. 9. High Church. 10. Archbishop of Canterbury. 11. William Laud. 12. The Prayer Book. 13. Surplice. 14. Altar.

மன்றம்[1] அபராதமோ, சிறைத் தண்டனையோ, அல்லது இரண்டுமோ விதித்தது. இங்கிலேயில் அதி தீவிரமான சீர் திருத்தக்கோட்பாடுகளோடு 'கன்வெண்டிகில்'[2] எனப்பட்ட இரகசியமான தொழுகைக் கூட்டங்களை ஏற்படுத்திக்கொண்டிருந்த தூய்மைக்கொள்கையினரது[3] வாழ்க்கை மிகவும் துன்பத்திற்கிடமானதாக விருந்தது. அவர்களுள் ஆயிரக் கணக்கானவர்கள் அமெரிக்காவுக்கு வெளியேறினார்கள்.

தூய்மைக்கொள்கையினரை லாட் துன்புறுத்தியதன் விளைவுகளில் ஒன்று அட்லாண்டிக் பெருங்கடலின் அக் கரையில் ஒரு புதிய இங்லண்ட்[4] ஏற்பட்டதாகும். ஐம்பதாண்டுகளுக்குமுன் எலிசபெத் அக்கொள்கையினரை ஒறுக்கத்[5] தொடங்கியபோது அவர்களுள் சிலர் ஒரு கூட்டமாக நெதர்லண்ட்ஸுக்கு[6] ஓடினார்கள். ஸ்பெயின் அரசரான பிலிப்புக்கு விரோதமாக அதன் மக்கள் கலகம் செய்ததால், அந்நாடு அப்போதுதான் ஒரு எதிர்ப்புமதக் குடியரசு நாடாக[7] மாறி யிருந்தது. அங்கு அடைக்கலம் புகுந்தவர்கள் எலிசபெத் இறந்தவுடன் இங்லண்டுக்குத் திரும்பிவரலாமென் றிருந்தார்கள். ஆனால், ஜேம்ஸும் தூய்மைக்கொள்கையினரை நாட்டைவிட்டு அகற்றத் தீர்மானித்திருந்ததை உணர்ந்ததும் (§ 135), அவர்கள் தம் மனம்போல வழிபாடு செய்வதற்கு அமெரிகாவில் ஒரு புதிய புகலிடம் தேடிக்கொள்ளத் துணிந்தார்கள். முதலில், அவர்கள் கடலைத் தாண்டி இங்லண்டுக்கு வந்து, ப்ளிமத்தில்[8] தங்கள்ஏற்பாடுகளை ஒழுங்குபெறச் செய்தார்கள். பிறகு, அந்த "யாத்ரிக தந்தையர்[9]" மேப்ளவர்[10] என்ற கப்பலில் 1620ஆம் செப்டெம்பர்மீ பயணப்பட்டார்கள். சில வருஷங்களுக்கு முன்னேயே இங்லிஷ் குடியேற்ற நாடா[11]யிருந்த வர்ஜினி

1. Court of High Commission. 2. Conventicle. 3. Extremer Puritans. 4. A New England. 5. Perscoute. 6. The Netherlands. 7. A Protestant Republic. 8. Plymouth. 9. "The Pilgrim Fathers." 10. Marflower. 11. An English colony.

யா[1]வில் (கு. 105) தங்குவதென அவர்கள் முதலில் நினைத்தார்கள். ஆயினும், பிறகு, அதற்கும் வடக்கே சென்று தங்குவதெனத் தீர்மானித்தார்கள். ஆரம்பத்தில், முக்கியமாகக் குளிர்மாதங்களில், அவர்கள் மிகவும் துன்பப்பட்டார்கள். ஆயினும், நாளடைவில் நிலத்தைக் கஷ்டப்பட்டு உழுது ஜீவியத்தைத் தேடிக்கொண்டு அவர்கள் தங்கள் குடியேற்றத்தை[2]ச் சாசுவதமாக அமைத்துக்கொண்டார்கள்.

ஆயினும், லாட் இங்லண்டில் தூய்மைக்கொள்கையினரைத் துன்புறுத்திய காலம் வரையில், அவர்களுடைய முன்னேற்றம் தாமதப்பட்டுக்கொண்டே யிருந்தது. அப்போதோ, செல்வம், குணம், வாழ்க்கைநிலை முதலியவைகளில் உயர்ந்திருந்த ஆயிரக்கணக்கான தூய்மைக்கொள்கையினர் அமெரிகாவுக்கு வந்து, முன் வந்தவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். இந்த நியு இங்லண்ட்[3]தான் இங்லிஷ் மக்கள் கடல்கடந்து சென்று நிறுவிய முக்கியமான வெளிநாட்டுக் குடியேற்றங்களுள் முதன்மையானது. லாட் தூய்மைக் கொள்கையினரைத் துன்புறுத்தியது அவர் கனவிலும் எதிர்பார்த்திருக்கமுடியாத ஒரு பயனைத் தந்தது. அதுவே பிரிட்டிஷ் பேரரசுக்கு[4] அடிகோலியதாகும்.

## முப்பத்திரண்டாம் அத்தியாயம்

# அரசரின் தனியாட்சி[5] குலைதல்

(1639—1642)

§ 145. பிஷப்புகள் போர் :—ஹாம்டெனைப் போன்ற பொதுநல உணர்ச்சி பெற்ற கனவான்கள் கப்பற்பணம் கொடுக்க மறுக்கலாம்; . சாதாரண மக்கள் தங்கள் ஊர்க் கோவில்களில் ஞாயிற்றுக்கிழமைகள்தோறும் பார்த்ததை

1. Virginia. 2. Colony. 3. New England. 4. The British Empire.
5. Personal rule.

வெறுத்துவரலாம்; ஆயினும், பார்லமென்டைக் கூட்டாமல் தாமே நாட்டையாள முடிந்தவரையில் தம் தனியாட்சி முறைகளைச் சார்லஸ் ஏன் தொடர்ந்து கையாளலாகாது? ஆனால், முடிவில் சார்லஸ் தமது மதியற்ற கொடுங்கோற் செயலொன்றால் தம்முடைய ஏற்பாடுகளனைத்தும் அட்டை வீடுமாதிரி குலைந்துவிழச் செய்தார்.

இங்லண்ட் அரசரே ஸ்காட்லண்டுக்கும் அரசரானபோதிலும், அந்த இரண்டு நாட்டு மக்களும் தனித்தனியே யிருந்தார்கள் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. அவர்கள் துரைத்தனம், சட்டங்கள், மதஸ்தாபனம், மதக் கோட்பாடுகள் முதலியவற்றில் தனிப்பட்டவர்களே. ஸ்காட்லண்ட் மக்கள் ப்ரெஸ்பிட்டீரியன் மதஸ்தாபன அமைப்பில்[1] மிகுந்த பற்றுடையவரா யிருந்தனர் (§ 135). தம் நாட்டு மக்களின் போக்குகளை முதலாம் ஜேம்ஸ் மிக நன்றாக உணர்ந்திருந்தபடியால், "பிஷப்புகள் இல்லாவிடில் அரசர் இல்லை"[2] என்பதுபோன்ற தம்முடைய கோட்பாடுகளை அவர் ட்வீட்[3] நதிக்கு வடக்கே வற்புறுத்தத் துணியவில்லை. ஆனால், அவரது மகனான சார்லஸ் ஸ்காட்லண்டில் எப்போதும் வசித்ததில்லை. முழு நாகரிகம் பெறாதவர்களாகத் தமக்குத் தோன்றிய அம்மக்களுடைய உணர்ச்சிகளை அவர் அறிந்துகொள்ளவில்லை; அறிய விருப்பங் கொள்ளவுமில்லை. இங்லிஷ் தியான புத்தகத்தின்[4] தனிப்பதிப்பு ஒன்றை வெளியிட்டு அதை ஸ்காட்லண்ட் கோவில்களில் உபயோகப்படுத்த அனுப்பினார். அதுபற்றி ஏற்பட்ட கிளர்ச்சிகளைக் கண்டு அவர் திடுக்கிட்டிருக்கவேண்டும். முதல் முதல் அப்புத்தகம் எடின்பரோ[5]விலுள்ள செனட் கைல்ஸ் கோவிலில்[6] உபயோகப்படுத்தப்பட்டபோது,

1. The Presbyterian form of Church. 2. "No Bishop, no King." 3. The Tweed. 4. The English Prayer Book. 5. Edinburgh. 6. St. Giles Church.

அங்கே ஒரு பெருங் கலகம் ஏற்பட்டது. அதை அடக்க நகரப் பாதுகாவல் வீரரை[1] அழைக்கவேண்டியதாயிற்று. அம்மாதிரியான கலகங்கள் எல்லாக் கோவில்களிலும் ஏற்பட்டன; ஸ்காட்லண்ட் மக்கள் அந்தத் தியான புத்தகத்தை உபயோகிக்கவிடவேயில்லை. "சட்ட பூர்வமான முறைகளையெல்லாம் கையாண்டு, சமீப காலத்தில் உண்டான மாறுதல்களுக்குமுன் ஏற்பட்ட மதத்தின் புனிதத் தன்மையைத் திரும்பப் பெற" ஸ்காட்லண்ட் மக்கள் எல்லோரும் ஆணையிட்டு ஒப்புக்கொள்வதாக ஒரு தேசீய உறுதிப்பத்திரம்[2] தயாரிக்கப்பட்டது. வழிபாடு முடிந்தவுடன் பிரபுக்கள், நகரமாந்தர், குடியானவர்கள் முதலிய எல்லா மக்களும் அந்தப் பத்திரத்தில் கையொப்பமிடக் கோவில் முற்றத்தில் அதிக ஊக்கத்துடன் குழுமினர்.

சார்ல்ஸ் மன்னருக்கு இன்னது செய்வதென்பது புரியவில்லை. ஸ்காட்லண்ட் மக்களை அவர்கள் மனம்போன போக்கில் விடுவதற்கில்லை; அவ்வாறு விட்டுவிட்டால், அவர்களே வெற்றி பெற்றதாகவும், மன்னர்களின் தெய்விக உரிமை[3] முடிவடைந்ததெனவும் ஒப்புக்கொள்ளுவ தாகும். தம்மிடம் படைப்பலம் இல்லாத காரணத்தாலும், படையைத் திரட்ட வசதியொன்றும் இல்லாதபடியாலும், அவர்களைத் தமக்குக் கீழ்ப்படியச் செய்யவும் இயலவில்லை; மறைந்தொழிந்த படைமானிய வழக்கங்களைப்[4] புதுப்பித்து வட இங்லண்டின்[5] பிரபுக்களைத் தங்கள் ஆட்களுடன் யார்க் பட்டணத்தில் தங்கள் அரசருக்காகப் போர்புரிய ஆயுதபாணிகளாகக் கூடச்செய்வதுதான் முடிந்தது. ஆனல், அவ்வாறு கூடிய படை கண்டோர் நகைக்கும்படியானதா யிருந்தது. இடைக்காலத்தில்[6] இருந்ததைவிட அப்போதைய போர்

1. The Town Guard. 2. A National Covenant. 3. The Divine Right of Kings. 4. Feudal customs. 5. Northern England. 6. The Middle Ages.

முறை பல் வழிகளில் சிறப்படைந்திருந்தது. அரசருடைய கட்டளைப்படி வந்து சேர்ந்தவர்களிற் பெரும்பாலோர்க்கு அக்காலப் போர்முறையே தெரியாது; அவர்களுள் சிலர் அரசர் எதற்காகப் போர்புரிய விரும்பினரோ அதற்காகப் போர்புரிய விரும்பவில்லை. ஸ்காட்லண்ட் மக்களோ சிறந்த போர்க்கோலத்தி லிருந்தார்கள். புகழை விரும்பிய ஸ்காட் இளைஞர்கள் பல நூற்றாண்டுகளாகவே வெளிநாட்டுப் படைகளிற் சேர்ந்து செல்வமும் கீர்த்தியும் பெறுவது வழக்கமாயிருந்தது. அக்காலத்திலுங்கூட அவர்களுள் நூற்றுக் கணக்கானவர்கள் முப்பதாண்டுப் போரில்[1] (கு. 95) எதிர்ப்பு மத வாதிகள் பக்கம் சேர்ந்து போர்புரிந்துகொண் டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் அனுபவம் பெற்ற போர்வீரர்களாகத் தாய்நாடு திரும்பிவந்து ஒன்று திரண்டு தங்கள் மதக் கோட்பாடுகளுக்காகப் போரிடத் தயாராக இருந்தனர். பெரிக்[2] என்ற இடத்தில் இரண்டு படைகளும் சந்திக்க நேர்ந்தபொழுது, போர்த் தேர்ச்சியிலும் கட்டுப்பாட்டு முறையிலும் இருபடைக்கு மிருந்த வேறுபாட்டினால் போரை நடத்த இயலவில்லை. இரு கட்சியாரும் தங்கள் கருத்து வேற்றுமைகளைப்பற்றி விவாதிக்கச் சிறிது காலம் போரை நிறுத்திவைக்க ஒப்புக்கொண்டனர்.

§ 146. **ஸ்ட்ராபர்ட்[3] துணைக்கு வருதல் :**—போர் நிறுத்தத்துக்கு அரசர் உடன்பட்டதன் உண்மையான நோக்கம் என்னவென்றால், தமக்குக் கிடைக்கும் அவகாசத்தில் ஸ்காட் மக்களை அடக்க வேறு ஏதாவது வழி தேடலாம் என்பதே. ஆறு வருடங்களாக அயர்லண்டில் வெற்றிகரமாக வல்லாட்சி நடத்திவந்த டாமஸ் வென்ட்வொர்த்[4] என்பவரைப்பற்றி அப்போது சார்ல்ஸ் நினைத்தார்(கு. 103). வென்ட்வொர்த் ஒரு தனிப்பட்ட துரைத்தனக் கொள்கையைக் கொண்டிருந்

1. The Thirty Years' War. 2. Berwick. 3. Strafford. 4. Thomas Wentworth.

தார். அவ்வாட்சி முறைக்குத் "தீர்மை"[1] என்று அவர் பெயர் கொடுத்தார். அரசருடைய அதிகாரிகள் நாட்டில் இரக்கமற்ற உறுதியான ஆட்சி செலுத்தவேண்டுமென்பதே அதன் நோக்கம். அதனால், அமைதியும், வெளிக்குமட்டிலாவது செல்வச் செழிப்பும் அயர்லண்டில் ஏற்பட்டன. ஆதலால், சார்ல்ஸ் வென்ட்வொர்த்தை வரவழைத்து, அவரை ஸ்ட்ராபர்ட் ஏர்[2]லாக்கி, அப்போது ஏற்பட்டிருந்த கேவலமான நிலைமையைச் சமாளிக்க நியமித்தார். வென்ட்வொர்த் விரோதியை எதிர்த்துத்தான் வெற்றிபெற வேண்டுமென்று கூறிப் பார்லமென்டைக் கூட்டும்படி அரசருக்கு ஆலோசனை சொன்னார். அவர் அயர்லண்ட் சட்டசபை[3]யைத் தம் இஷ்டம்போல் நடக்கச்செய்து வெற்றிபெற்றவர்; அது போலவே இங்லண்ட் பார்லமென்டையும் தாம் சமாளித்துவிடலாமென நினைத்தார். 1629-ம் ஆண்டுக்குப்பின் பதினோராண்டுகள் கூடாதிருந்த பார்லமென்ட் மறுபடியும் வெஸ்ட்மின்ஸ்டரில்[4] கூடியது. அப்பொழுது வென்ட்வொர்த் அதன் எதிர்ப்பின் தன்மையைத் தாம் குறைவாக மதித்துவிட்டதைக் கண்டுகொண்டார். நாட்டின் பல பாகங்களி லிருந்தும் வந்திருந்த அங்கத்தினர்கள் அரசருடைய தனியாட்சியைப்பற்றி ஒரே அபிப்பிராயங் கொண்டிருந்தபடியால், அவர்களுடைய எதிர்ப்பு மிகுந்த வன்மையுடையதாயிருந்தது. அவர்கள் முந்திய பதினொரு வருஷங்களில் நடந்த அநீதிகளைச் சீர்திருத்தும் வரையில் அரசருக்குப் பண மானியம் கொடுப்பதைச் சிறிதும் கவனிக்கத் தயாராயில்லை. சில வாரங்கள் விவாதத்தில் கழிந்ததும், அரசர் அக் குறுகியகாலப் பார்லமேன்டைக்[5] கலைத்தார். பிறகு பணமில்லாமல் படைதிரட்ட வழி தேடினர். சேனைக்கு ஆள் பிடிக்கும் கூட்டங்களை[6] அனுப்பி ஒருவிதமான படையைச்

1. "Thorough." 2. Earl of Strafford. 3. The Irish Assembly. 4. Westminster. 5. Short Parliament. 6. The press gang.

சேர்த்தார். அவர்களுக்கு ஆயுதங்களும் தளவாடங்களும் சரியாகக் கொடுக்கச் சார்ல்ஸிடம் பணமில்லை. அவர்கள் வடக்கே போகப்போக அவர்களது உபயோகமற்ற நிலை வெளிப்படையாகிக்கொண்டே வந்தது. ஸ்காட்லண்ட் சேனை அதற்குள் போருக்குத் தயாராகி எல்லையைத் தாண்டி வந்துவிட்டது. அவர்கள் டர்ராம்[1] என்னு மிடத்தில் தங்கி, தாங்கள் இங்லண்ட்மீது படைதிரட்டி வந்ததற்கான செலவு களைக் கட்டிக்கொடுத்தாலொழியத் திரும்பமாட்டோம் என்றார்கள். சார்ல்ஸ் மீண்டும் அவர்களுடன் ஒரு போர்நிறுத்த உடன்படிக்கை[2] செய்துகொள்ளவேண்டிய தாயிற்று.

§ 147. "தீர்மை"[3] முறையின் முடிவு :—மீண்டும் பார்லமென்டைக் கூட்டுவதைத் தவிர வேறு வழியில்லை. அதன் அங்கத்தினரிற் பெரும்பாலோர் அதே ஆண்டின் தொடக்கத்தில் 'குறுகிய காலப் பார்லமென்டுக்கு' வந்தவர்களே. அவர்கள் அரசரின் சிக்கலான நிலைமை நன்றாக உணர்ந்தவர்களாய், இனிப் பார்லமென்டுக்கு ஒவ்வாத முறைகளால் நாட்டை ஆள அரசருக்கு இயலாமற் போகும் வண்ணம் சில திட்டங்களை நிறைவேற்றுவதென்னும் தீர்மானத்துடன் வந்து கூடினார்கள். நேரவிருந்ததை யறிந்து கொண்ட ஸ்ட்ராபர்ட் அதன் அங்கத்தினருள் முக்கியமானவர்களைச் சிறையிலிடும்படி அரசருக்குச் சொன்னார். ஆனால், அவர்கள் வெகு விரைவாகத் தங்கள் ஏற்பாடுகளைச் செய்து முடித்தார்கள். காமன்ஸ் சபையார்[4] கூடிய அன்றே ஸ்ட்ராபர்ட்மீது இராஜத்துரோகக் குற்றஞ் சாட்டி விசாரணை[5] செய்யத் தொடங்கினார்கள். மறுநாள் பிரபுக்கள் சபையார் அவரைச் சிறையிலிட உத்தரவிட்டார்கள்.

ஸ்ட்ராபர்ட் சிறைப்பட்டவுடனே, பார்லமென்டார் அரசருடைய தனியாட்சி முறையை அடியோடு துடைத்துத்

1. Durham. 2. Armistice. 3. 'Thorough.' 4. The House of Commons. 5. Impeachment.

தள்ள முற்பட்டனர். முதலில் தங்கள் சம்மதமின்றித் தங்களைக் கலைக்க இயலாதென்று ஒரு சட்டம் நிறைவேற்றித் தங்கள் நிலைமையை ஸ்திரப்படுத்திக்கொண்டார்கள். அரசர் கூட்டினாலும் கூட்டாவிட்டாலும் மூன்று வருஷத்துக்கு ஒருதரமாவது பார்லமெண்டுக்குத் தேர்தல் நடக்க வேண்டுமென்று 'மூன்றாண்டுச் சட்டம்'[1] என்னும் ஒரு சட்டத்தையும் இயற்றினார்கள். நைட் பணம் கட்ட வற்புறுத்தல்,[2] காட்டுரிமைகளை[3] வற்புறுத்தல், கப்பற் பணம்[4] தண்டல் முதலியவெல்லாம் சட்ட விரோதமானவை யென்று அவர்கள் தீர்மானித்தார்கள். அரசருடைய நேர் அதிகாரத்துக்கு உட்பட்டிருந்த நக்ஷத்திர நீதிமன்றம்[5], ஹைகமிஷன் நீதிமன்றம்[6] முதலிய நீதிமன்றங்களெல்லாம் கலைக்கப்பட்டன. பார்லமெண்டார் இந்தத் தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றியபடியால் அரசர் அவைகளை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அவரால் அங்கிலையில் வேறென்ன செய்ய முடியும்? ஆயினும், எப்படியும் அவற்றை மீறி நடக்கப் பின்னால் ஏதாவது வழி தேடிக்கொள்ளலாமென அவர் நம்பியிருந்தார்.

இதற்கிடையில் ஸ்ட்ராபர்டின்[7] விசாரணை நடந்து கொண்டே யிருந்தது. காமன்ஸ் சபையில்[8] முக்கியஸ்தர்களான ஜான் பிம்,[9] ஜான் ஹாம்டென்[10] என்ற இருவரால் குற்றச்சாட்டு நடத்தப்பட்டது. ஆனாலும், அவர்கள் வழக்கு பலமற்றதாயிருந்தது. 'இராஜத்துரோகம்'[11] என்பது அரசருக்கு எதிராகச் சதி செய்வது. ஸ்ட்ராபர்ட் அரசருடைய மன விருப்பப்படியே நடந்துகொண்டார் என்பது யாவரும் அறிந்ததே. அவ் விசாரணையில் நீதிபதிகளாயிருந்த பிரபுக்கள்சபையின்[12] அங்கத்தினர்களும்,

1. A Triennial Act. 2. Distraint of Knighthood. 3. Forest Rights. 4. Ship Money. 5. Star Chamber. 6. High Commission. 7. Strafford. 8. The House of Commons. 9. John Pym. 10. John Hampden. 11. Treason. 12. The House of Lords.

குற்றஞ் சாட்டிய காமன்ஸ் சபையின் அங்கத்தினர்களைப் போலவே, ஸ்ட்ராபர்டை ஒழித்துவிட விரும்பினார்கள். ஆனால், அவர்கள் நியாயவுணர்ச்சி[1] யுடையவர்களா யிருந்தமையால், ஸ்ட்ராபர்ட் அத்தகைய குற்றஞ் செய்தவரே எனத் தீர்மானித்துவிடத் துணியவில்லை. வழக்கு முறிந்துவிடும்போலிருந்தது. ஆதலால், காமன்ஸ் சபையார், தங்கள் விரோதி எங்கே தப்பித்துக்கொள்ளப் போகிறாரோ எனப் பயந்து, ஸ்ட்ராபர்ட் மரணதண்டனை பெறத்தக்க குற்றங்களைச் செய்ததாகவும், அவரை உடனே தலைவாங்கவேண்டுமென்றும் மரணதண்டனைச் சட்டம்[2] ஒன்று நிறைவேற்றினார்கள். பிரபுக்கள் அதைத் தடையின்றி ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், அரசருடைய சம்மதமும் அதற்குத் தேவையாயிருந்தது. அரசர் தயங்கினார். அந்தச் சிக்கலான நிலையில் லண்டனுக்கு வந்து தன்னை அபாயத்துக்கு உட்படுத்திக் கொள்ள ஸ்ட்ராபர்ட் விரும்பவில்லை. ஆனால், சார்ல்ஸ் அவரது மனவுறுதி வாய்ந்த ஆலோசனையையும் ஆதரவையும் பெற விரும்பி, அவருக்கு ஒரு சிறு இடையூறும் நேராதவாறு தாம் பார்த்துக்கொள்வதாக உறுதி கூறி யிருந்தார். ஆயினும், ஒயிட் ஹால் அரண்மனையைச்[3] சூழ்ந்துகொண்ட ஒரு கூட்டம் மிகுந்த ஆவேசத்துடன் "கறுப்பு டாம்"[4] இரத்தத்தைச் சிந்தவேண்டுமென்று கூக்குரலிட்ட பொழுது, அரசர் முடிவில் இணங்கவேண்டியதாயிற்று. அச் செய்தியைக் கேட்ட ஸ்ட்ராபர்ட் "அரசர்களிடம் நம்பிக்கை வைக்காதீர்கள்" என்னும் ஒரு அறிவு மொழியை வாய்விட்டுக் கூறினார். அவர் டவர் ஹில்லின்[5] மீது ஒரு பெருங் கூட்டத்தின்முன் தலைவாங்கப்பட்டார் (மே, 1641).

அச் செயலால் பார்லமெண்டார் நாட்டு மக்களின் உரிமைகளை நிலைநிறுத்திவிட்டதாக நினைத்தார்கள். ஆதலால்,

1. Sense of fair play. 2. Act of Attainder. 3. Whitehall Palace.
4. "Black Tom." 5. Tower Hill

அவர்கள் ஸ்காட் மக்களுக்குக் கொடுத்து அனுப்பவேண்டிய பணத்தை அனுமதித்தார்கள்.

§ 148. **மதஸ்தாபனத்தைப்பற்றிப் பிளவு:**—துரதிர்ஷ்டவசமாக, பார்லமென்ட் அரசர் அதிகாரத்தைக் குறைப்பதில் இருந்தது போல மற்ற விஷயங்களில் ஏகமனதாக இருக்கவில்லை. அவ்விதம் இருந்திருந்தால், உள்நாட்டுப் போரே ஏற்பட்டிருக்காது. மத சம்பந்தமான விஷயங்களில் அங்கத்தினர்களிடையே அபிப்பிராய வேற்றுமை ஏற்பட்டது. சில அங்கத்தினர்கள் எலிசபெத் காலத்தில் நிறுவப்பட்ட இங்லிஷ் மதஸ்தாபனமே தகுதியானதென்றும், அதிலிருந்து லாடும்[1] அவருடைய அர்மீனியன் கோட்பாடுகளும்[2] நீக்கப்பட்டுவிட்டால் போதுமென்றும் நினைத்தார்கள். மற்றவர்களோ தூய்மைக்கொள்கையினர்.[3] அவர்கள் ஸ்காட்லண்ட் மதஸ்தாபனத்தைப் போலவே ப்ரெஸ்பிட்டீரியன் மாதிரியில்[4] இங்லண்ட் மதஸ்தாபனம் சீர்திருத்தி அமைக்கப்படவேண்டுமென்று விரும்பினர்கள். பிம், ஹாம்டென்[5] என்பவர்களை முக்கியஸ்தர்களாகக்கொண்ட தூய்மைக்கொள்கையினர் ஆர்ச்பிஷப்புகள், பிஷப்புகள், ஆர்ச்டீகன்கள், டீன்கள்[6] முதலானவர்களை முற்றிலும் நீக்கிவிட **வேரையும் கிளையையும் ஒருங்கே தறிக்கும் மசோதா**[7] ஒன்றைக் கொண்டுவந்தார்கள். ஆனல், அதற்கு மிகுந்த எதிர்ப்பிருந்ததால், அது வற்புறுத்தப்படவில்லை. ஆயினும், அது சம்பந்தமாக நடந்த விவாதங்கள் அத்தகைய விஷயங்களில் அங்கத்தினர்களிடையே எவ்வளவு அபிப்பிராய பேதம் இருந்தது என்பதை நன்கு எடுத்துக்காட்டின.

பிறகு அயர்லண்டிலிருந்து ஒரு பயங்கரமான செய்தி வந்தது. அங்கே, உள்ளூர்வாசிகளான காதொலிக்கர்கள், குடி

1. Laud. 2. 'Arminian' ideas. 3. Puritans. 4. On the Presbyterian model. 5. Pym and Hampden. 6. Archdeacons, Deans. 7. Root and Branch Bill.

யேறிய எதிர்ப்புமதக்கொள்கையினர்க்கு விரோதமாகக் கிளம்பி, ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாகப் பலரைக் கொலைசெய்தனர். அந்நிலையைச் சமாளித்து அமைதியை நிலைநிறுத்த ஒருபடை வேண்டியிருந்தது. ஆனால், யாருடைய உத்தரவுப்படி அது நடக்கவேண்டியது என்ற கேள்வி எழுந்தது. அரசரே எப்பொழுதும் படைகளின் மீது அதிகாரம் வகித்திருந்தார். அத்தகைய அதிகாரத்தை அப்போது சார்ல்ஸ்வசம் விட்டுவைத்தால், அவர், அப்படைப்பலங்கொண்டு, பார்லமெண்டைக் கலைத்துவிட்டுச் சமீபகாலத்தில் ஏற்பட்ட சட்டவரையறைகளைத் தகர்த்தெறிந்து, தம் தனியாட்சியை மறுபடியும் துவக்க முயல்வாரோ என்ற பயமிருந்தது. ஆயினும், இராணுவ அனுபவமற்றவர்கள் அடங்கிய ஒரு சட்டசபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட படை நாட்டில் எப்போதும் இருந்ததே இல்லை. பார்லமெண்ட் நம்பக்கூடியவர்களிடம் படையதிகாரத்தைக் கொடுக்கலாமெனப் பிம்[1] ஒரு சட்டம் நிறைவேற்றினார். ஆனால், அதற் காதரவாக அவர் ஒரு "பெருங் கண்டன"[2]த்தைக் கொண்டுவரவேண்டி யிருந்தது. அதில், அரசர் தாம் பட்டம் பெற்றது முதல் செய்த முறையற்ற செயல்கள் யாவும் கண்டிக்கப்பெற்றிருந்தன. அங்கத்தினருள் பலர் அதை எதிர்த்தனர். அவர்கள், அரசர் முற்றிலும் மாறிவிட்டதாகவும், பழைய குறைபாடுகளை யெல்லாம் மறுபடியும் கிளறுதல் பெருந்தன்மையாகா தெனவும் கருதினார்கள். அதுபற்றிக் கடுமையான ஒரு நீண்ட விவாதம் நடந்தது. இறுதியில் பதினொரு பேர்களின் அதிக வாக்கினால்[3] அக்கண்டனத் தீர்மானம் நிறைவேறியது. பார்லமெண்டில் இரு கட்சிகள் தெளிவாகப் பிரிந்தன. உள்நாட்டுப் போர் தொடங்குவதற்கான அறிகுறிகள் தோன்றின.

1. Pym. 2. A Grand Remonstrance. 3. By a majority of eleven.

§ 149. **போர் முழக்கம்** :—அமைதியை நிலைநிறுத்தச் சார்ல்ஸுக்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது; அதாவது, தம் எதிரிகள் தம்மை நம்பாதிருந்தது தவறு எனக் காட்டுவதே. அவ்வாறு செய்திருந்தால், பார்லமென்ட் அங்கத்தினரிற் பலர் அவர் பக்கம் சேர்ந்திருப்பார்கள்; அவரும் தம் ஆயுட்கால முழுவதும் அரசர் நியாயமாக விரும்பும் எல்லா அதிகாரங்களுடனும் அமைதியாகவும் மகிழ்வுடனும் ஆண்டுவந்திருக்கலாம். ஆனால், தருணம் வாய்த்தபோது தாம் எப்பொழுதும் கொடுங்கோன்மையுடன் நீதியற்ற வழியில் காரியங்களை நடத்தி வருவோம் எனக் காட்ட, ஒரு சிறிய மதியற்ற செயலை அவர் செய்துவைத்தார். காமன்ஸ் சபையின் அங்கத்தினர் ஐவர்மீது (பிம், ஹாம்டென் உட்பட) அவர் இராஜத் துரோகக்[1] குற்றஞ் சாட்டினர். ஸ்ட்ராபர்டை[2]விட அவர்களே இராஜத்துரோகத்துக் கொப்பான செயல்களைச் செய்தவர்கள். சார்ல்ஸ் ஆழ்ந்த யோசனையுள்ளவரா யிருந்திருந்தால், அவர்களைச் சாதாரண சட்டமுறையில் விசாரணைக்குக் கொண்டுவந்திருப்பார். அவ்வாறின்றி, வாட்களையும் துப்பாக்கிகளையும் தாங்கிய ஒரு கூட்டம் தம்மைப் பின்தொடர, அந்த அங்கத்தினர்களைச் சிறைசெய்வதற்கென்று தாமே நேரில் பார்லமென்டுக்கு வந்தார். பார்லமென்டார் இதைப்பற்றி முன்னரே அறிந்திருந்தபடியால், சிறையாகவிருந்த அங்கத்தினர்களை யெல்லாம் சேமப்படுத்தி நகருக்கு அனுப்பிவிட்டார்கள். சார்ல்ஸ் முகவாட்டத்துடன் திரும்ப வேண்டிய தாயிற்று. அச் செயல் அவருடைய எதிரிகளின் பலத்தை அதிகரிக்கச் செய்தது. அதுவரையில் அவரை ஆதரித்துவந்த லண்டன் நகரம் அவருக்கு விரோதமாயிற்று. சில நாட்கள் கழித்துச் சார்ல்ஸ் தம் தலைநகரிலிருந்து வெளியேறினர்; அப்போது வெளியேறியவர் ஏழு வருஷங்கள் கழித்துத் தாம் ஒயிட்ஹாலில்[3] விசாரணை செய்

1. High Treason. 2. Strafford. 3. Whitehall.

யப்பட்ட தினம் வரையில் லண்டனுக்குள் நுழையவே இல்லை.

இங்கிலேயில் போர் நடந்தே தீரவேண்டும். பார்லமென்டின் இரு சபைகளிலும், அரசரிடமும் மதஸ்தாபனத்தினிடமும் அளவு கடந்த விசுவாசமுடைய பலர் இருந்தனர். அவர்கள் அரசருடன் நாட்டுக்குள் சென்று அவருக்குப் படைத்துணையாக நிற்கத் தயாரானர்கள். வெஸ்ட்மின்ஸ்டரில்[1] தனித்து நின்றவர்கள் "பார்லமென்டின் இரு சபைகளையும் பாதுகாப்பதற்காகவும், இராச்சியத்தின் உண்மையான மதம், நீதிமுறைகள், உரிமைகள், அமைதி ஆகியவற்றை நிலைநிறுத்தும் பொருட்டும்" பதினயிரம் பேர் கொண்ட படையொன்று திரட்டப் பணமானியம் அளித்தார்கள்.

இருவர் முறைகளையும் தவறுகளையும் பற்றி அரசருக்கும் பார்லமென்டுக்கும் அடுத்த சில மாதங்களில் ஆத்திர மிகுந்த விவாதம் நடந்தது. முக்கிய தகராறு இராச்சியத்தில் யாருடைய அதிகாரஞ் செல்லவேண்டு மென்பது பற்றியே. அவ்விஷயத்தைப் போர்புரிந்தல்லாமல் முடிவு செய்யும் வழியொன்று மில்லை. 1642ஸு ஆகஸ்டுமீ 22உ அரசர் நாட்டிங்காம்[2] என்னு மிடத்தில் தம் போர்க் கொடியை நாட்டினர்[3].

## முப்பத்துமூன்றும் அத்தியாயம்

# உள்நாட்டுப் போர்

## (1642—1646)

§ 150. **எட்ஜ்ஹில் நியுபேரி[4] சண்டைகள்:**— பார்லமென்ட் தன் படையின் தலைமையை, ஜெர்மனியில் சிறிது போர் அனுபவம் பெற்றிருந்த தூய்மைக்கொள்கையின

1. Westminster. 2. Nottingham. 3. Raised his standard. 4. Edgehill and Newbury.

ரான எசெக்ஸ் ஏர்லிடம்[1] ஒப்படைத்தது. அவர் பெருந் தன்மையும் நல்லெண்ணமும் முடையவரே; ஆயினும், அரசருக் கெதிராகப் போர்புரிவதில் ஏதோ தவறு இருப்பதாக அவ ருக்குத் தோன்றிக்கொண் டிருந்தது. தமக்காக ஒரு படை யைத் திரட்டிக்கொள்ளச் சார்ல்ஸுக்கு அதிக காலம் வேண்டி யிருந்தது. ஆதலால், எசெக்ஸ் நேரே நாட்டிங் காமுக்குப் போயிருந்தால் சண்டை தொடங்குமுன்பே அதை நிறுத்தி இருக்கலாம். ஆனால், அவர் தயங்கினர். அரசர் தமக்குச் சாதகமாயிருந்த மேற்குப் பிரிவுகளுக்குச்[2] சென்றார். சில வாரங்களுள் காவலியர் படைகள்[3] இரு மடங்கு பெருகின. அரசரும் பார்லமெண்டாரின் முக்கிய இடமாகிய லண்டனை நோக்கிச் சென்றார். எசெக்ஸ் பிரபு வுக்கு அப்போது அரசருடன் போரிடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆதலால், இரு படைகளும் வாரிக்ஷைரிலுள்ள[4] எட்ஜ்ஹில் (1642) என்னு மிடத்தில் கைகலந்தன. ரூபர்ட் இளவரசரால்*[5] நன்கு பழக்கப்பட்டிருந்த அரசருடைய குதி ரைப்படை எதிரிகளின் இரண்டு பக்க அணிகளையும் முறி யடித்துத் துரத்தியது; ஆனால், அரசருடைய காலாட் படையை ஓடாமல் நின்ற பார்லமெண்ட் பக்கத்துக் குதிரை வீரர்கள் தாக்கினர்கள். அன்று நடந்த போரில் பார்ல மெண்ட் படையினர் நிலைமையை வெகுவாகச் சமாளித்து நின்றனர். ஆகவே, அரசர், மறுநாள் சண்டையைத் தொடர்ந்து நடத்துவதில்லை யெனத் தீர்மானித்து, ஆக்ஸ்பர் டுக்கு[6]ப் போனர். அப்போர் முடியும் வரையில் ஆக்ஸ்பர்ட்

*ரூபர்ட் இளவரசர் சார்ல்ஸின் சகோதரி எலிசபெத்தின் மகன் (§ 137). அவருக்கு அப்போது வயது இருபத்தொன்றே. முப்பதாண்டுப் போரில் அவர் சிறிது போர்ப் பயிற்சி பெற்றிருந்தார். உயர்குடிப் பிறப் பும் தைரியமும் துணிச்சலும் கொண்ட அவர் காவலியர் கனவான்களுக்கு உகந்த தலைவராக அமைந்தார்.

1. Earl of Essex. 2. Western counties. 3. The Cavalier forces. 4. Warwickshire. 5. Prince Rupert. 6. Oxford.

# உள்நாட்டுப் போர்கள் (1642–1651)



தான் அரசருடைய முக்கிய படைவீடாக[1] இருந்தது. எசெக்ஸ் பிரபு, அரசர் படையினர் லண்டனைத் தாக்கினால் அங்குத் தக்க பாதுகாப்பு அமையவேண்டியதற்காகத் தம் படைகளைச் சீர்திருத்தியமைக்கச் சென்றார்.

அடுத்துவந்த குளிர்காலத்தில் அரசரும் அவருடைய ஆலோசனையாளரும் லண்டன்மீது ஒரு முத்திசைப் படையெடுப்பைத்[2] திட்டஞ் செய்தார்கள். ஒரு படை யார்க்ஷைரிலிருந்து[3] லண்டன் நோக்கிப் போவதென்றும், மற்றொன்று டெவனிலிருந்து[4] போவதென்றும், சார்ல்ஸ் தாமே மேற்கு நடுநாடுகளிலிருந்து[5] தம்மை ஆதரிப்பவர்களை நடத்திச் செல்வதென்றும் ஏற்பாடு செய்தார்கள். ஆனால், இந்த மூன்று பிரிவுகளிலும் பார்லமென்ட் கட்சியினர் முறையே ஹல்[6], ப்ளிமத்[7], க்ளாஸ்டர்[8] என்ற முக்கிய நகரங்களைத் தம்வசப் படுத்திக்கொண் டிருந்தபடியால், அரசருடைய மூன்று படைகளும் தயங்கிநின்றன. லண்டன் நகரவாசிகள் க்ளாஸ்டர் நகரம் அரசர் கைவசப்படுவதைத் தடுக்க ஒரு சிறந்த படையைத் திரட்டினார்கள். அப்படை தான் மேற்கொண்ட காரியத்தில் வெற்றி யடைந்து அரசர் படையைப் பின்னடையச் செய்தது. அவ்வாறு செய்துவிட்டு அது லண்டனுக்குத் திரும்பிப் போகையில், அரசர் தம் படையுடன் நியுபேரி[9] (1643) என்னு மிடத்தில் அதை வழிமறித்தார். இப்போரிலும் திட்டமான முடிவொன்றும் ஏற்படவில்லை. அந்தக் காலத்தில் துப்பாக்கிகள் சரியாக இல்லாதபடியால், காலாட் படையினர் குதிரைப் படையினர்க்குப் பயப்படவேண்டியிருந்தது. நியுபெரிக்கு அருகிலிருந்த இடமெல்லாம் வேலிகள்[10] குறுக்கிட்டிருந்தமையால், ரூபர்ட்[11] தம்படையை ஒழுங்காகத் திரட்டி நடத்திக்கொண்டுபோக

1. Headquarters. 2. A threefold attack. 3. Yorkshire. 4. Devon. 5. Western Midlands. 6. Hull. 7. Plymouth. 8. Gloucester. 9. Newbury. 10. Hedges. 11. Rupert.

முடியவில்லை. ஆகவே, லண்டன் படைகள் தங்கள் வழியில் நேர்ந்த எதிர்ப்பை நீக்கிக்கொண்டு முன்னேற முடிந்தது; அவர்கள் முன்னேறுவதைத் தடுக்க அரசர் அசக்தராயிருந்தார்.

§ 151. **பார்லமென்டார் இரண்டு புதிய சாதனங்களைப் பெறுதல்:**—இருந்தபோதிலும், இந்த ஆரம்பச் சண்டைகளில் (1642—43) அரசருக்கே அனுகூலங்கள் அதிக மிருந்தன. வடக்கில் ஹல் துறைமுகம் தவிர மற்றெல்லா விடங்களும், தென்மேற்கில் போர்ட்ஸ்மத் தவிர மற்றெல்லா விடங்களும் அவர்வச மிருந்தன. இந்த நிலைமையில், பார்லமென்ட், பக்கத்து இராச்சியமான ஸ்காட்லண்ட் தங்களுக்குத் துணைசெய்ய முன்வருவதை ஏற்றுக்கொள்ள முடிவு செய்தது. இங்லண்டில் நடந்துகொண்டிருந்த போரை ஸ்காட்லண்ட் மக்கள் மிகுந்த கவலையுடன் கவனித்து வந்தார்கள். அரசர் வெற்றி பெறுவாரானால், அவர் தம்முடைய வெறுக்கத்தக்க எபிஸ்கோபல் மதஸ்தாபனத்தை*[1] ஸ்காட்லண்டில் கட்டாயமாக ஏற்படுத்துவார். அதைத் தடுக்கும் நோக்கத்துடன் ஸ்காட்லண்ட் மக்கள் அரசருக்கு எதிராகப் போர்புரியத் தங்கள் படைகளை அனுப்புவதாகக் கூறினார்கள். அதற்குப் பதிலாகப் பார்லமென்டார் அவற்றின் செலவுகளைத் தாங்கிக்கொண்டு, இங்லண்டில் ஒரு ப்ரெஸ்பிட்டீரியன் மதஸ்தாபனத்தை[2] ஏற்படுத்த வேண்டும். பிம்[3]

*எபிஸ்கோபல் மதஸ்தாபனம் பிஷப்புகளால் ஆளப்படுவது. அமைதியும் மதக்கொள்கைகளில் தாராள மனப்போக்குமுள்ள இந்நாளில் நம்மால் உணரமுடியாத ஒரு தீவிரத்துடன் பிரெஸ்பிட்டீரியர்கள்[4] அதை வெறுத்தார்கள். அவர்களது பழிவாங்கும் மிகக் கொடிய உணர்ச்சிக்கு[5] லாட் அக்காலத்தில் ஆளானார். விசாரணையின்றி இரண்டரைவருஷம் சிறைப்பட்டிருந்த லாட் பார்லமென்டில் பெரும்பான்மையினராயிருந்த[6] ப்ரெஸ்பிட்டீரியன் மதப்பித்தர்களால்[7] அவசரமாக இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி இராஜத்துரோகக் குற்றம் செய்ததாகச் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

1. Episcopal Church. 2. A Presbyterian Church. 3. Pym. 4. Presbyterians. 5. Vindictive, persecuting spirit. 6. The majority. 7. The Presbyterian fanatics.

சிலகாலம் வரையில் இந் நிபந்தனைகளுக்கு இணங்கத் தயங்கினார்; ஆனால், தொடர்ந்து தோற்றுக்கொண்டே போனால் பார்லமென்டார் அரசருக்குச் சரணமடைந்துவிட நேரிடுமே என்ற பயத்தால் ஸ்காட்லண்ட் மக்கள் கோரிய நிபந்தனைகட்கு உடன்பட்டார் (செப்டெம்பர், 1643). இந்தக் கூட்டுறவுக்குப் புனிதக்கூட்டும் ஒப்பந்தமும்[1] என்ற பெயர் வழங்கியது. உழைப்பாலும் கவலையாலும் வலிவிழந்த பிம் சில மாதங்களில் இறந்தார். அடுத்த கோடையில் ஆக்ஸ்பர்டுக் கருகே சால்க்ரோவ் பீல்ட்[2] என்னுமிடத்தில் நடந்த ஒரு சிறிய சண்டையில் ஹாம்டென்[3] என்பவரும் இறந்தார்.

பார்லமென்டாருக்குச் சாதகமாக வேறொரு புதிய பலமும் ஏற்பட்டது. இது ஆலிவர் க்ராம்வெல்[4] (1599—1658) என்பவரால் வந்தது. அவர் ஹன்டிங்டன்ஷைரைச்[5] சேர்ந்த ஒரு பெரிய பூசொத்து படைத்த தூய்மைக்கொள்கையினர்.[6] போர் தொடங்கிய பொழுது அவருக்கு வயது நாற்பத்து மூன்று. அதுவரையில் அவர் எந்த வெடிகுண்டுச் சப்தத்தையும் கேட்டதில்லை; மாஜிஸ்ட்ரேட்[7] அல்லது பார்லமென்ட் அங்கத்தினர் பதவியைத் தவிர மேற்பட்ட அதிகாரமுள்ள எந்தப் பதவியையும் வகித்ததும் இல்லை. ஆனால், தற்போது தாம் ஒரு சிறந்த போர்வீரர் என்பதையும், பெரிய திட்டங்களை வகுக்கும் ஆற்றலுள்ளவர்[8] என்பதையும் அவர் நன்கு புலப்படுத்தினார். எட்ஜ்ஹில் சண்டையில் அவர் ஒரு குதிரை அணிக்குத் தலைமை வகித்தார். அந்த ஒரு சண்டையே இவ்விதமான போர்களில் வெற்றி பெறும் இரகசியத்தை அவருக்கு விளக்கியது. மற்ற விஷயங்களில்போல, சண்டையிலும் உடல் வல்லமையைவிடப் புனித உணர்ச்சியே வெற்றிக்குக் காரணம் என்பதை அவர்

1. The Solemn League and Covenant. 2. Chalgrove Field. 3. Hampden. 4. Oliver Cromwell. 5. Huntingdonshire. 6. A Puritan gentleman-farmer. 7. Magistrate. 8. An organiser.

உணர்ந்தார். லாபத்துக்காகப் பார்லமென்ட் படையில் சேர்ந்த வன்மையற்ற சேவகர்களேயும் குடிகார வேலையாட்களேயும் விட, உண்மையாகக் கடவுளுக்குப் பயந்து தூய்மை மதக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களே அதைக் காப்பதற்குச் சிறந்த வீரத்துடன் போர்புரியக் கூடுமென அவர் உணர்ந்தார். ஆதலால், தம் பிரிவிலிருந்த தூய்மைக் கொள்கையினரான குடியானவர்களைப்[1] போர்வீரர்களாகச் சேர்த்து, அவர்களுக்குத் தம் உற்சாக உணர்ச்சியைப்[2] புகட்டினார். இதையும் தவிர, பார்லமென்டார் படை திரட்டவும் தளவாடங்கள் சேகரிக்கவும் கிழக்குப் பிரிவுகளையெல்லாம் ஒரு தொகுதியாக்கியபொழுது, அம்முயற்சியிலும் அவர் முன்னணியில் நின்றார். இந்தக் கிழக்குச்சங்கப் படையின்[3] தலைமை, ப்ரெஸ்பிடீரியன் கொள்கைகளைக் கொண்ட மான்செஸ்டர் ஏர்லுக்கு[4] அளிக்கப்பட்டது; அவர் கொள்கைகள் எசெக்ஸ் பிரபுவின்[5] கொள்கைகளைப் போன்றவை. ஆயினும், அப்படையில் அதி முக்கியமான குதிரைப்படையின் தலைமை க்ராம்வெல்லுக்குக் கொடுக்கப்பட்டது.

அடுத்த வசந்த காலத்தில், முதல்தரமான போர்வன்மை பெற்றிருந்த ஸ்காட்லண்ட் படை (§ 145) எல்லைப்புறத்தைக் கடந்து வந்தது. வடபாகத்திலிருந்த மன்னர் கட்சியினர்[6] பின்புறமிருந்து துரத்தப்பட்டனர்; சில மாதங்களில் அவர்களுடைய படைகளெல்லாம் யார்க்கில்[7] அடைபட்டுப் போயின. யார்க் நகரை விடுவிக்க ரூபர்ட்[8] தெற்கிலிருந்து ஒரு ஆதரவுப் படையினைக் கொண்டுவந்தார். அதே காலத்தில் கிழக்குப் பிரிவுகளிலிருந்து மான்செஸ்டர்[9] ஸ்காட்லண்ட் படைக்குச் சகாயமாக ஒரு படை திரட்டிக்கொண்டு

1. The Puritan yeomen-farmers. 2. His own enthusiastic spirit. 3. The Army of the Eastern Association. 4. The Earl of Manchester. 5. The Earl of Essex. 6. Royalists. 7. York. 8. Rupert. 9. Manchester.

வந்தார். இவ்விரு படைகளும் மார்ஸ்டன் மூர்[1] (1644) என்னு மிடத்தில் ஒன்றேடொன்று கைகலந்ததால் நிகழ்ந்த சண்டைதான் இப் போரில் மிகப் பெரிய சண்டை. அதில் ஒவ்வொரு கட்சியிலும் சுமார் இருபதினுயிரம்பேர் இருந்தனர். க்ராம்வெல்லின்[2] வீரர்களது போர்த்திறமையாலும், அவர்களை க்ராம்வெல் நடத்திச் சென்ற சாமர்த்தியத்தாலும் பார்லமென்டாருக்கு இச் சண்டையில் பெருமிதமான வெற்றி ஏற்பட்டது.

§ 152. புதுமுறைப் படை[3] :—நாட்டின் வட பகுதியைப் பார்லமென்டின் ஆதிக்கத்துக்குள் கொண்டுவந்த இப்பெரும் வெற்றி ஒன்றைத் தவிர, பொதுவில், 1643-ம் வருஷத்தில் நடந்ததைப் போலவே, 1644-ம் வருஷத்திலும் யுத்தம் அரசருக்குச் சாதகமாகவே நடந்தது. எசெக்ஸ் பிரபுவின்[4] கீழிருந்த படையொன்று கார்ன்வாலிலுள்ள[5] லாஸ்ட்வீத்தியேல்[6] என்னு மிடத்தில் அரசரால் முறியடிக்கப்பட்டது. இந்த வெற்றிக்குப்பின், ஆக்ஸ்பர்டுக்கு[7] அரசர் திரும்பி வரும் வழியில், மான்செஸ்டர் பிரபுவின் தலைமையின்கீழிருந்த படையொன்று அரசரை மடக்க முயன்றும் வெற்றி பெறவில்லை (இரண்டாம் நியுபெரி போர்,[8] 1644).

அப்போர் முயற்சி சிதைந்ததும், போர்க் காரியங்கள் நடைபெறும் விதத்தைப்பற்றி க்ராம்வெல் பார்லமென்டில் வெளிப்படையாகப் பேசினர். எசெக்ஸ், மான்செஸ்டர் போன்ற தள்பதிகள் முழுமனதுடன் வெற்றிபெற முயலவில்லை யென்றும், அரசருடன் சமாதானம் செய்துகொள்ளுவதைப் பற்றியே சதாகாலமும் நினைத்துக்கொண் டிருந்தார்களென்றும் குறை கூறினர் ; 'படையமைப்பை மாற்றி வேறு முறையில் மும்முரமாகப் போர்செய்யாவிட்டால், நாட்டு மக்

1. Marston Moor. 2. Cromwell, 3. The New Model Army. 4. Earl of Essex. 5. Cornwall. 6. Lostwithiel. 7. Oxford. 8. Second Battle of Newbury.

கள் சலிப்புற்று அகௌரவமான சமாதானம் செய்துகொள்ளும்படி உங்களை வற்புறுத்துவார்கள்' என்றார்.

க்ராம்வெல் சொன்னவற்றை அப்படியே பார்லமென்ட் அங்கீகரிக்கவில்லை; ஏனெனில், பார்லமென்ட் அங்கத்தினருள் பெரும்பாலோர் ப்ரெஸ்பிட்டீரியர்கள்[1]. க்ராம்வெல்லும் அவருடைய இரும்புப்படையினரும்*[2] சுயேச்சையாளர்கள்.[3] அவர்கள், நிர்ணயிக்கப்பட்ட எந்த மதஸ்தாபன முறையையேனும் வற்புறுத்துவதை[4] வெறுத்தார்கள்; புனிதமுறை வழிபாடுகளுக்கெல்லாம்[5] பூரண சுயேச்சையை விரும்பினார்கள். ஆயினும், பார்லமென்டார் தங்களுக்கு க்ராம்வெல்லும் அவரது படையினரும் தவிர வேறு பாதுகாப்பு இல்லை என்பதை யுணர்ந்து, இறுதியில் அவரது புதுமுறைப் படை ஏற்பாட்டிற்கு[6] இணங்கினார்கள். அப்படையானது போரையே தங்கள் தொழிலாகக்கொண்ட வீரர்கள் அடங்கியதா யிருக்க வேண்டும்; சரியான ஆயுதங்கள், சம்பளம், பயிற்சி, முஸ்தீப்பு முதலியவை பெற்றதா யிருக்கவேண்டும்; அது சாதாரண நகரப்படைமாதிரி யில்லாமல், எங்கே வேண்டுமாயினும் எக்காலத்திலும் போகக்கூடியதும், சொன்ன வேலை எதையும் செய்யக்கூடியதுமா யிருக்கவேண்டும். அத்தகைய படையைத் திரட்ட மிகவும் அதிகமான பொருட்செல வாகு மாதலால், அரசரால் அவ்விதமான படையைத் திரட்டுவது அசாத்தியமானதாகும். பணந்தான் பார்லமென்டின் முக்கிய பலம். பார்லமென்ட் தன் அதிகாரத்துக்குள்ளிருந்த இடங்களிலெல்லாம் நிலையாக வரிவிதித்து வசூலித்து வந்தது. பார்ல

*மார்ஸ்டன் மூர் சண்டையின்போது ரூபர்ட் இளவரசர், க்ராம்வெல்லைக் குறிப்பிட்டு, "அந்தப் பழைய இரும்புப்படைஞன் அங்கே இருக்கிறானா?" என்று ஒரு சமயம் கேட்டார். அப் பெயரே பிறகு க்ராம்வெல்லின் போர்வீரர்களையும், அவரது மனவெழுச்சியால் தூண்டப் பெற்றவர்களையும்[7] குறிப்பதாயிற்று.

1. Presbyterians, 2. 'Ironsides'. 3. Independents. 4. The enforcement of a fixed Church system. 5. All forms of Puritan worship. 6. His proposal for a New Model Army. 7. Inspired with his spirit.

Do and die and don't ask why.

மென்ட் அதிகாரத்தின்கீழிருந்த பாகங்களில் நாட்டின் மிகச் செழிப்பான பகுதிகள் அடங்கியிருந்தன. புதிய படையின் தலைமை சர் டாமஸ் பேர்பாக்ஸ்[1] என்பவருக்குக் கொடுக்கப்பட்டது. சில மாதங்கள் கழித்து க்ராம்வெல் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டார். கிழக்குச் சங்கத்தின்[2] போர்வீரர்களே இப் புதுமுறைப் படையின் முதுகெலும்பு போல இருந்தபடியால், அவர்களுடைய செல்வாக்கு அதி விரைவில் படை முழுதும் பரவியது.

பார்லமென்ட் தன்னலமிழப்புத் தீர்மானத்தின்படி[3] பழைய படைத்தலைவர் கூட்டத்தைக் கலைத்தது. அத்தீர் மானத்தின்படி பார்லமென்ட் அங்கத்தினர்கள் படையில் தத் தமக்கிருந்த பதவிகளையெல்லாம் விட்டுவிடவேண்டும். அதனால், எசெக்ஸ் பிரபுவும் மான்செஸ்டர் பிரபுவும் தம் பதவிகளை விட்டுவிட வேண்டியவராயினர். க்ராம்வெல்கூடத் தம் பதவியை விடவேண்டியதாயிற்று; ஆனால், சில மாதங்கள் கழித்து அவர் திரும்பவும் படைத்தலைவராக நியமிக்கப்பட்டார்.

§ 153. நேஸ்பி[4] :—புதுமுறைப்படை திரண்ட ஆறு மாதத்துக்குள் அது போரில் வெற்றிபெற்றது. அரசர் லெஸ்டர்[5] என்னு மிடத்தைக் கைப்பற்றிக்கொண்டு மறுபடியும் லண்டனைத் தாக்க முற்பட்டார். புதுமுறைப்படை அப்பொழுது அரைகுறையாகவே போர்ப் பழக்கம் பெற்றிருந்தது; ஆயினும், அது தன்னுடைய உயர்தரமான ஒழுங்கு முறையால் நேஸ்பி (1645) என்னு மிடத்தில் அரசருடைய படையை முறியடித்தது. அரசர் படையின் இடது பிரிவிலிருந்த குதிரைவீரர்கள் க்ராம்வெல்லால் சிதறவடிக்கப்பட்டனர். ரூபர்ட் வலப்புறத்தில் சிறந்த வெற்றி பெற்றார். ஆயினும், க்ராம்வெல் காலாட் படைக்குத் துணைபுரியத் தம் குதி

1. Sir Thomas Fairfax. 2. The Eastern Association. 3. The Self-Denying Ordinance. 4. Naseby. 5. Leicester.

ரைப் படையைத் திரட்டிக் கொண்டுவந்த பொழுது, ரூபர்ட்டின் குதிரைவீரர்கள், திரும்பப் போர்முனைக்கு வர இயலாதவாறு, தோற்றவர்களைத் துரத்திச்சென்ற உற்சாகத்தில் வெகு தூரம் சென்றுவிட்டனர். அவர்கள் திரும்பி வருவதற்குள் அரசர் படுதோல்வி யடைந்தார். அவரது இரகசிய கடிதங்கள்கூட எதிரிகள் கைவசப்பட்டன. அக்கடிதங்களிலிருந்து, சார்ல்ஸ், வெளிநாட்டாரை இங்லண்ட்மீது படையெடுத்து வரத் தூண்டிக்கொண் டிருந்ததாகத் தெரியவந்தது. அவரது சிறந்த போர்த் தலைவர்கள் போர்க்களத்தில் உயிரிழந்ததைவிட, அக்கடிதங்கள் எதிரிகள் கைவசப்பட்டதாலேயே அரசருடைய கட்சி மிக்க அபகீர்த்தி யடைந்தது.

புதுமுறைப்படையை எதிர்த்து நிற்கத் தகுந்த ஒரு படையை மறுபடியும் அரசரால் திரட்ட முடியவில்லை. சாமர்செட்ஷைரிலுள்ள[1] லாங்போர்ட்[2] என்னு மிடத்தில் அரசர் அடைந்த தோல்வியால் (முன்பு மார்ஸ்டன்மூர் சண்டையால் வடபிரிவுகளும், நேஸ்பி சண்டையால் நடுப்பிரிவுகளும் கிடைத்தமைபோல) மேற்குப் பிரிவுகள் பார்லமென்டார் கைக்கு வந்தன (1645). சில மாதங்களாகச் சார்ல்ஸ் ஸ்காட்லண்டில் தமக்கு உதவி கிடைக்குமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அங்கு மான்ட்ரோஸ் ஏர்ல்[3] லோலண்ட் ஒப்பந்தக்காரருடன்[4] எப்பொழுதும் போர்புரிய ஆயத்தமாயிருந்த ஹைலண்ட் மக்களை[5] ஒரு படையாகத் திரட்டி வைத்திருந்தார். கில்சைத்[6] என்னு மிடத்தில் மான்ட்ரோஸ் வெற்றி பெற்றார் (1645); ஆனால், பொறுமையற்ற தம் படையினரைக் கொண்டு இங்லண்ட்மீது படையெடுக்க அவரால் முடியவில்லை. அவர்கள் தங்கள் கொள்ளைப் பொருள்களுடன் தங்களது மலைநாட்டு இல்லங்களுக்குச்[7] செல்லப் போரவல் கொண்டிருந்தனர். இங்லண்டிலிருந்த ஸ்காட்படையின்

1. Somersetshire. 2. Langport. 3. The Earl of Montrose. 4. The Lowland Covenanters. 5. Highlanders. 6. Kilsyth. 7. Mountain homes.

ஒரு பிரிவு மான்ட்ரோஸின் எஞ்சிய வீரர்களை பிலிப்பா[1] என்னு மிடத்தில் சிதறவடித்தது (1645); மான்ட்ரோஸ் கடல்தாண்டி யோடிப்போனார்.

அடுத்த குளிர் காலத்திலும் வசந்த காலத்திலும், அரசர்பக்கமிருந்த நகரங்களையும் கோட்டைகளையும் புது முறைப் படையானது கைப்பற்றிவந்தது. 1646ஆ மே மீ, சண்டையைத் தொடர்ந்து நடத்துவதால் தமக்கு ஒரு பயனும் கிடைக்கப்போவதில்லை யென்பதைக் கண்ட சார்ல்ஸ், நாட்டிங்காம்ஷைரிலுள்ள சௌத்வெல்[2] என்னு மிடத்திற்குச் சென்று, அங்கிருந்த ஸ்காட் படையிடம் சரணடைந்தார்.

## முப்பத்துநான்காம் அத்தியாயம்

# பார்லமென்டும் படையும்

(1646—1649)

§ 154. **ஸ்காட்மக்கள்வசம் அரசர்:**—ஸ்காட்மக்கள் படையின் முகாமுக்கு அரசர் சென்றபொழுதும், இறுதியில் தாம் வெற்றிபெறுவோம் என்ற உறுதியான நம்பிக்கை அவருக்கு இருந்தது. அவருடைய எதிரிகள் அவரைப் போரில் தோற்கடித்துவிட்டனராயினும், அவர்களுக்குள் பல பிளவுகளிருந்தன. ஸ்காட்மக்கள், பார்லமென்ட், புதுமுறைப் படை ஆகியோர் ஒவ்வொருவரும், வேறுபட்ட இலக்ஷியங்களோடு வேலை செய்ததன்றி, ஒருவர்மீதொருவர் பொறாமையுங் கொண்டிருந்தார்கள். அரசர் வெற்றிபெற அவர்களை ஒருவர்மீதொருவராகத் தூண்டிவிட வேண்டியது தான். எப்படியும் பிற்கால அரசியல் அமைப்புக்குத்[3] தமது சம்மதம் கட்டாயம் வேண்டியிருக்கும். நாட்டு மக்கள் ஒருமித்த அன்புடன் நேசித்துவந்த மன்னரசு, மதஸ்தாபனம்[4] என்னும் இரு ஸ்தாபனங்களுக்காகத்தான்[5] தாமும் நின்றார்.

1. Philiphaugh. 2. Southwell. 3. The future constitution.
4. Kingship and the Church. 5. Institutions.

அவ்விரு ஸ்தாபனங்களும் கடவுளால் திட்டப்படுத்தப்பட்டவையானமையால், அவை இறுதியில் வெற்றிபெற்றே தீர வேண்டும்.

இந்த தந்திரத்தின் முதற்படி பகைவர்களுக்குப் போதிய அவகாசங் கொடுத்து அவர்கள் ஒருவரோடொருவர் கலகஞ் செய்துகொள்ள விடுதலே. ஆதலால், ஸ்காட்லண்ட் மக்கள் தங்கள் தேசிய உறுதிப் பத்திரத்தை[1] (§145) அரசர் ஏற்கவேண்டுமென்றபொழுது, அவர் அதைப்பற்றிப் பேசத் தாம் தயாராகவிருப்பதாகச் சொன்னார். ஆங்லிகன் தொழுகை முறைகளை[2] வற்புறுத்துவதில் லாட்[3] எவ்வளவு வைராக்கியங் கொண்டிருந்தாரோ, அதைவிட அதிகமான வைராக்கியத்தைப் பார்லமென்டார் ப்ரெஸ்பிட்டீரியன் தொழுகை முறையை வற்புறுத்துவதில்[4] காட்டினார்கள்*. ப்ரெஸ்பிட்டீரியன் 'மினிஸ்டர்க'ளுக்கு[5] இடம் கொடுக்க ஆயிரக்கணக்கான ஆங்லிகன் 'பார்சன்கள்'[6] வேலையிலிருந்து நீக்கப்பட்டதன்றி, பாப்டிஸ்டுகளையும்[7] இதர நாஸ்திகக் கூட்டத்தினரையும்[8] சாசுவதமாகச் சிறையி லடைப்பதற்காகச் சட்டங்களும் இயற்றப்பட்டன. பார்லமென்டார் அரசர்க்குச் சமர்ப்பித்த நியுகாஸில் திட்டங்களில்†[9] வருங்காலத்தில் படையும் நாட்டு மதமும் அரசருடைய அதிகாரமின்றித் தங்கள் அதிகாரத்தி லிருந்துவரவேண்டுமென்று கேட்டார்கள்.

1646-7-ம் ஆண்டின் குளிர்காலம் முழுதும் இவ்விஷயங்களைப் பற்றிய பேச்சுக்களைச் சார்ல்ஸ் வளரவிட்டுக்கொண்டு

*இங்லண்ட் மதஸ்தாபனத்தை ஆர்வத்துடன் ஆதரித்தவர்கள் எல்லோரும் பார்லமென்டைவிட்டு விலகி அரசருக்காகப் போர்புரிந்தார்கள்.

†ஸ்காட்லண்ட் படைத்தலைவர்கள் அரசரைப் பத்திரமாக வைத்திருக்கும் பொருட்டு நியுகாஸில் என்னு மிடத்துக்குத் தங்கள் படைமுகாமை[10] மாற்றிக்கொண்டார்கள்.

1. National Covenant. 2. Anglicanism. 3. Laud. 4. Enforcing Presbyterianism. 5. Presbyterian ministers. 6. Anglican parsons. 7. Baptists. 8. Godless sectaries. 9. The Newcastle Propositions. 10. Camp.

போனுர். அதனுல் ஸ்காட் மக்கள் பொறுமையை யிழக்க ஆரம்பித்தனர். அவர்கள் போரில் தலையிட்டதன் முக்கிய நோக்கம் நிறைவேறிவிட்டது. அவர்கள் முற்றிலும் வெறுத்த எபிஸ்கோபல் மதஸ்தாபனம்[1] நசுக்கப்பட்டுவிட்டது. அரசரோ ஸ்காட்லண்ட் படையினர் நிபந்தனைப்படி தேசீய உறுதிப் பத்திரத்துக்கு இணங்கி வருபவராகக் காணப்படவில்லை. ஆதலால், அவர்கள் தங்களுக்குச் சேர வேண்டியிருந்த பணத்தைப் பார்லமென்டார் கொடுத்துவிட்டால், அரசரை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டுத் தங்கள் ஊருக்குத் திரும்பிப் போய்விடுவதாகச் சொன்னுர்கள். பார்லமென்ட் சபையார் எந்தவிதமான தடையுமின்றி அதற்குச் சம்மதிக்கவே, பார்லமென்ட் துருப்புக்களின் காவலில் நார்தாம்ப்டன்ஷைரிலுள்ள[2] ஹோல்ம்பி ஹௌஸுக்கு[3] அரசர் கொண்டுவரப்பட்டார்.

§ 155. பார்லமென்டார்வசம் அரசர்:—போரின் முக்கிய பிரச்னைகளைத் திட்டமாகக் கட்டறுத்துக்கொள்ளச் சரியான வழி ஏற்பட்டுவிட்டதாகத் தோன்றியது. புது முறைப்படையை (அயர்லண்டில் நடந்துகொண்டிருந்த கலகத்தை அது அடக்கிய பிறகு) கலைத்துவிட்டுப் பிற்காலத்திய அரசியலைப்பற்றி அரசருடன் ஏற்பாடு செய்துகொண்டால் போதும். ஆனுல், ஒரு சிறு தகராறு ஏற்பட்டது. படையினருடைய சம்பளம் அநேக மாதங்களாகக் கொடுபடாமல் நின்றிருந்தது. அதனுல் படையினர் தங்களுக்குச் சம்பளம் கொடுத்தாலொழியக் கலைந்துபோகவாவது, அயர்லண்டுக்குப் போகவாவது மறுத்தனர். பார்லமென்ட் ப்ரெஸ்பிட்டீரியர் அல்லாதவர்களைக் கொடுமையாக நடத்தியதையும் அவர்கள் வெறுத்தார்கள். நாம் முன்பு அறிந்தபடி (§ 152), அவர்கள் பெரும்பாலும் சுயேச்சைக் கொள்கை

1. The Episcopalian Church. 2. Northamptonshire. 3. Holmby House.

யுடையவர்கள்[1]. அதனுல், ஆங்லிகன் அல்லது ப்ரெஸ்பிட் டீரியன் எனப்பட்ட எந்த ஒரு நிர்ணயிக்கப்பட்ட வழிபாட்டு முறையையேனும்[2] உத்தியோக நிலைமையிலிருந்த எந்த குருமார் கூட்டத்தாராலும்[3] வற்புறுத்தப்படுதலை[4] அவர்கள் வெறுத்தார்கள். இத்தகைய படையினருடன் தாங்கள் விரும்பியபடி நடந்துகொள்ளலாமெனப் பார்லமெண்டார் நினைத்தது விந்தையாகவே யிருக்கிறது. ஆனுல், பார்லமென்ட் அங்கத்தினர்கள், நாட்டில் வேறெந்தப் பார்லமென்டும் பெருத நிலைக்குத் (அதற்காக அவர்கள் எவ்வகையிலும் சிறப்பாகப் பாடுபடாவிடினும்) தாங்கள் வந்துவிட்டதாக நினைத்தார்கள்; ப்ரெஸ்பிட்டீரியன் உணர்ச்சி நிறைந்த லண்டனில் அவர்கள் இருந்தபடியால், நாட்டுமக்கள் அனைவரும் தங்கள் கொள்கைகளை ஆதரிப்பதாக அவர்கள் நினைத்துவிட்டார்கள்.

அவர்கள் விரைவில் தங்கள் பிழையை உணர்ந்தார்கள். தாங்கள் உண்டாக்கிய படை தங்களால் அடக்க முடியாத ஒரு இராக்ஷசனைப்போ லாகிவிட்டது. காலாட் படையினரைவிடச் சிறந்த அனுபவமும் படிப்பும் பயிற்சியும் பெற்றிருந்த குதிரைப்படையினரது யோசனையின்மேல் போர்வீரர்கள் தங்கள்பொருட்டுப் பேசுவதற்குப் பிரதிநிதிகளை[5] நியமித்துப் 'போரில் வெற்றி யடைந்தவர்களுக்கு'[6] நீதி வழங்கவேண்டுமென்று பேர்பாக்ஸ், க்ராம்வெல்[7] ஆகிய தலைவர்களுக்கு ஒரு மனுச் செய்துகொண்டார்கள்.

படை, பார்லமென்ட் இரண்டிலும் முக்கிய பதவி வகித்திருந்தவர் க்ராம்வெல் ஒருவரே. அவர், அவர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்த மிகவும் கஷ்டப்பட்டு முயன்ருர். அவர் மத விஷயங்களில் தாராளமாக விட்டுக்கொடுக்க

1. Independents. 2. Particular form of religion. 3. Professional clergymen. 4. Enforcement. 5. 'Agitators' (agents). 6. The men who had 'won the war.' 7. Fairfax and Cromwell.

வேண்டு மென்னும் கருத்துடையவர்.[1] பார்லமென்டைச் சேர்ந்த ப்ரெஸ்பிட்டீரியன் கட்சியார் மிகக் குறுகலான மனப் பான்மை[2] யுடையவர்களா யிருந்தனர். அவர்கள் எவ்வித திருப்தியான முடிவுக்கும் இடங்கொடுக்கமாட்டார்களென் பதை அவர் விரைவில் உணர ஆரம்பித்தார். பிறகு சில முக்கிய அங்கத்தினர்கள் படையைப் பலாத்காரமாகக் கட்டுப் படுத்த ஒரு இரகசிய சூழ்ச்சியினைச் செய்துகொண்டிருந்த தாக அறிந்தார். அதன்படி, புனிதக் கூட்டையும் ஒப் பந்தத்தையும்[3] வற்புறுத்துவதற்காக ஸ்காட்லண்ட் மக்கள் ஒரு படையை அனுப்பவேண்டியது; போரில் நல்ல சேவை செய்த லண்டன் நகரப் படையை[4] மறுபடியும் திரட்ட வேண்டியது; முன்பு அரசர் கட்சியைச்[5] சேர்ந்திருந்த படையினரைப் போர்த்துணைக்குக் கூப்பிட வேண்டியது; இதற்கெல்லாம் முதல் ஏற்பாடாகப் பார்லமென்டின் நேர் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கும்படி அரசரை லண்டனுக்குக் கொண்டுவர வேண்டியது.

இதை க்ராம்வெல் கண்டுபிடித்தவுடன் அவர் சிறிதும் தயங்கவில்லை. அதன் பிறகு அவர் பார்லமென் டுக்கு எதிராகப் படையினர் பக்கமே சேர்ந்துவிட்டார். அவர் திடுமெனக் கார்னெட் ஜாய்ஸ்[6] என்பவர் தலை மையில் ஒரு குதிரைப்படையை அனுப்பி ஹோல்ம்பி[7] என்னு மிடத்தில் பார்லமென்டாரின் காவலிலிருந்த அரச ரைப் படையினருடைய முக்கிய இடமாகிய நியுமார்க்கெட்[8] என்னு மிடத்துக்குக் கொண்டுவரச்செய்து அந்தச் சூழ்ச்சி யைக் கலைத்தார்.

§ 156. **படையினர்வசம் அரசர்:**—பார்லமென்டாரைத் தாக்கவிடாமல் படையை அடக்கிவைக்க க்ராம்வெல் அதிக

1. A believer in toleration. 2. Narrow-minded. 3. The Solemn League and Covenant. 4. The train bands of the city. 5. Royalists. 6. Cornet Joyce. 7. Holmby. 8. Newmarket.

சிரமப்படவேண்டியதாயிற்று. பலாத்காரத்தால் பெறும் பெரிய உரிமைகளைவிட மனமார்ந்த சம்மதத்தின்மேல் பெறுவன மிகச் சிறந்தனவாம் என்பது அவர் கொள்கை. ஆயினும், தம் படையினரை மிகவும் கடுமையாக அடக்கி வைத்தால், அவர்கள் தம்மையும் மீறி நாட்டில் புரட்சியை[1] உண்டாக்கி உயிர்ச்சேதம் விளைவிக்கலாம் என்பதை அவர் நன்குணர்ந்தார். அவரும் பேர்பாக்ஸும் (இவர் தலைமை யதிகாரியாயினும் க்ராம்வெல் சொல்லுக்குக் கட்டுப்பட்ட வரே) படையை மெதுவாக லண்டனை நோக்கி நடத்திச் சென்றார்கள். பார்லமென்டார் அவர்களை எதிர்க்க நினைத்து நகரப்படையை[2] அழைத்தார்கள்; ஆயினும், வெற்றிவீரர்க ளான சிவப்புச் சட்டைக்காரர்கள்*[3] எட்ஜ்வேர் சாலை[4]வழியே வந்ததைப் பார்த்தபொழுது, பார்லமென்டார் சமயோசித மாக நடந்துகொள்ளுவதே நலம் என்று தீர்மானித்து அவர் களுக்கு வழிவிடவே, படையினர் பட்னி[5] என்னு மிடத்தில் போய்த் தங்கினார்கள். ஆயினும், அப்போது ஒரு பயங்கர மான உண்மை எல்லோருக்கும் புலனாயிற்று: அதாவது, புதுமுறைப்படைதான் நாட்டில் ஆட்சி அதிகாரம் பெற்றதா யிருந்த தென்பது.

இதெல்லாம் அரசருக்கு வேடிக்கையா யிருந்தது; அவர் எதிர்பார்த்தபடியே எல்லாம் நடந்துவந்தன. போக் கிரிகள் கலகமிட்டுக்கொண்டால் நீதிவான்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவார்கள் என்று அவர் நினைத்தார். பார்லமென்டாரைவிடப் படைத்தலைவர்கள் அரசரைக் கருத்துடனும் பெருந்தன்மையுடனும் நடத்தினார்கள். அவரை ஹாம்ப்டன் கோர்ட் அரண்மனையில்[6] வைத்து மரியாதையுடன் நடத்தி அவருக்கு அவரது ஆங்லிகன் குரு

*புதுமுறைப் படையினரே முதன் முதல் சிவப்புச்சட்டை அணிந்த இங்லிஷ் போர்வீரர்கள்.

1. Revolution. 2. The city train-bands. 3. Red-coats. 4. Edgeware Road. 5. Putney. 6. Hampton Court Palace.

வின்[1] உதவியையும் அனுமதித்தார்கள். சமரசத்திற்கான நிபந்தனைகளை அவர்கள் அப்போது கூறலாயினர் (1647). அவர்கள் திட்டம் சமாதான திட்டத்துக்கான தலைப்புக்கள்[2] எனப்பட்டது. அதன்படி, நாட்டுக்கு, பார்லமென்டுக்குக் கட்டுப்பட்ட ஒரு சபையோடு கூடிய நியாயவரம்புக் கடங்கியிருக்கும் அரசாட்சி[3] கோரப்பட்டது. ஆங்லிகன் மதஸ்தாபனம்[4] பழையநிலைக்குக்கொண்டுவரப்படலாம்; ஆனால், எதிர்ப்பு மதத்தின் எல்லா உட்பிரிவுகட்கும்[5] முழுதும் சுயேச்சையான வழிபாட்டு உரிமை[6] கொடுத்தாகவேண்டும். பத்துவருஷத்துக்குப் படை பார்லமென்டின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டிருக்கவேண்டும்; அதன்பின் அது அரசரது அதிகாரத்தின்கீழ் திரும்பிப்போய்விடும். அந்நிலையில் சார்ல்ஸ் இவற்றைவிட அனுகூலமான நிபந்தனைகளை எதிர்பார்த்திருக்க முடியாது; ஆனால், அவர் அவைகளைப்பற்றி விவாதித்துக்கொண்டு காலங்கடத்தியதால் தளபதிகள் பொறுமையிழக்கலாயினர்.

ஒருநாள் காலை அரசர் தப்பியோடிவிட்டதாகவும், வைட் தீவில்[7] ஒளிந்திருப்பதாகவும் செய்தி வந்தது. அந்தத் தீவின் கவர்னர் அரசரைச் சிறையில் வைப்பதா அல்லது விருந்தினராகக் கௌரவிப்பதா என்று தயங்கிக் காரிஸ்புரூக் கல்லரணில்[8] இருக்கச் செய்தார்.

§ 157. **காரிஸ்புரூக் கல்லரணில் அரசர்** :—சார்ல்ஸ் ஸ்காட்லண்ட் மக்களுடன் ஒரு இரகசிய ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். அதன்படி, சார்ல்ஸ் புனிதக்கூட்டுறவையும் ஒப்பந்தத்தையும்[9] ஏற்றுக்கொள்ளுவதானல், புதுமுறைப் படையை[10] அடக்கிப் பழைய அதிகாரத்தை எல்

1. His Anglican chaplain. 2. 'The Heads of the Proposals'. 3. A constitutional monarchy with a council responsible to Parliament. 4. The Anglican Church. 5. All Protestant sects. 6. Complete freedom of worship. 7. Isle of Wight. 8. Carisbrooke castle. 9. The Covenant. 10. The New Model.

லாம் அவருக்கு மீட்டுத் தருவதற்காக ஸ்காட்லண்டிலிருந்து ஒரு படை அவருக்குத் துணை வருவதென்று ஏற்பாடாயிற்று. அவர்கள் புதுமுறைப் படையினர்[1] ஆதரவில் அரசர் இருக்கும்வரையில் தாங்கள் எதையும் செய்வது நலமன்று என்றதனுல்தான், அரசர் வைட் தீவுக்கு ஓடினர்.

அரசருக்கு அனுகூலமான உணர்ச்சி நாளுக்கு நாள் நாடெங்கும் வளர்ந்துகொண்டே வந்தது. சண்டைக் காலத்தில் எந்தக் கட்சியிலும் சேர்ந்து போர்புரியாமலிருந்த சாதாரண மக்கள், இவ்விதமான தகராறுகளால் அலுத்துப்போய், அரசர் மறுபடியும் முழு அதிகாரமும் பெற்ருலொழிய நாட்டில் அமைதியான ஆட்சி ஏற்பட வழியில்லை என்பதை உணர்ந்தார்கள். அதையும் தவிர, சிறைப்பட்ட அரசரிடமும், அவரை ஆதரித்த காவலியர் கனவான்களிடமும்[2], கஷ்ட தசையிலிருந்த ஆங்லிகன் பார்சன்களிடமும்[3] நாட்டில் மிகுந்த அனுதாபம் ஏற்பட்டது. அப்பொழுதேனும் சார்ல்ஸ் மதியூகத்துடனும் நேர்மையுடனும் நடந்துகொண்டிருந்தால் தாம் இழந்தவை எல்லாவற்றையும் திரும்பப் பெற்றிருக்கலாம். ஆனல், தவருன தந்திரமே[4] அவர் அறிந்த நடைமுறையா யிருந்தது. தம்மை ஆதரித்தவர்களை நாடெங்கும் கலகக் கிளர்ச்சிகள் செய்துகொண்டிருக்கும்படி தூண்டிவிட்டு, அவர் ஸ்காட் மக்களுடன் தம்முடைய இரகசியப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே யிருந்தார். முன் சண்டையில் அரசர் பக்கமோ பார்லமெண்ட் பக்கமோ போர்புரிந்தவர்கள் எல்லோரும், பார்லமெண்ட் அரசர் ஆகிய இருவருடைய அதிகாரத்தையும் கவர்ந்துகொண்ட படையை[5] ஒன்று சேர்ந்து அழிக்கத் தூண்டப்பட்டார்கள்.

இந்த நிகழ்ச்சிகளை யறிந்த படைத்தலைவர்கள் மிகுந்த கோபமடைந்தனர். அவர்கள் விண்சர்[6] என்னு மிடத்தில்

1. The New Model Army. 2. Cavalier gentlemen, 3. Anglican parsons. 4. Blundering trickery. 5. The Army. 6. Windsor.

ஒன்றுகூடி என்ன செய்வதென்று ஆலோசிக்கலாயினர். முடிவில், அவர்கள், தங்கள் விரோதிகளின்மீது மறுபடியும் ஒரு தடவை கடவுள் தங்களுக்கு வெற்றியளிப்பாரானால், "மக்கள் இரத்தத்தைச் சிந்திய சார்ல்ஸ் ஸ்டுவர்ட்டை அவர்களின் அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் விரோதமாக அவர் செய்த கொடுஞ் சூழ்ச்சிகளுக்காகப் பதிலிறுக்கச் செய்வ" தென்று தீர்மானித்தார்கள்.

அடுத்து நடந்த இரண்டாம் உள்நாட்டுப் போர்[1] (1648) சில சில்லரைச் சண்டைகளோடு முடிந்தது. புதுமுறைப் படையின் அணிகள் இருந்த இடங்களிலெல்லாம் அவை அரசருக்கு ஆதரவாக வந்தவர்களைத் தாக்கி முறியடித்தன. ப்ரேஸ்டன்[2] என்னு மிடத்தில் அரசரது உதவிக்கு வரவிருந்த ஸ்காட்லண்ட் படையை க்ராம்வெல் முறியடித்ததையே இந்தப் போரில் ஒழுங்காக நடந்த சண்டை எனக் குறிப்பிட முடியும். பிறகு, படைத்தலைவர்கள் காரிஸ் புரூக்[3] கல்லரணிலிருந்து சார்ல்ஸை அழைத்துச்சென்று சோலென்ட்[4]டிலிருந்த ஹர்ஸ்ட் கல்லரணில்[5] வைத்து, அவரை என்ன செய்யலாமென்று யோசிக்கலானார்கள்.

§ 158. **மரண தண்டனைத் தீர்ப்பு**[6]:—ப்ரெஸ்டனில் ஸ்காட்லண்ட் படைக்கு ஏற்பட்ட தோல்விக்குப் பிறகுகூட சார்ல்ஸ் பார்லமென்டாருடன் மற்றொரு சதிசெய்ய முற்பட்டதை யறிந்தபின், படையதிகாரிகளின் தயக்கமெல்லாம் கன உறுதியாக மாறியது. சார்ல்ஸ் ப்ரெஸ்பிட்டீரியன் தொழுகை முறையை[7] ஏற்படுத்த ஸ்காட்லண்ட் மக்களுக்கும் பார்லமென்டுக்கும் செய்துகொடுத்த வாக்குறுதி மனப்பூர்வமான தன்று. அவர் அரசிக்கு இரகசியமாய் எழுதியபடி, தம்மை விடுவித்துக்கொள்ளவே[8] அந்தச் செய்

---

1. The Second Civil War. 2. Preston. 3. Carisbrooke. 4. The Solent. 5. Hurst castle. 6. Judgment of death. 7. Presbyterianism. 8. "In order to my escape."

தார். படைத் தலைவர்கள் அவரை இனி நம்ப முடியாதென்பதை உணர்ந்தார்கள். இரண்டாம் உள்நாட்டுப் போரில்[1], படையின் வெற்றியே, அரசர் இறக்கவேண்டுமென்ற தீர்மானம் கடவுள் சம்மதத்தைப் பெற்றது என்பதற்கு அறிகுறியாகுமென்று க்ராம்வெல் நம்பினர். அவ்வாறு உறுதியாக நம்பிவிட்ட பிறகு அவர் அக்காரியத்தைச் செய்துமுடிக்கும் பொறுப்பிலிருந்து பின்வாங்குபவரல்லர்.

பார்லமென்டுக்கும் மக்களுக்கும் துரோகஞ்செய்த குற்றத்துக்காக அரசரை விசாரிக்கும் உரிமை சாதாரண நீதி மன்றங்களுக்கு இல்லை. ஆதலால், விசேஷமான அதிகாரமுடைய நீதிமன்றமொன்றை ஏற்படுத்தவேண்டியதாயிற்று. அவ்வாறு செய்யப் பார்லமென்டார் மறுத்தபோது, க்ராம்வெல் கர்னல் ப்ரைட்[2] என்பவரை ஒரு பட்டாளத்துடன் பார்லமென்டுக்கு அனுப்பி, நாற்பத்தைந்து அங்கத்தினர்களைச் சிறைசெய்யும்படியும், இன்னும் நூறுபேரைப் பார்லமென்டில் உட்காராமல் தடுத்துவிடும்படியும் செய்தார். ப்ரைடின் கழிப்பு[3](1648) காமன்ஸ் சபையில்[4] படையை ஆதரித்தவர்களைப் பெரும்பான்மையினராகச்[5] செய்தது. அவர்கள் அரசரை விசாரிக்க ஒரு தனி உயர் நீதிமன்றத்தை[6] ஏற்படுத்தச் சட்டமியற்றினர்கள். பிரபுக்கள் சபையார்[7] (அப்போது மான்செஸ்டர், எசெக்ஸ்[8] போன்ற சில ப்ரெஸ்பிட்டீரியன் பிரபுக்களைக்[9] கொண்டிருந்தது) அதை மறுத்துத் தள்ளிய பொழுது, காமன்ஸ் சபையார் மேற்சபையை[10] அறவே எடுத்துவிட்டார்கள்.

பெரும்பான்மையினர் படைத்தலைவர்களும் பார்லமென்ட் அங்கத்தினரும் நியாயவாதிகளும் ஆக நூற்று முப்பத்தைந்துபேரை நீதிபதிகளாகக்கொண்ட ஒரு தனி

1. The Second Civil War. 2. Colonel Pride. 3. Pride's Purge. 4. The House of Commons. 5. A majority. 6. A special High Court of Justice. 7. The House of Lords. 8. Manchester and Essex. 9. Presbyterian peers. 10. The Upper House.

நீதிமன்றம் ஏற்பட்டது. அந்த நீதிபதிகளில் பாதிக்குக் குறைந்தவர்களே .வெஸ்ட்மின்ஸ்டர் ஹாலில்[1] விசாரணை நடந்த காலங்களில் ஆஜரானார்கள். பேர்பாக்ஸ்[2] கூட அதில் கலந்துகொள்ள மறுத்தார். அரசர், அந்நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்டபோது, தம்மை விசாரிக்கும் உரிமை அதற்கில்லை யென்றும், ஆகவே தம்மீது சாட்டப்பட்ட குற்றங்களைத் தாம் விவாதிக்கப்போவதில்லையென்றும் மிகுந்த சாந்தத்துடன் சொன்னார். அரசரெவரும் தம் குடிகளாலேயே விசாரிக்கப்படல் பொருந்தாது என்று அவர் சாதித்தார்; நாட்டின் நீதிமுறைகள் இவ்வாறு நிலைகுலைக் கப்பட்டால், நாட்டின் நல்வாழ்க்கைக்கான நீதி, ஆட்சிமுறை, உரிமைகள் முதலியவெல்லாம் அழிந்துவிடும் என்றார்.

அரசருடைய சலனமற்ற மனவுறுதி அவரது நீதிபதி களிற் சிலரைக் கலக்கியது. மிகுந்த கஷ்டத்துடனே தான் க்ராம்வெல் மரண தண்டனை உத்தரவில்[3] நீதிபதிகளுடைய கையொப்பங்களைப் பெற முடிந்தது. கடைசியில் க்ராம் வெல் தம் மனப்படியே அவற்றைப் பெற்றார். 1649ஆ ஜனவரிமீ 29உ ஒயிட்ஹால் அரண்மனையின்[4] விருந்து மண்டபத்துக்[5] கெதிரில் போடப்பட்ட ஒரு சாரமேடை[6]யின் மேல் அரசர் தலைவாங்கப்பட்டார். அப்போது பெருமித மாகக் கூடியிருந்த கூட்டம் போர்வீரர்களால் தூரத்தில் நிறுத்திவைக்கப்பட் டிருந்தது; ஆயினும், அக் கொடுஞ் செயல் முடிந்தவுடன், அவர்கள் அடக்கிவைத்திருந்த உணர்ச்சியெல்லாம் துக்ககரமான ஒரு அலறலின் வழியாக வெளியாயிற்று.

---

1. Westminster Hall. 2. Fairfax 3. The death warrant. 4. Whitehall Palace. 5. The banqueting hall. 6. Scaffold.

## முப்பத்தைந்தாம் அத்தியாயம்

# பொதுநலத் துரைத்தனம்[1]

## (1649—1653)

§ 159. தூய்மைக்கோள்கையினர் குடியரசு[2]:—அரசரைப் பற்றிய தொல்லை ஒழிந்தபின், கிறிஸ்துவ முறைப்படி ஒரு ஆட்சியை அமைப்பதில் இனி வேறு கஷ்டங்கள் இருக்க மாட்டா வென்று படைத்தலைவர்கள் நினைத்தார்கள். ஆனால், அவர்கள் நினைத்தது தவறு. அவர்கள் நாட்டு மக்களின் பெரும்பான்மையோருடைய விருப்பத்துக்கு விரோதமாக அரசருக்கு மரணதண்டனை விதித்து அதை நிறைவேற்றி வைத்தார்கள். மக்களிற் பலர்—நாட்டிற் பெரும்பான்மையோர்—சார்ல்ஸின் முறையற்ற வரிகளையும் அவருடைய 'ஹைசர்ச்' (உயர்ந்த மதஸ்தாபனக்) கோட்பாடுகளையும்[3] வெறுத்தார்களெனினும், அதனாலேயே அரசருடைய தலையை வாங்கிவிடவேண்டுமென்பதில்லை. நாட்டு மக்களிற் பலர் "அரசரைச் சூழ்ந்து ஒரு தெய்விகம் இருக்கிறது"[4] என்று நினைத்தார்கள். அரசர் கொல்லப்பட்டதால் அவர்கள் பிரம்மையும் பீதியு மடைந்தார்கள். முதல் சார்ல்ஸ் மன்னர் இறந்தாரென்றால், அவருடைய மகன் இரண்டாம் சார்ல்ஸ் அடுத்தபடி மன்னரானார் என்பதுதான் அவர்கள் மனதில் பட்ட உண்மை.

படைத்தலைவர்கள் நாட்டை அப்பொழுது பார்லமென்டே ஆண்டுவந்ததாகக் காட்ட முயன்றார்கள். ஆனால், அப்போது பார்லமென்டின் நிலை யென்ன? பிரபுக்கள் சபை முற்றிலும் எடுபட்டுவிட்டது. காமன்ஸ் சபையில் பாதிப் பேர், உள்நாட்டுப் போர்களின்போது அரசர் பக்கம் சேர்ந்து போராடியதால், அங்கத்தினர் பதவியை இழந்துவிட்டனர்.

---

1. The Commonwealth. 2. A Puritan Republic. 3. High Church ideas. 4. 'A divinity that doth hedge the King.'

மீதியிருந்தவர்களில் பாதிப்பேர் ப்ரைடினுடைய கழிப்பினால்[1] வெளியேற்றப்பட்டார்கள். 1640-ல், தங்கள் சம்மதமின்றித் தங்களைக் கலைக்கக்கூடாதென்று ஏகமனதாகத் தீர்மானித்த ஐந்நூறு பேர்களில் பெரும்பாலோர், இப்போது வெஸ்ட்மின்ஸ்டரில் உட்கார அனுமதிக்கப்பட்டால், இனி தங்கள் கூட்டத்தைக் கலைத்துவிடலாமென்றே ஒப்புக்கொண்டிருப்பார்கள். படைத்தலைவர்களால் அங்குக் கூடிப்பேச அனுமதிக்கப்பட்டிருந்த சிறுபான்மை அங்கத்தினர் "ரம்ப்"[2] என்ற பரிகாசப் பெயரிட் டழைக்கப்பட்டார்கள். ஆனால், நாட்டில் அவர்கள் உட்பட எல்லோரும் அவர்களுடைய அதிகாரம் புதுமாதிரிப் படையின் கத்திகளையும் துப்பாக்கிகளையுமே ஆதரவாகக்கொண்டிருந்தது என்பதை உணர்ந்தார்கள்.

துரைத்தனத்தின் அன்றாட அலுவல்களை நடத்த அவர்கள் ஒரு இராஜாங்க சபை[3]யைத் தேர்ந்தெடுத்தார்கள். அதன் நாற்பத்தோரு அங்கத்தினர்களுள் பெரும்பாலோர் படைத்தலைவர்களாகவோ 'ரம்ப்' பார்லிமென்டின் அங்கத்தினர்களாகவோ இருந்தார்கள். இது ஒரு ஒழுங்கான அரசியல் அமைப்பு அல்லவென்பது தளபதிகளுக்குத் தெரியும். ஆனாலும், அத் தருணத்தில் பார்லிமென்டுக்குப் பொதுத் தேர்தல்[4] நடத்தினால், அதில் அரசர் கட்சியாரே[5] பெரும்பான்மையினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவார்களாதலால், அவர்கள் அந்த அமைப்பைத் தற்காலிக சிகிச்சையாக ஏற்றுக்கொண்டார்கள். அமைதியான காலத்தில்தான், அவர்கள் தங்கள் சீரிய இலக்ஷியமாகக்கொண்டிருந்த குடியரசு அமைப்பை[6] ஏற்படுத்த முடியும்.

§ 160. **அயர்லண்டில் க்ராம்வெல்**:—புதிய துரைத்தனம் மிக்க அவசரமாகக் கவனிக்கவேண்டியிருந்த வேலை

1. Pride's Purge. 2. Rump. 3. Council of State. 4. A General Election. 5. Royalists. 6. The 'ideal' Republic.

அயர்லண்டில் அமைதியை நிலைநிறுத்துவதாம். 1641ஆம் முதல் அந்நாட்டில் குழப்பமுங் கொலையுமா யிருந்தது (§ 148). ஆனால், அரசர் தலை வாங்கப்பட்டதும், நாட்டிலிருந்த விரோதக் கட்சியினர் இருவரும்—காதொலிக் குடியானவர்களும் ஆங்லிகன் மிராசுதார்களும்—லண்டனில் ஆட்சி புரிந்த மன்கொலைத் துரைத்தனத்திற்[1] கெதிராக ஒன்று சேர்ந்தனர். சிறியதொரு 'உருண்டைத்தலையினர்'[2] படையானது எதிரிகளால் சூழப்பட்டு டப்ளினை[3] வீராவேசத்துடன் பாதுகாத்துக்கொண்டிருந்தது; ஆனால், நாட்டின் மற்ற பகுதிகள் எல்லாம் ஆர்மாண்ட் ஏர்லின்[4] வசமிருந்தன. டப்ளினும் அவர் கைவசமாகிவிட்டால், அயர்லண்ட் முழுதும் இங்லண்ட் தொடர்பற்றுச் சுயேச்சை நாடாகி இங்லண்டின் புதிய குடியரசைத்[5] தாக்குவதற்குரிய இடமாகும்.

அந்த நிலையை மாற்றுவதற்குப் புதுமுறைப் படையினரில் இருபத்தையாயிரம் பேர்களுடன் க்ராம்வெல் அனுப்பப்பட்டார். அவர் அயர்லண்டை அடைந்த சில வாரங்களுள் ஆர்மாண்ட் பிரபுவின் முக்கிய அரண்களுள் ஒன்றாகிய ட்ரொகிடாவைத்[6] தாக்கினார். வெற்றி பெற்றவர்கள் எவரையும் சிறைப்படுத்தவில்லை. கோட்டையைப் பாதுகாத்தவர்கள் (நூற்றுக்கணக்கான காதொலிக் குருமார்கள் உட்பட) எல்லோரும் ஒருவர் தவறாமல் கொலைசெய்யப்பட்டனர். சில வாரங்கள் கழித்து, வெக்ஸ்பர்டிலும்[7] அம்மாதிரியே கொலை நடந்தது. இந்த இரக்கமற்ற கொலைகள் இங்லிஷ் எதிர்ப்புமதக் கொள்கையினரின் ஆளுகையை[8] அயர்லண்ட் மக்கள் முன்னிலும் பன்மடங்கு அருவருப்புடன் வெறுக்கும்படி செய்தன. அயர்

1. Regicide government. 2. 'Roundheads.' 3. Dublin. 4. The Earl of Ormonde. 5. The New Republic. 6. Drogheda. 7. Wexford. 8. English Protestant rule.

லண்ட் குடியானவர்களிடையே, பல நூற்றண்டுகளுக்கு, 'உன்னைக் க்ராம்வெல் கொண்டுபோக!'[1] என்பது ஒரு சாதாரண சாப வழக்கா யிருந்தது. க்ராம்வெல்லுக்குத் தக்க சமாதானம், தாம் பின்னல் இரக்கத்துடன் இருப்பதற்கு முன்னல் கொடியவராக இருந்தாகவேண்டு மென்பதே. தம் முடைய அலுவல்களை அதி விரைவில் செய்து முடிப்பதே மிகவும் இரக்கமான வழியாம். க்ராம்வெல்லின் மதக்கொள் கைகளும் அவரது 'இரும்புப் படைஞ'ரின்[2] மதக் கொள்கை களும், தாங்கள் காதொலிக்கர்களை விஷப்பூச்சிகளென மதித்து அவர்களை அழிப்பது கொண்டாடத்தக்க ஒரு நற் செயலெனக் கருதும்படி செய்தன. க்ராம்வெல் கோரிய எண் ணம் நிறைவேறியது. அயர்லண்ட் காதொலிக்கர்களுக்கும் எதிர்ப்புமத வாதிகளுக்கும்[3] ஏற்பட்ட தற்காலிக ஒற்றுமை முறிந்தது. எதிர்ப்புமத வாதிகள் தங்கள் கொள்கைகளை மேன்மைப்படுத்திய வீரன்பக்கம் சேர்ந்துகொண்டார்கள். ஆறு மாதங்களுள் அயர்லண்டின் கிழக்கு வடக்குப் பிரிவு களில் க்ராம்வெல் தம் நிலைமையை வலுப்படுத்திக்கொண் டார். பிறகு, மற்ற பாகங்களை வெல்லும் பொறுப்பைக் கீழ் அதிகாரிகளிடம் விட்டுவிட்டு க்ராம்வெல் இங்லண்டின் பொது நலத் துரைத்தனத்தார்[4] அழைப்பின்மேல் இங்லண்டுக்குத் திரும்பினர்.

§ 161. **க்ராம்வெல்லும் ஸ்காட் மக்களும்** :—ஸ்காட் லண்டில் ஏற்பட்ட ஒரு அபாயகரமான நிலைமையே க்ராம்வெல்லைத் திரும்பி வரும்படி அழைத்ததன் காரணம். இதைத் தெளிவுற அறிந்துகொள்ள, ஸ்காட்லண்ட் துரைத்தனம் இங்லண்ட் துரைத்தனத்துக்கு உட்படாத ஒரு தனி அமைப்பு என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். 1603ஆ முதல் இரண்டு நாடுகளும்

---

1. "The curse of Crummle on ye!" 2. Ironsides. 3. Irish Catholics and Protestants. 4. The Commonwealth Government.

ஒரே அரசருடைய ஆளுகையில் இருந்து வந்தன. ஆயினும், இப்போது, இங்லண்டில் ஒரு குடியரசு ஏற்பட்டதால், அந்தத் தொடர்பும் அற்றுப்போய்விட்டது. அரசரைக் கொன்றதுடன், தங்களோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தையும் மதியாமல் இருந்ததற்காக, இங்லிஷ் படையினர்மேல் ஸ்காட் மக்கள் அதிக ஆத்திரமடைந்திருந்தார்கள்.* அவர்கள், சார்ல்ஸ் இளவரசர் ப்ரெஸ்பிட்டீரியராவதாயிருந்தால், ஸ்காட்லண்டை ஆள வரலாம் என்று அழைத்தார்கள். சார்ல்ஸ் காதொலிக் தாயாலும் ஹைசர்ச்[1] தந்தையாலும் வளர்க்கப்பட்டுச் சுக வாழ்க்கையை விரும்பியிருந்த ஓர் இளைஞர். உறுதியான கட்டுப்பாடுகளுடன் கூடிய வாழ்க்கை முறைக் கொள்கைகளையும் பழக்கங்களையும் கொண்ட ப்ரெஸ்பிட்டீரியன் மதம்[2] அவருக்குப் பிடிக்கவில்லை. ஆயினும், அவர் சிம்மாசனத்தைத் திரும்பப் பெற விரும்பினார்; அதற்காகத் தம்மைப் போன்ற வாழ்க்கை நோக்கமுடையவர்களுடன் மட்டுமே தம் விவகாரங்களை நடத்திக்கொள்ள அவர் எண்ணினார். ஆதலால், மாண்ட்ரோஸ் பிரபு[3] பின்னுமொரு முறை ஹைலண்ட் மக்க[4]ளிடையே இராஜ விசுவாச உணர்ச்சியை மூட்டிவிடும் வரையில், இளவரசர் ஸ்காட் மக்களுடைய அழைப்பை ஏற்காது ஒத்திவைத்துக்கொண்டு வந்தார். ஆனால், மாண்ட்ரோஸ் பிரபுவால் ஒன்றையும் சாதிக்க முடியவில்லை. ஒப்பந்தக்காரர்கள்[5] அவர் சண்டை தொடங்கு முன்பே அவரைத் துரத்திப் பிடித்துத் தலைவாங்கிவிட்டார்கள்.

*புதுமுறைப்படைத் தளபதிகளின் அதிகாரத்துக்கு உட்பட்டிருந்த பொதுநலக் குடியரசு மத விஷயத்தில் சுயேச்சைக் கொள்கையைப்[6] பின்பற்றியது. இங்லண்டில் கட்டுப்பாடான ப்ரெஸ்பிட்டீரியன் மதத்திட்டத்தை[7] ஏற்படுத்த 1643-ல் நீண்ட பார்லமெண்ட்[8] ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தை அது ரத்து செய்தது (§ 151).

1. High Church. 2. Presbyterian. 3. Montrose. 4. Highlanders. 5. The Covenanters. 6, 'Independent' in religion. 7. A rigid Presbyterian Church system. 8. Long Parliament

ஆதலால், இளவரசர் ஒப்பந்தத்துக்கு[1] இணங்கவேண்டியதாயிற்று. 1650ஆம் ஜூன்மீ அவர் லீத்[2] என்னுமிடத்தில் வந்திறங்கினர். இரண்டாம் சார்ல்ஸை ஒரு உண்மையான ப்ரெஸ்பிட்டீரியராக்கலாமென்று ஸ்காட் 'மினிஸ்டர்'கள்[3] நினைத்தது நமக்கு நகைப்பை உண்டாக்கலாம். ஆனால், அந்நாளில் சார்ல்ஸ் இளவரசர் வயதும் குணமும் முதிராத ஒரு இளைஞராகவே இருந்தார்.

ஸ்காட்லண்ட் 'மினிஸ்டர்கள்' தங்கள் நாட்டில் மட்டும் ப்ரெஸ்பிட்டீரியன் அரசாட்சியை ஏற்படுத்துவதோடு திருப்தியடைவதாயில்லை. இங்லண்டிலும் அம்மாதிரி அரசாட்சியை ஏற்படுத்தத் தீர்மானித்து, அவர்கள் தங்கள் படைத் தோழர்களாயிருந்த புதுமுறைப் படையினர்மேல் மற்றொருமுறை படையெடுத்துச் செல்லவும் திட்டம் வகுத்தார்கள். ஆனால், பொதுநலக் குடியரசார், அதையறிந்து, அத் திட்டத்தை முளையிலேயே கிள்ளி யெறியத் தீர்மானித்து, ஸ்காட்லண்டைத் தாக்கப் படைதிரட்டினர். அப்படைக்குத் தலைமை வகிக்கவேண்டுமென்றே அயர்லண்டிலிருந்து க்ராம்வெல் அழைக்கப்பட்டார்.

கப்பற்படை மூலம் உணவும் தளவாடங்களும் பெறுவதற்கு வசதியாகக் கீழ்க்கடற்கரை வழியாக க்ராம்வெல் படையை நடத்திச்சென்றார். எடின்பரோ[4]வுக்கருகில் ஸ்காட்லண்ட் படையினர் பூமியில் கிடங்குகள் தோண்டிக்கொண்டு மறைந்திருந்தனர். அவர்கள் மிகவும் வன்மையான நிலையில் இருந்தமையால், அவர்களைத் தாக்குவது க்ராம்வெல்லின் படையினருக்கு அரிதாயிற்று. சில நாட்களில் அவருடைய படையினர் பசியால் வாடவேண்டிய நிலைமை வரவே, கப்பற்படையுடன் தொடர்புகொள்ள, அவர் தம் சேனையுடன் டன்பார்[5] என்னுமிடத்துக்குத் திரும்

1. The Covenant. 2. Leith. 3. The Scottish Ministers. 4. Edinburgh. 5. Dunbar.

பிப் போகவேண்டியதாயிற்று. ஸ்காட்லண்ட் படையினர் லாமர்மூர் குன்றுகள்[1] ஓரமாக அவர்களைத் தொடர்ந்து சென்றூர்கள். இங்லண்ட் படை கடலுக்கும் ஸ்காட்லண்ட் படைக்கு மிடையில் அகப்பட்டுக்கொண்டது. மினிஸ்டர்களால் தூண்டப்பட்டு ஸ்காட்லண்ட் படையினர் அவசரமாக 'நாஸ்திகப்' படையினரைத்[2] தாக்க வந்தனர். க்ராம்வெல்லின் குதிரைப் படையினர் அவர்களைச் சிதறவடித்தனர். இதுவே டன்பார் சண்டை[3] எனப்படும் (1650ஆம் செப்டெம்பர்மீ).

இந்தத் தோல்வி மினிஸ்டர்களுடைய அதிகாரத்தைப் பெரும்பாலும் குறைத்தது. சார்ல்ஸ் தம்முடைய ப்ரெஸ்பிட்டீரியன் காப்பாளர்கள் செய்யத்தவறியதைச் செய்துமுடிக்கத் தமது காவலியர் நண்பர்களுக்கு[4] ஒரு சந்தர்ப்ப மளிக்கத் துணிந்தார். இங்லண்டில், சரியான அரசரை ஆதரிக்க இங்லிஷ் காவலியர்கள் சேர்வார்கள் என்ற நம்பிக்கையுடன், சார்ல்ஸ் தாமே ஒரு படையுடன் அந்நாட்டின்மேல் படையெடுத்துவந்தார். ஆயினும், அவர் ஏமாற்ற மடைந்தார். பொதுநலக் குடியரசின் ஆட்சியை விரும்பாத இங்லிஷ் மக்கள் ஸ்காட் மக்களை முன்னினும் அதிகமாக வெறுத்தனர். மேலும், அவர்கள் 'இரும்புப்படையி'னருக்குப்[5] பெரிதும் அஞ்சினூர்கள். ஸ்காட் மக்களை க்ராம்வெல் வேகமாக வந்து தாக்கி ஊர்ஸ்டர்[6] என்னு மிடத்தில் சிதறவடித்தார் (செப்டெம்பர், 1651). இந்தச் சண்டையை அவர் ஒரு சமயம் "கடவுளின் உன்னதக் கருணை"[7] என்று குறிப்பிட்டுப் பேசினூர். சார்ல்ஸ் இளவரசர், மாறுவேடத்துடன் கடற்கரைக்கு ஓடி, அநேக துணிச்சலான சம்பவங்களுக்குப் பின், யூரோப் கண்டத்துக்குத் தப்பித்துக்கொண்டு போய்விட்டார்.

§ 162. முதல் டச்சுப்போர்[8] :—முதல் சார்ல்ஸுக்குச் சார்பாக எந்த யூரோப்பிய அரசும் தலையிடாதிருந்தமை

1. Lammermuir Hills. 2. 'Godless Sectaries.' 3. Battle of Dunbar. 4. His Cavalier friends. 5. 'Ironsides.' 6. Worcester. 7. God's Crowning Mercy'. 8. The First Dutch War.

நமக்குப் பெரும் ஆச்சரியத்தை விளைவிக்கலாம். ஆனால், 1648 வரை யில் அவர்கள் "முப்பதாண்டுப் போ"ரில் ஈடுபட்டிருந்தார்கள். அந்த வருஷத்தில் வெஸ்ட்பேலியா சமாதானத்தினால்[1] அப்போர் முடிவுக்கு வந்தபோதிலும், இங்லிஷ் குடியரசின் கப்பற்படையும் நிலப்படையும் மிக்க வலிமையுடையவையா யிருந்தபடியால், வெளியார் படையெடுப்பு வெற்றிபெறக்கூடியதா யில்லை. ஆயினும், பொதுநலக் குடியரசார்[2] ஈடுபட்டது ஒரேஒரு போரில் மட்டுமே: அதுவும், மற்றொரு ப்யூரிட்டன் குடியரசு நாடான[3] நெதெர்லண்ட்ஸுடன்.[4] இங்லிஷ்காரரும் டச்சுக்காரரும் வியாபாரத்திலும் கப்பலோட்டுவதிலும்[5] நெடுங்காலமாகப் போட்டிபோட்டுக்கொண்டிருந்தார்கள். இங்லிஷ் துறை முகங்களுக்கு வரும் சாமான்களை இங்லிஷ் கப்பல்களாவது அல்லது சாமான்களை அனுப்பும் நாட்டின் கப்பல்களாவது கொண்டுவரவேண்டு மென்ற நிபந்தனையையுடைய கப்பல் ஓட்டல் சட்டம்[6] ஒன்றை (1653) 'ரம்ப்' பார்லமெண்ட்[7] நிறைவேற்றியதனால், அந்தப் போட்டியானது பகையுணர்ச்சி யாக முதிர்ந்தது. ஏனெனில், அதுவரையில் யூரோப்பின் மற்ற பகுதிகளுக்காகச் சரக்குகளைத் தங்கள் கப்பல்களில் டச்சுக்காரர்களே ஏற்றிக்கொண்டுபோயிருந்தார்கள். டெம்ஸ் கடல்வாயில்[8] தற்செயலாக ஏற்பட்ட ஒரு சச்சரவு காரணமாக இங்லிஷ் சானெலிலும்[9] வடகடலிலும்[10] அடுத்த இரண்டு ஆண்டுகளில் எட்டுப் பெரிய சண்டைகள் நடந்தன. டச்சுக் கப்பற்படை புகழ்பெற்ற வான் ட்ராம்ப்[11] என்பவரா லும், இங்லிஷ் கப்பற்படை ப்ளேக்[12] என்பவராலும் (கு.112) நடத்தப்பட்டன. அச்சண்டைகளில் வெற்றி தோல்விகள்

1. Peace of Westphalia. 2. The Commonwealth. 3. Another Puritan Republic. 4. The Netherlands. 5. Commerce and shipping. 6. Navigation Act. 7. The Rump. 8. The Thames Estuary. 9. The English Channel. 10. The North sea. 11. Van Tromp. 12. Blake.

சமமாகவே இருந்தன. ஆனால், இங்லண்டின் இயற்கை யமைப்பால் அதற்குச் சில அரிய சாதனங்கள் ஏற்பட்டிருந் தன. டச்சுக்காரர்கள் தங்கள் நாட்டில் நிலைத்திருப்பதற்கே பெருங்கடலை யடையும் வழியொன்று அவர்களுக்கு வேண்டி யிருந்தது. ஆனால், அவர்களுடைய கப்பல்கள் அதையடைய இங்லண்ட் கப்பற்படை குழுமியிருந்த முக்கிய இடங்களுக்கு[1] அருகாமையில் போயாகவேண்டி யிருந்தது. ஆகவே, அவர்கள் 1654 ஆம் இங்லண்டுக்குச் சாதகமான ஒரு உடன் படிக்கை செய்துகொள்ள வேண்டியதாயிற்று.

இதற் கிடையில், இங்லண்ட் குடியரசின் அமைப்பு[2] ஒரு பெரிய மாறுதலை யடைந்தது.

§ 163. **"அந்த உபயோகமற்ற பொருளை எடுத்தெறியுங் கள்!"**—உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பகைவர்கள் இருந்தவரையில், 'ரம்ப்' பார்லமென்டைப்[3] படையினர்[4] ஆதரித்து வந்தனர். ஆனால், நெருக்கடியான அபாயம் நீங்கிய பிறகு, போர்வீரர்கள் ஒரு பொதுத்தேர்தல்[5] நடத்த வேண்டுமென்று கேட்டார்கள். பொதுநலக் குடியரசின் துரைத்தனத்தை நடத்தியவர்கள் நல்லவர்களே; திறமை யும் பெற்றிருந்தவர்களே. ஆயினும், ஒரு புதிய பார்லமென் டைத் தேர்ந்தெடுக்கும் தருணம் நாட்டு மக்களுக்குக் கிடைக்குமானால், தாங்கள் எல்லோரும் பதவியை இழக்க நேரிடுமென்று அவர்கள் அறிந்திருந்தார்கள். க்ராம்வெல் படையின் தலைமை வகித்துப் பெற்ற வெற்றிகள், அவரு டைய குணமேம்பாடு, தெளிந்த அறிவு முதலியன அவரை இராஜாங்க சபையில்[6] செல்வாக்கு நிறைந்த அங்கத்தின ராகச் செய்திருந்தபடியால், அவருடைய அபிப்பிராயங்களை யொட்டியே எதுவும் நடைபெறவேண்டி யிருந்தது. முன்

1. The bases of the English Navy. 2. The form of the English Republic. 3. The 'Rump' Parliament. 4. The Army. 5. A general election. 6. The Council of State.

போலவே அவர் தம்மாலியன்றவரையில் பார்லமென்டும் படையும் ஒத்துழைக்கும்படி செய்ய முயன்றார். அந்த நெருக்கடியான நிலையில் ஒரு பொதுத்தேர்தலால் விளையக் கூடிய ஆபத்துக்களை எல்லாம் அவர் நன்குணர்ந்திருந்தார். ஆயினும், அதிக பேராசை கொண்டிருந்த 'ரம்ப்' பார்ல மென்டின் அங்கத்தினர் பலரை அவர் வெறுத்தார். அவர் கள், பார்லமென்டில் காலியாகும் இடங்களுக்கு அங்கத் தினர்களைத் தாங்களே நியமித்துக்கொள்வதென்ற ஒரு சட்டத்தைச் செய்து தங்கள் அதிகாரத்தை என்றும் நிலை யாக்கிக்கொள்ள முயன்றபொழுது, க்ராம்வெல்லின் பொறுமை முறிந்தது. அவர், உடனே சில போர்வீரர்க ளுடன் வெஸ்ட்மின்ஸ்டருக்குச் சென்று, அங்கத்தினர்களை விரட்டியோட்டிவிட்டார். வெஸ்ட்மின்ஸ்டர் • ஹாலில்[1] கோபாவேசத்துடன் அங்குமிங்கும் நடந்துகொண்டே, "நீங்கள் பார்லமென்டே அல்ல. உங்களுடைய கூட் டத்தை நான் முடித்துவிடுகிறேன்" என்று கத்தினர். பிறகு அங்கிருந்த கதாயுதத்தைப்[2] பார்த்து, "இந்த உபயோக மற்ற பொருளை நாம் என்ன செய்யலாம்?" எனச் சிந் தித்து, ஒரு போர்வீரனை நோக்கி, "அதை எடுத்து எறி!" என்றார். அக் கதாயுதம் பார்லமென்ட் அதிகாரத்தின் சின்னம்[3]. அதை எடுத்தெறிந்ததால் அந்த அதிகாரம் ஒரு சிறிதுமின்றி முடிவடைந்ததாகும்.

படையின் உத்தியோகஸ்தர்கள் நாட்டை ஆள மற் றொரு துரைத்தன அமைப்பைத் தேடவேண்டியதாயிற்று. சிறிது விவாதத்துக்குப்பின் நாட்டின் ஒவ்வொரு பிரிவிலும் சுயேச்சையான மதக்கோட்பாடுகளை யுடையவர்களால் தேர்ந் தெடுக்கப்பெற்ற தெய்வபக்தி நிறைந்தவர்களைக் கொண்டு ஒரு பொதுக்கூட்டம் கூட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டது. அதன் அங்கத்தினர் ஜாபிதா பெயர்களின் முதல் அக்ஷ

1. Westminster Hall. 2. The Mace. 3. Emblem.

ரத்தை யொட்டி வரிசைப்படுத்தப்பட்டபோது, முதலில் "பேர்போன்ஸ்" என்பவருடைய பெயர் வந்தது. ஆகவே, அந்தப் பார்லமென்ட் பேர்போன்ஸ் பார்லமேன்ட்[1] என அழைக்கப்பட்டது. இந்த ப்யூரிட்டன் பிரதிநிதிகள்[2] நல்லெண்ணம் படைத்தவர்களே; ஆயினும், அவர்களுக்கு அரசியல் அனுபவம் இல்லாததால், அவர்கள் துரைத்தன விவகாரங்களைக் குழப்பிக் கெடுத்தார்கள். இந்தக் கூட்டத்தைக் கலைக்காவிடில் நாட்டின் குடியரசு சீரழியுமென்று க்ராம்வெல் அறிந்துகொண்டார். ஆதலால், அச்சபையில் தம் நண்பர்களா யிருந்தவர்களை யெல்லாம் ஒருநாள் மற்றவர்கள் வருமுன்னேயே வரச்சொல்லி, மற்றவர்கள் வருவதற்குள், அந்தச் சபையைக் கலைத்துவிட்டதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தார்.

படைச்சபையினர்[3] துரைத்தன அமைப்புப் பத்திரம்[4] என்றொரு திட்டத்தை வகுத்தனர். அதன்படி முன்பு அரசர் செலுத்திவந்த அதிகாரங்களெல்லாம் ஒரு காப்பாளர் பிரபுவினிடம்[5] ஒப்படைக்கப்பட வேண்டியதென்றும், நாட்டில் உள்ள செல்வவந்தர்களுடைய வாக்குகளால் ஒரு புதிய காமன்ஸ் சபையைத் தேர்ந்தெடுப்பதென்றும் ஏற்பாடாயிற்று. 1653ஆு டிசம்பர்மீ படையினரின் ஆட்சி முடிவடைந்ததைக் குறிப்பிட, இதற்குச் சிறந்த தகுதியுள்ள ஆலிவர் க்ராம்வெல்[6], சாதாரண கறுப்பு உடையுடன், காப்பாளர் பிரபுவாகப் பிரகடனம் செய்யப்பட்டார்[7]. ஆனால், உண்மையிலேயே படையினரின் ஆட்சி முடிவடைந்ததா?

---

1. Barebones Parliament. 2, Representatives of Puritanism. 3. The Army Council. 4. The Instrument of Government. 5. Lord Protector. 6. Oliver Cromwell. 7. Proclaimed.

## முப்பத்தாறாம் அத்தியாயம்

# காப்பாளராட்சி[1]

## (1653—1659)

§ 164. **சார்லஸ் ஆட்சியைவிடக் கட்டற்றது[2]:**—'ரம்ப்' பார்லமென்ட் எப்படித் தன் அதிகாரத்தை வகிக்கப் புது முறைப் படையினருடைய ஆதரவை நாடியிருந்ததோ, அப்படியே காப்பாளர் பிரபுவும் அப்படையின் ஆதரவை நாட வேண்டி யிருந்தது. பார்லமென்டைக் கூட்டினால் தொந்தரவுகள் ஏற்படுமென்று எதிர்பார்த்து, அவர் தமது முதல் பார்லமென்டைச் சிறிதுகாலம் கூட்டாமலேயே இருந்தார்; பிற்கால நிகழ்ச்சிகளால் அவர் அஞ்சியது மெய்யாயிற்று. அப் பார்லமென்ட் கூடியவுடன் புது அரசியல் அமைப்பைக்[3] குறைகூற ஆரம்பித்தது. பொதுநலக் குடியரசினை ஆதரித்த ப்யூரிட்டன்[4] அங்கத்தினர்களுங்கூட, படையதிகாரிகளடங்கிய ஒரு சிறு கட்சியால் நாட்டின்மீது ஒரு துரைத்தன அமைப்பு சுமத்தப்பட்டதுபற்றி வெறுப்படைந்திருந்தார்கள். அப் புதுப் பார்லமென்டை ஏற்படுத்திய துரைத்தன அமைப்புப் பத்திரத்தை[5] மாற்ற அதற்கு அதிகாரம் இல்லையென்று க்ராம்வெல் சொன்னார். ஆனால், மக்கள் வாக்குகளைப்[6] பெற்றுவந்த தங்களுக்கு அவரதிகாரத்துக்கு மேலான அதிகாரம் உண்டென்று பார்லமென்ட் அங்கத்தினர்கள் சொன்னார்கள். துரைத்தனத்தின்மேல் பார்லமென்டுக்கிருந்த அதிகாரத்தை நிலை நிறுத்தவே உள்நாட்டுப் போர் நடந்தது. ஆனால், க்ராம்வெல்லோ துரைத்தனத் தலைவரின்[7] அதிகாரத்தைப் பார்லமென்ட்மீது நிலை

---

1. The Protectorate. 2, More despotic. 3. The New Constitution. 4. Puritans. 5. The Instrument of Government. 6. The votes of the people. 7. The Head of the State.

நிறுத்த முயன்றார். (இதே குற்றத்துக்காகத்தான் ஸ்ட்ராபர்ட் பிரபு சிரச்சேதம் செய்யப்பட்டார்). கொஞ்சகாலம் விவாதம் நடந்த பிறகு, தமக்கு வருமானம் கொடுக்கு முன்னரே க்ராம்வெல் கோபத்துடன் பார்லமென்டைக் கலைத்து விட்டார். பிறகு, அவர் முதல் சார்ல்ஸ் செய்தது போலவே வரி வசூலிக்கலானார். மக்கள் அதைப்பற்றி எதிர்த்தபோது, சார்ல்ஸ் செய்ததைவிடத் துணிச்சலான காரியங்களைச் செய்யலானார். எதிர்த்த மக்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு செய்த நீதிபதிகளை அவர்கள் பதவிகளினின்றும் நீக்கிவிட்டார். இவற்றாலெல்லாம் அவருக்குப் பெரிதும் மனக்கலக்க மேற்பட்டது. ஆயினும், சட்ட சம்மதமில்லாத வழிகளிலேனும் துரைத்தனத்தை நடத்திக் கொண்டு போவதே தமது முதற் கடமையென அவர் நினைத்தார்.

அவருக்கு வேறொரு கஷ்டமும் ஏற்பட்டது. இப் பார்லமென்டின் கூட்டம் ப்யூரிட்டன்கள்கூடக் காப்பாளராட்சிக்குச் சாதகமாயில்லை என்பதைக் காட்டியது. இவ்வாறாகப் புதிய துரைத்தன அமைப்பில் அதிருப்தி அடைந்திருந்த எல்லோரும் அதை எதிர்க்கத் தைரிய முற்றனர். தங்கள் மீது விதிக்கப்பட்ட அதிக வரிகளைக் கொடுக்க முடியாமல் தங்கள் நிலங்களை விற்கவேண்டிவந்த காவலியர்கள்[1] மாத்திரமல்லாமல், எத்தகைய ஒற்றையாள் ஆட்சியையும்[2] வெறுத்த 'சமப்படுத்துவோர்'[3] போன்ற கொள்கையினர் பலரும் ஆங்காங்கு கலகஞ் செய்தனர். இவ்விதம் பொங்கியெழுந்த அதிருப்தியையும் அமைதியின்மையையும் சமாளிக்கப் படையின் போர்வீரர்களையே ஊர்ப் பாதுகாவலராக[4] க்ராம்வெல் உபயோகிக்க வேண்டியதாயிற்று. அவர்கள் மிகக் கடுமையான ஊர்ப் பாதுகாவல ராயினர். நாடு முழுதும் பத்துப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும்

1. Cavaliers. 2. Any form of one-man rule. 3. "Levellers." 4. Police.

ஒரு மேஜர் ஜெனேரலுடைய[1] ஆளுகையின்கீழ் வைக்கப் பட்டது. அவரே அந்தப் பிரிவின் நீதி பரிபாலனத்துக்கும் அமைதிக்கும் பொறுப்பாளர். அவர்களிற் சிலர் மதப்பித் துக்கொண்ட ப்யூரிட்டன்க[2]ளாகையால், நாட்டு மக்கள் எல்லோரும் தங்கள் ஒழுக்கத்திலும் நடத்தையிலும் ப்யூரிட் டன் முறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று வற்புறுத்த லாயினர். அவர்கள் பிரயாணிகள் தங்கும் உண்டிச் சாலை களை[3] மூடினார்கள்; நாடகம், நடனம், சங்கீதம் முதலிய வற்றை நிறுத்தினார்கள்; எவ்விதக் களியாட்டமும் கூடா தென்றனர்; ஞாயிற்றுக் கிழமைகளை 'சாபத்' நாளாகக் கழிக்காதிருத்தலை[4] ஒரு பெருங் குற்ற மாக்கினார்கள். "மகிழ்ச்சிமிக்க இங்லண்ட்"[5] பண்டைக் காலத்த தாயிற்று. இத்தகைய ஆட்சி ஒரு வருஷத்துக்குமேல் நிலைக்கவில்லை. ஆயினும், மக்கள் அப்போது போர்வீரர்களது ஆட்சியைப் பற்றியும் மதப்பித்தர்களது[6] ஆட்சியைப்பற்றியும் கொண்ட அருவருப்பு, தலைமுறை தலைமுறையாக இன்று வரையில் அவர்களது சந்ததியார் இரத்தத்திலும் ஊறிக்கொண்டு வந்திருக்கிறது.

§ 165. **க்ராம்வெல்லின் ஆட்சித்திறன் : மத விஷயங்களில் பொறையும்[7] சாம்ராஜ்ய மனப்பான்மையும்[8]:**—இத்தனை கஷ்டங்களிருந்தும், நல்ல சந்தர்ப்பம் வாய்த்தால், இங் லண்டை யாண்ட மிகப் பெரிய புரவலர்களுள் உச்சநிலை பெற்ற ஒருவராகத் தாம் இருந்திருக்கக்கூடு மென்பதை க்ராம் வெல் நன்கு புலப்படுத்தினார்.

உள் நாட்டு விஷயங்களைப் பொருத்தமட்டில், மக்கள் தங்கள் வழக்குகளில் சுலபமாகவும் மலிவாகவும் நீதி மன்றங் களின் உதவியைப் பெறுவதற்கென, அவர் நீதி முறையில்

1. A Major-General. 2. Fanatical Puritans. 3. Inns. 4. Sabbath-breaking. 5. "Merrie England." 6. Religious fanatics. 7. Toleration. 8. Imperialism.

சில திருத்தங்களைச் செய்தார். இந்த விஷயத்தில் மற்றெல்லா நாடுகளையும்விட இங்லண்ட் காப்பாளராட்சிக் காலத்தில் மிகுந்த உன்னத நிலையி லிருந்தது. மீண்டும் மன்னாட்சி[1] இங்லண்டில் தொடங்கிய பொழுது, க்ராம்வெல் செய்த சீர் திருத்தங்கள் எல்லாம் அழிக்கப்படாமல் இருந்திருந்தால், என்றைக்கும் நாடு அவ்வித உன்னத நிலையிலேயே இருந் திருக்கலாம்.

மத விஷயத்தில் அவர் தமது தாராள மனப் போக்கைப் பின்பற்றினார். ஒரு கட்டுப்பாடான மதஸ்தாபன முறையை நாட்டினர் அனைவரும் ஏற்கவேண்டு மென்று வற் புறுத்த அவர் உடன்படவில்லை. பரிக்ஷகர் சபை[2] யொன்றால் பாரிஷ் குருமார்களாக இருக்க விரும்பியவர்களுடைய யோக் கியதை பரிக்ஷை செய்யப்பட்டது. ப்ரெஸ்பிட்டீரியர்கள்[3], பாப்டிஸ்டுகள்[4], சுயேச்சைக் கொள்கையினர்[5] ஆகிய எல்லோ ருடைய பிரதிநிதிகளும் அந்தச் சபையில் இருந்தார்கள். அச் சபையாரால் நியமிக்கப்பெற்ற குருமார்கள் எல்லோரும் ஒரு தேசீய மதஸ்தாபனத்தின் குருமார்களாக இருக்கும் தகுதி யுடையவர்களே என்று பொது மக்கள் ஒப்புக்கொண் டார்கள். அநேக ஆங்லிகன் குருமார்கள், தியான புத்த கத்தைத் தொழுகையில் பயன்படுத்துவதில்லை என்ற நிபந்தனையின்மேல், தங்கள் பழைய பதவிகளை வகிக்க அனுமதிக்கப்பட்டார்கள். அம்மாதிரி துரைத்தனத்தாரால் நியமிக்கப்பெற்ற குருமார்கள் ஒருபுற மிருக்க, மற்ற எதிர்ப்புமதப் பிரிவினர் எல்லோரும்[6] எவ்வித தொந்தரவு மின்றித் தங்கள் வழிபாடுகளை நடத்த அனுமதிக்கப்பட்ட னர். க்ராம்வெல் நிலையிலிருந்த யாரும் காதொலிக்கர் மத ஸ்தாபனத்தை ஆதரித்திருக்க இயலாது; ஆயினும், அந்த மதஸ்தாபனமும் துன்புறுத்தப்படவில்லை.

1. Monarchy. 2. A "Committee of Triers". 3. Presbyterians.
4. Baptists. 5. Independents. 6. All other Protestant sects.

தம்முடைய வெளிநாட்டு உறவுகளில் காப்பாளர் பிரபு இங்லண்டை ஆண்டவர்களுள் மிகத் தீர்மையான சாம்ராஜ்யக் கொள்கையினராக[1] இருந்தார்.* அவர்தாம் முதன் முதல் பிரிட்டிஷ் தீவுகளையெல்லாம் ஒரு துரைத்தனத்தின்கீழ் ஒன்று சேர்த்தவர். முதல் இரண்டு ஸ்டுவர்ட் அரசர்கள் காலத்தில் ஸ்காட்லண்டில் நடந்த தனியரசாட்சியானது முடிவடைந்து, வெஸ்ட்மின்ஸ்டர் பார்லமெண்டுக்கு ஸ்காட்லண்ட் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அயர்லண்டின் பெரும்பகுதிகளில் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டுப் புதுமுறைப் படையின் உத்தியோகஸ்தர்களுக்கும் போர்வீரர்களுக்கும் கொடுக்கப்பட்டன. அவ்வாறு செய்தது அவர்களுடைய சேவைக்கு ஊதியம் கொடுப்பதற்கும், அயர்லண்ட் வாசிகளுள் சிறுபான்மையினராயிருந்த எதிர்ப்பு மதத்தைச் சார்ந்தவர்களைப் பலப்படுத்துவதற்குமேயாம். இவ்விதம் இரு நாடுகளிலும் தங்கிய படையானது மக்களைக் காப்பாளராட்சிக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு அடக்கி வைத்திருந்தது.

காப்பாளர் பிரபுவானவுடன் க்ராம்வெல் செய்த முதற் செயல்களுள் ஒன்று டச்சுப்போரை முடிவுக்குக் கொண்டுவந்ததாகும். அது யூரோப்பிய ப்ராட்டெஸ்டன்ட் நாடுகளுக்குள் (இங்லண்ட், ஸ்வீடென், டென்மார்க், நெதர்லண்ட்ஸ்) நேச ஒப்பந்தம் உண்டாக்கும் ஒரு பெரிய திட்டத்தின் முதற்படியாகும். அதைத் தொடர்ந்து, இங்லிஷ் கப்பலோட்டிகளைச் சீர்கேடாக நடத்தியதற்காக, ஸ்பானிஷ் மேற்கிந்தியத் தீவுகளைத் தாக்க க்ராம்வெல் கப்பற்படையொன்றை அனுப்பினர். அது சான் டோமிங்கோ[2] என்னுமிடத்தைத் தாக்கி வெற்றிபெறவில்லையேனும், அதற்குப்

* தாம் வைத்திருக்கவேண்டிய பெரிய சேனைகளுக்கு லாபகரமான வேலை கொடுக்கவேண்டி இருந்ததும் இதற்கொரு காரணமாயிருக்கலாம்.

1. Thoroughgoing imperialist. 2. San Domingo.

பரிகாரமாக ஜமேய்க்கா[1] என்னு மிடத்தைக் கைப்பற்றியது. அது அக்காலமுதல் அந்தப் பாகத்தில். இங்லிஷ்காரருக்கு மிக முக்கிய இடமாக இருந்து வருகிறது.

கடல்கடந்து நடந்த இக் கப்பற்போரானது யூரோப்பில் ஸ்பெயின் இராச்சியத்தோடு ஒரு நிலப்போரையும் மூட்டிவிட்டது. ஸ்பெயினின் பெரிய விரோதியான ப்ரான்ஸுடன் ஒப்பந்தஞ் செய்துகொண்டு, க்ராம்வெல் ஸ்பானிஷ் நெதெர்லண்ட்ஸை[2] அவர்களோடு சேர்ந்து தாக்கத் தமது புதுமுறைப் படையின் ஒரு பகுதியை அனுப்பினர். புகழ் பெற்ற இரும்புப்படையினர்[3], தங்கள் தாய்நாட்டிற்போலவே, அங்கும் தோல்வியுருதவர்களெனப் பெயரெடுத்தனர். அதிலும் ட்யூன்ஸ் போரில்[4] (1658) அவர்கள் மிகவும் வீரத்துடன் போராடினுர்கள். அவர்களால் டன்கர்க்[5] பிடிபட்டது.

§ 166. **காப்பாளராட்சி திருந்திய அமைப்பைப் பெற்றது** :—தமது ஆட்சி முறையை மக்கள் விரும்பவில்லையென்பது க்ராம்வெல்லுக்குத் தெரியும்; ஆனுல், அதை விட்டுவிட்டால் தாம் மிகவும் புனிதமானவை யெனப் போற்றிய எல்லாவற்றையும் ஒழித்துவிடுவதாகும் என அவர் நினைத்தார். பெரிய நிலப்படையினையும் கடற்படையினையும் வைத்துக்கொண்டிருப்பது துரைத்தனத்துக்குப் பெருஞ் சுமையாக இருந்தது. அரசரது நிலங்களையும் மதஸ்தாபனத்தின் நிலங்களையும் விற்றுக் காவலியர்களுடைய[6] நிலங்களையும் பறிமுதல் செய்தபோதிலும், முன் அரசர் காலத்தில் இருந்ததைவிட நாட்டில் வரிச்சுமை மிகவும் அதிகமாகவே இருந்தது.

பணமுடையே தம் இரண்டாவது பார்லமென்டைக் கூட்டும்படி காப்பாளரைத் தூண்டியது. துரைத்தனத்துக்கு விரோதமான மனப்பான்மை யுள்ளவர்கள் தேர்தல்

1. Jamaica. 2. The Spanish Netherlands. 3. The Ironsides. 4. The Battle of the Dunes. 5. Dunkirk. 6. Cavaliers.

பெறுவதை மேஜர் ஜெனெரல்கள்[1] தடுப்பார்கள் என க்ராம்வெல் நம்பியிருந்தார். ஆனால், பார்லமென்ட் கூடிய பொழுது, சார்ல்ஸ் மன்னர்கூட ஒரு நாளும் கையாளத் துணியாத மிக்க நீதியற்ற முறையில், வாயிற்படியிலேயே நூறு அங்கத்தினர்களை மடக்கித் திருப்பியனுப்பவேண்டிய தாயிற்று. பார்லமென்ட் சபையில் அமர அனுமதிக்கப்பட்ட அங்கத்தினர்களுங்கூடத் துரைத்தன அமைப்பை மாற்ற வேண்டுமென்று கேட்டார்கள். பார்லமென்டில் இருக்க அனுமதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் ப்யூரிட்டன்களே.[2] அவர்கள் ஸ்டூவர்ட் பரம்பரை திரும்பப் பட்டம் பெறுவதை விரும்பவில்லை. அவர்கள், ஒரு அரசரும் இரண்டு பார்லமென்ட் சபைகளும் கொண்ட ஒருவகைத் துரைத்தன அமைப்பே நாட்டுமக்களுக்குப் பழக்கமானதாகையால், அத்தகைய துரைத்தனமே மீண்டும் நாட்டில் அமையவேண்டுமென்று சொன்னார்கள். தாழ்மையான விண்ணப்பமும் ஆலோசனையும்[3] என்ற ஒரு மனுவில் அவர்கள் க்ராம்வெல் "அரசர்" என்னும் பட்டத்தை வகித்துக்கொள்ள வேண்டுமென்றும், பழைய பிரபுக்கள் சபை[4]க்குப் பதிலாக ஒரு 'மேல் சபை'[5]யைத் தமக்கிஷ்டமானவர்களைக் கொண்டு நியமனஞ் செய்து கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்கள். க்ராம்வெல் மேல் சபை நியமன விஷயத்தைமட்டும் ஏற்றுக்கொண்டார்; ஆனால், "அரசர்" என்னும் வெறுக்கத்தக்க பட்டத்தைத் தாம் ஏற்க ஒரு போதும் படையினர் உடன்படமாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும். படையினர் ஆதரவின்றி எதைச் செய்யவும் அவராலாகாது. ஆதலால், "அரசர்" என்னும் பட்டத்தை ஏற்க அவர் மறுத்தார். ஆயினும், காப்பாளர் நிலையில் அவர் முன்னைவிட மிகுந்த ஆடம்பரத்துடனும் கௌரவத்துடனும் நிலைநிறுத்தப்பட்டார்.

1. The Major-Generals. 2. Mostly Puritans. 3. The Humble Petition and Advice. 4. The House of Lords. 5. An "Upper House".

துரதிர்ஷ்டவசமாக, தம்மை ஆதரித்தவர்களிற் பெரும்பாலானவர்களே அவர் மேற்சபைக்கு நியமனஞ் செய்ததனல், அவரை எதிர்த்தவர்களே கீழ்ச்சபையில் பெரும்பான்மையினராயினர்.[1] அவர்கள் புதிய துரைத்தன அமைப்பைத்[2] தீவிரமாக எதிர்க்க அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டார்கள். க்ராம்வெல் ஹாம்ப்டன் கோர்ட்[3] என்ற தம்முடைய உத்தியோக இருப்பிடத்துக்கு[4] அவர்களை வரவழைத்து, பொது நன்மைக்கான முக்கியமான அவசர அலுவல்களைக் கவனிக்காமல், துரைத்தனத்தை எதிர்ப்பதிலேயே காலத்தை வீணுக்கிக்கொண் டிருந்ததற்காக அவர்களைக் கண்டித்தார். ஆயினும், அதனல் ஒரு பயனும் ஏற்படவில்லை. சில வாரங்கள் கழித்து அவர் கோபங்கொண்டு பார்லமென்டைக் கலைத்தார்.

அடுத்தபடி அவர் செய்யவேண்டியதென்ன? துரைத்தன அமைப்பாகிய சிக்கலைக் கட்டறுத்து முடிவுசெய்ய அவரால் ஒருவழியும் கண்டுபிடிக்க முடியவில்லை. சில வாரங்களுக்குப் பின் இடையரு உழைப்பாலும் கவலையாலும் வலுவிழந்து, டன்பார் வூர்ஸ்டர் போர்களின் ஆண்டு விழாத் தினத்தன்று[5](1658ஆ செப்டெம்பர்மீ 3உ) க்ராம்வெல் இறந்தார்.

§ 167. ப்யூரிட்டன் ஆட்சியின் முடிவு[6]:— காப்பாளராட்சித் திட்டத்தின் இரண்டாம் அமைப்புத் தமக்குப்பின் அப்பதவிக்கு வரவேண்டியவரைக் குறிப்பிட்டு நியமிக்கும் உரிமையைக் காப்பாளருக்குக் கொடுத்தது. அதன்படியே, ஆலிவர் தம் பிள்ளைகளுள் உயிருடன் இருந்தவர்களில் மூத்தவரான ரிச்சர்ட் க்ராம்வெல்[7] என்பவரைத் தமக்குப்பின் தம் பதவியை ஏற்கத்தக்கவராக நியமித்தார். அவர் புத்திகூர்மையும் நற்குணமும் வாய்ந்தவரே; ஆயினும்,

1. In a majority. 2. The new Constitution. 3. Hampton Court.
4. Official residence. 5. The anniversary of Dunbar and Worcester.
6. The end of Puritan rule. 7. Richard Cromwell.

தம் தந்தையைக் குழப்பிய பாரவிஷயங்களின் சிக்கலான தகவல்களை அறிந்து அவற்றைச் சிக்கறுத்து முடிவுகட்டக் கூடிய வல்லமையும் விருப்பமும் அவருக்கில்லை. தங்கள் வெற்றிகளில் ஒரு பங்கும் எடுத்துக்கொள்ளாத ஒரு சாதாரண மனிதராகிய அவரைப் படைத்தலைவர்கள் மதிக்காமல் அசட்டை செய்தனர். அவர்கள் அவருடைய ஆதிக்கத்தைப்பற்றித் தர்க்கித்தும் அவருடைய அதிகாரங்களைக் குறைத்தும் வந்ததால், அவர் வெறுப்புற்றவராய்த் தம்முடைய பதவியை விடுத்துச் சொந்த வேலைகளைக் கவனிக்கத் தம்மூருக்குப் போய்விட்டார்.

படைஅதிகாரிகளின் சபை, பொதுநலக் குடியரசை மறுபடியும் புதுப்பிக்க முயன்று, 'ரம்ப்' பார்லமென்டைத் திரும்பவும் வெஸ்ட்மின்ஸ்டரில் கூட்டியது. ஆயினும், படை அங்கத்தினர் மறுபடியும் அதனுடன் அபிப்பிராயபேதப்பட்டுப் பார்லமென்ட் கட்டடத்திலிருந்து அதை வெளியேற்றி விட்டனர். நாட்டின் துரைத்தனத்தில் தங்கள் அதிகாரம் முடிவடைந்துகொண்டு வருவதை அவர்கள் மிக்க வருத்தத்துடன் உணர்ந்தனர். க்ராம்வெல்லின் நிறைந்த அனுபவமும் நிதான அறிவும் தாராள மனப்பான்மையும் ஆற்றலும் இல்லாமற் போகவே சிவப்புச்சட்டை மதப்பித்தர்களின்[1] துரைத்தனத்தைப்பற்றி எல்லோரும் பேரச்சங்கொண்டார்கள். உள்நாட்டுப் போரில் பார்லமென்ட் பக்கம் பேரூக்கங்காட்டிய ப்ரெஸ்பிட்டீரியர்களும்,[2] க்ராம்வெல்லின் ஆட்சியை ஆதரித்த சுயேச்சைக் கொள்கையினருங்[3]கூட, பார்லமென்ட் இல்லாமல் ஆளுவதில்லை, ப்யூரிட்டன்களைத் துன்புறுத்துவதில்லையென்ற இரு நிபந்தனைகளுக்கும் ஸ்டூவர்ட் பரம்பரையினர் கட்டுப்படுவார்களானால், அவர்களைத் திரும்பவும் அரசபட்டம் தரிக்கச்செய்வதற்கு ஆதரவளிக்க இப்போது தயாராக விருந்தார்கள். நாட்டு மக்கள் எதி

1. Red-coated fanatics. 2. Presbyterians. 3. Independents.

லும் அதிக மாறுதலை விரும்பாத மிதவாதிகளாக[1] இருந்தனர். அரசர், காமன்ஸ் சபை, பிரபுக்கள் சபைகளால் நடைபெற்று வந்த துரைத்தனம் ஆயிர வருஷங்களாக ஏற்பட்ட நிதான மான வளர்ச்சியின் விளைவானதால், அதையே நாட்டுமக்கள் உசிதமானதாகக் கருதினர். சென்ற பத்தாண்டுகளில் நிகழ்ந்த குழப்பங்களும் மாறுதல்களும், பழைய ஆட்சி முறையான்து மீண்டும் நிலைபெற்றாலொழிய அமைதியான துரைத்தனத்துக்கு வழியில்லை என்பதை இங்லிஷ் மக்களுள் நூற்றில் தொண்ணூற்றைந்து பேருக்கு நன்கு புலப் படுத்திவிட்டன.

ஸ்காட்லண்டில அமைதியை நிலைக்கவைத்திருந்தவரான ஜெனரல் மான்க்[2] என்பவர் பூர்ணமாக இந்தக் கருத்துக் கொண்டவரே. அவர் ஒரு ப்ரெஸ்பிட்டீரிய ரானதால், துரைத்தனத்தை நடத்திவந்த படைத்தலைவரின் சிறு குழு வில் இல்லை. அவர், ஸ்காட்லண்ட் மக்களுடைய முழு ஆதர வுடன், இரண்டு நாடுகளையும் படையின் ஆட்சியினின்றும் மீட்கத் தம் படையை இங்லண்டுக்கு நடத்திக்கொண்டு வந்தார்.

தளபதிகள் அவரைத் தடுக்க முயன்றார்கள். ஆயினும், புதுமுறைப் படையின் போர்வீரர்களும் அவர்கள் ஆதிக்கத் தைப்பற்றி அலுத்துப்போயிருந்தபடியால் படையை விட்டு நூற்றுக்கணக்காக விலகினார்கள். மான்க் ஒரே உறுதி யுடன் தம்முடைய படையை லண்டனுக்குக் கொண்டுவந்து விட்டார். பார்லமென்டுக்குச் சுயேச்சையான ஒரு பொதுத் தேர்தல்[3] நடத்தவேண்டுமென்று எல்லாப் பிரிவுகளிலுமுள்ள எல்லா மக்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் அவருக்கு வந்து குவிந்தன. அவர் லண்டனுக்குப் போனவுடன் பழைய நீண்ட பார்லமென்டின்[4] எஞ்சிய அங்கத்தினர்களை அழைத்துப்

1. Conservatives. 2. General Monk. 3. A Free Election. 4. Long Parliament.

பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்வித்து, அவர்களைத் தங்களைத் தாங்களே கலைத்துக்கொள்ளும்படி சொன்னார். புதிய பார்லமெண்ட் ப்ரேடா அறிவிப்பு[1] (கு.116) என்ற சில நிபந்தனைகளை விதித்து, இங்லண்டுக்குத் திரும்பி வரும்படி நெதெர்லண்ட்ஸிலிருந்த சார்ல்ஸ் இளவரசருக்கு ஒரு அழைப்பை அனுப்பியது. அந்த நிபந்தனைகளைச் சார்ல்ஸ் ஏற்றுக்கொண்டதும், அவர் இரண்டாம் சார்ல்ஸ் அரசராகப் பிரகடனஞ் செய்யப்பட்டார்[2] (1660 ஆம் மே மீ). 'புனிதாத்துமாக்களின் ஆட்சி'[3] முடிவுற்றது.

## முப்பத்தேழாம் அத்தியாயம்

# முன்னிலை மீட்சி[4]

(1660—1667)

§ 168. பார்லமேண்டின் முன்னிலை மீட்சி:—இரண்டாம் சார்ல்ஸ் தம் குடிமக்களால் மிகவும் குதூகலத்துடன் வரவேற்கப்பட்டார். அந்நிகழ்ச்சி பெரும்பான்மையான இங்லிஷ் மக்களுக்குப் பயங்கரமான ஒரு இருள்மூட்டத்திற்குப் பின் சூரியன் தோன்றினாற்போலிருந்தது. மதப்பித்துக் கொண்ட படையினரால்[5] சீர்குலைக்கப்பட்ட அமைதிபொருந்திய வாழ்க்கையின் வழக்கமான அடையாளங்களான நீதி, சுயேச்சை, அமைதி ஆகியவற்றைச் சார்ல்ஸ் டோவரில்[6] வந்திறங்கிய பொழுது தம்முடன் கொண்டுவந்தவராகத் தோன்றினர்.

முன்னிலை எய்திய மன்னர் முப்பது வயதானவர்; புத்தி கூர்மையும் நிதான புத்தியும் நகைச்சுவையு முள்ளவர். சில விஷயங்களைப்பற்றி நம்பிக்கையற்றவராய்க் குத்தலாகப் பேசக்கூடியவர். கடந்த பத்தாண்டுகளை நாட்டினின்றும்

1. Declaration of Breda. 2. Proclaimed. 3. 'The Rule of the Saints'.
4. The Restoration. 5. Armed fanatics. 6. Dover.

அப்பாற்பட்டுக் கழித்தவர். அந்தரங்கத்தில் அவர் ஒரு காதொலிக்; மன்னரின் யதேச்சாதிகாரத்தில் நம்பிக்கை கொண்டவர்; ஆயினும், அவ்விதமான கோட்பாடுகளுக்காகத் தமது சொந்த நலன்களையும் சேமத்தையும் இழக்கத் துணிபவரல்லர். அவர் தாம் "பிரயாணம் செய்துவிட்டு வந்ததாகவும்", மறுபடியும் பிரயாணம் போகும் எண்ணம் தமக்கில்லை என்றும் சொன்னார். தம்முடைய எண்ணங்களை முடிந்த காலத்தில் அவர் மறைவாகவே நிறைவேற்றிக் கொள்ளலாம். அதற் கிடையில் வாழ்க்கையின் சுகங்களை அனுபவிக்க அவர் தீர்மானித்தார். அவருடைய அரண்மனையானது களியாட்டங்களுக்கு அரங்க மாகியது.

மன்னர், பிரபுக்கள், சாதாரண மக்கள்[1] ஆகிய உறுப்புக்களைக்கொண்டு இயங்கும் துரைத்தன இயந்திரம் சரியாக இயங்கவேண்டுமானால், அவற்றை இயக்குவோன் சரியான நிபுணனாக இருக்கவேண்டும். அப்போதைய நிலையில் அத்தகைய நிபுணராக வாய்த்தவர் எட்வர்ட் ஹைட் என்ற க்ளாரேண்டன் பிரபு[2]. அவர் பழைய அரசருக்கு யுத்த காலத்திலும், இந்த அரசருக்கு அவரது வெளிநாட்டு வாசத்திலும் முக்கிய ஆலோசனையாளராக இருந்தார். உயர்ந்த கோட்பாடுகளும் சிறந்த உலக அறிவும் கொண்ட அவர், நாட்டு மக்களுள் ஒவ்வொருவரும் தாம் பத்திரமாக இருப்பதாக உணர்ந்தாலொழிய நாடு அமைதியுறாது என்பதை உணர்ந்தார். முதல் சார்ல்ஸின் விசாரணையில் நேராக ஈடுபட்டிருந்தவர்கள் எல்லோரும் தூக்கிலிடப்பட்டோ நாடு கடத்தப்பட்டோ தண்டனை அடைந்தனர். மற்ற எல்லோரும் 'பொது மன்னிப்பும் மறத்தலும்'[3] என்ற ஒரு சட்டத்தினால் மன்னிப்புப் பெற்றார்கள். புதுமுறைப்படையின் ஆட்கள் எல்லோரும் சம்பள பாக்கிகளைக் கொடுக்கப்பெற்று,

1. The Commons. 2. Edward Hyde, Lord Clarendon. 3. An Act of General Amnesty and Oblivion.

தங்கள் தங்கள் பண்ணைகளுக்கும் கடைகளுக்கும் அனுப்பப் பெற்றனர்.

இந்த ஆட்சியின் முதல் பார்லமெண்ட் அதி தீவிரமான அரச கட்சியினரைக்[1] கொண்டிருந்தது; அதற்குக் காவலியர் பார்லமேண்ட்[2] எனப் பெயர். அரசர் தம் நிலையை எய்தி விட்டார் என்பதற்கு அதன் அங்கத்தினர்கள் எவ்வளவு பெருமித மகிழ்ச்சி காட்டியபோதிலும், முன்னிலை மீட்சி யென்பது அரசரது முன்னிலை மீட்சி மாத்திரமேயன்றிப் பார்லமெண்டினுடைய முன்னிலையின் மீட்சியுமாகு மென்பதையும் அவர்கள் தெளிவாகப் புலப்படுத்தினர்கள். அரசர்க்கெதிராகப் போரிடுவது நியாயம் என்று சொல்வதுகூடப் பெரிய இராஜத்துரோகமாகும் என்று அவர்கள் ஒரு சட்டஞ் செய்தார்கள். அதோடு முதலாம் சார்ல்ஸின் கொடுங்கோன்மையைப்போலவே அவர் மகன் எப்பொழுதும் கொடுங்கோலாட்சி செலுத்த முடியாதபடி சில ஏற்பாடுகளையும் செய்தார்கள். மேலும், அவர்கள் துரைத்தன வருமானத்தை நிலையான துரைத்தனச் செலவில் சுமார் பாதியே இருக்குமாறு வரையறுத்து வைத்தார்கள். அதனல் அரசர் எப்பொழுதும் பார்லமெண்டின் மானியங்களையே[3] எதிர்பார்க்கவேண்டியதாயிற்று. யூரோப்பிய அரசர்கள் வைத்திருந்தது போன்ற நிலையான படையை[4] வைத்திருக்கவும் அவர்கள் அரசருக்கு அனுமதி யளிக்கவில்லை.

§ 169. மதஸ்தாபனத்தின் முன்னிலை மீட்சி:—கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக ப்யூரிட்டன் ஆட்சியால் கஷ்டதசையிலிருந்த ஹைசர்ச் கொள்கையினர்[5], தங்களை அடக்கி வைத்தவர்கள்மீது பழியைத் தீர்த்துக்கொள்வதன்றி, ப்யூரிட்டன் கொள்கைகள் எக்காலத்திலும் நாட்டில் செல்வாக்கினைப் பெறக்கூடாத வழியையுந் தேடத் தீர்மானித்தனர்.

1. Royalists. 2. The Cavalier Parliament. 3. Parliamentary grants.
4. A Standing Army. 5. High Churchmen.

இந்த நோக்கத்துடன் காவலியர் பார்லமெண்ட் நான்கு சட்டங்களை நிறைவேற்றியது. அவை, நான்கும் ஒரு தொகுப்பாக க்ளாரேண்டன் சட்டத் தொகுப்பு[1] என வழங்கப் பெற்றன. அதன்படி, நாட்டில் சட்டப்படி அமைந்த மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்[2]களுக்கே எல்லா உத்தியோக பதவிகளும் ஒதுக்கிவைக்கப்பெற்றன; இதர வழிபாட்டு முறைகள் தடுக்கப்பட்டன; நாட்டின் மதஸ்தாபன ஏற்பாட்டிற்கு இணங்காதவர்களுடைய[3] பிள்ளைகள் கிராமப் பள்ளிக்கூடப் படிப்பைவிட உயர்ந்த படிப்புப் பெற இயலாதென்றும் ஏற்பாடாயிற்று (கு. 118).

க்ளாரெண்டன் பெயரால் அந்தச் சட்டங்கள் வழங்கி வருவது அவருடைய ஞாபகத்துக்கு அநீதியாகும். அந்தச் சட்டங்களைச் செய்த பார்லமெண்டில் முக்கியஸ்தர் அவரென்பதும், ஆங்லிகன் மதஸ்தாபனத்தையே[4] நாட்டில் அதிகாரத்துக்கும் உரிமைகளுக்கும் உரியதாகச் செய்வதை அவர் பெரிதும் ஆதரித்தார் என்பதும் உண்மையே. ஆயினும், நாட்டு மக்களில் கால்பங்கினரை அரசாங்க விரோதிகளாக்கும் எந்தத் திட்டத்தையும் அவர் ஆமோதிக்கவில்லை. சார்ல்ஸ் அரசரிடம் என்ன குறைகளிருந்தபோதிலும், அவர் தாராள மனமுடையவர்; அச் சட்டங்கள் தமது 'ப்ரெடா அறிவிப்பு'க்கு[5] (கு. 116) எதிராகத் தம்மை நடக்க வற்புறுத்தின என்பதை அவர் எடுத்துக் காட்டினார். ஆயினும், பார்லமெண்ட் சபையார் பிடிவாதமாயிருந்தனர். சார்ல்ஸ் அரசரின் பண நிலையானது அவரைப் பார்லமெண்டாருக்கு இணங்கச் செய்தது.

இந்தச் சட்டங்களால் மிகுந்த ஆச்சரியமும் ஏமாற்றமும் அடைந்தவர்கள் ப்ரெஸ்பிட்டீரியர்களே.[6] இந்த மித ப்யூ

1. The Clarendon Code. 2. Members of the Established Church. 3. Dissenters. 4. The Anglican Church. 5. The Declaration of Breda. 6. Presbyterians.

ரிட்டன்கள்[1] முன்னிலை மீட்சியில் முக்கியமாக ஈடுபட்டிருந்தனர் என்பதை நாம் முன்னரே கண்டுள்ளோம் (§ 167). அவர்கள் இனி நாட்டு மதஸ்தாபனத்துக்கு ப்ரெஸ்பிட்டீரியன் அமைப்பைக் கொடுக்கமுடியாதென்பதை நன்குணர்ந்தார்கள். ஆயினும், புது அரசாட்சியில் முழு கௌரவமும் அதிகாரமும் வகிக்கலாமென நம்பியிருந்தார்கள். சார்ல்ஸ் அரசரே அவர்களுடைய உரிமைகளை அங்கீகரித்துக் காவலியர் பார்லமென்ட் கூடுமுன் அவர்களுள் அநேகரைத் தமது ஆலோசனை சபையின் அங்கத்தினர்களாக நியமித்திருந்தார். ஆனால், பார்லமென்ட் அவர்களுக்கும் அவர்கள் புறக்கணித்த பாப்டிஸ்டுகளுக்கும் க்வாக்கர்களுக்கும்[2] எவ்வித வேற்றுமையும் காட்டத் தயாராக இருக்கவில்லை.

அச் சட்டங்களைச் செய்தவர்கள் விரும்பிய பலனை அவை கொடுத்தன. அதுவரையில் குடிப்பிறப்பும் கல்வியும் படைத்த பலர் (ஜான் ஹாம்டென், எஸெக்ஸ் பிரபு[3] முதலியவர்கள் போன்றவர்கள்) ப்யூரிட்டன்களாக இருந்து வந்தார்கள். ஆனால், அது இப்போது முடியாததாயிற்று. செல்வம் படைத்த ப்யூரிட்டன்கள்—முக்கியமாகத் துரைத்தனங்கள் புரண்டுகொண்டே வந்த காலங்களில் காவலியர்களுடைய நிலங்களை வாங்கிக் 'கனவான்க'[4]ளானவர்கள்—அந்தச் சட்டங்களுக்கு அடங்கித் தங்கள் தங்கள் பாரிஷ் கோவில்களுக்குப்[5] போய்வரலாயினர். அவர்களே பிற்காலத்தில் ஏற்பட்ட "விக்"[6] கட்சிக்கு முதுகெலும்பைப்போலானார்கள். வேறுபட்ட வழிபாட்டு முறைகளைப் பொறுத்தலை[7] ஆதரித்த 'லோ சர்ச்' கொள்கையினரும்[8] அவர்களே. அதிதீவிரமான தூய்மைக் கொள்கையினர் அந்தச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய மறுத்தனர்; அவ்விதம் செய்தால் சைதா

1. Moderate Puritans. 2. Baptists and Quakers. 3. John Hampden, Lord Essex. 4. Gentry. 5. Parish Churches. 6. Whigs. 7. Toleration. 8. Low Churchmen.

னுக்குப் பணிவதுபோலாகு மென்றனர். ஆதலால், அவர்கள் எல்லா உத்தியோகப் பதவிகளுக்கும் உயர்தரக் கல்விக்கும் புறம்பாய்த் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களைப் போலக் கேவலமாக மதிக்கப்பட்டு வந்தார்கள்.

§ 170. **கடலிலும் நிலத்திலும் கேடுகள்:**—1664 ஆம் இரண்டாம் டச்சுப் போர்[1] மூண்டது. உண்மையில் பொது நலத் துரைத்தனத்தின் காலத்தில் நடந்த போரின் தொடர்ச்சியே இது (§ 162). முன்போலவே இப்பொழுதும் வியாபாரப் போட்டிதான் போருக்குக் காரணம். கிழக்கு, மேற்கிந்தியத் தீவுகளுடன்[2] நடந்த யூரோப்பிய வியாபாரத்துக்கு முக்கிய துறைமுகங்களா யிருந்த ப்ளஷிங், ஆம்ஸ்டெர்டாம்[3] துறைமுகங்களின் செல்வச் செழிப்பைக் கண்டு இங்லிஷ் வியாபாரிகள் பொறாமை யடைந்தனர். தொடக்கத்தில் இப்போர் இங்லிஷாருக்குச் சாதகமாக இருந்தது. அரசரும் அவருடைய தம்பி யார்க் ட்யூக் ஜேம்ஸும்[4] கப்பற்படையில் மிகுந்த அக்கறைகொண்டிருந்தார்கள். லோயெஸ்டாப்ட்[5] என்னு மிடத்தில் நடந்த கடற்போரில் (1665) வெற்றிபெற்ற கப்பற்படையை ஜேம்ஸே நடத்தினர். பிறகு, அரசாங்கத்தார் பல எதிர்பாராத கெடுதிகளால் மனமிழந்தார்கள். 1665 ஆம் லண்டனில் ஏற்பட்ட ப்ளேகினல்[6] அங்கிருந்த முக்கியஸ்தர்களெல்லோரும் வெளியேறிவிட்டார்கள். அதனல் பொதுத் தொழில்கள் தடைபட்டன. அடுத்த வருடத்தில் லண்டன் டவர் முதல் டெம்பில் பார் வரையிலுமுள்ள[7] இடங்களையெல்லாம் ஒரு பெருந் தீ நாசமாக்கியது. அதோடு, கப்பற்படைக்கான மானியங்களை யெல்லாம் அரசர் அரண்மனைச் சுகபோகங்களுக்காகச் செலவிட்டுவிடுகிறார் என்ற சந்தேகத்தின்மேல் பார்லமெண்டார் அரசாங்கத்துக்கு வேண்டிய

1. The Second Dutch War. 2. The East and West Indies. 3. Flushing, Amsterdam. 4. James, Duke of York. 5. Lowestoft. 6. Plague. 7. From the Tower to Temple Bar.

செல்வ மானியங்களைக் குறைக்கலாயினர். கப்பற் படை இலாகாவுக்குப்[1] பொருள்வருவாய் குன்றிப்போனதால், அநேக மாலுமிகளுக்குச் சம்பளம் கொடுக்க முடியவில்லை; கப்பற் படையின் பெரும் பகுதியைக் கடலுக் கனுப்பாமல் துறையிலேயே வைத்திருக்கவேண்டியதாயிற்று. இவ்வித மான தொந்தரவுகளுக் கிடையே டச்சுக்கப்பல்கள் துணிச்சலுடன் சாத்தம் கப்பல் துறைக்குள்[2] வந்து அங்குத் தங்கியிருந்த இங்லிஷ் கப்பல்களிற் பலவற்றைக் கொளுத்தி விட்டன. அதன் பிறகு அப்போர் விரைவில் முடிவுக்கு வந்து விட்டது. ப்ரெடா உடன்படிக்கைப்படி[3](1667) ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் தகராறுகளுக்கு உட்பட்டிருந்த சில இடங்கள் டச்சுக்காரருக்குக் கொடுக்கப்பட்டன. இங்லிஷார் வட அமெரிக்காவில் நியு ஆம்ஸ்டெர்டாம்[4] என்ற டச்சுக் குடியேற்ற நாட்டைப் பெற்று, அதற்கு யார்க் ட்யூக்கைக் கௌரவிக்கும் பொருட்டு "நியு யார்க்"[5] எனப் பெயரிட்டார்கள். மெட்வேவில்[6] டச்சுப் பீரங்கிகளின் உறுமல் மக்களை நடுங்கச் செய்துவிட்டது. மனமார்ந்த அரசவழிபாட்டுடன்[7] ஆரம்பித்த காலம் முடிவுக்கு வந்துவிட்டது. க்ராம்வெல்லின் ஆட்சியைத் தாங்கள் எவ்வளவுதான் வெறுத்தாலும், அக்காலத்தில் இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை என்பதை இன்னும் மக்கள் மறக்கவில்லை. அடுத்தடுத்து வந்த மூன்று ஆண்டுகளுள் லண்டன் நகரத்தைக் கொள்ளை நோயும் தீவிபத்தும் டச்சுப்படையெடுப்பும் தொடர்ந்து தாக்கின. இவற்றிற்கெல்லாம் க்ளாரெண்டனை[8] மக்கள் தூற்ற ஆரம்பித்தனர். இந்தக் கேடுகளுக் கெல்லாம் அவர் எவ்விதத்திலும் பொறுப்பாளி யல்லரேனும், பொதுவாக அவர் மக்களுடைய வெறுப்புக்கு ஆளாகி இருந்தார். அவரு

1. The Admiralty. 2. Chatham dockyard. 3. The Treaty of Breda. 4. New Amsterdam. 5. New York. 6. The Medway. 7. King-worship. 8. Clarendon.

டைய மகள் யார்க் ட்யூக்கை[1] மணந்துகொண்டதற்காகப் பிரபுக்கள் எல்லோரும் அவரிடம் பொறாமைகொண்டிருந்தனர். அரசரைச் சூழ்ந்திருந்தவர்களின் ஒழுக்கமற்ற வாழ்க்கையை அவர் கண்டித்ததற்காக அவர்கள் அவர்மீது கோபங் கொண்டிருந்தனர். தூய்மைக்கொள்கையில் அனுதாபமுடையவர்கள் ஒறுத்தல் சட்டங்களுக்காக[2] அவரைப் பழித்தனர். பார்லமெண்டில் அவர்மீது குற்றவிசாரணை நடவடிக்கை[3] தொடங்கப்போகும் சமயத்தில் அவர் மந்திரி பதவியிலிருந்து விலகி அயல்நாடு சென்றுவிட்டார்.

§ 171. முக்கூட்டுறவு[4] :—ப்ரான்ஸ் மன்னர் பதினான்காம் லூயி[5] அடுத்த ஐம்பதாண்டுகளுக்கு இங்லண்ட் வரலாற்றில் அதி முக்கியமானவர்களுள் ஒருவராக இருந்தார். அவர் இங்லண்டுக்கு வந்தவரே யல்லர். மன்னர்களின் தெய்விக உரிமைக் கொள்கையே உருவாய் வந்தவர்போன்ற அவர் ஸ்டுவர்ட் அரசர்கள் அவ்வுரிமையைக் கொண்டாடியதைவிட மிக அதிகமாகக் கொண்டாடினர். ஏனெனில், அவருடைய முன்னோர்கள் தங்கள் பார்லமெண்டாகிய 'ஸ்டேட்ஸ் ஜெனரல்*[6] சபை'யைப் புறக்கணித்துவிட்டு நிலையான யதேச்சாதிகாரத்தினை அனுபவித்தற்கு வேண்டிய வழிகளைக் கண்டுபிடித்து வைத்திருந்தனர். (முதல் சார்ல்ஸ் இம்முயற்சியில் படுதோல்வியுற்றார்.) லூயிக்குத் தம் விருப்பம்போல நாட்டை ஆளவும் மக்களிடம் வரி தண்டவும் முடிந்தது. அவருடைய பிரபுக்கள் எல்லோரும் சாதாரண அரண்மனைப் பிரபுக்களே.[7] அவர்களுடைய படை யூரோப்பில் மிகவும் பெரியதாகவும் வன்மை பெற்றதாகவும் இருந்தது. வேர்சாயி[8] என்னுமிடத்தில், உலகெங்கும் மிகவும் ஆடம்பரமானதென்று மதிக்கப்பட்ட அரண்மனையொன்றைக் கட்டி அதில்

* இது 1614 முதல் 1789 வரையில் கூடவே இல்லை.

1. Duke of York. 2. The persecution-laws. 3. Impeachment. 4. The Triple Alliance. 5. King Louis XIV of France. 6. The States-General. 7. Mere courtiers. 8. Versailles.

மிகுந்த பெருமையுடனும் கண்ணியத்துடனும் படாடோபச் சடங்குகளுடனும் அவர் ஆட்சி செலுத்திவந்தார். அவர் காலத்தில் ப்ரெஞ்சுக் கருத்துக்களும் ப்ரெஞ்சு மாதிரிகளுமே நாகரிக உலகத்தில் மேம்பாடுற்று நின்றன. ப்ரெஞ்சு மொழியே எங்கும் கலைவல்லோரின் மொழியாகவும் இராஜ தந்திரிகளின் மொழியாகவும்[1] ஆதிக்கம் பெறலாயிற்று.

லூயி அரசர் பெயரளவில்மட்டும் அரசராயிருந்தவரல்லர். அவர் உயர்ந்த நோக்கங்களும் மிகுந்த சுறுசுறுப்புமுள்ளவர். வெளிநாட்டு விவகாரங்களில் தம் இராச்சியத்தை ரைன்[2] நதிக்கரை வரையில் பரவச் செய்ய வேண்டுமென்பது அவருடைய பெரு நோக்கம். இதைச் செய்து முடிக்க அவர் ஸ்பானிஷ் நெதெர்லண்ட்ஸைக்[3] கைப்பற்றியாகவேண்டி யிருந்தது. 1668ஆம் ஸ்பெயினில் நான்காம் பிலிப்[4] இறந்தவுடன், அந்த மாகாணங்களைக் கைப்பற்றப் பிரசித்திபெற்ற மார்ஷல் டுரேன்[5]வசம் ஒரு படையை அனுப்பினார். தம் வெற்றியைத் தொடர்ந்து அவர் அருகிலிருந்த சிறிய டச்சுக் குடியரசின்மீதும் படையெடுக்கத் தயங்கார் என்பதை நன்குணர்ந்த டச்சுக்காரர்கள், தாங்கள் எதிர்பார்த்த போராட்டத்தில் தங்களுக்குப் பக்கபலம் தேடலானார்கள். எதிர்பாராத இடத்திலிருந்து அவர்களுக்கு உதவி கிடைத்தது: அதாவது, தங்களுடன் இருமுறை போரிட்ட இங்லண்டிடமிருந்து. முன்பு போரிட்டதற்கும் இப்போது கூட்டுறவு செய்துகொண்டதற்கும் இங்லிஷார் தங்கள் வியாபார நலன்களைப் பெருக்கிக்கொள்ள விரும்பியதே காரணமாம். தாங்கள் ஒருவர்க்கொருவர் எதிரிகளாக இருந்ததைக் காட்டிலும், ப்ரான்ஸ் தங்கள் இருவருக்கும் பெரிய எதிரியாக இருக்கும் என்பதை டச்சுக்காரர்

1. The universal language of culture and diplomacy. 2. The Rhine.
3. The Spanish Netherlands. 4. Philip IV. 5. Marshal Turenne.

கள் உணர்ந்தது போலவே இங்லண்ட் அரசினரும் உணர லாயினர். ஸ்பானிஷ் நெதெர்லண்ட்ஸின் முக்கிய துறைமுக மாயிருந்த ஆன்ட்வெர்ப்பை[1] லூயி கைப்பற்றிவிடுவாரானால், அவர் அதை வட யூரோப்பின் வியாபாரத்துக்கெல்லாம் நடு நிலையமாக்கி, லண்டனுக்கும் ராட்டர்டாமுக்கும்[2] போட்டி ஸ்தானமாகச் செய்துவிடலாம். அதையும் தவிர, யூரோப் கண்டம் முழுவதையும் ஆக்கிரமிக்கத் தயாராயிருந்த அப் பெரிய காதொலிக் வல்லரசுக்கெதிராக, சுயேச்சையை விரும்பிய இரு சிறு ப்ராட்டெஸ்டன்ட் நாடுகளும் ஒன்றுபட வேண்டு மென்ற உணர்ச்சியு மிருந்தது. ஆகையால், அவர் கள் மற்றொரு முக்கிய வன்மைபெற்ற ப்ராட்டெஸ்டன்ட் நாடான ஸ்வீடெனுடனும் சேர்ந்து, ஒரு முக்கூட்டுறவு[3] செய்துகொள்ளத் தீர்மானித்தார்கள்(1668). நெதெர் லண்ட்ஸிலிருந்து தம் படையைத் திரும்ப அழைத்துக் கொள்ளாவிட்டால், அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ப்ரான்ஸைத் தாக்குவதாகப் பயமுறுத்தினார்கள். இத்தகைய எதிர்ப்பினை எதிர்பாராததால் லூயி பின்வாங்கினார்.

## முப்பத்தெட்டாம் அத்தியாயம்

# விக்[4], டோரி[5] கட்சிகள்

(1669—1685)

§ 172. டோவர் இரகசிய உடன்படிக்கை[6] :—சார்ல்ஸ் தம் மனத்திற்கொண்டிருந்த இரு பெரு நோக்கங்களையும் இப்போது நிறைவேற்றப் பாடுபட்டார். அவை காதொலிக் கரை ஒறுத்தல் சட்டங்களினின்றும் விடுவிப்பதும், தம்மைப் பார்லமென்ட் ஆதிக்கத்தினின்றும் விடுவித்துக்கொள்வது மாம். உண்மையில், அவருடைய முதல் நோக்கம் நிறை

1. Antwerp. 2. Rotterdam. 3. Triple Alliance. 4. Whigs. 5. Tories. 6. The Secret Treaty of Dover.

வேறுவது இரண்டாவது நோக்கத்தின் முடிவைப் பொருத்திருந்தது; ஏனெனில், காவலியர் பார்லமென்டார் முரட்டுப் பிடியான ப்ராட்டெஸ்டன்ட் கொள்கையுடையவர்களாக இருந்தபடியால், காதொலிக்கர்களுக்கு எவ்விதமான அனுதாபமும் காட்டப்படுவதைத் தாங்கள் அதிகாரத்திலுள்ளவரையில் அனுமதிக்கமாட்டார்கள். எல்லாம் இறுதியிற் பணத்தைப் பொருத்ததா யிருந்தது. இவ் விஷயத்தில் பதினன்காம் லூயி சார்ல்ஸின் உதவிக்கு வரத் தயாராயிருந்தார். சார்ல்ஸ் காதொலிக்கர்களுக்கு வழிபாட்டு உரிமை[1] வழங்கித் தமது கடற்படையை டச்சுக்காரர்களுக்கு எதிராக உபயோகிக்கக் கொடுப்பதானல், அவருக்கு வருஷந்தோறும் ஒரு பெருந்தொகை கொடுக்க லூயி ஒப்புக்கொண்டார். இந்த ஏற்பாடு ஆர்லியன்ஸ் டச்சசும் சார்ல்ஸின் தங்கையுமான ஹென்றியெட்டாவினல்[2] செய்துவைக்கப்பட்டது. சாதாரணமான ஒரு குடும்பக் கூட்டத்திற்கு வருவதுபோல் 1670ஆம் மேயீ டோவரில் அவள் தன் தமயனைச் சந்தித்தாள். அங்கே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் ஒரு இரகசிய நிபந்தனையும் இருந்தது. அதன்படி, ஏற்ற தருணத்தில் சார்ல்ஸ் வெளிப்படையாகக் காதொலிக் மதத்தைத் தழுவவேண்டுமென்றும், அதுபற்றி நாட்டில் கலகம் ஏற்பட்டால் அவருக்குத் துணையாக ப்ரெஞ்சுப் படையொன்றை லூயி அனுப்பவேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று.

க்ளாரெண்டன் பிரபுவுக்குப்பின் அரசாங்க சபையில் ஐந்து மந்திரிகள் சேர்ந்து ஒரு உட்குழுவினராக[3] இருந்தனர். அந்த உட்குழுவுக்குக் 'கபால்'[4] எனச் சாதாரணமாகப் பெயர் வழங்கியது. அந்த ஐந்து மந்திரிகளது பெயரின் முதலெழுத்துக்களை ஒன்று சேர்த்தால் அப்பெயராவதும் ஒரு விசித்திரமே. அப் பெயர்கள் க்ளிபர்ட், ஆர்லிங்டன்,

1. Freedom of worship. 2. Henrietta, Duchess of Orleans. 3. An inner circle. 4. 'The Cabal.'

பக்கிங்காம், ஆஷ்லி, லாடர்டேல்[1] என்பனவாம். அக்கால முதல் அவர்களுக்குக் 'கபால்'' என்பதே பெயராயிற்று. பார்லமென்டின் அதிகாரத்தை அழிக்கவும், டச்சுக்காரர்களைக் காட்டிக்கொடுக்கவும் அரசர் செய்த சூழ்ச்சிகளில் அவர்களும் ஒருவாறு ஈடுபட்டுத் துணைநின்றூர்கள். ஆனால், அரசர் காதொலிக்கர் ஆகும் இரகசியம் அவர்களுள் காதொலிக்கர்களான முதல் இருவருக்குத்தான் தெரியும். ஆஷ்லியைப் போன்ற சாமர்த்தியசாலியையும் தாம் ஏமாற்றியதுபற்றி அரசர் உள்ளுக்குள் மிகவும் மகிழ்ந்தார். ஆஷ்லியை மேலும் ஏமாற்றச் சார்ல்ஸ் அவரைச் சான்செலர் பிரபுவாகவும்[2] ஷாப்ட்ஸ்பெரி ஏர்லாகவும்[3] செய்தார். ஆனால், இவ்வித தந்திரங்களைச் செய்துகொண்டேபோய் அவரை முற்றிலும் ஏமாற்றிவிடமுடியாதென்பதைச் சார்ல்ஸ் அதிவிரைவில் கண்டுகொண்டார்.

அடுத்த ஆண்டில் பார்லமென்ட் கூடியிராதபொழுது இரகசிய ஒப்பந்தத்தின் முதற்பகுதியைச் சார்ல்ஸ் நிறைவேற்ற முற்பட்டார். அவர் ப்ராட்டெஸ்டன்ட் 'டிஸ்ஸென்டர்க'ளுக்கும்(இணங்காதவர்கள்)[4] காதொலிக்கர்களுக்கும் வழிபாட்டுரிமை அளித்து ஒரு சகிப்பு அறிவிப்பினை[5] (1672) வெளியிட்டார். இந்த இரண்டு வகையினரும் தமக்காதரவாகச் சேர்ந்தால் பார்லமென்டின் எதிர்ப்பைத் தம்மால் சமாளிக்கக்கூடுமென்று அவர் நம்பினர். பிறகு ப்ரான்ஸுடன் ஹாலண்டுக்கு விரோதமாகச் சேர்ந்தார். மூன்றும் டச்சுப்போர் தொடங்கியது. இதற்கிடையில் லூயி ஸ்வீடனுக்குப் பணங்கொடுத்து அதை முக்கூட்டுறவினின்றும் விலகும்படி செய்துவிட்டார். இவ்வாறு மிகச் சிறிய குடியரசான ஹாலண்ட் எவ்விதத் துணையுமின்றி தனியே விடப்பட்டது. இரண்டு ப்ரெஞ்சுப் படைகள் அதன் எல்லைக்குள்

1. Clifford, Arlington, Buckingham, Ashley, Lauderdale. 2. Lord Chancellor. 3. Earl of Shaftesbury. 4. Protestant Dissenters. 5. A Declaration of Indulgence.

நுழைந்தன. இங்லிஷ் கப்பல்களும் ப்ரெஞ்சுக் கப்பல்களும் அடங்கிய கடற்படையொன்று அதன் கடற்கரைப்பாகங்களைத் தாக்கியது. அப்போது அச் சிறு நாடு அழிந்துவிடும்போ லிருந்தது. அச்சமயம் அங்கு ஒரு புரட்சி[1] ஏற்பட, அதுவரையில் ஹாலண்டை ஆண்டுவந்த செல்வமிக்க வியாபாரக் குழுவினரை[2] ஓட்டிவிட்டு ஆரஞ்ச் வில்லியம்[3] என்ற சிற்றரசருக்குச் சர்வாதிகாரங்[4] கொடுத்தனர்.

இங்லிஷ் வரலாற்றில் இனி மிகப் பெரும் பதவியை வகிக்க விருந்த இச் சிற்றரசர்க்கு அவர் தம் நாட்டைக் காக்க அழைக்கப்பட்டபொழுது இருபத்தொரு வயதே ஆகியிருந்தது. எனினும், அவர் வயது குறைந்தவராயினும் அறிவு நிறைந்தவராயிருந்தார். லூயியின் பெரிய திட்டங்களுக்கு எதிராகத் தம் நாட்டின் சுதந்தரத்தைக் காப்பனதயே தம் வாழ்நாளின் முக்கிய வேலையாக அவர் கொண்டிருந்தார். தங்களை நசுக்க இருந்த அபாயங்களை உதறித் தள்ளுவதில் டச்சுக்காரர்கள் அவரது உற்சாகத்தினல் தூண்டப்பெற்றுப் பெரிய வீரர்களைப்போல் போராடினர்கள். அவர்கள் கரைகளை[5] உடைத்துக் கடல் நீரை நாட்டுக்குள் விட்டார்கள். அதனல் ப்ரெஞ்சுப் படைகள் உட்புக முடியாமல் பின்தங்கி நின்றன. அதற்குள் வில்லியம் தம் நாட்டின் பாதுகாப்புகளைச் சரிப்படுத்தி, டச்சுக்காரர்களுக்கு அடுத்தபடியாகத் தங்களையே ப்ரெஞ்சுக்காரர்கள் தாக்க வருவார்கள் என்று பயந்துகொண்டிருந்த ஜெர்மன் சிற்றரசர்களுடன் ஒரு உடன்படிக்கையும் செய்துகொண்டார்.

§ 173. **டோவர் திட்டம் முறிந்தது :**—சார்ல்ஸ் டச்சுக்காரர்மீது தாம் பெறக்கூடிய பெரு வெற்றிகள் மூலம் மக்களை உற்சாகப்படுத்தித் தம்முடைய போக்கு மாறுதலுக்கு[6] அவர்களை இணங்கச் செய்துவிடலாம் என நினைத்தார்.

---

1. Revolution. 2. The clique of wealthy merchants. 3. William of Orange. 4. Dictatorship. 5. Dykes. 6. Change of policy.

ஆயினும், அவர் எண்ணம் குஞ்சு பொரிக்குமுன் கோழிகளை எண்ண முயன்றதுபோ லாயிற்று. ப்ரெஞ்சுக்காரருடைய தரைப் படையெடுப்புத் தடைப்பட்டது மன்றி, அட்மிரல் டி ரூய்ட்டர்[1] என்பார் கடற்போரிலும் பெரு வெற்றி பெற்றார். ஆதலால், 1673-ம் வருஷத் தொடக்கத்திலேயே, வெற்றி பெறும் வழியேதும் காண்பதற்கு முன்னமே, சார்ல்ஸ் கையிலிருந்த பணத்தையெல்லாம் செலவழித்துவிட்டார். அவருடைய கூட்டாளி லூயி அவருக்கு ஒரு ப்ரான்க்[2]கூடக் கொடுக்க முடியாத நிலையிலிருந்தார். ஆதலால், சார்ல்ஸ் பார்லமென்டைக் கூட்டவேண்டியதாயிற்று.

முக்கூட்டுறவை மாற்றியதாலேயே ஆத்திரமடைந்திருந்த அங்கத்தினர்கள், சகிப்பு அறிவிப்பு[3] வெளிவந்ததும் முன்னினும் அதிகமாக ஆத்திரமடைந்தார்கள். அவ்விஷயமாக நாட்டு மக்களிடையே எவ்வளவு அதிருப்தியும் அவநம்பிக்கையும் இருந்தன என்பதைச் சார்ல்ஸ் உணரவில்லை. டிஸ்ஸென்டர்களும்(இணங்காதவர்களும்)[4]கூடத் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகள் காதொலிக்கர்களுக்குங் கொடுக்கப்பட்டமையால், அவற்றை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. டோவர் உடன்படிக்கையின்போது தாம் ஏமாற்றப்பட்டதை இதற்குள் உணர்ந்துகொண்ட ஷாப்ட்ஸ்பெரி பிரபு, மிகுந்த சீற்றங்கொண்டு, எதிர்ப்பைக் கிளப்பிவிட்டு அதற்குத் தாமே தலைவரானார். இனி அரசருடைய முயற்சிகளைக் குலைப்பதிலேயே தம் காலத்தைக் கழிக்கவேண்டுமென்று அவர் கங்கணங் கட்டிக்கொண்டார். சகிப்பு அறிவிப்பு சட்டவிரோதமான தென்று அவர் லார்ட் சான்செலர் ஹோதாவில் கூறினார். சார்ல்ஸ் அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டபோதிலும், அவருடைய தீர்மானத்தை மாற்ற வழியில்லை.

1. Admiral de Ruyter. 2. A franc. 3. Declaration of Indulgence.
4. Dissenters

இதுவே அரசருடைய தொல்லைகளின் ஆரம்பம். நாடு முழுவதிலும் காதொலிக்கர்களுக்கு விரோதமான உணர்ச்சியொன்று தோன்றியது; பார்லமென்ட் சோதனைச் சட்டம்[1] என்றொரு சட்டத்தை நிறைவேற்ற முற்பட்டது (1673). அதன்படி, உயர்ந்த உத்தியோகங்கள் வகிப்போர் எல்லோரும் காதொலிக் மதத்தின் கோட்பாடுகளில் தங்களுக்கு நம்பிக்கையில்லை யென்று வெளிப்படையாகக் கூறுமாறு வற்புறுத்தப்பட்டனர். தங்களுடைய மதக் கோட்பாடுகளை இரகசியமாகக் கையாண்டுவந்த காதொலிக் பிரமுகர்கள் பலர் இப்போது தங்கள் மதத்தை வெளியிட வேண்டியதாயிற்று. அவர்களுள் யார்க் ட்யூக்கும் ஒருவர். அவர் காதொலிக் மதத்தில் பற்றுள்ளவர் என்பது அதுவரை எல்லோரு மறிந்த இரகசியமா யிருந்தது; ஆனால்; அவரது மாறுதலைப் பற்றி வெளிப்படையாக விளம்பரஞ் செய்யப்பட்டபோது மக்களுக்குச் சகிப்பு அறிவிப்பால் ஏற்பட்ட சந்தேகமும் அச்சமும் அதிகமாயின.

அடுத்தபடி, பார்லமென்ட் அரசருக்குப் பண மானியங் கொடுக்க மறுத்து அவரைச் சண்டையிலிருந்து விலகும்படி வற்புறுத்தியது. டோவர் உடன்படிக்கைத் திட்டங்கள் எல்லாம் இவ்வாறு முறிந்தன.

§ 174. **போப் மதத்தினர் சதி**[2]:—பார்லமென்டில் மிகவும் செல்வாக்குள்ள அங்கத்தினரா யிருந்த சர் டாமஸ் ஆஸ்போர்ன்[3] என்பவரைத் தம்முடைய முக்கிய அமைச்சராக்கிப் பார்லமென்ட் தம்மிடத்தில் நம்பிக்கை வைக்கும்படி செய்ய அரசர் முயன்றார். டாமஸ் ஆஸ்போர்ன் பிற் காலத்தில் **டான்பி பிரபு**[4] ஆனார். அவர் ஒரு காவலியர்.[5] மன்னருக்கும் மதஸ்தாபனத்திற்குமுள்ள அதிகாரங்களை மிகவும் உறுதியோடு ஆதரித்த க்ளாரெண்டனை அவர்

1. Test Act. 2. The Popish Plot. 3. Sir Thomas Osborne. 4. Lord Danby. 5. A Cavalier.

பெரிதும் ஒத்திருந்தார். சார்ல்ஸையும் அவரது தம்பியை யும் நம்பாதவர்களைக்கொண்டு **நாட்டுக் கட்சி**[1] யொன்றை ஷாப்ட்ஸ்பெரி இப்பொழுது ஏற்படுத்திவிட்டதால், டான் பிக்குப் பார்லமெண்டில் ஒரே தொடர்ச்சியாக எதிர்ப்பு இருந்தது. அச்சமயத்தில் பொதுத் தேர்தலுக்கு[2] இடங் கொடுத்தால் தேர்தலாகி வரும் காமன்ஸ் சபை முன்னதை விட அதிக விரோதமாயிருக்குமென்பது நிச்சயம். ஆகவே, பார்லமென்டைக் கலைத்துவிடுமாறு அரசரைக் கட்டாயப் படுத்த ஷாப்ட்ஸ்பெரி வழிதேடலானர். அரசரும் டான்பியும் அதைத் தடுப்பதென்று தீர்மானித்திருந்தனர். டான்பி செல்வாக்குள்ளவர்களுக்குத் துரைத்தனத்தில் லாபகரமான பதவிகளைக் கொடுத்து அவர்களை மனத் திருப்தியுடன் வைத் திருந்தார். சில வருஷங்களில் அவரும் அவருடைய **அரண் மனைக் கட்சியும்**[3] நிலைத்துவிடுவார்கள்போல் தோன்றியது. ஆனல், அப்போது எல்லோர் மனத்தையும் திடுக்கிட வைத்த தொரு சம்பவம் அங்கிலேயை முற்றிலும் மாற்றிவிட்டது.

அரசரைக்கொன்றுவிட்டு யார்க் ட்யூக்கை அரியணையில் அமர்த்திவைப்பதென்றும், இங்லண்டில் காதொலிக் மதத்தை ஒரு ப்ரெஞ்சுப் படையின் உதவியைக் கொண்டு வலுக் கட் டாயமாய் ஏற்படுத்துவதென்றும், போப் மதத்தினர் இரக சியமாய் ஒரு சதி சூழ்ந்துகொண்டிருப்பதாக, 1678ஆு ஆகஸ்ட்மீ ப்ரான்ஸிலிருந்து வந்த **டைடஸ் ஓட்ஸ்**[4] என்ற ஒருவன் கூறினன். இந்த ஓட்ஸ் ஓர் அயோக்கியன். ஆயி னும், மனத்தில் சந்தேகமும் அதிருப்தியும் கொண்டிருந்த பொது மக்கள் அவன் கூறிய கதையை ஊக்கமாகக் கேட்டு நம்பினர். அதில் ஏதோ சிறிது உண்மை யிருந்திருக்கலாம். ஆயினும், அவன் அதை அலங்கரித்துப் பல கற்பனு விவரங் களுடன் சொன்னன். பல முக்கியமான இங்லிஷ் காதொ

1. Country Party. 2. General Election. 3. Court Party. 4. Titus Oates.

விக் பிரமுகர்களுங்கூட அதில் சம்பந்தப்பட் டிருந்தார்கள் என்றான். அவனுடைய பொய்ப் பிரசாரத்தின் தொடக்கத்தில் இரு சம்பவங்கள் அவனிடம் நம்பிக்கை ஏற்படும்படி செய்தது அவனுடைய அதிர்ஷ்டமே. சதியில் சம்பந்தப்பட்டவர்கள் என்று அவன் கூறியவர்களுள் யார்க் ட்யூக்கின் காரிய தரிசி கோல்மன்[1] ஒருவர். கோல்மனுடைய அறைகளைப் பரிசோதனைசெய்தபோது அங்கே அவர் ஒரு சதியில் சம்பந்தப்பட்டிருந்தார் என்று காட்டக்கூடிய சில கடிதங்கள் அகப்பட்டன. இரண்டாவதாக, ஓட்ஸ் தனது வாக்கு மூலத்தை எந்த மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் பிரமாணம் செய்து கொடுத்தானோ அவரே லண்டனுக்கருகில் ஒரு வயவில் கொலைசெய்யப்பட்டுக் கிடந்தார். அவர் பெயர் சர் எட்மண்ட் பெர்ரி காட்ப்ரெ.[2] அவர் மிகுந்த மதிப்பு வாய்ந்த ஒரு பெரிய மனிதர். தங்களுடைய சதியின் விஷயங்களையெல்லாம் நன்றாக அறிந்தவரென்று காதொலிக்கர்கள் அவரைக் கொன்றிருக்கவேண்டுமென்று எல்லோரும் சந்தேகித்தனர்.

இந்த நிகழ்ச்சிகள் ஓட்ஸினுடைய கதையை ஊர்ச்சிதப் படுத்துவதாகத் தோன்றவே, அடுத்த சில மாதங்கள் நாட்டினர் பீதியும் சீற்றமுமுற்றுக் கலவரப்பட்டிருந்தனர். அமைதியான வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த பல காதொலிக்கர்கள் சிறைப்படுத்தப்பட்டனர்; அந்நியர் படையெடுப்பினின்றும் நகரத்தைக் காப்பாற்றும் பொருட்டு லண்டன் நகர்ப்படையினர்[3] அழைக்கப்பட்டனர்; போப் மதத்தினரான கொலையாளிகளிடமிருந்து[4] தங்களைப் பாது காத்துக்கொள்ளும்பொருட்டுத் தடிகளை ஏந்தியவர்களாய் எதிர்ப்புமதவாதிகள் நடமாடினர். நீதிபதிகளும் ஜூரிகளும், மிகுந்த சீற்றங் கொண்டவர்களாய், ஓட்ஸினால்

1. Coleman. 2. Sir Edmund Berry Godfrey. 3. London train-bands.
4. 'Popish Assassins'.

குற்றம் சாட்டப்பட்டவர்களை அமைதியோடு விசாரிக்க முடியாத மனநிலைமையி லிருந்தனர். நிரபராதிகளான காதொலிக்கர்களிற் பலர் ஆவேசமிக்க கும்பல்களின் ஊளைகளுக்கும் பிதற்றல்களுக்குமிடையில் தலைவாங்கப்பட்டனர். ஓட்ஸ் ஒரு தேசிய வீரனைப்போல் மரியாதை செய்யப்பட்டான்; உபகாரச் சம்பளத்துடனும் மெய்க்காவலாளருடனும் ஒயிட்ஹால்[1] அரண்மனையிலேயே அவனுக்கு வசிக்க இடங்கொடுத்தார்கள். அரசர் தெளிவான அறிவுடையவரானபடியால், அவர் பீதிகொள்ளவில்லை. ஆயினும், மரண தண்டனை உத்தரவுகளில் அவர் கையொப்பமிட மறுக்கவில்லை. மறுத்திருப்பாரானால், அவரும் ஒரு காதொலிக்கரே என்று மக்கள் சந்தேகப்பட நேரிடும்.

பார்லமென்ட் கூடியபொழுது ஷாப்ட்ஸ்பெரி பொது மக்களின் கிளர்ச்சியைக் கிண்டிவிட்டார். டான்பி பிரபு லூயி மன்னரோடு இரகசியமாகச் சில விவகாரங்களை நடத்திக்கொண் டிருப்பதாகவும், அதுவும் அச் சதியின் ஒரு அமிசமென்றும் கூறி, அதை ரூபிக்க முற்பட்டார். பார்லமென்டில் மந்திரியை விசாரிக்க[2] ஏற்பாடாயிற்று. அவ் விசாரணையால் டோவர் உடன்படிக்கையின் இரகசியங்களெல்லாம் வெளியாகிவிடுமென்று பயந்த சார்ல்ஸ், விஷயத்தை வளரவிடாமல் தடுப்பதற்காகப் பார்லமென்டைக் கலைத்துவிட்டார் (1679). ஷாப்ட்ஸ்பெரியின் எண்ணம் பலித்தது.

§ 175. **விலக்கு மசோதாக்கள்**[3]:—சான்செரி சந்தில்[4] 'பச்சை நாடா கிளப்'பைத்[5] தமது தலைமைக் காரியாலயமாகக் கொண்டு ஷாப்ட்ஸ்பெரி அடுத்த பொதுத் தேர்தலுக்காக ஒரு பெரிய தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கினர். அதுவே இங்லண்ட் சரித்திரத்தில் நடந்த முதல் தேர்தல் பிரசாரம். அவர் முயற்சியால் அரண்மனைக் கட்சிக்கு எதிர்க்கட்சியின

1. Whitehall. 2. Impeach. 3. Exclusion Bills. 4. Chancery Lane.
5. Green Ribbon Club.

ருள் பலர் பார்லமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். யார்க் ட்யூக்கை எப்போதும் அரசராக முடியாமல் தடுத்து ப்ராட்டெஸ்டன்ட் மதத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதை அவர் புதிய பார்லமெண்ட் உணரும்படி செய்தார். சார்லஸின் இராணிக்குப் பிள்ளையில்லாமையால் அவரது தம்பியே அவருக்குப்பின் அரசபட்டத்துக்கு உரியவராவர். யார்க் ட்யூக்கின் உரிமை சமீப காலத்தில் ஆரஞ்ச் சிற்றரசரை மணஞ்செய்துகொண்ட அவர் மகள் மேரிக்குச் செல்ல வேண்டுமென்று ஒரு விலக்கு மசோதா கொண்டுவரப்பட்டது (1679). அரசர் உறுதியுடன் நடந்துகொண்டார். குடும்பப் பற்று அவருடைய சிறந்த குணங்களில் ஒன்றானபடியால், பார்லமெண்டை அச் சட்டத்தை இயற்றவொட்டாமல் அவர் கலைத்துவிட்டார்.

அவருக்குப் பணம் மிகவும் அவசரமாகத் தேவையாயிருந்தபடியால், வெகுசீக்கிரம் அவர் மற்றொரு பார்லமெண்டைக் கூட்டவேண்டியதாயிற்று. உடனே எதிர்ப்புக்கட்சி[1] மற்றொரு விலக்கு மசோதாவினைக் கொண்டுவந்தது. இப்போது அரசரது வைப்பாட்டி மகனான மான்மத் ட்யூக்குக்கு[2] வாரிசுரிமை வழங்கவேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். மான்மத் ட்யூக் அழகானவராயிருந்தபோதிலும், குணமேம்பாடும் மனவுறுதியுமில்லாதவர்; அவர் ஒரு ப்ராட்டெஸ்டன்டாயிருந்ததால் காதொலிக்கரான யார்க் ட்யூக்கைவிட அவரையே மக்கள் விரும்புவார்களென்று ஷாப்ட்ஸ்பெரி[3] நினைத்தார். ஆயினும், காதொலிக்கரொருவர் அரசராவதை நினைத்துத் திகிலுற்ற மக்கள்கூட, உண்மையான அரசகுடும்பத்தை இராச்சியாதிகாரத்தினின்றும் விலக்குதலை மிகவும் வெறுத்தார்கள். ஆகவே, மான்மத்தைச் சிபார்சுசெய்ததால் ஷாப்ட்ஸ்பெரியும் அவரது நண்பர்களும் மிக்க ஆதரவை இழந்தனர்.

1. The Opposition. 2. The Duke of Monmouth. 3. Shaftesbury.

ஆவேசமிக்க விவாதங்கள் நடந்த அச்சமயத்தில் இரு அரசியல் கட்சியினரும்[1] ஒருவருக்கொருவர் கேவலமான பெயர்களை இட்டு அழைத்தனர். அடுத்த இருநூறு ஆண்டுகள்வரை அக்கட்சிகளுக்கு அப்பெயர்களே வழங்கிவந்தன. 'நாட்டுக்கட்சி'யினர்[2] அயர்லண்டில் நாடுகடத்தப்பட்ட சில காதொலிக்கர்களுக்கு வழங்கிவந்த பெயரைக் கொண்டு தங்களுடைய எதிரிகளை "டோரி"[3] என்றும், 'அரண்மனைக் கட்சி'யினர்[4] தென்கிழக்கு ஸ்காட்லண்டின் மதப்பித்து கொண்ட ஒப்பந்தக்காரர்களுக்கு[5] வழங்கிவந்த பெயரைக் கொண்டு தங்களுடைய எதிரிகளை "விக்"[6] என்றும் குறிப்பிட்டனர்.

இரண்டாம் சார்ல்ஸ் தெளிவும் நிதானமும் புத்தி கூர்மையும் நிறைந்த இராஜதந்திரி. காலப்போக்கில் தனக்கு வெற்றிகிடைக்குமென்று அவர் உணர்ந்தார். நாட்டில் கா்தொலிக்கர்கள் விஷயமாகக் கிளம்பியிருந்த ஆவேசம் ஒரு காலத்தில் தணிந்துவிடுமென்பது அவருக்குத் தெரியும். ஓட்ஸினலும்[7] அவனைச் சார்ந்தோராலும் குற்றஞ்சாட்டப்பட்ட காதொலிக்கர்களைக் குற்றவாளிகளென்று ஜூரிகள்[8] கண்மூடித்தனமாகத் தீர்மானிக்க மறுக்க ஆரம்பித்தது இதற்கு ஒரு அடையாளமாகும். எதிர்ப்புக் கட்சியின்[9] பலத்தை ஒடுக்க அரசர் அப்போது ஒரு வழி கண்டார். பதினான்காம் லூயி இங்லண்டைத் தம் பக்கம் சேர்த்துக்கொள்ள இன்னும் அக்கரை உள்ளவராயிருந்தார். சார்ல்ஸ் தம் செலவுக்கெல்லாம் பார்லமென்டின் தயவை எதிர்பார்த்திருந்தவரை, அது முடியாதென்பது அவருக்குத் தெரியும். சார்ல்ஸ் இனி பார்லமென்டைக் கூட்டத் தேவையில்லாதபடி அவருக்குப் பண உதவி செய்வதாக மீண்டும் லூயி முன்வந்தார்.

1. The two political parties. 2. The Country Party. 3. Tory.
4. The Court Party. 5. Covenanters. 6. Whig. 7. Oates. 8. Juries.
9. The Opposition.

தங்களுடைய விலக்கு மசோதாவை ஏற்றுக்கொள்ளுமாறு அரசரைக் கட்டாயப்படுத்தத் தங்களால் முடியுமென்று விக்குகள்[1] பெருமைப்படுத்திக்கொண் டிருந்த சமயத்தில், அரசர் திடீரென்று பார்லமென்டை மீண்டும் கலைத்தார்*. தேவையானால் அரசரைப் படைப்பலங் கொண்டு தாக்கும் நோக்கத்துடன் ஷாப்ட்ஸ்பெரி தமது கட்சியினரை ஒன்று சேர்க்க முயன்றார்; ஆனால், அது முடியவில்லை. நாடுமுழுதும் இச்சச்சரவுகளால் அலுத்துப்போயிருந்தது. எப்படியும் பார்லமென்ட் கூடாதவரையில் புது வரிகள் ஏற்படுவதற்கில்லை என்பது ஒரு அனுகூலமே. நாட்டுக் கனவான்களும் பார்சன்களும்[2](குருமார்கள்) சிறிதுகாலம் போப் மதத்தினர் சதியினால் பீதியடைந்திருந்தனர். ஆனால், அதெல்லாம் இப்போது தெளிந்துவிட்டது. இப்பொழுதும் நாட்டில் செல்வாக்கு நிறைந்திருந்தவர்கள் அவர்களே. அவர்கள் பழையபடி அரசகுடும்பத்திற்கு ஆதரவுகாட்ட முன்வரலாம். ஷாப்ட்ஸ்பெரியும் அவரது நண்பர்களும் ஹாலண்டுக்கு ஓடிவிட்டனர். தற்காலிகமாக விக் கட்சி அறவே ஒழிக்கப்பட்டது. இரண்டாம் சார்ல்ஸ் தமது வெற்றியின் பலனை மேலும் நான்கு வருடங்கள் அனுபவித்துவிட்டு இறந்தார். இறக்குந் தருவாயில் அவர் இரண்டு குறிப்பிடத்தக்க காரியங்கள் செய்தார். ஒன்று, காதொலிக் மதத்தை அவர் வெளிப்படையாகத் தழுவினது; இரண்டாவதாக, மற்றவர்களுக்கு 'ஆயாசம் விளைவிக்கக் கூடிய அவ்வளவு நேரம் இறந்துகொண்டிருந்ததற்காக' அவர் பரிகாசமாக அருகில் இருந்தவர்களது மன்னிப்பைக் கேட்டது.

---

*லண்டனில் விக்குகளின் செல்வாக்கு ஓங்கி யிருந்ததால், சார்ல்ஸ் இந்தப் பார்லமென்டை ஆக்ஸ்பர்டில்[3] கூட்டினார்.

1. The Whigs. 2. Squires and parsons. 3. Oxford.

முப்பத்தொன்பதாம் அத்தியாயம்

# எதிரிகளைச் சம்பாதித்துக்கொள்ளும் நாசூக்கான வித்தை[1]

(1685—1688)

§ 176. **இரண்டாம் ஜேம்ஸ் பட்டத்துக்கு வருதல்:**— 1681-ல் விக்குகள்[2] நன்கு நிலைகுலைக்கப் பெற்றதால், யார்க் ட்யூக்[3] இரண்டாவது ஜேம்ஸ் என்ற பட்டத்துடன் அரசரானபோது, எதிர்ப்பின் அறிகுறி ஒன்றும் தென்படவில்லை. அவர் தமது அண்ணனைவிடக் கண்டிப்பானவர்; ஆர்வமிக்க காதொலிக் மதத்தினரானபோதிலும், அவர் தம் கடமையை நன்கு உணர்ந்தவர்; நாணயஸ்தர் என்றெல்லாம் பெயரெடுத்திருந்தார். பட்டம் ஏற்றவுடன் அவர் பழைய துரைத்தன அமைச்சர்களையும் உத்தியோகஸ்தர்களையும் அவரவர் பதவிகளில் ஊர்ச்சிதப்படுத்தினர்; சட்டப்படி இங்லண்டில் அமைக்கப்பெற்றுள்ள மதஸ்தாபனத்தையும் துரைத்தனத்தையும் அப்படியே நிலைக்கச்செய்வதாக இராஜசபை அங்கத்தினர்களுக்கு உறுதி கூறினர். பார்லமென்டிலும் இராஜசபையிலுமிருந்த டோரி[4] அங்கத்தினர்கள் அவர் ஒரு எதிர்ப்புமதத்தினராயில்லையே யென்று விசனித்தபோதிலும், அவர்கள் தம் வாக்கைக் காப்பாற்றும் ஒரு அரசரைப் பெற்றதாகத் தேறுதலடைந்தனர். ஹைசர்ச் பார்சன்கள்[5] (குருமார்கள்) அரசரின் 'தெய்விக உரிமை'க் கொள்கை[6]யைப் பரப்புவதில் மிகுந்த உற்சாகங்கொண் டிருந்தனர்.

---

1. 'The gentle art of making enemies'. 2. Whigs. 3. Duke of York. 4. Tory. 5. High Church parsons. 6. Divine Right of Kings.

அரசர் நீரோ சக்கரவர்த்தி[1]யைப் போன்ற கொடுங்கோலராக இருந்த போதிலும்; குடிமக்கள் முணுமுணுக்காமல் அவருக்குக் கீழ்ப்படிந்து நடத்தலையே தங்களது சிறந்த மததருமமாகக்கொண்டு ஒழுகவேண்டும் என்று அவர்கள் கூறினார்கள்.

முன் ஸ்டுவர்ட் அரசர்களில் எவரும் இரண்டாம் ஜேம்ஸைப்போன்ற பலமான நிலையில் இருந்ததில்லை. முதலில், அவரது அண்ணன் இங்லண்ட் வரலாற்றிலேயே முதல் தடவையாக ஒரு நிலையான படையைத்[2] திரட்டி வைத்திருந்தார். அடுத்தபடியாக, அரசாங்கத்தின் சாதாரண செலவுகளுக்குப் போதுமான பணத்தைப் பார்லமென்ட் அவருக்கு ஆயுள் மானியமாகக் கொடுத்தது. மேலும், முதலாம் ஜேம்ஸ், முதலாம் சார்ல்ஸ், இரண்டாம் சார்ல்ஸ் ஆகியோர், அரசருடைய அதிகாரத்தைப்பற்றிப் பொறாமை கொண்டிருந்த பார்லமென்டுகளோடு சம்மாளிக்க வேண்டியவர்களாயிருந்தனர்; ஆனால், இரண்டாம் ஜேம்ஸின் பார்லமென்டிலிருந்த பெரும்பான்மையோர் டோரிகளாக[3] இருந்ததால், அவர்கள் அரசருக்கு அடங்கி நடத்தலையே தங்கள் கட்சிக்கொள்கையாகக்கொண்டு ஒழுகினர். இவையன்றி, கிறிஸ்தவ உலகிலேயே வன்மைமிக்க பெரிய இராச்சியமாயிருந்த ப்ரான்ஸின் ஆதரவு அவருக்கு எப்போதும் இருந்தது.

டோவர் உடன்படிக்கைக்குப் பிறகு பதினான்காம் லூயியின் ஆக்கிரமிப்புத் திட்டங்கள் விரிந்துகொண்டே வந்தன(§ 172). தமது நாட்டின் கிழக்கு எல்லையிலிருந்த முக்கியமான மாகாணங்களை அவர் சேர்த்துக்கொண்டார். ஸ்பெயினுக்கும் ஜெர்மனிக்குங்கூடத் தாமே தலைவராகலாமென்ற நம்பிக்கையையும் அவர் கொள்ளலானார். கொஞ்சகாலமாக அவர் ஹ்யுகினாட்டுகளை[4] (ப்ரெஞ்சு ப்ராட்டெஸ்டன்டுகள்) ஒறுப்பதென்று தீர்மானித்து நடவடிக்கைகள்

1. Emperor Nero. 2. A standing army. 3. Tory. 4. Huguenots.

எடுத்துக் கொள்ளவும் ஆரம்பித்துவிட்டார். அதனுல் நாங்ட் ஆஞ்ஞை* ரத்தாகிவிட்டது.[1]

ஹாலண்ட் ஸ்டாட்ஹோல்டரா†[2]யிருந்த ஆரஞ்ச் வில்லியம் ஒருவரே லூயியின் திட்டங்களுக்கு ஒரு தடையாயிருந்தார். டச்சுக் குடியரசினுடைய சுதந்தரத்தை நிலைக்கச்செய்ததுமன்றி, ப்ரான்ஸினுல் தாக்கப்படலாமென்று பயங்கொண்டிருந்த இதர நாடுகளோடு (அநேக ஜெர்மன் நாடுகளும் ஸ்பெயினும் உட்பட) ஒரு ஒப்பந்தத்தை[3] வில்லியம் செய்திருந்தார். யூரோப்பில் ஒரு பெரும் போர் நடக்கலாமென்ற பயம் இருந்தது. அந்த யுத்தத்தில் ப்ரான்ஸின் ஆக்கிரமிப்பால் யூரோப்பிய நாடுகளின் சுதந்தரமும் ப்ராட்டெஸ்டன்ட் மதமும் ஆபத்துக் குட்படலாம். இந்த ஆபத்தான நிலையில் இங்லண்ட் யார் பக்கம் சேருமோ? வரப்போகும் சண்டையில் இங்லண்ட் லூயி பக்க மிருக்குமானுல், அதன் செல்வ வளங்களும் போர்க்கப்பல்களும் அவருக்குப் பேராதரவாக அமையும்; அந்த ஆதரவை நழுவ விடக்கூடாதென்பது பலமிகுந்த லூயிக்கும் பட்டது. ஆகவே, தம்மைப்போலவே, 'தெய்விக உரிமை' கொண்டாடும் காதொலிக்கரான இரண்டாம் ஜேம்ஸ் அப்போது இங்லண்ட் சிம்மாசனத்தில் அமர நேர்ந்தது அவருக்கு மிகுந்த அனுகூலமே. லூயியும் புதிய இங்லிஷ் அரசருக்குத் தாம் தொடர்ந்து உதவி புரிவதாக வாக்களித்தார்.

இரண்டாம் ஜேம்ஸினுடைய ஆட்சியின் வரலாறு, மூன்று வருஷ காலத்திற்குள் இந்த அனுகூலங்களை யெல்லாம் இழந்து, முடிவில் அவர் தம் நாட்டையும் எவ்வாறு அடியோடு இழந்தார் என்பதன் வரலாறேயாகும்.

---

*இது நான்காம் ஹென்றி 1598-ல் ப்ரெஞ்சு ப்ராட்டெஸ்டன்டுகளுக்கு அமைதியுடன் வாழவும் வழிபடவும் உரிமையளித்த ஆஞ்ஞாபத்திரம்.

† டச்சுக் குடியரசுகளின் ஒருவகையான பரம்பரைத் தலைவர்.

1. Revocation of the Edict of Nantes. 2. Stadholder. 3. The League of Augsburg (ஆக்ஸ்பூர்க் சங்கம்).

§ 177. **மான்மத் கலகம்:**—ஆரம்பத்தில் ஜேம்ஸுக்கு விரோதமாக எழுந்த கலகம், பட்டத்துக்கு வந்த வருஷத்தில் அவர் எவ்வளவு பலம் பொருந்தியவராக இருந்தாரென்பதைத்தான் காட்டியது.

1681-ல் இரண்டாம் சார்ல்ஸ் வெற்றிபெற்றபோது, அரண்மனைக் கட்சியினரை எதிர்த்தவர்களுள் முக்கியஸ்தர்களான பலர் நாட்டைவிட்டுப் போகும்படி நேரிட்டதை நாமறிவோம். அவர்களிற் பெரும்பாலோர் நெதெர்லண்ட்ஸுக்குக் கூட்டமாகச் சென்றனர்; அவர்களுள் மான்மத் ட்யூக்கும்[1] ஆர்கைல் ஏர்லும்[2] மிக முக்கியமானவர்கள்.* ஜேம்ஸ் பட்டத்துக்கு வருவதைத் தடுக்க அவர்களால் முடியவில்லை. ஆயினும், ஒரு ப்ராட்டெஸ்டன்டுக்குப் பட்டம் வழங்க ஸ்காட்லண்ட் மக்களும் இங்லண்ட் மக்களும் ஏற்ற தருணமொன்றை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருந்ததாக மட்டும் அவர்கள் நம்பினார்கள். ஆகவே, அவர்கள் இரண்டிடங்களிலும் கலகஞ்செய்ய யோசித்தனர். ஆர்கைல் பிரபு ஸ்காட்லண்ட் ஒப்பந்தக்காரர்களை[3] ஒன்று திரட்டி அவர்களுக்குத் தலைமை வகிப்பதென்றும், மான்மத் பிரபு இங்லண்டின் தென்கிழக்குப் பிரிவுகளிலுள்ள ப்யூரிட்டன்களை ஒன்று சேர்த்து அவர்களுக்குத் தலைமை வகிப்பதென்றும் திட்டம் வகுத்துக்கொண்டு புறப்பட்டனர்.

ஆர்கைல் பிரபு தாம் மேற்கொண்ட வேலையைத் தொடங்குமுன்பே தோல்வியுற்றார். ஒப்பந்தக்காரர்களின் எதிர்ப்பு உணர்ச்சியெல்லாம் அரசர் சமீபகாலத்தில் எடுத்துக்கொண்ட ஒறுத்தல் நடவடிக்கைகளால் நசுக்கப்பட்டிருந்ததால், அவர்களைக்கொண்டு ஆர்கைல் ஒன்றுஞ் சாதிக்கமுடியாமல் சீக்கிரத்தில் பிடிபட்டுக் கொலையுண்டார்.

மான்மத்தின் முயற்சி வெற்றிபெறும்போ லிருந்தது.

---

* ஷாப்ட்ஸ்பெரி அதற்குள் இறந்துவிட்டார்.

1. The Duke of Monmouth. 2. The Earl of Argyll. 3. Covenanters.

டார்செட்ஷைரிலுள்ள லைம் ரீஜிஸில்[1] கப்பலை விட்டு இறங்கிச் சாமர்செட்டுக்கு[2] அவர் சென்றபொழுது, நாட்டுப்புறத்திலிருந்த குடியானவர்களும் சிறிய பட்டணங்களிலிருந்த நெசவாளர்களும் அவரை ஆதரிப்பதற்காகக் கும்பலாகச் சேர்ந்தார்கள். மான்மத்தை அவர்கள் க்ளாரெண்டன் சட்டத் தொகுப்பினின்றும்[3] நாட்டை விடுவிக்க வந்த வீரரென நினைத்தனர். டான்டனை[4] வந்தடைந்த பொழுது அவர் ஐயாயிரம் பேர்களுக்குத் தலைவரா யிருந்தார். அங்கே மிகுந்த குதூகலத்தினிடையே அவர் அரசர் என்ற பட்டத்தை ஏற்றுக்கொண்டார். ஆனால், அவருடைய ஆட்களுக்குச் சரியான பயிற்சியும் ஆயுதங்களும் இல்லை. அவர்களுள் அநேகருக்குத் தடிகளின் நுனியில் கட்டப்பட்ட அரிவாள்களை யன்றி வேறு ஆயுதங்களில்லை. ஆனால், அரசரோ கலகக்காரர்களைத் தாக்கச் சிறந்த பயிற்சிபெற்ற வீரர்களைக் கொண்ட பலமிக்க ஒரு படையைக் கொண்டுவர முடியும். கலகக்காரர்கள் அரசர் படையை ஸேட்ஜ்மூர்[5] என்ற இடத்தில் இரவில் தாக்கினர்கள் (1685); ஆயினும், அரசர்படை வீரத்தோடு போரிட்டபடியால், அவர்கள் முறியுண்டு ஓடினர். வெற்றிபெற்ற அரசர் படையினர், தோல்வியுற்று ஓடியவர்களை இரக்கமின்றித் தொடர்ந்து கொன்றனர். நிராயுதபாணிகளான நூற்றுக் கணக்கினர் கொல்லப்பட்டனர்; கடுமையான இராணுவ விசாரணைக்குப்பின் மற்றும் நூற்றுக்கணக்கான பேர் தூக்கிலிடப்பட்டனர். மான்மத் ட்யூக் மனவருத்தத்துடன் கடற்கரைப்பக்கம் ஓடித் தப்ப முயன்றார்; ஆயினும், அவரைப் பிடித்துக் கொடுப்போருக்கு ஐயாயிரம் பவுன் பரிசு கொடுக்கப்படு மென்று விளம்பரமாயிருந்தபடியால், அவரைத் தேடிச் சென்றோர், புதுக்காட்டில்,[6] ஒரு பள்ளத்தில் பசியாலும் களைப்பாலும் குற்றுயிராயிருந்த நிலையில்

1. Lyme Regis in Dorsetshire. 2. Somerset. 3. The Clarendon Code. 4. Taunton. 5. Sedgemoor. 6. New Forest.

அவரைக் கண்டெடுத்துச் சென்றார்கள். அவர்மீது மரண தண்டனைச் சட்டமொன்று[1] முன்னதாகவே இயற்றப்பட்டிருந்தது. மேலும், அவருடைய கொடிய சிற்றப்பனும் அவரைக் கருணையோடு நடத்தத் தயாராயில்லை.

இந்தத் துக்ககரமான கதை இத்துடன் முடியவில்லை. அசைஸ் நீதிமன்றங்கள் கூடும் ஹான்ட்ஸ், வில்ட்ஷைர், சாமர்செட், டார்செட் முதலிய பட்டணங்களில்[2], கலகத்தில் சேர்ந்ததற்காகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் கூட்டங் கூட்டமாகக் கொண்டுவரப்பட்டார்கள். கலக முயற்சியைப் பற்றிய எண்ணம் மறுபடியும் ஜனங்கள் மனத்தில் தோன்றாதபடி அவர்களைப் பயமுறுத்தும் வழியில் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காக அரசர் தலைமை நீதிபதிப் பிரபு ஜெப்ரேஸை[3] அனுப்பி வைத்தார். பிறருக்குப் பயத்தையும் துன்பத்தையும் விளைவிப்பதில் ஜெப்ரேஸுக்கு இயற்கையாகவே ஒரு திருப்தியுண்டு; அதோடு, அவர் அரசாங்கத்தின் தயவைப் பெறவேண்டுமென்ற விருப்பமும் கொண்டிருந்தார். அவரது அசைஸ் நீதிமன்றம் இரத்தக் களரியான அசைஸ்[4] என்று வழங்கப்பட்டது.

மூன்று வாரத்தில் அவர் யாதொரு பரிவுமின்றி முந்நூறு பேருக்கு மரணதண்டனையும், தொள்ளாயிரம் பேருக்குத் தீவாந்தர சிக்ஷையும் விதித்தார்.* அவர் லண்டனுக்குத் திரும்பியபொழுது அவருடைய இராஜ விசுவாசத்திற்குச் சன்மானமாக லார்ட் சான்ஸெலர்[5] ஆக்கப்பட்டார்; ஆனால், அவருடைய கொடூரமான செய்கைகள் அரசர் விஷயமாக உற்சாக மிகுந்திருந்த டோரிகளுக்குக்கூட நடுக்கத்தைத் தந்தன.

---

* இவர்கள் மேற்கிந்தியத் தீவுகளின் தோட்டங்களில் அநேகமாக அடிமைகளாக வேலை செய்ய அனுப்பப்பட்டார்கள். அவர்களுள் மீண்டும் தாய்நாடு திரும்பியவர்கள் வெகு சிலரே.

1. Act of Attainder. 2. The assize towns: Hants, Wiltshire Somerset, Dorset. 3. Lord Chief Justice Jeffreys. 4. Bloody Assize. 5. Lord Chancellor.

§ 178. **ஜேம்ஸ் மன்னர் தமது சொரூபத்தைக் காட்டுகிறார் :**—கலகக்காரர்கள் மிகச் சுலபமாக அடக்கப்பட்டதைக் கண்ட ஜேம்ஸ் தமக்கு எதைச் செய்யவும் போதிய பலமுள்ளதென நினைக்கலானார். அந் நினைவே அவரது அழிவைத் தேடிவைத்தது. ஆரம்பத்தில் அவர் இங்லண்ட் மதஸ்தாபனத்தை ஆதரிப்பதாகத் தாம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற நினைத்திருந்தார். இப்பொழுதோ சிறிதும் தாமதமின்றி காதொலிக் மதத்தை நாட்டில் பரப்ப முயலுவது தமது கடமை என நினைக்க லானார். இதற்குச் சோதனைச் சட்டம்[1] (§ 173), பெருந் தடையாக இருந்ததால் பார்லமெண்ட் இயற்றிய எந்தச் சட்டத்தையும் விலக்கி வைக்க வேண்டிய[2] அவசியம் தமக்குத் தோன்றும்போது விலக்கி வைத்துக் காரியங்களை நடத்திக்கொண்டுபோகத் தமக்கு உரிமை உண்டென்று அவர் கூறலானார். இதனால் அவர் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவரல்லர் என்றும், பார்லமெண்ட் எல்லா அதிகாரங்களையும் இழக்கவேண்டுமென்றும் ஏற்படும். ஆனால், பார்லமெண்டைப்பற்றி ஜேம்ஸ் கவலைப்படவேயில்லை. படைக்கும் மற்ற பதவிகளுக்கும் காதொலிக் உத்தியோகஸ்தர்களை நியமனஞ் செய்து சோதனைச் சட்டத்தை அவர் அலக்ஷியஞ்செய்ய ஆரம்பித்தார். எதிர்ப்புமதத்துக்குப் பேராதரவுகாட்டிய லண்டன் மக்களைப் பயமுறுத்த ஹௌன்ஸ்லோ ஹீத்[3] என்னுமிடத்தில் அவர் ஒரு பெரும் படையைக் கூட்டி வைத்திருந்தார். ஒன்றன்பின் ஒன்றாக நீதியற்ற காரியங்களைச் செய்து தம்மை ஆர்வத்துடன் ஆதரித்தவர்களையும் அவர் பகைத்துக்கொண்டார். இராஜசபையிலிருந்த சில முக்கியஸ்தர்கள் விலக்கு மசோதாக்களைக்[4] கொண்டு வந்தபோது ஏற்பட்ட சங்கட நிலைகளிலெல்லாம் அவரை ஆதரித்த உறுதியான டோரிகளை[5] அவர்கள் எதிர்ப்பு

1. Test Act. 2. Dispense with. 3. Hounslow Heath. 4. The Exclusion Bills. 5. Tories.

மதத்தினர்[1] என்ற ஒரே காரணத்திற்காக வேலையை விட்டு விலக்கினர். ஆக்ஸ்பர்ட் கல்லூரிகளுக்கெல்லாம் காதொலிக்கர்களே தலைவர்களாக நியமிக்கப்படவேண்டுமென்ற ஒரே பிடிவாதமா யிருந்து, அவர் மன்னரதிகாரத்துக்குப் பேராதரவாயிருந்த அச் சர்வ கலாசாலையை விரோதித்துக்கொண்டார். அரசரை எதிர்த்தல் கூடாது என்னும் கொள்கையை ஞாயிற்றுக் கிழமைகள் தோறும் தங்கள் கோவில் பிரசங்கங்களில் வற்புறுத்திக்கொண்டிருந்த நாட்டுப் பார்சன்கள்[2] காதொலிக் பாதிரிமார் தங்கள் ஸ்தானங்களுக்கு வந்து தங்களை ஓட்டிவிடுவார்களென்று பயப்பட ஆரம்பித்தனர். டோரிகளாயிருந்த நாட்டுக் கனவான்களுள்[3] பலர், ஒரு காலத்தில் மடங்களுக்குச் சொந்தமாயிருந்து இப்போது தங்களுடையதான நிலங்களை இனித் தங்களை அனுபவிக்கும்படி விடுவார்களா என்று சந்தேகப்பட ஆரம்பித்தனர். மதஸ்தாபனத்தையும் அரசரையும் ஆதரித்த கட்சியார்[4] அரசர் ஆணைக்குக் கீழ்ப்படிதலைப்பற்றி ஆவேசத்தோடு பேசியபோது, தங்களுடைய அன்பான மதஸ்தாபனத்திற்கே அந்த அரசர் உலை வைக்க முயல்வாரென்பதைக் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

உண்மையில், டோரிகளும் ஜேம்ஸும் ஒருவர் எண்ணங்களை மற்றொருவர் சரியாக அறிந்துகொள்ளா திருந்தனர். ஆங்லிகன் மதஸ்தாபனத்தை[5] ஆதரிப்பதாகச் சொன்ன தமது வாக்கை அரசர் காப்பாற்றுவாரென்று டோரிகள் நினைத்தனர். அரசரை எதிர்ப்பதில்லை என்ற தங்களுடைய கொள்கைப்படி கடைசிவரையில் டோரிகள் நடந்துகொள்வார்களென்று அரசரும் நினைத்தார்.

§ 179. **கடைசி முறிவு:**—அரசருடைய அதிகாரங்களுக்கு முக்கிய ஆதரவளித்த ஹைசர்ச் டோரிகளுக்குத்[6] திருப்தியுண்டாகும் வண்ணம் அரசாங்கம் 1681-லிருந்து

1, Protestants. 2. Country parsons. 3. Tory squires. 4. Church-and-King Party. 5. The Anglican Church. 6. High Church Tories.

பார்சன் = திருச்சபை மதகுரு.

இணங்காதவர்கள்[1]மீது முன்னைவிட மிகக் கடுமையாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வந்தது. ஆனால், மதஸ்தாபனத்தை ரோமன் முறைகளைப் பின்பற்றி நடத்துவதற்கு அந்த டோரிகள் ஒரு பொழுதும் சம்மதிக்கமாட்டார்களென்பதை ஜேம்ஸ் அறிந்ததும், அவர் இணங்காதவர்களைச் சந்தோஷப்படுத்தி அவர்கள் ஆதரவைச் சம்பாதிக்கத் தீர்மானித்தார். காதொலிக்கர்களுக்கு வழிபாட்டுச் சுதந்தரம்[2] அளிப்பதை ஆதரிப்பதன் மூலம் தங்களுக்கும் வழிபாட்டுச் சுதந்தரம் பெற அவர்கள் விரும்புவார்களென்று அவர் நம்பினர். இவ்வித நம்பிக்கையோடு அவர் சகிப்பு அறிவிப்புக்களை[3] வெளியிட்டார் (1687-8). அவற்றின் மூலம் அவர் மதசம்பந்தமான சோதனைகளை[4] ஒழித்து எல்லோருக்கும் வழிபாட்டுச் சுதந்தரத்தை வழங்கினர். இரண்டாம் சார்ல்ஸ் காலத்தில் இக்கொள்கை(§ 173) மக்களால் ஏற்கப்படவில்லை. இப்போதும் அது ஏற்கப்படாது போயிற்று. இணங்காதவர்கள் ஆங்லிகன் பார்சன்களையே வெறுத்தவர்கள்; காதொலிக் பாதிரிகளையோ அவர்கள் மிகுதியும் வெறுத்தார்கள். தம்முடைய எண்ணத்தை அவர்களின் ஆதரவைப் பெற்று நிறைவேற்றிக்கொண்டவுடனே ஜேம்ஸ் மறுபடியும் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வாரென்றும் அவர்கள் நினைத்தார்கள். மேலும், அப்போது பதினான்காம் லூயியினுடைய கொடுமைகளைச் சகியாத ஆயிரக்கணக்கான ஹ்யுகினட்டுகள்[5] இங்லண்டுக்குத் தப்பி வந்திருந்தார்கள். எதிர்ப்புமதத்தை[6] வேரறுப்பதில் முனைந்திருந்த ஒரு அரசரிடமிருந்து இங்லிஷ் மக்கள் எதை எதிர்பார்க்க முடியுமென்பதற்கு அவர்களது அனுபவம் கண்கூடான ஒரு சான்றாக இருந்தது.

---

1. Dissenters. 2. Freedom of worship. 3. Declarations of Indulgence. 4. Religious tests. 5. Huguenots. 6. Protestantism.

தொடர்ச்சியாக இரு ஞாயிற்றுக்கிழமைகளில் குருமார்கள் தங்கள் கோவில்களில் தொழுகைக்குக் கூடும் கூட்டத்தினருக்குச் சகிப்பு அறிவிப்பினைப் படித்துக் காட்ட வேண்டுமென்று ஜேம்ஸ் 1688ஆ ஏப்ரில்மீ உத்தரவிட்டார். அவர்களுள் ஆறு பிஷப்புகள் கான்டெர்பெரி ஆர்ச்பிஷப்பின் தலைமையின்கீழ், அரசரைத் தமது உத்தரவை மீட்டுக்கொள்ளும்படி வேண்டி ஒரு மனு அனுப்பினார்கள். ஜேம்ஸ் மிக்க கோபமடைந்து இராஜ நிந்தனையான ஒரு பத்திரத்தை வெளியிட்டதற்காக அவர்கள் மீது நடவடிக்கை தொடுத்தார். அந்த ஏழு பிஷப்புகளின் விசாரணையை[1] மிக ஊக்கத்தோடு கவனித்துவந்த மக்கள் அவர்கள்மீது குற்றமில்லை[2] என்று தீர்ப்பு கூறப்பட்டபோது மிகவும் உற்சாக மடைந்தனர். ஹௌன்ஸ்லோ ஹீத்[3] என்ற இடத்தில் அணிவகுக்கப்பட்டிருந்த அரசரின் போர்வீரர்களுங்கூட அதைக் கேட்டுப் பெருமகிழ்ச்சியுடன் ஆரவாரஞ் செய்தனர்.

பொதுஜன உணர்ச்சி இவ்வகையில் வெளியாவதைக் கண்ட எந்த அறிவாளியும் இனிமேல் ஜாக்கிரதையாக இருக்க முயலுவான். ஆனால், அவற்றை யெல்லாம் ஜேம்ஸ் இலட்சியம் செய்யவேயில்லை. அப்பொழுது அவருக்கு ஒரு பிள்ளையும் பிறந்தபடியால், இங்லண்டில் காதொலிக் மதத்தை இனி நிலையாக்கிவிடலாமென்று அவர் நினைக்கலானார். விதிவசத்தால் அந்நிகழ்ச்சியே அவருடைய அழிவினைத் துரிதப்படுத்தியது. அதுவரையில், நாட்டுமக்கள், ஜேம்ஸ் இறந்தபின் (அப்போது அவருக்கு ஐம்பத்தைந்து வயதாகிவிட்டது) ஆரஞ்ச் வில்லியத்தின்[4] மனைவியான அவருடைய ப்ராட்டெஸ்டன்ட் மகள் மேரியே பட்டம்பெறப்போகிறாள் என நினைத்து, தங்களைத் தேற்றிக்கொண் டிருந்தார்கள்.

---

1. The Trial of Seven Bishops. 2. 'Not Guilty'. 3. Hounslow Heath. 4. William of Orange.

ஆனால், இப்பொழுது இங்லண்டின் சிம்மாசனத்தில் காதொலிக் பரம்பரை நிலைத்துவிடும்போல் தோன்றியது. தாமதித்தால் அவர்கள் காரியம் கெட்டுவிடலாம்: அவர்கள் ஏதாவது செய்தே ஆகவேண்டியிருந்தது. பிஷப்புகள் விடுதலையடைந்த அன்றிரவே இரண்டு அரசியல் கட்சிகளிலும்[1] பிரமுகர்களான ஏழுபேர் ஒன்றுகூடி, உடனே ஒரு படையுடன் வந்து இங்லிஷ் அரசியல் அமைப்பையும் இங்லிஷ் மதஸ்தாபனத்தையும்[2] (கு. 128) அழிவினின்றும் காக்கும்படி வேண்டிக்கொண்டு ஆரஞ்ச் வில்லியமுக்கு ஒரு கூட்டுக்கடிதம்[3] எழுத முடிவுசெய்தார்கள்.

---

1. Both political parties. 2. The English Constitution and the English Church. 3. Joint letter.

# ஐந்தாம் பகுதிக்கான சில குறிப்புக்கள்

(1603—1688)

## இங்லண்டை ஆண்டவர்கள்

முதலாம் ஜேம்ஸ் (1603-1625)
முதலாம் சார்ல்ஸ் (1625-1649)
பொதுநலத் துரைத்தனம் (1649-1653)
காப்பாளர் க்ரோம்வேல் (1653-1658)
இரண்டாம் சார்ல்ஸ் (1660-1685)
இரண்டாம் ஜேம்ஸ் (1685-1688)

## யூரோப் அதிபதிகளுள் முக்கியமானவர்கள்

**பேரரசர்: இரண்டாம் பேர்டினண்ட் (1619-1637)**

*முப்பதாண்டுப் போருக்குப் பேரரசரே முக்கிய காரணம்.*

**ப்ரான்ஸ்: பதின்மூன்றாம் லூயி (1610-1643)**

*ப்ரெஞ்சு மன்னரசின்[1] அதிகாரம் கார்டினல் ரிஷெல்யு[2] என்பவரால் பெருக்கப்பட்டது.*

**பதினான்காம் லூயி (1643-1715)**

*1661-ம் வருடம் வரையில் கார்டினல் மஸாரினால்[3] ரிஷெல்யுவின் வேலை தொடர்ந்து செய்யப்பட்டது.*

### ரு. 93. முதலாம் ஜேம்ஸினுடைய ஆட்சியின் முக்கியம்

*முதலாம் ஜேம்ஸ் கையாண்ட பல முறைகளால் முடிவில் முடியாட்சிக்கே அழிவு ஏற்பட்டது[4].*

(1) *ப்யூரிட்டன்களைத் தமக்கு எதிரிக ளாக்கிக்கொண்டார்.* *தியான புத்தகத்தில் கண்டுள்ள சில முறைகளை விலக்கிவிட்டிருந்தால், மிதமான கொள்கைகளையுடைய ப்யூரிட்டன்கள் இங்லண்ட் மதஸ்தாபனத்திலேயே விருப்பத்துடன் இருந்திருப்பார்கள். ஆனால் ஹாம்ப்டன் கோர்ட் கூட்டத்திற்குப்[5] பிறகு (§ 135) அவர்கள்*

1. The French monarchy. 2. Cardinal Richelieu. 3. Cardinal Mazarin. 4. The destruction of the power of the Crown. 5. The Hampton Court Conference.

சுயேச்சையான ஸ்தாபனங்களை[1] ஏற்படுத்திக்கொள்ளவேண்டியதாயிற்று. ஆதலால், அவர்கள் ஸ்டுவர்ட் அரசர்களின் அதிகாரத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்புக்கு முதுகெலும்பைப் போல் இருந்தார்கள்.

(2) காதொலிக்கர்களுக்கு எதிரான உணர்ச்சி தேசமக்களிடையே மிகுதியாக வளர்ந்தது.

முதலில் காதொலிக் மதத்தினரை அவர்கள் விருப்பம்போல் கடவுளைத் தொழ அநுமதித்துவிட்டுப் பிறகு அச் சொற்படி நடக்கத் தவறியபடியால் வெடிமருந்துச் சதி[2] ஏற்பட்டது. அதனால், காதொலிக் மதத்தை நாட்டு மக்கள் வெகுகாலம்வரை வெறுத்து அதனிடம் பயத்துடனும் இருந்துவந்தனர். ஜேம்ஸினுடைய ஸ்பெயின் தேச விவாகதிட்டம் இவ்வுணர்ச்சியை அதிகப்படுத்தியது. பிற்காலத்தில் முதலாம் சார்ல்ஸுக்கும் இரண்டாம் சார்ல்ஸுக்கும் நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்பு பெரும்பான்மையும் இது காரணமாகவே ஆகும். 1688-ல் இரண்டாம் ஜேம்ஸ் நாட்டை விட்டு வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்ததும் இது காரணமாகவேயாம்.

(3) மன்னர்களின் தெய்விக உரிமை[3]யை (§ 134, கு. 96) அவர் கொண்டாடியது, பார்லமென்டுக்கு அரசர் விரும்பிக்கொடுக்கும் அதிகாரம் தவிர வேறொன்றும் கிடையாது என்று கூறுவதுபோலாயிற்று.

அந்நிய நாட்டு விவகாரங்களில் தலையிடப் பார்லமென்டுக்கு உரிமையில்லை என்று அவர் கூறினர். அதனுடைய சம்மதமின்றி வரிகள் போட்டுத் தண்ட ஆரம்பித்தார். ஆதலால், பார்லமென்ட் அரசரைக் கட்டுப்படுத்திவைக்க எண்ணியது. அடுத்த ஆட்சியில் இது உள்நாட்டுப் போருக்கு வழிகோலிற்று.

## கு. 94. முதலாம் ஜேம்ஸின் அயல்நாட்டு விவகாரங்கள்

அவர் தம்முடைய மகளுக்கும் புகழ்பெற்ற ப்ராட்டெஸ்டன்ட் ஜெர்மன் சிற்றரசரான பாலடைன் எலெக்டருக்கும்[4] மணமுடிப்பதன் மூலமும், தம்முடைய மகனுக்கும் மிகப் பிரசித்தமடைந்திருந்த காதொலிக் நாடான ஸ்பெயின் நாட்டின் அரச குமாரிக்கும் மணம் செய்வதன் மூலமும் யூரோப்பில் மத விஷயங்களில் சமாதானத்தை நிலைநிறுத்த எண்ணினர்.

அவருடைய முதல் எண்ணம் பலித்தது; இரண்டாம் எண்ணம் முடிவுபெறவில்லை.

---

1. Independent organisations. 2. Gunpowder Plot. 3. Divine Right of kings. 4. The Elector Palatine.

அவருடைய இவ்விரு எண்ணங்களும் குடிகளிடமிருந்தும் பார்லமென்டிடமிருந்தும் அவருக்குத் தொல்லே விளேவித்தன.

(1) தம்முடைய மருமகன் பேரரசரால்[1] நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டபோது, மகளே ஆதரிப்பதற்காக தாமும் முப்பதாண்டுப் போரில்[2] சேரவேண்டியதாயிற்று. இதற்குப் பணங் கேட்க அவர் பார்லமென்டைக் கூட்டியபோது, பார்லமென்ட் அவரது துரைத்தன முறைகளேக் குறைகூறுவதற்காக அச்சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டது. அதனுல், இருதிறத்தாருக்கும் எப்போதும் வாக்குவாதம் நடந்துகொண்டே இருந்தது. (ஜெர்மனியில் நிலச் சண்டைக்குப் பதிலாகப் பேரரசருக்குத் துணேயாக நின்ற ஸ்பெயினேடு கடற்போர் நடத்தவேண்டுமென்று பார்லமென்ட் விரும்பியது.)

(2) காதொலிக் மதத்தைச் சேர்ந்த ஹாப்ஸ்பர்க் குலத்தினள்[3] இங்லண்ட் இராணியாக வரக்கூடாதென்பது நாட்டு மக்களின் அபிப்பிராயம். ஸ்பெயின் மன்னரும், இங்லிஷ் காதொலிக்கர்களுக்குப் பிரமாதமான உரிமைகளேக் கொடுத்தால்தான், அக் கலியாணத்துக்குத் தாம் இணங்கமுடியுமென்று கூறினர். ஸ்பெயினேத் திருப்தி செய்யும் நோக்கத்துடன் ராலெவைச்[4] சிரச்சேதம் செய்வித்த போது (கு. 98) ஜேம்ஸ் மிகவும் கேவலமாக மதிக்கப்பட்டார். விவாகம் நடைபெறவில்லே; ஆனுல் அதைப்பற்றிய முயற்சிகளின் விளேவாக அவர் ஆட்சியின் கடைசி மாதங்களில் ஸ்பெயினுடன் போர் மூண்டது.

## கு. 95. முப்பதாண்டுப் போர்[5] (1618-1648)

ஜெர்மனியின் காதொலிக் சிற்றரசர்களுக்கும்,[6] ப்ராட்டெஸ்டன்ட் (எதிர்ப்புமதவாதிகளின்) சிற்றரசர்களுக்கும்[7] ஏற்பட்டிருந்த விரோதமானது அறுபது வருஷ காலமாக ஆக்ஸ்பூர்க் சமாதானத்தால்[8] (1555) தணிந்திருந்தது. அதன்படி, ஒவ்வொரு சிற்றரசரும் தாம் விரும்பிய மதத்தைத் தம் குடிகளேப் பின்பற்றும்படி செய்யச் சுதந்தரம் பெற்றனர். ஆனுல், இப்போது அது ஒரு பயங்கரமான மதப்போராக மூண்டது. அதில் போர் வீரரல்லாத சாதாரண மக்களுள் ஆயிரக்கணக்கான பேர் கொல்லப்பட்டனர்; நூற்றுக்கணக்கான கிராமங்கள் அழிக்கப்பட்டன.

நூறு ஆண்டுகளுக்குப் பின்னும் மத்திய யூரோப்பில் அப்போரால் ஏற்பட்ட அழிவின் சின்னங்கள் காணப்பட்டன.

---

1. The Emperor. 2, 5. The Thirty Years' War. 3. A Catholic Hapsburg. 4. Raleigh. 6. Catholic Princes. 7. Protestant Princes. 8. Peace of Augsburg.

ஜேம்ஸ் மன்னரின் மருமகனுன பாலடைன் எலெக்டர் பொஹிமியாவின் அரசபட்டத்தை ஏற்றுக்கொண்டார். ஆயினும், ஸ்பெயின் மன்னரின் ஹாப்ஸ்பர்க் உறவினரான பேரரசர் ஒரு காதொலிக்கர் அந்த நாட்டை ஆளவேண்டுமென்று விரும்பியதால், போர் மூண்டது.

**கு. 96. முதலாம் ஜேம்ஸ் ஏன் "கிறிஸ்துவ உலகத்தின் அறிவு மிக்க முட்டாள்"[1] என்று அழைக்கப்பட்டார்?**

அவர் அதிகமாகப் படித்தவர்; விவாதிப்பதில் வல்லவர்; அறிவு மொழிகளையும் நவீன உதாரணங்களையும் கொட்டிப் பேசக்கூடியவர்;[2] யூரோப்பிய அரசியல் விஷயங்களை நன்கு அறிந்தவர்;[3] சமய விஷயங்களில் பரந்த நோக்க முடையவர்.

இங்லண்ட் அரசராவதற்குச் சில வருஷங்களுக்குமுன் அவர் "மன்னரின் தெய்விக உரிமைக்" கொள்கையை[4] ஆதரித்து ஒரு புத்தகம் எழுதியிருந்தார். பின்வரும் வாக்கியங்கள் அதில் அவர் தம் கொள்கையை விவரிக்கும் விதத்தைக் காட்டும்:— "நியாய உணர்ச்சியுள்ள ஒரு அரசன் தெளிவான சட்டமின்றித் தன் குடிமக்களுள் எவருடைய உயிரையும் வாங்கமாட்டானுயினும், அவ்விதமாக உயிர்களை வாங்கும் சட்டம் அவனுலேயே செய்யப்பட்டிருப்பதால், அந்த அதிகாரம் அவனிடமிருந்தே உதிக்கிறது. அரசருடைய அதிகாரத்தின் மறைபொருளைப்பற்றித் தர்க்கிப்பது சட்ட சம்மதமானதல்ல. அப்படிச் செய்தல் கடவுளின் அரியாசனத்திலிருப்பவர்களின் மகிமையைக் குறைப்பதாகும். கடவுள் செய்யக்கூடியதைத் தர்க்கிப்பதும், அரசர் இதைத்தான் செய்யலாம், இதைச் செய்யக்கூடாதென்று கூறுவதும் நாஸ்திகமும் தெய்வ நிந்தனையுமாம்[5]."

ஆனல், செயல் முறையில் அவரை ஒரு அரசியல் நிபுணரென்று சொல்வதற்கில்லை. தமக்குப் பிரியமானவர்களின் இஷ்டப்படி அவர் நடந்துவந்தார்.

(உ-ம்) கார், பக்கிங்காம்.[6]

அவர் வன்மையற்றுப் பிடிவாதமுள்ளவராயிருந்தார்; தாம் பிழைசெய்யலா மென்பதை ஒப்புக்கொள்ளக்கூடிய உறுதியான குணம் அவரிடமில்லை.

(உ-ம்) ஸ்பெயின் விவாக திட்டத்தை எவ்விதத்திலும் முடிக்கவேண்டுமென்று அவர் ஆவல்கொண்டது (கு. 94).

அவர் தம்மைப்பற்றி மிகவும் பெருமையாக நினைத்துக் கொண்டிருந்தபடியால், பிறருடைய கொள்கைகளை இலட்சியம் செய்வதோ, அவற்றைப்பற்றி யோசிப்பதோ கிடையாது.

---

1. 'The wisest fool in Christendom.' 2. 'Full of wise saws and modern instances'. 3. A practical statesman. 4. The theory of Divine Right. 5. Atheism and blasphemy. 6. Carr, Buckingham.

(உ - ம்) அவர் கொண்டாடிய "மன்னர்களின் தெய்விக 'உரிமை" யைப் பார்லமென்ட் மறுத்ததன் காரணத்தை அவர் தெரிந்து கொள்ளவே இல்லை. வரி விதிப்பு உரிமையைப் பார்லமென்ட் கொண்டாடியது அதிகப்பிரசங்கித்தனமென்று அவர் கருதினர். சிறிது பக்குவ[1]மாக நடந்துகொள்ளத் தெரியாததால் அவர் ப்யூரிட்டன்களைத்[2] தமக்கு விரோதிக ளாக்கிக்கொண்டார்.

## கு. 97. சால்ஸ்பெரி பிரபு ராபர்ட் ஸெஸில்[3] (1563-1612)

எலிசபெத் இராணியின் அமைச்சரான பர்லி பிரபுவின் மகன் (கு. 80). தம்முடைய தந்தையின் செல்வாக்கினல் எலிசபெத்தின் பிற்காலத்தில் இராஜசபையில் ஒரு அங்கத்தின ரானர்.

இராஜசபையில் எசெக்ஸ் ஏர்ல்[4] அவருடைய முக்கிய எதிரி. அவர் ராபர்ட் ஸெஸிலை வெளியேற்ற முயன்று தமது வீழ்ச்சியையே தேடிக் கொண்டார் (§ 133).

ராபர்ட் ஸெஸில், ஸ்காட்லண்ட் மன்னர் ஆரும் ஜேம்ஸை எலிசபெத்தின் வாரிசாக அங்கீகரிக்கப்படுமாறு செய்ய உழைத்தார்; 1603-ல் அவ்வரசர் அமைதியாகப் பட்டஞ்சூட்டிக்கொண்டதற்கும் அவரே காரணரா யிருந்தார்.

முதலாம் ஜேம்ஸின்கீழ் அவர் உத்தியோகம் நிலைத்தது; சால்ஸ்பெரி பிரபு ஆக்கப்பட்டார்; இராஜசபையில் ஒரு பிரசித்திபெற்ற அங்கத்தினராக விளங்கினர். தம் தந்தையைப் போலவே அவரும் ஒரு உறுதியான ப்ராட்டெஸ்டன்டாக (எதிர்ப்புமதத்தினராக) இருந்தார். சாமர்த்தியசாலி; சலிக்காது உழைக்கக்கூடியவர். காதொலிக்கரின் தெய்வ வழிபாட்டு முறையை அரசர் அநுமதிக்கக்கூடாதென்று அரசரிடம் கூறினர்; அதனல் வெடிமருந்துச் சதி[5](§ 136) ஏற்பட்டது. அந்தச் சம்பவம் காதொலிக்கர்களை அதிகமாகத் தண்டிக்க அவருக்கு இடங்கொடுத்தது. ஸ்பெயின் விவாகதிட்டத்தை அவர் எதிர்த்தார். 1612-ல் (மிதமிஞ்சிய உழைப்பினல்) ஸெஸில் இறக்கும் வரை, ஜேம்ஸ் உண்மையில் அவ்வெண்ணத்தை நிறைவேற்ற எதுவும் செய்ய முடியவில்லை.

## கு. 98. சர் வால்டர் ராலெ[6] (1552-1618)

இவர் ஒரு டெவன்ஷைர் சொத்துக்காரர். உயரமும் நல்ல அழகும் வாய்ந்தவர். தம் அதிர்ஷ்டத்தைத் தேட அவர் எலிசபெத்தின் சமஸ்தானத்துக்கு 1581ஸ் வந்தார். அரசாங்க உத்தி

1. Tact. 2. Puritans. 3. Robert Cecil, Earl of Salisbury. 4. The Earl of Essex. 5. Gunpowder plot. 6. Sir Walter Raleigh.

யோகங்களின் மூலமும், ட்ரேக்குக்குப் பண உதவி செய்ததன் மூலமும், பெருந்தொகை திரட்டினர். 'கன்னி அரசி'[1]யாயிருந்த எலிசபெத்தின் பெயரால் அமெரிக்காவில் 'வர்ஜினியா'[2] என்னும் குடியேற்ற நாட்டை[3] ஏற்படுத்த அதில் பெரும்பாகத்தைச் செலவிட்டார்.

குடியேற்றத்தின்[4] அனுகூலங்களை முதலில் உணர்ந்தவர்.

குடியேறும்படி அவரால் அனுப்பப்பட்டவர்கள் கஷ்டங்களைச் சகித்துக்கொள்ளக் கூடியவர்களா யில்லாதபடியாலும், அரசி அவரை அங்குப் போய்வர விடாததினுலும், அம் முயற்சி பலன் தரவில்லை. ஆனல், எதிர்காலப் போக்கை அவர் தீர்க்க தரிசனத்துடன் உணர்ந்திருந்தார். "அதை ஒரு இங்லிஷ் நாடாகக் காண நான் இன்னும் உயிரோடிருப்பேன்" என்று அவர் கூறினர். (ஸ்பெயின் நாட்டினர் கடல்களுக்கு அப்பாலிருந்த தங்களுடைய குடியேற்ற நாடுகளைத் தங்கள் தாய் நாட்டுக்குச் செல்வச் செழிப்பை உண்டாக்கும் கருவிகளாகமட்டும் கருதினர்).

எலிசபெத் காலத்தில் ஒரு சாதாரணமான நடுத்தர நாடாகவிருந்த இங்லண்டை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்த உற்சாக மிக்க தன்னம்பிக்கை உணர்ச்சியின் அவதாரம்[5].

பல துறைகளிலும் தேர்ச்சிபெற்ற ரினேசன்ஸ்[6] காலத்து அறிவாளி: போர்வீரர், அரச அணுக்கர்,[7] கவிஞர், உத்தியோக அதிகாரி, சரித்திராசிரியர், கப்பலோட்டி, பூகோள ஆராய்ச்சிக்காரர்.[8]

முதலாம் ஜேம்ஸ் பட்டத்துக்கு வருவதைத் தடுக்க ஏற்பட்ட சூழ்ச்சிகளில் கலந்திருந்ததாக இராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு 1603-ல் மரண தண்டனை விதிக்கப்பட்டார். ஆனல், 1616 வரையில் லண்டன் கல்லரணில்[9] கைதியாக வைக்கப்பட்டு, ஓரினுக்கோ[10] ஆற்றங்கரையில் ஆட்சிபெற்றிருந்த ஸ்பெயின் நாட்டினரோடு போரிடாமல் அங்கு ஒரு தங்கச்சுரங்கம் கண்டு பிடிப்பதற்காக விடுவிக்கப்பட்டார். அவரால் சுரங்கத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஸ்பெயின் நாட்டினரால் தாக்கப் பட்டார். சுரங்கங் காணுது நாட்டுக்குத் திரும்பிவந்த ராலெவை ஸ்பெயின் அரசரைச் சந்தோஷப்படுத்த விரும்பிய ஜேம்ஸ்

1. 'The Virgin Queen.' 2. Virginia. 3. Colony. 4. Colonisation. 5. Personification of the national self-confidence. 6. Renaissance. 7. Courtier. 8. Explorer. 9. Tower of London. 10. The Orinoco.

பழைய இராஜத்துரோகக் குற்றத்துக்காகச் சிரச்சேதம் செய்து விடும்படி உத்தரவிட்டார்.

## கு. 99. செண்ட் ஆல்பன்ஸ் வைகௌண்ட் ப்ரான்ஸிஸ் பேகன்[1] (1561-1626.)

எலிசபெத்தின் அமைச்சராயிருந்த சர் நிகொலஸ் பேகன்[2] என்பவருடைய பிள்ளை; ராபர்ட் ஸெஸிலின் ஒன்றுவிட்ட சோதரர்[3].

மிகத் திறமைவாய்ந்த வழக்கறிஞர் (நியாயவாதி)[4]; உயர்ந்த உத்தியோகங்களை வகிக்க ஆசைகொண்டவர். ஆனால், அவருடைய பொருமைமிகுந்த ஒன்றுவிட்ட சோதரரால் அவர் முன்னேற்றம் தடைபட்டது.

எசெக்ஸ் ஏர்லின்[5] தயவைச் சம்பாதிக்க முயன்றார். அவர் தமக்கு ஒரு உயர்ந்த உத்தியோகத்தினை வாங்கித் தருவாரென்று நினைத்தார். எசெக்ஸ் விடாமுயற்சியோடு பேகனுக்காக உழைத்தார்; ஆனால், பிற்காலத்தில், இராணியாரின் தயவை விரும்பிய பேகன், எசெக்ஸ் மீது எடுத்துக்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டு நடவடிக்கைகளில் அதிக சிரத்தையுடன் உழைத்தார் (§ 133).

நெடுங்காலம் முதலாம் ஜேம்ஸினுடைய தயவைப் பெற உழைத்தார்; கடைசியாக, 1618-ல் லார்ட் சான்செலர்[6] ஆனார். ஆனால், மூன்று வருஷங்களுக்குப்பிறகு லஞ்சம் பெற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, கடுமையான அபராத தண்டனையுடன் வேலையிலிருந்து நீக்கப்பட்டார் (1621).

வழக்குகளில் தீர்ப்புச் சொல்லும்போது கட்சிக்காரர்களிடமிருந்து அவர் "பரிசில்கள்"[7] பெறுவதுண்டு. இக்காலத்தில் அது மிகக் கேவலமாகக் கருதப்பட்டபோதிலும், அக்காலத்தில் அது ஒரு வழக்கமாக இருந்தது. ஆனால், பார்லமெண்ட் அவரை வெறுத்தது; ஜேம்ஸும் பக்கிங்காமைக் காப்பாற்றும் நோக்கத்தோடு பேகனைத் தாக்கப் பார்லமெண்டைத் தூண்டினர்.

பேகன் ஒரு பெரிய அரசியல் நிபுணராகியிருக்கலாம்; ஆனால், அறிவாளிகளான மந்திரிகளைவிடப் பார்வைக்குப் பகட்டாக இருந்தவர்களே ஜேம்ஸுக்கு அதிகமாகப் பிடித்திருந்தார்கள். அரசியல் கொள்கையில் அரசரது அதிகாரத்தைப் பேகன் பலமாக ஆதரித்தார்.

---

1. Francis Bacon, Viscount St. Albans. 2. Sir Nicholas Bacon.
3. Cousin of Robert Cecil. 4. Lawyer. 5. The Earl of Essex.
6. Lord Chancellor. 7. 'Presents'.

அவர் கீழ்வருமாறு எழுதியிருப்பதே இதற்கொரு சான்று:— "அரசர், குடிமக்களின் நன்மையையே தம் நோக்கமாகக்கொண்டு, கட்சிகளுக்கும் அவர்களது சச்சரவுகளுக்கும் புறம்பாக நின்று, நல்ல அறிவாளிகளான மந்திரிகளையும் பெற்றிருப்பதனுல், அரசாங்க அலுவல்களில் அனுபவமும் பயிற்சியும் பெருத சாதாரண மனிதர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தைவிட மிக நன்ருகத் தம் நாட்டை ஆள முடியும்."

புகழ்பெற்ற இயற்கைத் தத்துவ[1] நூலாசிரியர். அவரால் எழுதப்பட்ட புத்தகமான 'நோவம் ஆர்கனம்'[2] சில அம்சங்களில் நவீன விஞ்ஞான முறைக்கு[3] அடிப்படையாயிருந்தது. அவர், விஞ்ஞான சாஸ்திரம்[4], அனுமான ஆராய்ச்சி முறையைக் கொண்டதாகவும்[5], காரியாம்சத்தில் மக்கள் வாழ்க்கையின் மேன்மையை நாடக்கூடியதாகவும்[6] இருக்கவேண்டுமென்று போதித்தார்.

## கு. 100. முதலாம் சார்ல்ஸுக்கும் அவரது முதல் மூன்று பார்லிமென்டுகளுக்கும் ஏற்பட்ட விவாதத்தின் முக்கிய பிரச்னைகள்[7]

முதல் பிரச்னை: சேனைத் தலைவர்களாகவும் அமைச்சர்களாகவும் யாரை நியமிப்பதென்னும் விஷயமாக அரசருக்கு உத்தரவிடும் உரிமை பார்லிமென்டுக்கு உண்டா?

ட்யூடர் காலத்தில் பார்லமென்ட் அவ்வாறு செய்ய முயன்றதில்லை. ஆனல், அது இப்போது மிகுந்த தன்னம்பிக்கையோடு இருந்தபடியால் (§ 138), தவருன வழிகளில் செலவிடப் பக்கிங்காமுக்குப் பணங்கொடுக்க மறுத்தது.

ஆனல், பார்லமென்ட் அரசாங்க நடைமுறையைப்பற்றிக் கவலை கொள்ள உரிமையுடையதல்ல என்ற பழங்கொள்கையைச் சார்ல்ஸ் கொண்டிருந்தார். அக் கவலை அரசரையும் அவரது மந்திரிகளையுமே பொருத்ததாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்டுக் கனவான்களையும்[8] வழக்கறிஞர்களையும் (நியாயவாதிகள்) வியாபாரிகளையும் கொண்ட ஒரு சபைக்கு இவ் விஷயங்களைப்பற்றி ஏதேனும் எவ்வாறு தெரியும்? மேலும், அரசாங்க அதிகாரம் அரசர்களுக்குக் கடவுளால் அளிக்கப்பட்டது.

இரண்டாவது பிரச்னை: பார்லமென்ட் அனுமதிக்காத வரிகளை வசூலிக்க அரசருக்கு உரிமையுண்டா?

---

1. Natural Philosophy. 2. 'Novum Organum'. 3. Modern Scientific method. 4. Science. 5. Inductive. 6. Applied to the practical welfare of mankind. 7. The questions at issue. 8. Squires.

டன்னேஜ் பவுண்டேஜ் வரிகளை மானியம் கொடுப்பது[1] ஒரு சாதாரண சடங்கென்று **சார்ல்ஸ்** நினைத்தார்.

**மூன்றவது பிரச்னை: பார்லமென்டைக் கலந்தாலோசிக்காமல் நாட்டு மதஸ்தாபனத்தின் தன்மையை மாற்ற அரசர்க்கு உரிமை இருந்ததா?**

மதஸ்தாபனத்தின் தலைவர் தாமே என்றும், பார்லமென்ட் அல்ல என்றும் **சார்ல்ஸ்** எடுத்துச் சொன்னர்.

ஆனல், பார்லமென்ட் (ப்யூரிட்டன் மனப்பான்மையுள்ள தீவிரமான ப்ராட்டெஸ்டன்டுகளைப் பெருமிதமாகக் கொண்டது) சார்ல்ஸ் (அர்மீனியன் கருத்துக்களில் பற்றுள்ள ஹைசர்ச் கொள்கையினர்[2]) மதஸ்தாபனத்தை ரோமன் முறைக்கு உட்படுத்த[3] நினைத்ததாகப் பயந்தது.

(பார்லமென்டின் சந்தேகங்கள் ஆதாரமற்றவை. சார்ல்ஸ் ஒரு உண்மையான ப்ராட்டெஸ்டன்ட்[4]. ஆனல், அவர் ஒரு காதோலிக் இராணியை மணந்திருந்ததால், ப்யூரிட்டன் கொள்கைகளில்விடக் காதோலிக் கொள்கைகளில் அவர் அநுதாபங் காட்டினர். ஆயினும், காதோலிக் இராணியைப் பார்லமென்ட் வெறுத்தது சரியென்று பிற்காலத்தில் தோன்றியது. சார்ல்ஸின் மக்கள் அனைவரும் பின்னர் காதோலிக்கராயினர்.)

## கு. 101. ப்யூரிட்டன் கொள்கை[5]

ஒரு தனி மதப்பிரிவல்ல[6]; மதத்தைப்பற்றிய ஒரு கோட்பாடு[7].

வாழ்க்கையையும் அதன் கடமைகளையும் பற்றி ஆழ்ந்த சிந்தனை[8] மிக்க ஒரு கொள்கை. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே நேர் உறவிருப்பதாக ஒரு உணர்ச்சி. கடவுள் வழிபாட்டில், ஆடம்பரச் சடங்குகளையும் ஐதிகங்களையும் விட, பைபிலைப்[9] படிப்பதும் போதிப்பதும் முக்கியமானவை என்னும் அபிப்பிராயம். காதொலிக் மதத்தைப்போல் காணப்பட்ட எதனிடமுங்கூட வெறுப்பு.

ப்யூரிட்டன்கள் ஆடம்பரமிக்க பெரிய கோவில் கட்டடங்களையும் குருமார்களின் தனி உடைகளையும் வெறுத்தார்கள்; ஏனெனில்,

1. The voting of Tunnage and Poundage. 2. A High Churchman inclined to Arminianism. 3. To 'romanise' the church. 4. A genuine protestant. 5. Puritanism. 6. A sect. 7. A point of view about religion. 8. A serious view of life and its duties. 9. The Bible.

அவ்வ மாஸின் ஐதிகத்தையும்[1] குருமார்களின் அதிகாரத்தையும் குறிப்பிடுவனபோலிருந்தன. விக்கிரஹங்கள் காதொலிக்கர்கள் புனிதாத்துமாக்களைத் தொழுவதைக்[2] குறிப்பிட்டதால் அவற்றைப்யூரிட்டன்கள் வெறுத்தார்கள்.

குருமாரிடையிலும் குருமாரல்லாதாரிடையிலும்[3] அநேகர் இப்போது சுயேச்சையான இணங்காதவர்கள் வழிபாட்டுத் தொகுதிகளை[4]ஏற்படுத்திக்கொண்டனர்; முக்கியமாக, ஹாம்ப்டன் கோர்ட் மகாநாட்டி[5]ற்குப்(§ 135)பின் அவை ஏற்பட்டன. ஆனால், அநேக ப்யூரிட்டன்கள், நாட்டு மதஸ்தாபனம் தாங்கள் விரும்பிய முறையில் மாறுமென்று நம்பி, தங்கள் பாரிஷ் கோவில்களில்[6] நடைபெற்ற தொழுகை வழிபாடுகளுக்குப்[7] போய்க்கொண்டிருந்தனர். சடங்குகளைப்பற்றிய தம்முடைய ஹைசர்ச் கொள்கைகளை[8] நடைமுறையில் கொண்டுவரும்படி லாட்[9] குருமார்களை வற்புறுத்திய பொழுது, ப்யூரிட்டன்கள் மிகுதியும் கலவர முற்றூர்கள்.

ப்யூரிட்டன் கோட்பாடு, நாட்டில் சுயேச்சைபெற்ற சிறு குடியானவர்களிடமும்[10] நகரங்களில் வியாபாரிகளிடமும் தொழிலாளர்களிடமும் அதிகமாகப் பரவியிருந்தது. (பெருஞ் சொத்துக்காரரான ஸ்குயர்களும்[11] அவர்களுடைய பண்ணைக் குடித்தனக்காரர்களும் ஆட்களும்[12] ஆர்வமிக்க "அரசர்-மதஸ்தாபன" மக்களா[13]யிருந்தனர்.)

ப்யூரிட்டன் கோட்பாடு ஆடல்பாடல் முதலிய குற்றமற்ற களியாட்டங்களை இன்னும் வெறுக்கத் தொடங்கவில்லை. உதாரணமாக, ப்யூரிட்டன் கவிகளில் மிகப் பிரசித்தமானவரான மில்டன்[14] சங்கீதத்தை ஆர்வத்துடன் விரும்பினூர்; பிரபுக்கள் கூட்டங்களுக்கான ஒரு கூத்தும் எழுதினூர். ஆனால், ப்யூரிட்டன்கள் சாபத் ஓழிவினை அனுசரிப்பதில்[15] மிகவும் பிடிவாதக்காரர்களா யிருந்தனர்.

## கு. 102. சார்ல்ஸ் அரசரின் நேராட்சி முறைகள்[16] (1629-1640)

(1) செலவில் கடுஞ்சிக்கனம்; வெளிநாடுகளோடு எவ்விதத்திலும் சமாதானம்.

---

1. The miracle of the Mass. 2. The Catholic adoration of Saints. 3. Clergymen and laymen. 4. Independent congregations of 'Dissenters'. 5. The Hampton Court Conference. 6. Parish churches. 7. The services. 8. His High Church ideas as to ritual. 9. Laud. 10. Yeomen-farmers. 11. Squires. 12. Their tenants and dependents. 13. 'Church-and-King' people. 14. Milton. 15. Sabbath-keeping. 16. Methods of personal government.

தந்தையைப்போலன்றி, சார்ல்ஸ் வருமானத்திற்குத் த்க்கவாறு செலவைத் திட்டப்படுத்தும் மனவுறுதி கொண்டவர். ஆனால், அயல்நாட்டு அரசர்கள் ,அவரால் போர் புரிய முடியாதென்பதைத் தெரிந்துகொண்டு அவரை வெளிப்படையாகவே அலட்சியம் செய்து வந்தனர்.

(2) அப்போதிருந்த வரிவிதிக்கும் உரிமைகளை மக்கள் அதற்கு முன் கேட்டறியாத வழிகளில் பெருக்கினர்.

உ-ம்., காட்டுரிமைகளைப் பெருக்கல்[1], நைட்பணம் கொடாதவர்களைத் தண்டித்தல்[2], தனி உரிமைகளை விற்றல்'[3], கப்பற் பணம்[4] தண்டல் (§ 142).

(3) இந்த வரிகளெல்லாம் அரசரது நேரதிகாரத்துக்கு உட்பட்டுத் தனி உரிமைகள் பெற்றிருந்த நீதிமன்றங்களால்[5] வற்புறுத்தப்பட்டன.

அவற்றுள் மிகவும் முக்கியமானது நக்ஷத்திர அறை ,நீதிமன்றம்[6] (கு. 53).

(4) லாட் சொன்னபடி ப்யூரிட்டன்களை ஒறுத்தல்[7].

பார்லமென்டைக் கூட்டாததால் தமக்கு ஏற்பட்ட சுயேச்சையைச் சார்ல்ஸ் நாட்டில் தம் ஹைசர்ச் கொள்கைகளை வற்புறுத்த நன்கு பயன்படுத்திக்கொண்டார். இதையும் தனி உரிமைகள் பெற்றிருந்த ஒரு நீதிமன்றமே வற்புறுத்தியது—லாட் தலைமையின்கீழிருந்த ஹைகமிஷன் நீதிமன்றம்[8].

குறிப்பு: சார்ல்ஸின் நேராட்சிக் காலத்தில் நாடு வளமுற்றது. வரிச்சுமை மிதமாயிருந்தது; வியாபாரம் செழித்தது. ஏழைகள் மதஸ்தாபனத்தினரின் ஹைசர்ச் போக்கை[9] வெறுக்க நேர்ந்தபோதிலும், அவர்கள் சார்ல்ஸ் தண்டிய விசேஷ வரிகளைக் கொடுக்கவேண்டிவரவில்லை.

ஆனால், அது பார்லமென்ட் ஆட்சியையும்[10] நாட்டு மக்களின் அரசியல்' சுயேச்சை[11]யையும் அழிக்கக்கூடுமென்பதைக் கற்றறிந்த மக்கள் உணர்ந்தனர்.

1. Enlargement of Forest Rights. 2. Distraint of Knighthood. 3. Sale of Monopolies. 4. Ship Money. 5. Prerogative Courts. 6. Court of Star Chamber. 7. 'Laudian Persecution' of Puritanism. 8. Court of High Commission. 9. The High Church tendency in the Church. 10. Parliamentary government. 11. The political 'liberty' of the nation.

## கு. 103. ஸ்ட்ராபர்ட் ஏர்லான டாமஸ் வென்ட்வொர்த்[1] (1593-1641)

சார்ல்ஸ் ஆட்சியின் முற்பாகத்தில் கூடிய பார்லமென்ட் கூட்டங்களில் பக்கிங்காமின் தவருன ஆட்சிமுறையைத் தாக்கிப் பேசினுர். கட்டாயக்கடன்[2] (§140) கொடுக்க மறுத்ததற்காக (ஹாம்டென், இலியட்டுடன்[3]) சிறையிலிடப்பட்டார்.

ஆனல், அரசாங்கத்தைப் பார்லமென்டின் அதிகாரத்தின்கீழ் அடக்கிவைப்பதில் அவருக்கு நம்பிக்கையில்லை. அது அரசரால் நியமிக்கப்பெற்ற தனி அனுபவமும் ஆற்றலும் பெற்ற மந்திரிகளின் காரியமென்று, பேகனைப்போலவே (கு. 99), நினைத்தார். ஆதலால், அவர் அரச சேவையில் அமர்ந்தார். வடக்குப் பிரிவுகளில் அதிகாரஞ் செலுத்திய 'வடக்குப் பிரிவுகள் சபை'யின் (§ 99) தலைவ[4]ரானுர் (1628).

1632-ல் அயர்லண்டின் லார்ட் டெபுடி[5] ஆனுர். அங்கு "தீர்மை" ("தரோ")[6] என்று அழைக்கப்பட்ட துரைத்தன முறையைக் கையாண்டார். அது யதேச்சாதிகார[7] மானுலும், அரசரது உத்தியோகஸ்தர்கள் நடத்திய சிறந்த துரைத்தன முறையாக விளங்கிற்று.

> அயர்லண்டின் வளத்தை அதிகரிக்க அநேக காரியங்கள் செய்தார். வியாபாரத்தை ஊக்கினுர்; லினென் நெய்யும் தொழிலையும்[8] மீன் பிடித்தல் தொழிலையும் நாட்டில் நிலைக்கச் செய்தார்; துரைத்தன வருமானத்தை அதிகப்படுத்தி ஒரு படையைத் திரட்டினுர். அவர் எவருக்கும் பயப்படுவதோ தாக்ஷண்யப்படுவதோ இல்லை. உள் நாட்டுக் குடியானவர்களைப்[9]போலவே இங்லிஷ் பிராசுதார்களையும் தம் அதிகாரத்தின்கீழ் வைத்திருந்தார்.

'பிஷப்புகள் போர்க'ளால்[10] (§ 146) ஏற்பட்ட கலவரத்தின் போது அரசரால் அழைக்கப்பட்டு ஏர்லாக்கப்பட்டார். பார்லமென்டைத் தம் அதிகாரத்துக்கு உட்படுத்தலாமென்று நினைத்துச் சார்லஸுக்குப் பார்லமென்டை அழைக்க ஆலோசனை கூறினுர்.

அவர் அதனுடைய மிக அபாயகரமான விரோதி என்பதைப் பார்லமென்ட் உணர்ந்தது. பார்லமென்ட் அவர்மீது தொடுத்த இராஜத்துரோக வழக்கு விசாரணை[11] தோற்றுப்போகும் நிலையில்

1. Thomas Wentworth, Earl of Strafford. 2. Forced Loan. 3. With Hampden and Eliot. 4. President of the Council of the North. 5. Lord Deputy of Ireland. 6. 'Thorough'. 7. Despotic government. 8. The linen industry. 9. The native peasants. 10. The Bishops' Wars. 11. Impeachment.

இருந்தபோது, "அட்டெய்ண்டர் சட்டம்"[1] என்ற ஒரு மரண தண்டனைச் சட்டத்தைப் பார்லமென்ட் நிறைவேற்றியது (1641).

அவரை சார்ல்ஸ் லண்டனுக்கு அழைத்தபோது அவருக்கு ஆபத்து நேராதபடி காப்பதாக வாக்களித்தார். ஆனால், பொது ஜனங்களின் கூக்குரல் அவரைக் கொல்ல உத்தரவிடும்படி கட்டாயப் படுத்திவிட்டது.

ஒரு பெரிய கூட்டத்தின் முன்பு அவர் கொலைசெய்யப் பட்டார். 'கொடுங்கோலனை கறுப்பு டா'மின்[2] முடிவைக் கண்ட கூட்டத்தார் மிகவும் சந்தோஷமடைந்தார்கள்.

மன்னரது யதேச்சாதிகார[3]த்தின்கீழ்த் துரைத்தனத்தைத் தீர்மையாகவும் சாமர்த்தியமாகவும் இரக்கமின்றியும் நடத்திக் காட்டிய ஆற்றல்மிக்க ஆட்சியாளர்[4].

## கு. 104. அரசருடைய நேராட்சி[5] வீழ்ந்தது ஏன்?

சார்ல்ஸ் தியான புத்தக வழிபாட்டு முறையை[6] ஸ்காட் மக்களை ஏற்கும்படி கட்டாயப்படுத்தியதை அவர்கள் எதிர்த்ததால், அவர்களை அடக்க அவருக்குப் பணம் வேண்டியிருந்தது. பணம் பெறுவதற்காகப் (பதினோராண்டுகளுக்குப் பின்பு) பார்லமென்டை அழைக்கவேண்டியதாயிற்று—பிஷப்புகள் போர்கள்[7] (1639-40).

முறையற்ற வரிகளினாலே மிகவும் வருந்தி, பார்லமென்ட் ஆட்சி முறைகளுக்கு ஏற்பட்ட ஆபத்தை நன்கு உணர்ந்தவர்கள் அதில் இருந்தார்கள். அரசருடைய இக்கட்டான நிலை, அவரது நேராட்சி முறையினை அறவே துடைத்து, எதிர்காலத்தில் அதை எப்போதும் தலையெடுக்கவொட்டாமற் செய்ய, ஒரு சிறந்த தருணத்தை அவர்களுக்குக் கொடுத்தது. அவ்வாறு செய்வதில் அங்கத்தினர் அனைவரும் ஒருப்பட்டனர்.

## கு. 105. முதல் இரண்டு ஸ்டூவர்ட் அரசர்கள் காலத்தில் குடியேற்றம்[8]

(1) அல்ஸ்டர் குடியேற்றம்[9] (1608 - 11).—எலிசபெத் ஆட்சியின் கடைசி காலத்தில் கலகம் செய்த வட அயர்லண்டின்

1. Act of Attainder. 2. 'Black Tom the Tyrant'. 3. Royal Despotism. 4. Administrator. 5. Personal rule. 6. The Prayer Book worship. 7. The Bishops' Wars. 8. Colonisation. 9. Plantation of Ulster.

பெரும்பாகத்து மக்களின் பூசொத்துக்கள் பறிமுதல் செய்யப் பட்டன. முதல் ஜேம்ஸ் ஸ்காட் மக்களை அங்குக் குடியேற்றத் தீர்மானித்தார்.

அவர்கள் ஊக்கமும் அறிவும் மிகுந்தவர்கள். ஆனால், அவர்கள் தீவிரமான ப்ரெஸ்பிட்டீரியர்களா[1] யிருந்தபடியால் அயர்லண்டின் மதப்போராட்டத்தில் ஒரு மூன்ருவது வகுப்பினராயினர்.

(2) வர்ஜினியா[2] (1607).—பொதுநல உணர்ச்சியுடைய சிலரும் லண்டன் வியாபாரிகளின் கம்பெனி யொன்றும் ராலெவின் பழைய திட்டத்தைத்[3] தொடர்ந்து வேலை செய்தனர் (கு. 98). முதலில் ஜேம்ஸ்டவுனில்[4] (அரசர் பெயரைக் கொண்ட இடம்) ஒரு நிலையான குடியேற்றம். அநேகமாக இதுவும் பய னற்றுப்போ யிருக்கும்: குடியேறியவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்ய விரும்பவில்லை; தங்கம் கிடைக்கவில்லை என்று தெம் பற்றிருந்தார்கள். வசீகரமும் துணிச்சலும் மிக்கவரான காப்டன் ஜான் ஸ்மித்[5] அவர்களைத் திறமையோடு நடத்தியதால் அக் குடி யேற்றம் நிலைத்தது. யூரோப்பில் உபயோகிக்கப்பட்டு வந்த புகை யிலையை அங்குப் பயிரிடத் தொடங்கியதுமுதல் அபிவிருத்திக்கு உண்மையான மார்க்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

அநேகமாக, நாட்டுக் கனவான்களின் இளைய பிள்ளைகளுக்கு[6] நிலங்கள் அளிக்கப்பட்டன. அவர்கள் தங்கள் தந்தையரின் குடித்தனக்காரர்களது பிள்ளைகளை அந்நிலங்களில் வேலை செய்யத் தங்களோடு அழைத்துக்கொண்டு வந்தனர். இங்லிஷ் நாட்டுக் கனவான்களின் பழக்கங்களையும் கொள்கைகளையும் அங்கும் பரப் பினர். மதம்: இங்லண்ட் மதஸ்தாபனம்[7].

(3) நியு இங்லண்ட்[8] (1620).—காட் முனைக்கு[9] வடக்கே யுள்ள இடம்; முதலில் "யாத்திரிக தந்தையர்"[10]களால்(§ 143) ஸ்தாபிக்கப்பட்டது. லாட் ஒறுத்தலின்[11]பின் குடியேற வந்தவர் களின்[12] தொகை மிக அதிகமாயிற்று.

அது ஒருவிதமான பைபில் பொதுநலக் குடியரசு[13]; தாராளமற்ற கடுமையான ப்யூரிட்டன் போக்குடையது[14]. அதிலிருந்து குடியேற்ற நாடுகள் பின்வருமாறு தனித்தனியாகப் பிரிந்தன:—நியு ஹாம்ப்

1. Ardent Presbyterians. 2. Virginia. 3. Raleigh's old project. 4. Jamestown. 5. Captain John Smith. 6. Younger sons of squires. 7. Church of England. 8. New England. 9. Cape Cod. 10. 'Pilgrim Fathers'. 11. Laudian Persecution. 12. Immigrants. 13. Bible Commonwealth. 14. Rigidly and intolerantly Puritan.

ஷைர்[1] (1623); மஸாச்சுஸெட்ஸ் (1628); கனெட்டிகட் (1635); ரோட் தீவு[2] (1636).

(4) மேரிலண்ட்[3] (1632).—ஹென்றியெட்டா மரியா[4] இராணியின் பெயரைக் கொண்டது. முதலில் வர்ஜினியாவின் ஒரு பாகம். இதர குடியேற்ற நாடுகளில் அநுமதிக்கப்படாத காதொலிக்கர்கள் குடியேறுவதற்கென்று பால்டிமோர் பிரபுவுக்கு[5] கொடுக்கப்பட்டது. முக்கிய பட்டணம் அவர் பெயரையே கொண்டுள்ளது. அதனுடைய சாசனம்[6] எல்லா மதங்களுக்கும் சமநிலைமை கொடுத்தது.

## கு. 106. போர் ஆரம்பத்தில் அபிப்பிராய பேதங்கள் (1642)

### பார்லமேண்ட்

(1) வரி விதிப்பதை அடக்கவும், ஜூரிகளால் விசாரணை[7] பெறவும் ஜனங்களுக்கிருந்த பழமையான உரிமையை அரசர் புறக்கணித்துவிட்டார்.

காலவேறுபாட்டினால் ட்யூடர் காலத்தில் பார்லமென்ட் தனது உரிமைகளை வற்புறுத்தாமல் விட்டுவிட்டது. ஆனால், உரிமைகள் எப்போதும் அதற்கு இருந்தன. பேருரிமைப் பத்திரம் (மாக்ன கார்ட்டா)[8] அவ்வுரிமைகளைக் கூறியுள்ளது. (இது பேருரிமைப் பத்திரத்தைப்பற்றிய ஒரு தவறான எண்ணமாகும்; கு. 24 பார்க்கவும்.)

(2) காதொலிக் மதத்துக்கு அனுகூலமான மாறுதல்களை இங்லண்ட் மதஸ்தாபனத்தில் அரசர் செய்துகொண்டிருந்தார்.

(3) அவருடைய சொல்லை நம்புவதற்கில்லை என்பதையும் (உ - ம்., இலியட்டைக் கைது செய்தது, § 141), மறுபடியும் தருணம் வாய்த்தால் கொடுங்கோலாட்சி புரிவார் என்பதையும் (உ - ம்., ஐந்து அங்கத்தினர்களைச் சிறைப்படுத்த முயன்றது, § 149) அரசர் தம் செய்கைகள்மூலம் அடிக்கடி காட்டியுள்ளார்.

### அரசர்

(1) அமைச்சர் தேர்வு, சேனைத் தலைமை முதலிய அரசாங்க நடைமுறைக் காரியங்களில் இதற்குமுன் எப்போதும் பார்லமென்ட் அதிகாரம் கொண்டாடியதில்லை.

1. New Hampshire. 2. Massachusetts, Connecticut, Rhode Island. 3. Maryland. 4. Henrietta Maria. 5. Lord Baltimore. 6. Charter. 7. Trial by jury. 8. Magna Charta.

இங்லிஷ் மக்கள் அதிக மாறுதலை விரும்பாத மனப்பான்மை[1] கொண்டவர்கள். இருதரத்தாரும் தங்கள் தங்கள் உரிமைகளை மனதால் கற்பிக்கப்பட்ட கொள்கைகளின்படி[2] கொண்டாடவில்லை; "எப்போதும் உள்ளதை"[3]யொட்டியே கொண்டாடினார்கள். "அமைச்சர் நியமனம் பற்றிப் பார்லமென்ட் எட்டாம் ஹென்றிக்கோ எலிசபெத்துக்கோ உத்திரவிட்டிருந்தால் அவர்கள் என்ன கூறியிருப்பார்கள் ?" என்பது சார்ல்ஸின் கட்சி.

(2) 'தலைமைச் சட்டம்'[4] (1559) அரசரை மதஸ்தாபனத்தின் தலைவராக்கியது. பார்லமென்டுக்கு அதில் எந்த அதிகாரத்துக்கும் உரிமை இல்லை.

(3) கிறிஸ்தவ மதஸ்தாபனம் பாலஸ்தீனத்தில்[5] ஆரம்பித்த காலமுதல் பிஷப்புகள் ஆட்சியில்[6] இருந்து வந்தது. பார்லமென்ட் அந்த ஆட்சியை இப்போது அழித்துவிடும்போ லிருந்தது.

இந்தக் கொள்கை ப்ரெஸ்பிட்டீரியர்களினாலும் இதர ப்யூரிட்டன் கூட்டத்தினராலும் மும்முரமாக மறுக்கப்பட்டது.

(4) நாட்டின்மீதும் மதஸ்தாபனத்தின்மீதும் அரசருடைய அதிகாரம் அவருக்குக் கடவுளால் கொடுக்கப்பட்டது. ஆகவே, கடவுளுக்கு மட்டுமே அரசர் பொறுப்பாளி; பார்லமென்டின் அதிகாரங்களோ பொதுஜன வாக்கினின்றுமட்டும் உண்டானவை[7].

## கு. 107. யுத்தத்தின் தன்மை

(1) இது சமூகப் பிரிவினரிடை[8] ஏற்பட்ட யுத்தமல்ல.

பிரபுக்களில் பெரும்பாலோரும் நாட்டுக் கனவான்களும் அரசர் பக்கம் சேர்ந்தனர்; நடுத்தர வகுப்பினர் பார்லமென்ட் பக்கம் சேர்ந்தனர்; (ஏதோ ஒரு கட்சியில் சேருமாறு வற்புறுத்தப் படாத வரையில்) கீழ்த்த வகுப்பினர் நடுநிலை வகித்தனர். ஆனால் இதற்கு அநேக விலக்குகளு[9]மிருந்தன; (உ-ம்., ஹாம்டென், எசெக்ஸ்[10]).

(2) இது வரையறுத்த நிலப்பரப்புகளிடையே[11] நடந்த போரல்ல.

பொதுவாக, வடக்குப் பாகமும் மேற்குப் பாகமும் அரசரையும், கிழக்கும் தெற்கும் பார்லமென்டையும் ஆதரித்தன. ஆனால், ஒவ்

1. Conservative. 2. Theories. 3 "What always has been." 4. Act of Supremacy. 5. Palestine. 6. The rule of Bishops. 7. Derived merely from the votes of the people. 8. Between social classes. 9. Exceptions. 10. Hampden, Essex. 11. Between well-defined geographical districts.

வொரு பட்டணத்திலும் ஜில்லாவிலும் ஜனங்களால் அதிகமாக விரும்பப்படாத கட்சியினரை ஆதரிக்கும் சிறுபான்மையின[1]ரிருந்தனர்.

(3) இது பெரும்பாலும் பட்டணத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையே[2] நடந்த போர்.

ப்யூரிட்டன் கொள்கைகள் (சிறப்பாக, ப்ரெஸ்பிட்டீரியன் போக்குள்ளவை) பட்டணங்களில், முக்கியமாக வியாபாரிகள் கடைக்காரர்கள் வழக்கறிஞர்கள் வீட்டுக்கைத்தொழிலாளர்கள்[3] ஆகியவர்களிடையே மிக வலுத்திருந்தது. ஆனால், தேசத்தில் பெரும்பான்மையோர் கிராமவாசிகளே. அவர்கள் எப்போதும் அரசரை ஆதரித்து வந்த நிலம்படைத்த கனவான்களாலும் பார்சன்களாலும்[4] அரசரை ஆதரிக்குமாறு திருப்பப்பட்டனர்.

எனினும், கிராமவாசிகளுள் சுயேச்சை பெற்ற குடியானவர்கள்[5] மாத்திரம் பார்லமென்டை ஆதரித்தனர். இவர்கள் முக்கியமாகத் தெற்கிலும் கிழக்கிலும் அதிகமாக இருந்தனர்.

(4) பெரிய படைகளைக்கொண்டு போர் நடைபெறவில்லை.

பதவியும் பணமும் படைத்த பெரிய மனிதர்களால் திரட்டப்பட்ட குதிரைப் படைகளாலும், நகரங்களில் இருந்த காவற்படைகளாலும் ஆங்காங்கு சில்லரைப் போர்களே பெரும்பாலும் நடந்தன. சில பிரத்தியேக வீரச்செயல்களைச் செய்வதற்கன்றி (புது முறைப் படை திரட்டப்படும் வரையில்) பெரிய படைகள் ஒருபோதும் திரட்டப்படவில்லை. மார்ஸ்டன் மூர்[6] சண்டை ஒன்றில்தான் பக்கத்துக்கு இருபத்தையாயிரம்பேர் திரண்டு போர் புரிந்தனர்.

(5) அந்தச் சமயத்தில் ஜெர்மனியில் நடந்த முப்பதாண்டுப் போரைப்[7] போல் இது ஒரு மிருகத்தன்மை வாய்ந்த கொடும் போரல்ல.

கொஞ்சம் கொள்ளை நடந்தபோதிலும் எவரும் வேண்டுமென்றே எதையும் அழித்ததில்லை. போரில் தோல்வியுற்றவர்களை வெற்றி பெற்றவர்கள் கொடுமையாக நடத்தவில்லை. மதஸ்தாபன நடைமுறையைப்பற்றி இருதரத்தாரும் அபிப்பிராயபேதப்பட்டாலும், அவர்கள் அனைவரும் ப்ராட்டெஸ்டன்டுகளே[8]. தங்களுடைய எண்ணங்களைத் தங்கள் சொந்த நாட்டில் தங்களைச் சூழ்ந்துள்ளவர்க

1. Minority. 2. Between Town and Country. 3. People engaged in domestic industry. 4. Squires and Parsons. 5. Yeomen-farmers. 6. Marston Moor. 7. The Thirty Years' War. 8. Protestants.

ளிடையே பரவச்செய்வதற்குத்தான் போரிட்டார்கள் என்பதை அவர்கள் ஒருகாலும் அறவே மறக்கவில்லை.

## கு. 108. யுத்த ஆரம்பத்தில் இருதாரத்தாருக்கும் சேர்ந்த பலம்

### அரசர்

பிரபுக்களும் நாட்டுக் கனவான்களும்[1] தங்களது குடியானவர்களுடனும் ஆட்களுடனும் அரசர் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு முதுகெலும்புபோன்றிருந்தனர். பார்லமென்டை ஆதரித்த உத்தியோகஸ்தர்களையும் நகரமக்களையும்விட அவர்கள் சிறந்த படைப் பலமாகலாம்.

முக்கியமாக, அப்போது மிக அவசியமான குதிரைப்படை விஷயத்தில் இது பொருந்தும்.

அரசர் இவ்வளவு நிலப்பாகத்தைத் தம் வசப்படுத்துவதென்று தீர்மானித்திருந்தார். லண்டனைப் பிடிக்க முடியுமானல், பார்லமென்டின் எதிர்ப்பு அழிந்துபோகும். ஆனல், பார்லமென்ட் அரசருடைய முக்கிய படைவீடான[2] ஆக்ஸ்பர்டைப்[3] பிடித்திருந்தாலும் நிலையில் வித்தியாசம் ஏற்பட்டிராது. ஆகவே, பார்லமென்ட் யுத்த ஆரம்பத்தில் கொஞ்ச காலம் தன் படைப் பலத்தை வீணக்கியது.

அரசருக்காக உண்மையாகப் போரிடவேண்டுமென்று குடிமக்களைத் தூண்டிய தீவிர இராஜபக்தி அவருக்குப் பெரிதும் அனுகூலப்பட்டது. எசெக்ஸ், மான்செஸ்டர்[4] போன்றவர்கள் கூட அதனல் தயக்கமுற்றுர்கள்.

சர் எட்மண்ட் வெர்னி[5] என்ற ஒரு ப்யூரிட்டன் கனவான் யுத்தம் தொடங்குமுன் எழுதிய ஒரு கடிதத்தில் இவ்வுணர்ச்சி நன்ருகத் தென்படுகிறது. அக் கடிதத்தின் ஒரு பாகம் பின்வருமாறு :— "அரசருடைய உணவை நான் உண்டிருக்கிறேன் ; அவருக்கு முப்பது வருஷ காலமாக ஊழியஞ் செய்திருக்கிறேன். அவரைக் கைவிடுவதுபோன்ற மிக இழிவான காரியத்தை நான் செய்யமாட்டேன். ஆயினும், என் மனசாக்ஷிக்குப் பிடிக்காதவைகளைச் செய்வதைவிட நான் உயிரை வேண்டுமானுலும் விட்டுவிடுவேன். எனக்குப் பிஷப்புகளிடம் அன்பு கிடையாது ; அவர்களுக்காகத்தான் இந்தப் போர் நடக்கிறது." (கடிதத்தை எழுதியவர் நியுபெரி முதல் சண்டையில்[6] கொல்லப்பட்டார்). பார்லமென்ட் சேனையை நடத்திய மான்செஸ்டர் பிரபுகூட, "நாம் அரசரைத் தொண்ணூற்றென்பது தடவை முறி

1. Country gentlemen. 2. Headquarters. 3. Oxford. 4. Essex, Manchester. 5. Sir Edmund Verney. 6. First Battle of Newbury.

யடித்தாலும் அவர் அரசராகவே இருப்பார் ; ஆனல், அரசர் நம்மை ஒரு தடவை தோற்கடித்தாலும், நாம் எல்லோரும் தூக்கிலிடப்படுவோமே '' என்று வருந்தினராம்.

## பார்லமேண்ட்

கடற்படை[1], பொதுவாகக் கடற்பிரயாணம் செல்லும் வகுப்பினர், ப்ளிமத், ஹல்[2] போன்ற முக்கிய துறைமுகங்கள், வளமிக்க லண்டன் நகரம்—இவற்றின் ஆதரவு பார்லமென்டுக்குக் கிடைத்ததால், பார்லமென்டுக்குக் கடலாதிக்கம்[3] ஏற்பட்டதன்றி, துறைமுகங்களில் சுங்கவரிகளை[4] வசூலிக்கும் அனுகூலமும் வாய்த்தது.

யுத்தகால முழுவதும் நாட்டின் செழிப்பான தென்கிழக்குப் பாகமும் உள்நாட்டுப் பிரிவுகளும் லண்டன் நகரமும் பார்லமென்ட் அதிகாரத்தின்கீழிருந்தன.

இதனல் பார்லமென்டுக்குச் செல்வ பலம் மிகுந்தது. நாளடைவில், காவலியர்கள்[5] அரசருக்காகக் கொடுத்த தம் குடும்ப உடைமைகளையும் இதர செல்வங்களையும்விட இதுவே பார்லமென்டுக்குச் சிறந்த உதவியாயிற்று. ஒழுங்காக வரி வசூலித்துப் புதுமுறைப் படைக்குச் (கு. 109) சம்பளம் கொடுத்துப் போரை வெல்ல அதனல் முடிந்தது.

வீரமும் சாமர்த்தியமும் பெற்றிருந்த க்ராம்வெல்லின்[6] உதவியையும் பார்லமென்ட் இப்போரில் பெற்றிருந்தது.

## கு. 109. புதுமுறைப் படை[7]

க்ராம்வெல் யோசனைப்படி 1645-ல் பார்லமென்ட் இப்படையை உண்டாக்கியது. நன்கு பழக்கப்பெற்ற போர்வீரர்கள் அடங்கியது. உண்டி, உடை, ஆயுத முஸ்தீப்புக்கள் ஒழுங்காக அமையப்பெற்றது.

க்ராம்வெல்லின் கிழக்குப் பிரிவுகள் சங்கத்தின்[8] வீரர்கள் அதன் உயிர் நாடி[9]. 'சுயேச்சை நாடிய' ப்யூரிட்டன் மதம்[10], மக்களாட்சி[11], மதப்பொறை[12] ஆகிய அவர்களது நோக்கங்கள் இப்படையை ஊக்கின.

---

1. The Navy. 2. Plymouth, Hull. 3. Command of the sea. 4. Customs duties. 5. Cavaliers. 6. Cromwell. 7. The New Model Army. 8. "Eastern Association." 9. Nucleus. 10. 'Independent' Puritanism. 11. Democracy. 12. Toleration.

இவ்வாறு பார்லமென்ட் தன்னுடைய செல்வத்தை வெல்ல முடியாத ஒரு போர்க்கருவி யாக்கிக்கொண்டது.

பணமின்மையால் அரசரால் இத்தகைய சேனையொன்றைத் திரட்ட முடியவில்லை.

கடைசியாக, அதில் ஐம்பதாயிரம் வீரர்களிருந்தனர். நல்ல சம்பளங் கிடைத்ததால் வீரர்களின் எண்ணிக்கை குறையவில்லை.

ஒரு குதிரை வீரனுக்கு ஒரு நாளைக்கு ஐந்து ஷில்லிங் (தற்போதைய மதிப்புப்படி) சம்பளம். குதிரை ஆயுதங்கள் முதலியவற்றை அவனே தேடிக்கொள்ள வேண்டும். புதிதாகச் சேர்ந்தவர்கள் அச் சேனையினரின் சுயமரியாதையோடு கூடிய மதக்கோட்பாடுகளால் சீக்கிரம் வசிகரிக்கப்பட்டனர்.

அது திரண்டிருந்த பன்னிரண்டு வருஷங்களில் ஒருபோதும் தோல்வி யடைந்ததில்லை.

அது ஏற்பட்ட ஒரு வருஷத்திற்குள் முதல் உள்நாட்டுப் போரில்[1] வெற்றிபெற்றது (நேஸ்பி[2], லாங்போர்ட்[3]).

இரண்டாவது உள்நாட்டுப் போரில்[4] ஒரு மாதத்திற்குள் வெற்றி பெற்றது (ப்ரெஸ்டன்[5], கோல்செஸ்டர்[6]).

அயர்லண்டையும் (ட்ரொகிடா[7], வெக்ஸ்பர்ட்[8]) ஸ்காட்லண்டையும் (டன்பார்[9], ஊர்ஸ்டர்[10]) பொதுநலக் குடியரசின் துரைத்தனத்துக்குப் பணியச் செய்தது.

ட்யூன்ஸ் சண்டையில்[11](1658) ஸ்பெயின் நாட்டினரை அது தோற்கடித்தது.

முதல் உள்நாட்டுப் போருக்குப்பின் அரசரைச் சிரச்சேதம் செய்வித்[illegible] [illegible]டியரசுத் துரைத்தனத்தை ஏற்படுத்தியது.

பா[illegible]மென்டில் பெரும்பான்மையோரின் வைராக்கியமிக்க ப்ரெஸ்பிட்டீரியன் மதத்துக்கு எதிராக மதப்பொறையை (எல்லா வகையான ப்யூரிட்டன் கொள்கையினர்க்கேனும்) ஆதரித்தது.

க்ராம்வெல் நியமித்த மேஜர்-ஜெனெரல்களின்கீழ் இப்படை ஊர்ப்பாதுகாவலில்[12] ஈடுபட்டிருந்தது. அரசரை ஆதரித்தவர்களை முன்னேறவொட்டாது தடுத்தும், தினசரி வாழ்க்கையில் விளையாட்டு, சங்கீதம், நாடகம் முதலியவற்றை, முக்கியமாக

1. The First Civil War. 2. Naseby. 3. Langport. 4. The Second Civil War. 5. Preston. 6. Colchester. 7. Drogheda. 8. Wexford. 9. Dunbar. 10. Worcester. 11. The Battle of the Dunes. 12. Policing the country.

ஞாயிற்றுக்கிழமைகளில், ஒழித்து ப்யூரிட்டன் வாழ்க்கை முறைகளைக் கட்டாயப்படுத்தியும் வந்த இந்த அனுபவம் நிலையான சேனையைப்பற்றியே நாட்டுமக்களிடையில் ஒரு நடுக்கத்தை உண்டாக்கியது. இந்தப் பயம் ஒரு நூற்றாண்டுக்குமேல் நிலை பெற்றிருந்தது.

க்ராம்வெல்லின் மரணத்திற்குப்பின் படைவீரர்களில் அநேகர் மன்னரசை மீண்டும் நிலைக்கவைத்தால்தான் நாட்டில் அமைதியான துரைத்தனம் ஏற்பட முடியுமென்று உணர்ந்தனர். இப்படை இரண்டாம் சார்ல்ஸினால் கலைக்கப்பட்டது.

ஆனால், படையின் சில அணிகளைமட்டும் இரண்டாம் சார்ல்ஸ் கலைக்காமல் வைத்துக்கொண்டார். அவை 'காவற்படை'[1] என்றழைக்கப்பட்டன.

## கு. 110. படையினர் அரசரைச் சிரச்சேதஞ்செய்தது நியாயமா?

### நியாயம் என்பதற்கு

யதேச்சாதிகார[2]மில்லாத மற்றெதுவும் தமக்குத் திருப்தியளிக்காதென்பதைச் சார்ல்ஸ் காட்டிவிட்டார். "பிரேரணைகளின் தலைப்புக்க"[3]ளில் (§ 156) நியாயமாக அவர் ஏற்றுக்கொள்ளக் கூடியவை எவ்வளவோ இருந்தும் அவர் எதையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

தம்மை எவரும் நம்பாதவாறு அடிக்கடி நடந்துகொண்டார். தாம் யாரோடு சமாதானப் பேச்சு நடத்திக்கொண் டிருந்தாரோ அவர்களையே (ஒரு சமயம் பார்லமென்டையும், மற்றொரு சமயம் படையினரையும்) கவிழ்க்க இரகசியச் சதி செய்தார். இந்த இரண்டகச் சூழ்ச்சியால்தான் இரண்டாவது உள்நாட்டுப்போர்[4] ஏற்பட்டது. அரசர் மாண்டாலொழிய படையினர் எந்தப் பெரு நோக்கங்களைக்கொண்டு போரிட்டனரோ அவற்றிற்குத் தக்க பாதுகாப்பு இருப்பதற்கில்லை.

### நியாயமன்று என்பதற்கு

சட்ட சம்மதம் பெறாத ஒரு விசாரணைச் சபை அவருக்குத் தண்டனை யளித்தது. அந்தச் சபை படையினரால் 'கழிக்கப் பெற்ற'[5] பார்லமென்டால் அவர்கள் கட்டாயத்தின்மேல் ஏற்படுத்

1. The Guards. 2. Despotic power. 3. "The Heads of the Proposals."
4. The Second Civil War. 5. 'Purged.'

தப்பட்டது. நாட்டுமக்கள் அருவருப்புற்றனர். யதேச்சையாகத் தேர்ந்தெடுக்கப்பெறும் ஒரு பார்லமென்டைக் கூட்டப் படைத் தலைவர்கள் ஒப்புக்கொள்ளாதது நாட்டின் நிலையை அவர்கள் அறிந்திருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

கொலைமேடை[1] மீது நின்று பேசுகையில் தம்முடைய கொள்கையை அவர் சுருக்கமாகத் தெரிவித்தார் :—''ஜனங்களுடைய சுதந்தரத்தையும் சந்தோஷத்தையும் மற்றவர்கள் விரும்புவது போலவே நானும் உண்மையாக விரும்புகிறேன்; ஆனால், ஒரு துரைத்தனத்தால் ஆளப்படுவதால் அவர்களுடைய சுதந்தரம் நிலைத்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குக் கூறவேண்டும்; அவர்களுடைய வாழ்க்கையையும் சொத்துக்களையும் பாதுகாக்கச் சட்டங்கள் வேண்டும். துரைத்தனத்தில் அவர்கள் பங்கெடுத்துக்கொள்வதில் அவர்கள் சுதந்தரம் நிலைத்தில்லை. அது அவர்களுக்கு ஏற்றதல்ல. அரசனும் குடியும் வேறுபட்ட தனிப்பொருள்கள்.''

## கு. 111. லீல்பர்னும் சமநிலைக்காரர்களும்[2]

சமநிலைக்காரர்கள் அதி தீவிரமான குடியரசுக் கொள்கையுடையவர்கள்[3]. இக்கட்சி யுத்தத்திற்குப்பின் தோன்றியது; புதுமுறைப்படையில் நல்ல பலம் பெற்றிருந்தது.

அவர்களுடைய தலைவரான ஜான் லீல்பர்ன் நக்ஷத்திர அறை நீதிமன்றத்தினரிடம்[4] சாட்டையடித் தண்டனை பெற்றவர்; போரில் கலந்துகொண்டவர். க்ராம்வெல் ஹாம்ப்டன் கோர்ட்டி[5]லிருந்த அரசரோடு நடத்திய சமாதானப் பேச்சுக்களை ("பிரேரணைகளின் தலைப்புக்கள்''[6], § 156)ஜனநாயகத்துக்கே துரோகமான செய்கை[7] யென்று அவரும் அவரது நண்பர்களும் நினைத்து, நாட்டையாள "மக்களின் ஒப்பந்தம்''[8] என்ற முறையை ஒரு போட்டித் திட்டமாகக் கொண்டுவந்தார்கள்.

ஆனால், இம்முறையையேனும் வேறு எந்தக் குடியரசு முறையையேனும் மக்கள் ஒப்புக்கொள்ளவில்லை; அவர்கள் மன்னரசையே விரும்பினார்கள்,

பொதுநலக் குடியரசின்[9] துரைத்தனத்தை அவர்கள் 'கத்தி முனை ஆட்சி'[10] என்று கருதி வெறுத்தார்கள்.

---

1. Scaffold. 2. Lilburne and the Levellers. 3. Extremely republican. 4. The Star Chamber Court. 5. Hampton Court. 6. "The Heads of the Proposals." 7. 'A betrayal of the cause of democracy.' 8. "The Agreement of the People." 9. The Commonwealth Government. 10. "The Rule of the Sword."